தமிழ்ப் புலவர் வரிசை

பகுதி - கO

கழக வெளியீடு: ௧௪௯௫

# தமிழ்ப் புலவர் வரிசை

## பகுதி - ௧௦

[௨௮ முதல் ௩௦ புத்தகங்கள்]

★

ஆசிரியர்:

திரு சு அ இராமசாமிப் புலவர்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1973

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

Ed 1 Jan 1973

O31 6wN7
J5·10

# THAMIZHP PULAVAR VARISAI
Vol. X

Appar Achakam, Madras-1 (-/5)

# பதிப்புரை

நாடு, மொழி ஒன்றுலேயே உயர்ச்சிபெறும்; மொழியை வளர்ப்போர் புலவர் பெருமக்கள்; அவர்கள் வரலாற்றை அறிவது, அறிவு வளர்ச்சிக்குத் துணை புரிவதாகும்.

GOVT. ORIENTAL

பெயர் தெரியாது மறைந்துபோய் அவர் பாடிய பாட்டுக்களில் கருத்துச் செறிவுடைய சொற்றொடர்களானும், உறுப்பு முதலிய சிறப்பானும் பிறவற்ருனும் பெயர்கொண்டு நிலவும், புலவர் பெருமக்களும் அஃதன்றி மறைந்து பெயரே தெரியாது அவர் பாடித்தந்த நூல்கள் மட்டில் இருக்கும் புலவர் பெருமக்களும் பலராவர்.

இத்தகைய மாண்புமிக்க கலைச்செல்வர்களின் வரலாற்றை இயன்றவரை தொகுத்து நம் தமிழ்கூறு நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு முதற்கண் சங்ககாலத்து வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் வரலாற்றைச் 'சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை' என்னும் தொகுப்பில் பதினாறு தனி நூல்களாக வெளியிட்டோம். பின்னர் அவைகளைத் தொகுத்துக் கட்டடஞ்செய்து நூல்நிலையங்கட்கு ஏற்ற வாறு அமைத்து ஆறு பகுதிகளாக வெளியிட்டுள்ளோம்.

பின்னர்ச் சங்க காலத்துப் பின்பு விளங்கியிருந்த புலவர் பெருமக்களின் வரலாற்றைத் தொகுக்க எண்ணித் தமிழ்ப் புலவர் வரிசை என்னும் பெயருடன் முயன்று இதுகாறும் ஒன்று முதல் முப்பது நூல்கள்வரை கிடைத்த வரலாற்றைக் கொண்டு திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்களை எழுதச்செய்து வெளியிட்டுள்ளோம்.

இவ்வரலாறு வெளியிடுவதற்குப் புலவர்களும் அறிவு மிக்க மாண்பினரும் தத்தமக்குத் தெரிந்த புலவர்களின் வரலாற்றைத் தாங்கள் அறிந்தவரையில் — கேட்ட அளவில் — தெரிந்து வரைந்தனுப்பிஞல் மேலும் தொடர்ந்து

புலவர்கள் வரலாற்றைத் தொகுத்தற்குப் பேருதவியாக இருக்கும். இதனால் புலவர்கள் வரலாறு ஒருவாறு எங்கும் யாவரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் கிட்டும்.

புலவர் வரலாறுகளை, அவர்கள் ஆக்கிய நூல்களின் துணைகொண்டும், நூலினைப் புலவர்களைக் கொண்டும் நன்கு அறியலாம். ஆகவே, இந் நன்முயற்சியில் முனைந்து சங்க காலத்துக்குப் பிற்கால முதல் இதுவரை வாழ்ந்திருந்த புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து முடிப்பதையே முதற்பெருங் கடனாகக் கொண்டுள்ளோம்.

இதுவரை வெளிவந்துள்ள முப்பது தனித்தனி நூல்களில் ஒன்று முதல் மூன்று வரையுள்ள மூன்றையும் ஒன்றாகத் தொகுத்துக் கட்டடம் செய்து, அதை முதற் பகுதியாகவும், நான்கு முதல் ஆறு வரையுள்ள மூன்றையும் இரண்டாம் பகுதியாகவும், ஏழு முதல் ஒன்பது வரையுள்ள மூன்றையும் மூன்றாம் பகுதியாகவும், பத்து முதல் பன்னிரண்டு வரையுள்ள மூன்றையும் நான்காம் பகுதியாகவும், பதின்மூன்று முதல் பதினைந்து வரையுள்ள மூன்றையும் ஐந்தாம் பகுதியாகவும், பதினாறு முதல் பதினெட்டு வரையுள்ள மூன்றையும் ஆறாம் பகுதியாகவும், பத்தொன்பது முதல் இருபத்தொன்று வரையுள்ள மூன்றையும் ஏழாம் பகுதியாகவும், இருபத்திரண்டு முதல் இருபத்து நான்கு வரையுள்ள மூன்றையும் எட்டாம் பகுதியாகவும், இருபத்தைந்து முதல் இருபத்தேழு வரை ஒன்பதாம் பகுதியாகவும், இருபத்தெட்டு முதல் முப்பது வரை பத்தாம் பகுதியாகவும் தொகுத்துள்ளோம்.

தமிழுலக நன்மக்கள் இவற்றை வாங்கிக் கருவூலங்களில் வைத்துப் போற்றுவதுடன் கற்றும் கற்பித்தும் நாடு மொழி கலைகள் வளரத் துணைபுரிவதோடு எம்மையும் இன்னனவபோன்ற அரிய பணிபுரிய ஊக்குவிப்பார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


க. தமிழ்ப் புலவர் வரிசை — 1—196

இருபத்தெட்டாம் புத்தகம்

(௩௰ புலவர்கள்)

உ. தமிழ்ப் புலவர் வரிசை — 1—156

இருபத்தொன்பதாம் புத்தகம்

(௧௯ புலவர்கள்)

௩. தமிழ்ப் புலவர் வரிசை — 1—190

முப்பதாம் புத்தகம்

(௨௮ புலவர்கள்)

கழக வெளியீடு: ௧௩௧௮

# தமிழ்ப்புலவர் வரிசை

[இருபத்தெட்டாம் புத்தகம்]

ஆசிரியர்:

கருப்பக்கிளர் சு அ இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1 மதுரை-1 திருநெல்வேலி-6
1969

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

1969 © THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed I July 1969

O31, 6wN7
K9.28

THAMIZHP PULAVAR VARISAI
XXVIII

Appar Achakam, Madras-1. (I/)

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன

அத்துடன் அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தன்னலமின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் நற்றொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் இருபத்தேழு நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் இருபத்தெட்டாம் புத்தகம் ஆகும்.

இதன்கண் மயிலை சிவமுத்து முதல் நடேச பிள்ளை - ஈறாக ௧0 புலவர் பெருமக்கள் வரலாறுகளும் ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் இருபத்தேழு புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| க. | மயிலை சிவமுத்து | .... | 1 |
| உ. | இரசபதி அடிகள் | .... | 13 |
| ங. | மா. இராசமாணிக்கனார் | .... | 35 |
| ச. | கிருட்டிணவேணி அம்மையார் | .... | 42 |
| ரு. | ஆ. பாலகிருட்டிண பிள்ளை | .... | 54 |
| சு. | மாசிலாமணி முதலியார் (ப) | .... | 60 |
| எ. | ஆரணி குப்புச்சாமி முதலியார் | .... | 69 |
| அ. | கனகசபை நாயகர் - பொ | .... | 71 |
| கூ. | நா. ஏகாம்பர முதலியார் (செஞ்சி) | .... | 73 |
| க0. | உலகநாத சுவாமிகள் | .... | 75 |
| கக. | சுப்பராயச்செட்டியார் (சோட சாவதானம்) | | 77 |
| கஉ. | அ. சிதம்பரநாதச் செட்டியார் | .... | 80 |
| கங. | ரா. ஸ்ரீ. தேசிகன் | .... | 91 |
| கச. | துரைசாமி ஐயங்கார் - வடுவூர் | .... | 97 |
| கரு. | சுப்பிரமணிய பாரதியார் - அ | .... | 99 |
| கசு. | கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் | | 101 |
| கஎ. | பெ. கோவிந்த மூப்பனார் | .... | 112 |
| கஅ. | பு. சி. புன்னைவனநாத முதலியார் | .... | 119 |
| ககூ. | தி. சங்குப் புலவர் | .... | 129 |
| உ0. | அ. க. நவநீத கிருட்டிணன் | .... | 143 |
| உக. | ரங்கராசு - ஜே. ஆர். | .... | 148 |
| உஉ. | தசாவதானி ஆறுமுகம் பிள்ளை | .... | 149 |
| உங. | சிவராச பிள்ளை - க. நா. | ... | 154 |
| உச. | மொட்டை வேலாப் போடியார் | ... | 157 |
| உரு. | பூபால பிள்ளை - (ச) | ... | 161 |
| உசு. | சரவண முத்தன் - (அ) | ... | 166 |
| உஎ. | குமாரசாமி ஐயர் | ... | 174 |
| உஅ. | அருளம்பலவனார் | ... | 179 |
| உகூ. | ந. சி. கந்தைய பிள்ளை | ... | 191 |
| ங0. | நடேச பிள்ளை - சு. | ... | 195 |

# தமிழ்ப்புலவர் வரிசை

[இருபத்தெட்டாம் புத்தகம்]

---

## க. மயிலை சிவமுத்து

### தோற்றம்

"சித்தாந்த சாத்திரமும் தமிழும் யாரும்
　　தெளிவாக உணர்ந்திடவே முழக்கி வந்து
புத்துயிரைத் தமிழகத்துக் களித்த எங்கள்
　　புலவர்மணி திருநாவுக் கரசர் பாலே
நத்திநின்று தமிழ்பயின்ற மயிலை முத்தே
　　நண்பர்கடம் நலங்கண்டு மகிழும் நம்பா
மூத்தமிழுக் குத்தொண்டு செய்யார் வாழ்வார்
　　மூதறிஞ நுமக்குரைப்பேன் நீடு வாழி"

என்று அ. கி. பரந்தாமனாரால் பாராட்டிப் பாடப் பெற்ற பெரியார் மயிலை சிவமுத்து 1892 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14 ஆம் நாள் தொண்டை வளநாட்டிலே சென்னை மயிலாப்பூரிலே மயிலை சிவானந்த முதலியார் என்பவருக்கும் விசாலாட்சி யம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றினார். இவருக்கிடப்பெற்ற பிள்ளைப் பெயர் முத்துக் குமாரசாமி.

### தந்தையார்

முத்துக்குமாரசாமியின் தந்தையாராகிய சிவானந்தமுதலியாருடைய முன்னோர்கள் வாழ்ந்த ஊர் வைக்காடு என்னும் சிற்றூராகும். சிவானந்த முதலியார் சென்னை மயிலையையே தமக்கு உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தார். அதனால்

அவருக்கு மயிலை சிவானந்த முதலியார் என்னும் பெயர் நிலைபெறுவதாயிற்று. இக்காரணங்களால் முத்துக்குமார சாமி பின்னாளில் மயிலை சிவமுத்து ஆனார்.

## இளமைப் பருவம்

முத்து இளமைப் பருவத்திலே விளையாட்டிலும் வேடிக்கையிலும் மிகு விருப்பமுடையவராக இருந்தார். கல்விபயிலத் தொடங்குவதற்கு முன்பு சிறுவர்கள் செய்யுங் குறும்புகளை யெல்லாம் முத்துவுஞ் செய்தார். கதை கேட்பதிலே மிகுதியாகக் கருத்துச் செலுத்தினார். நாள் தோறுங் கதை சொல்லும்படி தந்தையாரிடங் கேட்பார். தந்தையார் புராணக்கதைகள் கட்டுக் கதைகள் முதலியவை களைக் கூறுவார். ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஒவ்வொரு நீதியை அமைத்து அக்கதையால் அடையக் கூடிய பயனையும் விளக்கிக் காட்டுவார். பிள்ளைப் பருவத்தி லிருந்தே உற்றுநோக்கி ஊன்றி உணர்ந்து எண்ணுந் தன்மை இவரிடம் மிகுதியாக அமைந்திருந்தது. "மின்னல் எப்படித் தோன்றுகிறது? ஏன் தோன்றுகிறது? இடி எப்படித் தோன்றுகிறது? ஏன் தோன்றுகிறது? சூரியன் எங்கிருந்து தோன்றுகிறது? இரவில் எங்கே போகிறது?" இத்தகைய கேள்விகள் பலவற்றைத் தந்தையாரிடங் கேட்பார். தந்தையாருந் தக்கவாறு மறுமொழி கூறுவார்.

## கல்வி

முத்துவுக்கு அகவை ஐந்து முடியு முன்னரே பள்ளியில் வைக்கப் பெற்றார் முதலில் திண்ணைப்பள்ளியிலுந் தொடக்கப்பள்ளியிலுங் கல்வி கற்றார். பிறகு வெஸ்லி கல்லூரியிலும் கல்வி பயின்றார். கல்வி பயிலத் தொடங்கிய பிறகும் விளையாட்டிலே கருத்தை மிகுதியாகச் செலுத்தி வந்தபடியால் படிப்பில் முதன்மையாக இருக்க வில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சிக்குப் போதுமான மதிப் பெண்களைப் பெற்று மேல்வகுப்புக்கு மாறி வந்தார்.

நாளாக நாளாகக் கல்வியில் கருத்துச் செல்லத் தொடங்கியது. முதுமை காரணமாகத் தந்தையார் அலுவலில் இருந்து விலகினர். பிணியும் அவரைப் பீடிக்கத் தொடங்கியது. இதனால் குடும்பம் வறுமை நிலையை அடைய நேர்ந்தது. தந்தையார் திடீரென்று விண்ணுலக மெய்தினர். இதனால் குடும்பத்தினர் மிகுந்த கலக்கமடைந்தனர். முத்து தம் கல்விக்கு ஏழாம் வகுப்போடு முற்றுப் புள்ளி வைக்க நேர்ந்தது. குடும்பத்துக்கு இவரே பெரிய பிள்ளையாதலின் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவருக் குண்டாகியது.

### ஓவியங் கற்றல்

தம் மகனுக்கு ஓவியம் வரைவதில் விருப்பமுந் திறமை யும் இருத்தலையறிந்த தாயார் ஓவியக்கலை பயிலுமிடத் திற்கு அனுப்பி அக்கலையைப் பயிலச் செய்தார். ஆயினும் கல்வியை நன்கு பயில வேண்டு மென்னும் எண்ணமும் இவருடைய உள்ளத்தை விட்டு அகலாமல் இருந்தது. இந்நிலையில் குடும்பம் மயிலையை விட்டுப் பெத்து நாய்க்கன் பேட்டைக்குக் குடியேறியது. ஓவியக்கலையைப் பயிலுங் காலத்தில இவர் எழும்பூருக்கும் பெத்துநாய்க்கன் பேட்டைக்கும் இடையே யுள்ள தொலையை நடந்தே கடந்தார். பகலுணவும் மிகு எளிமையானதாகவே இருந்தது. மனிதன் வறுமைக் காலத்தில்தான் கடவுளை நாடுகிறான் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இவரும் இச்சமயத்தில் இறைவனுடைய உதவியை நாடினர். தேவாரம் திருவாசகம் முதலிய தெய்வப்பனுவல்களை யோதிக் கடவுளைப் பரவினர். இவருடைய குரல் இனிமை யுடையதாக இருந்தமையின் இவர் பாடல்களைப் பாடும் போது பலர் மனமுவந்து கேட்டு மகிழ்ந்தனர்.

### அச்சுக் கோத்தல்

ஓவியப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பிறகு முத்து அச்சுக்கோக்குந் தொழிலை மேற்கொண்டு சில காலம்

பார்த்தார். அதனால் கிடைக்கும் சிறிய வருவாயைக் கொண்டு குடும்பத்துக்கு உதவினார். இத்தொழில் இவருக்கு மிகுந்த வெறுப்பை யுண்டாக்கியது. ஆகவே இத்தொழிலை விட்டு வேறு வேலையை மேற்கொள்ள முயன்றார்.

ஆசிரியப்பயிற்சி

அந்நாளில் கா. நமச்சிவாய முதலியார் சென்னையில் வாழ்ந்திருந்தார். அவரைப் புலவர் வள்ளல் என்று பலருங் கூறுவதுண்டு. அவ்வாறு கூறக் காரணம் நமச்சிவாய முதலியார் புலவராக இருந்ததோடு ஏழை எளியவர்கட்கு உதவி செய்யும் மனப்பான்மையும் உடையவராக விளங்கியிருந்தமையேயாம். முத்து ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியத் தொழிலை மேறகொள்ள விரும்பினார். தம்முடைய எண்ணத்தை நமச்சிவாய முதலியார்க்கு நவின்றார். முதலியாரும் தக்கவாறு உதவி செய்து சைதாபபேட்டையில் உளள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிற் பயிற்சி பெறச் செய்தார்.

மூக்குப்பொடி முத்து

முத்துவுக்கு இராக்காலத்தில்தான் ஒழிவு நேரம் இருந்தது. ஆகவே இராக்காலங்களில் புராணச் சொற்பொழிவுகளைக் கேட்கச் செல்வார். இரவிற் கண்விழிக்கவே பகலில் உறக்கம் வரத்தொடங்கியது. அதனைப் போக்குதற்கு மூக்குப் பொடிபோடும் வழக்கத்தை மேற்கொண்டார். அப்பொழுது இவருக்கு வயது பதினாறுதான். இளைஞராகிய இவர் இவ்வாறு மூக்குப்பொடி போடவே இவருக்கு மூக்குப்பொடி முத்து என்று ஒரு பெயர் உண்டாகியது. ஆனால் முதது இதனை ஒரு பொருட் படுத்தவில்லை.

சைவப்பள்ளியில் தலைமையாசிரியர்

அந்நாளில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் சைவத் தொடக்கப்பள்ளி ஒன்றினைச் சென்னைக் கொண்டி

தோப்பில் நடத்தி வந்தனர். அப்பொழுது அத்திருக் கூட்டத்தின் காரியங்களை முன்னின்று நடத்தியவர் இருக்கம் ஆதிமூலமுதலியார். அவர் முத்துவைப் பள்ளியில் தலைமை யாசிரியராக அமர்த்தினர். முத்து ஆசிரியரானதும் அப்பள்ளியைப் பலவகையிலும் முன்னுக்குக் கொண்டு வர முயன்றார். பெரிய மாறுதலைப் பள்ளிக்கூடம் மிகு விரைவாகவே பெற்றது. முத்து தாம் பயின்ற ஓவியக் கலையை வீணாக்க வில்லை. பள்ளியின் சுவர்களில் அழகிய ஓவியங்களைத் தீட்டினர். பொது அறிவு நீதிக்கதைகள் முதலியவைகளை மாணவர்களுக்குப் போதித்து மாணவர்களின் அறிவுத் திறமையைப் பெருக்கினர். பிள்ளைகளுடைய கையெழுத்துக்களும் நன்கு அமையுமாறு பழக்கினர். பள்ளிக்கூடத் தோட்டம் செடி கொடிகளோடும் மலர்கள் காய்கள் முதலியவைகளோடுஞ் சிறந்து விளங்கியது. மாணவர்கள் சிறந்து விளங்கவே மாணவர்களின் தொகை மிகுதியாகியது. பள்ளியின் சிறப்புத் திருக்கூட்டத்தாருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது.

## உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்

பள்ளிக்கூடத்தை முன்னுக்குக் கொண்டு வருவதில் முழுக்கருத்தையுஞ் செலுத்திய முத்து தம்முடைய முன்னேற்றத்தையுங் கருதிற கொள்ளாமலிருக்க வில்லை. ஆங்கில அறிவை மேனமேலும் வளர்த்து மில்டன், ஷெல்லி, கீட்ஸ், கோல்ட் ஸ்மித், டென்னிசன், ஷேக்ஸ்பியர் முதலிய ஆங்கில ஆசிரியர்களின் நூல்களைப் பயின்றுணர்ந்தார். தமிழ்க் கல்வியை மேலும் பயில வேண்டும் என்னும் எண்ணமும் இவருக்கு மிகுதியாக இருந்தது. இவருக்குள்ள தமிழார்வத்தைக் கண்ட மணி திருநாவுக்கரசுமுதலியார் இவரைத் தம்முடைய மாணவராகக் கொண்டு இலக்கண இலக்கியங்களையும் சங்கநூல்களையுங் கற்பித்து இவரை ஒரு சிறந்த தமிழறிஞராக்கினர். ஆகவே இவர் தம்முடைய இருபத்தைந்தாவது வயதில் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியரானர். முப்பதாண்டுகள் வரை

அஃதாவது இறுதிவரை அதே பள்ளியில் இருந்து பணி புரிந்தார். அங்குப் பணி புரிந்தபோது பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரிடமும் மறைமலையடிகளாரிடமும் நெருங்கிப் பழகினர். அவர்கள் இவர் இளமையிலேயே சிறந்த புலவராகத் திகழ்தலைக் கண்டு வியந்தார்கள். பணிபுரியும் பிற ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் அன்புடன் பழகினர். எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றார். தம்முடைய ஐம்பத்து நான்காவது அகவையில் 1947 ஆம் ஆண்டில் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றார்.

## இவருடைய குண நலன்கள்

இளகிய மனமும் பொறுமையும் மெய்ம்மையும் மிகுந்த பெருந்தன்மையும் இவரிடஞ் சிறந்து விளங்கின. இவர் பிறருடைய துன்பத்தைக் கண்டு பொறுக்கமாட்டார். முன்பின் பழக்கமில்லாதவராயினும் ஒருவர்க்கு ஏதாவதொரு துன்பம் நேர்ந்த காலத்தில் தம்மாலியன்ற உதவியை விரைந்து புரியும் பண்பு இவரிடத்தில் மிகுதியாக அமைந்திருந்தது. ஒருவரிடம் இவர் யாதேனுங் காரணம் பற்றி முதலிற் சினங்கொண்டாலும் அச்சினம் விரைவிலே நீங்கிவிடும். பிறருடைய பிழைகளைப் பொறுக்குந் தன்மை இவரிடத்தில் சிறப்பாக விளங்கியது. இவருடைய உள்ளத்தைக் குழந்தையுள்ளம் என்றே அனைவருங் கூறுவர். ஆயினும் மனத்திண்மையும் இவரிடம் நன்கு அமைந்திருந்தது. மேற்கொண்ட காரியம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதற்கு நேரும் இடையூறுகளைப் பொருட்படுத்தாமல் முடிக்குந் தன்மை இவரிடத்தில் இருந்தது. இவருடைய தாராள மனப்பான்மையைப் பெருஞ்செல்வரிடத்திலும் பார்க்கமுடியாது. தமக்கில்லையாயினும் பிறருக்குக் கொடுக்கும் பண்பு இவரிடத்தில் எப்பொழுதுங் காணக்கூடியது. தாம் வறிய நிலையிலிருந்தும் இவர் பலதடவை பிறருக்குதவி செய்து ஈத்துவக்கும் இன்பத்தை அடைந்திருக்கிறார்.

## எளிய வாழ்க்கை

பகட்டான வாழ்க்கையை உயர்ந்த முறையில் நடத்த வேண்டுமென்று இவர் இளமையிலே எண்ணியிருந்தாராயினும் எளிய வாழ்க்கையையே நடத்தினர். பிறருக்கு உதவிசெய்யாமல் இருந்திருப்பின் சிறந்த வாழ்க்கையை இவர் நடத்தியிருக்கலாம். எளிய வாழ்க்கையையே இவருடைய உள்ளம் விரும்பியது. உடையும் நடையும் பெருமிதமற்று விளங்கின. இவருடைய உணவு மிகமிக எளியது. ஒரு வேளைக்கு இரண்டணு மதிப்புள்ள உருளைக்கிழங்கோ, காராப் பூந்தியோ, ஓமப்பொடியோ அல்லது பகோடாவோ இவருடைய உணவாகும். இனிப்புப் பொருள்களையும் காபி தேநீர் முதலியவைகளையும் இவர் சாப்பிடுவதில்லை. தமக்கு நேர்ந்த தொல்லைகளைத் தமமுடைய நெருங்கிய நண்பர்களிடத்தில் கூடச் சொல்லமாட்டார். நோய்வாய்ப்படும் பொழுது இயற்கை முறைகளிலேயே அவைகளைத் தீர்த்தற்கு வழி தேடுவார்.

## ஆற்றிய அரும்பணிகள்

மாணவர்கள் தம்முடைய வாழ்க்கையிற் சிறந்து திகழ வேண்டும் என்னும் உயரிய நோக்கம் இவரிடத்தில் இறுதி வரையில் குடிகொண்டிருந்தது. மாணவர்களுக்கேற்ற வகையில் பல புத்தகங்கள் எழுத வேண்டுமென எண்ணினர். ஆசிரியத் துறையில் தமக்கிருந்த அனுபவங்களைக் கொண்டு பல பாடப் புத்தகங்களையும் கதைப் புத்தகங்களையும் எழுதினர். இவர் முதல்முதல் எழுதியது "என் இளமைப் பருவம்" என்னும் ஓர் இனிய கதையாகும். தம்மிடத்தில் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கட்கு ஏற்ற காலத்தில் தகுந்த அறிவுரைகள் கூறிச் செம்மைப்படுத்தினர்.

## நூல்கள்

இவரிடம் என்றும் உரிமையாக இருந்த பொருள் தமிழ்த்தொண்டு செய்யவேண்டுமென்னும் உயரிய பற்றுத்

தான். தமிழ்த் தொண்டையே தமது இறுதிக் காலம் வரையில் செய்து கொண்டிருந்தார். ஆங்கிலமொழியைப் போல் தமிழ் மொழியிலும் நல்ல புத்தகங்கள் பல வெளி வராமையைக் குறித்து உள்ளம் வருந்தினர். நித்தில வாசகம் (நித்திலம் - முத்து) என்னும் பெயரோடு ஐந்து வகுப்புகளுக்குப் பாடப் புத்தகங்களை எழுதினர். இவை களைப் பழனியாண்டிப் பிள்ளை யென்பவர் தம் பெயரால் அமைந்த பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டார். சிறந்த பல நூல்களை எழுதியதோடு இதழ்களிலும் கட்டுரைகள் பல எழுதினர்.

## தமிழ்ச்சங்க அமைச்சர்

மணி திருநாவுக்கரசரைத் தலைவராகக் கொண்ட சென்னைத் தமிழ்ச்சங்கம் பல துறைகளினுஞ் சிறந்து விளங்கியது. அச்சங்கத்தின் இயற்றமிழ்ப பகுதியில் இவரும் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரும் அமைச்சர்க ளாக இருந்து அதனைத் திறம் பெற நடத்தினர். அதற் காகத் தம்முடைய மாணவர்களைக் கொண்டு பொங்கல் விழாவில் நிதி திரட்டிச் சங்கத் தலைவரிடங் கொடுத்தார்.

## இந்தியெதிர்ப்பு

1938 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் சென்னை அரசாங் கத்தாரால் இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டபோது, "தாய் மொழியே கட்டாய பாடமல்லாத நிலையில் பிற மொழி களைக் கட்டாய பாடமாகக் கற்பிக்க முற்படுவது ஒழுங்கான முறையன்று" என்று வெளிப்படையாக எடுத்துக் கூறிக் கட்டாய இந்தியை எதிர்த்தார். பலரும் எதிர்த்தெழச் செய்தார்.

## தமிழாசிரியர்கட்கு

தமிழாசிரியர்களுடைய எளிய நிலையை உயர்த்தும் நோக்கத்துடன், சென்னைப் பண்டித சங்கம், தமிழ்ப் பண்டித

சங்கம், வித்துவான் சங்கம் முதலியவைகளில் அமைச்சராக வும் துணைத் தலைவராகவும் இருந்து புலவர்களுடைய நிலையினை அரசாங்கம் நன்குணரும் வகையில் வெளிப் படுத்தினர். போதிய பலன் ஏற்படாததைக் கண்டு தமிழாசிரியர் கழகத்தை உண்டாக்கினர். இக் கழகத்தின் வாயிலாகச் சென்னையிலுள்ள பள்ளிகட்கு நேரிற்சென்று அங்குள்ள தமிழாசிரியர்களைக் கண்டு அவர்களின் குறை களைக் கேட்டறிந்தார். தமிழாசிரியர்களுடைய நிலை பிற மொழியாசிரியர்களுடைய நிலையைக் காட்டிலும் மட்டமாக இருத்தலைக் கண்டு அடிக்கடி கூட்டங்கள் கூட்டிப் பேசினர். கல்வியமைச்சரை நேரிற் கண்டு குறைகளைத் தெரியப் படுத்தினர். பயனொன்றும் ஏற்படாமையால் இனிமேல் தமிழாசிரியர்கள் "துக்க வாரம்" கொண்டாடுவதைத் தவிர வேறு வழியில்லையென்று அறிக்கை வெளியிட்டார். மாநிலம் முழுவதிலும் உள்ள தமிழாசிரியர்கள் துக்க வாரங் கொண்டாடினர்கள். இந் நிகழ்ச்சி கல்வியமைச்சரின் கவனத்திற்குஞ் சென்றது. சட்டசபையிலும் பரபரப்பு ஏற்பட்டது. அதன் பயனாகத் தமிழாசிரியர்களின் நிலை ஓரளவேனும் உயர்வதற்கு வழியுண்டாகியது.

## தமிழ்த் திருமணம்

"தமிழர் பண்பாடுகள் தலைசிறந்தவை; தமிழர்க ளுடைய நிகழ்ச்சிகள் யாவும் தமிழ் நெறியில் நடத்தல் வேண்டும்" என்னும் சிறிய கருத்துக் கொண்டவர் இவர். திருமணம், நீத்தார் கடன் முதலிய நிகழ்ச்சிகளில் பொருள் விளங்காத பார்ப்பன முறையை விலக்கித் தமிழ் மொழியில் சடங்குகளை நடத்துவதை ஆதரித்தார். முதன்முதலாகத் தமிழ்த் திருமணஞ் செய்துகொண்ட சிலருள் இவரும் ஒருவர். திருமண அழைப்பை முதல் முதலில் தூய தமிழில் வெளியிட்டவரும் இவரே. இவருடைய திருமணத் தின்போதுதான் புரோகித ஒழிப்புச் சங்கமுந் தோன்றியது. சென்னையிலும் வெளியூர்களிலும் தமிழ்த் திருமணங்கள் பலவற்றை முன்னின்று நடத்தி வைத்தார். தமிழர்

திருமண மாநாட்டிற்கு உதவி புரிந்தவர்களில் இவரும் ஒருவர்.

### மாணவர் மன்றம்

மாணவர் மன்றம் சில இளைஞர்களால் தொடங்கப் பட்டது. மயிலை சிவமுத்து அம்மன்றத்தினைத் தமது வளர்ப்புக் குழந்தையாக எடுத்துக்கொண்டு தமது இறுதி மூச்சு வரை அம் மன்றத்திற்காகவே உழைத்தார். நாடெங் கும் உள்ள உயர்நிலைப்பள்ளி முதலியனவைகளில் தமிழ்த் தேர்வுகள் ஏற்படுத்தி மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கி மாணவர்கட்குத் தமிழ்மொழியிடத்து ஆர்வமும் பற்றும் ஏற்படச் செய்தார்.

### முத்துவின் கோலம்

மயிலை சிவமுத்துவை மனக்கண்ணால் பார்க்க விரும்பு பவர்கள் பின் வருமாறு பார்த்துக்கொள்ளலாம். நடுத் தரமான உயரம்; மாநிறம்; உழைப்பையுஞ் சிந்தனையையுங் காட்டும் முகம்; குறுகுறுத்த பார்வை; ஒழுங்காகச் சீவப் படாத தலைமயிர்; கையில் ஒரு தடி; ஒரு கையில் பை. எளிய ஆடை ஆகியவைகளே முத்துவைக் காட்டும் அடை யாளங்கள்.

### கைப்பை

இவருடைய கையில் உள்ள பையில் பதில் எழுதப்பட வேண்டிய மன்றக் கடிதங்கள் இருக்கும். மன்றத்தின் ஆண்டறிக்கைகளும் அழைப்பிதழ்களும் இருக்கும்.

### சலியாத உழைப்பு

சென்னை கொண்டி தோப்பு இரத்தின முதலி தெருவில் 17 ஆம் எண்ணுள்ள வீட்டில் இவர் அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருந்தார். தாம் நோயுற்ற காலத்திலும் மன்றப்பணிகளை விடாமற் செய்து கொண் டிருந்தார்.

முத்துவைப்பற்றித் திரு. வி. க

மயிலை சிவமுத்துவைப்பற்றித் திரு. வி. க. தம்முடைய வாழ்க்கைக் குறிப்பிலே பின்வருமாறு எழுதியுள்ளார். "சென்னையில் பால சைவ சபை என்றொன்று சிலகாலந் தொண்டு செய்தது. அச்சபை சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தின் கிளையாய் விளங்கியது. அதன் வாயிலாகத் தமிழிலும் சைவத்திலும் பண்பட்டவர் மயிலை. சிவ முத்துக்குமாரசாமி முதலியார். அவர் இளமையிலேயே மனச்சான்று வழி நடப்பவர் என்பதை அவர் தம் நடத்தையால் யான் உணரலானேன். அத்தகைய ஒருவரது பின்வாழ்க்கையில் உரிமை மணம் கமழ்தல் இயல்பு. இந்நாளில் முத்துக்குமாரசுவாமி முதலியார் வாழ்க்கை உரிமை உணர்வில் வளர்ந்து வருதல் கண்கூடு.

முத்துக்குமாரின் பேச்சையுங் கேட்டிருக்கிறேன். எழுத்தையும் பார்த்திருக்கிறேன். அவைகளில் உண்மையும் எளிமையும் தெளிவும் பொலிதல் கண்டு யான் மகிழ்வதுண்டு.

சாதி மதம் முதலிய வேற்றுமைகளைத் தொலைக்க வல்லது கலப்புமணம் என்பது அவர் கொள்கை. இக் கொள்கையை யான் பேச்சாலும் எழுத்தாலும் ஒல்லும்வகை செயலாலும் பரப்பிவருதல் நாட்டவர்க்குத் தெரியும். எனது கொள்கைக்குத் துணைபோகும் முறையில் அன்பர் முத்துக் குமாரசாமி முதலியாரின் தொண்டு நிகழ்ந்து வருதலை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கிறேன். சீர்திருத்த மணத்தில் அவருக்கும் எனக்கும் ஒருமைப்பாடுண்டு.

சிவமுத்துக்குமாரசாமியின் பணி விளம்பரமற்றது; அமைதியில் நிகழ்வது. தென்னாட்டில் தோன்றிய இந்தி எதிர்ப்பியக்கத்திறகுச் சென்னையில் முளையாயிருந்து பெரும் பணியாற்றியவர் முத்துக்குமாரர் என்பது சிலர்க்கே தெரியும்; அச் சிலருள் யானும் ஒருவன்; விளம்பரமற்ற தொண்டினை என் மனம் போற்றுவது இயற்கை.

முத்துக்குமரருடன் பிறந்தவர் ஒருவரிருக்கிறார். அவர் பெயர் மலர்முகத்தம்மாள் என்பது. தம்பியார் தொண்டுக்குத் தமக்கையார் துணையும் அரண் செய்து வருகிறது. இந்தி இயக்கத்தில் சிறை சென்றவர் அம்மையார்."

மக்கள்

இவருக்கு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

எழுதிய நூல்கள்

(க) என் இளமைப் பருவம்

(உ) நித்தில வாசகம் (ஐந்து வகுப்புவரை)

(ங) நல்ல எறும்பு

(ச) முத்துப் பாடல்கள்

முதலிய முப்பது நூல்கள் வரை இவர் எழுதியுள்ளார். இவருடைய முத்துப்பாடலைப் பாராட்டி சுடுவண் அரசு பரிசு வழங்கியது. இவருக்குத் "தமிழ் நெறிக் காவலர்" என்னுஞ் சிறப்புப் பெயரும் உண்டு.

இறுதி

இவ்வாறு பல்லாற்றானும் சிறந்து வளங்கிய இவர் 6-7-68 சனிக்கிழமை இரவு 12-30 மணிக்கு அரசாங்க மருத்துவ மனையில் இறைவனுடைய திருவடிநிழலை யடைந்தார்.

"உண்மை உறுதி உயர்வொழுக்கம் நெஞ்சஞ்சாத்
திண்மை செயலாற்றுந் திரமிகு—வண்மை
எளிய தலவாழ்வு ஏற்றமிகு நோக்குக்
களிமயிலை முத்தவரே காண்." —அழகுவேலனார்.

## உ. இரசபதி அடிகள்

### தோற்றம்

தொண்டைவளநாட்டிலே மண்டியபுகழ் சென்னையிலே புரசவாக்கத்திலே 1902 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இருபத்தேழாம் நாளுக்குச் சரியான சுபகிருது ஆண்டு ஆவணித் திங்கள் பன்னிரண்டாம்நாள் இரசபதியடிகள் என்று பிற்காலத்திலே பெயர்மாற்றிக் கொண்ட பு. பா. இரத்தின சபாபதி நாயகர் பிறந்தார். தந்தையார் பெயர் பார்த்தசாரதி நாயகர்; தாயார் பெயர் சின்னம்மாள்.

### இளமைப் பருவம்

இவருடைய தாயாராகிய சின்னம்மையார் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள்மீது பேரன்பு கொண்டவர். தம்முடைய மகனையும் பக்தி நெறியில் வளர்த்தார். இவருக்குப் பின் பெண்குழந்தை யொன்று பிறந்தது. அதன்பின்னர் மற்றொரு பெண்குழந்தை எழும்பூர் மகப்பேறு நிலையத்தில் பிறந்தது. அங்கேயே தாயுஞ் சேயும் இவ்வுலக வாழ்வைத் துறந்தனர். தந்தையா ராகிய பார்த்தசாரதி நாயகர் புரசவாக்கத்தில் இரும்புப் பட்டரையொன்று வைத்து நடத்தினர். சின்னம்மைக்கு முன் வேதவல்லி யென்னும் மாதை மணந்து இல்லறம் நடத்தினர். அம்மாது இறைவனடி சேர்ந்த பின்னரே இரண்டாவது திருமணம் புரிந்தார். முதல் மனைவிக்கும் ஒரு பிள்ளை இருந்தான். இரண்டாவது மனைவியும் இறைவனடி சேர்ந்ததைக் கண்டு பார்த்தசாரதி நாயகர் வருந்தினர். இரும்புப்பட்டரையும் பொருளிழப்பில் நடந்து கொண் டிருந்தது.

பார்த்தசாரதியார் இரும்புப்பட்டரையை விற்றார். குழந்தைகளைத் தம்மால் வளர்க்கமுடியாது என்று எண்ணிக்

கூவம் என்னும் சிற்றூரில் இருந்த தாய்மாமன் இல்லத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார். பெரியபிள்ளையும் தாமும் சென்னை மயிலையில் தொழில் செய்து வாழ்க்கை நடத்தினர். வருவாய் தந்தைக்கும் மைந்தனுக்குமே போதாதாக இருந்தது. ஆகவே கூவத்தில் இருந்த குழந்தைகளைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை.

பொருள் வந்தபோது குழந்தைகளை நன்கு கவனித்த உறவினர் வாராதபோது சரிவரக் கவனிக்கவில்லை. இளம் பருவத்திலேயே இரசபதியார் அதிகாலையில் எழும் வழக்கத்தையும் நீராடி இறைவழிபாடு செய்யும் வழக்கத்தை யும் மேற்கொண்டார்.

கல்வி

இளம்பருவத்தில் கூவத்தில் திண்ணைப்பள்ளிக் கூடத்தில் கல்விகற்கத் தொடங்கினர். பள்ளியாசிரியர் இரசபதியாரிடத்தில் தனிப்பற்றுதல் கொண்டிருந்தார். இரசபதியார் கல்வி கற்கத் தொடங்குமுன் கடவுள் வழிபாடு செய்யும் வழக்கத்தைக் கடமையாகக் கொண்டிருந்தார்.

கூத்தாட்டமுங் கையொடிவும்

கூவம் ஊரில் பக்த பிரகலாதா, இராமாயணம், பாரதம் முதலிய தெருக்கூத்துகள் நடக்கும். தெருக்கூத்து என்றால் இரசபதியார்க்கு மிகுந்த விருப்பம். இறுதிவரையில் கண் விழித்து அக்கூத்தைக் கருத்துடன் பார்ப்பார். மறுநாள் தம்மையொத்த சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு அக் கூத்தை நடித்தும் பார்பபார். ஊரார்கள் இதனைக் கண்டு உவகையடைந்து வாழ்த்துவர். ஒருநாள் ஓரிடத்தில் கிடந்த வண்டியின் மீது ஏறி நாடகம் நடத்திக் கொணடிருந்தபோது வண்டி குடை சாய்ந்தது. இரசபதியார் கீழே விழுந்தார். வலி பொறுக்கமுடியாமல் அலறினர். நன்றாகக் கவனித்ததில் கையொடிந்து விட்டதென்று தெரிந்தது. உடனே அம்மானுக்குச் செய்தி யெட்டியது. அவர் விரைந்துவந்தார்;

தூக்கினர். "உனக்கு ஏன் இந்தக் கூத்து! போட்டதைத் தின்றுவிட்டு ஒரு மூலையிற் கிடக்காமல் இவ்வாறு குறும்புகள் செய்து கால்கைகளை யொடித்துக்கொண்டு எங்களுக்கெல்லாந் தொல்லை கொடுக்கிறாயே; தினபதோ தண்டச்சோறு; இதில் கூத்துவேறு?" என்று வைது கொண்டே வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போனார். வீட்டி லிருந்த பெண்களும் இடித்துரைத்தனர்; இவர் உள்ளம் வருந்தியிருந்தார். புத்தூருக்குக் கொண்டுபோய் முறிந்த கைக்கு மருத்துவஞ் செய்தனர். நாளடைவில் கை சரியாகி விட்டது.

## கூவத்தைவிட்டு வெளிப்படல்

மாமன் மகனுக்குத் திருமணம் வெகு சிறப்பாக நடை பெற்றது. காலை பததுமணி முதல் மாலை மூன்று மணி வரையில் விருந்து நடைபெற்றது. இரசபதியாரையும் தங்கையையுங் கவனித்து உணவிடுவார் இல்லை. "அன்னை யில்லாப்பிள்ளை இருப்ப தவம் அவமே" என்னும் பெரியார் வாக்கு உண்மையாகிவிட்டது. வெகுநேரம் வரையில் பசியால் வாடிய இரசபதியார் கடைசியாக ஒரு பந்தியில் உணவு கொள்ளும் பொருட்டு உட்கார்ந்தார்.

இவர் உண்ணத் தொடங்கும் சமயத்தில் பெரியவர் ஒருவர் அங்கு வந்தார் உணவு கொள்ள. அவருக்கு இலை இல்லை. உடனே இரசபதியாருடைய மாமன் இவரிடம் ஓடி வந்தார்; "உனக்கு இப்பொழுது என்ன அவசரம்! பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி இவரை இலையை விட்டு இழுத்துத் தள்ளிவிட்டு அப்பெரியவரை உட்கார வைத்தார். கைக்கெட்டியது வாய்க் கெட்டாததைக் கண்ட இரசபதியார் உள்ளம் வாடினர். தங்கையையும் அழைத்துக் கொண்டு கோவிலை நோக்கிச் சென்றார். அம்மனை நோக்கித், "தாயே! எங்களை இப்படி வருத்துகிறாயே?" என்று சொல்லிப் பலவாறு புலம்பினர். பொழுதும் போய்விட்டது. தங்கையுந் தாமும் பசியால் வருந்திக் கோயில் வாசலில் படுத்து உறங்கிவிட்டார். மறுநாட் காலையில் எழுந்து

காலைக்கடன்களை முடித்துக்கொண்டார். தங்கையையும் அழைத்துக்கொண்டு சென்னையை நோக்கிப் புறப்பட்டார்.

## சென்னைக்குச் செல்லுதல்

வழியிலே ஆறு குறுக்கிட்டது. ஆறு நீர் நிறைந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றைப் பார்த்துத் தங்கை பதறியது. "அஞ்சாதே" என்று அதற்கு அறிவூட்டினார். "நான் உன்னைத் தூக்கிக்கொண்டு போகிறேன்" என்று சொல்லித் தூக்கித் தோள் மேலே வைத்துக்கொண்டு துணிந்து ஆற்றில் இறங்கினார். எப்பொழுதாவது வரும் சாவு இன்றே வந்தாலுஞ் சரிதான் என்று எண்ணியவராய் நடந்தார். தண்ணீர் முழங்கால், தொடை இடுப்பு மார்பு கழுத்து இப்படி அதிகரித்துக் கொண்டே வந்தது "ஐயோ ஐயோ" என்று அலறும் தங்கையின் குரல் இவருடைய காதுகளில் விழவில்லை. வாய் "முருகா முருகா" என்று கதறிக்கொண்டிருந்தது. வாய் வரையில் வந்த வெள்ளம் பிறகு குறையத் தொடங்கியது. மறு கரையை அடைந்தார். சென்னையை நோக்கிக் கால்நடையாகப் புறப்பட்டார். கால் வலிக்கும்பொழுது சிறிது நேரம் உட்காருவார். பிறகு மீண்டும் நடப்பார் இவ்வாறே வழிநடையில் ஈடுபட்டு மாலையில் சென்னையை அடைந்தார்.

## தந்தையாரைக் காண்டல்

தந்தையாருடைய இருப்பிடத்தை உசாவிக்கொண்டே தந்தையார் இருக்குமிடத்தை யடைந்து தந்தையாரையுந் தமையனையுங் கண்டார். அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டு 'கோ' என்று கதறினார். அப்பொழுது இரவு பத்துமணி, அந்நேரத்தில் இவர்களைக் கண்ட தந்தையார் பதறினர். "எப்படி வந்தீர்கள்? என்ன செய்தி!! இஃதென்ன கோலம்! சாப்பிட்டு விட்டீர்களா?" என்று கேள்வியின்மேல் கேள்வியாக அடுக்கினர். இராசபதியார் நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் இயம்பினர். மைந்தன் கூறிய செய்திகளையெல்லாங் கேட்ட தந்தையார் சிந்தை

நொந்தார். இத்தகைய கொடியோரிடம் இனிக் குழந்தைகளை அனுப்பக்கூடாது என்று முடிவு செய்தார். "இனிமேல் அங்குப் போகவேண்டாம் எங்களோடு கூடவே இருங்கள்" என்று ஆறுதல் கூறினர். உணவிட்டுப் பசியைப் போக்கினர்.

### கல்விகற்றல்

தந்தையாரோடு தங்கிய இரசபதியார் பள்ளியிற் சென்று கல்வி கற்றல், கோயிலுக்குப்போய் இறைவழிபாடு செய்தல், முருகக்கடவுளை எண்ணி உருவேற்றல், திருவருட் பாப் பாராயணஞ் செய்தல் முதலிய செயல்களை மேற் கொண்டார். மாலையில் இறைவழிபாடு செய்தபிறகு தெருவி லுள்ள விளக்கு வெளிச்சத்தில் படிக்கும் வழக்கத்தை மேற் கொண்டார். படிப்பில் கருத்தை மிகுதியாகச் செலுத்துவார். தந்தையார் கூப்பிட்டபிறகுதான் சாப்பிடச் செல்வார். இரசபதியார் ஏழெட்டுவயதுச் சிறுவராக இருக்கும் போதே அளவுக்குமீறி இரவெல்லாம் படிப்பார். 'உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே' என்று தந்தையார் கண்டிப்பார். சில சமயங்களில் நன்றாக அடிப்பார்.

### கிணற்றில் வீழ்தல்

இரசபதியார் எட்டுவயதுச் சிறுவராக இருக்கும் போது வீதியின் கோடியில் ஒரு கிணற்றுப்படியில் உட்கார்ந்தவாறு படித்துக் கொண்டிருந்தார். தந்தையார் டேம்மடையா! அங்கு என்ன செய்கிறாய்? என்று கூறிக்கொண்டே இவரை நோக்கிவந்தார். பதறிஎழுந்த இரசபதியார் தவறிக் கிணற்றில் விழுந்தார். தலையில் அடிபட்டுப் படுகாயம் உண்டாயிற்று. பலர் அங்குக் கூடினர். கிணற்றில் இருந்து தூக்கி வீட்டிற்குக்கொண்டு சென்றனர். அதுமுதல், தந்தையார் தம் மகனைக் கண்டிப்பதில்லை.

### அந்தணர்க்குத் தொண்டு

இரசபதியார் வசித்திருந்த தெருவில் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் அதிகாலையில் பூசைமுடித்துக் கொண்டு மகாதேவமாலையைப் பாராயணஞ் செய்வார். அந்தணர் மகாதேவமாலையைப் பாராயணஞ் செய்தலைக் கண்ணுற்ற இவர் அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு அவ்வந்தணருடைய இல்லத்துக்குச் சென்று அவருக்கும் அவருடைய மனைவியார்க்கும் வேண்டிய உதவிகளைச் செய்வார். அந்தணர் பூசைசெய்யும்போது அதனைப்பார்த்துக் கொண்டிருப்பார்.

### மகாதேவமாலை

இரசபதியார் மகாதேவமாலையைப் பத்தே நாளில் மனப்பாடஞ் செய்துவிட்டார். ஒருநாள் பூசைக்குச் சென்ற இவர் ஐயருடைய மகாதேவமாலையை எடுத்துப் பார்த்தார். அந்தணர், "அடடே ஏனடா அதனை எடுத்தாய்? அது கடினமான நூல். அதனை உன்னால் படிக்க முடியாது; வைத்துவிடு" என்றார். அதற்கு இவர், "இல்லை ஐயா! இஃது எனக்குத் தெளிவாக விளங்குகின்றது. இந்நூல் முழுவதையுமே அடியேன் மனப்பாடஞ் செய்துவிட்டேன்" என்று கூறினர். மிகு விரைவாக நூறு பாடல்களையும் ஒப்புவித்தார். இதனைக் கேட்ட அந்தணர் திகைத்து விட்டார். அவருடைய மனம் மிகுந்த மகிழ்ச்சியடைந்தது. நான்கணாக்காசை எடுத்து இவரிடம் பரிசு வழங்கினர். இவர் அக்காசைக் கொண்டுபோய்ப் பழம் தேங்காய் வெற்றிலை பாக்கு முதலியன வாங்கிவந்து பூசை செய்யச் சொன்னர். இவருடைய கடவுளன்பைக் கண்ட அவ்வந்தணர், "நீ சிறப்புடன் வாழ்வாயாக" என்று நல்லுரை கூறினர். "ஐயர் கூறிய வாழ்த்துரைதான் அடியேனை நன்னிலைக்கு உயர்த்தியது" என்று இரசபதியார் அடிக்கடி கூறுவது வழக்கம். இந் நிகழ்ச்சி நிகழ்ந்தபோது இரசபதியாருக்கு அகவை ஒன்பது. மூன்றும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

### தச்சுவேலை

ஓய்வு ஒழிவு இல்லாமல் படிப்பதிலும் திருக்கோவிலுக்குப்போய்க் கடவுள்வழிபாடு செய்வதிலும் ஆர்வங்கொண்டு நின்ற இவரை ஒரு பெரியவர் பார்த்தார். இவருடைய தந்தையாரிடம், "இவன் துறவியாகிவிடுவான்" என்று சொன்னார். தந்தையார் உலக வாழ்க்கையில் நன்கு ஊறியவர். மெய்யறிவைப்பற்றி ஒரு சிறிதும் உணராதவர். "பையன் துறவியாகிவிட்டால் நமக்குப் பயன்படாமல்போய் விடுவானே ; ஒவ்வொருவரும் பிள்ளைகளைப் பெறுவது தங்களுடைய முதுமைப் பருவத்திலே தங்களைக் காப்பாற்றுவதற்குத் தானே" என்று எண்ணினார். இனிமேற் பையன் படிக்குமாறு விடக்கூடாது. வேலை செய்யப் பழக்கிவிட வேண்டும் என்று முடிவுசெய்தார். தச்சு வேலையிற் சேர்த்து விட்டார். தந்தையாருடைய கட்டளைப்படி வேலைக்குச் சென்றார். வேலையைச் செய்தார். மற்றை நேரங்களிலெல்லாம் புத்தகமும் கையுமாக இருந்தார். வேலைக்குப் போம்பொழுதும் வரும்பொழுதும் படித்துக்கொண்டே போய்வருவார்.

### களவுக்குற்றஞ் சொல்லுதல்

ஒருநாள் தேவாரப் புத்தகத்தைப் படித்தவாறே தொழிற் சாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஓரிடத்தில் மணல் கொட்டிவைத்திருந்தார்கள். படித்துக்கொண்டே வந்தவர் மணற்குவியலைப் பாராமல் அதன்மீது ஏறினார். காலில் ஏதோ தட்டுப்பட்டது. என்ன என்று குனிந்து பார்த்தார். உடைக்கப்படாத இரண்டு சோடாப் பாட்டில்கள் அங்கு இருந்தன. இவை இங்கு எப்படி வந்தன என்று எண்ணியவராய்க் கீழே குனிந்து அப் பாட்டில்களை எடுத்தார். "பழியோரிடம் பாவமோரிடம்" என்பது ஒரு பழமொழி. அந்தப் பழமொழி இப்பொழுது சரியாகிவிட்டது. இவர் பாட்டில்களைக் கையில் எடுத்த அதே சமயத்தில் "அதோ அதோ பிடி பிடி" என்று பல குரல்கள் எழுந்தன. இவர் திரும்பிப்பார்ப்பதற்குள் இவரைச்

சுற்றி ஒரு பெரிய கூட்டங் கூடிவிட்டது. "இவன் தான் விடாதீர்கள்; நையப்புடையுங்கள். பிறகு காவல் நிலையத் திற்குக் கொண்டுபோய் ஒப்புவிப்போம், ஆளைப் பாருங்கள் திருட்டுப்பையல் எப்படியிருக்கிறான்? இந்தச் சிறுவயதி லேயே திருட்டுப் பிழைப்பா?" என்று ஒரே சமயத்தில் பல குரல்கள் ஒலித்தன.

முருகன் துணை

இரசபதியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "இஃ தென்ன?" என்று விழித்தார். கையைத் தூக்கிக்கொண்டு அடிப்பதற்கு எல்லோரும் நெருங்கிவிட்டார்கள். என்ன செய்வது என்று இரசபதியாருக்கு விளங்கவில்லை. "தெய்வமே துணை. முருகா! முருகா!! முருகா!!!" என்று கூறியவாறே அசையாமல் நின்றிருந்தார். "என்ன அது? நில்லுங்கள் நில்லுங்கள்" என்று அதட்டிக்கொண்டே ஒரு மனிதர் அவ்விடத்திற்கு ஓடி வந்தார். அவர் ஓர் ஊர் காவலர் (போலீசுக்காரர்). அண்மையில் நெருங்கிய ஊர் காவலர் இரசபதியாரைப் பார்த்தார். நிகழ்ந்ததை உசாவி னார். கூட்டத்தார் கூறியதைக் கேட்டார். கேட்டவர் நகைத்தார். "இப் பையனைப் பார்த்தால் உங்களுக்குக் கள்ளன் போலவா தெரிகிறான்? நடந்ததை நன்கு உசாவா மல் வையவும் அடிக்கவுந் தொடங்கிவிட்டீர்களே! நீங்கள் நினைப்பதுபோல் இவன் திருடன் அல்லன். இவனை எனக்கு நன்றாகத் தெரியும். நல்லொழுக்கமும் சிவபக்தியும் உடை யவன்" என்று கூறினார். பிறகு இவரைப் பார்த்துத், "தவறுதலாக உன்னைத் திருடன் என்று எண்ணிப் பிடித்து அடிக்க வந்துவிட்டார்கள்: வருத்தப்படாதே" என்று ஆறுதல் உரைகள் கூறி அனுப்பிவைத்தார். அன்று முருகன் அவ்வளவு விரைவாக அந்த ஊர்காவலரை அவ்விடத்திற்கு வரச்செய்யாமலிருப்பின் இவர் நன்கு அடிபட்டிருப்பார். அதே சமயத்தில், "இதோ பிடித்து விட்டோம்; திருட்டுப்பயல் மாட்டிக்கொண்டான்" என்று கூறிக்கொண்டு சிலபேர் உண்மையான திருடனை அவ்

விடத்திற்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள். எல்லோரும் தங்கள் செயலுக்கு நாணித் தலை கவிழ்ந்தனர். இரசபதி யாரோ, "கடவுளே உனக்கு இப்படி ஒரு திருவிளையாட்டா?" என்று கூறிப் புத்தகத்தைப் படித்தவாறே அவ்விடத்தை விட்டு அகன்றார்.

### வேலையை விட்டு விலகுதல்

ஒரு நாள் வேலையில் ஏதோ சிறு தவறு நேர்ந்து விட்டது. அது சிறு தவறுதான். உரிமையாளர் அத்தவற்றினைப் பெரிதாகப் பாராட்டினார். "அடே மடையா! முட்டாளே!! அறிவிருக்கிறதா இல்லையா உனக்கு? ஏன் இவ்வாறு செய்தாய்?" என்று கேட்டு மேலும் பலவாறு வைதார். வைதது போதாது என்று கன்னத்தில் ஓர் அறையுங் கொடுத்தார். இரசபதி உடனே தொழிற்சாலையை விட்டு வெளியேறினார். நேரே மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சென்றார். இறைவன் திருமுன்பு நின்று வணங்கினார். "நான் இன்று முதல் தச்சு வேலையின் ஆயுதங்களைத் தொடுவதில்லை" என்று உறுதிமொழி கூறினார். அவர் அன்றுமுதல் இறுதிவரை தம்முடைய உறுதிமொழியைக் காப்பாற்றினார். ஓர் ஆணியைக்கூடத் தொடுவதில்லை. ஆயுதங்களைக்கொண்டு ஏதாவது வேலை செய்தாகவேண்டியிருப்பின் பிள்ளைகளையோ மனைவியையோ அதனைச் செய்யச் சொல்லுவார். கபாலீசுவரர் முன்பு உறுதி கூறியவாறே தேவார திருவாசகப் பாடல்களைப் பாடிக் கண் மூடி நின்றார். "இந்தா பிடி" என்ற குரலைக் கேட்டுக் கண்களைத் திறந்தார். எதிரில் கோயிற் பூசகர் நின்று கொண்டிருந்தார். அவருடைய கையில் திருநீறு மலர் முதலிய கடவுள் வழிபாட்டுப் பொருள் இருந்தது. அதனைப் பெற்றுக்கொண்டு இறைவன் திருவருளைப் பாராட்டினார். அன்றுமுதல் வேலைக்குப் போவதை விட்டுவிட்டுக் கோயிலிலேயே பெரும்பாலும் பொழுதைப் போக்கினார். கோயிலில் கிடைக்கும் வழிபாட்டுணா, சுண்டல் முதலியவைகளை உண்பார். கண்ட இடங்களில் படுத்திருப்பார். என்றாவது ஒருநாள் வீட்டிற்குச் செல்வார்.

இவருடைய போக்குத் தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. கண்டிக்கவும் மனம் வரவில்லை. "தோளுக்குமேல் போனால் தோழன்" என்பது பழமொழி. அதனை எண்ணிக்கொண்டு பேசாமல் இருப்பார்.

## சொற்பொழிவுகள்

இரசபதியார் கோயில் முதலிய இடங்களில் இருந்தபடி தம்மை மறந்த நிலையில் இசையொடு பாடல்களைப் பாடிப் பொருள் விரிப்பார். ஒரு சிறு கூட்டம் அதனைக் கேட்டுக் கொண்டிருக்கும். நாளடைவில் கூட்டம் பெருகியது. ஆகவே இவர் பேசுவது புராணச் சொற்பொழிவாக மாறியது. பிறர் செய்யும் சொற்பொழிவுகளையுஞ் சென்று கேட்டார். நாளடைவில் ஒரு சிறந்த சொற்பொழிவாளரானார். "பிரசங்கபூடணம்" என்னுஞ் சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டாகியது. நாள்தோறும் நூல்களையும் பயின்று சிறந்த புலமைத் திறத்தையும் அடைந்தார். சென்னை மாநகர் முழுவதும் இவருடைய சொற்பொழிவுகள் நடைபெறலாயின.

## உரை எழுதுதல்

சிறந்தமுறையில் இவர் விரிவுரையாற்றுதலைக் கண்ட அன்பர்கள் பலர் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா முதலிய நூல்களுக்கு உரையெழுதுமாறு வேண்டினர். இவரும் அவ்வாறே எழுதலானார். ஐயமுண்டாகிற இடங்களில் பலரையுங் கேட்டு ஆராய்ச்சி செய்த பிறகு எழுதுவாரே தவிர மனம்போனபோக்கில் எழுதிவிட மாட்டார். ஒருசமயம் ஒரு நூலில் ஓரிடத்தில் ஐயம் உண்டாகியது. பலபேரிடம் கேட்டுப்பார்த்தார். இதற்குமுன் யாராவது இதற்கு உரையெழுதி யிருக்கிறார்களா என்று அறிஞர்களை உசாவினார். எல்லோரும் தெரியாது என்று கூறிவிட்டனர். நூல் நிலையங்களிலும் தேடிப்பார்த்தார். ஒரு பாட்டில் ஓரிடத்தில் ஏற்பட்ட ஐயம் பல நாட்களாக எவ்வளவோ முயன்றும் தெளியவில்லை. ஆகவே மிகுந்த கவலை கொண்

டார். இதனில் தோல்வி யேற்பட்டுவிடுமோ என்று அஞ்சினர். கந்தசாமி கோவிலுக்குச் சென்று கந்தப் பெருமானை வணங்கினர். தம்முடைய கவலையைப் போக்கி யருளவேண்டுமென்று வேண்டிக் கொண்டார். திரும்பி வீட்டிற்கு வந்தார். தம்மை மறந்து உறங்கி விட்டார்.

## முருகன் திருவருள்

அதிகாலை மணி ஐந்து. ஐந்துவயதுச் சிறுவன் ஒருவன் இடையிலே ஒருமுழத் துண்டுடனும் கையிலே ஒரு தடியைப் பிடித்தவாறும் இவரிடம் ஓடிவந்து, "வருந்தாதே நீ விரும்பிய உரை மயிலைக்கடுத்த மந்தைவெளியில் ஒரு பாட்டியிடம் இருக்கிறது. விரைவாகச் சென்று அதனை வாங்கிக்கொள். உடனே ஓடு" என்று கூறி முகவரியையுங் கொடுத்ததாகக் கனவு கண்டார். உடனே திடுக்கிட்டெழுந் தார். இது முருகனுடைய திருவிளையாடலே என்று முடிவு செய்தார். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு விரைவாகப் புறப்பட்டு மந்தைவெளிக்குச் சென்றார். கனவில் கண்ட முகவரியை உசாவித்தெரிந்து கொண்டு அவ் வீட்டிற்கு முன் போய் நின்றார். அஃதொரு குடிசை வீடு. வீட்டிலிருந்த கிழவி, "தம்பி! நீ யார் உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டவாறே அடுப்பில் இருந்த தண்ணீர் வெந்நீராதற் பொருட்டுத்தாள்களைக் கிழித்துக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தாள். கிழவியின் செய்கையைப் பார்த்த இரசபதியார் திடுக்கிட்டு, "இஃது என்ன பாட்டி?" என்று கேட்டார்: அதற்குப் பாட்டி, "இவைகள் பழைய புத்தகங்கள். செல்லரித்து வீணாகிவிடு கின்றன. இவைகளை இங்கு படிப்பவர் எவரும் இலர். ஆகவே அடுப்பெரிவதற்கு அடுப்பில் கிழித்துப் போட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று மறுமொழி கூறினள்.

இரசபதியார் கிழவி கிழிப்பதைத் தடுத்து விட்டு அங்கு இருந்த பழைய புத்தகங்களை யெல்லாம் யெடுத்துப் பார்த்தார். இவர் உரை யெழுதிக்கொண்டு

வந்த புத்தகமும் இருந்தது. அதனை யெடுத்துத் தமக்கு ஐயமாக இருந்த பகுதியைப் படித்துப் பார்த்தார். பொருள் நன்கு விளக்கமாகியது. அங்கிருந்த புத்தகங்களை யெல்லாம் தமக்குக் கொடுத்து விடுமாறு கூறிப் பாட்டியிடம் ரூபாய் ஐந்தை எடுத்து நீட்டினர். பாட்டியோ இதனைக் கனவிலும் எதிர்பாராதவளாகையால் பெருமகிழ்ச்சியடைந்து ரூபாயை வாங்கிக்கொண்டு புத்தகங்களை யெல்லாம் கொடுத்து விட்டாள். இவர் புத்தகங்களை யெல்லாம் கட்டியெடுத்துக் கொண்டு நேரே கந்தசாமி கோயிலுக்கு வந்தார். கந்தசாமி திருமுன்பு அவைகளை வைத்து, "முருகா! சிறிது தாழ்த் திருந்தாலும் இவைகளெல்லாம் நீக்கடவுளுக்கு உணவாகி யிருக்குமே! இதற்காகத்தானு என்னை விரைந்து செல்லு மாறு கட்டளை யிட்டாய்" என்று கூறிப் பணிந்து போற்றிப் பாராட்டினர்.

## திருவள்ளூரில் திருமணமுடி.

ஓர் அமாவாசை நாளன்று தம்முடைய தந்தையாரின் விருப்பத்திற் கிணங்கத் தங்கையோடு திருவள்ளூருக்குச் சென்றார். பெருமானைத் தொழுது திருக்கோயிலை வலம் வந்தார். அங்கு ஒரு மரம் உள்ளது: ஒருபக்கம் ஆண்கள் கூட்டம்; மற்றொரு புறம் பெண்கள் கூட்டம். இரண்டு கிளைகளைச் சேர்த்து முடி போட்டுக்கொண்டிருந்தார்கள். எதற்காக முடிபோடுகின்றார்கள் என்று இரசபதியாரும் தங்கையாரும் உசாவினர். "இவ்வாறு இரண்டு கிளைகளைச் சேர்ந்து முடிபோட்டால் விரைவில் திருமணம் நடைபெறும்" என்று மறுமொழி கிடைத்தது. இரசபதியாரின் தங்கையார் தம்முடைய அண்ணனைப் பார்த்து, "அண்ணு! நீங்களும் முடி போடுங்கள்; விரைவில் எனக்கோர் அண்ணியார் கிடைப் பார்கள்" என்றனர். தந்தையாரும் முடிபோடுமாறு கூறினர். இரசபதியார் ஒருபக்கம் சென்று இருகிளைகளை இழுத்துச் சேர்த்து முடிபோட்டார். இவர் முடிபோட்ட அதே சமயத்தில் எதிர்ப் பக்கத்தில் திருமகளைப் போன்ற அழகுடைய ஒரு பெண்மணியும் முடிபோட்டனர். இதனைத்

தங்கையார் பார்த்து, "அண்ணா அதோ பாருங்கள். ஓர் அழகிய பெண் முடி போடுகிருள். இரண்டு பேரும் ஒரே சமயத்தில் முடி போடுகிறீர்கள். அந்தப் பெண் நல்ல அழகாக இருக்கிருள். அவளே எனக்கு அண்ணியாக வந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்" என்று கூறப் பலர் இருக்குமிடத்தில் இவ்வாறெல்லாம் பேசக் கூடாது வா என்று கூறிக் கண்டித்து அப்பால் அழைத்துக்கொண்டு சென்ருர்.

## திருமணம்

இரண்டு நாட்கள் சென்றன. இரசபதியாருடைய வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதில் இருந்து ஒரு பெரியவர் இறங்கினுர். அவர் வீட்டு வாசலில் வந்து நின்று, "இரத்தினசபாபதியார் வீடு இதுதானே?" என்று உசாவினுர். இவர் உடனே, "ஆம், இவ்வீடுதான், நான்தான் இரத்தினசபாபதி" என்று சொல்லி வரவேற்ருர். பிறகு இருவரும் வீட்டில் அமர்ந்து நலம் உசாவினர். பிறகு, "என்னேடு சிறிது வாருங்கள்" என்று கூறி இவரைத் தம்முடைய இல்லத்திற்கு அழைத்துக்கொண்டு சென்ருர். சிற்றுண்டி, பால், பழம் முதலியன உண்ணச் செய்தார். இரசபதியாரின் குடும்பச் செய்திகளையெல்லாம் உசாவினுர். பிறகு தம்முடைய மனைவியாரை அழைத்து, "இவரைப் பார் நல்லொழுக்கமும் கடவுள் அன்பும் உடையவர். இவருக்கு உன்னுடைய தங்கையைக் கொடுத்துத் திருமணஞ் செய்து நம்மவர் ஆக்கிக் கொள்ளலாம் என்பது என்னுடைய எண்ணம். உன்னுடைய கருத்து என்ன?" என்று உசாவினுர். இவருடைய சிவக்கோலம் எடுப்பான தோற்றம் அடக்க ஒடுக்கம் இவைகளைப் பார்த்து அவ்வம்மையார் வியந்து உடன்பட்டார். "இவருடைய பெற்ருேர்களையும் கேட்டுக்கொள்ளுங்கள்" என்ருர். இவரோ இதுவும் தெய்வச்செயலே; "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்று எண்ணியவராய்ப் பேசாதிருந்தார். "மௌனம் சம்மதம்" என்பது பழமொழியாகலின் இரசபதி

யாரும் உடன்பட்டுவிட்டார் என்று முடிவு செய்தனர். இரசபதியார் இல்லத்தை அடைந்தார். பிறகு பெண் பார்க்கும் படலம் முதலியவைகளும் நடைபெற்றன. பெண் பார்ப்பதற்குத் தங்கையாருஞ் சென்றூர். அன்று திருவள்ளூரிலே மரத்தடியில் பார்த்த அப் பெண்ணே மணமகள் என்பது தெளிவாகியது. தங்கையார் குறித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார். அண்ணனைப் பார்த்து, "அன்று திருவள்ளூரில் நான் பேசியபோது கண்டித்தாயே. என் வேண்டுகோள்தான் பலித்துவிட்டது; அன்று அங்கு பார்த்த அதே பெண்தான் அண்ணியாக வரப்போகிறுள்" என்று கூறி மகிழ்ந்தார். பிறகு திருவல்லிக்கேணியில் இரத்தினசப்பாபதியார்க்கும் சயலட்சுமி என்னும் அப் பெண்ணுக்குஞ் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

### இல்வாழ்க்கை

சில சொற்பொழிவுகளால் வருகிற வருவாயே இரசபதியாருடைய வருவாயாக இருந்தது. மனைவியாராக வாய்த்த மாது வரவுக்குத் தக்கபடி செலவு செய்து குடும்பத்தை நடத்தினர். போதிய உணவு கொள்ளுதற்கு இயலாத நிலையிலேயே குடும்பம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நம்முடைய வறுமையொழிய இறைவன் எப்பொழுது திருவருள் செய்வானே என்று இவர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

### எதிர்பாராத உதவி

ஒருநாள் காலையில், "சுவாமி! உள்ளே வரலாமா?" என்று ஒரு கம்பீரமான குரல் வெளியேயிருந்து உண்டாகியது. தாடி கடன்களை முடித்துக் கொண்டு வெளியே புறப்படுவதற்குத் தொடங்கிய இரசபதியார், "யார் அது? உள்ளே வரலாம்" என்று கூறிக்கொண்டே எட்டிப் பார்த்தார். எதிரே ஒரு குதிரைவண்டி நின்றிருந்தது. அதிலிருந்து ஒரு பெரியவர் இறங்கி உள்ளே வந்தார். அவர்

இரசபதியாரைப் பார்த்து, "சுவாமி! தாங்கள் எங்கள் இனத்தவர். நான் உங்களை நன்கு அறிவேன். தாங்கள் என்னை அறியாமலிருக்கலாம். பக்கத்தில்தான் என்னுடைய வீடு உள்ளது. இதைப் பிடியுங்கள்'' என்று கூறிக் கொண்டே ரூபாய் இருபதை இவருடைய கையில் கொடுத்தார். இரசபதியாருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. காலையில்தானே கடவுளிடம் முறையிட்டேன். அதற்குள்ளாகவா கடவுள் பலனளிக்கத் தொடங்கிவிட்டார். என்னே பரமன் திருவிளையாடல்! என்று எண்ணியவராய்ப் பணத்தை மனைவியாரிடங் கொடுத்தார். "கவலையை விடு" இனிமேல் நமக்கு நல்ல காலம் பிறக்கும் என்று கூறினர். வந்தவர் இவரை இராயபுரத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அவருடைய வீடு பெரிய வீடாக இருந்தது. வீட்டில் ஓர் இருக்கையில்இருக்கச் செய்தார். "பக்கத்தில் ஒரு பிள்ளையார்கோயில் இருக்கிறது. அங்குக் கிழமைக்கு இரண்டு நாட்கள் சொற்பொழிவு நடைபெறவேண்டும். அதற்குத்தான் ரூபாய் இருபதை முன்பணமாகக் கொடுத்தேன்,'' என்று சொன்னார். இரண்டு பட்டுவேட்டி; ஒரு சால்வை; ஒரு பட்டுப்புடவை; பட்டுரவிக்கை; ஐந்து வெண்பொற்காசுகள் ஆகியவைகளை ஒரு தட்டில் வைத்துக் கொடுத்து வணங்கினர். "இன்று நல்ல நாளாக இருப்பதால் இன்றே தொடங்குவது நல்லது" என்று கூறினர். இரசபதியாருக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. அன்று காலையில் தான் அவர் கடவுளை நோக்கித் தம்முடைய தொல்லைகளையெல்லாம் போக்கியருள வேண்டுமென்று வேண்டி வழிபட்டார். இவ்வளவு விரைவாகப் பலனேற்பட்டதைக் கண்டு திகைத்துப் போனர். தம்மைப் பெருமைப்படுத்திய வள்ளல் கேட்டுக் கொண்டபடி அன்றே சொற்பொழிவைத் தொடங்கினர். பெருந்திரளான மக்கள் கூடிச் சொற்பொழிவைக் கேட்டு இன்புற்றனர். இரசபதியாருடைய சொற்பொழிவைப் பாராட்டிப் போற்றினர். சொற்பொழிவு பலநாள் நடந்து நிறைவேறியது. நிறைவேற்ற நாளன்று பத்துச்சவரன் தங்கவில்லைபோட்ட சிவகண் மணிமாலையை அணிவித்துச் சிறப்புச் செய்தனர்.

வீடு பேறு

இரசபதியார் ஒருசமயம் இராயபுரத்திலே குடியிருந்தார். அப்பொழுது தருமேசுவர முதலியார் என்னும் பெயருடையவர் ஒருவர் இரசபதியாரிடம் தமிழ்நூல்களைப் பாடங் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் ஒருநாள் பாடங் கேட்க வந்தார். இரசபதியார் குடியிருந்த வீட்டில் பலர் குடியிருந்தனர். அவர்களில் ஒருவர் அசைவ உணவு புசிப்பவராக இருந்தார். தருமேசுவர முதலியார் படிக்கவந்தபோது புலால் நாற்றம் வீசியது. "அந்தோ இந்தச்சைவப் பெரியாரின் அருமை பெருமைகள் இவர்களுக்குத் தெரியவில்லையே" என்று மனம் வருந்தினர். இரசபதியாரைப் பார்த்துப், "புலால் உணவு கொள்ளும் புல்லர்களும் இருக்கும் இவ்வில்லில் இனிமேல் நீங்கள் குடியிருக்கவேண்டாம். தனியாக ஒரு வீடு வாங்கிக்கொண்டு அதிலே குடியிருங்கள்" என்று சொன்னர். இதனைக்கேட்ட இரசபதியார் நகைத்துச், "சரிதான், அதற்குப் பணம் வேண்டுமே! நான் எங்கே போவேன்?" என்றார். மாணவர், "நீங்கள் கவலையை விடுங்கள். ஆகவேண்டியவைகளை நான் செய்கிறேன் என்று கூறிவிட்டுச் சென்றார். இரண்டே நாளில் சஞ்சீவிராயன் கோயில் தெரு தொண்ணூற்றேழாம் எண்ணுள்ள இல்லத்தை இரசபதியார் பேரில் வாங்கிப் பதிவு செய்து கொடுத்தார். மாணவரின் செயலைக் கண்ட ஆசிரியர் திகைத்துப்போனர். "அம்மையே அப்பா இதுவும் உங்கள் திருவிளையாடல்களில் ஒன்று?" என்று கூறி இன்பக் கண்ணீர் வடித்தார்.

இரசபதியாருடைய கண்களில் இருந்து நீர் வருதலைக் கண்ட மாணவர் அஞ்சினர். "சாமி! என்ன இது? ஏன் கவலைப்படுகிறீர்கள்? வீட்டிற்காகக் கொடுத்துள்ள பணத்தை முடிந்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் வேண்டாம்" என்று சொன்னர். இரசபதியார், "நான் கவலைப்படவில்லை; என்னுடைய கண்ணில் இருந்து வருவது இன்பக் கண்ணீர்; இறைவன் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்தவுடன் இன்பக் கண்ணீர் வந்துவிட்டது" என்று சொன்னர். மிகுவிரைவில்

அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகை முழுவதையும் கொடுத்துத் தீர்த்துவிட்டார்.

மக்கட் பேறு

இரசபதியாருக்கு இரண்டு ஆண்மக்களும் இரண்டு பெண்மக்களுந் தோன்றினர். மனைவியார் வைணவ சமயத்தவராதலின் ஆண்பிள்ளைகட்கு வேங்கடேசன், ஏழுமலை என்று பெயர் வைத்தார். பெண்பிள்ளைகட்கு மல்லிகேசுவரி, தாயாரம்மாள் என்று பெயர் வைத்தார். இரசபதியார் குடும்பத்தில் எப்பொழுதும் பெயர் நிலைப்பதில்லை. இரத்தினசபாபதி என்னும் பெயர் இரசபதி என்று குறுகியது. மகனாகிய வேங்கடேசன் பெயர் தயாளன் என்று வழங்கியது, ஏழுமலையின் பெயர் திருநாவுக்கரசு என்று திரும்பியது மல்லிகேசுவரி மல்லிகாவாக மாறியது. தாயாரம்மாள் ஞானேசுவரியானார்.

மனைவியார் மறைவு

நான்காவது குழந்தை பிறந்ததுமுதல் மனைவியார் நோய்வாய்ப்பட்டார். பலவகையான மருத்துவஞ் செய்தும் பலனேற்படவில்லை. தம் கணவரைப் பக்கத்தில் அழைத்து "முருகா முருகா முருகா" என்று கூறச் செய்து தாமும் அவ்வாறே கூறிக் கணவருடைய கையைப்பற்றியிருந்த நிலையிலேயே உயிர் நீத்தார். பேரன்புடைய மனைவியாரின் பிரிவு இரசபதியாருக்கு ஆருத்துயரை அளித்தது. பலவாறு வருந்திக் கதறிப் பிறகு தெளிந்தார். பிள்ளைகளை வளர்க்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். உற்றார் உறவினர்கள் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள உடன்படவில்லை.

மறுமணம்

மறுமணஞ் செய்து கொள்ளக்கூடாது என இவர் மனவுறுதியோடிருந்தார். ஆயினும் பலருடைய கட்டாயத்தின்

மீதும் பிள்ளைகளை வளர்க்கவேண்டுமே என்னும் எண்ணத்தினாலும் பார்வதி என்னும் ஒரு பெண்ணை இரண்டாந் தாரமாகத் திருமணஞ் செய்துகொண்டார். இரண்டாவது மனைவியாரும் குழந்தைகளை அன்போடு வளர்த்தார்.

## நூல்கட்கு உரையெழுதுதல்

இரசபதியார் நாள்தோறும் சொற்பொழிவுகள் செய்ததோடு இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா முதலிய பல நூல்கட்கு உரையெழுதினார். சில உரைநடை நூல்களையும் எழுதினார். இவரால் உரையெழுதப்பட்ட நூல்கள் இருநூற்றுக்குமேல் என்பர்.

## தோடாக் களவு

ஒருசமயம் வேலூரிற் சொற்பொழிவு செய்யச் சென்றார். சொற்பொழிவு முடிந்தபிறகு களைப்பின் மிகுதியால் சொற்பொழிவு செய்த சபையின் ஓர் இடத்தில் படுத்துச் சிறிது நேரம் கண்ணயர்ந்தார். கையில் இருந்த தோடாவை யாரோ கழற்றுவதைப் போன்ற உணர்ச்சி யேற்பட்டது. களைப்பின் மிகுதியால் விழிக்காமலே இருந்தார். சிறிது நேரங்கழித்துக் கண்ணைத் திறந்து பார்த்தபோது கையில் போட்டிருந்த தோடாக் களவு போய்விட்டது. பலரிடம் உசாவியும் அஃது அகப்படவில்லை. மனவருத்தத்தோடு ஊருக்குத் திரும்பினார்.

## கண்மணிமாலை களவு

சென்னை நம்புலையர் தெருவில் உள்ள குமரகுருதாச சுவாமிகள் திருச்சபையில் பல ஆண்டுகளாகத் தணிகைப் புராணச் சொற்பொழிவு நடத்திக் கொண்டிருந்தார். சில நாட்களில் அவ்விடத்திலேயே நாட்கடன்களை முடித்துக் கொண்டு சொற்பொழிவைத் தொடங்குவதும் உண்டு. அவ்வாறே ஒருநாள் நாட்கடன்களைச் செய்யப்போவதற்கு முன்னால் கழுத்தில் இருந்த சிவ கண்மணிமாலையைக்

கழற்றிப் பாதுகாப்பாக வைத்துவிட்டுச் சென்றவர் திரும்பி வந்து பார்த்தபோது மாலை காணப்படவில்லை. அம்மாலை யிலே உயர்ந்த சிவகண்மணிகளை உடையது. பத்துச் சவரன் தங்கமும் அதிலிருந்தது. எவ்வளவோ முயன்றும் அம்மாலை அகப்படவில்லை. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் நோயுற் றுப் பல நாள் படுக்கையில் இருந்தார். பிறகு பெரிய மெட்டிலிருந்த பல அன்பர்கள் முயன்று பொருள்தொகுத் துக் கொடுத்து அம்மாலையைப்போல் வேறொருமாலையைச் செய்து கொள்ளச் செய்தனர்.

## பணத்தை இழத்தல்

இரசபதியார் மயிலை பண்டில் திங்களுக்குத் திங்கள் சிறுதொகை செலுத்தி வந்தார். நாளடைவில் அஃது ஒரு பெருந்தொகையாகத் திரும்பியது. சில அன்பர்களுடைய தூண்டுதலின் பேரில் அத்தொகையை மாடல்பிரஸ் என்னும் ஒரு பெரிய அச்சக உரிமையாளரிடம் கொடுத்துவைத் திருந்தார். அவ்வச்சக உரிமையாளர் திடீரென்று இன்சால் வெண்ட் கொடுத்துவிட்டார். இவர் பாடுபட்டுத் தேடிய பணம் போய்விட்டது. இரசபதியார் "முருகா! இதுவும் உன்னுடைய திருவிளையாடலா?" என்று உள்ளம் வருந்தினர்.

## மேலும் பொருள் இழப்பு

பொருள் மிகவும் பொல்லாதது. அது தன்னை நம்பியவர்களை வஞ்சித்துவிட்டு வேறு இடத்திற்குப் போய் விடும். இதனாலே அதற்குச் செல்வம் என்னும் பெயரும் ஏற்பட்டிருக்கிறது. மயிலையில் ஒரு பெருஞ் செல்வர். ஒரு சொற்பொழிவு வைத்தார். அவர் இரசபதியாரைப் பார்த்துச், "சிறு சிறு தொகையாக உங்களிடம் கொடுப்பதை ஒன்றாகச் சேர்த்து ஒருபெருந்தொகையாகத் தருகிறேன். இது முன்னரே பொருளை இழந்த தங்கட்கு மிக உதவியாக இருக்கும்" என்று சொன்னார். இவரும் "அப்படியே செய்யலாம்" என்றார். சொற்பொழிவு தொடர்ந்து நடந்து

முடிந்தது. பிறகு இரசபதியார் சொற்பொழிவை ஏற்பாடு செய்த இலட்சாதிபதியைப் பார்த்துப் பணத்தைக் கேட்டார். அவர் "தருகிறேன் தருகிறேன்" என்று நாளைக் கடத்தினர். இவர் பலமுறை அலைந்தும் அப்பொருள் கைக்கு வரவில்லை. நாளைக் கடத்திய அந்த ஆளைக் காலன் கடத்திக்கொண்டு போய்விட்டான். இவர் பொருளை இழந்தார். இழப்புக்குமேல் இழப்பு.

### வானொலியில் பேச்சு

முத்துச்சாமி ஐயர் என்பவரும் மணிஐயர் என்பவரும் இரசபதியாருக்குப் பலவகையிலும் உதவி செய்தனர். அடிக்கடி வானொலியில் பேசுவதற்கு ஏற்பாடு செய்தனர். அமிர்தவசனி என்னும் திங்களிதழில் அடிக்கடி கட்டுரைகள் எழுதினர்.

### சிவப்பதிப் பயணம்

மக்களை இழந்து மனம்வருந்திய மனைவியாரைத் தெளிவிக்க வேண்டுமென்று எண்ணிய இவர் மனைவியாரையும் உடனழைத்துக் கொண்டு தென்னாட்டில் உள்ள சிவப்பதிகளுக்குச் சென்றார். மதுரையை அடைந்து மீனாட்சி அம்மையையும் சொக்கநாதப் பெருமானையும் போற்றி வழிபட்டார். கையில் இருந்த பொருள் முழுவதும் செலவாகி விட்டது. திரும்புவதற்குப் பணம் இல்லை. இதனை மதுரையில்தான் அறிந்து திடுக்கிட்டார். ஊர்போய்ச் சேருவதற்கு யாதுசெய்வதென்று கலங்கினர். மனைவியாருடைய காற்சிலம்பைக் கழற்றி விற்றுவிட்டுப் போய் விடலாம் என்று எண்ணியவர் மனைவியைப் பார்த்துக் காற்சிலம்பைக் கழற்றித் தருமாறு கேட்டார். மனைவியார் "மதுரையில் வந்தா காற்சிலம்பைக் கழற்றுவது? எனக்கு அச்சமாக இருக்கிறதே" என்று கூறினர். பிறகு காற்சிலம்பைக் கழற்றத் தொடங்கினர்.

## எதிர்பாராத உதவி

இச் சமயத்தில் அவ்விடத்திற்கு ஒருவர் வந்தார். அவர் இவரைப்பார்த்து, “நீங்கள் தானே இரசபதி அடிகளார்? சென்னையிற் பல விடங்களில் உங்களுடைய சொற்பொழிவைக் கேட்டிருக்கிறேன். உங்களை எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் என்னை உங்களுக்குத் தெரியாது. நான் இவ்வூரில்தான் இருக்கிறேன். வாணிகவேலையின் பொருட்டு அடிக்கடி சென்னைக்கு வருவேன். அவ்வாறு வரும்பொழுதெல்லாம் உங்களுடைய சொற்பொழிவைக் கேட்காமல் வர மாட்டேன். நீங்கள் இஙகு எப்பொழுது வந்தீர்கள்? அம்மையார் காற்சிலம்பைக் கலக்கத்துடன் கழற்றுகிறீர்களே என்ன செய்தி” என்று உசாவினார். இரசபதியார் செய்தியை அவரிடங் கூறினார். செய்தியைக் கேட்ட அவர் பதறினார். எண்வகை உறபபுக்களும நிலத்தில் தோயுமாறு கீழே விழுந்து இரசபதியாரை வணங்கினார். “காற்சிலமபைக் கழற்ற வேண்டாம், என்னோடு வாருங்கள்” என்று கூறித் தபமுடைய இல்லத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார். இரணடு நாட்கள் தம்முடைய இல்லத்தில் தங்கச் செய்து விருந்துகள் செய்து போற்றினார். மூன்றுமநாள் ஒரு தட்டில் வேட்டி, புடைவை, பழம், பாக்கு வெற்றிலை முதலியவைகளை வைத்துக் கொடுத்தார். இருபத்தைந்துரூபா பணத்தைக் கொடுத்துச், “செலவுக்கு இதை வைத்துக்கொள்ளுங்கள்” என்று சொன்னார். கீழே விழுந்து வணங்கினார். இரசபதியார் அச்செல்வரைப் பார்த்துத், “தக்கசமயத்தில் மீனாட்சி உங்களை அனுப்பி எங்களைப் பாதுகாத்தாள். நீங்கள் சீருஞ்சிறப்புமாக வாழவேண்டும்” என்று வாழ்த்துரை கூறிவிட்டுப் புறபபட்டார். ஊருக்கு வந்த மறுநாளே மேற்படி அனபருக்குப பணத்தை அஞ்சல் மூலமாக அனுப்பி விட்டார்.

வன்னிய புராணஉரை

வேலூர் அன்பர்கள் சிலர் வன்னிய புராணத்திற்கு உரை யெழுதித்தர வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். இவரும் அவ்வாறே எழுதிக்கொடுத்தார். அவர்கள் தகுந்த நன்கொடை வழங்கிப் பாராட்டினர்.

திருவருட்பா உரை.

பிறகு அன்பர்களுடைய வேண்டுகோளின்படி திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாருடைய திருவருட்பாவுக்கு உரையெழுதத் தொடங்கினர். அவ்வுரையும் பத்துப்பத்துப் பாகங்கள் கொண்ட பல புத்தகங்களாக வெளியாயின. அவ்வுரையைப் பாராட்டி கோ. முத்துச்சாமிப் பிள்ளை, சென்னை உயர்நீதிமன்ற நடுவர் திரு சதாசிவம் அவர்கள், பண்டித நடேசனர் ஆகியோர் முன்னுரை எழுதியுள்ளனர்.

இறுதி :

இவ்வாறு சொற்பொழிவு, உரையெழுதுதல் முதலிய சிறந்த பணிகளைச் செய்து கொண்டிருந்த இவர் வடலூருக்குச் சொற்பொழிவின் பொருட்டுப் போய்வந்தவுடனே (1968 ஆம் ஆண்டில்) இவ்வுலக வாழ்வைத்துறந்து இறைவனுடைய திருவடிநீழலை அடைந்தார்.

## ௯. மா. இராசமாணிக்கனர்

### தோற்றம்

தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனர் 12—3—1907 இல் கர்நூலில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் மாணிக்கம்பிள்ளை. அவர் கர்நூலில் செட்டில் மெண்டு அலுவலகத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக அலுவல் பார்த்தார். இராசமாணிக்கனருடைய தாயார் பெயர் தாயாரம்மாள்.

### கல்வி

இராசமாணிக்கனர் 1916 ஆம் ஆண்டுவரையில்கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் தெலுங்குப் பள்ளிகளில் கல்வி பயினறுர். பிறகு தந்தையார் மதுரைமாவட்டத்திற்கு மாற்றப்பட்டபடியினுல் தமிழ்கற்கத் தொடங்கினர். 1917 ஆம் ஆண்டில் தந்தையார் காலமானர்; பிறகு தமையனர் மா. இராமகிருட்டிணப் பிள்ளையின் உதவியால் திண்டுக்கல், தஞ்சை முதலிய இடங்களிற கல்விபயின்றுர். பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுர். சில அலுவலகங்களில் எழுத்தராகப் பணியாற்றினர். இறுதியில் சென்னையை அடைந்து வசிக்கத்தொடஙகினர்.

### தமிழாசிரியர் தொழில்

1928 ஆம் ஆண்டு ஜூலைத்திங்களில் சர். பி. டி. தியாகராசச் செட்டியார் நடு நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியத்தொடங்கினர். கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய தமிழறிஞர்களின் தொடர்பு இவரையும் தமிழறிஞராக்கியது.

புலவர் பட்டம்பெறுதல்

1928 முதல் 1936 வரையில் தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் வேலைபார்த்துக் கொண்டே புலவர் பட்டமும் பெற்றார். 1936 முதல் 1947 வரையில் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார். வேலைபார்க்கும்போது பள்ளிக்கூடத் தமிழ் நூல்கள் எழுதினார். பி. ஓ. எல், எல். டி ; எம். ஓ. எல் என்னும் பட்டங்களையும் பெற்றார்; 1947 முதல் 1953 வரையில் விவேகாநந்தாகல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அப்பொழுதும் பல ஆராய்ச்சிநூல்களை எழுதிக்கொண்டே டாக்டர் பட்டத்தைப் பெற்றார். 1953 முதல் 1959வரையில் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார். 1959 முதல் இறுதிவரையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

பல பணிகள்

இவர் எஸ். எஸ். எல். சி, கல்லூரி இடைநிலை வகுப்பு, பி. யூ. சி ; பி. ஏ ; எம் ஏ; பப்ளிக் சர்வீஸ் கமிஷன், புலவர், முதலிய தேர்வுகளுக்குத் தேர்வாளராக இருந்து பணி புரிந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவைகளில் தேர்வாளராகவும் பாடநூற் குழுவின் உறுப்பினராகவும் இருந்து பணி புரிந்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், "கல்வெட்டுக்கள்" "சேக்கிழார்" என்னும் பொருள்கள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் "இருபதாம் நூற்றாண்டின் உரைநடை வளர்ச்சி" என்னுந் தலைப்பில் மூன்று சொற்பொழிவுகள் ஆற்றினார்.

இவருடைய இயல்பு

இவர் பரந்த மனப்போக்குடையவர். ஆராய்ச்சித் திறமை மிகுதியாக அமையப் பெற்றவர். தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் சொற்பொழிவுகள் ஆற்றியவர். இவருடைய சொற்பொழிவுகள் பெரும்பாலும் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழகவரலாறு, கல்வெட்டு ஆராய்ச்சி, புதைபொருள் ஆராய்ச்சி, சைவசமயம், சமூகச் சீர்திருத்தம் ஆகியவை களைப் பற்றியதாகவே இருக்கும். அறிஞர்கள் பொதுவாகக் கட்சிச் சார்பற்றவர்களாக இருக்கவேண்டியது முதன்மை யானது. இவரும் எத்தகைய கட்சிச்சார்பும் அற்றவராக எல்லாக் கட்சிக்கும் அப்பாற்பட்டவராக விளங்கினர்.

பாராட்டு

இவர் பெரியபுராண ஆராய்ச்சிசெய்து எம். ஓ. எல். பட்டம் பெற்றார்; சைவசமய வளர்ச்சிபற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றார். இவ்வாறு சைவசமய ஆராய்ச் சிகளில் ஈடுபட்டே இரண்டு பட்டங்களைப் பெற்ற இவரைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் பொன்னடை போர்த்திச், "சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் பட்டத்தையும் 101 வெண்பொற் காசுகளையும் அளித்துப் பாராட்டினர். மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தார், "ஆராய்ச்சிக் கலைஞர்" என்னும் பட்டத்தை அளித்துப் பாராட்டினர். தருமபுர ஆதீனத்தார், "சைவ இலக்கியப் பேரறிஞர்" என்னும் பட்டத்தை வழங்கிப் பொன்னடை போர்த்திப் பொற்பதக்கம் வழங்கினர். காசிமடம், குன்றக் குடி ஆதீனம், மயிலம் வீரசைவ ஆதீனம் முதலியன இவர் பால் பேரன்பு கொண்டிருந்தன.

**கோவையில்**

இவருடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1956 ஆம் ஆண்டில் கோவையில் செட்டி நாட்டரசர் தலைமையில் விழா வொன்று நடந்தது. அப்பொழுது கல்வியமைச்சராகவிருந்த உயர்திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். டி. எம். நாராயண சாமிப்பிள்ளை, செவ்கவிமணி. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பாஸ்கரத் தொண்டைமான் ஆகியோர் இவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

**குடும்பமே தமிழ்ப்புலமை யுடையது**

இராசமாணிக்கனாருடைய குடும்பமே தமிழ்ப்புலமை யுடைய குடும்பமாகும். இவருடைய மனைவியார் கண்ணம் மாள் புலவர் பட்டம் பெற்றுச் சில ஆண்டுகள் பள்ளியிலும் மதுரை பாத்திமா கல்லூரியிலும் தமிழாசிரியையாகப் பணி புரிந்தார். மூத்த மகனார் மா. ரா. இளங்கோவன் தமிழ் எம். ஏ. சுதேசமித்திரன் செய்தி இதழில் துணையாசிரிய ராகப் பணிபுரிந்து வருகின்றார். இரண்டாம் மகனார் மா. ரா. வஞ்சிக்கோ உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணி புரிகிறார். மூத்த மகள் தமிழரசி மேரி அரசியார் கல்லூரியில் தமிழ்த்துணைப் பேராசிரியையாகப் பணி புரிகிறார். இளைய மகள் சிவ அரசி அரசினர் கலைக் கல்லூரி யில் தமிழாசிரியையாகப் பணி புரிகின்றார். இவருக்கு ஆண் மக்கள் நால்வர்; பெண் மக்கள் நால்வர். நாற்பதாண்டுக ளாகப் பேச்சாலும் எழுத்தாலும் தமிழ்த் தொண்டு செய்தார். 1967 ஆம் ஆண்டு மார்ச்சு எட்டாம் நாள் இவருக்கு அறுபதாண்டு நிறைவாகியது.

**இறுதி**

பலவகைகளினுஞ் சிறந்து விளங்கிய இராசமாணிக்கனார் 26 - 5 - 67 வெள்ளி காலை ஐந்து மணிக்குச் சென்னை மருத்துவ மனையில் மாரடைப்பினால் காலமானார். மறுநாள் காலை நன்காட்டில் பலதுறை அறிஞர்களும் காலஞ் சென்றவருடைய அறிவாற்றலைக் குறித்து உரையாற்றினர். நன்காட்டுக் கூட்டத்தில் கோ. சண்முகசுந்தரம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., ஔவை டி. கே. சண்முகம், பேராசிரியர் ஆலாலசுந்தரம் செட்டியார், பேராசிரியர் அருள்சாமி, டாக்டர் குமாரசாமி, சி. இராமலிங்கனார், பேராசிரியர் மு. க. தங்கவேலனார், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியாளர் வ. சுப்பையாபிள்ளை, மீ. பொன. இராமநாதன் செட்டியார் முதலியோர் கலந்து கொண்டனர்.

மாலைச் சிறப்பு

திராவிடமுன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், மாணவர் மன்றம், நக்கீரர் கழகம், புலவர் மன்றம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, மறைமலையடிகள் ஆராய்ச்சிக்குழு, சித்தவைத்திய சங்கம் ஆகிய பல்வேறு கழகங்களின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டன.

இரங்கற்பா

இவருடைய மறைவு குறித்து ஞா. தேவநேயப் பாவாணர், ஆ. சிவலிங்கனார், புலவர் இ. மு. சங்கரலிங்கம் ஆகியோர் இரங்கற் பாக்கள் பாடி உள்ளம் வருந்தினர்.

பனிமலை யென்ன வோங்கிப் பல்லவ புரத்து நின்ற
தனிமொழி மலையி னோடும் தன்மதிப் பெரியா ரோடும்
இன்துற வுடையாய் என்னின் இதனினுஞ் சிறந்த துண்டோ
அனையதற் றமிழன் மன்ற அரசமா ணிக்க நீயே

என்பது தேவநேயப்பாவாணர் பாடல்களில் ஒன்று.

இலக்கியநூல் வரலாறு கல்வெட் டென்னும்
இனியபல நூலுணர்ந்தாய் கற்ற பாங்கைத்
துலக்கமின்றிப் பிறருணரும் வகையில் கூறும்
தூயவனே உளத்தாளைநின் கருத்தை இந்நாள்
கலக்கமறப் பன்னூலின் வாயி லாகக்
கனிவோடு தந்தவனே யாங்கள் இன்று
அலக்கணுற விண்புகுந்தாய் அமரன் ஆனுய்
அரியபுகழ் இராசமா ணிக்க அண்ணல்

என்பது புலவர் தி. மு. சங்கரலிங்கனுர் பாட்டு.

## இவர் பிறரைப் பாராட்டியது

யாழ்ப்பாணத்துப் புலவர் அருளம்பலவனுருடைய பதிற்றுப்பத்துரையைப் பாராட்டி "பண்டிதர் அருளம்பலவனுர் பழைய உரையை அகப்படுத்தி இனிய நல்லுரை ஒன்று வரைந்துள்ளார். இவ்வுரை பாடலும் கண்ணழிப் புரையும் மேற்கோளும் அகலவுரையுங் கொண்டு ஒளிர்கின்றது. இனிய செந்தமிழ்மொழி மறுமலர்ச்சி பெற்று வரும் இக்காலத்தில் இந்நல்லுரை இன்றியமையாத தொன்றாகும். இவ்வுரையில் ஆசிரியரது நுண்மாண் நுழைபுலம் வெள்ளிடை விலங்கலெனத் தெரிகினறது" என்று எழுதினுர்.

## இவர் எழுதிய நூல்கள்

(க) பல்லவர் வரலாறு

(உ) பெரியபுராண ஆராய்ச்சி

(ங) சைவசமய வளர்ச்சி

(ச) தமிழக வரலாறு

(ரு) தமிழக ஆட்சி

(கூ) தமிழரசி

(எ) நாட்டுக்கு நல்லவை

முதலிய பல நூல்களையும் பள்ளிக் கூடப் பாடப்புத்தகங்களையும் இவர் எழுதியுள்ளார்.

---

## ௬. கிருட்டிணவேணி அம்மையார்

### தோற்றம்

"தொண்டைநாடு சான்றோருடைத்" தென ஆன்றோர்களால் புகழ்ந்தோதப் பெற்ற சென்னை மாநகரிலே இவ்வம்மையார் 1888 ஆம் ஆண்டிற் பிறந்தார். தந்தையார் பெயர் புட்பால அப்பாயி நாயுடு. தாயார் பெயர் காமாட்சி அம்மையார்.

### தொடக்கக் கல்வி

அகவை ஐந்து நிரம்பியதும் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அந்நாளில் பெண்கள் கல்வி கற்பதற்கு எதிர்ப்புப் பலமாக இருந்தது. ஆயினும் அம்மையாருடைய தந்தையார் பல எதிர்ப்புக்களுக்கிடையே தம் மகளை லோயர் செகண்டரி வரை படிக்கவைத்தார்.

### திருமணம்

அம்மையார் திருமணப் பருவத்தையடைந்ததும் வேங்கடாசல நாயுடு என்பவரைத் திருமணம் புரிந்து சில ஆண்டுகள் இல்லற வாழ்க்கையை இனிது நடத்திக்கொண்டிருந்தார். ஆண்மக்கள் இருவர் தோன்றி மறைந்தனர். குண்டக்கல் என்னும் ஊரில் சென்று அலுவல் பார்த்துக்கொண்டிருக்கும்போது அம்மையாருடைய கணவனார் வேங்கடாசல நாயுடு நச்சுக் காய்ச்சலாற் பற்றப்பட்டு இவ்வுலகைத் துறந்தார். இளம் பருவத்திலேயே கைம்மைக் கோலம் பூண்டு அம்மையார் உளம் வருந்தியிருந்தார்.

### மேலுங் கல்வி கற்றல்

கணவனை இழந்த அம்மையார் நீண்ட நாட்கள் உள்ளம் வருந்திக் கொண்டிருந்தார். அம்மையாருடைய மன வருத்தத்தைப் போக்கப் பெற்றோரும் உற்றார் உறவினர்களும் பெரிதும் முயன்றனர். ஆயினும் அம்மையாருடைய மனம் ஆறுதல் அடையவில்லை. அறிஞர்கள் சிலர் செய்த முயற்சியும் பயனற்றுப் போய்விட்டது. அந்நாளில் பையனூர் அன்னம்மாள் என்னும் பெண்மணி ஒருவர் இருந்தார். அவர் கருணீகர் குலத்தில் தோன்றியவர். செய்யுளியற்றும் அளவுக்குச் சிறிய தமிழ்மொழியைக் கற்றிருந்தார். கிருட்டிணவேணியம்மையாருடைய தந்தையார் அப்பாயி நாயுடு தம் மகளைத் தேற்றுவதற்கு அப்பெண் மணியை அழைத்து வந்தார். அவ்வம்மையார் இவ்வம்மை யாருக்குச் சிறிது சிறிதாக அறிவு புகட்டலாயினர். தாம் கற்றிருந்த திருவேங்கடமாலை முதலிய நூல்களை அம்மையாருக்குக் கற்பித்தார். தாம் இயற்றிய கோதாபரிணயம் என்னும் நூலைப்போல் நூல் இயற்றவும் பழக்கினார். இவ் வம்மையார் சாவித்திரி சரித்திரக் கீர்த்தனை என்னும் நூலை இயற்றினார். இந்நூலுக்குக் காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு, ஈக்காடு இரத்தினவேலு முதலியார், டி. பக்தவத்சலம், பையனூர் அன்னம்மாள் முதலிய பன்னிருவர் பாராட்டுரைகள் வழங்கியுள்ளனர்.

### புலமைக் கல்வி

அந்நாளில் செந்தமிழ் இரத்தினாகரம் வல்லை சண்முக சுந்தர முதலியார் என்னுந் தமிழறிஞர் ஒருவர் இருந்தார். அவர் அம்மையார் வீட்டிற்கு எதிரிற் குடியிருந்தார். பூவை கலியாணசுந்தர முதலியாரின் முதன் மாணவர். சைவ சித்தாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் நன்கு

கற்றவர். செய்யுள் செய்வதிலும் சொற்பொழிவாற்றுவதிலும் சித்த மருத்துவ முறையில் மருத்துவஞ் செய்வதிலும் வல்லவர். அவருக்கு மருத்துவமணி என்னுஞ் சிறப்புப் பெயருங் கிடைத்திருந்தது. 1912 ஆம் ஆண்டில் அம்மையார் அவரிடம் தமிழ் நூல்களைக் கற்கத் தொடங்கினர் திருவேங்கடமாலையின் பிற்பகுதி, திருவரங்கத் தந்தாதி, திருவேங்கடத் தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணத்தின சில பகுதிகள், சிவஞான போதத்தின் முதல் சூத்திரம், நன்னூல் முதலியவைகளைப் பாடங் கேட்டார்.

## சொற்பொழிவுகள்

அம்மையாரின் ஆசிரியர் முதலிற் சிறு சிறு சொற்பொழிவுக் கட்டுரைகளை எழுதிக்கொடுத்து அவைகளை நெட்டுருச்செய்து அவைகளிற சொற்பொழி வாற்றச் செய்தார். அதன் பிறகு அம்மையாரையே கட்டுரைகள் எழுதிக்கொண்டு சொற்பொழிவாற்றச் செய்தார். இதனால் அம்மையாருக்குச் சொற்பொழிவு செய்யுந் திறனும் நன்கு அமைந்தது.

## இந்துநிலையப் பொறுப்பு

1915 ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் திருவல்லிக்கேணியில் பார்ப்பனரல்லாத மாணவிகட்கு இந்து நிலையம் என்னும் பெயர் வாய்ந்த உணவு விடுதி ஒன்றை ஏற்படுத்தினர். அந்நிலையத்தின் பொறுப்பை இவ்வம்மையார் மேற்கொண்டு பதினெட்டு ஆண்டுகள் திறமாக நடத்தினர்.

## ஆசிரியத் தொழில்

1922 ஆம் ஆண்டு லேடிவில்லிங்டன் கல்லூரிக்குத் தலைமைத் தமிழாசிரியையாக அமைக்கப்பட்ட அம்மையார் அத்தொழிலை இருபத்தாறு ஆண்டுகள் செவ்வையாகப் பார்த்து 1948 ஆம் ஆண்டில் அவ்வேலையில் இருந்து ஓய்வுபெற்றார்.

## வைணவநூற் பயிற்சி

திருக்கண்ணபுரம் பட்டப்பா சுவாமிகள், திருப்புறம்பயம் T. D. இராமசாமி நாயுடு, காரப்பங்காடு உ. வே. ஸ்ரீமத் வேங்கடசாரி சுவாமிகள் முதலிய பெரியோர்களிடம் வைணவ நூல்களையும் கற்றுத் தேறினார். சைவ நூற்பயிற்சி, வைணவ நூற்பயிற்சி இரண்டுமே அம்மையாருக்கு நன்கு அமைந்திருந்தது.

## கழகத் தொண்டுகள்

மாதர் வித்தியாநு பாலனசங்கம் என்னுஞ் சங்கம் ஒன்றை 1914 ஆம் ஆண்டில் அம்மையார் ஏற்படுத்தினார். அச்சங்கத்திற்கு அம்மையாருடைய தாயார் தலைவியாகவும் அம்மையார் உதவித் தலைவியாகவும் பத்மாவதி அம்மையார் செயலாளராகவும் அமைந்து பணியாற்றினர். சனிக்கிழமை தோறும் அச்சங்கத்தில் பெரியபுராணம், குசேலோபாக்கியானம், கசேந்திரமோட்சம், கம்பராமாயணம் முதலிய நூல்கள் படித்துப் பொருளுரைக்கப் பட்டன. இச்சங்கத்தின் சார்பாக இராமகிருட்டிணபள்ளி, தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளி முதலிய இடங்களில் அறிவிற் சிறந்த பெண்மணிகளால் கூட்டஞ் சொற்பொழிவு முதலியவை நிகழ்ந்தன சாரதா ஐக்கியசங்கம் என்னுஞ் சங்கத்திலும் அம்மையார் சொற்பொழிவுகள் பல செய்தார். அச்சங்கத்

தார் அம்மையாரைப் பாராட்டித் தங்கப்பதக்கம் தந்து பெருமைப் படுத்தினர். 1921 ஆம் ஆண்டில் திருவல்லிக் கேணியில் அம்மையார் பணிபுரிந்திருந்த இந்து நிலையத்தில் "கலைமகள் கழகம்" என்னும் பெயரோடு கழகம் ஒன்றை அம்மையார் தொடங்கினர். அந்நிலையத்தில் வதிந்திருந்த மாணவிகளே அக்கழகத்தில் உறுப்பினராகவும் அமைந்திருந்தனர். அவர்கள் சொற்பொழிவு புரிதல் முதலியவற்றிற்கு அம்மையார் பழக்கினர். அம்மையாரால் சீரிய முறையிற் பயிற்றுவிக்கப்பட்ட மாணவிகள் ஆறுவது பாரம் வரை படித்து ஊர் சென்று இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டபின்னரும் இப்பழக்கத்தினால் தத்தம் ஊர்களில் சங்கங்கள் நிறுவி நடத்தலாயினர்.

### பாகம் பிரியாள் மாதர் சங்கம்

192? அம் ஆண்டில் அம்மையார் சொற்பொழிவாற்றுதற்குத் தூத்துக்குடி சைவசித்தாந்த சங்கத்திற்குச் சென்றனர். அப்பொழுது அங்கிருந்த பெண்மணிகள் சிலர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிய அம்மையார் "பாகம்பிரியாள் மாதர் சங்கம்" என்னும் பெயரோடு சங்கம் ஒன்றை நிறுவி இரண்டொருநாள் தங்கி அச்சங்கத்தை நடத்திப் பிறகு நடத்தும் முறைகளையும் வகுத்துக்கொடுத்து ஊருக்குத் திரும்பினர். அச்சங்கம் சீரிய முறையிற் சிறப்புடன் நடைபெறலாயிற்று. 1947 ஆம் ஆண்டில் அச்சங்கத்தின் இருபதாவதாண்டு நிறைவுவிழா அம்மையாருடைய தலைமையிற் சிறப்பாக நடைபெற்றது.

### மாணவர் மன்றம்

மாணவர் மன்றம் தொடங்கியதில் இருந்து அம்மையார் அம்மன்றத்திற் கலந்து தொண்டுகள் பல செய்தார்.

அம்மன்றம் வளர்ந்து சிறப்படைய அம்மையாருடைய முயற்சியுங் காரணமாக அமைந்து நின்றது.

## கலைக் கழகம்

பூகோளத்தில் உள்ள ஆங்கிலப் பெயர்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை அமைத்தற் பொருட்டு இராயப்பேட்டையில் கலைக்கழகம் என்னும் பெயரோடுகழகம் ஒன்று அமைக்கப்பட்டது. அம்மையார் மற்றைத் தமிழறிஞர்களோடு சேர்ந்து அக்கழகத்தில் ஆறு திங்கள் தொண்டு புரிந்தனர்.

## மொழிப்பயிற்சிச் சங்கம்

லேடிவில்லிங்டன் கல்லூரியில் "மொழிப்பயிற்சிச் சங்கம்" எனனும் பெயரோடு சங்கம் ஒன்று நிறுவப் பெற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வந்தது. அதில் கற்பனைக் கதைகளைச் சொல்லல், இலக்கியநயங்களைக் காணல், நாடகங்கள் நடித்தல், சொற்பொழி வாற்றல், சொற்போரிடுதல் முதலியவைகளை மாணவிகட்கு அம்மையார் பழக்கி வைத்தனர். மற்றும் பல கழகங்களுக்கும் திருநெல்வேலி, திருவில்லிபுத்தூர், சிவகாசி, விருதுநகர், சிவைகுண்டம், திண்டுக்கல், மதுரை, தஞ்சை சீரங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கும்பகோணம், சிதம்பரம், புதுச்சேரி, பெங்களூர் முதலிய இடங்கட்கும் அம்மையார் சென்று சொற்பொழிவுத் தொண்டு புரிந்துள்ளார்.

## பண்டிதைப் பட்டம்

தூத்துக்குடி சைவசித்தாந்த சங்கத்திற்கு அம்மையார் சொற்பொழிவின் பொருட்டுச் சென்றிருந்தபோது அங்குக்

கூடிய அறிஞர்கள் அம்மையாருடைய அறிவு நலனை ஆராய்ந்து மறைமலையடிகளின் தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டிப் பண்டிதை என்னும் பட்டத்தை வழங்கினர். பிறகு பண்டிதை கிருட்டிண வேணியம்மாள் என்னும் பெயர் பொறித்த தங்கப்பதக்கம் ஒன்றையும் திரு. வி. க. அவர்களைக் கொண்டு வழங்கச் செய்தனர்.

## நூற்றொண்டு

அம்மையார் பள்ளிகளில் ஆசிரியராகவும் பல பேரவைகளில் சொற்பொழிவாளராகவும் அமைந்து சிறந்த தொண்டுகள் செய்ததோடு அமைந்து விடவில்லை. இத்தொண்டுகள் நாளடைவில் பெயரும் இல்லாமல் மறைந்து போகக்கூடியவை. ஆகவே என்றும் நிலைத்துப் பொன்றுப் புகழுடன் விளங்குவதாகிய நூற்றொண்டிலும் தக்கவாறு ஈடுபட்டார். முற்கூறியபடி சாவித்திரி சரிதத்தை வெளியிட்ட பின் பல ஆண்டுகள் சென்று திருப்புறம்பயம் T. D. இராமசாமி நாயுடு என்பவருக்கு அவர் வைணவ சங்கத்தில் தலைமை தாங்கியபோது வரவேற்புரை ஒன்று எழுதி அச்சிற்பதிப்பிக்கும் பணி அம்மையாருக்கு அளிக்கப்பட்டது. அவ்வரவேற்புரையைப் பலரும் விரும்பினார்கள். அறிஞர்கள் பாராட்டினார்கள். அதனால் அம்மையாருக்குத் துணிவு பிறந்தது. நூல் எழுதும் பணியிலும் இறங்கினார்.

## கோதையார்

1932 ஆம் ஆண்டில் குருபரம்பரையில் உள்ளவாறு ஆண்டாள் வரலாற்றை எழுதித் திரு. வி. க. அவர்களிடம் காட்டினார். அவர் சில இடங்களில் அமைக்கவேண்டிய முறைகளைக் கூறி "இது மிக நன்றாக இருக்கிறது. அச்சிடலாம்" என்று ஊக்கமூட்டினார். அந்நாளுக்குக்

கோதையார் என்று பெயரிட்டு வெளியிட்டதோடு மேலும் நூல்கள் எழுதலானர்.

### வைதேகியார்

சீதாபிராட்டியின் கற்பு, நற்பண்பு, இராமபிரானுக்கும் சீதாபிராட்டியாருக்கும் ஏற்பட்டிருந்த அன்பின் திறம் முதலியவைகளை அமைத்து வைதேகியார் என்னும் நூலை எழுதினர்.

### வீரக்கற்பின் வெற்றி

கண்ணகி, சந்திரமதி இருவரின் கற்புச் சிறப்பு, கற்பி னுள்ள ஒற்றுமை வேற்றுமை முதலியவை ஆராய்ந்து வீரக்கற்பின் வெற்றி என்னும் நூலை எழுதினர்.

### பறம்பு நாடும் பாரி மகளிரும்

பாரியின பெருமை, பறம்பு நாட்டின் சீர்மை, கபிலரின் பெருந்தகைமை, பாரிமகளிரின கல்வியறிவு, அவர்களுடைய திருமணம், மூவேந்தரின இழிதொழில், அவ்வையாரின் தெய்வத் தன்மை முதலியவைகளைபபறறித் தொகுத் தெழுதிப், பறம்பு நாடும் பாரி மகளிரும என்னும பெயரோடு வெளியிட்டார்.

### கவி மலர்மாலை

நீதி நூல்கள், பன்னூற்றிரட்டு, பஞ்சதந்திரம், பெரிய புராணம, நளவெண்பா, இராமாயணம் முதலிய நூல்களில் இருந்து அரிய செய்யுட்கள் பலவற்றைத் தொகுத்துப் பொழிபபுரை, குறிப்புரை, வினக்கள் முதலியன எழுதி ஐந்து பகுதிகளாக வெளியிட்டார்.

### பெரியாழ்வார் பெண்கொடி

குருபரம்பரை, ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி ஆகிய நூல்களின் கருத்துக்களைத் தழுவி ஆண்டாளுடைய வரலாறு, அவர்தம் சிறப்பியல்பு பற்றிய ஆராய்ச்சி ஆகியவைகளை எழுதிப் பெரியாழ்வார் பெண்கொடி என்னும் பெயரோடு வெளிப்படுத்தினர். இடைநிலைத் தேர்வுக்கு இந்நூல் பாடமாக அமைந்தது.

### சரோசனி தேவியார்

சரோசனி தேவியாருடைய வரலாறு, பேச்சுத்திறன், கவித்திறமை, கல்விப் பெருக்கு, வீரப் போக்கு முதலியவை களைப்பற்றி விரிவாக எழுதிச், சரோசனி தேவியார் என்னும் நூலை வெளிப்படுத்தினர்.

### சாரதாமணி தேவியார்

சாரதாமணி தேவியாருடைய பற்றற்ற வாழ்க்கை, பதிபத்தி, இராமகிருட்டிணருடைய தூய வாழ்க்கைக்குத் துணைபுரிந்த சிறப்பியல்பு, மனநிறைவு, தெய்வத்தன்மை, தந்நலங் கருதாமை, உபதேச முறை முதலியவைகளைப்பற்றி எழுதிச் சாரதாமணி தேவியார் என்னும் நூலை வெளிப் படுத்தினர் முதல்படிவத்தில் இருந்து மூன்றும் படிவம் வரை படிக்கும் மாணவர்கட்குப் பயன்படும் நூல்களையும் எழுதினர்

### மாணவர் இல்லம்

1920 ஆம் ஆண்டில் இருந்து 1938 ஆம் ஆண்டு வரை அம்மையார் தலைமை தாங்கி நடத்திய மாணவர் இல்லத்தின் செய்திகளைத் தொகுத்து எழுதி மாணவர் இல்லம் என்னும் நூலை எழுதினர்.

## மங்கையரின் மாண்பு

மாதவி மாசற்றவளா? அன்னஞ் சுரந்தது அமுத சுரபியா? அரிவையரா? மணிமேகலை மானிட மகளா? அகலிகை கற்பிழந்தவளா? திரிசடை அரக்கர் மகளா? எனனும் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சிசெய்து மங்கையரின் மாண்பு என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

## சமய நூல்கள்

மேற்கூறிய பொதுநூல்களையல்லாமல், வைணவ தத்துவங்கள் யாவற்றையுந் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீவசனபூடண விளக்கம், திருப்பாவைப் பொழிப்புரை, ஆழ்வார்களின் அருளிச் செயல், செம்பொருள் முதலிய வைணவ சமயச் சார்பான நூல்களையும் எழுதி வெளிப்படுத்தினர்.

## பிறமொழிகள்

அம்மையார் தமிழ்மொழியை நன்கு கற்றுப் புலமை பெற்றிருந்ததோடு தாய்மொழியாகிய தெலுங்கு, ஆங்கிலம், வடமொழி ஆகியவைகளிலும் வேண்டிய அளவு தேர்ச்சி பெற்றிருந்தார்.

## காலக்கணிதம்

காலக் கணிதத்தில் தேர்ச்சியடைந்து விளங்கிய பார்த்தசாரதி நாய்க்கர் என்பவரிடஞ் சில காலம் காலக் கணித நூலைப் பயின்று அத்துறையிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றார்.

பாராட்டுரை

அம்மையாரைப் பற்றித் திரு. வி. க. அவர்கள் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் பின் வருமாறு எழுதியுள்ளார். (பக்கம் 194, 195, 196.)

கிருட்டிணவேணி அம்மையார்

"தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் ஆண்டு விழா (1913). மக்கள் ஈட்டம், சுவாமி வேதாசலம், கதிரேசச் செட்டியார், சோமசுந்தரபாரதி, வேங்கடசாமி நாட்டார், முத்தையா பிள்ளை முதலிய புலவர் பெருமக்கள் வீற்றிருக்கை, யாழ்ப்பாணம் முதலியார் சபாரத்தினத்தின் தலைமை. 'சென்னை - கிருட்டிணவேணியம்மையார் பேசப்போகிறார்' என்ற முழக்கம். 'சென்னையில் கிருஷ்ணவேணி அம்மையார் யார்?' என்று நினைந்து யான் ஓரிடத்தில் அமர்ந்தேன். ஓர் அமைதிப் பெண் தெய்வம் வந்தது, மேடையில் நின்றது; வாய் திறந்தது; மேகந் திரண்டது; தேங்கியது; மின்னியது; உறுமியது; மழை பொழிந்தது; மழையொலி சுவர்களை முட்டியது; மோதியது; துளைத்தது; பெருக்கம்; ஒரே கங்கை; பொன்னும் மணியும் முத்தும் அகிலும் தேக்கும் சந்தும் சுழன்ற மிதவைகளின் ஓட்டம்; மழை நின்றது. கிருஷ்ணவேணி அம்மையார் தமது இருக்கை சேர்ந்தார்.

கிருஷ்ணவேணி அம்மையாரின் வீரத்தமிழ் தூத்துக்குடியில் ஒருவிதக் கிளர்ச்சியை எழுப்பிற்று. சைவ சித்தாந்த சபை அம்மையார்க்குப் பண்டிதைப் பட்டமும் பொற்பதக்கமும் வழங்க உறுதி செய்தது; சென்னையிலே அவைகளை வழங்கும் பொறுப்பை எனக்கு அளித்தது.

தொண்டை மண்டலம் உயர்நிலைப்பள்ளியில் ஒரு பெருங் கூட்டங் கூட்டப்பட்டது. தலைமை பூண்டவர் கிருஷ்ணவேணி அம்மையாருக்குத் தமிழ் அறிவுறுத்திய வல்லை சண்முகசுந்தர முதலியாரின் பேராசிரியர் அஷ்டாவ தானம் பூவை. கலியாணசுந்தர முதலியார். தூத்துக்குடிச் சபையின் சார்பிலே தலைவர் வாயிலாகப் பட்டமும் பதக்க மும் கிருஷ்ணவேணி அம்மையாருக்குச் சூட்டப்பட்டன. கூட்டம் முற்றுப்பெற்றது. பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையாரிடம் விடைபெறச் சென்றேன். அம்மையாரின் தெய்விகப் பொலிவு அவரைச் சகோதரியாக்கிற்று. என்னுடன் பிறந்து வளர்ந்த சகோதரிமார் மூவர்; அப்பொழுது நால்வராயினர். தொண்டை மண்டலக் கூட்டம் பெண்ணுலகுக்கு ஒருவிதப் புத்துணர்வளித்த தென்றே சொல்வேன்.

பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையாருடன் பிறந்தவர் பத்மாவதி அம்மையார். இவருங் கல்வி கேள்வியுடையவர். இவ்விரு பெண்மணிகளையும் கலைவாணிகளாக்கிய பெருமை இவரை ஈன்ற அப்பாய் நாயுடுவினுடையது. அவர் தவச் செல்வர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சகோதரியார் இல்லத்துக்கு யான் ஏகும்போதெல்லாம் அஃதொரு சாரதா பீடமாகவே எனக்குத் தோன்றும். எங்களிடைக் கலை வழிபாடு நிகழும். நாளடைவில் சாரதா பீடம் வைகுந்தமாகியது. கிருஷ்ணவேணி அம்மையார் ஆண்டாளாகக் காணப்படுவர்.

முன்னாளில் சகோதரியாரும், சச்சிதானந்தம் பிள்ளையும், வேறு சிலரும், யானும் ஞானியார் சுவாமிகள் தலைமையிலோ, மற்றவர் தலைமையிலோ உள்ளூரிலும் வெளியூரிலும் தமிழ்த் தொண்டோ சமயத் தொண்டோ செய்து வருவோம்.

அந்நாளில் தமிழ்ச் சங்கங்களின் சார்பிலோ, சமயச் சபைகளின் சார்பிலோ வெளியாகும் அறிக்கைகள் பெரிதும் எங்கள் பெயர்களைத் தாங்கியே வரும்.

சகோதரியார் இயற்றும் நூல்களில் தமிழ் மணங் கமழும்; விழுமிய பொருள்கள் பொதுளும். இவ்விரண்டையுஞ் சிறப்பித்து நவசக்தியில் மதிப்புரை வரைவதை யான் ஒருவிதத் தொண்டாகவே கொண்டேன்.

அணித்தே சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் எனது தலைமையில் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். சகோதரியாரின் அக்காலப் பேச்சுக்கும் இக்காலப் பேச்சுக்கும் வேற்றுமை கண்டேன். அது நெடுநல் வாடையாயிருந்தது. இது பொதிகைத் தென்றலாயிருக்கிறது.

எனது மணிவிழா இரண்டாம் நாள் கூட்டம் (26-8-1943) மாதர் வாழ்த்துக்கென்று கூடியது. தலைமை தாங்கியவர் கிருஷ்ணவேணியம்மையார். அன்று சகோதரியார் நிகழ்த்திய முன்னுரை - தேனினும் இனிய செந்தமிழ்ப் பொன்னுரையாகப் பொலிந்தது. சகோதரியாரைப் பெண் தெய்வம் என்று நினைத்திருந்தேன். அன்று அவர் தமிழ்த் தெய்வமாகவுந் தோன்றினர்.''

## இறுதி

அம்மையார் 1966 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 10 ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து வைகுந்த பதவியை அடைந்தார்.

## * ஞ. ஆ. பாலகிருட்டிண பிள்ளை

### தோற்றம்

"சேலன் சைவ சித்தாந்தச்
　　செந்நாற் கடலுந் தமிழ்க்கடலும்
மேலும் மேனாட் டாங்கிலமாம்
　　விரிந்த கடலுங் கடந்தசைவன்
கோல ஆறு முகக்குரிசில்
　　கோதை சின்னம் மைக்குதித்த
பால கிருட்டி ணப்பேரான்
　　பரவு மன்பர் உளம்பேரான்"

என்று புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களால் பாராட்டப்பெற்ற ஆ. பாலகிருட்டிண பிள்ளையவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சியில் இருந்து பதினொன்று மைலுக்கு அப்பாலுள்ள செல்லம்பட்டு என்கிற ஒரு சிற்றூரிலே 19—10—1890 இல் பிறந்தார். குழந்தையாக இருந்தபோதே தம்முடைய தகப்பனாரை இழந்தார். பாலகிருட்டிணருடைய தந்தையார் பெயர் ஆறுமுகம் பிள்ளை. தாயார் பெயர் சின்னம்மை. ஆறுமுகம் பிள்ளை துறவிகளிடத்தில் அன்புடையவராக விளங்கினார். அதனால் அடிக்கடி பல துறவிகள் ஆறுமுகம் பிள்ளையின் இல்லத்துக்கு வந்து சென்றனர். சினனம்மையார் இல்லத்துக்கு வருந்துறவிகட்கு உணவிட்டுப் போற்றுங் கடமையை மேற்கொண்டிருந்தார் தந்தையார் காலமான பிறகு

---

* இக்குறிப்புகள் புலவர் திரு. சுகவனம் சிவப்பிரகாசன் அவர்களாற் கிடைத்தன. (ஆசிரியர்)

பாலகிருட்டிணர் தம்முடைய அண்ணன் துரைசாமியின் ஆதரவில் வளர்ந்து வந்தார்.

கல்வி

பாலகிருட்டிணர் தம்முடைய கல்வியை முதலில் கள்ளக்குறிச்சியில் தொடங்கினர். பிறகு திண்டிவனத்திலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார்.

தொழில்

கல்வியை முடித்துப் பட்டம் பெற்ற பிறகு அந்தக் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினர்.

நூல்கள் எழுதுதல்

ஆசிரியப் பணியை மேற்கொண்டவர் பல நூல்களையும் நன்கு ஆராய்ந்து பயின்று தம்முடைய அறிவை மிகுதியாக்கிக்கொண்டார். "விசயகாருண்யம்" "பருந்துப நிழலும" என்னும் இரண்டு தமிழ் நூல்களை எழுதினர். இப்புத்தகங்கள் இரண்டும் பின்னர்ப் பள்ளி இறுதித் தேர்வுக்கும் பி. ஏ. பட்டப் படிப்புக்கும பாடப் புத்தகங்களாக அந்நாளில் ஏறபடுத்தப்பெற்றன. இவர் தம் ஓய்வு நாட்களையும் நேரங்களையும் வீண்போக்காமல் நூல்களைக் கற்றுப பயன் படுத்தினர்.

துறவிகள் தொடர்பு

இவருடைய தந்தையாருக்கிருந்த துறவிகள் பற்று இவருக்கும் இருந்தது மலையாளம நாராயணகுரு, திருவருணை இரமணமகரிஷி முதலிய பெரியோர்களுடன் பழகும் வழக்கத்தை மேறகொண்டிருந்தார்.

### மேலுங்கற்று நூலெழுதல்

சட்டக் கல்லூரியிற் சேர்ந்து பி. எல். பட்டத்தையும் இறுதியாக எம். எல். பட்டத்தையும் பெற்றார். "இந்து திருமணச் சீர்திருத்தம்" என்னும் ஒரு நூலை எழுதினார். பிறகு சட்டக் கல்லூரியிலேயே துணை பேராசிரியராக வேலை பார்த்தார். பிறகு இந்துமத அறநிலைய இலாகாவில் பல ஆண்டுகள் செயலாளராகப் பணிபுரிந்து இறுதியில் அந்நிலையத்தின் ஆணையாளராகவிருந்து ஓய்வு பெற்றார்.

### திருவருட்பாப் பதிப்பு

இவருக்கு வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரிடத்திலும் அடிகளார் பாடிய திருவருட்பாப் பாடல்களிலும் மிகுந்த பற்றுண்டு. அலுவலில் இருக்கும்போதே படித்து மகிழ்ந்தார். ஓய்வு பெற்ற பிறகு திருவருட்பாவை அச்சிட்டு வெளிப்படுத்துவதில் ஈடுபட்டார். திருவருட்பாவைப் பன்னிரண்டு தொகுதிகளாகப் பகுத்து முடித்தார். இராமலிங்க அடிகளாரின் கையெழுத்துக்களோடு மற்றைய அன்பர்கள் படி செய்த பகுதிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் நீண்ட காலத்தைச் செலவிட்டார். ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறு முகவுரை யெழுதிப் பிழையில்லாமலும் விளக்கங்களோடும் குறிப்புக்களோடும் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய ஊக்க மிகுதியையும் விடா முயற்சியையும் பேருழைப்பையும் இப்பதிப்பு நூல்கள் எடுத்துக் காட்டுவனவாம். இவரைத் தவிர வேறு எவரும் இவ்வளவு பொறுமையோடும் கருத்தோடும் இவ்வேலையைச் செய்திருக்க முடியாது.

### ஆங்கில மொழிபெயர்ப்பு

இராமலிங்க அடிகளாரின் போதனைகளையும் கருத்துக்களையும் கொள்கைகளையும் வெளிநாடுகளிலெல்லாம் பரவச்

செய்யவேண்டுமென்னும் பேரார்வம் நீண்ட காலமாக ஏற்பட்டிருந்தது. திருவருட்பாவை நன்கு படித்து ஆராய்ந்து எடுத்த நூற்றைமபது செய்யுட்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து முடித்தார். பிறகு அதனை அச்சிடும் நோக்கத்தோடிருந்தார். ஆனால் அவர் இருக்கும்போது அவ்வெண்ணம் முற்றுப் பெறவில்லை.

### இறுதி

இவருடைய எழுபதாம் வயதில் திடீரென்று ஏற்பட்ட இருதய நோயினால் 31-8-60 இல் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

### நூல் வெளியீடு

இவர் காலமான பிறகு அருட்சோதி இராமலிங்க நிலையத்தார் ஒன்பது நாட்கள் சிறப்பாக நடத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்க நூற்றாண்டு விழாவில் மேற்படி ஆங்கில மொழிபெயர்ப்புத் திருவருட்பாவை அச்சிட்டுச் சென்னை மாநில முதலமைச்சரவர்களால் வெளிப்படுத்தினர்.

### மக்கட் பேறு

இவருக்கு ஆனந்தா தேவி என்னும் பெயருடைய மகள் மட்டும் உள்ளார்.

### இவருடைய கொள்கை

"உயிர் அழிவற்றது; உண்மையானது: இறப்பு அதன் நோக்கம்; முடிவுமல்ல" என்பது பாலகிருட்டிண பிள்ளையினுடைய கொள்கை. நாம் எதற்காக வாழ்கிறோம் என்பதை அறியாமலே இவ்வுலகத்தில் வாழ்ந்து மறைந்து

விடுகிறோம்; சிறிது பொருள் தேடிவிட்டால் நாம் வாழ்ந்து விட்டோம் என்று அடிக்கடி நினைத்துக்கொண்டு நம்முள்ளிருக்கும் திருவருளின் அழைப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருந்து விடுகிறோம்; உயர்நிலையில் இருந்தும் கடமையைச் செய்யத் தவறி வாழ்க்கையைப் பயனறறதாக்கி விடுகிறோம். ஆனால் இவர் இந்நிலையில் இருந்து வேறுபட்டிருந்தார். இதனால்தான் செய்தற்கரிய அருட்பாப் பதிப்பு வேலையையும் செய்து முடித்தார்.

---

## ௯. மாசிலாமணி முதலியார்—(ப)

### தோற்றம்

"புதுப்பாளை யப்பதியில் புகழுடனே வாழ்ந்துவரும்
மதுப்பிலித்றுந் தொடைவேளாண் மரபிற்குத் திலகம்போல்
வதிந்துபெருங் கலைபலவும் வண்டமிழும் மிகக்கற்றேன்
மதிக்கண்ணிப் பெருமான்றன் மலரடியை மறவாதோன்.

மாசிலா மணியென்ன மன்னியநற் பெயராளன்
ஆசிலா நூல்பயிற்றும் ஆசிரியன் தமிழ்நூல்கள்
காசிலா வகைபலர்க்குங் கற்பித்த சிறப்புடையோன்
பேசிவிவன் பாற்கல்லாப் பெரியோர்கள் மிகச்சிலரே.

சமரசசன் மார்க்கமெனும் தக்கபெருங் கழகமதை
அமைத்ததனல் தமிழ்நூலில் அமைந்தபல பலகருத்தும்
சமயங்கள் தமில்உள்ள சால்புடைய பலகருத்தும்
அமர்ந்துபலர் கேட்டின்பம் ஆரும்வகை பணிபுரிந்தான்.

அல்லூரில் மாண்புமிகும் அரியபல நூல்கள்தமைச்
செவ்வியதன் முறைதொகுத்துச் சேர்த்திபெறும் நூல்நிலையம்
எவ்வெவரும் போற்றிடுமா றிலகும்வகைப் பயவீந்தான்
தவ்வைநீர் உலகுபுகழ் தக்ககவி பலபுனைந்தான்.

பொதுக் கருத்தைப் புலப்படுத்தும் போக்கில்லா
[உரைநடைநூல்
கதிதரும்நல் லறநெறியைக் கடைப்பிடிக்கும் வகையெழுதி
மதியுடையோர் பாராட்டும் வண்ணமருஞ் சொற்பொழிவு
பதியவுனத் தமைவித்த பாவலரே றிவன்மன்றே.

மகனறிவே தந்தையது மதியுமது வேயென்னத்
தகவுடையோர் கூறுதற்குச் சான்றாகத் தன்மகனும்
தகுசெந்தில் நாதனெனும் தனிமகனைப் பண்படுத்தி
அகமகிழ்ந்தோன் கண்டபிறை ஆயிரமாம் பெருமையனே"

என்று பாராட்டப்பெற்ற மாசிலாமணி முதலியார் என்பவர் வடார்க்காடு மாவட்டத்தில் புதுப்பாளையம் என இந்நாளில்

திரிந்து வழங்கும் பொதியார் பாளையத்தில் 1882 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் (சித்திரபானு தைத் திங்கள்) இவ்வுலகில் பிறந்தார். தந்தையார் பெயர் பச்சையப்ப முதலியார்; தாயார் பெயர் அலர்மேலம்மாள்.

## கல்வி

மாசிலாமணியார் பூனைத் தாங்கல் என்னுஞ் சிற்றூரில் அம்மான் வீட்டில் தங்கியிருந்து திண்ணைப்பள்ளிக்கூடத்தில் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் படித்தார். குடும்ப நிலையை நோக்கி இளமைப் பருவத்திலேயே பயிர்த்தொழிலில் ஈடுபட நேர்ந்தது. நூல்களைக் கற்பதில் மிகுந்த அவாவும் ஊக்கமும் இருந்தபடியால் ஓய்வுநேரங்களில் புத்தகங்களைப் படிப்பதையே பொழுது போக்காகக் கொண்டார். தெய்வ பக்தியும் நன்கு அமைந்திருந்தபடியால் இரவுநேரங்களில் கடவுளிசை பாடுதலையும் மேற்கொண்டிருந்தார்.

## செய்யுள் பாடுதல்

சின்னசாமி தாசர் என்பவருடைய இசைப் பாடல்களில் இவருடைய உள்ளம் மிகுதியாகச் சென்றது. அடிக்கடி அவருடைய பாடல்களைப் பாடினார். அதனால் இசைப் பாடல்களைப் புதியனவாக இயற்றும் ஆற்றல் இவருக்கும் பதினைந்தாவது வயதிலேயே உண்டாகிவிட்டது தம்முடைய ஊரில் பெருந்திருவிழாவாக நடந்து வந்த ஆதிமூலப் பெருமாள் பரிவேட்டைத் திருவிழாவைப்பற்றி "உற்சவ சிந்து" என்னும் சிந்து நூலைப் பாடி அச்சிட்டுப பலருக்கும் இனமாகக் கொடுத்தார். இது முதல் பலவகையான செய்யுள்களைப் பாடும் ஆற்றலும் கலவியறிவும் மிகுதி யாகியது.

## சிவநேசர் திருக்கூட்டம்

இவர் தம்முடைய ஊக்கத்தால் தம்மூரில் அடியார்கள் பலரை ஒன்றுசேர்த்துச் சிவநேசர் திருக்கூட்டம் ஒன்றை ஏற்படுத்தினார் இத்திருக் கூட்டத்தாருடன் சுற்றுப்புற ஊர்களுக்கெல்லாஞ் செனறு திருவிழாக் காலங்களில் தெய்வத் தொடர்புளள இசைப்பாடல்களைப் பாடி மக்களுக்குத் தெய்வ உணர்ச்சியை ஊட்டிவந்தார். ஊரார்களின் ஆதரவு இத்திருக்கூட்டத்திற்கு நன்கு அமைந்திருந்தபடியால் திருக்கூட்டம் நன்முறையில் இயங்கி வந்தது. 1902 ஆம் ஆண்டில் திருக்கூட்டத்தாருடன் பல சிவப்பதிகட்குஞ் சென்று வழிபாடுகள் நடத்தினார். அவ்வப்பதிகளைபபற்றிப் புகழ்நூல்கள் பாடி அச்சிட்டு வழங்கினார். இவ்வகையில் பலசிறிய நூல்கள் வெளியாயின.

## கோ வடிவேலுச் செட்டியார் தொடர்பு

கோ. வடிவேலுச் செட்டியார் என்பவர் இவ்விருபதாம் நூற்றாண்டின் சிறந்த புலவர்களில் ஒருவர். இவர் இலக்கண இலக்கியங்களையும் தருக்க நூல்களையும் வேதாந்த நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். அதனால் அவருடைய பெயருக்கு முன்னால், இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த போதகாசிரியர் என்னுஞ் சிறப்புச் சொற்களும் அடைமொழிகளாக அமைந்து நின்றன. அவருடைய புலமைத் திறத்தை நன்குணர்ந்த இவர் அவரையடுத்துப் பல நூல்களையுங் கற்றுத் தேர்ந்ததன்றிப் பெரும்பாலும் அவருடனிருத்தலையும் மேற்கொண்டிருந்தார். 1912 ஆம் ஆண்டில் திருத்தில்லைத் தோத்திர மஞ்சரி என்னும் நூலை மாசிலாமணியார் இயற்றினார். இந்நூல் கோ. வடிவேலுச் செட்டியாருடைய தலைமையில் சென்னை திருவேட்டீசுவரன் பேட்டை திருவேட்டீசுரர் கோயிலில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

பேட்டை வாசிகள் பலரும் திரளாகக் கூடியிருந்தனர். அரங்கேற்றத்தின் இறுதியில் உருத்திராக்கப் பொன்மாலையொன்று இவருக்கு அணிந்து பாராட்டப்பெற்றது.

நூல் நிலையம் அமைத்தல்

சிற்றூரிலுள்ள மக்களுக்குச் சில சமயங்களில் ஏதேனும் ஒரு நூலைப் படிக்க வேண்டும் என்னும் மனவெழுச்சி யுண்டாகும். ஆனால் படிப்பதற்கு நூல்கள் அகப்படுவதில்லை. இக்குறையைத் தம்மூரிற் போக்க வேண்டுமென்று எண்ணிய மாசிலாமணியார் பொது நூல்நிலையம் ஒன்றை அமைக்க எண்ணங் கொண்டார். இவருடைய நல்லெண்ணத்திற்கு ஊர்வாழ் நன்மக்களில் உயர்ந்து நின்றவர்களும் உறுதுணையாக அமைந்து நின்றனர். ஆகவே 1914 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 27ஆம் நாளில் ஒரு சிறிய வாடகை வீட்டில் நூல்நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. பலரிடமும இனமாகப் பெறப்பட்ட நூல்களே முதற்கண் நூல்நிலையத்தில் இடம் பெற்றன.

ஆசிரியத் தொழில்

இவர் புதுப்பாளையத்தில் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினர். அப்பொழுது பாடசாலையின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டுழைத்தார். இரவு நேரங்களில் ஊர்மக்கட்குப் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களை எத்தகைய பயனுங் கருதாமல் பாடம் நடத்தினர். பலபேர் வந்து பாடங் கேட்டுப் பெரும் பயனடைந்தனர். நூல் நிலையத்திற்கு அமைக்கப்பட்ட கட்டிடம் சமரச சன்மார்க்க சங்கம் எனறு பெயர் பெற்றது. புதுப்பாளையம் சன்மார்க்க சங்க நூல் நிலையத்தைப் பார்வையிட்ட வெண்பாப்புலி திரு. கு. வேலுச்சாமிபிள்ளை 1919ஆம் ஆண்டில்,

"புதுப்பாலை யத்தொளிரும் புத்தக சாலை
விதுப்பாற் பிறையின் விளங்கித்—துதிப்பார்ந்த
மங்கலைக ளோங்குவபோல் வாணி அருளினால்
தென்கலைக ளோங்குகவே சேர்த்து"

என்னும் வாழ்த்துப் பாடலைப் பாடினார்.

## புராணம் வெளியிடுதல்

சேயாற்றின் கரையில் திருக்கடம்பர் கோயில் என்பது ஒரு சிவப்பதி. அதற்கு ஒரு புராணம் இருந்தது. அதன் பெயர் திருக்கடம்பநாத புராணம் என்பது. அதனை இயற்றியவர் திருவாவடுதுறை ஈசானதேசிகர். இப்புராணத்தின் பிரதியொன்றை இவருடைய ஆசிரியராகிய சிதம்பர தேசிகர் என்பவர் இவரிடம் கொடுத்து இதனை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று கூறியிருந்தார். மாசிலாமணியார் ஆசிரியர் வாக்கை நிறைவேற்ற எண்ணினார். குறிப்புரை முதலியன எழுதிச் சீரிய முறையில் வெளிப்படுத்தினார். அப் புராணம் புராண விலக்கணங்களெல்லாம் நன்கு அமையப் பெற்றிருந்ததோடு சிவபூசைவிதி முதலியனவைகளையுந் தன்னிடத்தே கொண்டு சிறந்து விளங்கியது.

## சிவானந்தலகரி

சிவானந்தலகரி என்பது சிவபெருமான்மீது ஆதிசங்கரரால் வடமொழியில் இயற்றப்பெற்ற ஒரு புகழ்நூல். அந் நூலைச் சிலர் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர். இவரும் அதனைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழ்ச் செய்யுளாக்க விரும்பினார். சுலோகங்களைத் தமிழில் செய்யுள் வடிவாக மொழிபெயர்த்தார். முதற்கண் வடமொழிச் சுலோகமும் பிறகு தமிழ்ச் செய்யுளும் பிறகு பொழிப்புரையும் அமையுமாறு செய்து வெளியிட்டார். இந்நூலுக்கு மதுரைப்

பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனுக்ஷி சுந்தரம்பிள்ளை முன்னுரை வழங்கினர். கே. எஸ். இராமசாமி சாஸ்த்ரி என்பவர் அணிந்துரை வழங்கினர். இந்நூலைப் பாராட்டித் திரு வி. கலியாண சுந்தரனர்,

சங்கரனர் சிவானந்த லகரியெனுஞ் சாகரமார்ந்
தங்கமுறத் தமிழ்ப்பாட லமிழ்தமழை பொழிந்தான்செய்
பொங்குபுதுப் பாளையத்துப் புலவனுயர் சன்மார்க்க
சங்கமரு செயலாளன் தனிமாசி லாமணியே.

எனவும், திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள்,

அந்நாளில் வடமொழியில் சங்கரனர்
உரைத்தருளும் அருமைப் பாவாய்
எந்நாளுங் கற்றோர்க்கு நிதியமதாஞ்
சிவாநந்த லகரி யென்னும்
மெய்ந்நாடு பாமாலை தென்மொழியில்
பாரிடையே விளங்க வேண்டி
இந்நாளில் தமிழ்ப்பாவில் பொருள்நிரம்ப
இனிதளித்தார் இவர்யார் என்னில்;

பத்திநலங் குணமேன்மை சிவஞானம்
நிறைசீலர் பாரு ளோர்கள்
சுத்தநெறி கைப்பற்றப் பொதியர்பா
ளையமென்னுந் தூய தானத்
துத்தமமாம் சமரசசன் மார்க்கசங்கந்
தாபித்தே உலகோர் உய்ய
வைத்தபெருங் கருணைநிறை மாசிலா
மணிப்பெயர்கொள் மகிபர் தாமே.

எனவும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

## முருகனடியவர்

இவர் திருச்செந்தூர் முருகப் பெருமானிடத்தில் மிகுதியான ஈடுபாடுடையவர். இதன் காரணமாகத் தன்

முடைய அருமை மைந்தனுக்குச் செயசெந்தில்நாதன் என்று பெயரிட்டார். அம்மைந்தரும் கல்வியறிவொழுக்கங் களிற் சிறந்தவராய்ப் புலவராய்க் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந் திருக்கிறார்.

## சொற்பொழிவுகள்

மாசிலாமணியார் பொதுமக்கட்குச் சொற்பொழிவு செய்யும் பணியையும் மேற்கொண்டிருந்தார். மெய்யறிவு நலமும் பெற்றவராதலின் வேதாந்த சித்தாந்த சமய பேதங்கள் பாராட்டாமல் அவ்வந் நெறிக்கேற்ப வொழுகும் பெற்றியராக விளங்கினர். காஞ்சிபுரம் நிச்சல இராமாநந்த சுவாமிகளிடத்தில் நெருங்கிய தொடர்புடையவராக விளங்கி னர். அச்சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட திருவருட்பிரகாச சபையில் அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இவருக்கு ஆசிரியராகவும் குருவாகவும் விளங்கிய கோ. வடிவேலுச் செட்டியார் சென்னை சிந்தாத்திரிப் பேட்டையில் ஏற்படுத்திய வேதாந்த சங்கத்திற்கு அடிக்கடி செல்வார். ஆண்டுவிழா முதலியவைகளிற் சொற் பொழிவு நிகழ்த்துவார். சென்னை பவழக்காரத்தெருவில் திரு. க. சுப்பிரமணிய ஐயர் என்பவர் குகானந்தமண்டலி என்னும் பெயரோடு சபையொன்று நிறுவியிருந்தார். இவர் அந்த ஐயரோடு நெருங்கிய தொடர்புடையவராகவும் அவருடைய சபையிற் சொற்பொழிவு செய்பவராகவும் இருந்தார். மற்றும் கருங்குழி சங்கராநந்தசபை, சம்புவராய நல்லூர் சங்கர சேவாசிரமம், ஆரணி சுந்தரர் சபை, வாலாசாபாத் வேதாந்த சபை, கிருட்டிணகிரி சங்கராநந்த சபை முதலி யவைகளிலுங் கலந்து சொற்பொழிவுகள் செய்தார்.

### பலவகைப் பணிகள்

கிராம சங்கத்தின் வாயிலாகப் பலதுண்டுப்பிரசுரங்களை அவ்வப்போது வெளியிட்டுக் கொண்டிருந்தார். ஊரார்களோடு ஒன்று சேர்ந்து ஊரில் பலியிடும் வழக்கத்தை முற்றிலும் ஒழித்தார். பலருடைய ஒத்துழைப்பையுங் கொண்டு ஆண்டுதோறுஞ் சங்கத்தில் பலவகையான விழாக்களை நடத்தி வந்தார். அரசியலில் ஈடுபட்டுக் காங்கிரசில் சிறந்த பணியாற்றினார். காந்தியடிகளிடத்தில் சிறந்த மதிப்பு வைத்திருந்தார்.

### இதழ்களில் எழுதுதல்

சொற்பொழிவு நூல்கள் வெளியிடுதல், பாடஞ் சொல்லுதல் முதலிய பணிகளையன்றிக் கட்டுரைகள் எழுதுவதையும் மேற்கொண்டிருந்தார். இவருடைய கட்டுரைகள் ஆனந்தபோதினி, ஆரம்ப ஆசிரியன், சைவம், சித்தாந்தம், லோகோபகாரி முதலிய பல பத்திரிகைகளில் வெளியாயின.

### ஆசாரிய சுவாமிகள் பாராட்டு

காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசாரிய சுவாமிகள் புதுப்பாளையத்திற்கு எழுந்தருளியபோது இவர் திருக்கூட்டத்தாரோடு சென்று வரவேற்று வழிபாடுகள் செய்தார். தாம் மொழிபெயர்த்த சிவானந்தலகரியைச் சுவாமிகளிடங் கொடுத்தார். சுவாமிகள் படித்துப்பார்த்துப் பாராட்டியதோடு அனைவரும் அந்நூலைப் படித்துணர வேண்டும் என்றும் அருளுரை வழங்கியருளினார்கள்.

### பொன்னாடை போர்த்துதல்

இவர் சங்கப்பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்புவித்து ஓய்வுபெற்றபோது சங்கத்தினர் ஊரார்களுடைய ஒத்துழைப்போடு 31-10-1955 இல் பொன்னாடை போர்த்திச் சிறப்பு

விழாச் செய்தனர். அவ்விழாவில் காஞ்சிபுரம் சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் தலைமைதாங்கினர். காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தலைவர் புலவர்மாமணி திரு. வி. திருஞானசம்பந்த முதலியார் பொன்னுடையைப் போர்த்தினர்; சித்தாந்தக் கலைமணி திரு. சி. அருணைவடிவேலு முதலியார் பாராட்டுரை வழங்கினர். விழாவினைப் பாராட்டித் திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் கடிதங்கள் எழுதினர்.

### இறுதி

இவர் தம்முடைய இறுதிநேரம் வரையிலும் நல்லநினைவோடிருந்தார். இறுதிக்காலத்தில் ஊரிலுள்ள முதன்மையானவர்களை யெல்லாம் அழைத்து ஒவ்வொருவருக்கும் ஏற்ற அறிவுரைகளைக் கூறினர். சூழ்ந்திருந்த அன்பாகள் சிவ புராணம் முதலியவைகளைப் பாட 1966 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஏழாம் நாள் இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

### இயற்றிய நூல்கள்

(க) சிவானந்த லகரி மொழிபெயர்ப்பு
(உ) அரிகீர்த்திமாலை
(ங) அகத்தீசுவரர் தோத்திரப்பாமாலை
(ச) திருத்தணிகைத் தியானமஞ்சரி
(ரு) முத்துவிநாயகர் சுதீபம்
(சு) திருத்தில்லைத் தோத்திரமஞ்சரி
(எ) திருக்கடம்பநாத புராணக் குறிப்புரை
(அ) சத்போத மஞ்சரி
(கூ) சுஞ்ஞானதீபம்
(கo) குகக்கடவுள் தியானமஞ்சரி
(கக) திறப்பு விழா மலர்

## எ. ஆரணி குப்புச்சாமி முதலியார்

இவர் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆரணியில் 1867 ஆம் ஆண்டிற் பிறந்தார். கல்வி கற்கத் தொடங்கிய இவர் மெட்ரிகுலேஷன் வரையில் கல்வி கற்ருர். இவருடைய மனம் சமயத்துறையை நாடியது. வேதாந்த நூல்கள் சில வற்றைத் திருவண்ணுமலை ஈசானிய மடத்தில் கற்ருர். மகாதேவ சுவாமிகள் என்னும் பெரியாரிடத்தில் சமய தீட்சையும் பெற்ருர். துறவியாக எண்ணிய இவர் பிறகு தம்முடைய மனப்போக்கை மாற்றிக்கொண்டார். "இல்லற மல்லது நல்லற மன்று" என்று எண்ணி இல்வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கினர்.

சிறிதுகாலம் பள்ளியாசிரியராகப் பணிபுரிந்தார். சிறிது காலம் அரசாங்கக் கலால் இலாக்காவில் ஒரு கண்காணிப்பாள ராகப் பணியாற்றினர். திருமணஞ் செய்துகொண்டு இல் வாழ்க்கையையும் மேற்கொண்டார்.

நூல்கள் எழுதுவதில் இவருடைய மனஞ் சென்றது. இந்துமத உண்மை என்னும் நூலை முன்னர் எழுதினர். பிறகு கைவல்லிய நவநீதம், பகவற்கீதை முதலியவைகளை உரைநடையில் எழுதினர். கொழும்பில் நடந்த சஞ்சீவகரணி என்னும் இதழுக்குச் சிலகாலம் ஆசிரியராக இருந்தார்.

ஆனந்த போதினி நாகவேடு முனிசாமி முதலியாருக் கும் இவருக்கும் தொடர்புண்டாகியது. ஆனந்த போதினி யின் ஆசிரியராக அமர்ந்து அத்திங்கள் வெளியீட்டைச் சீரிய முறையில் பல ஆண்டுகள் நடத்தினர். ஏறக்குறையப் பத்தாண்டுகட்குமேல் ஆனந்த போதினியில் பணிபுரிந்தார்.

புதினங்கள் எனப் பெறும் நாவல்களை எழுதுவதில் இவருடைய உள்ளஞ் சென்றது. ஆங்கில நாவல்களைத் தழுவி நம் நாட்டு மரபிற் கேற்பக் கதைகளை அமைத்து எழுதினர். அவைகள் ஆனந்த போதினியில் திங்கள் தோறும் வெளியானதோடு நாவல் சஞ்சிகை யொன்றுந் திங்கள் தோறும் வெளியாகியது. இவரால் எழுதப் பட்ட நாவல்கள் எழுபத்தைந்துவரை உள்ளன. தமிழ் நாட்டில் நாவல்களும் சிறுகதைகளும் பரவாத அந்தக் காலத்தில் மக்கள் இவருடைய நாவல்களைப் பெரிதும் விரும்பிப் படித்தனர். தாம் எழுதும் நாவல்களில் தம் சொந்தக் கருத்து மனப்போக்கு முதலியவைகளையும் எழுது வார். ஆனந்த போதினியில் சிடன் என்னும் புனைபெயரோடு இவர் எழுதிய பலகட்டுரைகள் அனைவராலும் பாராட்டிப் படிக்கப்பட்டன.

இவர் 1925 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24 ஆம் நாள் வீடுபேற்றை யடைந்தார்.

---

## அ. கனகசபை நாயகர்—பொ.

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னை மாநகரில் வாழ்ந்திருந்த புலவர்களில் ஒருவர். இவருடைய தந்தையார் பெயர் பொன்னப்ப நாயகர். இவர் அட்டாவதானம் சபாபதி முதலியாரிடத்தில் கல்வி பயின்றார். காலக்கணிதத்திலும் வல்லவராக விளங்கினர். காஞ்சிபுரம் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்திருந்தார். கல்பாக்கம் குமாரசாமி தேசிகர் என்பவர் இயற்றிய ஏகாம்பர நாதர் யமகக் கலித்துறை யந்தாதிக்குப் பதவுரை எழுதினர். மாணவர்கள் பலருக்குக் கல்வி போதித்துப் புலவர்களாக்கினர்.

இவர் இயற்றிய நூல்கள் காஞ்சிப்புராண வசனம், தேவி தோத்திரம், திருமயிலைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவான்மியூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, செங்கற்பட்டுக் கோதண்டராமசாமி பாமாலை, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, ஆறுகாடு சுப்பிரமணியசுவாமி மும்மணிக்கோவை, கோவிந்தப்பாடி அரசம் தட்சணாமூர்த்தி சுவாமி நான்மணிமாலை, கச்சிப் பதிற்றுப்பத்தந்தாதி, கச்சபேசுரர் பதிற்றுப் பத்தந்தாதி, காமாட்சியம்மன் பதிகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உரை, திருக்கழுக்குன்றப் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்போரூர் வெண்பா வந்தாதி, நஞ்சுண்டான் குடிப் பதிற்றுப் பத்தந்தாதி, திருவாலங்காட்டுப் பதிற்றுப் பத்தந்தாதி, அமரீசப் பதிற்றுப்பத்தந்தாதி, கம்பர் கருணாரச மஞ்சரி, கப்பர் வெண்பாவந்தாதி, திருக்குமர கோட்டப் பாமாலை, ஆத்திசூடி நீதிக் கலி விருத்தம் என்பன. இவரால் இயற்றப் பெற்ற காஞ்சிப் புராண உரை கடை 'சிவஞான

முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணத்திற்கு நேரானது. அதனை இயற்றுமாறு வேண்டிக் கொண்டவர்கள் தொ. இரத்தின முதலியார், பி. சம்பந்த முதலியார், கா. குமாரசாமிப் பிள்ளை என்போராவர். இவரைப் பற்றிய பிற செய்திகள் விளக்கமாகவில்லை. இவர் அண்மைக் காலத்தில் வாழ்ந்தவராக இருந்தும் இவருடைய வரலாற்றை யாரும் எழுதி வைக்காதது வருந்தத்தக்கது. ஒவ்வொரு புலவர்களும் தாம் இயற்றும் நூலின் முகப்பில் தமது வரலாற்றுக் குறிப்புக்களைச் சுருக்கமாகவேனும் எழுதி வைப்பர்களாயின் அவர்களுடைய பெயர் உலகில் நீண்டநாள் விளங்குதற்கு வழியாகும்.

"வாராய் மடநெஞ்சே மாநிலத்தில் வந்துழல்வ
தோராய் வினையொழிதற் குன்னியே - நேராகச்
செய்தீ வினையொழிக்கும் சிற்பரனுர் பொற்பதத்தை
மைதீர் மனத்துடனே வாழ்த்து"

என்பது இவருடைய பாடல்களில் ஒன்று.

## ௬௰. நா. ஏகாம்பர முதலியார் (செஞ்சி)

இவர் நடு நாட்டில் செஞ்சியில் நாராயணசாமி உபாத்தியாயர் என்பவருடைய புதல்வராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றினர். நாராயணசாமி உபாத்தியாயர் பள்ளிக்கூடம் வைத்துப் பல பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார். அவர் காலக்கணிதம், மருத்துவம் முதலியனவைகளில் வல்லவராக இருந்ததோடு செய்யுள் பாடுந் திறமுடையவராகவும் இருந்தார். இவர் வேளாள மரபினர்.

ஏகாம்பர முதலியார் தம்முடைய தந்தையாரிடமே கல்வி கற்கத் தொடங்கினர். புலமைக் கல்விவரை கற்றார். தந்தையார் அறிந்திருந்த மருத்துவம் காலக்கணிதம் முதலியவைகளையும் நன்குணர்ந்துகொண்டார். "மகனறிவு தந்தையறிவு" என்னும் முதுமொழி ஏகாம்பர முதலியாரிடம் உண்மையாகியது.

ஏகாம்பர முதலியார் தாம் கற்றனவைகளெல்லாம் பிற்காலத்தார்கட்கும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு காலக்கணிதம், மருத்துவம் முதலிய வகைகளில் நூல்கள் எழுதலானர். இவருடைய நூல்கள் பெரும்பாலும் பாட்டாக அமைந்தன. சில நூல்களுக்கு உரையையும் இவரே எழுதிவைத்தார். நாடகம், இலக்கணம் முதலிய துறைகளிலும் வல்லவராக இருந்த இவர் அத்துறைகளிலும் நூல்கள் எழுதினர்.

இவர் இயற்றிய நூல்கள் சந்திரமதிமாலை, கர்ண மகாராசன் நாடகம், மயிலிராவணன் நாடகம், சாரங்கதரன்

அம்மானை, நளச்சக்கிரவர்த்தி அம்மானை, அரிச்சந்திரன் அம்மானை முதலியன. பாடல்கள் யாவும் பழங்காலப் போக்கை யொட்டியனவாகலின் அவைகள் காலப்போக்கில் மறைந்தன.

"சீர்புகழும் செகத்திலுள்ளோர் செயல தாகச்
செப்புமொரு நன்னெறியை உடைய மன்னன்
பேர்புகழும் அரிச்சந்திரன் சௌன மோடு
பூவைசந்திர மதியினுட பிறப்பை யுந்தான்
தார்புகழுஞ் செந்தமிழால் தரணி மீது
தான்விளங்க அரிச்சந்திரன் அம்மானை என்னும்
கார்புகழுஞ் சந்திரமதி மாலை சொல்லக்
கணபதியின் கமலபதங் காப்புத் தானே"

என்பது சந்திரமதி அம்மானையில் காப்புப் பாட்டு.

இவர் உரைநடையிலும் நூல்கள் எழுதினர். உரைநடையில் விநோத வேடிக்கைகளைக்கொண்டு நகைச்சுவையுடன் இவர் எழுதியவை அகட விகட அகசிய பூடணம், விகட விநோதக் கதை, கலியுக விநோதக் கதை முதலியன. பழையனூர் நீலி கதையையும் இவர் எழுதியிருக்கிறார். உரைநடை சீர்திருந்தாத பழங்காலத்தில் எழுதியதால் உரைநடையின் போக்கு நன்றாக இல்லை.

இவர் இவ்விருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

---

## கo. உலகநாத சுவாமிகள்

இவர் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சோழவள நாட்டில் திருவிடை மருதூரில் வாழ்ந்திருந்தார். இவர் பார்ப்பனர் குலத்தில் தோன்றியவர். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் பிச்சுவையர். இளம் பருவத்திலேயே வடமொழியையுந் தென்மொழியையும் இவர் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

இவருடைய மனம் வீடுபேற்று நிலையை நாடி நின்றது மெய்ஞ்ஞானச் செல்வர்களாக விளங்கியிருந்த சில பெரியார்களை யடுத்து மெய்யறிவு நூல்களையும் ஓதி யுணர்ந்தார். அப்பெரியோர்கள் இவருடைய வடமொழி தென்மொழிப் புலமையைக் கண்டு வடமொழியில் உள்ள வேதாந்த நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தனர்.

சங்கராச்சாரியார் வடமொழியில் இயற்றிய விவேக சூடாமணி என்னும் வேதாந்த நூலை 671 செய்யுளாக மொழிபெயர்த்தார். இந்நூல் குருசிட சம்வாதமாக அமைந்தது. சாதனசம்பத்தி, ஆசிரிய சேவை, சிரவணம், மனனம், தியானம், சமாதி, ஞானம், வீடு என்பவற்றை விளக்குவது. வீடுபேற்றை நாடுபவர்கட்கு மெய்ப் பொருளை யெல்லாம் தெள்ளிதில் விளக்குவது

ரிபுகீதை என்பதும் இவரால் தமிழ்ச் செய்யுளாக மொழி பெயர்க்கப்பட்டது. இதுவுஞ் சிறந்த வேதாந்த நூல் ரிபுமுனிவர் என்பவர் நிதாகர் என்பவருக்கு உபதேசித்தது. மகாவாக்கியார்த்தப் பொருளை நன்கு விளக்குவது. இவர்

இயற்றிய இந்நூற் செய்யுட்கள் 1924. இவைகளைத் தவிர ருதகீதை முதலிய நூல்களும் செய்துள்ளார்.

வித்தியாரண்ய சுவாமிகள் என்பவர் இயற்றிய சீவன் முக்திப் பிரகரணம் என்னும் நூலையும் உரைநடையாக மொழி பெயர்த்திருக்கிறார். இவருடைய மொழிபெயர்ப்புக் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் நன்கு விளங்கக் கூடிய எளியபோக்கில் அமைந்துள்ளது.

"பூதகா லத்திறந்த பொருளினைச் சிந்தியாமை
ஓதிய வருகா லத்தில் உறுபொரு ளோர்ந்தி டாமை
ஏதுமே நிகழ்கா லத்தி லெய்தினு மதிலுபேட்சை
ஈதெலாம் சீவன் முக்தன் இலக்கணம் ஆகு மைந்தா"

என்பது விவேக சூடாமணிப் பாடல்களில் ஒன்று.

"அகிலசகன் ஞயகனு யநந்த சத்தி
அமைவுற்ற அகண்டசிவன் சரணம் போற்றி
நிகிலசகன் மாதாவாம் நித்யானந்த
நிசவடிவாம் அம்பிகைதன் சரணம் போற்றி
சகலவித விக்கினமுந் தீர்த்தெல் லோர்க்கும்
சாதகமாம் விநாயகனற் சரணம் போற்றி
தகைமைமிகும் அன்பர்க்குச் சிவஞா னத்தைத்
தந்தருளுஞ் சண்முகனற் சரணம் போற்றி"

என்பது ரிபுகீதைப் பாடல்களில் ஒன்று. விவேக சூடாமணியும் ரிபுகீதையும் சிறந்த வேதாந்தநூல்களாகையால் வேதாந்த சமயத்தினரால் அடிக்கடி அச்சியற்றி வெளியிடப் பெறுகின்றன. இவர் பிற்காலத்தில் துறவியாக விளங்கினர் என்று பெயரால் ஊகிக்கவேண்டியதாக இருக்கிறது.

## கக. சுப்பராயச் செட்டியார்
(சோடசாவதானம்)

இவர் திரிசிரபுரத்தில் பாலக்கரையில் வீரராகவ செட்டியார் என்பவரின் புதல்வராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் தோன்றினார். இவர் பள்ளிக் கல்வியைக் கற்று முடித்தபின் புலமைக் கல்வி கற்க விரும்பினார். பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் அந்நாளில் திரிசிரபுரத்தில் இருந்ததால், அவருடைய புகழ் எங்கும் பரவிகின்றது. இவர் அவரிடம் கல்வி கற்க விரும்பினார். சுப்பராயரின் நுண்ணறிவு பிள்ளையவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியது. மாணவர்களோடு சேர்த்துக் கல்வி போதித்தார்.

அந்நாளில் சிலர் அவதானஞ் செய்துகொண்டிருந்தனர். சிலர் பிள்ளையவர்களிடம் வந்து அவதானத்தைப் பாராட்டிப் போற்றியதுடன், "உங்களுடைய மாணவர்களில் எவரையேனும் அவதானியாக்க முடியுமா?" என்று உசாவினார். பிள்ளையவர்கள் "அவதானஞ் செய்வது பெரிய வியத்தகு நிகழ்ச்சியன்று; என் மாணவர்களில் ஒருவரை அவதானியாக்குகிறேன் பாருங்கள்" என்று கூறியதுடன் தம் மாணவர்களில் இவரே அவதானஞ் செய்வதற்குத் தகுதியுடையவர் என்று தேர்ந்தெடுத்து இவருக்கு அவதானஞ் செய்ய வேண்டிய முறைகளை யெல்லாம் போதித்தார். இவரும் அதனை நன்கு உணர்ந்து அவதானங்கள் செய்யும் திறமையுடையவரானார். எட்டுப் பத்துப் பன்னிரண்டு என்பனவைகளையும் தாண்டிப் பதினாறு அவதானங்கள் வரையிலும் இவர் செய்தபடியால் இவருடைய

பெயர் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் என்று வழங்குவதாயிற்று.

இவர் சென்னை அரசினருடைய நார்மல் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணியாற்றினர். வேதாந்த நூல்களையுங் கற்றுணர்ந்து சிறந்த வேதாந்தியாகத் திகழ்ந்தபடியால் இராயப்பேட்டை அத்துவித வேதாந்த சபையில் கிழமை தோறும் வேதாந்த வகுப்பு நடத்தினர்.

நூல்கள் இயற்றுவதினும் உரை யியற்றுவதினும் வல்லவராகத் திகழ்ந்த இவர் விரிஞ்சேசர் சதகம், ஆதிபுர தலபுராணம் முதலிய நூல்களை இயற்றினர். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம், சிவஞானமுனிவர் காஞ்சிப்புராணம், புலியூர் வெண்பா முதலிய நூல்களுக்கு உரையெழுதித் தாமே அச்சிட்டு வெளிப்படுத்தினர். காங்கேயன் உரிச் சொல் நிகண்டையும், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் இயற்றிய சந்நிதி முறையையும் ஆராய்ந்து பிழையறப் பதிப்பித்துள்ளார். தம் ஆசிரியர் இயற்றிய மாயூரப் புராணம், திருநாகைக் காரோணப் புராணம் ஆகியவைகளையும் அச்சிட்டு வெளியிட்டார்.

பதினோராந் திருமுறை முழுவதையும் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து திருத்தமான முறையில் முதன்முதலில் வெளியிட்டவர் இவரே என்பர். இவர் காலத்தில் நூல்கள் வெளியிட்டவர்கள் இவரிடஞ் சாற்றுக் கவி பெறுவதைப் பெரும் பேருகக் கருதினர். முன்னாளில் வெளியிடப்பட்ட பல நூல்களின் முகப்பில் இவருடைய சிறப்புப்பாயிரம் விளங்குவதைக் காணலாம்.

சிறந்த புகழோடு திகழ்ந்த இவர் 1894 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து வீடுபேற்றை யடைந்தார்.

இவர் விரிஞ்சேசர் சதக நூலைப் பாராட்டிப் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கொட்டையூர்ச் சாமிநாத தேசிகர், நாகை வெளிப்பாளையம் சண்முக தேசிகர், திரிசிரபுரம் சுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார், திரிசிரபுரம் குப்பமுத்துப் பிள்ளை, திருவிழிமிழலை சாமிநாதக் கவிராயர், பாளையங்கோட்டை நமசிவாயம் பிள்ளை, திரிசிரபுரம் முத்துப் பிள்ளை, வயித்தியலிங்கப் பத்தர், முருகப்பிள்ளை, செகநாத பிள்ளை, சென்னையப் புலவர், சவராயலு நாயகர், ஞானதிக்க முதலியார் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். பின் வருஞ் சதகப் பாட்டுக் கல்விப்பொருளின் பெருமையை உணர்த்துகிறது.

"மன்னர்பலர் புகழ்மேன்மை நனிசெய்யும் உலகின்மேல்
வான்புகழ் நிறுத்தும் அறிஞர்
மன்னுபேர் அவையில்நடு நாயகம் எனத்தலைமை
மருவமா மகிமை நல்கும்
துன்னலரை யுறவுசெயும் எழுபிறப் பினுமுறத்
தொடரு நன்னெறி நடத்தும்
துன்பம்வரின் ஊன்றுகோல் எனநிற்கும் ஏழைமை
துடைச்குமுல கோர்வி ரும்பத்
தன்னமறு தர்மார்த்த காமமும் வழங்கிடும்
சைவசம யத்தில் நாட்டும்
சாதுசங் கத்தினில் கூட்டும் வழிகாட்டுநல்
தலைமைபெறு கல்வி என்பார்
மென்னகை விருந்துசெயும் அம்பிகைதன் நண்பனே
வேந்தர்புகழ் வேங்கடப்பன்
விந்தைபெறு சிந்தையின் உவந்தருள் வாணிபுரி
விஞ்சைய விரிஞ்சே சனே"

---

## கஉ. அ. சிதம்பரநாதச் செட்டியார்

### தோற்றம்

"அறிஞரெலாம் போற்றுகின்ற தகவுடையான் என்றும்
ஆர்வமிகு புலவர்பால் அன்புடையான் குன்றாச்
செறிவுகொண்டு மாணவரைத் தன்னிடத்தே ஈர்க்கும்
சிறப்பார்ந்த ஆற்றலுமே நன்குடையான் சீர்த்த
நெறியினின்றே பிறர்தமக்கோர் எடுத்துக்காட் டாகி
நேர்மையினில் திறம்பாத பண்புடையான் கொண்ட
குறிமுறையும் அதையெய்தும் திறப்பாடும் உடையான்
கொள்கைவழி அஞ்சாத நெஞ்சுடையான் காணே"

என்று பேராசிரியர் திரு. டாக்டர் மு. வரதராசனார் அவர்களால் பாராட்டிப் பாடப்பெற்ற அ. சிதம்பரநாதச் செட்டியார் சோழவள நாட்டிலே திருக்குடந்தையிலே 3-4-1907 இல் பிறந்தார். தந்தையார் பெயர் அமிர்தலிங்கஞ் செட்டியார். தாயார் பெயர் பார்வதியம்மையார்.

### கல்வி

இராவ்பகதூர் அப்புசாத்திரியார் என்பவர் நடத்தி வந்த நேடிவ் உயர்நிலைப் பள்ளியில் கல்விகற்றுப் பள்ளி யிறுதித் தேர்வில் சிறப்பாக வெற்றிபெற்றார். குடந்தை அரசினர் கல்லூரியிற் சேர்ந்து 1928இல் பி. ஏ. வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சியடைந்தார். மாநிலத்தில் தமிழில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றமைக்காக ஜி. யூ. போப்பி னுடைய தங்கப்பதக்கத்தையும், பிராங்லின் கெல் தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

### பணி புரிதல்

ரெவின்யூ போர்டிலும் அரசாங்கத் தலைமைச் செயலர் அலுவலகத்திலும் எழுத்தராகப் பணியாற்றினர். பிறகு சென்னை அரசினருடைய முகமதியர் கல்லூரியில் தமிழாசிரியராக மூன்றுண்டுகள் பணியாற்றினர்.

### மீண்டுங் கல்வி

1933 முதல் 1935 வரை அண்ணுமலைப் பல்கலைக் கழக முதுகலை வகுப்பு மாணவராகவிருந்து எம். ஏ. யில் முதல்வராகத் தேறிப் பட்டம் பெற்றுர். இவர் அங்கு கல்வி கற்ற பொழுது நாவலர் சோமசுந்தர பாரதியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ரா. பி. சேதுப்பிள்ளை முதலியோர் அங்கு ஆசிரியர்களாக அமர்ந்திருந்தனர். ஆகவே அவர்களிடமெல்லாங் கல்வி கற்கும் வாய்ப்பு செட்டியாருக்கு ஏற்பட்டது.

### பல்கலைக் கழகத்திலேயே வேலை

எம். ஏ. பட்டம் பெற்ற பிறகு அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறையில் ஓராண்டு பணியாற்றினர். 1936 ஆம் ஆண்டில் ரா. பி. சேதுப்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழக முதன்மை விரிவுரையாளராக அமர்த்தப்பட்டுச் சென்னைக்குச் சென்றபொழுது அவருடைய இடத்திலே இவரே விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பட்டதாரிகள் தொகுதியில் இருந்து செனட்டிற்கும் ஆசிரியர்கள் தொகுதியில் இருந்து அகாடெமிக் கவுன்சில் என்னும் கல்விக் குழுவிற்கும் உறுப்பினருள் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். செனட்டு உறுப்பினர்கள் தமக்குள் மூவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலிலும் வெற்றிபெற்றுர்.

### டாக்டர்

1941 ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் எழுதி வெளியிட்ட "தமிழ்ச் செய்யுள் வரலாறு"

என்னும் ஆராய்ச்சி நூலுக்காக டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றார். 1946 முதல் 1958 வரை தமிழ்ப்பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கினார்.

## பலருடைய நன்மதிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய இராசா சர் அண்ணாமலைச் செட்டியாருடைய நன்மதிப்பையும் அவருடைய நன்மகனார் இராசா சர் முத்தையா செட்டியாருடைய நன்மதிப்பையும் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர்களாக இருந்த மகாகனம் சீனிவாச சாத்திரியார் சர் கே. வி. ரெட்டி, எம். இரத்தினசாமி, டாக்டர் மணவாள ராமாநுசம், டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார், டி. எம். நாராமணசாமிப் பிள்ளை, சி. பி. இராமசாமி ஐயர் ஆகியவர்களுடைய நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றிருந்தார்.

## அகராதி வேலை

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியார் சிதம்பரனாருடைய இருமொழிப் புலமையிலும் நிர்வாகத் திறமையிலும் மிகவும் ஈடுபட்டவர். ஆகவே சென்னைப் பல்கலைக் கழகம் தொகுப்பிக்க எண்ணியிருந்த ஆங்கிலம் - தமிழ்ச்சொற் களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராக வந்து பணியாற்றுமாறு அழைத்தார். செட்டியார் சென்னை மாநகர் போந்து அப்பணியில் அமர்ந்தார். 1959 இல் தொடங்கிய அப்பணி 1965 இல் முடிவுபெற்றது.

## துணை வேந்தர்

1948 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைக்காலத் துணைவேந்தராக ஐந்து திங்கள் இருந்து தக்க முறையிற் பணியாற்றினார்.

### தமிழாசிரியர்களுக்குத் தொண்டு

இவர் பதினொன்கு ஆண்டுகள் மாநிலத் தமிழாசிரியர் கழகத்தலைவராயிருந்து மாநிலத் தமிழாசிரியர்களுக்குப் பெருந்தொண்டு செய்தார். தமிழகப் புலவர் குழுவின் செயற்குழுத் தலைவராக ஈராண்டுகள் இருந்தார். மாநிலம் முழுவதும் ஒரு தொகுதியாக இருந்த 1958 ஆம் ஆண்டுத் தேர்தலில் மேல் சட்டமன்ற உறுப்பினராகக் கடுமையான போட்டியினிடையே ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தொகுதிகளைப் பிரித்துவைத்த பிற்பாடு நடந்த 1964 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடவார்க்காடு-தென்னார்க் காடு ஆசிரியர்கள் தொகுதியிலும் கடுமையான போட்டியி னிடையே வெற்றிபெற்றார். பொதுவாக ஆசிரியர் நலத்திற் கும் சிறப்பாகத் தமிழாசிரியர் நலத்திற்கும் உழைத்தார்.

### வெளிநாடு சென்று மீளல்

1955 இல் பிரிட்டிஷ் கவுன்சில் அழைப்பின் பேரில் இங்கிலாந்து ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழக நிர்வாக முறைகளை நேரிற் போய்ப் பார்த்தறிந்து வந்தார். பிரான்சு இத்தாலி சுவிட்சர்லாந்து முதலிய நாடு களையுஞ் சுற்றிப் பார்த்து வந்தார். 1956 இல் சிங்கப்பூர் மலேயா ஆகிய நாடுகளுக்குத் தமிழர் அதிகார சபையினரின் அழைப்பினையேற்றுச் சென்று தமிழறிவைப் பரப்பி மீண்டார்.

### வேறு பல வேலைகள்

செட்டியார் சாகித்ய அகாடெமி உறுப்பினராகப் பணி யாற்றியுள்ளார். பல்கலைக்கழகக் கல்வி ஆய்வுக்குழு முன்னும், இந்திய ஆட்சி மொழிக்குழு முன்னும் இவர் அளித்த சாட்சியங்களில் தமிழின் இன்றியமையாமை பற்றியும், தொடர்புமொழி ஆங்கிலமாக இருத்தற்பாலது என்பது பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறினார். தமிழ்மொழியின் ஆக்கத்திற்கும் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கும் நன்கு

உழைத்தார். பண்டித நேரு, குடியரசுத் தலைவர்கள் இராசேந்திர பிரசாத், டாக்டர் இராதாகிருட்டிணன் முதலியோர் இவரைக் கண்டு கலந்துரையாடியபடியால் இவருடைய கருத்தை நன்குணர்ந்திருந்தார்கள்.

## முதன் மனிதர்

பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் தமிழாசிரியர் இவர்தாம். ஆராய்ச்சி டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழாசிரியரும் இவர்தாம். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணி புரிய முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழாசிரியரும் இவரே.

## பெரியநாயகியம்மையார்

இவருடைய மனைவியாரின் பெயர் பெரியநாயகி யம்மையார். இவ்வம்மையாருஞ் செட்டியாரைப்போலவே மாணவர்களிடத்தில் அன்புடையவராகவிருந்தார். இவ் வம்மையார் ஓவியம் வரைவதில் வல்லவர் என்று அறியப் படுகிறது. இவ்வம்மையார் எழுதிய காந்தியடிகளின் படம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியை அழகு செய்கிறது.

## மணி விழா

இவருக்கு 8-9-1967 இல் மணி விழா நடைபெற்றது. அப்பொழுது இவருக்கு மணிவிழா மலர் வெளியிட்டுச் சிறப்பித்ததோடு பொன்னுடை போர்த்துதல் முதலிய சிறப்புக்களையுஞ் செய்தனர்.

## பாராட்டு

மணிவிழா மலரில் அன்பர்கள் பலரும் இவரைப் பாராட்டினர். சிலருடைய பாராட்டுரைகள் சிலவற்றை அடியிற் காண்க:

பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்

"திரு செட்டியார் அவர்கள் சிறந்த ஆள்வினையுடைமை, அறிவுடைமை, வீரம், பக்தி முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றவர். இதனால் அவர் பலருடைய நட்பினைப் பெற்றுள்ளார். சென்னைத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராக விளங்கித் தமிழாசிரியர் நலனுக்காக ஆற்றியுள்ள பணிகள் பல. தமிழ் ஆசிரியர் நலனுக்காகத் தமிழ்நாட்டுக் கல்வியமைச்சரிடத்திலும் கல்வித்துறை இயக்குநரிடத்திலும் அவர் பலமுறை தூது சென்று தமிழாசிரியர்களுக்குப் பல நன்மைகளைச் செய்துள்ளார்."

தா. ஏ. ஞானமூர்த்தி

"டாக்டர் செட்டியார் அவர்களின் ஆட்சித்திறன் பெரிதும் வியத்தற்குரியது. சில ஆண்டுகட்குமுன் அவர் ஒருசில திங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்றிருந்தார். அப்போதுதான் இப்பெரியாரின் ஆட்சிசெய்யும் அருந்திறன் அனைவருக்கும் புலப்பட்டது. அனைவரும் அவர்தம் திறனை வியந்து போற்றினர். பல்கலைக்கழகச் சட்ட நுட்பங்கள் அனைத்தையும் தம் நினைவிலிருத்தி நெறிமுறை தவறாமல் பல்கலைக் கழகத்தை ஆட்சி செய்த இவருடைய திறத்தினைப் போற்றாதார் யாரும் இல்லை. இவர் தற்காலத்துத் தலைசிறந்த தமிழறிஞர்களுள் நனி சிறந்தவர்."

கா. அப்பாத்துரை

"தமிழர் பெருமையை நிலைநாட்டிய பண்டைத் தமிழ்ப் பெருவேந்தன் சேரன் செங்குட்டுவனை உருவிலும் திருவிலும் பண்பிலும் நினைவூட்டுபவர் பேராசிரியர் சிதம்பரனார். இனிய கிட்டத்தட்டப் பெண்பான்மை ஒழுகும் செந்தமிழ்தான் அவர் பேசுவார். ஆனால் இந்தப் பெண்பான்மை ஆசிரியர் மறைமலையடிகள் பெண்பான்மை போல, பல ஆண் பான்மைகளை வற்றக்காய்ச்சி இறுகவைத்தடக்கிய பெண்பான்மை.

தமிழுக்கு ஊறு என்ற பேச்சின் எதிர்வலே எங்காவது தென்பட்டால் போதும். அவர் சொற்கள் வேல்நுனிகள் போல் கிமிர்ந்தெழுந்து பாய முனைந்துவிடும்."

## மா. இராசமாணிக்கனர்

"டாக்டர் செட்டியார் ஆங்கிலத்திலும் தமிழிலும் கடல்மடை திறந்தாற்போலப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர். தமக்கு உண்மையென்று பட்டவற்றை அஞ்சாமல் எடுத்துக் கூறும் திறனுடையவர். நல்லியல்புகள் பலவும் வாய்க்கப் பெற்றவர். தாய்மொழியான தமிழைத் தம்முயிரினும் உயர்வாகக் கருதுபவர். அவர் இப் பலநலன்களால் மாணவர் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்தார். எடுத்த வேலையைச் சிறப்புறச் செய்து முடிக்கும் திறமை மிக்கவர். அனைவருடனும் இன்முகத்துடன் பழகும் இயல்புடையவர்."

## அ. மு. பரமசிவானந்தம்

"அண்ணமலைப் பல்கலைக் கழகத்தே அவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவர் செய்த தொண்டு அளவில. அப்பல்கலைக்கழகத் துணைவேந்தராகித் தொண்டாற்றிய பெருமையும் அவருக்குண்டு. தமிழ் ஆசிரியர்கள் அதுவரையில் புகாத இடங்களில் எல்லாம் புகுந்து செயல் புரியவும் மற்ற ஆசிரியர்களோடு தமிழாசிரியர்கள் சரிநிகர் சமானமாக வாழவும் அவர் ஆற்றிய செயல்கள் அளப்பில. ஓரிரு துறைகளில் அவருடன் நான் கலந்து பணியாற்ற வாய்ப்பு நேர்ந்த காலத்தில் அவரது பொறுப் பேற்றுச் செயலாற்றும் திறனை அறியும் வாய்ப்பினையும் பெற்றேன்."

## சோம. லெ

"பல்வேறு பொறுப்புக்களை ஏற்றதாலும் ஏராளமான குழுக்களில் உறுப்பினராயிருந்து தக்கவர் பலருடன் பழகியிருப்பதாலும், இயல்பாகவே எதையும் கூர்ந்து நோக்கும்

நுண்மாணுழைபுலம் உடையவராக இருப்பதாலும் ஆளும் திறமையும் அனுபவமும் செட்டியாரிடம் நிரம்பியுள்ளன. பார்வைக்கு வரும் பைல்களில் உயிரோட்டமான பகுதிகளைப் படித்துச் சிக்கெடுத்து விரைந்த முடிவு காண்பது இவருடைய பழக்கம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆட்சியாளர்கட்கு இவர் அவ்வப்போது சிரிய அறிவுரைகளை நல்கிவந்தார். இதனை அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் எம். இரத்தினசாமியும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லெக்ஷுமணசாமி முதலியாரும் 1959இல் சென்னை தாசப்பிரகாஷில் நடைபெற்ற விழாவொன்றிற் குறிப்பிட்டுப் பெரிதும் பாராட்டினர்.”

### பாலூர் கண்ணப்ப முதலியார்

“இவர் தாம் பயின்ற இருமொழிகளிலும் செறிந்து கிடக்கும் இனிய கருத்துக்களை எவர்க்கும் எடுத்துரைக்கும் ஆற்றல் சான்றவர். இத்தகைய பேச்சாற்றலைத் தமிழகத்தில் மட்டும் காட்டியவர் அல்லர்; கடல் கடந்து சென்றும் ஆங்காங்குள்ள நாடுகளில் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டிய ஏந்தலார் இவர்.”

### டி. ஆர். பஞ்சநதம் பிள்ளை

“உலகத்தில் பலர் பற்பல கொள்கைகளுக்காக வாழ்வர். புகழைக் குறித்தோ பதவியைக் குறித்தோ, செல்வத்தைக் குறித்தோ வேறு பல காரியங்களைக் குறித்தோ வாழ்வர். ஆனால் தமிழுக்காக வாழ்பவர் ஒருசிலரே. அவர்களுள் நமது செட்டியாரும் ஒருவர் என்றல் மிகையாகாது.”

### ந. சஞ்சீவி

“செந்தமிழ்க்காவலர் சிதம்பரநாதனார் கண்ணுக்கு இனியர்; கருத்துக்கும் இனியர்: கூரிய அறிவினர்; பாரிய பணியினர்; பல்லாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்து புகழ் பெற்ற பேராசிரியர்; இவர்கள் சில்லாண்டுகளிலேயே சட்ட மன்றத் தொண்டாற்றிச் சிறப்புப்பெற்றது தமிழ்ப்புலவர்

தலைநிமிர்விற்கு வழிகோலியது. தம் மாணவர்களை அமைச்சர்களாய்க் காணும் பேறு எல்லாருக்கும் வாய்ப்பதன்று. அவ்வரிய பெருமை நம் பேராசிரியர்க்கு வாய்த்தது. நாம் பெற்ற-நாடுபெற்ற நற்றமிழ்பெற்ற இது பெரும்பேறு. வாழ்க்கையில் பெரிது ஒழுக்கையும் கட்டுப்பாட்டையும் கண்ணெனப் போற்றும் பெரியார் டாக்டர் அவர்கள். சில நேரங்களில் கடுமையாய் நடப்பினும் பல நேரங்களில் கனிவாய் நடக்கும் அவர் தம் பண்பு எளிதில்மறத்தற்கு இயலாதது. ஆடவர் அவாவும் அழகு படைத்த அவர்கள் அரிவையரும் நாணும் பெண்மைச் சாயலும் பெற்றிருப்பது மறைமலையடிகள் திரு. வி. க. மரபுக்காகவே போலும்.''

கரு. முத்து. தி. சுந்தரம் செட்டியார்

''அரசியல் பிணக்கும் கிளர்ச்சியும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் ஏதேனும் ஒரு சிக்கலில் பலர் தடுக்குற்று விடுகின்றனர். எனினும் அறிஞர் சிதம்பரநாதன் அவர்கள் அத்தகைய இடர்ப்பாடுகளை உய்த்துணர்ந்து விலக்கி நீர்ச்சுழலில் சிக்காமல் தோணியைச் செலுத்துவது போன்று தமது நற்றமிழ்ப் பணியை நடுநிலை நின்று இடையறாது புரிந்து வருதல் அவர் திறமைக்குத் தக்க எடுத்துக் காட்டாகும். மொழிக் கிளர்ச்சியின்போது உணர்ச்சிப்பெருக்கால் மாணவர் கொதித்தெழுந்த போது அவர்களிற் பலரைச் சினமாற்றிச் செந்நெறிப் படுத்திய பெருமை பேராசிரியர் சிதம்பரநாதனாரைச் சேரும். மாணவர் இளமைத் துடிப்பால் நெறிகடக்க முற்படுகையில், 'கடிதோச்சி மெல்ல எறியும்' நற்பண்பைக் கடைப்பிடித்து அறிஞர் அவர்கள் தமது பெரும் பொறுப்பை இனிது நடத்திச் செல்லுதல் வியக்கத்தக்க தொன்றாகும்''

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

''மணிவிழாக் கொள்ளும் மாண்புசால் பெரியார்
அணியார் நூல்பல தணியாக் காதலின்
இருபெரு மொழிகளின் இயற்றி வள்ளுவர்
திருநெறி விளக்குஞ் செந்தமிழ்க் குரிசில்

வளவரே யாயினும் வரன்முறை வழுவின்
உளம்பொரு தவரை ஒல்லும் வகையான்
"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்" டெனல் தேர்ந்து
தகும்வகை தெருட்டுந் தகைமையர் பற்பலர்
தொகுமவை மகிழத் தோற்றப் பொலிவுடன்
சொற்பொழி வாற்றுந் தோன்றல் எதனையும்
பொற்புற முடிக்கும் புகழ்மிகு செம்மல்
நட்டார்க் கினியர் நகைமுக நயத்தர்
பட்டாங் கெதனையும் பகரும் பாவலர்
தண்டமிழ்க் காவலர் டாக்டர் எனுஞ்சீர்
கொண்டொளிர் சீர்த்தியர் குணசா கரனார்
சட்ட சபைதனில் தமிழ்மொழிக் கென்றும்
முட்டுநே ராவகை முயன்றுதொண் டாற்றித்
தமிழ்கா வலர்எனும் தகுநிலை நிலைநிறீஇ
அமிழ்தினு மினியநற் றமிழ்க்கணி செய்பவர்
செந்தமிழ்ச் செல்வராஞ் சிதம்பர நாதர்
பல்வளங் கொழிக்கப் பாரினிற் சிறந்து
பொலிக பொலிக பொலிக
மலிபுகழ்ச் சொக்கன் மாணருள் பெற்றே."

### இறுதி

இவ்வாறு பலருடைய புகழையும் பெற்று, மதுரைத் தியாகராயர் கல்லூரியில் முதல்வராக அமைந்து மணி விழாவுங் கொண்ட இவர் எவரும் எதிர்பாராவகையில் 22 - 11 - 67 இல் இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடிநீழலையடைந்தார். இவருடைய மறைவு செந்தமிழ் உலகத்தைத் திடுக்கிடச் செய்தது. இவர் மறைவால் உள்ளம் வருந்தாதார் எவருமிலர். பிறந்தோர் இறப்பது இயற்கையேயாயினும் இவர் இன்னும் பல்லாண்டிருந்து நற்றமிழுலகுக்கு நன்மைகள் பல புரிவாரென்றுஎதிர்பார்த்தனர்.

### இரங்கற்பா

இவர் காலமானதற்கு இரங்கிய சிலர் இரங்கற்பாக்கள் பாடினார்கள். அவற்றுள் இரண்டொன்றை அடியிற் காண்க.

**வை. நட்சனுமூர்த்தி எம். ஏ.**

அருவுருவாய் அன்புருவாய் அருங்கடவுள் போற்றியநின்
திருவுருவைக் காணவின்றித் திகைக்கின்றோம் மாணவர்கள்
திருப்பாதி ரிப்புலியூர் ஞானியரைப் போற்றியநீ
திருக்கயிலை ஞானியராய்த் திகழ்ந்திடவே சென்றனையோ.

**தி. மு. சங்கரலிங்கம்**

தண்டமிழோ டாங்கிலத்தில் தனிப்புலமை
பெற்றுயர்ந்த தகைசால் அண்ணல்
கொண்டவிர்பல் இளைஞருளம் உணர்ச்சியுற
அறிவுரைகள் கூறும் மேலோய்
மண்டலத்தோர்க் குயர்நலஞ்செய் சிதம்பரநா
தப்பெயர்கொள் மாண்போய் இந்நாள்
விண்டலத்தே குடிபுகுந்தாய் மண்ணகவாழ்
வதைவெறுத்தாய் விந்தை யீதே.

## இயற்றிய நூல்கள்

இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பலநூல்கள் எழுதி யுள்ளார். அவற்றுள் சில,

(க) மன்னுயிர்க்கன்பர்
(உ) தமிழ் காட்டும் உலகு
(௩) புக்கர் வாஷிங்டன்
(௪) வீட்டுத் திருமகள்
(௫) தமிழோசை
(௬) முன் பனிக்காலம்
(௭) உழைப்பால் உயர்ந்த ஒருவர்

என்பன முதலியவாம்.

## கக. ரா. ஸ்ரீ தேசிகன்

### தோற்றம்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வல்லம் என்னும் சிற்றூரில் இவர் 2-8-1901 இல் பிறந்தார்.

### கல்வி :

கல்வி கற்கத் தொடங்கிய இவர் பள்ளிக் கல்வியைக் கற்று முடித்த பிறகு கல்லூரிகளிற் சேர்ந்து பட்டப்படிப்பும் படித்துப் பட்டம் பெற்றார்.

### ஆசிரியப் பணி

மதுரையில் ஒரு கல்லூரியில் பணியாற்றத்தொடங்கினர். சில ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆங்கிலத்தை விடத் தமிழின்மீது மிகுந்த பற்றுக்கொண்டு தமிழ் நூல்களையும் நன்கு கற்றுச் சிறந்த அறிவு பெற்றார். வடமொழியையும் கற்று அம்மொழியிலுஞ் சிறந்த புலமை பெற்றார்.

### சமயமும் சங்கீதமும்

இவருக்கு இசைஞானம் இருந்தது. இவருடைய சமயம் வைணவம். ஆகவே வைணவப் பழக்கவழக்கங்களில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த இவர் நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்து அவைகளிற் சிறந்த திறமைபெற்றார். இவருடைய பெரிய தாயார் தொண்டரடிப் பொடியாழ்வாருடைய திருமாலைப் பாசுரங்களை மனமுருகிப் பாடிக்கொண்டே வைகுண்டபதவி பெற்றார். இதனை இவர் தம்முடைய நண்பர்களிடங் கூறி மகிழ்வதுண்டு. மதுரைக் கல்லூரியை அன்றிச் சோழவந்தான், சென்னை மாநில அரசர் கல்லூரி முதலியவைகளிலும் வேலைபார்த்து 1950

ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்ற பிறகு வைணவ சமய நூல்களை ஆராய்தல் கதை யெழுதுதல் கட்டுரை, யெழுதுதல் முதலியவைகளில் தம்முடைய காலத்தைச் செலவிட்டார்.

## துறவியைப் போன்ற வாழ்க்கை

இவர் இல்லறத்திலிருந்த போதிலும் துறவியைப் போலவே வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார். இல்லற வாழ்க்கையை மேற்கொண்டிருந்த போதிலும் பற்றற்ற நிலையில் இருக்கவேண்டுமென்பது பெரியோர்களுடைய முடிவு. ரா. ஸ்ரீ. இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வாழ்க்கை நடத்தினர்.

## இவருடைய மனப் பண்பு

இவர் பொருளினிடத்தில் அவாக்கொண்டு அதனைப் பற்றியிருக்கவில்லை நண்பர்களுக்கும் ஏழை எளியவர்கட்கும் தம்மால் இயன்ற அளவு பொருளுதவி செய்திருக்கிறார். பிறருக்கு உதவுவதே தம்முடைய கடமையென எண்ணினர். இதனால் தொல்லையேற்படுதலையும் இவர் ஒருபொருளாக மதிக்கவில்லை. விருந்தோம்புதல் முதலிய பண்புகளும் இவரிடம் சிறந்து விளங்கின.

## கடன்காரர்கள்

உலகில் மனிதராகப் பிறந்து வாழ்க்கை நடத்தும் ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் கடன் வாங்குவதும் திரும்பக்கொடுப்பதும் இயற்கை. சிலர் கடனைக்கொடுக்க இயலாதவர்களாகவும் விழிப்பதுண்டு. பொதுவாகக் கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனைக் கண்டு அஞ்சுவது இயற்கை. ஆனால் இவர் தம்மிடம் கடன்வாங்கியவர்களைக் கண்டு அஞ்சுவார். அஞ்சுவதற்குக் காரணம் கடன் வாங்கியவர்கள் கடனைக் கொடுக்கமுடியவில்லையே என்று மனம் வருந்துவார்களே என்பதுதான். இவரிடம் நூறு

ரூபாய் கடன்வாங்கிய நண்பர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்த போது அந்நண்பர் மிக வேண்டியவராக இருந்தும் இவர் அவரைப் பார்க்கப்போகவில்லை. போனால் அந்நண்பர் கடனைக் கொடுக்க முடியாமலிருப்பதுபற்றி வருந்துவாரே என்பதுதான்.

## மனிதன் இழுக்கும் வண்டி.

ரிக்ஷாவண்டி என்பது மனிதனால் இழுக்கப்படுவது. மனிதன் மாட்டைப்போல் வண்டியிழுப்பது கண்டு உளம் வருந்தும் சிலர் இந்த வண்டியில் ஏறுவதில்லை. ரா. ஸ்ரீயும் ரிக்ஷாவில் ஏறுவதில்லை என்னும் மனவுறுதியோடிருந்தார். ஒரு சமயத்தில் காலிற் புண் ஏற்பட்டு நடக்கமுடியாத நிலையில் இருந்தார். அச்சமயத்தில் தம்முடைய கொள்கையை மாற்றிக்கொண்டார். ரிக்ஷா இழுப்பவனுக்குத் திங்கள் ஊதியங் கொடுப்பதாகக்கூறி ஒருவனை ஏற்பாடு செய்து கொண்டார். சில நாட்கள் ரிக்ஷா இழுத்த அவன் இழுத்துக் கொண்டு போகுஞ் சமயங்களில் தன்னுடைய வறுமை நிலையையும் முறையிட்டுக்கொண்டே போவான். ஒருநாள் அந்த ரிக்ஷாக்காரன் இவரைப் பார்த்து, "நூறுரூபாய் கொடுங்கள், ரிக்ஷாவைச் சீர்செய்யவேண்டும். இப் பணத்தை திங்கள்தோறும் ஊதியத்தில் கழித்துக் கொள்ளலாம்" என்று சொன்னான். இவரும் அவன் கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டார். பணம் வாங்கிக்கொண்ட பின் ரிக்ஷாக்காரன் இரண்டொருநாள் வந்தான். பிறகு வரவில்லை. நண்பர் ஒருவர் இவரிடம் இதைப்பற்றிக் கேட்டபோது "அவன் எளியவன்; கடனாகக் கேட்காமல் இனமாகக் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேன்" என்று சொன்னார்.

## எலியிடத்தில் இரக்கம்

வாயில்லாச் சீவர்களிடத்திலும் இவர் மிகுந்த இரக்கம் உடையவராக இருந்தார். எலி ஒன்று இவருடைய புத்தகங் களுக்கு இடையே தனக்கு இடம் பிடித்துக் கொண்டு குடி

யிருந்தது. குடியிருப்பதற்கு வசதியாகச் சில புத்தகங்களைக் கடித்துவிட்டது. ஒருநாள் இவர் அப்புத்தகங்களை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டார். எலி மீண்டு வந்து பார்த்தது. தன்னுடைய இருப்பிடத்தைக்காணுமல் தயங்கித் தவித்தது. இதனைக் கூர்ந்து கவனித்த இவர் புத்தகங்களை முன்போல் வைத்து எலிக்கு அதனுடைய இருப்பிடத்தைக் கொடுத்துவிட்டார்.

## மனத் தூய்மை

இவர் மனத் தூய்மையிலுஞ் சிறந்து விளங்கினுர். ஒரு சமயம் இவர் ஒரு பரீட்சைக்கு அதிகாரியாக இருந்தார். அச்சமயம் இவருடைய மகன் அதே பரீட்சைக்கு எழுதியிருந்தான். இவருடைய மகனின் விடைத்தாள்கள் வேறொரு பரீட்சாதிகாரியிடஞ் சென்றிருந்தன. அப்பரீட்சாதிகாரியின் நண்பர் மக்கள் இரண்டுபேர் அதே பரீட்சையில் எழுதியிருந்தனர். அப்பரீட்சாதிகாரி ரா ஸ்ரீ தேசிகனிடம் வந்து அம் மாணவர்கள் இருவருக்கும் வேண்டிய மதிப்பெண்கள் கொடுத்துத் தேர்ச்சி பெறச் செய்தால் தாம் இவருடைய மகனைக் கவனித்துக் கொள்ளவதாகக் கூறினுர். இதனைக் கேட்ட இவர், "என்னுடைய மகன் தேர்ச்சியடையாவிட்டாலும் குற்றமில்லை. என்னுல் மனச் சாட்சிக்கு மாறுபாடாக எதுவுஞ் செய்யமுடியாது" என்று கூறி அனுப்பிவிட்டார்.

## தமிழ்க் காதல்

நாளடைவில் இவருக்குத் தமிழிடத்தில் பற்று மிகுதியாயிற்று. தாம் ஆங்கிலத்தில் எழுதிவைத்திருந்த கதை கட்டுரைகளைக் கிழித்தெறிந்துவிட்டார். ரா. ஸ்ரீயைப்பற்றி பி. ஸ்ரீ பின்வருமாறு கூறுகிறுர்.

## ரா. ஸ்ரீயும் பி. ஸ்ரீயும்

"பேர்பெற்ற தமிழ் எழுத்தாளரில் ஒருவரும் மும்மொழிப் புலமை வாய்ந்த மூதறிஞருமான உயர்திரு

ஸ்ரீ தேசிகனை நான் நீண்டகாலமாக அறிந்திருக்கிறேன். இப்பேரறிஞரைப் பலவேறு கருத்து வேற்றுமைகளுக் கிடையே தோழராக்கிக்கொண்டு வாழும் பேறும் எனக்கு வாய்த்திருந்தது. இவரது தமிழ்ப்பெருங் காதலும் வடமொழிப் பண்பாடும் ஆழ்ந்தகன்ற ஆங்கிலப்புலமையும் என்னைப் பெரிதுங் கவர்ந்தன. எங்களுக்கிடையே கடுமையான வாதங்களும் கருத்துப்போராட்டங்களும் நடைபெற்ற துண்டு. எனினும் நாங்கள் கருத்தொருமித்துச் சிரத்தை யெடுத்து கூடிய இலக்கியப் பணிகளில் ஒருமுகமாய்க் கலந்து உழைக்கத்தக்க சில வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டோம். ......கள்ளம் போனால் உள்ளது காணும் என்ற நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்திய இவர் மனத்தில் தோன்றியதை ஒளிவுமறைவு இல்லாமல் சொல்லிவிடுவார். எதிராளிக்கு அது கசப்பாக இருக்குமே என்ற எண்ணம் இவருக்கு வருவதில்லை. இந் நிலையில் அக்கிரமத்துக்கும் அடாத செயல்களுக்கும் இடங்கொடுக்கமாட்டார். இதே மனவுறுதி இலக்கியக் கொள்கை விஷயத்திலும் மேற் கொள்ளப்பட்டதால் இவருக்கும் எனக்கும் சில சமயங்களில் கடுமையான அபிப்பிராயப் பூசல்கள் ஏற்பட்டதும் உண்டு. ஆனால் அக்கருத்துப் போராட்டங்கள் பெரும்பாலும் அன்புப் போராட்டங்களாகவே நிகழ்ந்தன. இதற்கு இவருடைய உள்ளத் தூய்மை ஒரு முக்கியமான காரணமாகும்.''

## இயற்றிய நூல்கள்

(க) சிலைக்கு எதிரில் (சிறுகதைத் தொகுப்பு நூல்.)
(உ) மாறிய நிலைகள் (ஆங்கிலக்கதை மொழிபெயர்ப்பு.)
(ந) குழந்தை ராமு (ஒரு சிறு நாடகம்.)
(ச) மேனாட்டுத் தத்துவம் (தத்துவ விமர்சனம்.)
(ரு) கற்பனை உலகம் (ஒரு கருத்தோவியம்.)
(சு) கற்பனைச் சிறகு (ஓர் எழுத்தோவியம்.)
(எ) கவிதைக் கலை (ஆங்கிலக் கவிதைபற்றிய திறனாய்வு.)

(அ) மாயாசந்நியாசி (ஆங்கில நூல் மொழிபெயர்ப்பு.)
(கூ) ஞானச் சுடர் (அரவிந்தர் கொள்கைகள்.)
(கo) அருட் சோலை (ஆன்மீக சிந்தனைத் தொகுதி.)

சிலப்பதிகாரத்தையும் திருக்குறளையும் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

**இறுதி**

இப்படிப் பலநூல் எழுதிச் சிறப்புப் பெற்றிருந்த இவர் 20-2-1967 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்து வைகுண்டமடைந்தார்.

—

## கசு. துரைசாமி ஐயங்கார்—வடுவூர்

சோழவள நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே இராச மன்னார் குடிக்கு மேற்கில் 10 மைல் தொலைவில் உள்ள வடுவூரில் கிருட்டிண ஐயங்கார் என்பவருடைய புதல்வராக இவர் 1880 ஆம் ஆண்டிற் பிறந்தார். பி. ஏ. வரையில் கல்வி கற்றார். பல ஆண்டுகள் அரசாங்கத்தில் வேலை பார்த்தார். இவருடைய உள்ளம் கற்பனைத் துறையில் சென்றது. அதன் பயனாக நவினங்களை எழுதத் தொடங்கினார். இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவருடைய நாவல்கள் புகழ்பெற்று விளங்கின. இவருடைய பெயரும் திக்கெலாம் பரவியது. மக்கள் இவருடைய கட்டுக் கதைகளைப் படித்து மகிழ்ந்தனர்.

நகைச்சுவைப் போக்கைக் கையாளுவதில் இவர் மிக வல்லவராக விளங்கினார். மேனகா, கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார், பாலாமணி அல்லது பக்காத் திருடன் என்னும் நாவல்கள் திரைப்படமாகவும் வந்துள்ளன.

இவர் எழுதிய நவினங்கள் பல. அவைகளுள் புகழ் பெற்றவை மாயாவிநோதப் பரதேசி, கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார், பாலாமணி அல்லது பக்காத் திருடன், மதனகல்யாணி, மேனகா, சௌந்தரகோகிலம் முதலியன.

1919 ஆம் ஆண்டு முதல் சில ஆண்டுகள் 'மனோரஞ்சனி' என்னும் பெயரோடு திங்கள் வெளியீடு ஒன்றை நடத்தினார். மாணிக்கவாசகர் நாடகம் என்னும் நாடகம் ஒன்றையும் எழுதினார். அது செய்யுளாகவும் உரைநடையாகவும் அமைந்தது. "திலோத்தமா" என்னும் முழுச் செய்யுள் நூல் ஒன்றையும் இயற்றினார். "மறைந்த

இணைப்புகள்'' என்னும் பெயருடன் நீண்ட ஆராய்ச்சி நூல் ஒன்றையும் ஆங்கிலத்தில் எழுதி வெளிப்படுத்தினர்.

நல்ல புகழுடன் விளங்கியிருந்த இவர் 1942 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்க்கைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்னும் உலக நியதிக்கேற்பப் பழைய நவீனங்களெல்லாம் இந்நாளில் மறைந்து காலப் போக்கிற்கேற்றவாறு புதுப்புது நவீனங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இறவாப் புகழ்பெறும் உயரிய நூல்கள் இவ்வுலகில் ஒருசிலவே யாம்.

---

# கரு. சுப்பிரமணிய பாரதியார்-அ

(வரகவி)

செந்தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அலேகரை என்னுஞ் சிற்றூரில் அய்யாத்துரை ஐயர் என்பவருடைய புதல்வராக 1880 ஆம் ஆண்டில் இவர் தோன்றினர். முசிரியிலும் திருச்சிராப்பள்ளியிலும் உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி பயின்றார். ஆங்கிலத்தில் நல்ல அறிவு பெற்றார். தமிழ் மொழியையும் நன்கு கற்றார் தமிழ் மொழியில் சிறந்த புலமை பெறவேண்டும் என்னும் நோக்கம் இவருக்கிருந்தபடியால் தமிழ் நூல்களையும் நனகு கற்றார்.

தம்முடைய பதினாறும் ஆண்டில் சிவானந்தசாகர யோகீசுவரர் என்பவருடைய மகளாகிய தேவகுஞ்சரி என்னும் மாதைத் திருமணஞ் செய்துகொண்டார். சிவானந்தசாகர யோகீசுரர் சிறந்த தமிழறிஞர். ஆகவே அவரிடம் தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்றார். தமிழச் செய்யுளை எளிதாகப் பாடுந் தன்மை இவருக்கு அமைந்திருந்தபடியால் வரகவி என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றார்.

வாழ்க்கையை வளம்பெற நடத்த வேண்டியதன் பொருட்டு வேலே தேடினர். சென்னையை அடைந்து சுதேசமித்திரன் அலுவலகத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றினர். அந்நாளில் அமரகவி சுப்பிரமணிய பாரதியாரும் சுதேசமித்திரனில் பணிபுரிந்துகொண்டிருந்தார். இவர் பாரதியாருடைய நட்பையும் பெற்று மூன்றாண்டுகள் வரை வேலேபார்த்தார்.

நவினங்களை எழுதவேண்டும் என்னும் எண்ணம் இவருக்குண்டாகியது. சடாவல்லவர், விசயபாஸ்கரன், சுந்தரவல்லி என்னும் நவினங்களை இயற்றினர். அந்நாளில் புதினங்கட்கு அவ்வளவு மதிப்பில்லேயாயினும் பலரும் இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டினர்.

நாட்டிலே தெய்வபக்தி வளரவேண்டும்; இளமையி லேயே தெய்வபக்தியை மேற்கொண்டால் பின்னளில் வாழ்க்கை நலமுறும் என்று எண்ணிய இவர் சிறுவர்கள் எளிதாகப் படித்துணரத்தக்க புராணேதிகாசக் கதைகளை எழுதத்தொடங்கினர். ஆத்திகமத உபாக்கியானம், மாருதி விசயம், கோதண்ட விசயம், பாலபக்த விசயம், சிறியவர் பெரியபுராணம் முதலிய நூல்களை எழுதி வெளிப் படுத்தினர். இவற்றைச் சிறியவர்களுக்காகவே எழுதின ராயினும் இவற்றைப் பெரியவர்களும் படித்து நல்ல பயன் பெற்றனர். 1908 ஆம் ஆண்டில் வடமொழிப் பாகவதம் முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். குழந்தைகளின் பொருட்டுப் 'பாலவிநோதினி' என்னும் திங்கள் வெளியீட்டை நல்ல முறையில் நீண்டநாள் நடத்தி னர். வள்ளிநாயகி, பரதன், பாதுகா பட்டாபிஷேகம் முதலிய நாடகங்களையும் எழுதிக்கொடுத்து மேடைகளில் நடிக்கச் செய்தார். திருச்செந்திற்பதிகம் என்னும் பதிகத்தைத் திருச்செந்தூர் முருகன்மீது இயற்றினர். பெரியார் ஒருவ ருடைய வரலாற்றைச் சுயம்பிரகாச விசயம் என்னும் பெயரோடு எழுதினர்.

"கங்கை புனைந்த சங்கரன் கோயில்
கொண்டருள் புரியும் திண்டிறல் வாய்ந்த
கொல்லிமா மலையின் எல்லைசேர்ந் திலகும்
தத்த கிரியில் வித்தகக் குகையில்
வாசமா யமர்ந்து நேசமா யடையும்
தொண்டர் மனக்குறை விண்டிடத் தூய
வெண்ணி றளிக்குந் தண்ணார் கருணைப்
புயலே உலக மயலே இலாத
அவதூத நிலையில் சிவபோகம் அருந்த
ஏத மிலதெனும் வேதியர் மரபில்
தோன்றிய மணியே சான்றோர்க் கணியே."

என்பது அந்நூலில் அப்பெரியார்மீது பாடிய அகவற்பாவின் ஒரு பகுதியாகும்.

எழுபத்தைந்தாண்டு வரையில் வாழ்ந்திருந்த இவர் 1955 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

## கக. கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார்

### தோற்றம்

கட்டபொம்மு ஊமைத்துரையைப் பற்றிக் கேள்விப் படாதவர்கள் நந்தமிழ் நாட்டிலே யாரும் இருக்கமாட்டார்கள். ஆங்கிலேயரின் ஆட்சியை நம்நாட்டிலிருந்து ஒழிக்க முற்பட்ட முதலாவது மாபெருவீரன் வீரபாண்டியக் கட்டபொம்மனே. கட்டபொம்மனுடைய பெயரைக் கேட்டால் ஆங்கிலேயர்கள் நடுநடுங்குவார்கள். அத்தகைய மாபெருவீரன் வாழ்ந்திருந்த பாஞ்சாலங் குறிச்சியின் பெயரைக் கேட்கவே அஞ்சிய வெள்ளையர்கள் அவ்வூரைத் தரைமட்டமாக்கினார்கள். அத்தகைய வீரனின் வழிமுறையில் தோன்றியவர் தாம் மாபெரும் புலவராகிய கவிராசபண்டித செகவீர பாண்டியனார். பாஞ்சாலங்குறிச்சிநகர் அழித்தொழிக்கப்பட்ட பின் கட்டபொம்மனுடைய குலத்தினரும் வழிமுறையினரும் பலவூர்களிலுஞ் சிதறிக் குடியேறினார்கள். மணியாட்சி என்னும் ஊர்க்கு வடகிழக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள ஒட்டநத்தம் என்னுஞ் சிற்றூரிலே வீரபாண்டியக் கட்ட பொம்மனின் மரபினராகிய பெருமாள்சாமி என்பவர் சிறந்து விளங்கியிருந்தார். பெருமாள்சாமியினுடைய இல்லக் கிழத்தியாரின் பெயர் ஆவுடையம்மை. இவ்விருவருக்குஞ் செல்வத் திருமகனாராகக் கவிராச பண்டித செகவீர பாண்டியனார் 1886 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பத்தாம் நாள் பிறந்தார்.

### கல்வி

செகவீரபாண்டியனார் தம்முடைய மூன்றாவது வயதி லேயே தந்தையாரை யிழந்தார். தாயினுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவராக வளர்ந்தார். தம்முடைய ஐந்தாவது வயதில் பள்ளியிற் சேர்ந்தார். பன்னிரண்டாம் வயது வரையில் பள்ளியில் படித்தார். பள்ளியிற் படித்த

காலத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன். மூதுரை, திவாகரம், நிகண்டு முதலிய நூல்களைக் கற்றார். பிறகு வாணிகத்துறையில் ஈடுபட்டார். ஆயினும் இவருடைய உள்ளம் வாணிகத்துறையில் ஈடுபடாமல் கல்வித்துறையில் ஈடுபட்டது. நற்றமிழ் நூல்கள் பலவற்றையும் நாளுந் தாமே கற்றார். இதனால் இவர் செந்தமிழ் மொழியின் மீதும் சைவசமயத்தின் மீதும் பற்றுக் கொண்டார். மெய்யறிவு நூல்களையுங் கற்றுணர வேண்டும் என்னும் விருப்பமும் இவருக்கு உண்டாகியிருந்தது.

## அறிவு நூல் கற்றல்

அந்நாளில் செட்டிமார் நாட்டில் அரிமளம் என்னும் ஊரில் சிவானந்த சுவாமிகள் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் தெய்வத்திருவருளும் மெய்யறிவுங் கைவரப் பெற்றவர். அப்பெரியார் ஒருசமயம் ஒட்டநத்தத்திற்கு வந்தார். துறவிகள்மாட்டுப் பேரன்புகொண்டிருந்த பாண்டியனார் அப்பெரியாரைக் கண்டு போற்றி வணங்கினார். அவர் இவருடைய அடக்கம் அன்பு அறிவு தன்மை முதலியவைகளைக் கண்டு இவரிடத்தில் அருள்கொண்டார். "நீ எம்முடைய திருமடத்திற்கு வா" என்று கூறிச் சென்றார். பாண்டியனார் தம்முடைய தாயாரின் உடன்பாடு பெற்றுக் கொண்டு அரிமளத்திற்குச் சென்றார். அங்கே துறவுக் கோலம் பூண்டு ஓராண்டு வரையில் தங்கி நாநாசீவ வாதக் கட்டளை, கீதாசாரத்தாலாட்டு, சசிவன்னபோதம், மகாராசத் துறவு, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம், ஈசுரகீதை, பகவற்கீதை, பிரம கீதை, ஞானவாசிட்டம், பஞ்சதசி முதலிய வேதாந்த நூல்களைப் பாடங் கேட்டார். இவர் துறவியாகவே காலங் கழிக்க விரும்பினார். ஆனால் தாயார் சென்று வற்புறுத்தி யழைத்ததன்பேரில் ஊருக்குத் திரும்பினார்.

## இலக்கண இலக்கியங் கற்றல்

மெய்யறிவு நூல்களைக் கற்ற இவர் இலக்கண இலக்கியங் களையும் ஓதியுணர விரும்பினார். தம்முடைய நிலபுலங்களை

விற்றார். இலக்கண முத்துக்கவிராயர் என்னும் புலவரிடத்தில் ஓராண்டுக்காலம் இலக்கண இலக்கியங்கள் கற்றார். கல்வியில் சிறந்த புலமையை யடைந்தார். கேட்பார் உளங் கொளக்கூறுஞ் சொல்லாற்றலும் இவரிடத்தில் நன்கு அமைந்திருந்தது. அதனால் இவரிடத்தில் பலபேர் பாடங் கேட்டுக் கல்வி கற்கலாயினர்.

### புராணச் சொற்பொழிவுகள்

நாளடைவில் திருவிளையாடற்புராணம், பெரிய புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களைப் புராணச் சொற்பொழிவு செய்யலானார். இவருடைய சொற்பொழிவு கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியுந் தன்மையுடையதாக இருந்தது. அதனால் இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு மக்கள் மிகுதியாகக் கூடலாயினர். இவருடைய புகழ் யாண்டும் பரவியது. சொற்பொழிவுகள் நூல் வடிவமாகாமல் உடனுக்குடன் மறைந்து போவது இவருடைய உள்ளத்தை வருத்தியது. சொற்பொழிவு காட்டிலே நிலைத்திருக்காது. நூல்கள்தாம் நிலைபெற்று நிற்கக்கூடியன என்பதை நன்குணர்ந்த இவர் நூல்கள் எழுதுந் துறையில் ஈடுபட்டார்.

### மணமும் மக்கட்பேறும்

இல்லற வாழ்க்கையை இனிது நடத்துதற்கு வெள்ளைத் தாய் என்னும் பெண்மணியை மணம் புரிந்தார். மக்கட் செல்வங்களும் உண்டாயின. வெள்ளைத்தாம் கல்வியறிவிற் சிறந்து வெள்ளைக்கலை மடந்தையாகவே விளங்கினார்.

### தூத்துக்குடி சேர்தல்

இவர் தம்முடைய பணிகளுக்குத் தூத்துக்குடியே சிறந்த இடமெனத் தேர்ந்து அங்குக் குடியேறினார்.

## திருக்குறட் குமரேச வெண்பா

திருக்குறளின் குறள் வெண்பாக்கட்குப் பலபேர் அதிகாரத்திற்கு ஒரு குறளைத் தேர்ந்தெடுத்து அதற்குத் தக்க புராணக்கதை முதலியவைகளை முன்னிரண்டடிகளில் அமைத்துக் குறள்வெண்பாக்களை நேரிசை வெண்பாக்களாக்கி நூல்கள செய்துள்ளனர். சோமேசர் முதுமொழி வெண்பா, முதுமொழிமேல் வைப்பு, முருகேசர் வெண்பா, வள்ளுவர் நேரிசை, தினகர வெண்பா முதலிய நூல்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவை. ஆனால் யாரும் திருக்குறளின் 1330 குறள் வெண்பாக்கட்குங் கதைகளமைத்து நூல் செய்யவில்லை. இவர் அக்குறையைப் போக்கி 1330 குறள்களுக்குங் கதைகள் அமைக்கவேண்டுமென்று முடிவுசெய்து புராணங்கள், இதிகாசங்கள், வரலாறுகள் முதலிய கணக்கற்ற நூல்களை ஆராய்ந்து 1330 குறள்வெண்பாக்கட்குங் கதைகளமைத்து முடித்தார். இவருக்கும் இவருடைய முன்னோர்கட்கும் வழிபடு கடவுள் முருகக்கடவுளேயாதலின் அக்கடவுளின் பெயர்களில் ஒன்றாகிய குமரேசன் என்பதை இடையிலமைத்து விளியாக்கித் திருக்குறட் குமரேச வெண்பா என்னும் பெயரமைத்து நூலை முடித்தார்.

"உள்ள உரத்தால் உதயணன் சாணக்கன்
கொள்ளநின்றார் சீரேன் குமரேசா—தள்ளா
உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு"

(அதி-60, ஊக்கமுடைமை—10.)

அன்று மடியூர்ந்த ஆத்திரே யன்குடியின்
குன்றிநின்ற தென்னே குமரேசா—நன்றும்
குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். (அதி-61, மடியின்மை—1.)

கேடுற்றான் முன்னம் இரிவன் மடிமறவி
கூடியதால் என்னே குமரேசா—கோடும்
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன் (அதி-61, மடியின்மை - 5.

என்பன நூலின் சிலபாடல்கள். நூல் முழுவதும் இவ்வாறே அமைக்கப்பட்டுள்ளன. சில குறள்கள் இரண்டு மூன்று கதைகளையுங் கொண்டுள்ளன.

மிகு முயற்சியின்மீது நூலை இயற்றி முடித்தவர், அதற்கு விரிவான உரையுங் கதையும் எழுதித் திங்கள் தோறும் பகுதி பகுதியாக வெளிப்படுத்தினர். மக்கட்கு நூலும் உரையும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கின. அறிஞர்கள் பலரும் நூலையும் உரையையும் புகழ்ந்து பாராட்டுரைகள் பகர்ந்தனர். முதலில் உரையைச் சுருக்கமாக எழுதினர். விரிவாக எழுதுதல் பயனளிக்குமா என்று எண்ணமிட்டார். இவர் சிறந்த பேரறிவாளராகத் திகழ்தலை யறிந்த அடியேன் தூத்துக்குடி சென்று இவரைக் கண்டேன். சிலநாள் உடன் தங்கினேன். என்னிடம் மிகுந்த அன்பும் ஆதரவுங் காட்டினர். அதுமுதல் காலமாகும்வரை ஏறக்குறைய முப்பதாண்டுக்காலம் இருவரும் நட்புடைய வர்களாய் நெருங்கிப் பழகினோம். எனைக் காணும்போ தெல்லாம் "திருக்குறட் குமரேச வெண்பா எவ்வாறுள்ளது? இன்னும் விரித்தெழுதலாமா? அவ்வாறு எழுதினல் படிப்பவர்கள் வெறுப்படையாமல் படிப்பார்களா?" என்று என்னிடம் உசாவிக்கொண்டேயிருந்தார். அடியேனும் "நூலும் உரையும் நன்ருக உள்ளன. விரிவுரை எவ்வளவு விரிந்தாலும் விரியட்டும்; படிப்பவர்கள் வெறுப்படைய மாட்டார்கள்; விருப்புடனேயே படிப்பார்கள். குமரேச வெண்பா தமிழ் மொழியில் பெரிய நூலாகத் திகழும்" என்று ஊக்கப்படுத்தி வந்தேன். அடியேன் கூறிய உரை களும் திருக்குறட் குமரேச வெண்பா மிக விரிவடைவதற்குக் காரணமாயின. இடையிடையே சமயங் கிடைக்கும்போ தெல்லாம் பல நூல்களையும் புகுத்தி உரையை விரிவுபடுத்தி வந்த படியினாலேதான் இன்று திருக்குறட் குமரேச வெண்பா ஈடும் எடுப்புமற்ற பெருநூலாக ஏறக்குறைய ஐயாயிரம் பக்கங்களையுடையதாகத் திகழ்கிறது. நூலுக்கு நல்ல வரவேற்பிருத்தலையறிந்த இவர் மீண்டும் மீண்டும்

விரிவாகவும் திங்களிதழாகவும் தம்முடைய இறுதிக்காலம் வரையில் வெளிப்படுத்தலானார்.

### பல நூல்கள்

பாண்டியனார் குமரேச வெண்பா ஒரு நூலோடு நின்று விடவில்லை. பாஞ்சாலங்குறிச்சியின் வரலாற்றைத் தக்க சான்றுகளோடு உரைநடையில் மிக விரிவாக எழுதி இரண்டு பெரிய புத்தகங்களாக வெளியிட்டார். இவ்வாறெழுதி வெளியிடப்பட்ட நூலின் பெயர் பாஞ்சாலங்குறிச்சி வீரச் சரித்திரம் என்பது. இவ்வரலாற்று நூல் பிற வரலாற்று நூல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இதனையே செய்யுளாகவும் வீரபாண்டியம் என்னும் பெயரோடு 3811 பாடல்களாகப் பாடியுள்ளார்.

### மதுரையில் குடியேறல்

பாண்டியனார் தூத்துக்குடி வாசத்தைவிட்டு மதுரைக்கு வந்தார். மேலமாசி வீதியில் 127 ஆம் எண்ணுள்ள இல்லத்தில் தங்கினார். இறுதிக்காலம் வரை அவ்விடமே வாழ்ந்தார். திருவள்ளுவரிடத்தில் தாம் கொண்ட அன்பின் அறிகுறியாகத் தம்முடைய இருப்பிடத்திற்குத் திருவள்ளுவர் நிலையம் என்று பெயர் சூட்டினார். தாம் நிறுவிய அச்சகத்திற்கு வாசுகி அச்சகம் என்று திருவள்ளுவரின் இல்லக் கிழத்தியாருடைய பெயரை யமைத்தார். கம்பராமாயணச் சொற்பொழிவிற் றேர்ச்சி பெற்று விளங்கிய இவர் கம்பராமாயணச் சிறப்புக்களை யெல்லாம் கம்பன் கலைநிலை யென்னும் பெயரோடு பல புத்தகங்களாக எழுதி வெளிப்படுத்தினார். அறநூல் ஒன்றைத் தரும் தீபிகையென்னும் பெயரோடு எழுதி அதற்குச் சிறந்த விரிவுரையையுந் தாமே இயற்றினார்.

> தேக முயற்சி மனமுயற்சி செய்யபுத்தி
> யோக முயற்சியென உள்ளனகாண்—வாகையுற
> ஒன்றினென்று மேலா யுயர்ந்து பெரும்பலனை
> நன்று பயக்கும் நயந்து (அதி—28, தன்னம்பிக்கை - அ.)

அழியாத இன்பம் அடைய விரும்பின்
ஒழியா தருளை யுறுக—வழியாதும்
புன்மை புகாமல் புரந்து புனிதமுடன்
நன்மை புரிக நயந்து (அதி—33, நீர்மை - ௪0.)

நினைவால் மனிதன் நெடிது நிலாவி
நனவால் மிகவும் நடந்து—தினமுந்தன்
வாழ்வை நடத்தி வருகின்றான் வந்தமைந்த
சூழ்வின் படியே தொடர்ந்து (அதி—38, நினைவு - 2.)

என்பன அந்நூலின் சில பாடல்கள்.

## தனிப் பாடல்கள்

நூல்கள் பல இயற்றியதோடு அமையாமல் வாழ்வில் தொடர்புள்ளதாகிய தனிப் பாடல்களையும் இவர் செய்துள்ளார்.

## ஆசிரியர்மீது இரங்கற்பா

இவருடைய ஆசிரியராகிய இலக்கண முத்தையா 5-6-1912 இல் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடிநீழலை யடைந்தார். அப்பொழுது உள்ளமிரங்கிய இவர்,

''ஆதரவாய்க் கற்பிக்கும் அருள தெங்கே
ஐயாவென் றெனையழைக்கும் அருமை எங்கே
கோதகலப் புகல்தருநன் மொழிகள் எங்கே
கொவ்வையெனக் கனிந்தகுரு மணிவாய் எங்கே
பூதரம்போல் அசையாத புலமை எங்கே
பொய்யாமை முதலாய குணங்கள் எங்கே
ஆதிபரன் அடிமலர்க்கே உள்ளம் தந்த
ஐயனே இலக்கணமுத் தறிஞர் வேந்தே''

என்பது முதலிய பதினொரு பாடல்களைப் பாடினார்.

## காந்தியடிகள்மீது இரங்கற்பா

1948 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முப்பதாம் நாள் மாலை டில்லியில் தெய்வவழிபாட்டிற்குச் செல்லும்போது அறிவிலி யொருவன் காந்தியடிகளைச் சுட்டு வீழ்த்தினன். அப்போது உலகம் கலங்கிப் பதறியது. சிலர் அதிர்ச்சி தாங்காமல் மாண்டும் போனர்கள். மிகுந்த கலக்கத்தை யடைந்த இவர்,

காந்தியெனும் பெயரோடு கதிரவன்போல்
உலகமெல்லாங் கனிந்து காணச்
சாந்தியொளி வீசியெங்கும் தண்ணளியே
புரிந்துவந்த தரும மூர்த்தி
மாந்தரினம் மறுகியழ மன்னுயிரெல்
லாம்கதற வானி லேறிப்
போந்தனையே இனியுனது புனிதமொழி
கேட்பதென்றோ புகல்வாய் அந்தோ. (௧)

தன்னுயிர்நேர் போனலும் தான்பிறர்க்குத்
துயர்செய்தல் தவறும் என்று
மன்னுயிர்க்குத் தெளிவாகக் கருணைவழி
போதித்து மதிமுன் காட்டிப்
பொன்னுயிர்க்கும் மொழிகளினல் புதியஒளி
செய்துவந்தாய் புனித னை
உன்னுயிர்க்கும் இவ்வாறோர் ஊறுவர
நேர்ந்ததே ஊழ்தான் என்னே. (௨)

என்பன முதலிய ஆறு பாடல்களால் இரங்கற்பாக்கள் பாடினர்.

## பல்வகைத் தனிப்பாடல்கள்

இவருடைய திருக்குறட் குமரேச வெண்பாவின் கதைகளில் சிலவற்றை ஒருவர் இவருடைய உடன்பாடு பெருமல் தாமெடுத்துக் கையாண்டார் அப்பொழுது,

"மலைச்சாரல் வனம்முதலாத் தனிவழியே
வருவாரை வழிம றித்துப்
புலைச்சோரர் பொருள்கவர்வார் பொல்லாதார்
எனப்புகல்வார் புலக்கண் இன்றிக்
கலைச்சோரம் புரிந்துசிலர் களவாகப்
பிறர்நூலுட் பலக வர்ந்து
நிலைச்சோரம் செய்கின்ருர் நெடுஞ் சோரர்
இவர்க்குநிகர் நிலத்தில் யாரே ?"

என்று பாடினர்.

ஓர் எழுத்தாளர் தப்புந் தவறுமாக எழுதுதலை மேற்கொண்டிருந்தார். அதனைப் பார்த்த இவர்,

"எழுத்தாளர் எனஎழுவார் எழுதும்நிலை
எதிர்அறியார் எழுதி ஏதோ
முழுத்தாளுங் கரியாக்கி மூதுலகில்
வெளியாக்கி முயன்று கற்ற
பழுத்தபெரும் புலவரினும் தாம்பெரியர்
எனச்செருக்கிப் பழுது கூறிக்
கழுத்தாழும் தெரியாமல் காலாழும்
கண்டுநிற்பார் கருமம் என்னே"

என்று பாடினர்.

சில ஆண்டுகட்கு முன்வரை பல பத்திரிகைகளிலும் போட்டிப் பந்தயம் என்னும் பொல்லாத புலைச் சூதாட்டம் நடத்தலைக் கண்டு மனம் வருந்தியபோது,

"போட்டியென்னும் பொல்லாத புலைச்சூதை
எவ்வழியும் பொறித்து நீட்டிக்
காட்டிலுறும் விலங்குகளைக் கவர்கின்ற
வலைகளெனக் கனமா நாட்டி
நீட்டியெழு பொருள்நசையை விசையாக
எவரிடமும் நேரே ஊட்டி
நாட்டிலொரு பகல்கொள்ளை நவமாக
இந்நாளில் நடப்ப தென்னே ?"

என்று பாடினர்.

**இவருடைய சிறப்பியல்பு**

இவர் தம்முடைய சொந்த முயற்சியினாலே தான் முன்னுக்கு வந்தார். தம்முள்ளத்தில் உண்மையெனத் தோன்றியதை வெளிப்படுத்தியே தீருவார். பொருளின் பொருட்டு எவரிடமும் சென்று கேட்கமாட்டார். எண்ப தாண்டுகட்கும் மேலாக வாழ்ந்த இவர் நோய்நொடி முதலியன இல்லாமல் நல்லுடலுடையவராகவே திகழ்ந்தார். உலகம் இவருடைய பெருமை முழுதும் உணர்ந்து பாராட்டத் தவறிவிட்டது. அதற்குக் காரணம் இவர் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதில் நாட்டமில்லாதவ ராய் ஒதுங்கி வாழ்ந்தமையேயாம். ஆயினும் சிலர் இவருடைய தகுதியை அறிந்து பாராட்டி உதவியும் புரிந்துள்ளனர். இவருக்கு நன்மதிப்புத் தரவேண்டுமென்று எண்ணிய தமிழக அரசு மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக இவரைத் தேர்ந்தெடுத்தது. இவர் தம்முடைய நூலை வெளியிடுதற்கு யாரிடமும் பொருளுதவியைக் கேட்டதில்லை. தம்முடைய நூலை வெளியிடுமாறு கொடுத்ததுமில்லை. ஆயினும் சீரிய அறிவு நலம்படைத்த இவருடைய வாழ்க்கை என்றுஞ் சிறப்பாகத் தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. உலகம் தக்கவர்களைத் தக்க காலத்தில் பாராட்டிப் போற்றுவதில்லை. அவர்கள் மாண்டொழிந்த பிறகே அவர்களுடைய பெருமையை உணர்ந்துகொண்டு பாராட்டத் தொடங்குகிறது.

**இறுதி**

11-6-1967 ஆம் நாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மகனுடைய திருமணம் நிகழ்ந்தது. அத்திருமணத் திற்குச் சென்று இவர் மணமக்களை வாழ்த்தினர். 82 வயதை யடைந்த இவர் 17-6-1967 ஆம் நாளன்று ஒரு நூலின் அச்சு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். சிறிது நெஞ்சுவலி ஏற்பட்டது. மருத்துவர்களிடமே செல்லாத இவர் அன்று மகனுடைய கட்டாயத்தின்மீது மருத்துவ ரிடஞ்சென்று மீண்டார். உறங்குவதற்குச் சென்றார். அவருடைய உறக்கம் என்றும் விழிக்காத பேருறக்கமாகி

விட்டது. நந்தமிழுலகம் ஒரு சிரிய செந்தமிழ்ச் செல்வத்தை யிழந்தது. இவருடைய மறைவு குறித்து வருந்திய இவருடைய அன்பர் பலவான்குடி திரு. மெ. வெ. வேலப்ப செட்டியார் என்பவர்,

சீலம் நிறைந்த செகவீர பாண்டியச் செம்மலிந்த
ஞாலந் தனைவிட்டந் நாடடைந் தார்நற் றமிழ்ப்புலவர்
சாலச் சிறந்த தமிழ்க்கவி சொல்லுந் தயாநிதிதன்
கோலம் இனிவருங் கொல்லோ இனியிக் குவலயத்தே

என்று கூறி உளம் வருந்தினூர். பாண்டியனூர் தம் முடைய வரலாற்றைத் தாமே விரிவான முறையில் எழுதி வெளியிட விரும்புவதாகவும் அவ்வாறு செய்யலாமா எனவும் அடியேனிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அடியேனும், "எத்தனையோ பேர் இந்நாளில் சுயசரிதை எழுதுகின்றனர். தாங்கள் எழுதி வெளிப்படுத்துவது தவருகாது" என்று சொல்லிக்கொண்டிருந்தேன். விரிவான முறையில் வரலாற்றை எழுதி வைத்திருப்பதாகத் தெரிகிறது. காலப்போக்கில் வெளிவரக் கூடும். அவ்வாறு வெளிவரின் இப்புலவர் பெருமானுடைய முழுச் செய்தியையும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இயற்றிய நூல்கள்

(க) திருக்குறட் குமரேச வெண்பா—உரையுடன்
(உ) தரும தீபிகை—உரையுடன்
(ஙு) கம்பன் கலைநிலை
(ச) வீரபாண்டியம்
(ரு) பாஞ்சாலங்குறிச்சி வீரச்சரித்திரம்
(சு) உலக உள்ளங்கள்
(எ) அகத்திய முனிவர்
(அ) கவிகளின் காட்சி
(கூ) இந்தியத் தாய்நிலை
(கo) அணியறுபது
(கக) மாசிலாமணி மாலை
(கஉ) அரும்பொருளமுதம்
(கஙு) தமிழர் வீரம்

## கஎ. பெ. கோவிந்த மூப்பனர்

**தோற்றம்**

"திருமிகு வடவேங் கடமும் தென்பால்
உருமிகு குமரியும் ஆயிடைக் கிடக்கும்
தமிழக வரைப்பில் இமிழரசு புரிந்த
முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
வேந்துமேம் பட்ட பூந்தார்ப் பாண்டியர்
நன்னுட் டின்கண் நவில்சிறு நாடுகள்
பலஅவற் றுள்ளும் பாடல் சான்ற
நல்லூ ருடையது மல்லிநன் னுடு
மல்லி நாட்டு மல்லி மருவிய
புத்தூர் வில்லி புத்தூர் அதுதான்
ஏரியல் சங்க காலத்துக் காரி
ஆதி முதலிய அறவோர்க் குரியது
இடையே,
விண்டு சித்தன் வியன்மகள் பாவை
பாடிச் சூடிக் கொடுத்த நாச்சி
ஆய சான்றோர் மேயசீர் உடையது
மல்லி மாறி வில்லி யாயினும்
மலிதமிழ் மாறு நிலைமைமிக் குடையது
ஆங்கண்,
சான்றுண்மை மிகுந்த சாலியர் குடியில்
தோன்றிய பெருமாள் செய்தவத் தோன்றல்
இனிய பண்பினன் இயற்றமிழ்ப் புலவன்
தனிநலங் கனிந்த நறுவிய பாவலன்
மாவிந்தை தழுவும் கோவிந்த ஏந்தல்"

என்று திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்களால் பாராட்டப்பெற்ற கோவிந்தனர் பாண்டி வளநாட்டில் ஆண்டாள் திருக்கோயில் கொண்டுள்ள திருவில்லி

புத்தூரிலே சாலியர் வகுப்பிலே பெருமாள் மூப்பனர் என்பவருடைய அருமைப் புதல்வராக 3 - 4 - 1901 இல் பிறந்தார்.

கல்வி

தொடக்கப் பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினர். எழுதப் படிக்கத் தெரிந்துகொண்ட பிறகு குலத்தொழிலாகிய நெய்தல் தொழிலிலே ஈடுபட்டுச் சிலகாலம் அவ் வேலையைச் செய்தார். அஞ்ஞான்று அறுவை வாணிகத்தையும் மேற்கொண்டிருந்தார். நெசவுத்தொழில், அறுவை வாணிகம் முதலியவைகளிலே இவர் ஈடுபட்டிருந்த போதிலும் இவருடைய உள்ளம் முனபிறப்பின் வாசனையால் கல்வி கற்பதில ஈடுபட்டிருந்தது. ஓய்வு நேரங்களில் ஏதேனும் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருந்தார். திருமணமாகி ஒரு புதல்வனுந் தோன்றினன். இவருடைய கல்வி வேட்கை மேன்மேலும் வளர்ந்துகொண்டே இருந்தது.

1924 ஆம் ஆண்டிலே செட்டி நாட்டரசர் அண்ணமலையார் திருத் தில்லையிலே மீனுட்சிகல்லூரியைத் தோற்றுவித்தார். அக்கல்லூரி அண்ணமலைப பல்கலைக் கழகமாக மாறிப் பாடல்சால் சிறப்புமிக்கோங்கு திருவேட்களத்திற்குச் சென்றது. தமிழ் படிக்கிற மாணவ மணிகட்குத் திங்கள் தொகையாக ரூபா பன்னிரண்டு உதவித் தொகையும் வழங்கினர். அந்நாளில் தமிழ் கற்கும் மாணவர்களும் அரியராயிருந்தனர்.

இச்செய்திகள் கோவிந்தனருக்குத் தெரிந்தன. இவருடைய கலையார்வம் பன்மடங்கோங்கியது. புறப்பட்டுக் கானடுகாத்தானுக்குச் சென்று செட்டிநாட்டரசர் அண்ணமலையைக் கண்டார். "நான் கல்வி கற்க மிக விருப்புடையவனுக இருக்கிறேன். உங்கள் கலைக்கழகத்தில் சேர்ந்து படிப்பதற்கு உதவி செய்யுங்கள்" என்று வேண்டினர்.

தமிழ் படிப்பதற்கு யாரேனும் தம் கல்லூரிக்கு வருவார்களா என்று அந்நாளில் எதிர்பார்த்துக்கொண்

டிருந்த செட்டியார் "உங்களைப் போன்ற தமிழார்வம் உடையவர்களைத்தாமே தேடிக்கொண்டிருக்கிறேன். என் கலைக் கழகத்திற்குச் சென்று படியுங்கள்" என்று கூறினர். கோவிந்தனர் தில்லைக்குச் சென்றார். பல்கலைக் கழகத்திற் சேர்ந்தார். 1925 ஆம் ஆண்டில் இருந்து 1929 ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் முடிய நான்கு ஆண்டுகள் கல்வி பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டில் பண்டிதர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று பயிற்சித் தேர்வும் பெற்றார்.

## வேலை பார்த்தல்

புலமைக் கல்வி, பயிற்சித்தேர்வு ஆகியன முடிந்தபின் தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். கொடுமுடியிற் பல ஆண்டுகள் வேலை பார்த்தார். பிறகு மதுரைக்கடுத்த மேலூர், திருத்தங்கால், அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் வேலைபார்த்து ஒய்வு பெற்றார்.

## நூல்கள் எழுதுதல்

ஆசிரியப்பணியோடு நின்று கொள்ளாமல் நூல்கள் எழுதி நற்றமிழ்த்தொண்டு புரிவதிலும் ஈடுபட்டார். முதலில் தம்முடைய குலத்தொழிலாகிய நெசவுத்தொழிலைக் குறித்து ஒரு நூல் எழுத வேண்டுமென்று முடிவு செய்து அதற்கு வேண்டிய குறிப்புக்களையெல்லாம் தொகுத்து 'நூல்நெசவு' என்னும் பெயருடைய நூல் ஒன்றை எழுதி முடித்தார். அந்நூல் 1949 ஆம் ஆண்டில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவாயிலாக வெளியாயிற்று. அந்நூலில் கைத்தறி, தறியும் பொறியும், ஆடை, வெளிநாட்டுத்துணி, ஆலைத்துணி, கதர்த்துணி, கைத்தறித்துணி, நெசவுத் தொழிலாளர்களுடைய நிலைமை, வேலை, கூலி, தரகர்கள், கூட்டுறவுச்சங்க உதவிகள் முதலியன குறித்து விரித்தெழுதியுள்ளார். முன்னுரையில் "நான் ஒரு நெசவுகாரன். இளமையில் நெசவு வேலை செய்திருக்கிறேன். சென்னைமாகாணத்தில் உள்ள பல தமிழ்நாட்டு மாவட்டங்களிலும், மைசூர் திருவிதாங்கூர்,

கொச்சி முதலிய நாடுகளிலும் சுற்றுப்பயணஞ் செய்த பொழுது ஆங்காங்குள்ள நெசவைப்பற்றியும், நெசவாளர் களைப் பற்றியும், கதர் நூற்பைப்பற்றியும், கதர் நெசவைப் பற்றியும், வெளிநாட்டுப் போட்டிகளைப்பற்றியும், முடிந்தவரை விசாரித்தறிந்தேன். நான் தமிழ்ச்சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் படிக்கும்பொழுது ஆங்காங்குப் புலவர்பெரு மக்கள் பாடிய நெசவுக் குறிப்புக்களும், பண்டை ஆடையியல்புகளும் வாணிப முறைகளும் எனக்குப் பெரு மகிழ்ச்சிகளைக் கொடுத்தன. மேலும் இந்தியநாட்டு நெசவைப்பற்றிய சில ஆங்கில நூல்களையும் பத்திரிகைக் குறிப்புக்களையும் படித்தறிந்தேன். என் நெசவுப்பழக்கங் களைக்கொண்டும், என் ஆராய்ச்சிக்குறிபபுக்களைக் கொண்டும், இந்நூலை எழுதி இப்பொழுது வெளியிடுகிறேன். இந்நூலில் கூறபபட்டிருக்குங் கருத்துக்கள் பொதுவாக இந்திய நாட்டைப்பற்றியனவும் சிறப்பாகச் சென்னை மாகாணத் தைப்பற்றியனவுமாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## மேலும் பல நூல்கள்

முதலாவதாகக் குலத்தொழில் முறைகளைப் பற்றிய நூலை எழுதி முடித்த பிறகு வேறு நூல்களையும் எழுதினர்.

## கொடைமன்னர் பனுவல்

இந்நூல் வள்ளல்களாகிய பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய் அண்டிரன், நள்ளி ஆகிய சங்ககால வள்ளல்கள் எழுவரைபபற்றிய வரலாற்றுப் பாட்டு நூலாகும். இந்நூல் கககஎ பாடல்களைக் கொண்டது. இந்நூலை, கா. சுப்பிரமணிய பிள்ளை, பண்டிதமணி கதிரேசச்செட்டியார். ச. சோம சுந்தர பாரதியார், தூ. சு. கந்தசாமி முதலியார், ஔவை. சு. துரைசாமி பிள்ளை, திரு ந. சேதுரகுநாதன் ஆகியோர் பாராட்டியுள்ளனர். தூ. சு. கந்தசாமி முதலியார் தமது பாராட்டுரையில், "வித்துவான் திரு. கோவிந்த மூப்பனர் அவர்கள் இயற்றியுள்ள வள்ளல்களின் வரலாறு பற்றிய

பாட்டுக்களை முற்றிலும் படித்து இன்புற்றேன். பாட்டுக்களனைத்தும் அழகொழுகத் தமிழச்சுவை வளம்பெற இயற்றப்பட்டுள்ளன. அவை கவியின் உள்ளத் தூற்றெழுந்து, இயல்பாக ஊறித் ததும்பிப் பொங்கி வழிகின்றன. திரு. மூப்பனாரவர்கள் கவிபாடும் ஆற்றல் சிறக்கப் பெற்றுள்ளார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பாண்டியன் நெடுஞ்செழியன்

தைப் பொங்கல்

இவை இரண்டுஞ் செய்யுளாக அமைந்த நாடகங்கள்; நாடகநூல்களின் இறுதியில் நடிகர்களின் கூற்றாக,

அல்லற் குதவிய நல்குர
வாளன்மே லன்புகொண்ட
செல்வன் தனிமக ளங்கயற்
கண்ணி செயலையெல்லாம்
சொல்கின்ற தைப்பொங்கல் நாடகம்
யாத்தவன் தொல்தமிழ்நூல்
வல்லவன் வில்லிபுத் தூருறை
கோவிந்தன் வாழுகவே.

என்னும் பாட்டைத் தைப்பொங்கல் நாடகத்திலும்:

புலவர்க ளிருந்தருந் தமிழாய்ந்த
புகழுறு நெடுமதில் வளமதுரை
நலமலி பாண்டியன் நெடுஞ்செழியன்
நாடகம் பாடிய நன்னுவன்
மலர்மலி சோலைசூழ் வில்லிபுத்தூர்
வளநகர் வாழ்பவன் கோவிந்தன்
நிலமிசைப் பொருளொடு புகழ்பெற்று
நீண்டபல் லாண்டுகள் வாழுகவே.

என்னும் பாட்டைப் பாண்டியன் நெடுஞ்செழியன் நாடகத்திலும் பாடியுள்ளார்.

## இயற்கை இருநூறு

இந்நூல் இயற்கையைப் பற்றிய இருநூறு செய்யுட்களைக் கொண்டது. கதிரவன் முதலிய ஒவ்வொன்றிற்கும் பப்பத்துச் செய்யுட்களாக நூல்முழுவதும் இயற்கையின் விளக்கமும் வருணனையும் அமைந்துள்ளன. இவைகளில் பழைய தமிழ் மரபுகளும் புதிய அறிவுலகக் கருத்துக்களும் விரவியுள்ளன.

## தமிழர் சமயம் அல்லது சைவசமயம்

இந்நூலில் இந்தியநாட்டில் வழங்கும் பல்வேறு சமயங்கள பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

## தமிழர் யாவர்?

இஃதோர் ஆராய்ச்சி நூல். இந்நூலில் தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர், தமிழர் உறைவிடங்கள், தமிழர் உணவு உடை அணிகலன்கள், தமிழ் நாட்டுப் பெரியோர்கள், தமிழ்நாட்டு மன்னர்கள், தமிழ்நாட்டுப் போர்மறவர், தமிழ் நாட்டுப்புலவர்கள், தமிழ்நாட்டுப் பொருநர் பாணர் கூத்தர், தமிழர் களவொழுக்கம், தமிழர் மணம், தமிழர் இல்லறம், தமிழர் துறவறம், தமிழர் பிணக்கடன், தமிழர் சமயம், பிறநாட்டார் செய்திகள் முதலிய பல தலைப்புகளில் தமிழ் நாட்டுச் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.

## பைந்தமிழ்ப் பாமலர்

இந்நூல் பலவகைக் கருத்துக்களையுடைய பாக்களைக் கொண்ட ஒரு தொகுப்புநூல், இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாட்டும் பாவின்வகை, கருத்து, அணி முதலியவற்றைக் காட்டிக் கற்பார்க்கு மகிழ்வூட்டும். இதனில் பழம் பெருமை, 'தமிழ்நாட்டுச் சிறப்பு முதலிய பல தலைப்புக்களில் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலின் இறுதியில் உள்ள தாம் கையறுநிலையில் ஒருபாட்டு ;

பெருமானுக் கில்லாளாய்ப் பெற்றபிள்ளை கட்கும்
தெருவார்க்கும் தாயாய்த் திகழ்ந்தாய் — ஒருவாத
அன்புடையாய் என்னை அருந்தவத்தால் பெற்றெடுத்த
இன்புடையாய் காண்பதியாம் என்று.

### மாணவர்கட்கு உதவி

புலவர் தேர்வில் தேறி அலுவலில் அமர்ந்தபின் மாணவர் பலருக்குப் படிப்பதற்குப் புத்தகங்கள் கொடுத்து உதவியதோடு பொருளுதவியுஞ்செய்தார். திருவில்லிபுத்தூர் சி. எம். எஸ். உயர்நிலைப்பள்ளியில் இஞ்ஞான்று தலைமைத் தமிழாசிரியராக விருக்கும் திரு. மா. சிவஞானம் முதலிய பலர் இவரிடம் உதவிபெற்றனர். இக்காலத்தில் தங்குல எளியமாணவர்கட்கு நூல் வாங்கிக்கொடுத்துப படிப்புக்கு நிதி ஏற்படுத்தியிருக்கிறார். அருப்புக்கோட்டையில் ஓர் உயர்நிலைப்பள்ளிக்குத் தம் பெயரால் பரிசுகொடுக்க ரூபா ஆயிரம் அளித்துள்ளார். சைவசித்தாந்த சாத்திரம் முதலிய சமயநூல்களை அச்சிடுவதற்குச் சைவ சித்தாந்த மகாசமாசத்திற்கு ரூபாய் ஐயாயிரம் கொடுத்திருக்கிறார். தம் பெயரால் தமிழ்க்கல்விநிலையம் ஏற்படுத்திப் பதினாயிர ரூபாய் கொடுத்துள்ளார்.

### இறுதி

வாழ்க்கையின் பிற்பகுதியைத் துறவிபோல் கழித்துக் கொண்டு தனிமையில் வசித்திருந்த இவர் 1968 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த சைவசித்தாந்த மகாசமாச மாநாட்டிற்குப் போய்விட்டுப் புத்தக அச்சுவேலைகளைக் கவனிப்பதற்காகச் சென்னையை நோக்கிப் புகைவண்டியில் பயணஞ்செய்து கொண்டிருந்த போது அவ்வண்டியில்தானே இவ்வுலகவாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவருடைய மகன் வெற்றுடலைத் திருவில்லிபுத்தூருக்கு எடுத்துச் சென்று இறுதிக்கடனகளைச் செய்துமுடித்தார். இவரால் நிறுவப் பெற்றுள்ள அறங்கட்குத் தமிழ்ப்புலவர் திரு மா. சிவஞானம் அவர்கள் கண்காணிப்பாளராக அமைந்துள்ளார்.

## ௧௮. பு. சி. புன்னைவனநாத முதலியார்

### தோற்றம்

பு. சி. புன்னைவனநாத முதலியார் பாண்டிவள நாட்டில் சீவில்லிபுத்தூரில் 25-4-1889 இல் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சிதம்பரநாத முதலியார். தாயார் பெயர் மீனாட்சியம்மாள். புன்னைவன நாதரின் முன்னோருடைய ஊர் மேலைப்புத்தனேரி.

சீரார் புன்னை வனநாதச்
செம்மல் முதலி யார்மரபில்
பேரார் நெல்லை மாவட்டம்
மேலைப்புத்த னேரியினில்
காரார் கொடைசேர் வேளாளர்
குலத்துக் கடவுள் திருவருளால்
நாரார் மீனாள் சிதம்பரப்பேர்
நாதர் தவத்தால் தோன்றினரே.

### கல்வி

ஐந்தாம் ஆண்டில் கல்விகற்கத் தொடங்கினார். முதலில் சேற்றூர் ரா. அருணாசலக்கவிராயர் அவர்களுடைய மருகனார் சிவகொழுந்துப பிள்ளையிடம் தமிழ் பயின்றார். பிறகு தூத்துக்குடியிலும், சீவில்லிபுத்தூரிலும் கிறித்தவ உயர் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலம் பயின்றார். பிரைமரி லோயர் செகண்டரியில் தேர்ந்தார். நெல்லையிற் சர்ச்மிஷன் கல்லூரியில் ஐந்தாவது ஆறாவது படிவம் பயின்ற காலத்தில் பீட்டர் கேட்டர் என்ற விவிலிய நூலில் தேர்ச்சியுற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திய மெட்ரிக் ஆங்கிலத் தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தாகூர்ச் சட்ட விரிவுரையாளராகச் சிறந்த கா. சுப்பிரமணியபிள்ளை எம்.ஏ., எம்.எல். 1905 ஆம் ஆண்டில் இவருடன் பயின்றார்.

வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நட்பு இவருக்குக் கிடைத்தது. அவரோடு பழகியபடியால் தமிழும் கற்கவேண்டும் என்று துணிந்து கற்கத் தொடங்கினர். மதுரை சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் பாண்டித்துரைத் தேவர் அவர்களுடைய கட்டளைப்படி உண்டியும் உறையுளும் பெற்று அங்குக் கல்வி கற்றார்.

### வேலை

*1908* ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இராமநாதபுரத்தை யடுத்த அழகன்குளம் ரவூதியா செந்தமிழ்ப் பாடசாலையில் ஐந்தாண்டுகள் தலைமை யாசிரியராக இருந்து அப்பாடசாலையைப் பலவகைகளிலும் சிறப்பாக நடத்தினர்.

### திருமணம்

*1913* ஆம் ஆண்டில் அரங்கம்மாள் என்னும் மாதைத் திருமணஞ்செய்து கொண்டார்.

### செட்டிநாட்டில் வேலை

*1913* ஆம் ஆண்டில் மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டி யாரவர்கள் விரும்பியவாறு செட்டிமார் நாட்டில் பள்ளத்தூரில் சன்மார்க்கசங்க ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் இருந்தார்.

### பலவிடங்களில் வேலை

பிறகு, திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் கில்லத் பரிசு பெற்றார். மே. சொ. சுப்பிரமணியக் கவிராயருடன் வேலை பார்த்தார். *1914* ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் *1923* அக்டோபர் வரை மதுரை சௌராட்டிர உயர்தரப்பள்ளியில் முதல் தமிழாசிரியராக வேலைபார்த்தார். *1923* அக்டோபர் முதல் *1930* ஜூன் வரை திருநெல்வேலியில் சர்ச்மிஷன் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக வேலை பார்த்தார்.

1930 ஜூன் முதல் 1944 ஏப்ரல் வரை பாளையங்கோட்டை அர்ச்சவேரியர் முதல்தரக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகவும் பேராசிரியராகவும் வேலைபார்த்து அவ்வாண்டில் அக்கல்லூரி முறைப்படி ஓய்வு பெற்றார்.

### மீண்டும் வேலை

ஆண்டிலும் அனுபவத்திலும் மிகுந்து விளங்கிய காரணத்தினால் 1944 டிசம்பரில் திருச்சி அர்ச் ஜோசையப்பர் கல்லூரியில் தனித் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப் பெறலானார். 1946 ஆண்டு முதல் சில ஆண்டுகள் தருமபுர ஆதினக் கீழ்த்திசைப பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவும் துணைத்தலைவராகவும் வேலைபார்த்தார்.

### நூல் வெளியீடுகள் முதலியன

பள்ளிகள், கல்லூரிகள் முதலியவைகளில் ஆசிரியராக வேலை பார்த்தகாலத்தில் நூல்கள் எழுதுதல், வெளியிடுதல் உரைகள் எழுதுதல், இதழ்கள் வெளியிடுதல் முதலிய வேலைகளையும் மேற்கொண்டிருந்தார். 1913 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் 'தமிழன்' பத்திரிகாசிரியராக இருந்தார். 1914 முதல் 1924 வரை அரசினருடைய விருப்பப்படி 'பாண்டிய நேசன்' என்னும் ஆங்கிலத்தமிழ் வாரப்பத்திரி காசிரியராக விருந்தார். 'வித்யா போதினி' 'தமிழ் மண்டிலம்' ஆகியவைகளின் ஆசிரியராகவும் இருந்தார் இந்நாளில் பள்ளி இறுதி வகுப்புப் பாடப்புத்தகத்திற்கு உரை யெழுதினார். செய்யுட் பாடக்கோவை என்னும் புத்தகத்தைத் தொகுத்து இரண்டு பகுதிகள் வெளியிட்டார். அற்புதக் கணையாழி, நீதிசாரத்திரட்டு, யாக்ஞவல்கியம், கங்காபாங் சுயம்வரம், மகாராணி மங்கம்மாள் என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். தொல்காப்பியம் மூலம் மனப்பாடஞ் செய்வதற்கு ஏற்ற முறையில் தனிநூலாக அந்நாளில் வெளியாகவில்லை. இவர் மூலத்தைத் தனிப்புத்தகமாக நல்லமுறையில் முதன்முதலாக வெளியிட்டார். இவ்வெளியீடு

மகாமகோபாத்யாய சாமிநாதையர், திரு நாராயண ஐயங்கார் முதலிய பேராசிரியர்களுடைய பெருமதிப்புக்குரியதாயிற்று. தொல்காப்பிய மூலத்தை மனப்பாடஞ் செய்ய விரும்பிய வர்கள் இதனைப் படிக்கலாயினர். இதனால் இவருக்குத் தொல்காப்பிய முதலியார் என்னும் காரணப் பெயரும் உண்டாயிற்று. அவ்வக் காலங்களில் இதழ்களில் கட்டுரை களும் எழுதினர்.

### சங்கப் பணிகள்

1904 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் மாணவர் சைவ சபையை நிறுவினர். 1908 ஆம் ஆண்டில் ரவீந்திய செந்தமிழ்ச் சங்கத்தை அமைத்தார். 1916 ஆம் ஆண்டில் சேக்கிழார் சைவ சித்தாந்த சங்கத்தையும், ஜில்லா ஆங்கில கலாசாலைப் பண்டித சங்கத்தையும் நிறுவி அவைகளுக்கு அமைச்சராகத் தொண்டு புரிந்தார். 1924 இல் ஆங்கிலப் பண்டித சங்க அமைச்சராகவும் தென்னிந்திய தமிழ்ச்சங்க அமைச்சராகவும், பிறகு சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்கு இடமாக விருந்த தமிழர் மாநாட்டமைச்ச ராகவும், தமிழ மண்டலச் சைவவேளாளர் சங்கம் நிறுவி அமைச்சராகவும் இருந்து அரிய தமிழ்த் தொண்டுகள் பல செய்தார். பாளையங் கோட்டை சைவசபையின் பொருளாள ராகவும் விரிவுரையாளராகவும் இருந்து நல்ல வேலைகள் செய்தார்.

1922 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய வாலிபர் சங்க முதலாண்டுச் சொற்பொழிவாளராகவும் தலைவராகவும் இருந்தார். மாகாணத்தில் நடந்த பல மாநாடுகளிற் கலந்து தொண்டு செய்தார். 1929-1931 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தேர்வுக்குழு உறுப்பினராக இருந்தார். 1946-1948 முடியச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வுக்குழு உறுப்பினராகவும் வேலை பார்த்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம், தென்னிந்திய தமிழ்ச்சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆகியவைகளில் தேர்வாளராகவும் பல ஆண்டுகள் உழைத்தார்.

## நாட்டுக்குச் செய்த நற்பணி

நெல்லையிற் கல்விபயிலுங் காலம் முதலே நாட்டுப்பற்று மிருந்தவராக விளங்கினர். கதர் முதலிய நாட்டுத் துணிகளையே உடுத்தும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். நாட்டு முன்னேற்றங் கருதி அமைச்சர் எஸ். குமாரசாமி ரெட்டியாரோடு வீடுகள் தோறுஞ் சென்று பொருள் திரட்டினர். மாகாண மாநாட்டுத் தொண்டராய்ப் பணி புரிந்தார். சமுதாய ஊழிய சங்கத் துணைத் தலைவராகவும் வேலை செய்தார். 1935 ஆம் ஆண்டில் பாளையங்கோட்டையில் கூடிய தேசியப் பொதுக் கூட்டத்தில் சத்தியமூர்த்தி சொற்பொழிவாற்றியபோது தலைமை தாங்கிக் கூட்டத்தைச் சிறப்பாக நடத்தினர். 1937 ஆம் ஆண்டில் குலசை வாலிபர் சங்கத்து ஆண்டுவிழாக் காலத்தில் தலைமை தாங்கிய கப்பலோட்டிய தமிழர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை முன்னிலையில் உலகப்பெரியார் "காந்தியடிகள்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழி வாற்றினர். திருமணக் காலத்தில் திருமணவாழ்த்துப்பாக்கள் வாசித்துக் கொடுத்தலையும் மேற்கொண்டிருந்தார்.

## குடும்ப நிலை

1913 ஆம் ஆண்டில் வடுகச்சிமதில் அரங்கம்மாள் என்னும் மாதைத் திருமணம் புரிந்து கொண்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்கினர். 1925 இல் இம்மனைவி இறந்தார். அதே ஆண்டில் பன்னிரண்டு வயதுச் சிறுவன் சிதம்பரநாதன் என்னும் மகனும் இறந்தனன். 1926 ஆம் ஆண்டில் வாகைக்குளம் மீனுட்சி என்னும் மாதை இரண்டாவது மனைவியாகத் திருமணம் புரிந்து கொண்டார். 1932 ஆம் ஆண்டில் இந்த இரண்டாவது மனைவியும் இறந்தார்.

"மாதரின்றி வாழின் மதன்பகையாம் நாமணஞ்செய்
காதலியர் மீதுபகை காலனும்—பூதலத்தில்
கள்ளமின்ற ரைக்கூடில் கத்தன் பெரும்பகையாம்
உள்ளமே வேறென்செய் வோம்."

ஆனமண மின்றிச்சும் மாவிருப்போ மென்றலோ
ஈனவுடல் நோயுற் றெனைவருத்தும்—மானனைய
மாதர்தமை யேகொண்டால் மண்ணில் அவரிரார்
நாதனே என்செய்வேன் நான்''

என்று வேதநாயகம்பிள்ளை பாடியன இவருக்கும் பொருத்தமாக அமைந்துவிட்டது. அப்பொழுது இருந்த மூன்று இளமக்களை வளர்க்கும் பொறுப்பை எண்ணி அதே ஆண்டில் பாப்பான் குளம் பிரமு என்னும் மாதை மணம் புரிந்து கொண்டார். அதே ஆண்டில் தம்மைப் பெற்று வளர்த்த தாயாரை இழந்தார். 1939 ஆம் ஆண்டில் தம்முடைய மூத்தமகள் அங்கயற் கண்ணியைத் தம்முடைய மைத்துனர்க்குத் திருமணஞ் செய்து கொடுத்தார். 1942 ஆம் ஆண்டில் தம்முடைய மகன் சோமசுந்தரத்திற்குத் திருமணம் நடத்தினர். 1943 ஆம் ஆண்டில் இவருடைய மூத்தமகள் ஒரு மகனையும் மகளையும் விட்டுக் காலமாக அதனல் மிகுந்த வருத்தமடைந்தார். 1943 ஆம் ஆண்டில் தம்முடைய இரண்டாம் மகள் அரங்கம்மாளைத் தம் தமக்கை மகன் சிதம்பரகுற்றலத்திற்குத் திருமணஞ் செய்து கொடுத்தார்.

## பிற செய்திகள்

ஏறக்குறைய 42 ஆண்டுகளுக்குமேல் தமிழாசிரியராகவே பணிபுரிந்த புகழ் இவருடைய தாகும். நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் நல்லனபுரிந்து பணிசெய்த இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி, உருது, மலையாளம் இந்தி ஆகிய பலமொழிகளையும் பயின்றிருந்தார். 1932 ஆம் ஆண்டில் வித்துவான் பட்டம் பெற்றார். மாயூரம் மக்களின் நன்னெறியைக் கருதித் திருநெறித் தொண்டர் கழகம் அமைத்துச் சிறப்புச் சொற்பொழிவுகள் செய்வித்தார். பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் நூல்களில் பற்றும் தேர்ச்சியும் மிகுதிப்படும் வண்ணம் திருக்குறள் பரிசுத் தேர்வுகள் நடத்தினர். பெருமக்களும் பயிலும் முறையில் கிழமைக்கு இருமுறை திருக்குறள் வகுப்புக்கள்

நடத்தினர். இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் பலர் இன்று சிறந்த நிலையில் விளங்கிவருகின்றனர். திருநெல்வேலித் தென்னிந்தியசைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் நெல்லையில் இயங்கிவரும கல்லூரி, நூல் நிலையம் முதலியவைகளில் பணிபுரிந்தார். 1950 ஆம் ஆண்டில் இவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ந்தது அப்பொழுது செந்தமிழ்ச் செல்வி இதழ் வாழ்ததுப்பாக் கூறியது. அவ்வாழ்ததுப் பாட்டுக்களின் முதற்பாட்டே இவ்வரலாற்றின் தொடக்கத்தில் அமைந்துளளது. அதனுடைய

இறுதிப் பாட்டு :

பணிகள் வாழ்க பயிர்வாழ்க
பருவம் பொய்யா மழைவாழ்க
அணியாம் மணியும் வெண்ணீறும்
அரசும் வாழ்க அறம்வாழ்க
தினியார் உறவும் தீந்தமிழும்
திருவார் நெறியும் வாழ்கவென்றும்
மணியார் விழவு கொள்புன்னை
வனநா தப்பேர் வாழுகவே.

என்பது. இவர் தம்முடைய திருமணத்திற்கு வருமாறு தம்முடைய நண்பர்களுக்குப் பின்வருஞ் செய்யுள்வழி அழைப்பிதழ் அனுப்பினர்.

திருமண அழைப்பிதழ்

திருமக ளுடன்கலை மகளுமொரு சேரவே
திகழுநெல் லைக்க ணிக்குச்
செழுவதன மாயியம் பத்தகு மெழில்திகழ்
திருப்புத்த னேரி நகரில்
செப்பரும் இருவகைச் செல்வமும் மேலைநாள்
செய்தவப் பயன தாகத்
திருநெறிய தமிழ்முறை சிவாகமா திகளையே
சிந்திக்கும் பேறு பெற்றுப்

பொருவிலா அன்பர்கட் கருள்செயுஞ் சங்கரன்
புகழ்கமழ் தாட்பூ சையால்
புன்னைவன நாதனென் போன்பெற்ற பேறெனப்
புகழ்வேளாண் குலதி லகனாய்
புகழ்தருஞ் சால்டசிஸ் டென்டினிஸ் பெக்டராய்ப்
பூதலத் தோர்பு கழவே
புரிந்தரன் தாளினை செல்சிதம் பரநாத
புனிதவேள் புகழ்வி ளங்க
வருமிரு குமாரருள் அவனியிற் சிரேட்டனாய்
மாண்டமி ழறிவி னோடு
வார்கடற் புவியுளோர் போற்றுமாங் கிலமுருது
மாண்புடன் கற்ற புன்னை
வனநாத வேளன் புடன்விடு மணவிதழ்
மகிழ்ந்தன்பர் இனிது காண்க
வளர்பரி தாபியா வணியிரு பானென்பான்
வான்வெள்ளி அத்த மீனின்
மருவுமெல் லுதயத்துச் சிங்கலக் கினமதின்
மணம்புரிவ தாலு ளன்பு
வைத்தெங்கள் திருமணம் கண்டுநல் லாசியும்
வழங்குக என்று நம்மை
மாதமிழ் வளர்ச்சியே கருதுநல்லீர் சைவ
மதத்தினிற் பற்று முடையீர்
மணம்புணர் இறைவீ ரைக்குறிச் சிக்கன்று
வந்தருள அழைத்து ளோமே.

முதலியார்க்குப் பாராட்டு

சிவக்கவிமணி கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண உரை அரங்கேற்றப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றபோது,

ஆயிரக்கால் மண்டபத் தன்பாய்த் திருத்தொண்டர்
தூயவர லாறுரைத்த தொன்மையினில்—பாயசீர்ச்
சுப்ரமணி யன்விரித்தான் சொல்புகழ்நீள் ஆயுளுடன்
திப்பியமா வாழி சிறந்து.

என்னும் பாடலைக் கூறினர்.

பாண்டித்துரைக்குப் பாராட்டு

பொ. பாண்டித்துரைத்தேவர் இராமநாதபுரம் ஆசிரியர் சங்க நான்காவது ஆண்டு விழாவில் 1910 இல் தலைமை தாங்கியபோது பாடியது :

திங்கள் வதனத்தான் செந்தமிழ்ப் பூவுலகில்
மங்காப் புகழுறச்செய் வண்மையான்—சங்கம்
விழைந்தான் பிரசங்க மாரி பொழிந்தான்
தழைந்தது தண்டமிழுந் தான்.

அனந்தகிருட்டிண ஐயர் என்பவர் தென்திருப்பேரை வானமாமலை ஆஸ்தான வித்துவான்; இவர் சிலேடைக் கவிகள் பாடுவதில் மிகவல்லவர். இவருடைய சிலேடைப் பாக்களைப் பாராட்டி 1913 ஆம் ஆண்டில் சங்கத்தின் ஆண்டுவிழா ஒன்றில் பாடியது:

வெண்பாச் சிலேடை விதத்தால் தமிழருமை
ஒண்புலவர் போற்ற உரைத்தனன்—நண்பர்
மனமுருக வானமலை வாழனந்த கிட்டணன்
தினம்பெருகி வாழி சிறந்து.

இரங்கற்பா

பாண்டித்துரைத் தேவர் 1911 ஆம் ஆண்டில் காலமானபோது பாடிய இரங்கற்பா.

கன்னல்மொழிக் குருகுவமோ கலைநலத்திற்
குருகுவமோ கற்றோர் போற்றும்
தென்னன்மொழி வளர்சங்கச் சிறப்புநினைந்
துருகுவமோ சோமா னேநீ
பன்னருஞ்சீர் வாய்ந்ததமிழ் வளர்த்ததற்கே
உருகுவமோ பாராள் வேந்தே
என்னநினைந் ததற்கிரங்கி இருநிலத்தில்
யாம்தளர்வேம் இசைத்தி டாயே.

**இறுதி**

இவர் தம்முடைய இறுதிக்காலத்தைச் சென்னைமா நகரில் மகனுடைய இல்லத்தில் கழித்து வசித்திருந்தார். 79 ஆம் அகவையில் 1968 ஆம் ஆண்டில் இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

—

## ௬௰. தி. சங்குப் புலவர்

### மலைசாயப் பாடியவர்

தென்பாண்டி நாட்டில் உள்ள சேற்றூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குறுநில மன்னர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் சேற்றூரையடுத்த தேவதானம் என்னும் ஊரில் திருக்கோயில் கொண்டுள்ள நச்சாடை லிங்கர்—பெற்ற நாயகியார் என்னும் தெய்வங்கள் மீது தாம் அதிகப் பேரன்பு செலுத்தியிருந்தபடியால் கோயிலுக்கு முன்னால் மண்டபம் ஒன்றைக் கட்டிமுடிக்க எண்ணினர். அவ்வூருக்கு அண்மையிலிருந்த மலையொன்றின் முடியில் பாறையொன்று படர்ந்து குறுநிலமன்னர் எண்ணிய மண்டப வேலைக்குத் தகுதிவாய்ந்ததாக அமைந்திருந்தது. ஆனால் பாறை மலையின் முடியில் இருந்தபடியால் யாதுஞ் செய்யமுடியாமல் இருந்தது. அப்பாறை கீழே நழுவி விட்டால் குறுநிலமன்னர் எண்ணிய திருப்பணி இனிது நிறைவேற மிக உதவியாகும். இதனைக் குறித்துக் குறுநில மன்னர் பலநாளும் எண்ணினர். இறுதியில் அவருடைய உள்ளத்தில் எண்ணம் ஒன்று தோன்றியது.

அந்நாளில் சங்குப்புலவர் என்னும் பெயருடைய அறிஞர் ஒருவர் சிறந்து விளங்கியிருந்தார். அவர் குறுநில மன்னருடைய அவைக்கு அடிக்கடி சென்று வருதலும் உண்டு. அவருடைய ஊர் கரிவலம் வந்த நல்லூரையடுத்த எட்டிசேரி என்னும் ஊராகும். குறுநிலமன்னர் மேற்கூறிய எண்ணத்தோடிருக்கும்போது ஒருநாள் புலவர் குறுநில மன்னருடைய அவைக்களத்துக்குச் சென்றார்.

குறுநில மன்னர் சங்குப் புலவரைப் பார்த்துப், "புலவீர்! புலவர்கள் தெய்வத்தன்மையமையப் பெற்றவர்கள். அவர்கள் நினைத்தால் முடியாத காரியம் ஒன்றும் இல்லை. தங்களுடைய வாக்குப் பலிதமுள்ளது என்று பலரும் கூறக்

கேட்டிருக்கிறேன். தாங்கள் இம்மலையின் முடியில் உள்ள பெரும்பாறை சரிந்து வந்து கீழே விழுமாறு ஒரு செய்யுள் பாட வேண்டுகிறேன். அவ்வாறு பாடிப் பாறை கீழே நழுவி விட்டால் நான் எண்ணியுள்ள பெற்ற நாயகி கோவில் மண்டப வேலை மிக எளிதாகவும் நன்றாகவும் முடிவுபெறும்" என்று கூறினார்.

குறுநில மன்னர் கூறியவைகளைக் கேட்ட சங்குப் புலவர் திடுக்கிட்டார். நாமாவது மலை சரியுமாறு பாட்டுப் பாடவாவது, இது நடக்கிற காரியமா என்று எண்ணமிட்டார். குறுநில மன்னர் கூறியதைத் தடுத்துரைத்து அவருடைய வெறுப்பைத் தேடிக்கொள்ளவும் விரும்பவில்லை. "அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிட்டுத் தம்முடைய இருப்பிடத்திற்குச் சென்றார். அன்றிரவு கோயிலுக்குப் போனார். பெற்ற நாயகி என்னும் அம்மன் திருமுன் அமர்ந்து,

மலைசாயப் பாடுதல்

"நிலைசாயொ ணாத தவசே புரிந்து நிறையமுத
கலைசார் தவம்பெற்ற தென்சேறை நாதனைக் கண்டவளே
உலைசார் உளிவைத்துக் கற்பணி செய்ய உனதருளால்
மலைசாய வேண்டும் தவம்பெற்ற நாயகி மாதங்கியே.

சீக்கிர மேமலை சாயவும் வேண்டுந் திருப்பணிக்கே
ஆக்க முடன்வந்து சேரவும் வேண்டுநின் அன்புறுமென்
வாக்கத னால்தமிழ் சொல்னேன் தென்சேறை வரதனுக்குப்
பாக்கிய மேபெற்ற நாயகி யேசிவ பார்வதியே.

புகழவும் வேண்டும் உலகமெல் லாமுனைப் போற்றமலை
நகழவும் வேண்டும் திருப்பணி வேலைக்கு நானுரைத்தேன்
இகழவொண் ணாமல் எனைக்காக்க வேண்டும் இமயமலை
மகளென வந்து தவம்பெற்ற நாயகி மாதங்கியே"

என்னுஞ் செய்யுட்களைப் பாடினார். அதனை ஓர் ஏட்டில் வரைந்து சாயவேண்டிய பாறைப் பகுதியின அடியில்

வைத்துவிட்டு மீண்டும் கோவிலுக்கு வந்தார். உண்ணு நோன்பை மேற்கொண்டு தெய்வத்திருவருளை வழுத்தினர். கோவிலிலேயே படுத்துக்கொண்டார்.

## பாறை சரிதல்

அன்று நள்ளிரவில் கடுங்காற்றும் பெருமழையும் உண்டாகியது. மரஞ் செடி கொடிகள் முறிந்து விழுந்தன. மேலேயிருந்த பெரிய பாறையும் நழுவித் தூளாகாமல் நிலத்துக்கு வந்து நின்றது. மறுநாள் காலையில் குறுநில மன்னர் செய்தியை அறிந்தார். மலைசாயப் பாடிய சங்குப் புலவரிடத்தில் அவருக்கு அளவுகடந்த மதிப்பும் அன்பும் உண்டாயின. சங்குப் புலவரைப் பலவாறு பாராட்டிப் போற்றினர். "புலவீர்! தாங்கள் விரும்பும் பரிசைக் குறிப்பிட்டால் அளிப்பதற்குச் சித்தமாக இருக்கிறேன்" என்றார். ஆனால் சங்குப்புலவரோ தெய்வத் திருவருளால் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்கு எத்தகைய பரிசையும் பெற விரும்பவில்லை. தமக்கு யாதும் வேண்டாம் என்று கூறி விட்டார். வேண்டாமையே விழுமிய செல்வமன்றோ? புலவரின் இச்செயலைக் குறித்து ஒரு புலவர்,

"பெற்றநா யகிபொற் கோயில்
    பெருந்திருப் பணியின் வேலை
முற்றவே வேண்டி யாறு
    முகக்கவி ராயன் செம்பொற்
சிற்றடி மனத்துள் வைக்கும்
    திறற்சங்குக் கவிஞன் சேறை
நற்றவி மலையைத் தன்னால்
    நகரவே பாடி னனே"

என்று பாடியுள்ளார்.

## அண்மையிற் காலஞ்சென்ற சங்குப்புலவர்

இத்தகைய பெருமை பொருந்திய மலைசாயப் பாடிய சங்குப்புலவரின் வழிமுறையில் திருமலை வேற்கவிராயர்

என்பவருடைய அருமைப்புதல்வராக நம்முடைய சங்குப் புலவர் விசய ஆண்டு ஆவணித்திங்கள் பதினேழாம் நாளுக்குச் சரியான ஆங்கிலம் 31-8-1893 இல் எட்டிசேரி என்னும் ஊரிற் பிறந்தார்.

### எறசக்க நாயக்கனூர்

சங்குப் புலவருக்கு அகவை ஏழு நடக்கும்போது தந்தையாராகிய திருமலை வேற்கவிராயர் எட்டிசேரியை விட்டு நீங்கி எறசக்க நாயக்கனூர் என்னும் ஊரிற் குடி புகுந்தார். இவரோடு வேறு சில குடும்பங்களும் அங்குச் சென்றன. இக்குடும்பத்தினர் பல வகையான தொழில்களை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தினர்.

### கல்வி கற்றல்

எறசக்க நாயக்கனூரை யடுத்த வாய்க்காற்பட்டி என்னுஞ் சிற்றூரில் தம் தாயோடு பிறந்த அம்மான் ஒருவர் வைத்து நடத்திய திண்ணைப்பள்ளியில் சங்குப்புலவர் கல்வி கற்கத் தொடங்கினர். நான்காம் வகுப்புவரை கல்வி கற்ருர். பிறகு சின்னமனூரில் தம்முடைய தந்தையாரிடத்தில் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் முறையாகப் பாடங் கேட்டார். கேட்கும் அனைத்தையுங் கருத்திற் பதியவைத்து நெட்டுருச் செய்தார். வழிவழிப்புலவராகலின் கல்வியறிவு நன்கு உண்டாகியது. செய்யுளிலக்கணத்தையுங் கற்றுச் செய்யுள் பாடுந் திறமடைந்தார்.

### முதல் மணம்

சங்குப்புலவருக்கு அகவை பத்தொன்பது நடக்கும் பொழுது தந்தையார் திருமணஞ் செய்துவைக்க முடிவு செய்தார். தம்முடன் பிறந்தாள் மகளாகிய பொன்னழகி என்னும் நங்கையைத் திருமணஞ் செய்து வைத்தார். சங்குப்புலவர் தனிமையாகக் குடித்தனம் நடத்தத் தொடங்கினர். போதிய வருவாய் இல்லாதபடியால் பல

தொழில்களிலும் ஈடுபட்டுப் பொருள்தேட வேண்டியவ ரானார். சங்ககாலப் புலவர்களாகிய கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் முதலியோர் கூலவாணிகத்தில் ஈடுபட்டிருந் தமையைப் பெயரைக் கொண்டே நாம் அறியலாம். அவ்வாறே சங்குப்புலவர் பலசரக்குக் கடைவைத்தும் பலரோடு கூட்டுச் சேர்ந்து கூலவாணிகஞ் செய்தும், நிலத்தைக் குத்தகைக்கெடுத்துப் பயிர்த்தொழிலை மேற் கொண்டும் பலவகை முயற்சியில் ஈடுபட்டுப் பொருள்தேடி வாழ்க்கை நடத்தினார். எனினும் வாழ்க்கை வளமற்ற வாழ்க்கையாக வறுமையின் அடிப்படையிலேயே அமைந் திருந்தது. இவரோடு பத்தாண்டுகள் இல்லறத்தை இனிது நடத்திய இல்லாள் இவ்வுலக வாழ்க்கையை நீத்து விண்ண கஞ்சென்றாள். மக்கள் பலர் தோன்றினராயினும் ஒரு பெண் மகளைத்தவிரப் பிறமக்கள் மறைந்தொழிந்தனர்.

## கடவுளரைப் பாடுதல்

மனிதன் தனக்குத் துன்பம் வந்த காலத்தில் கடவுளை எண்ணத் தொடங்குகிறான். துன்பத்தை நீக்க வல்லவர் கடவுள் ஒருவர்தாம் என்பது அவனுடைய கருத்து. அவ்வாறே சங்குப்புலவரும் துன்பம் மிகுதியாக உண்டான சமயத்தில் கடவுளைப் போற்றி அவைகளைப் போக்கிக்கொள்ள எண்ணினார். ஆனைமுகக் கடவுள்மீது விநாயகமூர்த்தி ஒருபா ஒருபஃது, சரசுவதியம்மை நாற்பா மூவினமாலை, கலைமகள் ஒருபா ஒருபஃது, பாரதிபதிகம் என்னும் தெய்வ வணக்க நூல்களைப் பாடினார்.

"வாயால் உனைத்தினமும் வாழ்த்துகிலேன் எள்ளளவும்
ஈயா உலுத்தர்தமை யேபுகழ்ந்திங்—கோயாப்
பெருங்கவலை யுள்ளேனெந் பேணுவாய் நூலின்
மருங்குடைய வல்லவைவா மா"

என்பது பிள்ளையார் பாடல்களில் ஒன்று.

"கலையாவுந் தேர்ந்திடினும் காசினியில் யாரும்
நிலையாம் உனதருளை நீங்கில்—தலையாய
பேறுபெற லுண்டோ பிடியே மலர்க்கொடியே
தேறு புகழ்க்கலைமா தே"

என்பது சரசுவதியம்மை பாடல்களில் ஒன்று. இந்நூல்களைப் பாராட்டி இவருடைய தந்தையாராகிய திருமலைவேற் கவிராயரே சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

## சிறப்புப்பாயிரப் பாடல்கள் இரண்டு

மருமாது ளவமணிமான் மதித்தகட லமுதலமெனப்
பெருமாது ரியக்கவிசெப் பிடும்வலமை மிகப்படைத்தோன்
வருமாது லருக்கிரங்கு மனத்தினனம் புயமலர்ச்செந்
திருமாது குலவுமெட்டி சேரிநகர் தனிற்பிறந்தோன்.

மட்டவிழ்பூஞ் சோலைவள மலிபூசா ரிக்கவண்டன்
பட்டியென வியந்தெவரும் பகர்தருநன் னகர்வாழ்வோன்
இட்டமிகும் எனதுசுதன் இனியசங்குக் கவிஞனெனச்
சிட்டர்புகழ் எனதருமைத் திருத்தந்தை பெயர்புனைந்தோன்

என்பன சிறப்புப்பாயிரப் பாடல்கள் பத்தில் இரண்டாகும்.

## மதுரைக்குச் செல்லுதல்

தெய்வப்புகழ்நூல்கள் பாடியது முதல் சங்குப்புலவருக்கு நன்மைகள் உண்டாகத் தொடங்கின. தாம் இயற்றிய நூல்களை அச்சிடுவதற்கு மதுரைக்குச் சென்றார். அங்குள்ள தமிழ்ச்சங்கத்துக்குச் சென்றார். மாணவர்களைக் கண்டு பேசினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பண்டிதத் தேர்வுகளின் விவரம், தேர்வுக்குப் படிக்கவேண்டிய நூல்களைப் பற்றிய விவரம் முதலியன சங்குப்புலவருக்குத் தெரிந்தன. தாமுஞ் சங்கத்தேர்வு நூல்களைப் படித்துத் தேர்வு எழுதிப் பட்டம் பெறவேண்டும் என்று எண்ணினார். தேர்வுக்குப் படிக்கவேண்டிய நூல்களை வாங்கிக்கொண்டு ஊருக்குத் திரும்பினார்.

### பாலபண்டிதர், பண்டிதர்

வாங்கிக்கொண்டு வந்த நூல்களை முயற்சியுடன் படித்தார். அவ்வாண்டில் நடைபெற்ற பாலபண்டிதத் தேர்வுக்கு மதுரைசென்று எழுதினார். தேர்வுக்கெழுதிய பல்லோருள்ளும் முதல்வராகத் தேறியபடியால் அத் தேர்வுக்கு என்று முடிவு செய்யப்பட்டிருந்த எழுபது வெண்பொற் காசுகள் மதிப்புள்ள பொற்பதக்கம் ஒன்றை நன்கொடையாகப் பெற்றார். இவ்வாறு பாலபண்டிதத் தேர்வில் முதன்மையாகத் தேறிய பிறகு அடுத்தபடி பண்டிதத் தேர்வுக்குரிய நூல்களைப் படித்துப் பண்டிதத் தேர்விலும் முதன்மையாகத் தேர்ச்சியடைந்தார். அதற்குரிய நூறு வெண்பொற் காசுகள் மதிப்புள்ள தங்கத்தோடாவைப் பரிசாகப்பெற்றார். இதனால் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர் களாலும் மாணவர்களாலும் மற்றவர்களாலும் நன்குமதிக்கப் பெற்றார். பாலபண்டிதத் தேர்வுக்குரிய பொற்பதக்கத்தைத் தினகர சேதுபதியவர்களும் பண்டிதத் தேர்வுக்குரிய தோடாவை ஓய்வுபெற்ற கவர்னர் ஒருவரும் தலைமை தாங்கிப் பாராட்டிச் சங்குப்புலவருக்கு வழங்கினார்கள். இவ்வாறு புலமையில் தேர்ச்சியடைந்த பிறகு அண்ணாமலைநகர் சென்று பண்டிதர் போதனாமுறைக்குரிய கல்லூரியிற் சேர்ந்து ஓராண்டு பயின்று அப்பயிற்சியையும் முடித்தார்.

### இரண்டாவது திருமணம்

சங்குப்புலவருக்கு அகவை முப்பத்தொன்று நடக்கும் போது இரண்டாவது திருமணம் நிகழ்ந்தது. தம்முடன் பிறந்த தமக்கையின் மகள் மாணிக்கமணி என்னும் மங்கையைத் திருமணஞ் செய்து கொண்டார். இம்மனை வியின் வயிற்றில் ஆண்மக்கள் இருவரும் பெண்மக்கள் ஐவருந் தோன்றினர். இம்மக்களும் நன்கு கல்விபயின்று இன்று சிறந்த நிலையில் அமைந்துள்ளனர்.

### தமிழாசிரியர்

பண்டிதப் பயிற்சியும் மறுமணமும் முடிந்த பிறகு தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். செட்டிமார்

காட்டிலுள்ள பள்ளத்தூரிலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த சோழவந்தான், மேலூர் ஆகியவிடங்களிலும் தமிழாசிரியராகச் சிலகாலம் பணியாற்றினர். பிறகு தம்மூருக்கு அண்மையில் உள்ள உத்தமபாளையம் உயர்நிலைப் பள்ளியில் நிலையான தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர்.

## வித்துவான் தேர்தல்

உத்தமபாளையத்தில் பணிபுரியத் தொடங்கியது முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தார் நடத்தும் தனித்தமிழ் வித்துவான் தேர்விலும் கலந்து எழுதித் தேர்வுபெற வேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. அதற்குரிய நூல்களைப் பயின்று அத்தேர்வுக்கு எழுதி முதன்மையாகத் தேர்ச்சியடைந்தார். மாநில முதல்வராகத் தேர்ச்சியடைந்த படியால் திருப்பனந்தாள் மடத்தாருடைய நன்கொடையாகிய ஆயிரம் வெண்பொற் காசுகளையும் பெற்றார். சென்னைமாநகரில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் தலைமையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலக்குமணசாமி முதலியார் சங்குப் புலவரைப் பாராட்டிப் பணமுடிப்பை வழங்கினர்.

## மடத்தினர் பாராட்டு

திருப்பனந்தாள் மடத்தின் பரிசாகிய ஆயிரம் வெண் பொற்காசுகளையும் பெற்றபிறகு அப்பொழுது அம்மடத்தின் தலைவராக விளங்கிய சாமிநாதத் தம்பிரான் அவர்களைக் காணச் சென்றபொழுது அத்தம்பிரான் சங்குப்புலவரை வரவேற்றுப் பாராட்டினர். சகலகலாவல்லிமாலை என்னும் நூலைச் செப்பேடுகளில் எழுதுவித்துப் பட்டாடையால் சுற்றிப் பரிசாக வழங்கிச் சிறப்புச் செய்தார். அதனைப் பெற்ற சங்குப்புலவர் தம்பிரான் அவர்களைப் பாராட்டி,

''பல்லான்ற கேள்வியெனும் நாலடியு
மிருவேறென் பாவு மான
நல்லான்ற முதுமொழிகள் பொய்த்திடப்பொன்
னுடன்பனுவல் நங்கை சேர

வல்லானும் ஒருவித்து வானுக்கோ
ராயிரம்பொன் வழங்கி யன்றேன்
இல்லாமை தவிர்த்தளிக்குஞ் சாமிநாதப்
பெருமாற் கிணையார் மன்றோ"

என்பது முதலிய பாடல்களைப் பாடிப் புலவர் தம்முடைய நன்றியறிதலையும் தம்பிரான் அவர்கட்குத் தெரிவித்துக் கொண்டனர்.

## தமிழ் இலக்கிய மன்றம்

உத்தமபாளையம் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருக்குங்காலத்தில் அங்குப் புலவரோடு பணியாற்றிக் கொண்டிருந்த புலவர் சி. இராமசாமி என்பவர் சங்குப் புலவரின் கல்வித்திறத்தைக்கண்டு வியந்தார். புலவரின் பெருங்கல்வி நலத்தை அனைவருக்கும் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணினர். அங்குத் தமிழ் இலக்கிய மன்றம் ஒன்றை அமைத்து அதன்வழி பொதுமக்களுக்கும் கல்வித்தொண்டு செய்யவேண்டுமென்று வேண்டினர். வேண்டுகோட்படியே இலக்கியமன்றம் அமைந்தது. சங்குப் புலவர் மன்றத்தின் துணைத்தலைவராகவும் மன்றப்புலவ ராகவும் அமர்ந்து ஏழாண்டுகள்வரை நல்ல பணிபுரிந்தார். பொதுமக்கள் பலருக்கு இலக்கிய நூல்களைப் பாடஞ் சொல்லித் தமிழ்ச் சுவையை ஊட்டினர். இந்நிலையில் சங்குப் புலவருக்கு அகவை ஐம்பத்தைந்து நிறைவுபெற்ற படியினால் உத்தமபாளையத்தில் ஓய்வுபெற்றுக் கம்பம் சின்னமனூர் முதலிய வேறுசில இடங்களில் தமிழ்த் தொண்டு செய்தார்.

## தமிழ்ச் சங்கத்தில் வேலை

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் தமிழ்ச்சங்கக் கல்லூரிக்குத் தக்க தமிழ்ப்புலவர் ஒருவரைத் தேடினர். இறுதியிற் சங்குப்புலவரே தக்கவரென முடிவுசெய்து தமிழ்ச் சங்கத்தில் தொண்டாற்ற அழைத்தனர். சங்குப் புலவர்

அழைப்பை ஏற்றுத் தமிழ்ச் சங்க மாணவர்க்குக் கல்வி கற்பித்தனர். தமிழ்ச் சங்கச் சார்பில் நடைபெறுஞ் செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டுக்குக் கட்டுரைகளும் பல எழுதினர்.

### கழகப் புலவர்

சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மதுரையில் உள்ள திருவள்ளுவர் கழகத்தில் ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவு மகாநாடு நடத்தினர். அம் மாநாட்டுச் சொற்பொழிவுக்குச் சங்குப்புலவரும் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் சங்குப்புலவரின் தமிழ்ப்புலமை கழகத்தார்க்கு விளங்கியது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப்புலவராக அமர்ந்து பணியாற்றுமாறு சென்னைக்கு அழைத்தனர். சங்குப்புலவர் கழகத்தாரின் அழைப்பையேற்றுச் சென்னையடைந்து மறைமலையடிகள் நூல் நிலையத்தில் தங்கிக்கொண்டு கழகப்புலவராக பணியாற்றினர். அச்சேறும் நூற்படிகளைப் பார்வையிடல், கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் விரும்பும் நூல்கட்கு விளக்கவுரை யெழுதுதல், இலக்கணப்பாடப் புத்தகங்கள் எழுதுதல் முதலிய பணிகளைப் புரிந்ததோடு கழகத்தாரின் செந்தமிழ்ச் செல்வி திங்கள் வெளியீட்டிற்குக் கட்டுரைகளும் பல எழுதினர். கழகப்புலவராக அமர்ந்திருந்தபோது ஏழாம் வகுப்புக்குரிய கழகச் சிறுவர் இலக்கணம், ஒன்பதாம் வகுப்புக்குரிய கழகப் பூந்தமிழ் இலக்கணம், பதினொன்றும் வகுப்புக்குரிய பூந்தமிழ் இலக்கணம் முதலிய இலக்கணங்களையும், குலோத்துங்க சோழனுலா விளக்கவுரை, இராசராச சோழன் உலா விளக்கவுரை, விக்கிரம சோழன் உலா விளக்கவுரை, அழகர் கிள்ளை விடுதூது விளக்கவுரை, தமிழ்விடுதூது விளக்கவுரை, கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது விளக்கவுரை, தக்கயாகப் பரணியில் காளிக்குக் கூளி கூறிய பகுதிக்கு விளக்கவுரை ஆகிய விளக்கவுரைகளையும் எழுதினர். கழகவேலையில் இருந்து நீங்கியபின் பன்னூல் பாடல் திரட்டுக்குக் குறிப்புரை ஒன்று எழுதினர்.

### மணி விழா

இவர் கழகப் புலவராகப் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் 7-7-63 இல் மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் மணிவிழா நிகழ்ந்தது. மதுரைமாவட்டத்திலுள்ள பல நகரங்களில் இருந்தும் மக்கள் பலர்கூடி விழாவைச் சிறப்பித்தனர். விழாவில் குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கிப் புலவருக்குப் பொன்னாடை போர்த்தியருளினர். திருச்சி முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன், தேவாரம், பாரதி நாராயணசாமி, மதுரைத் தண்டலாளர் துணைத்தலைவர் இலட்சுமணப் பெருமாள், உத்தமபாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் காசிமுகமது இசுமாயில் ஆகியோர் புலவரைப் பாராட்டிப் பேசினர். பொற்கிழியளிப்பதற்கெனத் தொகுத்துவைத்திருந்த ரூ 1111 (ஆயிரத்து நூற்றுப் பதினொன்று) அக்கூட்டத்தில் வழங்கப்பட்டு விழா மிகுந்த சிறப்புடன் நடைபெற்றது.

### புலவர் கூட்டப் புலவர்

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் காலஞ் சென்ற ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் நாற்பத்தொன்பதின்மர் கொண்ட தமிழகப் புலவர் குழு ஒன்று அமைத்திருத்தலில் சங்குப் புலவரையுஞ் சேர்த்துப் பாராட்டினர். தொடக்கமுதல் இறுதிக் காலம் வரையில் சங்குப்புலவர் அக்குழுவின் உறுப்பினராகவிருந்தார்.

### நண்பர்கள் உதவி

சங்குப்புலவருக்குத் தக்கார் சிலர் நண்பர்களாக அமைந்திருந்தனர். அவர்களுட் சிறந்தவர்கள் பள்ளத்தூர் முருகப்பச் செட்டியார், பெரியகுளம் உப்பார்பட்டி இரா. ஞானதேசிகம்பிள்ளை முதலியோராவர். இவர்கள் "உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்னும் திருவள்ளுவரின் திருவாக்கிற்கோர் இலக்கியமாய்ப் புலவர் தளர்ந்த சமயங்களிலெல்லாம் வேண்டிய உதவி

களைச் செய்து காத்தனர். இவர்களுள் இரா. ஞானதேசிகம் பிள்ளை சங்குப்புலவரின் சமயமறிந்து உதவிசெய்து கொண்டிருந்தார். ஒருசமயம் தம் புதல்வருக்குப புத்தகங்கள் சில வாங்கப் பணமில்லாதிருந்தபோது சங்குப்புலவர்,

> "ஓலமலி நீர்வயல்சூழ் உப்பார்பட் டிப்பதிவாழ்
> சீலமலி நன்ஞான தேசிக—நூலறிரு
> இத்தருணம் நீயளிப்பாய் என்மைந்த னுக்குரிய
> புத்தகங்கள் வாங்கப் பொருள்"

என்னும் வெண்பாவை எழுதி ஞானதேசிகம் பிள்ளைக்கு அனுப்பினர். வெண்பாவைக் கண்ட பிள்ளையவர்கள் மகிழ்ச்சியடைந்து புலவருக்கு நூறு ரூபாய் அனுப்பினர். இவ்வாறு பல அன்பர்கள் சங்குப்புலவருக்கு உதவி செய்தனர். பெரியகுளம் புலவர் வி. சிவக்கொழுந்து என்பவர் அடிக்கடி செய்த உதவிகளைப் பாராட்டி அவர்மீது;

> "சமயமறிந் துதவிபுரி அறிவுசெயல் உறுதி யன்பு
> கமையிலுளைப் போன்ற நண்பர்க் காண்கிலமிக் கடற்புவியில்
> எமையறியா தேயப்புள் எழுமிதனை யாமறவேம்
> உமையொருபால் உடையவனை உளத்திருத்துஞ் சிவக்
> கொழுந்தே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

## நண்பர்மீது பாட்டு

ஒருமுறை சங்குப்புலவர் பெரியகுளத்தில் நிகழ்ந்த பெரியபுராண விரிவுரைக்குச் சென்றிருந்தார். விழா முடிந்த பிறகு விழாவுக்கு அழைத்திருந்த நண்பர் புலவருக்கு வழிச் செலவுக்குப் பொருள் வழங்கினர். நண்பரிடம் இருந்து பொருள் பெறுதலைப் புலவர் விரும்பவில்லை. ஆகவே, "வேண்டாம்" என்று கூறி மறுத்துவிட்டார். ஆனால் அந்நண்பரோ சமயம் பார்த்துப் புலவருக்குத் தெரியாமல் அத்தொகையினைப் புலவருடைய பணப்பையில் (மணிபர்ஸ்) செருகிவிட்டார். புலவர் ஊருக்குத் திரும்பினர்.

பேருந்து நிலையத்திற்கு வந்து பயணச்சீட்டு வாங்கும்போது தொகை மிகுதியாக இருப்பதை அறிந்தார். நண்பர் செய்த வேலை என்று தெரிந்து கொண்டு,

"தென்னுதமி ழன்புசிவம் வளர்த்துவரும்
சிவக்கொழுந்துச் செல்வா முன்னாள்
பொன்னெனமோட் டார்நிலயம் போயூர்க்குப்
புறப்படுமப் போது தோற்பை
உள்ளுறக்கை வைத்தெடுக்க இரண்டுவெண்பொற்
காசதிகம் ஊங்குக் கண்டேன்
உள்ளமதிற் நிகைப்பயிர்ப்பு வியப்புவெறுப்
புவப்புமுறை உதித்த வன்றே. (௪)

நெருநலிரு வருங்கூடி நீராடி
வருகின்ற நேர மாற்றின்
அருகிருந்த வெண்மணிப்பை நின்றனிக்கை
கொண்டெடுத்துன் அகத்திற் பேழை
மருவுறவைத் தெனக்களித்தாய் அச்சூழ்ச்சி
யின்றறிந்தேன் மனந்தெ ளிந்தேன்
தருசெலவு வாங்கமறுத் ததற்காவுட்
செறித்ததிது தானென் றன்றே. (௫)

ஒருபொருள்கொள் ளெனக்கொடுத்தல் உனக்குயர்வென்
றெனக்களித்தாய் உவந்து யானோ
வருபொருள்கொள் ளேனென்றல் எனக்குயர்வென்
றுங்கதனை மறுத்தேன் நீயோ
இருவரிடை உயர்வுதாழ் வில்லையெனப்
பிறர்மதிக்க இதுசெய் தாயால்
ஒருவருமென் புடையாரன் புடையார்நின்
போலிலரிவ் வுலகின் மீதே. (௬)

செந்தமிழ்ப்பற் றேடுபெருஞ் செல்வம் படைத்த நண்பர்
தந்தபொருள் அத்தனையுந் தானேற்பேன்—நந்தும்
புலமை யுடையாரென் போல்வார்தந் தால்யான்
வலமை யுடன்மறுப்பேன் மன். (௭)

என்றுஞ் செய்யுட்களை எழுதியனுப்பினார்.

## நல்லியல்புகள்

சங்குப்புலவரிடம் பெரும்புலவர்கட்கு இருக்க வேண்டிய உயரிய பண்புகளெல்லாம் ஒருங்கமைந்திருந்தன. கழகப் புரிவராக வந்தது முதல் சில ஆண்டுகள் இவரோடு ஓரிடத்தில் தங்கியிருக்கும் வாய்ப்பு எனக்கு நேர்ந்தது. உடல்நிலை காரணமாக வேலையிலிருந்து விலகிப் பூசாரிக் கவண்டன் பட்டியாகிய ஊரையடைந்து தங்கியிருந்தார். இறுதியில் 1968 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலைமகள் விழாவின்போது திருக்கழுக் குன்றத்திற்குக் கழகப்புலவர் குழுவுக்கு வந்த இவர் சென்னைக்கும் வந்து சிலநாட்கள் தங்கியிருந்தார். பிறகு ஊருக்குப் போய் வருவதாகக் கூறிப் புறப்பட்டார்.

## இறுதி

புலவர் ஊருக்குப்போய் வருவதாகக் கூறிப் புறப்பட்ட சில நாட்களுக் கெல்லாம் 19-10-68 இல் இவ்வுலக வாழ்வையே துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்த செய்தி கிடைத்தது.

> "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
> பெருமை உடைத்திவ் வுலகு"

என்பது தமிழ்மறையன்றோ ?

## புலவர் பாடிய தமிழ்த்தாய் வணக்கம்

காதிலகுங் குண்டலமாக் குண்டலகே
　　சியுமிடையே கலையாச் சாத்தன்
ஓதுமணி மேகலையும் ஒளிர்கைவளை
　　யாவளையா பதியும் மார்பின்
மீதணிசிந் தாமணியாச் சிந்தாம
　　ணியுங்காலில் வியன்சி லம்பாத்
தீதில்சிலப் பதிகார மும்புனைந்த
　　தமிழணங்கைச் சிந்தை செய்வாம்

## ௨௦. அ. க. நவநீதகிருட்டிணன்

### தோற்றம்

பாண்டிவள நாட்டிலே திக்கெலாம் புகழுந் திருநெல்வேலி சிறப்புப் பொருந்திய மாநகராகுமென்பது, "திக்கெலாம் புகழுந் திருநெல்வேலி" என்று தேவாரத்திலேயே பாடப்பட்டிருத்தலால் நன்கு பெறப்படும் இத்திருநெல்வேலி மாவட்டத்திலே அம்பைத் திருநகர்க்கண்மையில் ஊர்க்காடு என்னுஞ் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் அரசவரகவி அங்கப்ப பிள்ளையென்பவர் குறுநிலமன்னரின் அவைக்களப் புலவராகச் சிறந்து விளங்கியிருந்தார். இவருடைய மக்கள் மூவரில் நடுவராக அ. க. நவநீத கிருட்டிணன் 1921 ஆம் ஆண்டிலே பிறந்தார். இவருக்கு மூத்தவர் பெயர் இராச கோட்டியப்பன். இளையவர் பெயர் சண்முகசுந்தரம். நவநீத கிருட்டிணரின் முழுப்பெயர் கங்காதர நவநீத கிருட்டிணன் என்பது.

### கல்வி

நவநீத கிருட்டிணர் பள்ளிக் கல்வியைப் பாங்குடன் கற்றுமுடித்த பின்னர்ப் புலமைக் கல்வியுங் கற்றுச் சிறப்படைய எண்ணினார். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்திற்குச் சென்று கல்வி கற்றார். கல்வி கற்கும் பொழுதே செய்யுள் பாடவும் கட்டுரைகள் எழுதவும் வல்லவரானார். இவர் கல்வி கற்றபொழுது நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களும் அங்குக் கல்விபயின்றனர். அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய நன்மதிப்பையும் பெற்றார்.

### ஆசிரியப் பணி

புலவர்கல்வியைப் பயின்று தேர்ச்சி பெற்ற பிறகு திண்டுக்கல் புனித ஜோசையப்பர் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் ஈராண்டுகள் பணி புரிந்தார்.

### திருமணம்

சிவகாசி மகராச பிள்ளை யென்பவரின் ஒரே மகளான பிச்சம்மாள் என்னும் பெண்மணியை மணந்து இல்லற வாழ்விலும் ஈடுபட்டார்.

### நெல்லையில் பணி

திருமணமான பிறகு பாளையங்கோட்டையில் குடியேறி நெல்லையிற் பணிபுரியலானார். மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாண்டுகள் ஆசிரியராக விருந்தார். பிறகு மதுரை திரவியம் தாயுமானர் இந்து கலாசாலைப் பள்ளியில் பதினைந்தாண்டுகள் பணிபுரிந்தார். தமிழ்ப்பணியோடு சிவப் பணியையும் இடையிடையே செய்து வந்தார்.

### நூல்கள் எழுதுதல்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இவருடைய புலமை நலத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். காலத்துக்கு வேண்டியவாறு நூல்களையெழுதச் செய்தனர். இவரும் அவ்வாறே எழுதிப் பொருளும் புகழும் அடைந்தார்.

### திருக்குறட் பணி

திருக்குறளின் அருமை பெருமைகளை உள்ளவாறுணர்ந்த இவர் தாம் பெற்ற இன்பம் இவ்வுலகமும் பெற வேண்டும் என்று எண்ணித் திருக்குறளைப் பலருக்கும் போதித்ததோடு வள்ளுவர் சொல்லமுதம் என்னும் நூலையும் நான்கு பகுதிகள் எழுதினார். திருவள்ளுவர் கழகத்திற்குப்

பன்னிரண்டு ஆண்டுகள் தலைவராக அமர்ந்து பணி புரிந்தார். நெல்லையப்பர் திருக்கோயிலிலும் ஈராண்டுகள் திருக்குறள் விரிவுரையாற்றினார். கணபதியாலைத் தொழிலாளர்கட்குத் திங்கள் தோறும் திருக்குறளைப் போதித்தார்.

## பல பணிகள்

பாளையங்கோட்டை சைவ சபையில் ஆண்டுதோறும் கலைமகள் விழாவை யேற்று நடத்தினார். நெல்லை அருணகிரி இசைக்கழகச் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ்த்திருநாட்களில் முதல்வராக நின்று நிகழ்ச்சிகளை நடத்தினார். பாளையங்கோட்டை அருட்பணி மன்றத்தின் சமயப் பணியாளராகவும் விளங்கினார். நெல்லையில் உள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைச் சேர்ந்த திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரியில் மாலை நேரத்தில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்து தனிப்பட்ட ஆசிரிய மாணவர்கட்குத் தமிழ்பயிற்றுவித்துப் புலவர்களைத் தோற்றுவித்தார்.

## பட்டமும் பாராட்டும்

இவருடைய தமிழ்த்தொண்டையும் சிவத்தொண்டையும் உணர்ந்த பேரறிஞர் பலர் இவரைப் பாராட்டுவாராயினர். மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் திருப்பெருந்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் "தமிழ்க் கொண்டல்" என்ற சிறப்புப் பெயரை வழங்கினார். தருமபுரம் மகாசந்நிதானம் தவத்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், "செஞ்சொற்புலவர்" என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கினார். தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், திரு. க. அன்பழகன் அவர்களும் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்.

## குணநலமுங் கலையழகும்

தமிழ்த் தொண்டால் தழைத்தோங்கிய இவர் பிறர் கலங்கருதும் பெருந்தன்மையும் உடையவர். எளியோரை

யும் வறிய சிறியோரையும் ஆதரித்து வந்த அருங் குணச் செம்மல். இனிய பேச்சும் மலர்ந்த முகமும் கள்ளமில்லாத உள்ளமும் விருந்தோம்பும் பண்பும் இவருடைய குணநலத்தைச் சிறப்பாக எடுத்துக் காட்டின. இவருடைய செந்தமிழ் நடையழகும் கருத்தழகும் கட்டுரைத் திறனும் எடுத்த கருத்தை அடுக்கு மொழியில் தொடுத்து முடிக்கும் இனிய பேச்சும் இவருடைய புலமையை மேலும் அழகாக்கின.

## மக்கட் செல்வம்

இவருக்கு ஐந்து ஆண்மக்களும் மூன்று பெண் மக்களும் மக்கட்செல்வங்களாக அமைந்துள்ளனர்.

## இறுதி

ஊழ்வினை தன் பயனை உருத்துவந் தூட்டுவது உலக வியல்பு. அவ்வாறே இவரிடமும் உருத்து வந்தது. சித்திரை முதல் நாளில் கைத் தொழிற் பொருட் காட்சியில் தொழிலது ஏற்றத்தை நெசவாளர்கட்கு எடுத்துரைத்தார். "எத் தொழிலைச் செய்யினுந் திருவைந் தெழுத்தை ஓதியே செய்தல் வேண்டும். தமிழே உறுதி தரும்" எனச் சைவச் சிறப்பையுந் தமிழ்ச் சிறப்பையும் எடுத்துப் பேசினர். பிறகு இல்லத்தை யடைந்தவர் திடீரென அன்றே (1967) இவ்வுலக வாழ்வைத் துறந்து தம்முடைய நாற்பத்தாறும் அகவையில் இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார். "என்னே நிலையாமையின் இயற்கை" என்று பலரும் இரங்கி வருந்தலாயினர். இவர் தம்முடைய குடும்ப நலத்துக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யாமையின் குடும்பநிலை குறித்தும் பலர் இரங்கலாயினர்.

## இயற்றிய நூல்கள்

(க) காவியஞ் செய்த மூவர்

(உ) இலக்கியத் தூதர்

(௩) கோப்பெருந் தேவியர் மூவர்
(௪) இலக்கிய அமைச்சர்கள்
(௫) அறநூல் தந்த அறிவாளர்
(௬) தமிழ்காத்த தலைவர்கள்
(௭) முதல் குடியரசுத் தலைவர்
(௮) முத்தமிழ் வளர்த்த முனிவர்கள்
(௯) தமிழ் வளர்ந்த கதை
(௧௦) ஔவையார் கதை (வில்லுப்பாட்டு)
(௧௧) திருவள்ளுவர் கதை ஷை
(௧௨) சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை
(௧௩) டாக்டர் சேதுப்பிள்ளை
(௧௪) வள்ளுவர் சொல்லமுதம் (4 பகுதிகள்)
(௧௫) அடேக்குமொழி ஆவுடையப்பர் வரலாறு

## ௨௧. ரங்கராசு - ஜே. ஆர்

ஜெகதாபி ரகுபதி ரங்கராசு என்னும் முழுப் பெயர் உடைய இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங் கோட்டையில் 1875 ஆம் ஆண்டிற் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் ரங்கராசு; தாயார் பெயர் இலட்சுமியம்மாள். ரங்கராசு இவர்களுக்கு மூன்றாவது புதல்வராகப் பிறந்தார். இவர்கள் வைணவ சமயத்தினர்.

ரங்கராசு கல்விகற்கத் தொடங்கி மெட்ரிகுலேஷன் வரையிற் கற்றார். பிறகு சென்னை மாநகரை யடைந்து தம் முடைய உடன்பிறந்தாரோடு வெண்ணெய் வாணிகஞ் செய்தார்.

ரங்கராசுவின் எண்ணம் நவீனங்கள் எழுதவேண்டு மென்பதிற் சென்றது. 1908 ஆம் ஆண்டு தொடங்கி நவீனங்கள் எழுதத் தொடங்கினார். இராசாம்பாள், சந்திர காந்தா, மோகனசுந்தரம், ஆனந்த கிருட்டிணன், இராசேந்திரன், வரதராசன், செயரங்கன் முதலிய நாவல்களை எழுதி அவைகளைத் தாமே வெளியிட்டார். இந்நாவல்களில் துப்பறியுங் கோவிந்தன் என்னும் கதையுறுப்பினனைப் படைத்துள்ளார்.

பழக்க வழக்கங்கள் சமயம் இவற்றின் பெயரால் சமூகத்தில் ஏற்பட்டிருந்த ஊழல்கள் பலவற்றை இவர் தமது நாவலில் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

இவருடைய நாவல்கள் சில நாடகங்களாக நடிக்கப் பட்டன. சில திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டன. இவருடைய கதைப் போக்கு விறுவிறுப்பமைந்து கற்பவர் களின் உள்ளத்தைக் கவரும் ஆற்றல் வாய்ந்தது.

எண்பது ஆண்டுகட்கு மேலும் வாழ்ந்திருந்த இவர் 1959 ஆம் ஆண்டில் சென்னை கிண்டியில் உள்ள தம்முடைய இல்லத்தில் இவ்வுலகவாழ்வைத் துறந்து வைகுண்ட பதவியை அடைந்தார்.

## உஉ. தசாவதானி ஆறுமுகம் பிள்ளை

### தோற்றம்

அவதான அருட்களஞ்சியமாகிய பி. ஆறுமுகம் பிள்ளை நாகர்கோயிலைச் சேர்ந்த கோட்டாறு என்னும் ஊரிற் கொல்லம் ஆண்டு 1067 இல் மாசித்திங்களில் பிறந்தார்.

### கல்வி

இளமையிற் கற்கவேண்டிய பள்ளிக் கல்வியைப் பாங்குறக் கற்றுத் தேறியபின் அவ்வூரிலேயிருந்த செய்கு தம்பிப் பாவலர் என்னும் முகமதியப்புலவரிடம் கல்வி கற்றார். இந்தச் செய்குத் தம்பிப்பாவலர் நூறு செயல்களை ஒருங்கே முடிக்கும் ஆற்றல் அமைந்தவராகலின் சதாவதானி என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்றவர். இத்தகைய பெரும் புலவரிடத்திலே கல்விகற்கத் தொடங்கினார் ஆறுமுகம் பிள்ளை. பாவலரிடம் கல்விகற்கத் தொடங்கிய ஆறுமுகம் பிள்ளை இலக்கண இலக்கியங்களை நன்குகற்றுச் செய்யுள் பாடுந் திறமடைந்தார். கவிபாடல், கண்டப்பத்திரிகை, கண்டத்தொகை, காலக்கணிதம், இழமை கூறுதல், கல்லெறி எண்ணல், இலாடச்சங்கிலி கழற்றல், முருகன் புகழ் மொழிதல் ஆகியனவாகிய தசாவதானங்களையுங் கற்றறிந்தார்.

இந்தப் பத்து அவதானங்களிலும் ஆசுகவி, கண்டத் தொகை, கண்டப்பத்திரிகை, இழமை கூறுதல் ஆகியன கடினமானவை. இவரோ எல்லாவற்றிலும் வல்லவராக விளங்கினார். இலங்கை முதலிய இடங்களுக்கும் போய் இவர் அவதானங்கள் நடத்தினார். அவ்விடங்களில் இருந்த சிறந்த தமிழறிஞர்கள் இவருடைய அவதானத் திறமையைப் பலவாறு ஆராய்ந்து இவருடைய நுண்ணறிவைப் பாராட்டினர்.

அவதானங்கள் செய்தல்

இந்தியாவிலும் இவருடைய அவதானங்கள் பலவிடங்களில் நிகழ்ந்தன. இவர் தூத்துக்குடியில் தசாவதானம் செய்தார். அப்பொழுது ஒருவர் இவருடைய திறமையை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினர். மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு ஒருவெண்பாப் பாடுங்கள் என்று வேண்டிக்கொண்டார். உடனே இவர்,

"மொட்டைத் தலையன் முழுநீறன் மூத்துமணிக்
கட்டை அணிந்த கழுத்தழகன்—எட்டியிடச்
சேனு நடக்குந் திருப்பழநி வேலவனைக்
காண நடக்குமுழங் கால்!"

என்று பாடினர். அவையோர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருநெல்வேலியில் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தலைமையில் தசாவதானம் நடைபெற்றது. அப்பொழுது ஒருவர், "தாங்கன்னி வெள்ளியிரேழ் தான்" என்ற ஈற்றடியில் ஒரு வெண்பாப் பாடவேண்டும் என்றார். இவர்;

"மல்குபுகழ்க் கார்திமதி நெல்லையப்பர் மண்டபத்தில்
பல்கு மவதானம் பத்தினையும்— நல்கிடவே
ஆங்குரைத்தான் ஆறுமுகன் ஆயிரத்து நாற்றென்ப
தாங்கன்னி வெள்ளியிரேழ் தான்"

என்று பாடலை முடித்து அனைவருடைய பாராட்டையும் பெற்றார்.

கொழும்பில் அவதானம் நடந்துகொண்டிருந்தபொழுது ஒருவர் "முடி என்று தொடங்கி முடி என்று முடிய ஒரு குறள் வெண்பாப் பாடுக" என்று கேட்டார். உடனே அவதானியார்;

"முடியில் நிலவை முடித்தான் அடியை
முடியில் விரவி முடி"

என்று பாடினர்.

1949 டிசம்பர் 11 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று சென்னையில் முன்னாள் முதலமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் இவருடைய தசாவதானம் நடைபெற்றது. இதற்கு திரு. வி. கவும் வந்திருந்தார். சென்னை அரசாங்கப் பொருளாதார நிபுணர் டாக்டர் பா. நடராசன் அவதானக் கூட்டத்தை முன்னின்று நடத்தினர். கேட்கப்பட்ட கேள்விகளுக் கெல்லாம் அவதானியார் சரியான விடையளித்தார்.

"கைதலைவைத்தான் சங்கரன்"

"கைதலைவைத்தான் சங்கரன்" என்பதை ஈற்றடியாகக் கொண்டு ஒரு வெண்பா இயற்றுமாறு ஒருவர் கேட்டார். தலையிலே கையைவைத்துக் கொண்டு வருத்தப்படுமாறு சிவபெருமானுக்கு என்ன துன்பம் நேர்ந்திருக்கும். அவதானியார் இதனை எவ்வாறு முடிக்கப் போகிறார் என்று பலரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவதானியார், "முன்னொருநாள்" என்ற முதற்சீரோடு பாடலை இயற்றத்தொடங்கினர். மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் விடை கூறிக்கொண்டே இடையிடையே ஒவ்வொரு சீரைச் சொல்லிக் கொண்டு வந்தார். இறுதியில்,

"முன்னொருநாள் சோழ முதல்வன் தவமியற்றப்
பன்னியிடும் பாகீ ரதிபடர்ந்தான்—பின்னவரே
உய்தலது நாடிவரும் உம்பர்க்காய்ச் சீரார்கங்
கைதலைவைத் தான்சங் கரன்"

என்னும் வெண்பா உருவாகியிருந்தது. கேள்வி கேட்டவர் என்னபொருளை உள்ளத்தில் நினைத்துக்கொண்டு ஈற்றடியைக் கொடுத்தாரோ தெரியவில்லை. இப்பாடலைக் கேட்ட அவையோர் பேராரவாரஞ் செய்து மகிழ்ந்தனர். அன்றைய அவதானத்தில் உயர்நீதிமன்ற நடுவர்களும் பெரும்புலவர்களும் கேள்வியாளர்களும் பார்வையாளர்களும் மிகுதியாகக் கூடியிருந்தனர். நீதிபதி ஒருவர் "26-1-1899 அன்று, என்ன கிழமை?" என்று உசாவினர். அவதானியார் ஒரு கணம்

எண்ணினர். "வியாழக்கிழமை" என்று மறுமொழி பகர்ந்தார். கேள்விகேட்டவர் விடைசரிதான் என்று ஒப்புக்கொண்டார். இதைப்போலவே 11—11—1918, 5—5—1906, 30—7—1909 ஆகிய தேதிகட்கும் முறையே திங்கள், சனி, வெள்ளி என்று கிழமைகளை அவதானியார் சரியாகச் சொல்லிவிட்டார்.

## கண்டப்பத்திரிகை

ஒரு வாக்கியத்தை எழுத்து எழுத்தாகப் பிரித்து ஒரே குழப்பமாகப் பத்தாவது எழுத்து 'தை' பதினேழாவது எழுத்து, 'தி' என்று இப்படியாக அவதானியாரிடம் இடையிடையே கூறிவந்தார் ஒரு கேள்வியாளர். அவற்றை மனத்திலே பதியவைத்துக் கொண்டு கடைசியில் அந்த வாக்கியம் இன்னது என்று அவதானியார் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார். கண்டுபிடித்த வாக்கியம் "பழகுதமிழில் கவிதை தந்தார் பாரதி" என்பதாகும். இந்த அவதானத்திற்குக் கண்டப்பத்திரிகை என்றுபெயர்.

## கண்டத் தொகை

கேள்வியாளர் கூறும் தொகையை 16 கட்டங்கள் கொண்ட சதுரத்தில், எப்பக்கம் கூட்டினாலும் அதே தொகை வரும்படி ஒரு கட்டத்தில் அமைத்த எண் மறுகட்டத்தில் வராதவண்ணம் அமைத்துக் காட்டுவது கண்டத்தொகை எனப்படும். இதன்படி எழுது கோலின் துணையில்லாமல் எப்பக்கம் கூட்டினாலும் 4884 வரும்படியாகச் சதுரத்தை அமைத்து இந்த அவதானத்தையும் அமைத்து அவதானியார் அன்று செய்து காட்டினார்.

## அவதான அருட்களஞ்சியம்

இவ்வாறு ஆறுமுகம் பிள்ளை மிக எளிதாக அவதானங்களைச் செய்து மக்களை மகிழ்வித்தமையை அனைவரும் பாராட்டி "அவதான அருட்களஞ்சியம்" என்னும் சிறப்புப்

பட்டத்தையும் அளித்தனர். இவருடைய அவதானத்தை வியந்து கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,

"ஆறுமுகம் பிள்ளை அவதானம் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ—தேறுமதி
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்துசபாஷ்
பேஷையா என்ற பிறகு"

என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

## அவதானம்

அவதானங்கள் எட்டுச் செய்வது அட்டாவதானம் எனவும், பத்துச்செய்வது தசாவதானம் எனவும், பதினாறு செய்வது சோடசாவதானம் எனவும், நூறு செய்வது சதாவதானம் எனவும் பெயர்பெறும். இவ்வவதானங்களைச் செய்வதற்குப் பெரும் புலமையும் நினைவாற்றலும் தெய்வத் திருவருளும் இருத்தல் வேண்டும். இவர் அவைகளெல்லாம் கைவரப்பெற்றிருந்தார். இவர் திருவாவடுதுறை ஆதினத்தின் சைவச் சொற்பொழிவாளராக இருந்து நல்ல சமயப்பிரசாரமும் செய்தார். நூல்களும் எழுதினர்.

## இயற்றிய நூல்கள்

(க) சிவஞானபோத அதிகரண வெண்பா
(உ) சேரமண்டலசதகம்
(ங) குசேலவெண்பா
(ச) தில்லைப்பதிற்றுப் பத்தந்தாதி
(ரு) காந்திவெண்பா
(சு) சசி வோத்தம நான்மணிமாலை

முதலியன இவர் எழுதிய நூல்கள்.

———

## ௨௩. சிவராச பிள்ளை. க. நா.

இவர் பாண்டிவளநாட்டில் திருநெல்வேலிக் கண்மையில் உள்ள கங்கை கொண்டான் நாராயணபிள்ளை என்பவருடைய பிள்ளையாக இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் என வழங்கும் பழைய நாஞ்சில் நாட்டில் 1879 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் நாராயண பிள்ளைக்கு நாலாவது பிள்ளையாகப் பிறந்தார். இவருடைய தமையனார்களில் மூத்தவருடைய பெயர் குமரேசபிள்ளை. இக் குமரேசபிள்ளை திருவாங்கூரில் சிலகாலம் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். அவரும் நல்ல தமிழறிஞர். கம்பராமாயணத்தில் நல்ல பயிற்சியுள்ளவர்.

சிவராசபிள்ளை முதலில் நாகர்கோவிலில் கல்விகற்கத் தொடங்கினார். பிறகு சென்னை கிறித்துவக் கல்லூரியிற் பயின்று பி. ஏ. பட்டம்பெற்றார்.

படிப்பு முடிந்ததும் அலுவலில் இறங்கினார். திருவாங்கூரில் காவல்துறையிற் சேர்ந்தார். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட சிவராசருக்குக் காவல்துறைவேலை பொருத்தமாகவில்லை. ஆகவே இவர் அவ்வேலையில் இருந்து விலகிப் பத்திரிகைத் தொழிலில் இறங்கினார், "நாஞ்சில் நேசன்" என்னும் இதழை வெளியிட்டார். மனோன்மணீயம் என்னும் நூலை எழுதிப் புகழ்பெற்ற பேராசிரியர் P. சுந்தரம்பிள்ளைக்கும் இவருக்கும் தொடர்பு உண்டாகியது. அவர் அப்பொழுது 'மக்கள் கருத்து' என்னும் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க இவர் தம்முடைய பத்திரிகையை நிறுத்தி விட்டுச் சுந்தரம்பிள்ளையிடம் அவருடைய பத்திரிகையின் உதவியாசிரியராகப் பணிபுரிந்தார்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மறைவுக்குப் பின் இவர் "மலபார் மறு ஆய்வு" என்னும் காலாண்டுப் பத்திரிகை

யைத் தொடங்கினர். சிலகாலத்திற்குப் பிறகு குடும்பத் தொல்லைகள் காரணமாக இப்பத்திரிகையும் நின்றது. இவர் இப்பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்கும் பொழுது இலங்கை சர். பொன்னம்பலம் இராமநாதன் என்பவரோடு தொடர்பு உண்டாகியது. அவர் இராமாயணத்தைப் பதிப்பிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அவர் தமக்கு உதவி செய்யுமாறு இவரை அழைத்தார். இவரும் மகிழ்ச்சியோடு அப்பணியை மேற்கொண்டார். அவ்வேலை இலங்கையில் இரண்டு ஆண்டுகளில் முடிவுபெற்றது. அதற்குப் பிறகு 1927 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகச் சேர்ந்தார். 1930 இல் முதுவிரிவுரையாளரானர்.

வேங்கடராசலு ரெட்டியார், அனவரதவிநாயகம்பிள்ளை ஆகியவர்களைக் கொண்ட குழுவொன்று "நாநார்த்த தீபிகை" என்னும் நூலைப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தது. அக்குழு இவருடைய நூல்களாகிய, "தமிழ் நாட்டில் அகத்தியர்" "துவக்க காலத் தமிழரின் கால ஆராய்ச்சி", "புறநானூற்றின் பழமை" என்னும் நூல்களையும் வெளியிட்டது.

1936 இல் பல்கலைக் கழகத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு நாகர்கோவிலில் நிலையாகத் தங்கித் தமிழாராய்ச்சிப் பணியைத் தொடர்ந்து நடத்தினர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பத்திரிகையாகிய செந்தமிழ்ப் பத்திரிகைக்குக் கட்டுரைகளும் பாடல்களும் எழுதினர்.

தமிழைப்பற்றிய ஆராய்ச்சி அதிகமாக முன்னேருத அந்நாளில் இவர் தமிழாராய்ச்சியை மேற்கொண்டது பாராட்டற்குரியது. எட்டுத் தொகை நூல்களில் கலித் தொகை காலத்தாற் பிற்பட்டது என்று முதன் முதலில் வலியுறுத்திக் கூறினவர் இவரே.

செய்யுள் பாடுந் திறமும் நன்கமையப் பெற்ற இவர் சிறுபாமாலை, மேகமாலை, நாஞ்சில் வெண்பா என்னும் நூல்

களைத் தாமே அச்சிட்டு வெளியிட்டார். இவர் ஆங்கிலக் கட்டுரைகள் சிலவும் எழுதினர். அவை ஆங்கிலேயர்களாலும் பாராட்டத் தக்கனவாக விளங்கின. இவர் எழுதிய நூல்களைப், "பேராசிரியர் சிவராசபிள்ளை நினைவுச் சின்னக் குழுவினர்" என்போர் வெளியிட ஏற்படுத்தப்பட்டுள்ளனர்.

சிவராசபிள்ளை 1941 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

## ௨௬. மொட்டை வேலாப் போடியார்

### பிறப்பு

இவர் 1804 ஆம் ஆண்டில் ஈழவளநாட்டில் மட்டக்களப்பில் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் சின்னத்தம்பிப் போடியார் தாயார் பெயர் செங்காத்தை. இவருக்கு இடப்பெற்ற இயற்பெயர் வேலன்; அதனோடு இவர் பிறந்த முக்குவர் குடிப்பெயராகிய போடி என்னுஞ் சொல்லும் ஆர் என்னும் சிறப்பு விகுதியும் வழங்கத் தொடங்கின. பிற்காலத்திலே தலை வழுக்கையாக இருந்த படியால் மக்கள் இவரை மொட்டை வேலாப் போடியார் என்று அழைக்கலாயினர். தமது வழுக்கைத் தலையில் தடவிய எண்ணெய் வழிந்தோடாமல் பனையோலையால் வட்டமான முடியொன்று செய்து தலையில் அணிந்திருக்கும் வழக்கம் உடையவராக இருந்த படியினால் ‘மகிட வேலாப் போடியார்’ என்றும் அழைக்கப் பெற்றார்.

### கல்வி

வேலாப் போடியார் தம்முடைய இளமைப் பருவத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கல்விகற்கத் தொடங்கினார். சில ஆண்டுகள் மிகுந்த முயற்சியோடு பள்ளிக்கல்வியைப் பாங்குறப் பயின்றார். பள்ளிப் படிப்போடு இவருடைய படிப்பு நின்றுவிட்டது. தம்முடைய நிலைமைக்கு ஏற்றபடி பயிர்த்தொழில் செய்தலை மேற்கொண்டார். அத்தொழிலைச் சார்ந்து நாட்டில் வழங்கிவந்த பள்ளு, ஊஞ்சல், அம்மானை, சிந்து முதலிய பலவகைப் பாடல்களையும் பிறர் பாடுதலைக் கேட்டுத் தாமும் அவைகளைக் கற்றுக்கொண்டு பாடலானார். அப்பாடல்களைப் போன்ற பாடல்களைத் தாமும் இயற்றலானார். இதனால் இவருக்குச் செய்யுள் பாடும் ஆற்றலும் கல்வியை மேலும் நன்கு கற்க வேண்டும் என்னும் ஆர்வமும்

அதிகரிக்கலாயின. ஒழிவு நேரங்களிலெல்லாம் பலவகையான நூல்களையும் படித்துத் தம்முடைய அறிவை விசாலப் படுத்திக் கொண்டார்.

## புலவர் மன்றம்

நாளடைவில் இவர் ஒரு புலவரானார். பலரும் இவருடைய பாடல்களை விரும்பிக் கேட்கலாயினர். நண்பகலுணவுக்குப் பிறகு சிற்றூர்ப் புறங்களிலேயுள்ள பலர் மரநிழல்களிலே அமர்ந்துகொண்டு கதைபேசிக் காலங் கழிப்பது வழக்கம். சிலர் அவ்வேளைகளில் பயன்தரத்தக்க கலையாராய்ச்சியிலும் ஈடுபடுவர். அத்தகையோருடைய மன்றத்திலே வேலாப் போடியார் புலவரானார். அம்மக்கள் முன்பு புதியன புனைந்து தம்முடைய புலமையைப் பலருக்கும் புலப்படுத்தினார். இவருடைய புலவர் மன்றம் மட்டக் களப்பு நகருக்குத் தென்பால் அமைந்த அக்கரைப்பற்று என்னுஞ் சிற்றூர்ப் புறத்தே ஒரு மருதமரத்தடியில் அமைந்திருந்தது. நாள்தோறும் அங்குச் சொற்பொழிவுகளும் செய்யுளியற்றுதலும் மிகுதியாகிப் புலவர் மன்றம் மிகுந்த ஆரவாரத்தோடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## வசைப் பாட்டு

புலவர்களின் கல்வியறிவு மிகுதிப்படின் அவர்களிடம் தெய்வத் தன்மையும் வளரும். அறிவே தெய்வம் என்பது மறைமுடிவுக் கொள்கை. இதனால்தான் புலவர் பலருடைய வாக்குகள் அப்படியே பலித்து நன்மையையோ அல்லது தீமையையோ கொடுக்கக் கூடிய சிறப்பை அடைகிறது. மொட்டை வேலாப் போடியாருடைய புலமை வளர வளர அவருடைய தெய்வத் தன்மையும் வளரத் தொடங்கியது. இவர் பாடுகிற வசைப்பாடல்கள் பலிக்கத் தொடங்கின. தீமை செய்பவர்கள் மீதும் தீய நடத்தையோடிருப்பவர்கள் மீதும் இவர் வசைப்பாட்டுகள் பாடலானார். போடியாருடைய போக்கு ஒரு செல்வனுக்குப் பிடிக்கவில்லை. அவன் இவர்

மீது சினங்கொண்டான். மறைமுகமாக ஓர் இடையனை அனுப்பி இவருடைய மன்றத்திற்கு நிழலளித்துக் கொண்டிருந்த மருதமரத்தின் கிளைகளை வெட்டிவிடச் செய்தான். இதனால் மன்றம் வெறிச்சோடி வெயிலாக விளங்கியது. இதனாற் சினங்கொண்ட இவர் வசைபாடத் தொடங்கினர் ;

"முத்தர் பாண்டியர் மூவர் இருக்கின்ற
மத்தி யான மருத நிழல்தனைக்
கத்தி கொண்டதன் கந்தற வெட்டினன்
சத்தி வேலவன் தலையற வெட்டுவாய்"

என்னும் பாடலைப் பாடினர். மரத்தை வெட்டியவன் அச்சமயத்தில் தன்னுடைய மாடுகளை வீட்டுக்கு ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அவன் சென்றுகொண்டிருந்த நிலையிலேயே மயங்கி விழுந்து மாண்டான். இவரிடம் பகைபாராட்டத் தொடங்கியவர்கள் பிழைபொறுக்க வேண்டி மன்னிப்புப் பெற்றனர். முத்தர் பாண்டியர் என்பவர்கள் இவருடைய நண்பர்கள். மத்தியான என்னுஞ் சொல், ஊருக்கு நடுவான இடம் எனவும்; மதியவேளை யெனவும்; மருதமரம் எனவும் பல பொருளைத் தந்துநிற்கும் அழகு பாராட்டி மகிழத்தக்கதாம்: இவருடைய முன்னோர்கள் வழி வழிமுறையாகப் புலவர்கள். பின்னோரும் புலவர்களாயினர். வழிவழிப் புலவர்களின் வாக்குரை பெரும்பாலும் பலித்தே தீரும்.

## நூல் செய்தல்

தம்பிலுவில் என்ற ஊரில் அந்நாளில் நீர்ப்பாசன அதிகாரி ஒருவன் இருந்தான். அவன் தவறான காதல்வழியிலே இறங்கினன். அதனால் காதலுக்கப்பட்டுத் துரத்தப்பட்டான். அதனால் காதலி மனம் வருந்தி அவனுக்குப் பால் மாடுகளைக் கொடுத்தனுப்பினாள். இவ்வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு 'தம்பிலுவிற் பள்ளு' என்னும் ஒரு நூலைப் பாடினர்.

"காதறுந்த வேதனைக்குப் பால்கறந்து உண்ணவென்று
காரிகையாள் மாடுகன்று தான்கொடுத்து விட்டாளாம்
காதறுந்து நாவரண்டு காமவிடா யால்மெலிந்து
காட்டகத்திற் பேயதுபோல் காளையவன் ஓடினனும்"

என்பது நூலின் பாடல்களில் ஒன்று. மக்களின் விருப்பப்படி இவர் அவ்வக்காலங்களிற் சிந்து, ஊஞ்சல் முதலிய நூல்களை இயற்றிக் கொடுத்தார்.

## பேரர்

இவருடைய பேரனாகத் தோன்றிய ஒருவர் புலமைக்கல்வியைக் கற்காமல் வழிமுறைக்கேற்ப இயற்கைப் புலவராக இலங்கினராம். அவர் கதிர்காம விருத்தம், பிச்சை வேலைக் கும்மி, பாணகை வழிநடைக்கும்மி என்னும் நூல்களை இயற்றிப் புகழடைந்தாராம்.

"ஊரிலுள்ள பேர்களெல்லாம் வளைத்தி ருக்க
ஒடுங்குகின்ற பிரணவந்தான் ஓங்கி நிற்கச்
சாடுகின்ற எமதூதர் தலைமேல் நிற்கத்
தனைமறந்து எனதுயிர்தான் சாகும் போது
ஆதியென்ற அட்சரத்துள் அடங்கி நின்ற
அறுமுகனே வந்தெனக்கு அபயந் தாதா
தேடிவந்துன் கதிரைமலை தன்னில் வாழும்
சிவன்மகனே உனைநாளுந் தெரிசிப் பேனே"

என்பது கதிர்காம விருத்தத்தில் ஒரு பாட்டு.

## இறுதி

வழிவழிப் புலவராகத் தோன்றிய இம்மட்டக் களப்புப் புலவர் மொட்டை வேலாப் போடியார் தம்முடைய எழுபத்தைந்தாவது அகவையில் 1880 ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவர் மறைந்தாரேனும் இவருடைய பாடல்கள் மறையாமல் நின்று இன்றும் இவருடைய புகழைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

## உரு. பூபால பிள்ளை - (ச)

### தோற்றம்

ஈழவள நாட்டில் மட்டக்களப்பில் சதாசிவம் பிள்ளை யென்பவரும் அவருடைய மனைவியாகிய வள்ளிப்பிள்ளை யென்னும் மாதுநல்லாளுஞ் செய்த நல்வினைப் பயனால் 1856 ஆம் ஆண்டில் பூபாலபிள்ளை பிறந்தார்.

### கல்வி

மிகு இளமைப் பருவத்திலேயே தமிழ், ஆங்கிலம், கணிதம் முதலியவைகளை நன்கு கற்றார். தந்தையாராகிய சதாசிவம் பிள்ளை தம்முடைய மகனுக்கு உயர்தரக் கல்வி நல்கிச் சிறந்த நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்று எண்ணினார். ஆயினும் பொருளாதாரநிலை போதிய அளவாக இன்மையின் அவருடைய எண்ணம் நிறைவேற வில்லை.

### எழுத்தர் வேலை

பூபாலபிள்ளை அரசியல் அலுவலில் எழுத்தராகப் பணிபுரியத் தொடங்கினார். பலவூர்கட்குஞ் சென்று வேலை செய்தார். அரசியல் அலுவலில் ஈடுபட்டிருந்தாலும் பிள்ளையின் உள்ளம் மேலுந் தமிழ்க்கல்வியை நன்கு கற்க வேண்டுமென்று விரும்பியது. கந்தபுராணம், பாரதம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களைக் கற்றார். பாடல்களை மனப்பாடஞ் செய்தார்.

### இலக்கண இலக்கியக்கல்வி

வல்வையூர் வைத்தியலிங்கம் பிள்ளை யென்பவர் சிறந்த இயற்றமிழ்ப் பேராசிரியராக அந்நாளில் விளங்கியிருந்தார். அவருடைய புகழ் யாண்டுந் துலங்கியது. பூபாலபிள்ளை தம்முடைய நோக்கத்தை அவருக்குத் தெரியப்படுத்திக்

கல்வி போதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். அவரும் இசைந்து, நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் சங்க இலக்கியங்களையும், புராணேதிகாசங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் முறைமையாகப் போதித்தார். சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடத்திலும், திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையிடத்திலும் சில நூல்களை உணர்ந்தார். பூவை கலியாண சுந்தர முதலியாருடைய நட்பும் இவருக்கு உண்டாகியிருந்தது. இதனால் இவருடைய புகழ் யாண்டுஞ் சிறந்தோங்கியது.

## பரீட்சகர்

அரசாங்க எழுத்தர் பணியை மேற்கொண்ட இவர் அப்பணியின் உயர்ந்த பதவி வரையில் அலுவல் பார்த்தார். அவ்வேலையொழிந்த பிரநேரங்களில் தமிழத் தொண்டை மேற்கொண்டார். அரசினர் இவருடைய திறமையையும் உண்மையையும் பாராட்டிப் போற்றினர். தமிழாராய்ச்சியின் பயனாகப் பல இலக்கண இலக்கியக் கட்டுரைகளை எழுதினர். அவைகள் எல்லோராலும் பாராட்டப் பெற்றன. பல தெய்வப் புகழ்ப்பனுவல்களையும் தனிப்பாடல்களையும் நவ்வக் காலங்களில் இயற்றினார்: மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளியாயின. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இவருடைய புலமைத் திறத்தைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீட்சகராகவும் ஏற்படுத்தினார்கள்.

## நூல்கள் இயற்றுதல்

நூல்கள் எழுதத் தொடங்கிய இவர் 1883 ஆம் ஆண்டில் "திருமுகர் பதிகம்" என்னும் தோத்திர நூல் ஒன்றை இயற்றினர் மட்டக்களப்புப் பெரியதுறை என்னும் இடத்திலுள்ள முருகப் பெருமானுடைய திருமுகங்களைச் சிறப்பித்துப் பாடப்பெற்றதாகலின இந் நூலுக்குத் திருமுகர் பதிகம் என்னும் பெயருண்டாயிது. பிறகு சில ஆண்டுகளின் பின்னர் எண்ணூறு விருத்தப்பாக்களைக் கொண்ட

சிமந்தனி புராணம் என்னும் நூலை இயற்றினர். இந் நூலின் சிறப்பை இவருடைய ஆசிரியராகிய வல்லை வைத்தியலிங்கம் பிள்ளையே புகழ்ந்து பாராட்டியதோடு தாமே அதனை அச்சிட்டு வெளிப்படுத்தினர். விநாயகர் மான்மியம் என்னும் நூல் ஒன்றை அகவற்பாவால் இயற்றி னர். புளியநகர் ஆனைபந்தி விக்கினேசுவரர் பதிகம் என்னும் நூல் ஒன்றும் இயற்றி வெளியிட்டார். இவ் விரண்டு நூல்களும் 1905 ஆம் ஆண்டில் வெளியாயின. 1906 ஆம் ஆண்டில் கண்டிநகர்ச் சைவப்பெருமக்களின் வேண்டுகோளுக் கிணங்கிச் "சிவதோத்திரம்" ஒன்று இயற்றினர். அந்நாளில் இருந்த சில போலிப்புலவர்களின் போக்கை மறுத்து, "முப்பொருளாராய்ச்சிக் கட்டுரை" என்னும் கண்டன நூல் ஒன்றைச் செய்தார். இது கட்டுரை வடிவாக அமைந்து மதுரைச் செந்தமிழ் இதழில் வெளி யாகியது யாழ்ப்பாணத்து அரசடி விநாயகர் மீது இவர் பாடிய அகவல் 1920 ஆம் ஆண்டில் வெளியாகியது. பிறகு, "கணேசர் கலிவெண்பா" என்னும் நூலை இயற்றினர்.

### ஆராய்ச்சி உரை முதலியன

ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதிலும் இவர் மிகுந்த திறமை பெற்றவராக விளங்கினர். 'தமிழ் வரலாறு' என்னுஞ் சிறிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதினர் சிறந்த ஆராய்ச்சிகளைக்கொண்ட இந்நூலால் இவருடைய புகழ் மேலும் ஓங்கியது. சிறந்த புலவராகத் திகழ்ந்த சுப்ரமணிய கிருட்டிண பாரதியார் (வெண்ணெய்க் கண்ணனூர்) என்பவர் இயற்றிய "உலகியல் விளக்கம்" என்னும் பொருள் நூலுக்கு ஆசிரியர் உள்ளக்கிடக்கையைத் தெள்ளிதிற் புலப்படுத்தும் சிறந்த உரையொன்றை யெழுதி நல்ல உரை யாசிரியராகவும் விளங்கினர். நூற்சிறப்பையும் உரை வளத்தையுங்கண்ட விபுலாநந்த அடிகள் தாமே நூலையும் உரையையும் வெளியிட்டார். அரசியல் வேலையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரே இவர் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டு நூல்கள் செய்து பெருஞ் சிறப்படைந்தார்.

**இறுதி**

அரசியல் வேலையிலேயே தமதுடல் நலத்தையெல்லாஞ் செலவிட்ட இவர் அதன் பிறகுந் தமிழ்ப்பணியில் மிகுதியாக உழைத்து உடல் நலத்தைக் கெடுத்துக்கொண்டார். நீரிழிவு நோய் இவரைப் பற்றியது. 1921 ஆம் ஆண்டில் தம்முடைய அறுபத்தைந்தாவது அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனுடைய திருவடி நிழலையடைந்தார்.

**நூல் வெளியீடு**

இவருடைய நூல்களின் சிறப்பை நன்குணர்ந்திருந்த சே. வே. சம்புலிங்கம் பிள்ளை இவருடைய நூல்களையெல்லாம் இரண்டு தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடத் தொடங்கி முதற்கண் ஒரு தொகுதியை வெளியிட்டார். இரண்டாவது தொகுதி வெளியானதும் ஆகாததுந் தெரியவில்லை.

> ஒருமான் முடிமேல் ஒருமான் கரத்தில்
> அரைமானும் பாகத் தமர்ந்தால்—பெருமான்
> வருமானங் காணுமோ மற்றவரைக் காக்க
> இரவாதென் செய்வான் இருந்து.

என்பது இவருடைய நல்லிசை நாற்பது என்னும் நூலில் ஒரு பாட்டு.

**இயற்றிய நூல்கள்**

(க) கணேசர் கலிவெண்பா
(உ) திருமுகர் பதிகம்
(ங) சிவதோத்திரம்
(ச) அரசடி விநாயகரகவல்
(ரு) சிவமாலை

(கூ) சித்திவிக்கினேசுவரர் பதிகம்
(எ) செல்வ விநாயகர் பதிகம்
(அ) கதிரேசன் பதிகம்
(கூ) மகாமாரியம்மன் அந்தாதி
(க0) நல்லிசை நாற்பது
(கக) தமிழ் வரலாறு
(கஉ) சீமந்தனி புராணம்
(கங) முப்பொருளாராய்ச்சி
(கச) உலகியல் விளக்கவுரை.

## உகூ. சரவண முத்தன் - (அ)

### பிறப்பு

"சந்தப்பா விசைப்பாவும் தமிழ்ப்பாவில்
விழுமிதெனத் தக்கோராய்ந்த
எந்தப்பா வெனினுமிக வெளிதினமைத்
திறமளிக்கும் இயற்பா வாணன்
கந்தப்பா வெமையாளக் கடிதப்பா
வருகவெனக் கவிதை பாடித்
தந்தப்பா சுரவிசையுந் தமிழிசையும்
பிறவிசையுந் தரித்த சீலன்;

அருணகிரி தவப்புதல்வன் இளமைமுதல்
எனக்கன்பன் அமுத மன்ன
பொருளமுகு திகழ்தமிழின் கலைபலவும்
நனியாய்ந்தோன் புலவர் நாப்பண்
மருளகல விடுத்துரைக்கும் வன்மையினன்
தொன்மையினன் மலரோ னன்னேன்
சரவணமுத் தெனும்புலவன் கவியுவகை
புவியுவகை தழைக்க மாதோ"

என்று விபுலானந்த அடிகளாராற் பாராட்டப்பெற்ற சரவண முத்தன் என்னும் அருந்தமிழ்ப் புலவர் ஈழவள நாட்டிலே மட்டு நகரிலேயுள்ள தாண்டவன் வெளி என்னும் ஊரிலே வேளாண் குலத்திலே அருணகிரி என்பவருக்கும் கந்தம்மையார் என்பவருக்கும் அருந்தவப் புதல்வராக ஆங்கிலம் 1890 ஆம் ஆண்டுக்குச் சரியான விரோதி மாண்டு பங்குனித் திங்கள் இருபத்தேழாம் நாள் பிறந்தார்.

### கல்வி

பெருந்தமிழ்ப் புலவர்கள் பலர் தம்முடைய இளமைக் காலத்திலே கல்வியில் ஊக்கங் காட்டாதவர்களாக இருந்து பிறகு முன்னைய ஊக்கத்தையும் ஒருசேரக் காட்டிக் கல்வி

கற்றுச் சிறப்படைந்தார்கள். சரவண முத்தனும் இளமையிலே அவ்வாறிருந்தார். மட்டுநகர் அர்ச்-மைக்கேல் கல்லூரியில் ஆங்கில எட்டாம் வகுப்புவரை கல்வி கற்றார். பிறகு பல நூல்களையும் கற்றுணர்வதற்குத் தகுந்த வேலை யொன்று இவருக்குக் கிடைத்தது. அவ்வேலை மட்டக்களப்பு இந்து வாலிப சங்கத்தார் நடத்திவந்த நூல்நிலையத்திற்கு மேற்பார்வையாளராக அமர்ந்தமையேயாம் இவ்வாறு நூல் நிலைய அலுவலைப் பெற்றவர் நூல் நிலையத்திலிருந்த பல நூல்களையும் படித்தார். அவ்வாறு படித்த நூல்கள் இலக்கணம் இலக்கியம் புராணம் இதிகாசம் சித்தாந்தம் முதலிய பலவாம். ஆங்கிலம் தமிழ் முதலிய மொழிகளிற் சிறந்த புலமையடைந்து திகழ்ந்த விபுலாநந்தர் இவருடைய வீட்டிற்குப் பக்கத்தில் குடியேறினர். விபுலாநந்தருடைய புலமைத் திறத்தை நன்குணர்ந்திருந்த சரவண முத்தர் தமக்கேற்பட்டிருந்த ஐயங்களை யெல்லாங் கேட்டுத் தெளிந்த தோடு அரிய நூல்களைப் பாடமாகவுங் கேட்டார். இதனல் சரவண முத்தருடைய அறிவு விரிந்து சிறந்தது. சரவண முத்தருடைய நற்குணங்கள் பலவும் விபுலாநந்தரைக் கவர்ந்தமையின் இருவருடைய தொடர்பும் நீண்டு நட்பு முறையிலும் அமைந்தது. நாளடைவில் விபுலாநந்தர் சரவண முத்தரைச் சிறந்த புலவராகவே மதித்துப் பாராட்டினர்.

## சொற்போர் வல்லவர்

சரவண முத்தர் சொற்போர் புரிவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அந்நாளில் கல்லடி வேலுப்பிள்ளை யென்பவர் சொல்லடியில் வல்லவராக விளங்கினர். அவர் சுதேச நாட்டியம் என்னும் வெளியீட்டுக்கு உரிமையாளர். அவருக்கும் சரவண முத்தருக்கும் பத்திரிகைகளிலே சொற் போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. அவ்வேலுப் பிள்ளை சரவண முத்தரின் கல்விப் பெருமையை நன்குணர்ந்து கொண்டு நண்பரானர். இவருடைய கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளைத் தாமே யேற்று வெளியிட்டார்.

### தமிழ்ச்சங்கத்துக் கறிமுகம்

இவருடைய கல்வித்திறமையை அறிந்த ச. பூபால பிள்ளை இவர் பாடிய மாமாங்கப் பிள்ளையார் பதிகத்தைப் படித்துப்பார்த்துப் பாராட்டினார். மதுரைத் தமிழ்ச்சங்கத் தாருக்கு இவருடைய பெருமையைத் தெரியப்படுத்தி அறிமுகஞ் செய்துவைத்தார். சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் சரவண முத்தனார் 1916 ஆம் ஆண்டில் தேர்வு பெற்றார். சங்கத்தார்கள் தம்முடைய கூட்டத்தில் இவரை யும் ஓர் அங்கத்தவராக்கி பெருமைப்படுத்தினார்கள். அது முதல் இவருக்குத் தமிழ்ச்சங்கத் தொடர்பு உண்டாயிற்று.

### அரசாங்கப் பணி

இலங்கை அரசினர் நடத்திய வேலைத் தேர்விலுந் தேறி அரசாங்கப் பணியாளராகத் தொழில்புரியத் தொடங்கினார். ஆயினும் தமிழ்மொழிப் பணியை மறந்து விடாமல் இயல் இசை நாடகம் ஆகியவைகளையும் பயின்றார்.

### நாடகம் எழுதுதல்

முத்தமிழினும் சிறந்த ஆற்றல்பெற்ற இவருடைய புகழ் யாண்டும் பரவியது. அந்நாளில் மட்டக்களப்பில் "சுகிர்த விலாச நாடக சபையார்" என்னும் பெயருடைய நாடக சபையினர் நாட்டிலே நாடகங்களாடி நாடகக் கலையை நாளும் வளர்த்துவந்தனர். அவர்கள் தமக்கு நாடகம் எழுதிக் கொடுக்கும் வேலையையும் இவருக்குக் கொடுத்தனர். இவர் நாடகங்கள் உரைநடைகள் முதலியன எழுதிக் கொடுத்தார். மேலும் நாடகத்தில் தாமும் பங்குகொண்டு நடித்தார். பாதுகா பட்டாபிடேகம், இராமர் வனவாசம், இலங்கா தகனம், கண்டிராசன் நாடகம், சீதா கல்யாணம் ஆகிய நாடகங்களை எழுதிக் கொடுத்ததோடு தாமே கதைத் தலைவ னாகவும் நடித்துப் புகழ்பெற்றார். ஒரு நாடகத்தில் கடவுள் வணக்கமாக முருகக் கடவுள் வணக்கப்பாடல் அமைக்கத் தொடங்கியவர் தம்முடைய பெயரையே அமைத்து, "சரவண

முத்தனைனும் மரகதத்தின் தாள்பணிந்து" என்று பாட்டமைத்தார். இராவணனைக் கோலம் பூண்டு நடிப்பது இவருக்கு மிகப்பொருத்தமாக இருந்ததாம். வேல்ஸ் இளவரசர் கொழும்புக்கு வந்தபொழுது இராமாயணத்தின் ஒருபகுதியை நாடகமாக்கி இவரே இராவணனை நடித்துப் புகழ்பெற்றார். வேல்ஸ் இளவரசர் இவருடைய நடிப்புத் திறமையைப் பாராட்டிப் பரிசும் வழங்கினர்.

## மதுரையில் நிகழ்ந்தது

மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஆண்டு விழாக்களிற் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றுதலை இவர் மேற்கொண்டிருந்தார். ஒருமுறை மதுரைக்குச் சென்றிருந்தபோது இவருடைய பெட்டி களவு போய்விட்டது. அப்பெட்டியில் உடைகள் பணம் முதலிய பொருள்கள் இருந்தன. எனவே இவருடைய நிலை திக்கற்றதாகிவிட்டது. தமக்கு நேர்ந்ததைக் கூறி யாரிடமும் பொருள்பெற இவர் விரும்பவில்லை. அப்பொழுது அம்மதுரையிலே வைரவப்பிள்ளை என்பவர் நாடக சபை ஒன்று அமைத்து நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தார். இதனையறிந்த சரவணமுத்தனர் வைரவப்பிள்ளையிடம் போய்த் தமக்கு நாடகத்தில் நடிக்கத் தெரியுமென்றும் ஏதேனும் ஓர் உறுப்புத் தரவேண்டும் என்றுங் கேட்டார். இவரைமுன்பின் அறியாத வைரவப்பிள்ளை நாடகத்தில் வேலைக்காரனை நடிக்கும் பகுதியைக் கொடுத்தார். இவர் அதனை யேற்று நடித்தார். வைரவப்பிள்ளையின் மனைவியே நாடகத் தலைவியாக நடித்தார். அவள் வேலைக்காரனை நடிக்கும் இவருடைய பெருமையை உணராதவளாகையால் அடிக்கடி "அடே" என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தாள். அதனல் இவருடைய மனம் வருந்திக்கொண்டிருந்தது. ஒருமுறை அவள கடுமையான குரலில், "அடேநாகா!" என்று அவள் கூப்பிட்டபொழுது வேலைக்காரக் கோலக்காரராகிய இவர் தூண் ஒன்றில் சாய்ந்துகொண்டு நின்றார். அவள் மேலும் பலமுறை அதட்டி, "என்னடா தூங்குகின்றாயா?" என்று கேட்டாள். இவர் பொறுமையோடு, "இல்லையம்மா"

என்று கூறிவிட்டு, "நீடாழி உலகத்து மறைநாய் குலைக்கவே நெடுநாகன் பனையேறினன்" என்று பாரதத்தின் காப்புச் செய்யுளைத் திரித்துப் பாடினார். நாடகத்தலைவியாக நடித்த அவளுஞ் சிறிது கல்வியறிவுடையவள். ஆகவே அவள் வேலைக்காரன் தன்னை நாய் என்று சொல்லுகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு உள்ளே போய்விட்டாள். பிறகு நாடக சபையாருக்கு இவருடைய புலமைத்திறம் விளங்கியது. இவரிடம் பிழைபொறுக்குமாறு வேண்டிக் கொண்டதோடு மறுநாள் நடத்திய அல்லியருச்சுன நாடகத்தில் இவருக்குக் கதைத்தலைவன் உறுப்புத் தந்ததோடு கூலியும் மிகுதியாகக் கொடுத்தனர். இதற்குப்பிறகு அந்நாடக சபையினரின் புகழ் மிகுதியாயிற்று.

## கோமாளிக் கோலம்

கோமாளிக் கோலம் என்பது பிறருக்கு இகழ்ச்சியையும் நகைப்பையும் ஒருங்கே உண்டாக்குவதாகும். அக்கோலத்தினை இவரே பலமுறை மேற்கொண்டு அவையினரை நகைக்கச் செய்திருக்கிறார்; மட்டுநகரில் தோன்றிய சுகிர்தவிலாச நாடகசபை பின்னுளில் இவரைத் தலைவராகக் கொண்டு நெடுநாள் நாடகப்பணி செய்து நாடகத் தமிழை நன்கு வளர்த்தது.

## கணிதப்புலமை

கணிதம் இலக்கியம் என்ற வகைகளில் இவர் பெற்றிருந்த புலமையால் காலக்கணிதப் புலமையையும் நன்குபெற்றார். தம்முடைய நுண்ணறிவினால் பல நிகழ்ச்சிகளை முன்கூட்டியே உணர்ந்து வெளிபடுத்திப் பாராட்டுதலையும் பெறறார். தமக்கு நோய்முதலியன உண்டாகும் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தார். வாழ்வினை உருத்து வந்தபோது இவருக்குப் பல தொல்லைகள் உண்டாயின. எடுத்த காரியங்கள் கெட்டுப்பொருளழிவுகள் நேர்ந்தன. மூலநோய் உண்டாயிது. அதனுடைய வெம்மையைத் தணித்துக் கொள்ளுவதற்காகக் கள்ளுண்ணும் பழக்கத்தை மேற்கொண்டார். இப்பழக்கம்

அவருக்கு மிகுந்த வெறுப்பையும் வருத்தத்தையும் உண்டாக்கியது.

## சனி வெண்பா

தம்முடைய தொல்லைகளைப் போக்கியருள வேண்டுமென்று சனிபகவானை நோக்கி இவர் முப்பது வெண்பாக்களைப் பாடினார். அது சனிவெண்பா என்னும் பெயரையுடையது.

"நள்ளார் நகைக்கவைத்தாய் நானிலத்தோ ரேசவைத்தாய்
உள்ள மரியாதை யோட்டிவைத்தாய்—மெள்ளவே
வந்தணுகாத் தீச்செயல்கள் வந்திடச்செய் தாய்கலியே
எந்தையினி யென்மே லிரங்கு.

சொறியுனக்குச் சீதனமா சோம்பலுந் தன்பேரு
கிறிபெருக்க வோகிளர்வு கேள்வா—அறிவுடையார்
வேண்டா தனவெல்லாம் வேண்ட வழிவைத்தாய்
ஈண்டா திவைதீ ரினி.

கிழங்கு வருத்தவே கீழ்மைப் படுத்தப்
பழங்களுண் ணச்செய்தல் பண்பா—வழங்கா
வகைநீக்கு வாய்சனியே வையத் தவர்செய்
நகைநீக்கி யாள்வாய் நயந்து"

என்பன சனிவெண்பாவிற் சிலபாடல்களாம்.

## நூல்கள் இயற்றல்

இரத்தினபுரி முதலிய இடங்கட்கு வேலையாகச் சென்றிருந்த சமயங்களில் அங்கங்குள்ள கடவுளர்கள்மீது பல புகழ்ப்பாடல்களைப் பாடினார், சிலர் கேட்டுக்கொண்டதற்கிணங்கக், "கதிர்காமவேலவர் தோத்திரமஞ்சரி" எனனும் இசைநூல் ஒனறைச் செய்தார். அறுபது பாடல்களைக் கொண்ட இந்நூல் பலவகையான இசைப் பாடல்களையுங் கொண்டதாகும்.

"குறவர்மகள் தனைநாடுங் குமரன் தன்னைக்
குன்றுடிக் குன்றுருவக் குறித்து மாநற்
றிறலுடனே வேல்விடுத்த மயிலோன் தன்னைத்
தேவர்சிறை மீட்கவரு திகழி ஞனை
அறமுணர்த்து மம்மைந்த ஞானன் தன்னை
அடியவர்க்கே அருளமுத மளித்துமேழ்வெம்
பிறவிநோய்க் கவிதீர்க்கும் பெம்மான் தன்னைப்
பேசுவார் மாசிலாப் பெரியோ ராமே.

என்பது அந்நாற்பாடல்களில் ஒன்று.

## இருபொருள் மொழி

ஒருசொல் இருவகையான பொருளைத் தருமாயின் அதனை அறிஞர்கள் சிலேடை என்பர். சிலேடையாகப் பேசுவதில் இவர் மிகச் சிறந்தவராக விளங்கினார். நோயின்பொருட்டு இவர் மதுவருந்தும் பழக்கத்தை மேற்கொண்ட செய்தியை விபுலாநந்தர் அறிந்தார். ஒருநாள் சரவணமுத்தரைக் கண்டபோது "புலவரே தாங்கள் மதுபானஞ் செய்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன்; இஃதுஉண்மைதானா?" என்று கேட்டார். உடனே இவர் சிலேடை நயத்தோடு பேசத் தொடங்கினார். இவர் நோயின்பொருட்டுக் குடித்தது இரண்டொரு நாட்பட்ட கள். அதனை மனத்தில் வைத்துக்கொண்டு, "இல்லை சுவாமி, பழங்கள் மட்டுந்தான் சாடபிடுகிறேன்" என்று நயத்தோடும் பயத்தோடும் நவின்றார். இம்மறுமொழியைக் கேட்ட சுவாமிகள் குலுங்கக்குலுங்க நகைத்தார். மற்றும் பலரோடும் இவர் பேசிய சிலேடை மொழிகள் பலவாம்.

## இறுதி

இவருக்கு நாற்பதாவது வயதில் வயிற்றிலே அறுவைச் சிகிச்சையொன்று செய்யப்பட்டு வயிற்றில் தையல் போடப் பட்டிருந்தது. படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தவர் தம்முடைய பழக்கவாசனையின் மிகுதியால் தாம் வீர ராவணனாக நடித்துக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டார்.

தம்மையும் மறந்து படுக்கையில் இருந்து எழுந்து உண்மை யாகவே நடிக்கத் தொடங்கிவிட்டார். பிறர் ஓடிவந்து பிடித்துத் தடுப்பதற்குள் வயிற்றிலே தைக்கப்பெற்றிருந்த காயம் பிளவுபட்டுப் பிரிந்துவிட்டது. குடல்வெளியே வந்து குருதியைக் கொட்டியது. சரவணமுத்தனுருடைய உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது. இவர் இறந்தது 1930 ஆம் ஆண்டு ஆகும். இவர் இவ்வாறு நாற்பதாம் ஆண்டிலேயே இவ்வுலக வாழ்வைத் துறந்தது தமிழறிஞர்கள் பலருக்கும் மிகுந்த மனவருத்தத்தை உண்டாக்கியது.

**இயற்றிய நூல்கள்**

(க) மாமாங்கப் பிள்ளையார் பதிகம்
(உ) பாதுகாபட்டாபிடேகம்
(ங) இராமர் வனவாசம்
(ச) இலங்கா தகனம்
(ரு) சீதாகலியாணம்
(சு) கண்டிராசன் நாடகம்
(எ) கதிர்காம வேலவர் தோத்திரமஞ்சரி
(அ) சனி வெண்பா.

# உ.வே. குமாரசாமி ஐயர்

## தோற்றம்

ஐயர் என்னுஞ் சிறப்புப் பட்டப்பெயர் அமையப்பெற்ற இவர் அந்தணர் குலத்தினர் அல்லர்; செங்குந்த மரபைச் சேர்ந்தவர். தம்முடைய சைவநெறி குறையாத வைதிக வாழ்க்கையினால் ஐயர் என்னுஞ் சொல்லால் அழைக்கப் பட்டார். இவர் கோட்டைக் கல்லாறு என்னும் ஊரிலே 1879 ஆம் ஆண்டிலே பிறந்தார். தந்தையார் பெயர் சின்னத் தம்பியார்; தாயார் பெயர் சின்னம்மையார். (சின்னத்தம்பியார்க்குச் சின்னம்மையார் அமைந்தது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறதென்பதைப் பாருங்கள்.)

## கல்வி

இவர் ஐந்தாம் ஆண்டில் பள்ளிக்கல்வியைக் கற்ற பிறகு இலக்கண இலக்கியங் கற்றுப் புலவராக எண்ணினார். இலக்கண இலக்கிய நூல்களின் மூலங்களை முதலில் மனப் பாடஞ் செய்தார். பிறகு யாழ்ப்பாணத்தில் பெருந்தமிழ்ப் புலவராக விளங்கிய த. கைலாச பிள்ளை என்பவரிடம் பாடங் கேட்டுச் சிறந்த புலமையை அடைந்தார். கல்வியைக் கருத்துடன் கற்றபடியால் ஆசிரியருடைய நன்மதிப்பைப் பெற்றார். தமிழ்மொழியை மட்டுமன்றி வடமொழியுங் கற்றார்.

## விபுலாநந்தருக்கு ஆசிரியர்

குமாரசாமி ஐயர் இளமையிலேயே சிவபக்தியும் சிவ நெறியில் ஒழுகும் சீரிய ஒழுக்கமும் செறிந்தவராகச் சிறந்து விளங்கினார். சிறந்த பாடல்களை இயற்றும் புலமை இவ ரிடத்தில் இயற்கையாக அமைந்திருந்தது. இவர் எழுதிய உரை நடையும் நல்ல போக்கில் அமைந்தது. சித்த வைத்தியப் பத்திரிகைகளிலும் செங்குந்தமித்திரன்

பத்திரிகையிலும் பல கட்டுரைகளை எழுதினார். இவருடைய கட்டுரையைப் படித்துப் பலரும் பாராட்டினர். சங்கநூல்களின அருமை பெருமைகளை யுணர்ந்து அவைகளை நன்கு கற்றதோடு மற்றவர்கட்குங் கற்பித்தார். மட்டுநகர்க் கோட்டை முனையில் இவர் வசித்த காலத்தில் இவரிடம் பலர் வடமொழியுந் தமிழுங் கற்றனர். பண்டித மயில்வாகனனார் என்னும் பெயரையுடைய விபுலாநந்தரும் இவருடைய கல்வித்திறமையைப் பாராட்டி இவரிடம் வடமொழி கற்றார் இதனால் குமாரசாமியாருடைய புகழ் மேலும் ஓங்கியது. நூல்களியற்றிய பலரும் இவரிடங் கொடுத்துத் திருத்தஞ் செய்துகொண்டனர்.

## மருத்துவத் துறை

இவருடைய முன்னோர்கள் மருத்துவத்துறையில் ஈடுபட்டிருந்தனர். இவருடைய மனமும் மருத்துவத்தை நாடியது. மருத்துவ நூல்கள் பலவற்றைப் பயின்றார். மருந்துகள் செய்யவுந் தொடங்கினார். சித்தவைத்தியக்கலை இவருக்கு விளக்கமாகியது. நாடிபார்ப்பதில் மிதந்த தேர்ச்சியுடையவரானார். நோய் இன்னது என்று இவர் கூறுவாராயின் அது முற்றிலுஞ் சரியாகவே யிருக்கும். தீராத நோய்கள் பலவற்றை இவர் தீர்த்துப் பெரும்புகழ் பெற்றார். திராட்சாரிட்டம், மிளகு சந்தனாதித்தயிலம், மயணாத் தயிலம் முதலியவைகளை இவர் சிறிய முறையிற் செய்தார். இதனால் இவருடைய புகழ் யாண்டும் பரவியது. இந்தியாவிலுள்ள சித்தவைத்திய சங்கத்திலும் ஓர் உறுப்பினராக அமைந்து பணிபுரிந்தார்.

## வைத்தியக் கருவூலம்

மருத்துவக் கலையிலுங் குருத்துவம் பெற்ற இவர் மருத்துவ நூல் ஒன்றைச் செய்யத்தொடங்கினார். வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, கலிவெண்பா, விருத்தம முதலிய பலவகையான பாக்கள் கொண்ட "வைத்தியக் கருவூலங்"

என்னும் நூலை எண்ணூறு பாக்கள் கொண்டதாக இயற்றினர், அந்நூல் சித்தவைத்தியக் கலையின் சிறப்பை நன்கு விளக்குவதாக அமைந்திருக்கிறது.

"ஈச்சங் கொழுந்து நொச்சியிலை
இசங்கு மணித்தக் காளியிலை
காய்ச்சுஞ் சங்கங் குப்பியிலை
கரிய சீரம் பீநாறி
மூர்ச்சை யழிக்கும் செஞ்சந்தம்
முதிய குப்பை வெண்காயம்
பாச்சிக் கசாயம் பருக்கிவிட்டால்
பறக்குங் கரப்பன் பாலருக்கே."

"போமென்ற கனமாந்தக் குளிகை யொன்று
புகலுகின்றேன் திரிகடுகு கரிய சீரம்
ஆமென்ற வசம்புள்ளி அசம தாகம்
அப்பனே வகையொன்று வராக னென்று
நாமென்ற கல்வத்தில் மருந்தை வைத்து
நாட்டக்கேள் பிரண்டையொடு மாவிலங்கை
தாமென்ற வேலைநொச்சி வேம்பு வோடு
சங்குடனே பேய்மருட்டி சங்கந் தப்பி."

என்பன மேற்படி நூற்பாடல்களிற் சில. இவருடைய மருத்துவ நூல்களில் தமிழ்ப்புலமையுஞ் சிறந்து விளங்கும். இவ்வைத்திய நூல் இன்னும் அச்சேறியதாகத் தெரிய வில்லை.

**காட்டுச் சுரநூல்**

திரு. தம்பு என்பவர் அரசடி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியராக இருந்தார். அவர் இவருடைய இரு வகைப் புலமையையும் நன்குணர்ந்தவர். மலேரியாக் காட்டுச் சுரத்தைப்பற்றிச் செய்யுள் நூல் ஒன்று செய்து தருமாறு இவரைக் கேட்டுக் கொண்டார். இவர் கேட்டுக் கொண்ட காலத்தில் ஆங்கில மருத்துவ வாடை மிகுதியாக விருந்தது. ஆகவே இவர் ஐம்பத்தொரு பாடல்களைக்

கொண்ட, "மலேரியா என்னும் காட்டுச் சுரம்" என்ற நூல் ஒன்றைச் செய்து கொடுத்தார். குமாரசாமி ஐயர் ஆங்கில மருத்துவ முறைகளையுஞ் சிறிது உணர்ந்திருந்தபடியால் தமிழ்வைத்திய வழிகள் சிறிதுங் கலவாத வகையில் அந் நூலைச் செய்தார். அந்நூலில் வெண்பா, கும்மி, சொண்டிச், சிந்து, ஆனந்தக்களிப்பு, குறம், பள்ளு, கலிவெண்பா முதலிய பலவகையான பாடல்களும் அடங்கியிருந்தன. இந்நூல் 1931 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுது நூல் இயற்றிய ஆசிரியரும் பாராட்டப்பெற்ருர்.

## உருத்திராக்க மான்மியம்

இவருக்குச் சிவகண்மணியாகிய உருத்திராக்கத்தின் மீது சிறந்த மதிப்புண்டு. அதனை என்றுங் கழுத்தில் அணிந் திருந்தார். சிவபூசை முதலியனவைகளைச் செம்மையாக நடத்திவந்த இவர் உருத்திராக்க மான்மியம் எனனுஞ் செய்யுள் நூல் ஒன்றையும் இயற்றினர். அந்நூலில் சிவ தத்துவத்தின் நுண்கருத்துக்களையும் உருத்திராக்கத்தின் பெருமையையும் விளக்கி வெண்பா, ஆசிரிய விருத்தம், அகவல் முதலிய பாக்களால் அந்நூலைச் செய்துள்ளார்.

## சைவப் பணி

இவர் கோட்டை முனையில் அமைந்துள்ள விரகத்திப் பிள்ளையார் கோயிலின் ஆட்சியாளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து அக்கோயிலுக்குப் பலவகையான திருபபணிகள் செய்து கோவிலைச் சிறந்ததாக்கினர். அக்கோயிலிற் சில காலம் புராணவகுப்புக்களை நடத்திச் சைவத்தை வளர்த்தார். சைவசமய வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுப் பலவிடங்களிலும் சைவச் சொற்பொழிவுகள் செய்தார். சைவசித்தாந்தப் பெருமை அந்நாளில் இவர் வழியாக நாடுமுழுவதும் பரவியது. அகவை முதிர்ந்தவராய் இல்லத்திலேயே இவர் தங்கியிருந்த காலத்திலும் இவரிடம் பலபேர் சென்று அறி வுரைகள் பெற்றுச் சென்றனர்.

### இறுதி

இறுதிக் காலத்தைச் சிவபூசையிலும் தவத்திலும் கழித்திருந்த இவர் 1947 ஆம் ஆண்டில் தம்முடைய அறுபத்தெட்டாவது அகவையில் இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார். அப்போது பலரும் வருந்தினர். சிலர் இரங்கற் பாடல்கள் பாடினர்

"பாட்டமைதி எங்கேநின் பண்பெங்கே சொற்பெருக்குக்
கேட்டமைத லெங்கேஎங் கேள்வனே—கூட்டுறு பொற்
சிலக் குமார சுவாமிவிண் சேர்ந்தனையே
ஞாலத் தியல்பிதுவோ நாட்டு"

என்பது இரங்கற்பாக்களில் ஒன்று.

### இயற்றிய நூல்கள்

(க) வைத்தியக் கருவூலம்
(உ) மலேரியா என்னுங் காட்டுச்சுரம்
(ங) உருத்திராக்க மான்மியம்.

# உ. அ. சு. அருளம்பலவனுர்

## தோற்றம்

ஈழவளநாட்டில் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் உள்ளதும் கடலாற் சூழ்ப்பட்டதுமான காரைநகர் என்னும் ஊரில் சைவவேளாண் மரபில் 1910 ஆம் ஆண்டில் இவர் தோன்றினுர். தந்தையார் பெயர் சுவாமிநாதன், தாயார் பெயர் சிதம்பரம்.

## பெயர்

இவர் பிறந்தவுடனே பக்கத்துவீட்டுக் குழந்தை ஒன்று இவரை வந்து பார்த்துவிட்டு "அருளம்பலம்" என்று பெயர் வையுங்கள்" என்று கூறியதாம் இதனைக் கேட்ட தந்தையார் வியப்படைந்து அப்பெயரையே தம்முடைய குழந்தைக்கு இட்டனராம்.

## இளமை

அருளம்பலவனுர் இளமையில் மிகவுஞ் சுறுசுறுப் புடையவராக விளங்கினுர். பக்கத்துவீட்டுப் பிள்ளையுடன் எந்நேரமும் விளையாடுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். குறும்புகள் செய்வதிலும் வல்லவராக விளங்கினுர். அருளம்பலவனுரின் பிறந்தநாட் குறிப்பைக் காலக்கணிதர் களைக் கொண்டு பார்க்கச் செய்த தந்தையார் அக்காலக் கணிதர்கள் கூறிய வியப்புரைகளைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்தார். காலக்கணிதர்கள் 'இக்குழந்தை சிறந்த அறிவாளியாகத் திகழும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை' என்று அறுதியிட்டுக் கூறினர். இறைவன் புகழ்சேர் பாடல்களைக் கேட்பதில் அருளம்பலவனுர் மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். தாய் தந்தையர் தேவார திருவாசகங்களைப் பாடும்போது இக்குழந்தை பக்கத்தில்

இருந்து கேட்டுமகிழ்ந்தது. குழந்தை வளர வளர அதனுடைய இறை சிவ பக்தியும் ஏற்றமுற வளர்ந்தது.

## கல்வி

அருளம்பலவனார் கல்விகற்கும் பருவத்தை அடைந்தார். தந்தையார் தம்முடைய மைந்தருக்கு முறைப்படி கல்விப் பயிற்சி செய்விக்கத் தொடங்கினார். பக்கத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தொடக்கக் கல்வியைப் பயிலுவதற்கு ஏற்பாடு செய்தார். அருளம்பலவனாருக்கு அகவை பதினொன்று நடக்கும்போது தந்தையாராகிய சுவாமிநாதன் விண்ணுலகஞ் சென்றார். தாயாராகிய சிதம்பரம் அம்மையார் மகனுடைய கல்வியிலே கருத்துச் செலுத்தினார். "தந்தையொடு கல்விபோம்" என்பதனைப் பொய்யாக்கிவிட முயன்றார். பிள்ளையைப் படிக்கவைப்பதிற் கருத்துச் செலுத்தினார். சைவசமயச்சார்பில் தம் மகனுக்குக் கல்வி கற்பிக்க எண்ணிய அம்மையார் தம்முடைய மகனைச் சுப்பிரமணிய வித்தியா சாலையிற் சேர்த்தார். வித்தியாசாலையின் ஆசிரியர்களாகிய பேரம்பலம், விசுவலிங்கம், பஞ்சாட்சரம் என்போர் அருளம்பலத்தின் சிறப்பான கல்வியாற்றலைக் கண்டு வியப்படைந்தார்கள். இங்கிலையில் தாயாரும் காலமானார். பிறகு அருளம்பலம் சி. சுபபிரமணிய தேசிகர் என்பவரிடம் முறையாகத் தமிழ்கற்றார். அருளம்பலம் நன்கு முன்னுக்கு வரக்கூடியவர் என்பதைக் கண்ட ஆசிரியராகிய தேசிகர் இவருக்குக் கல்வியில் மேன் மேலும் ஆர்வத்தை உண்டாக்கினார். இவரும் ஆசிரியரிடத்தில் அன்புடனும் பணிவுடனும் மிகுந்த முயற்சியுடனும் கல்வியை நன்கு கற்றார்.

## ஆசிரியப் பயிற்சி

அருளம்பலவனார் தம்முடைய பதினெட்டாம் அகவையில் கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றார். பயிற்சிபெறும்போதும் இலக்கண இலக்கியங்களைக்

கற்றதோடு ஓவியத்தையுங் கற்ருர். மேன்மேலுந் தமிழ்ப் பயிற்சி செய்து கொண்டுவந்த இவர் 1929 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய பிரவேச பண்டிதர் பரீட்சையிலும் மறு ஆண்டு பாலபண்டிதர் பரீட்சையிலுந் தேர்ச்சி பெற்ருர்.

## ஆசிரியத் தொழில்

ஆசிரியப்பயிற்சி பெற்று வெளியேறிய அருளம்பலவனர் காரை நகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் முதன்முதலாக ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். ஏழு ஆண்டுகள் அங்கு பணி புரிந்தார். மாணவர்கட்குக் கல்வி கற்பித்த தோடு தம்மோடு வித்தியாசாலையில் ஆசிரியராயிருப்பவரும் தம்முடைய ஆசிரியரும் ஆகிய சுப்பிரமணிய தேசிகரிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டார். 1931 ஆம் ஆண்டில் ஓவியக்கலைப் பயிற்சியிலுந் தேர்ச்சி பெற்ருர்

## திருமணம்

காரைநகரில் சிலிப்பந்தனை என்னும் இடத்தைச் சேர்ந்த க. கல்லதம்பி என்பவருக்கும் அவருடைய மனைவி யாகிய சிவகாமிப் பிள்ளை என்பவருக்கும் இரண்டாவது மகளாகத் தோன்றியவரும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட் டிருந்தவரும் ஆகிய விசயசவுந்தரம் அம்மா என்னும் பெண்மணியைத் திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்கினர்.

## பண்டிதத் தேர்வு

1936 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதத் தேர்விலும் வெற்றிபெற்ருர்.

## ஆராய்ச்சி

மறைமலையடிகளாரின் அறிவாற்றலை நன்குணர்ந்த இவர் அடிகளாருடைய முல்லைப் பாட்டாராய்ச்சியுரை,

பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை என்பவைகளைப் படித்துச் சங்க நூலாராய்ச்சி செய்யத் தொடங்கினர்.

## நூல்கள் எழுதுதல்

முதற்கண் திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையை எழுதி வெளியிட்டார். 1937 ஆம் ஆண்டில் பெரும் பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரையை எழுதி வெளியிட்டார்.

## வேலைமாற்றம்

1938 ஆம் ஆண்டில் அருளம்பலவனாரும் மனைவியாரும் புத்தளம் நுரைச்சோலையில் உள்ள அரசாங்க பாடசாலைக்கு ஆசிரியர்களாக மாற்றப்பட்டனர். நானகு ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பிறகு கொட்டாஞ்சேனை அரசாங்க பாடசாலைக்கு மாற்றப்பட்டனர். பிறகு காலி உயர்தர அரசாங்கக் கலாசாலைக்கு மாற்றப்பட்டனர். இக்காலத்தில் அருளம்பலவனார் பதிற்றுப்பத்துக்கு ஓர் ஆராய்ச்சியுரை எழுத முற்பட்டார். இவ்வுரையை இவர் எழுதுங்கால் இவருக்கு ஊக்கமளித்தவர்கள சி. சுப்பிரமணிய தேசிகர், சி. கணபதிப் பிள்ளை முதலியோராவர். இவர் இவ்வுரையை எழுதி முடிப்பதற்குப் பதினைன்கு ஆண்டுகளாயின. பிறகு இவரும் இவருடைய மனைவியாரும் காலியில் இருந்து மாற்றப்பெற்றுக் கஞத்துறை அரசாங்க பாடசாலையில் ஐந்தாண்டுகள பணிபுரிந்தனர். பிறகு 1939 இல் இருவரும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பெற்றனர். பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையின் முதற் பகுதியை 1960 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டார். இதனில் 2, 3, 4, 5 ஆம் பத்துக்கள் அடங்கியுள்ளன.

## அறிஞர்களின் தொடர்பு

1960 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பேரறிஞர்களைப் பார்த்து உரையாடவும் சிவப்பதிகளைப் பார்த்து வழிபடவும் எண்ணிய அருளம்பலவனார் தம்முடைய நான்காவது

மகனுடன் தென்னிந்தியாவுக்கு வந்தார். அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியாகவிருந்த பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர், தமிழ்விரிவுரையாளர் புலவர் மு. அருணசலம் பிள்ளை, பெரும் புலவர். ச. தண்டபாணி தேசிகர், க. வெள்ளைவாரணனர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மு. வரதராசனர், துணைப்பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் மா. இராசமாணிக்கனர், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை ஆகியவர்களையெல்லாம் பார்த்து உரையாடினர். அவர்களுடைய விருந்தினராகத் தங்கியிருந்தார்.

## பாராட்டு விழா

1961 ஆம் ஆண்டு இலங்கா சாகித்ய மண்டலத்தினர் இவருடைய பதிற்றுப்பத்து உரையைச் சிறப்பித்து ரூபாய் ஆயிரம் நன்கொடை வழங்கினர்கள். காரை நகா மக்களும் பிற தமிழ் அறிஞர்களும் சேர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா நினைவு மண்டபத்தில் 8-10-61 இல் ஒரு பாராட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினர்கள். அருளம்பலவனரை அவருடைய இல்லத்தில் இருந்து மேளதாளங்களோடு ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சென்றுர்கள். விழாவில் பல பேரறிஞர்கள கலந்துகொண்டு பாராட்டுரைகள் பகர்ந்தார்கள். அப்பொழுது பொன்னுடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கினர்கள். "சங்கநூற் செல்வர்" என்னுஞ் சிறப்புப்பெயரும் இவருக்கு வழங்கப் பட்டது.

## அறுவை மருத்துவம்

1962 ஆம் ஆண்டில் அருளம்பலவனர் நோய்வாய்ப் பட்டார். குடலில் ஏறபட்ட நோயின் பொருட்டு யாழ்ப்பாணம் பெரிய மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டார். மருத்துவர்

மயில்வாகனம் அருளம்பலவனாரின் உடலை ஆராய்ந்து பார்த்து அறுவை மருத்துவஞ் செய்ததன் பலனாக அருளம்பலவனார் நலம்பெற்று மீண்டார். பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை அச்சிடுவதில் முனைந்தார்.

## இரண்டாம் பகுதி வெளியீடு

இலங்கை சாகித்ய மண்டலம் நன்கொடையாக வழங்கிய ஆயிரரூபாயும், காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகத்தினர் பொற்கிழியாக வழங்கிய ரூபா முந்நூறும் யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாடாபிவிருத்திச் சங்கம் வழங்கிய ரூபா இருநூறும் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பகுதியை அச்சிடுவதற்கு உதவியாக அமைந்தன. அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாடாபிவிருத்திச் சங்கமும் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை முதற்பகுதியைப் பாடநூலாக ஒப்புக்கொண்டமை அருளம்பலவனாரின் ஆர்வத்தை மேலும் மிகுதிப்படுத்தியது.

## பண்டிதமணி

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாடாபிவிருத்திச்சங்க ஆதரவில் வண்ணைவைத்தீசுவர வித்தியாசாலையில் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை இரண்டாம் பகுதி வெளியீட்டுவிழா கந்தையா வைத்தியநாதன் என்பவருடைய தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது தலைவர் அருளம்பலவனாரைப் பாராட்டிப் 'பண்டிதமணி' என்று பட்டம் வழங்கினர். வடபகுதி உதவி வித்தியாதிபதியான சி. உ. சோமசேகரம் என்பவர் பதிற்றுப்பத்துக்குக் காரணமாக விளங்கிய சேரமன்னரின் இலச்சினையாகிய வில்பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை அருளம்பலவனாருக்கு அணிந்து பெருமைப் படுத்தினர். சி. கணபதிப்பிள்ளை அருளம்பலவனாரைப் பாராட்டிப் பேசினர்.

## மறுமுறை இந்தியா வருதல்

பிறகு அருளம்பலவனார் திருவாசக ஆராய்ச்சி உரையை எழுதத்தொடங்கினார். திருவாசகத்தில் வருஞ் சிவப்பதிகளை நேரிற் கண்டு வழிபடவும் படங்களைத் தொகுக்கவும் விரும்பினார். தம்முடைய மனைவியையும் இருமக்களையும் அழைத்துக்கொண்டு 1964 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து பல சிவப்பதிகளையும் போற்றி வழிபட்டார். எதிர்பாராதவாறு தனுஷ்கோடி நீரில்மூழ்கியதோடு பாம்பன்பாலமும் தகர்ந்தது. இதனால் அருளம்பலவனாரும் குடும்பத்தினரும் நீண்டகாலம் இந்தியாவில் தங்கவேண்டிய நிலைமையேற்பட்டது. இப்பொழுதும் பல அறிஞர்களையும் முன்பு பழக்கமானவர்களையுங் கண்டு உரையாடினார். காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் ஆதீனம் சிவஞானத்தம்பிரான் சுவாமிகள் இவருடைய திருவாசக உரையைப் படித்துப்பார்த்து இவரைப் பாராட்டினார். பிறகு இவரும் இவருடைய குடும்பத்தினரும் விண்ணக ஊர்தி மூலம் தாயகம் போய்ச்சேர்ந்தனர்.

## திருவாசக உரை

திருவாசக உரையை எழுதத்தொடங்கிய இவர் அல்லும் பகலும் அவ்வுரையெழுதுதலை மேற்கொண்டார். அதனால் உடல்நலங் குன்றியது. எழுதஎழுத அச்சுக்குக் கொடுத்த திருவாசக உரையின் அச்சுவேலையையும் பார்த்தார். உடல் நிலை மோசமாகவே மருத்துவமனையை அடைந்தார்.

## இறுதி

உடல்நிலை மோசமான நிலையில் இருக்கும் பொழுதும் திருவாசக அச்சுவேலையைச் செய்து கொண்டிருந்த இவர் 1966 ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் ஏழாம் நாள் அம்பலவாணனுடைய அடிமலரைச் சேர்ந்தார்.

எழுதிய நூல்கள்

(க) திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை
(உ) பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை
(ங) பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை
(ச) திருவாசக ஆராய்ச்சியுரை
முதலியன இவர் இயற்றிய நூல்கள்.

இவருடைய மறைவு குறித்து அறிஞர்கள் பலரும் இரங்கினர்.

பாராட்டுப் பா

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை என்பவர் இவரைப் பாராட்டிப் பல பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று:

"நாவலர்செந் தமிழ்வசன நடையினால்
இசைபெற்றார் யாழ்நூல் ஈந்தே
பூவுலகில் சுவாமிவிபு லாநந்தர்
புகழ்படைத்தார் பொலியும் சங்கப்
பாவுலகில் பதிற்றுப்பத் துரைகண்டே
சிரகுளம் பலவா நீயும்
பூவுலவு நாமகளின் புதல்வனெனும்
உரிமைபெறு தகுதி பூண்டாய்"

வரலாற்றிரங்கற் பா

இவருடைய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகர் என்பவர் பாடிய பின்வரும் இரங்கற்பா அருளம்பலவரின் வரலாற்றையும் விளக்குகிறது.

வரலாற்றிரங்கற் பா

திருவள ரீழமாம் பெருவள நாட்டின்
சிரமென மருவித் திகழியாழ்ப் பாணத்து
மேலைத் திசையது வேலைசூழ் வுற்றது
மருதமும் நெய்தலும் மயங்கிய மரபில்

பலவித நலனும் நிலவு நலத்தது
தாளாண்மை மிக்க வேளாண் குடிகளும்
மற்றைய குடிகளும் முற்றிடப் பெற்றது
பலவகைக் கல்வியும் பலவகைச் செல்வமும்
நிறைதரு மாந்தர் உறைதரு சிறப்பது
உய்திறம் அருளுஞ் சைவவா லயம்பல
இடைதொறும் இடைதொறும் இயைந்து நிகழ்வது
காரைமா நகரெனும் பேரு ராகும்
அந்நகர் வடபால் மன்னிய வலந்தலைப்
பகுதியில் வாழ்ந்த தகுதிசால் மருத்துவன்
சுவாமி நாத னவர்மழ குடைய
சிதம்பரத் தெரிவையை இதம்பெற மணந்து
பெற்றநற் புதல்வன் நற்றவர் கூறிய
அருளம் பலவனும் மருவும் பெயரினன்
தொடக்கக் கல்வியல் விடத்துள பள்ளியில்
பயிலுங் காலையில் நயமலி தந்தையை
இழந்தே கல்வியில் தளர்ந்தன னயினும்
இருபான் வயதில் விரவிய அறிவினல்
ஆசிரிய பயிற்சிபெற் றுசிரிய னயினன்
அன்றியும்,
சீரியாழ்ப் பாண ஆரிய திராவிட
பாஷாபி விருத்திச் சங்கப் பரீட்சையில்
பிரவேச பண்டிதன் பாலபண் டிதனெனும்
பட்டம் பெற்றே திட்ப முற்றனன்
மதுரைமா நகரில் மருஉந்தமிழ்ச் சங்கப்
பண்டித பரீட்சையில் பண்டித னயினன்
ஓவியக் கலையில் மேவிய திறமையால்
சான்றிதழ் பெற்றுத் தகைமை யெய்தினன்
சொந்தவூ ரதனில் சுப்பிர மணிய
வித்தியா சாலை முதலாம் பற்பல
வித்தியா லயங்களில் நற்றமிழ் பயிற்றி
உதவியா சிரியனுய்த் தலைமையா சிரியனுய்
ஆறு ருண்டுகள் அரும்பணி யாற்றினன்
நல்ல தம்பியும் இல்சிவ காமியும்

தந்த விசய சௌந்தரம் மாவை
வாழ்க்கைத் துணைவியாய் மணஞ்செய்து கொண்டு
நல்லற மாகிய இல்லறம் பேணினன்
அந்தநல் லறத்தின் வந்திடு பேருய்
மகேசுவர நாதனே மகேசுவர தேவி
சிவாநந்த நாதன் தியாகராச நாதன்
கலாதேவி தன்னெடு சிவயோக நாதன்
என்னும் மக்களை ஈன்றநல் தந்தை
மக்களுக் காற்றும் உதவியில் மிக்க
கல்வியில் உயர்வு மல்கிடச் செய்தனன்
அஃதான்று,
பொருவிலாத் திருமுரு காற்றுப் படைக்கோர்
ஆராய்ச்சி உரையினை ஆக்கிவெளி யிட்டனன்
பெரும்பா ணாற்றுப் படையாய் வுரையினை
விரும்பவெளி யிட்டும் அருந்தமிழ் நூல்களில்
தானே ஒப்புத் தனக்கா தலினல்
ஒத்த பதிற்றுப் பத்தென் றுரைக்கும்
நூலினு ராய்ச்சி வேலையைத் தொடங்கி
அரியன வாய விரிவுகள் எழுதி
இருபாக மாக இனிது வெளியிட்டும்
சங்கநூற் பயிற்சியில் தகைமை யெய்தினன்
அதனல் ;
சாகித்ய மண்டலம் தரும்பரிசு பெற்றனன்
பாராட்டு விழாவில் பண்டித மணியே
சங்கநூற் செல்வன் என்றித் தகுநிப்
பெயர்களைப் பெற்றும் உயர்பொன் னுடை
பொற்கிழிப் பரிசில்கள் பெற்றுமுயர் வெய்தினன்
செந்தமிழ் நாட்டில் சிவதலம் பலவும்
சென்று வணங்கிடப் பன்முறை யாத்திரை
செய்தே அறிவுந் திருவுமெய் தியவன்
பலவகைப் பொருள்களில் இலகுநடை தன்னில்
மேடைப் பேச்சும் வானெலிப் பேச்சும்
நிகழ்த்தி யெவரும் மகிழ்ந்திடச் செய்தனன்
கட்டுரை பலவும் பத்திரி கைகளில்

வெளியிட் டதனால் விளங்கிடத் தெரித்தனன்
தெய்வச் செந்தமிழ்த் திருவருட் பாக்களைச்
செவ்விதி னாய்ந்திடச் சிந்தையிற் கொண்டு
திருவா சகமெனும் திருவருள் நூலின்
உரையா ராய்ச்சியை வரைதரு காலை
அறிஞர்கள் பலரும் முறைமையி லெழுதிய
பழைய உரைகளை விழைவொடா ராய்ந்தே
இயைவன கொண்டும் இயைபில வொருவியும்
தன்கோள் நாட்டத் தக்கமேற் கோள்கள்
நன்கு நாட்டியும் நயம்பெற வெழுதினன்
அவ்வுரை யதனை அச்சுவா கனத்தில்
முந்நூறு பக்கம் மன்னிட வேற்றினன்
தேக வியோகம் ஆகும்நாட் காலையும்
சிலபக் கங்களை நலமுறு பிரதியோ
டொப்பு நோக்கி அச்சுக் கனுப்பினன் ;
தன்னா ராய்ச்சி உரைகள் எவற்றையும்
என்னோ டளவளாய் இயற்றுங் காலையும்
திருக்கோவை யாருரை தேருங் காலையும்
களவிய லுரையினைப் பயிலுங் காலையும்
உவந்தியான் கூறினும் கடிந்தியான் கூறினும்
மனநிலை திரியாத் தனிநலம் உடையவன்
தனைக்கடித் துரைப்பவர் எனையல திலரென
அன்பொடு மொழியும் பண்புடை யொருவன்
எனைப்பே ணினரில் தனிச்சிறப் புடையவன்
வயிற்றிடை வந்த துயர்ச்சி நீங்கச்
சத்திர சிகிச்சை உற்றிடப் பெற்றும்
அந்திய நிலையில் வந்த தளர்வினால்
அரசினர் மருத்துவ மனையிடை யமர்ந்தும்
உடல்நலம் குன்றினன் ஆயினும் திடமுறும்
அறிவுநலங் குன்றா தந்தம் வரையும்
திருவா சகவுரை மருவுசிந் தையனாய்ச்
சைவநூ லாய்வினி லெய்தி யிருந்தனன்
இனையன பலவியல் அணிபெறும் அண்ணல்
அருளம் பலவனும் பொருவரும் நண்பன்

எழுநான் கிரட்டி தழுவிய வயதில்
பராபவ ஆண்டில் விரிவுவை காசியில்
ஐந்தாம் நாளில் வந்தவி யாழனில்
இரவுப் பொழுது புலர்வதன் முன்னர்
அமாவா சையினில் அமர்கார்த் திகையில்
சிவசிவ நாமம் தழுவுநா வுடனே
அருளினுல் ஐந்தொழில் திருநடம் புரியும்
திருச்சிற் றம்பல வாணன் திருவடி
அருத்திபெற் றின்ப மலர்ந்துமன் னினனே.

ஆண்டு பராபவ வைகாசி யைந்துபொன்னுள்
ஈண்டமா கார்த்திகை எய்தச்சீர்—பூண்டோன்
அருளம் பலவன் அடைந்தனனே ஆடல்
அருளம் பலவன் அடி.

---

## உ௬. ந. சி. கந்தைய பிள்ளை

### பிறப்பு

சங்க நூல்களில் பெரும்பான்மையையும் உரைநடையில் எழுதிய ந. சி. கந்தைய பிள்ளை அவர்கள் ஈழவளநாட்டில் கந்தரோடை என்னும் இடத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் நன்னியர் சின்னத் தம்பி.

### ஆசிரியத் தொழில்

கல்விகற்றுத் தெளிந்த பிறகு கந்தரோடைப் பள்ளியில் சிலகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். சங்கநூல்கள் யாவற்றையும் கற்றுப் புலமைபெறவேண்டும் எனனும் எண்ணம் இவரிடம் மிகுதியாக இருந்தது. ஆசிரியத் தொழில் புரிந்தபோதே சங்க நூல்களையும் நனகு கற்றுணர்ந்தார். ஆங்கிலத்தையும் மொழிபெயர்ப்புத் திறமையையுமாறு கற்றார். மலேயாவுக்குச் சென்று ரயில்வேயில் பணிபுரிந்தார். இவருடைய நோக்கம் முழுவதும் நூல்எழுத வேண்டுமென்பதிலேயே இருந்தது. ஆராயசசி நூல்களில் அதிகக் கருத்தைச் செலுத்தினார். தமிழ்மொழி ஆராய்ச்சி, தமிழநாட்டைபபற்றிய ஆராய்ச்சி ஆகியவைகளில் அதிகக் கவனஞ் செலுத்தினார். இதன பயனாகத் தமிழகம், தமிழர் யார், தமிழ் இந்தியா முதலிய ஆராய்ச்சி நூல்களை எழுதினார்.

### நூல்கள் வெளியிடுதல்

ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை எழுதி முடித்தாராயினும் அவைகளை இலங்கையிலேயே வெளியிடுவதற்குரிய வசதிகள் ஏற்படவில்லை ஆகவே சென்னையை அடைந்து தம்முடைய நூல்களை வெளிப்படுத்துவதென்று முடிவு செய்தார். முதற்கண் தியாகராய நகரில் உள்ள ஒற்றுமை

நிலைய உரிமையாளர் திரு. மு. ஏ. வீரபாகு பிள்ளையவர்களைக் கண்டு தாம் ஆராய்ச்சி நூல்கள் பல எழுதியிருப்பதையும் மேலும் எழுதிக்கொண்டிருப்பதையும் மேற்படி பிள்ளையவர்களிடம் தெரிவித்தார். உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்த மேற்படி வீரபாகு பிள்ளையவர்கள் சில நூல்களைப் பள்ளிமாணவர்க்கேற்ற முறையில் வெளியிட்டிருந்ததோடு ஒற்றுமை என்னும் திங்கள் இதழையும் நடத்திக்கொண்டிருந்தார்.

கந்தைய பிள்ளையின் நூல்களையும் வெளியிடத் தொடங்கித் தமிழகம், தமிழர் சரித்திரம், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர் முதலிய ஆராய்ச்சி நூல்களையும், பத்துப்பாட்டு வசனம், அகநானூறு வசனம், பதிற்றுப்பத்து வசனம், புறப்பொருள் விளக்கவசனம், கலிங்கத்துப்பரணி வசனம், பரிபாடல் வசனம், கலித்தொகை வசனம், அறிவுரை மாலை, அறிவுரைக் கோவை, தேம்பாவணி வசனம் முதலிய நூல்களை வெளியிட்டார்.

பிறகு கந்தையா அவர்கள் முத்தமிழ் நிலையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் முதலிய இடங்களிலும் வெளியிடச் செய்தார். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தமிழ் இந்தியா முதலிய சில நூல்களை வெளியிட்டனர்.

இவரால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள்:

| | |
|---|---|
| இராமாயணம் நடந்த கதையா? | போது அறிவு |
| மறைந்த நாகரிகங்கள் | வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தமிழர் |
| இந்துசமய வரலாறு | பத்துப்பாட்டு உரைநடை |
| தமிழகம் | அறிவுரைக் கோவை |
| தமிழர் சரித்திரம் | அறிவுரை மாலை |
| செந்தமிழ் அகராதி | ஆரியத்தால் விளைந்த கேடு |
| தமிழ்ப்புலவர் அகராதி | பெண்களும் சமூகமும் |

தமிழ் ஆராய்ச்சி
நீதிநெறி விளக்கம் உரை
தமிழ் விளக்கம்
சிந்துவெளித் தமிழர்
முச்சங்கம்
பெண்கள் போராட்டம்
மரணத்தின் பின்
நமது நாடு
தமிழர் சமயம் எது?
திராவிட மொழிகளும் இந்தியும்
திராவிடம் என்றால் என்ன?
பதிற்றுப்பத்து வசனம்
புறப்பொருள் விளக்க வசனம்
அகநானூறு வசனம்
பரிபாடல் வசனம்
கலித்தொகை வசனம்
பொருளுரைக் கோத்து
நமது மொழி
சிவன்
தமிழர் சமயம் எது?
பாம்பு வணக்கம்
மதனுபிஷேகம்
தேம்பாவணி வசனம்
திருக்குறள் அகராதி
இலங்கைப் புலவர்கள்
ஆரியர் வேதங்கள்

மற்றும் பல.

**இறுதி**

ஏறக்குறைய எழுபது ஆண்டுகள்வரை வாழ்ந்திருந்த இவர் 1967 ஆம் ஆண்டில் தமது தாய்நாட்டிலேயே காலமானார்.

**குடும்பம்**

இவருடைய மனைவியின்பெயர் இரத்தினம்மா. அவ்வம்மையார் பல ஆண்டுகட்கு முன்னரே காலமாயினர். திருநாவுக்கரசு என்னும் மகனும் மங்கையர்க்கரசி என்னும் மகளும் இவருக்கு மக்கட்செல்வங்களாகத் தோன்றினர்.

---

## க.O. நடேச பிள்ளை - சு.

பிற்காலத்தில் இலங்கை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த நடேச பிள்ளை 1895 ஆம ஆண்டில் மேத்திங்கள் 21 ஆம் நாளில் சோழவளநாட்டில் தஞ்சையில் பிறந்தார்.

தஞ்சை செயின்ட் பீட்டர் பள்ளி, திருச்சி செயின்ட் சோசப் கல்லூரி, சென்னை சட்டக்கல்லூரி ஆகியவைகளில் கல்வி பயின்றார். தஞ்சையில் இரண்டாண்டுகள் வழக்கறிஞராகத் தொழில் செய்தார் நகராட்சி மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்தார்.

1923 ஆம் ஆண்டில் சர் பொன்னம்பலம் இராமநாதன் தம் இலக்கியச் செயலாளராக அமர்த்தினார். 1924 ஆம் ஆண்டில் இராமநாதனுடைய பரமேசுவரக் கல்லூரியின் முதல்வரானார். 1926 ஆம் ஆண்டில் அவருடைய மகள் சிவகாமசுந்தரியைத் திருமணம் புரிந்தார்.

1930 ஆம் ஆண்டில் சர். பி. இராமநாதன அரசியல் காரணமாக இங்கிலாந்திற்குச் சென்றபொழுது இவரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு சென்றார்.

நடேசபிள்ளை, பண்பாட்டுக் கழகமான கலாநிலையத்தின் தலைவராக இருந்தபொழுது, 'ஞாயிறு' என்ற தமிழ இலக்கியத் திங்கள வெளியீட்டைத் தோற்றுவித்தார்.

1934 ஆம் ஆண்டில் இலங்கை ஸ்டேட் கவுன்சிலுக்குக் காங்கேயன் துறைமுகத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். 1934 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டுவரை அதன் கல்வி நிறைவேற்றக் குழுவிலும், இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியின் ஆட்சிக்குழுவிலும் அரசினருடைய பல கழகங்களிலும் பணி ஆற்றினார்.

1951 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ்வளர்ச்சிக் கழகம் நடத்திய நான்காம் தமிழ் விழாவின் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து சிறந்தமுறையில் அவ்விழாவை நடத்தினர்.

1952 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த தமிழ் விழாவில் இலக்கியம் நுண்கலைப் பகுதிகளுக்குத் தலைமை யேற்ருர்.

இலங்கையில் அரசினருடைய செல்வாக்குப் பெற்றிருந்த 'யுனைடெட் நேஷனல்' கட்சிக்கு 1948 ஆம் ஆண்டுவரை துணைத்தலைவராக இருந்தார். 1952 ஆம ஆண்டில் மீண்டும் பார்லிமெண்டுக்குக் காங்கேயன் துறைத்தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அஞ்சல், செய்தி ஆகிய துறைகளுக்கு அமைச்சராளுர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தூத்துக்குடி பழைய சைவசித்தாந்த சபைகள், திருவெண்ணெய்நல்லூர் திருவாவடுதுறையாதீன மெய்கண்ட சைவசித்தாந்த மகாநாடு, சென்னை சைவசித்தாந்த மகாசமாசம், கொழும்பு விவேகாநந்த சபை முதலிய சமய இலக்கிய அமைப்புக்களின் ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கினர்.

இலங்கைப் பல்கலைக்கழக நீதிமன்றம், செனெட் கீழ் நாட்டுக் கலைத்துறை ஆகியவற்றில் பல ஆண்டுகள் தொண்டு செய்தார்.

சுன்னுகம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் அறங்காவலராகவும் பரமேசுவரா ஆடவர் கல்லூரியின் நெறியாளர் குழுவின் தலைவராகவும் அமர்ந்து நல்ல பணிகள் செய்தார்.

சைவசித்தாந்தத்தில் இவருக்கு நல்ல ஆராய்ச்சித் திறமையிருந்தது. தூத்துக்குடி சைவசித்தாந்த சபையினர் இவருடைய சைவசித்தாந்தத் திறமையையும் பணியையும் பாராட்டிச் "சித்தாந்தப் பெருங்காவலர்" என்னும் பட்டத்தை வழங்கினர்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே இவர், பேராசிரியர் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள் தம் தாயார் சொர்ணம்பாள் பேரில் நிறுவியுள்ள அறக்கட்டளையின்பேரில் முதன்முதலாகத் 'திருவள்ளுவர் காலம்' பற்றி ஓர் அரிய சொற்பொழிவை ஆங்கிலத்திலேயே நிகழ்த்தினர். அச் சொற்பொழிவை அவர்கள் எழுதி யனுப்பாமையினால் அச்சிடப் பெருது போயிற்று.

பல்கலைக்கழக இலங்கை வரலாறு என்னும் நூலில் தமிழ் வரலாறுபற்றி இவர் எழுதிய பகுதிகள் சிறந்து விளங்குகின்றன. சகுந்தலைவெண்பா என்னும் நூலை இயற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரங்கேற்றினர்.

சிவஞானமாபாடியத்தில் மிகவும் போற்றப்பெற்ற சர்வஞானோத்தரத்தைத ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்த இவருடைய இறுதி முயற்சி முடிவுபெறவில்லை.

தெளிவும் அமைதியும் நிலைபெற்ற சமய இலக்கியக் கொள்கைகளை மேற்கொண்டிருந்த இவர் 1965 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

கழக வெளியீடு : கசஉஅ

# தமிழ்ப் புலவர் வரிசை

[இருபத்தொன்பதாம் புத்தகம்]

***

ஆசிரியர் :

கருப்பக்கிளர் திரு சு அ இராமசாமிப் புலவர்

***

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1971

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

1971 © THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 July 1971

O31, 6wN7
H 7.29

THAMIZHP PULAVAR VARISAI
XXIX

Appar Achakam, Madras-1. (I/)

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம் தத்தம் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் செய்கின்றன.

அத்துடன் அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப்பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம்நாட்டுப்புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் நற்றொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் இருபத்தெட்டு நூல்களை வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல் இவ்வரிசையில் இருபத்தோன்பதாம் புத்தகம் ஆகும்.

இதன்கண் அழகசுந்தர தேசிகர் முதல் பாலூர் கண்ணப்ப முதலியார் ஈருக கூ புலவர் பெருமக்கள் வரலாறுகளும், அப்புலவர் பெருமக்கள் யாத்த பாடல்கள், அவர்களைப் பற்றி எழுதப்பட்ட பாடல்கள் ஆகியனவும் செவ்விய முறையில் எழுதப் பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் இருபத்தெட்டுப் புத்தகங்களைப் போலவே மாணக்கர்களும், பொது மக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் நூல் நிலையங்களில் வாங்கி வைத்தும் புலவர் பெருமக்கட்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| க. | அழகசுந்தர தேசிகர் | 1 |
| உ. | திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கர் | 13 |
| ௩. | புலவர் பாண்டியனார் | 23 |
| ச. | ஈசுவர அடிகளார் | 31 |
| ரு. | நாகர்கோயில் ஆறுமுக நாவலர் | 36 |
| சு. | ரா. பஞ்சநதம் பிள்ளை | 59 |
| எ. | கோவைகிழார் ம. இராமச்சந்திரன் செட்டியார் | 64 |
| அ. | அ. கந்தசாமிப் பிள்ளை | 85 |
| கூ. | வை. சுந்தரேச வாண்டையார் | 101 |
| க0. | காசிகாநந்த அடிகள் | 112 |
| கக. | பொ. திருகூடசுந்தரம் பிள்ளை | 121 |
| கஉ. | பரலி. சு. நெல்லையப்பர் | 134 |
| க௩. | பாலூர் கண்ணப்ப முதலியார் | 143 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## [இருபத்தொன்பதாம் புத்தகம்]

---

### க. அழகசுந்தர தேசிகர்

**தோற்றம்**

அழகசுந்தர தேசிகர் எனவும் பிரான்சிஸ் கிங்ஸ்பரி எனவும் பெயர் வழங்கப் பெற்ற இவர், பழந்தமிழ்ச் சங்க நூல்களை வெளியிட்டு அழியாப்புகழ் தேடிக்கொண்ட சி. வை. தாமோதரம் பிள்ளையின் மகனுவர். சி. வை. தாமோதரம் பிள்ளை யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி வைரவ நாத பிள்ளையின் மகனுவர்.

சி. வை. தாமோதரம் பிள்ளை முதல் மனைவியையும் பெண்பிள்ளைகள் இருவரையும் இழந்த பிறகு நாகமுத்து என்னும் நங்கை நல்லாளை நன்மணம் புரிந்து நன் மக்கள் ஐவரைப் பெற்ருர். அவருள் நான்காம் புதல்வ ராக இவர் 1873 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 8 ஆம் நாள் பிறந்தார். இவருக்கு இடப்பட்ட பெயர் அழகசுந்தரர் என்பது.

**கல்வி**

அழக சுந்தரர் உரிய பருவத்திற் கல்வி கற்கத் தொடங்கினர். சி. வை. தாமோதரம் பிள்ளை சென்னையில் இருந்தபொழுது இவர் பிறந்தாராகையால் இவருடைய கல்வி சென்னையில் தொடங்கிற்று. சி. வை.

தாமோதரம் பிள்ளை அடிக்கடி இடம் மாறியபடியால் அழக சுந்தருடைய படிப்பும் அடிக்கடி இடம் மாறியது. இவர் இளமைப் பருவத்திலேயே கல்வியில் ஊக்கங் கொண்டு, நிகண்டு நன்னூல் முதலியவைகளை ஐயந் திரிபறக் கற்றுணர்ந்தார். இவருக்கு அகவை பதினொன் றான பொழுது இவருடைய தந்தையார் இவரைத் திருவா வடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடம் அழைத்துக்கொண்டு சென்றார். அக்கால வழக்கப்படி ஆதீனத் தலைவர் இவரைச் சில கேள்விகள் கேட்டார். இவர் அவருடைய கேள்விகளுக்குத்தக்க மறுமொழிகளைக் கூறினார். மேலும் திருச் செந்தி னிரோட்டக யமகவந் தாதியை முதலிலிருந்து முடிவுவரை பாராமற் கூறினார். இவருடைய திறமையை ஆதீனத் தலைவர் புகழ்ந்து, "நீ பிற்காலத்திற் சிறந்து விளங்குவாய்" என்று கூறினார். இவரும் பிற்காலத்தில் மிகுந்த புகழடைந்து சிறந்து விளங்கினார்.

### மதமாற்றமுந் தடுமாற்றமும்

அழக சுந்தரருக்கு அகவை பத்தொன்பது நிகழ்ந்து கொண்டிருந்த போது (26-2-1892) பிற்பகல் அமெரிக் காவிலிருந்து வந்த பாதிரியார் ஒருவர் சென்னையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அச் சொற்பொழிவைக் கேட்பதற்கு அழக சுந்தரருஞ் சென்றிருந்தார். பாதிரியா ருடைய அச் சொற்பொழிவு மக்களை மதமாற்றஞ் செய்வ தற்குச் செய்யப்பட்டது. சஞ்சல அறிவினையுடைய சிலர் மற்றவர்களுடைய சில சொற்களானே உள்ளந் திரிவ துண்டு. அந்நிலை அழக சுந்தரருக்கும் உண்டாகியது. தாமுங் கிறித்துவ சமயத்திற் புகுந்துவிட வேண்டு மென்று முடிவு செய்தார். அதைப்பற்றி ஓராண்டுவரை எண்ணமிட்டார். 19-2-1893 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப் பாணம் வட்டுக்கோட்டைப் பாதிரிமார்கோயிலில் அறிவு நீராட்டம் (ஞானஸ் நாநம்) பெற்றுக் கிறித்துவரானார். தாம் கிறித்துவராகிவிட்டதை அனைவருக்கும் அறிவித்து

விட்டார். இவர் இதற்கு முன்னரே தம்முடைய தந்தையை விட்டுப் பிரிந்து தனிவாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்.

### திருமணம்

அந்நாளில் சென்னைக்கு வடக்கே, ஆந்திர நாட்டில் நெல்லூரில் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை வாசியான சிதம்பரம் பிள்ளை யென்பவர் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவருடைய இரண்டாவது பெண் மரியம்மாள் இரத்தினம் என்பவளை 14-8-1893 இல் திருமணஞ் செய்துகொண்டார். இத்திருமணத்திற்கு இவர் செலவிட்டது ரூபாய் ஆறுதான்.

### பல்வகையான பணிகள்

தேசிகர் பலவிடங்களிற் பணிபுரிந்தார். 1906 ஆம் ஆண்டு கிறித்துவ வாலிபர் சங்கத்திற்குத் தம் உதவியை இயன்ற மட்டுஞ் செய்யச் சென்றார். ஓராண்டுக்காலம் இலங்கை, இந்தியா, பர்மா முதலிய இடங்களை யெல்லாஞ் சுற்றிப் பார்த்தார். மறு ஆண்டு இந்திய கிறித்துவ வாலிப சங்கத்தின் உறுப்பினராகி அகில உலக கிறித்துவ மாநாட்டிற்குச் சப்பான் நாடு சென்றார். அதுமுடிந்ததும் 1908இல் பசுமலைக்குத் திரும்பினார். பெங்களூரில் ஆன்ம போதக கலாசாலையில், தமிழ், சங்கீதம், சைவம் ஆகிய மூன்று பாடங்களையுங் கற்பிக்கும் பேராசிரியரானார். 1911 ஆம் ஆண்டில் அந்நாட்டுக் கிறித்துவ வாலிப சங்க அதிகாரியாக நியமனம் பெற்றார். இவர் சமயத் தொண்டு செய்து வந்ததோடு தமிழ்க் கல்வியையும் நன்கு வளர்த்து வந்தார். எவ்வளவு விலையாக இருந்த போதினும் தமிழ் நூல்களை வாங்கிக் கற்பார். தம்முடைய தந்தையார் அல்லது நாவலர் பதிப்பித்த புத்தகங்களென்றால் மிகுதியும் பாராட்டிப் போற்றுவார்.

## ஆழ்ந்த ஆராய்ச்சி

இவர் சொற்பிறப்பாராய்ச்சி செய்வதில் மிகு வல்லவர். சில வேளைகளில் ஒருசொல்லின் தோற்றம் தமக்குத் தோன்றுவிடத்து அதனைப்பற்றி ஆராய்ந்து கொண்டு ஆழ்ந்த எண்ணத்துடனிருப்பார். சில சமயங்களில் இரவு இரண்டு மணிக்குக்கூட எழுந்து அகர முதலி நூலைத் திறந்துவைத்துப் பார்த்துக் கொண்டிருப்பார். குளிப்பதற்கு அறைக்குட் சென்றாலும் திடீரென்று ஏதாவதொரு நூலைப் புரட்டிக் கொண்டிருப்பார். சில பொழுது நெடுநேரம் எண்ணமிட்டுக்கொண்டு நின்றுவிடுவார். உணவுண்ணும் பொழுது ஆராய்ச்சியில் ஆழ்ந்துவிட்டால் நெடுநேரம் அப்படியே இருந்து விடுவார். மற்றவர்கள் நினைவூட்டினால்தான் இயற்கை நிலைக்குத் திரும்புவார். ஒருமுறை புகை வண்டிப் பயணஞ் சென்ற பொழுது ஆழ்ந்த ஆராய்ச்சியில் இருந்தபடியால் இறங்க வேண்டிய புகைவண்டி நிலையத்தில் இறங்காமல் அப்பாற் சில நிலையங்கள் வரை போய்விட்டுப் பிறகு திரும்பி இறங்க வேண்டிய நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். இத்தகைய ஆழ்ந்த ஆராய்ச்சி மனப்பான்மை இவருடைய தந்தையாராகிய தாமோதரம் பிள்ளைக்கும் உண்டாம்.

## பொருளைப் பொருட் படுத்தாமை

தம்முடைய காரியங்களில் கருத்தை மிகுதியாகச் செலுத்திய இவர் செய்யும் வேலைகளைத் திருத்தமாகச் செய்வார். பொருளை இவர் பொருட்படுத்தியதே இல்லை. பசுமலையில் பாதிரியாராக இருந்தபோது ஊதியம் அறுபது ரூபாய்தான். கொழும்பிற் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்தபோது ஊதியம் 900 ரூபாய். ஆனால் இவர் அவ்வூதிய உயர்வுதாழ்வைப் பற்றி எத்தகைய மனமாறுபாடுங் கொண்டதில்லை. எவரேனும் உதவியை நாடிச் சென்றால் தாராளமாக உதவிசெய்வார், எவருக்கும் இல்லையென்று சொல்வதில்லை. கையிற் பொரு

ளில்லாத சமயமாக இருந்தால் உதவி நாடிச் செல்பவர் களுக்குக் கடன் வாங்கியாவது உதவிசெய்வார்.

### சைக்கிள் விடுவதில் திறமை

இந்நாளில் பலபேர் சைக்கிள்விடத் தெரியாமல் அப்படியும் இப்படியுமாகக் கூத்தாடிக்கொண்டு செல்வதைப் பார்க்கிறோம். இவர் சைக்கிள் விடுவதில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆடாமல் அசையாமல் இவர் சைக்கிளில் செல்லும் அழகை மைசூர் அரசரே பார்த்துப் பாராட்டி இவர் சைக்கிள் விடுவதில் மிகவும் வல்லவர் என்று நற்சான்றும் வழங்கினர்.

### சொற்பொழிவுத் திறன்

கேட்டார்ப் பிணிக்குந் தன்மையிற் சொற்பொழி வாற்றுவதில் இவர் மிக வல்லவர். ஆறுதிங்கள்கள் யாழ்ப்பாணம் பெங்களூர் முதலிய இடங்களுக்குப் பொப் பிலி பாதிரியாரோடு சென்றார். மட்டக்களப்பில் அகில இலங்கை ஆசிரியர் மாநாடு ஒன்று கூடியது. அம் மாநாட்டில் இவர் சொற்பொழிவு நிகழ்த்தி அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கினர். இவருடைய சொற்பொழிவைக் கேட்க விரும்பிப் பலர் பல இடங்கட் கும் வருமாறு அழைத்தார்கள்.

### போர்முனையில் வேலை

அக்காலத்தில் மெசபொடோமியாவில் போர் மூண்டு மும்முரமாக நடைபெற்றது. பல கிறித்துவர்கள் மாண் டார்கள். தேசிகருக்குப் பொறுக்கவில்லை. பேராசிரியர் அலுவலில் இருந்து நீங்கி வடக்கே சென்றார். இந்தியப் பட்டாளத்திற் புரோகிதராக இருந்தார். அங்குத் தாம் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் சரிவரச் செய்தார். அதற்குப் பரிசாக ஒரு நீலக்கல் மோதிரம் இவருக்குக்

கிடைத்தது. அம்மோதிரம் இவர் இறக்கும் வரையிலும் இவருடைய கையில் இலங்கியது. போர் முனையில் இருந்த காலத்திலும் இவர் படிப்பை விடவில்லை.

### அகராதிக் குழுவில் வேலை

இவர் வெளி நாடுகளில் இருந்துவிட்டு 1924 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தார் அமைத்திருந்த அகராதிக் குழுவில் துணையாசிரியராக அமர்த்தப்பெற்றார். 1926 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் வரையிலும் அவ்வேலையில் இருந்தார். பிறகு கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

### பல துறைகளிலும் பயிற்சி

இவர் ஆசிரியத் தொழில் பாதிரித்தொழில் முதலிய பல தொழில்களிலும் பயிற்சியுடையவராகத் திகழ்ந்தார். எவர் எத்தகைய காரியத்திற்குக் கூப்பிட்டாலும் இவர் சென்று அக்காரியத்தை யாற்றுவார். வானொலியிற் பேசினார். அன்பு மார்க்க சங்கம், விவேகாநந்த சபை, இராமகிருட்டிண சபை முதலிய பொது நிறுவனங்களில் பங்கு கொண்டு உரையாற்றினார். கூத்தும் ஆடினார். இசையும் பாடினார். பல நூல்களையும் பாடல்களையும் இயற்றினார்.

### இவருடைய பரந்த நோக்கம்

மற்றவர்களைப்போல் இவர் குறுகிய நோக்கம் உடையவராக இருக்கவில்லை. பரந்த நோக்கமுடையவராக விருந்தார். தமிழராகப் பிறந்த கிறித்துவர்கள் கடவுளைத் தமிழிலும் போற்றலாம்; கடவுளுக்குத் தமிழுந் தெரியும் என்று ஒரு நாள் ஒருசொற்பொழிவிற் கூறினார். ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் வழிபாடு செய்யும்

வழக்கமுடையவர்களாக இருந்தவர்கள் இதனைக் கேட்டு நாணமடைந்தனர். இவர் சாதி சமய பேதங்களைப் பாராட்டுவதில்லை. பெரியோர் சிறியோர் அனைவரிடத்திலும் மிகுந்த அன்போடும் ஆதரவோடும் நடந்து கொள்வார்.

### நாவலரைக் கண்டது

அழக சுந்தரருக்கு அகவை ஐந்து நடந்து கொண்டிருந்தபோது இவருடைய தந்தையார் இவரையும் மற்றைப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு ஆறுமுக நாவலரைக் காணச் சென்ருர். தந்தையார் தம்முடைய மக்கள் மூவரையும் நாவலர் முன்னிலையில் விழுந்து வணங்குமாறு கூறினர். இவருடைய தமையன்மார்கள் இருவரும் நாவலர் முன்பு விழுந்து வணங்கினர்கள். அழக சுந்தரராகிய இவரோ கீழே விழுந்து வணங்க மறுத்து விட்டார். மறுத்துவிட்ட இவரை நாவலர் தூக்கித் தம்முடைய மடியில் வைத்துப் பாராட்டினர். நாவலரைக் கீழ் விழுந்து வணங்கமாட்டேன் என்ற இவருடைய பிடிவாத குணம் நாவலருடைய மடியின் மீதேறுஞ் சிறப்பைக் கொடுத்தது.

### பாதிரியாரின் சைவச் சொற்பொழிவு

இவர் சென்னை நகரில் இருந்தபொழுது திரு. வி. கலியாண சுந்தரனர் சைவ சித்தாந்த மகா சமாசக் கூட்டமொன்றில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவு ஒன்று செய்வதாகச் செயலாளரிடங் கூறியிருந்தார். எதிர்பாராதவிதமாக அன்று திரு. வி. கவுக்கு உடல் நலம் இல்லாமற்போய்விட்டது. திரு. வி. க. சைவ சித்தாந்த சமாசச் செயலாளரிடம் தமது உடல் நலமின்மையைக் கூறிச் சொற்பொழிவு செய்வதற்குத் தமக்குப் பதிலாக வேருெருவரை அனுப்புவதாகக் கூறினர். சமாசச் செயலாளரும் திரு. வி. கவின் ஏற்பாட்டிற்கு உடன்

பட்டார். அன்று காலை திரு. வி. க. தேசிகரிடம் வந்தார். தமக்குப் பதிலாகச் சொற்பொழிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தேசிகருஞ் சொற்பொழிவு செய் வதற்கு உடன்பட்டார். சொற்பொழிவு நடைபெற்றது. சொற்பொழிவைக் கேட்டவர்கள் மிகுந்த வியப்படைந் தார்கள். ஒரு கிறித்துவப் பாதிரியார் எப்படிச் சைவ சித்தாந்தச் செய்திகளைப் பற்றிச் சொற்பொழிவு செய் தார் என்பது அவர்களுக்கு விளங்காத புதிராகவிருந்தது. அழக சுந்தரர் எல்லாச் சமய நூல்களையுங் கற்றுச் செய்தியை நன்கு உணர்ந்திருந்தார் என்னுஞ்செய்தி பிறகுதான் அவர்களுக்குப் புலனாயது. இதனை அறிந்தவர்கள் மற்றும் பலவிடங்களிற் சைவ சித்தாந்தச் சொற்பொழிவு செய்தற்கு இவரை அழைக்கலாயினர்.

### சூழ்ச்சி பலிக்கவில்லை

தேசிகர் பசுமலையில் 60 ரூபா ஊதியம் பெற்றுப் பாதிரியாராகப் பணி புரிந்து கொண்டிருந்தார். இவருடைய கல்வித்திறமையை உணர்ந்த பெங்களூர்ப் பாதிரியார் ஒருவர் தம்முடைய கோயிலில் வந்து பணி புரிய வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டார். பெங்களூர் குளிர் மிகுந்த நாடு. அந்நாட்டிலே செலவு அதிகமாகுமென்று தேசிகருக்குத் தெரியும். ஆகவே 80 ரூபா கொடுக்கவேண்டுமென்றார். பெங்களூர்ப் பாதி ரியார் 75 ரூபா கொடுப்பதாகக் கூறினார். இவர் உடன் படவில்லை. பிறகு பெங்களூர்ப் பாதிரியார் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் "தாங்கள் இத்திருக் கோயிலுக்கு வந்து திருச்சபையாருக்குப் போதிக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாக இருக்கிறது" என்று எழுதினார். இக்கடிதத்தைப் பார்த்த தேசிகர், "அப்படித் தேவனுக்கு விருப்பமிருக்குமானால் 80 ரூபா கொடுப்பதற்கும் தேவனுக்கு விருப்பமிருக்கும்" என்று மறுமொழி எழுதினார். தம்முடைய சூழ்ச்சி பலிக்காத தைக்கண்ட பெங்களூர்ப் பாதிரியார் 80 ரூபா கொடுப்ப

தாக ஒப்புக்கொண்டார். இவரும் பெங்களூருக்குச் சென்று பணிபுரிந்தார்.

### மக்களுக்குத் திருமண உரிமை

ஆண்களும் பெண்களும் வாழ்க்கைத் துணைவர்களைத் தம் விருப்பம்போல் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தேசிகருடைய விருப்பம். இவருடைய மகள் தனக்கு வாழ்க்கைத்துணையாக ஒருவரைத் தெரிந்தெடுத்தாள். அப்பொழுது தேசிகர் மெசபடோமியாவில் இருந்தார். மகள் தான் மணாளனைத் தேர்ந்தெடுத்திருக்குஞ்செய்தியைத் தந்தைக்குத் தெரியப்படுத்தி உடன்பாடு கேட்டாள். தந்தையார் மறு கடிதத்திலேயே தம்முடைய உடன்பாட்டைத் தெரியப்படுத்தினார். இருவருக்குந் திருமணம் நடைபெற்றது. தந்தையார் வாழ்த்தும் அனுப்பினார். ஊருக்குத் திரும்பி வந்த பிறகுதான் மருமகனைப் பார்த்தார். தம்முடைய பிள்ளைகளும் மனைவிமாரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார்.

### காலத்தைக் கடைப்பிடித்தல்

தேசிகர் எந்தச் செயலையுங் குறிப்பிட்ட காலத்திற் செய்வார். காலத்தைக் குறிப்பிட்டு விட்டு, பிறகு மனம் போனபடி காரியங்களைச் செய்வது இவருக்கு அடியோடு பிடிக்காது. கொழும்பு விவேகாநந்த சபையில் ஒரு நாள் அட்டாவதானம் ஆறுமுகம் பிள்ளையினுடைய அவதானம் நடைபெற்றது. அதற்கு இவர் தலைமை தாங்கினார். பெருங்கூட்டங் கூடியிருந்தது. அவதானம் நடைபெற்று முடிந்தது. ஈற்றில் அறிஞர் ஒருவர் ஒரு பாட்டிற்குப் பொருள் விரிக்கத் தொடங்கினார். தலைவராகிய தேசிகர் பொருள் விரிப்பவருக்குப் பத்து நிமிடங் காலங் கொடுத்தார். பேசியவரோ பத்து நிமிடத்தையுந் தாண்டிப் பொருள் விரித்துக்கொண்டிருந்தார். அவ்வளவில் இவர் தலைமையிருக்கையை விட்டு இறங்கிப் போய்விட்டார். கூட்டமும் அப்போழுதே கலைந்து குலைந்தது.

### தம்முடைய படத்திறப்பு

தேசிகர் 1936ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இவருக்குப் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் இவருடைய படமும் திறந்து வைக்க முடிவு செய்யப் பட்டிருந்தது. இவருக்குத் தக்க பரிசும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த இவர் செல்லவில்லை. தம்முடைய படத்திறப்பு விழாவுக்குத் தாஞ்செல்வது தகுதியற்ற தென்றே கருதி இவர் செல்லாமலிருந்து விட்டார்.

### கற்றவர்களிடம் மதிப்பு

இவர் அறிஞர்களிடம் நல்ல மதிப்பு வைத்திருந்தார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொண்டாற்றிக் கொண்டிருந்தபோது கொழும்பில் தமிழ் விரிவுரையாளர் ஒருவர் வேண்டுமென்று விளம்பரஞ்செய்யப்பட்டது. இவர் மேற்கூறிய அலுவலைப் பெற எண்ணினார். ஒருகால் விபுலாநந்த அடிகள் அவ் வேலைக்கு விண்ணப்பம் அனுப்பினாலும் அனுப்பக்கூடும் என்று எண்ணிய இவர், "அடிகள் அவ்வேலைக்கு விண்ணப்பம் அனுப்பும் நோக்கமுண்டா"? என்று விபுலாநந்தருக்குக் கடிதம் எழுதினார். விபுலாநந்தர் தமக்கு அத்தகைய நோக்கம் எதுவும் இல்லையென்று தெரிவித்த பிறகுதான் இவர் விண்ணப்பம் அனுப்பினார்.

### தேசிகருடைய தனிப் பண்பு

தேசிகர் குறுகிய நோக்கங் கொண்டவரல்லர். பரந்த மனப்பான்மை அமையப் பெற்றவர். பிறபாதிரியார்கள் ஏசுநாதர் தம் பக்கமென்று வாதிப்பார்கள், இவரோ தாம் ஏசுநாதருடைய பக்கமென்று வாதிப்பார். தேசிகருக்குத்

தேவாரத்தில் மிகுந்த பற்றுண்டு. அப்பர் தேவாரத்தைப் பாடி உள்ளம் உருகுவார். நாலாயிர திவ்ய பிரபந்தத்தை இவர் ஐயந்திரிபறக் கற்றிருந்தார். புதியஏற்பாட்டையும் திருக்குறளையும் மார்போடணைத்துப் போற்றுவார். இந் நூல்களின் சிறிய பதிப்புக்களை இவர் எப்பொழுதும் சட்டைப்பையில் வைத்திருப்பார்.

### இவர் இயற்றிய நூல்கள்

இவர் பல தனிப்பாடல்களை இயற்றினர். சிறைச் சாலையைப் பற்றி இயற்றிய இரண்டு பாடல்களை அடியிற் காண்க.

(1) "நாவரசர் மாணிக்க வாசகர்முன் நண்ணுமிடம்
பாவரசர் திருமங்கை யாழ்வாரும் பார்த்தவிடம்
தேவனடி சிந்தைகொண்ட சேரன்பனிய னுறைந்தவிடம்
கோவேநீ வாழுமிடங் கோயிலெனக் கொண்டேனே.

(2) கயவர்களை யடக்குமிடம் கயவர்களைப் புடைக்குமிடம்
கயவர்களை ஒறுக்குமிடம் சிறையில்லம் என நினைந்தேன்
தயவுபொறை வாய்மையன்பு தங்குபெரு காந்திவள்ளல்
மயல்தீர்ந்த முனிவர்பலர் வாழிடமென் பதை மறந்தே."

இவர் எழுதிய நூல்களில் ஆங்கிலம் மூன்று, தமிழ் பத்து. தமிழ் நூல்கள் :

(க) ஏசுவரலாறு
(உ) கடவுள் வாழ்த்துப்பா
(ங) அகப் பொருட் குறள்
(ச) இராமன் கதை
(ரு) பாண்டவர் கதை
(சு) சந்திரகாச வசன நாடகம்
(எ) கண்ணன் கதை
(அ) சி. வை. தாமோதரம் பிள்ளை வரலாறு

(௯) மனோன்மணீய வசன நாடகம்

(௧0) புத்தர் சரித்திரம்

என்பன. இவைகளில் முதலில் உள்ள ஆறும் வெளி வந்தன. எஞ்சிய நான்கும் அச்சாக வில்லை.

## பாராட்டுரைகள்

பண்டிதர் சி. கணபதிப் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, ரா. பி. சேதுப் பிள்ளை, அரு. சபாரத்தினம், இராச அரியரத்தினம், சோதிமுத்து முதலியோர் தேசிகரைப் பாராட்டிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

## இறுதி

தேசிகர் தம்முடைய 67 ஆம் அகவையில் 1940 ஆம் ஆண்டு சித்திரைத் திங்களில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

"இறந்தனை யென்றுநா மறிந்தன மின்றே
மறந்துந் தமிழ்மற வாதோய் மறப்பினும்
தமிழ்மறந் திடுமோ சாவா உளத்தினை
இன்றுநீ போயினை யென்பதற்
கொன்றுநின் னுர்வ மோய்ந்தது தமிழில்
நன்றுநீ கூறும் நல்லுரை கேட்கோம்
உலகம் பழிப்பினும் உண்மையென் றுணர்ந்தவை
சலவைக் கல்லுளத் தன்மையி னுட்டுவை
பழமையிற் புதுமை பகருவை
என்று மிளையா யழகியாய்
பொன்றிய துன்னுட லெனினும்
நின்றநிவ் வுலகினி நிறுத்திய கொள்கையே."

## உ. திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கர்

### தோற்றம்

"ஓங்கிய சோனாட் டுயர்திருக் கணபுரம்
பாங்கிற் செய்த பண்ணிய தவத்தின்
பயனென வந்தோன் பலவாஞ் சங்கத்
தியனெறி நூல்களை யினிதாய் மதுரை
நான்காஞ் சங்கம் நடைபெறு வதனில்
வான்பொற் பதக்கம் வரிசையிற் பெற்றோன்
திண்ணிய மனத்தாற் செய்யும் யோகம்
நண்ணியோன் பாச்செய் நாவல் லோனே
தோமினல் வினையாற் சௌரிப் பெருமாள்
தாமுறு நற்குணந் தழைந்த புதல்வன்
பாடிய லுதாரன் பன்னிய வாணியம்
பாடியிற் கல்விப் பயனுர் சாலையில்
தண்டமிழ்ப் புலமை தாங்கி நடத்தல்
கொண்டவன் நூல்களைக் கோதற வாய்தல்
செய்யும் அறிஞன் செந்நட் பினுக்குச்
செய்ய வணிகலஞ் சீரா ரரங்க
சாமியை யங்கார் தயங்கு
நேமியங் கடவுளை நினைக்கும் புனிதனே"

என்று பு. க. சீநிவாசாசாரியார் என்னுஞ் செந்தமிழ்ப் புலமைப் பெரியாரால் பாராட்டிப் பாடப் பெற்ற அரங்க சாமி ஐயங்கார் என்பவர் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் சோழவளநாட்டில் திருக்கண்ணபுரம் என்னுஞ் சீரார் திருப்பதியில் சௌரிப் பெருமாள் ஐயங்கார் என்பவருடைய அருமைப் புதல்வராகத் தோன்றினர். சௌரிப் பெருமாள் ஐயங்கார் தம் மைந்தனுக்கு இளமைப் பருவத்திலேயே தமிழ்க் கல்வியை நன்கு கற்பித்துத் தமிழ்மொழியிடத்தில் நல்ல

பற்றை யுண்டாக்கினர். அதனல் அரங்கசாமி ஐயங்கார் கல்வியிற் பெருவிருப்பங் கொண்டு மதுரை போய்ப் பின் சோழவந்தானை யடைந்து பலவகையான இன்னல்களுக்கும் இடையூறுகட்கும் இடையே கல்வியைக் கற்று நல்ல புலமையை அடைந்தார். இவர் காலத்தில் வெளிப்படாமலும் அச்சேருமலும் இருந்த குறுந்தொகைப் பிரதியை அரிதின் முயன்று தேடி அரிய உரையும் எழுதி வெளியிட்டார். வேலூர் வாணியம்பாடி முதலிய இடங்களில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் பிறந்த ஆண்டு திருநாடடைந்த ஆண்டு முதலியன விளக்கமாகத் தெரியவில்லை.

இக் காலத்தைப் போல் தமிழ்க் கல்லூரிகள் அக் காலத்தில் இல்லை. தமிழ்க் கல்லூரிகளில் முதன் முதலாகத் தோன்றியது மதுரைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியே. அக்கல்லூரிக்குக் கல்வி கற்கச் சென்று அக் கல்லூரியிலும் இடங் கிடைக்கப் பெருமல் பட்ட தொல்லைகளையெல்லாம் இவர் தாம் வெளியிட்ட குறுந்தொகை உரைப்பதிப்பின் முன்னுரையில் விரிவாக எழுதியுள்ளார். அந்நாளில் தமிழ்க் கல்வி கற்பது எவ்வளவு இன்னல்களையுடையதாக விருந்ததென்பதை அனைவரும் அறிந்துகொள்ளுமாறு அவர் எழுதியபடியே அடியில் தருகிறேன். இவர் தம்முடைய தந்தையாரின் பெயரையுந் தம்முடைய பெயருக்கு முன்னல் அமைத்துத் தம்முடைய பெயரை, "திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன்" என்று நீட்டி வைத்துக் கொண்டார். இவர் இக் குறுந்தொகையுரையைத் தவிரப் பரிபாடல் முதலிய நூல்களையும் உரையொடு வெளிப்படுத்தக் கருதி உரையெழுதினரெனத் தெரிகிறது. ஆனல் அப் பரிபாடல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

உதவி யுரைத்தல்

"தாமரை மேலுறை மாமகள் சேர்தரு
மார்புடை மாலவ னேர்பெறு திருவடி

அடியனே னகத்திடைப் படியுமா கொண்டரு
முத்தமி ழறிந்திடு நத்தகை
நாவலர் முன்னுரை மேவவைத் தனனே"

"அமிழ்தினுமினிய தமிழ் மொழியை யான் கற்க அவாவின வகையும், அக்காலைக் கற்றலிற் றடை எற் குருவாறு தாங்கிய தக்கார் தகையும், பின்னர்ப்பணியில் அமர்வான் புக்கவிதமும் அக்காலத்துத் தளராது வைத்திட்ட தக்காரிதமும் இந்நூற்குரையை இயற்று வான் கொண்ட எண்ணமும் அஃதினிது முற்றுமாறு உயர்ந்தார் உதவிய வண்ணமுமென இவற்றையே, நல்லார் நல்லன கொண்டு அல்லன களைவரென நம்பி ஈண்டுத் தொகுத்தெடுத்து ஓதலுற்றேன்.

"ஐந்தாமாண்டில் அன்னையையும், பதினைந்தா மாண்டில் தந்தையையும், இருபதாம் ஆண்டில் முதல் மனைவியையும் இழந்த யான், அன்னையற்றமையை ஒரு சிறிதுங் கருதாதவாறு என்னைக் காப்பாற்றிய தந்தையார் பழக்கிவைத்திருந்த பழக்கத்தால் படிப்பிடை ஆவல் கொண்டு செந்தமிழ் கற்பான் மதுரையை அடைந்தேன். அங்குக் கருதிச்சென்றவாறு தமிழ்ச் சங்கத்து இடம் பெற்றிடாமையின், கருதியதைக் கைவிட்டு மீளுதலில் கருத்தின்றிக் கலங்கவிழ்ந்த நாய்கனே போலக் களை துணை பெற்றிடாது கவற்சிமிக்கிருந்தேன்.

அக்காலை, சோழவந்தானை யடுத்த கருப்பட்டிக் கிராமத்தார் ஒருவர், சோழவந்தான் ஸ்ரீலஸ்ரீ கிண்ணி மடம் ஸ்வாமிகளிடத்தில் செந்தமிழ்த் தேர்ச்சி பெறலா மென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் தட்டின்றிக் கற்பிக்குமென்றும், சோழவந்தான் மதுரையினும் உறைவதற்கு இனிய தாகுமென்றும், உங்கட்கு வேண்டியவை முற்றும் யான் உதவுவேனென்றும், மதுரையிற் சிலநாள் வரைத் தமக்குத் தங்க வேண்டிய பல வேலைகளிருப்பதால் இப்பொழுதே சோழவந்தானில் ஸ்ரீஸ்வாமிகளிடம் அழைத்துக்கொண்டு போய் வேண்டியன செய்ய இயலாததாகின்றதென்றும்,

தாமே நேரிற் சென்று காணலாமென்றும், ஆனால், தாம் கூறியவை எவற்றையும் ஸ்ரீஸ்வாமிகளிடம் தெரிவிக்க வேண்டாமென்றுங்கூறி அச்செல்வர் செல்வாராயினர். 'உற்றூர்முற் றேன்று வுருமுதல்' என்பது பொருளுரை யாதலின், அவர்கள் சொல்லை முற்றும் நம்பி அன்றே சோழவந்தானுக்குச் சென்று கிண்ணிமடத்தில் விசாரித் தேன். அங்குள்ளார்களால் அடிகள் அடுத்த கருப் பட்டிக்கிராமத்திற்குச் சென்றிருப்பதை அறிந்து ஆங்குச் சென்று கண்டுகொண்டு என் குறைகளைக் கூறிக் கொண்டேன்.

அக்காலத்து ஸ்ரீ மகா சந்நிதானம் என்னிடங் காட்டிய வியத்தகு செய்கைகள் என்னைப் பிணித்திட்டன. அவ்வடிகள் பாடஞ் சொல்லிக் கொடுத்தலில் தடை யில்லையென்றும், மடத்திலுள்ள புத்தகங்களில் வேண்டி யவைகளையும் எடுத்துக்கொள்ளலாமென்றும், உணவு முதலியவற்றிற்கு வேண்டியன செய்து கொள்ளுதல் வேண்டுமென்றும், திருவாய் மலர்ந்தருளியது. கருப் பட்டி போன்ற சொல்லாராய அக்கருப்பட்டியார் உரைத்த வற்றைத் தெரிவித்து உணவு முதலியவற்றைப் பற்றிய கவற்சி பற்றுதென்றேன். அடிகள் இளமுறுவல் அரும்பிப் பின்னர், ஒருவாரத்தின் மேல் சோழவந்தானுக் குச் செல்வதாகவும், நன்னூல் மூலம் முழுவதையும் பாடஞ்செய்கவெனவும் கட்டளையிட்டு நன்னூற் காண் டிகையொன்றையுங் கையிற் கொடுத்திட்டது. அக்கிரா மத்திலுள்ள ஸ்ரீ கோவிந்தராசப் பெருமாள் கோவிலில் உண்டு வையையாற்று மரத்தடியிற்றங்கி நன்னூல் மூலத்தை வரப்படுத்தி ஒருவாரத்துள் ஸ்ரீ சந்நிதானத் தினிடத்தில் ஒப்பித்தேன். அன்றே சோழவந்தான் மடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு சென்று கற்பிக்கத் தொடங்கியது.

அப்புத்தப் புதிய சோழவந்தானூரில், முதன் முதலில் யான்பட்ட பொருள் முட்டுப்பாடும் கவற்சியும்

மிகப்பல. இங்ஙனம் இரண்டு திங்கள் சென்றவாக, அப்பொழுது படித்து வந்த இடையிலேப் படித்தற்கு வழக்கம் போல் காலே எட்டு மணியளவிற்குச் சென்றயான், கவலே நிறைந்த கருத்தினனுய்ச் சிறிதும் பாடத்தை அறியமாட்டாது தடுமாறுவதைக்கண்டு, அடிகள் புத்தகத்தைக் கீழே வைக்கவென்றும் பிற்பகலில் பாடங் கேட்டுக்கொள்ளலாமென்றும் கூறிவிட்டு, இனிய பலவுரைத்துவந்து என் தவிப்பை என் வாய்கொண்டே மெல்ல உணர்ந்துகொண்டு, 'அஞ்சற்க எம்பெருமான் கைவிடான்' என்று திருவாய் மலர்ந்து அக்காலத்து எனக்குண்டாயிருந்த கடன்ருகை முழுவதையும்* அடுத்துநின்ருரைக் கொடுத்திடுக எனக் கட்டளேயிட்டு என்னேப்பார்த்துக் கடனேத் தீர்த்துவிட்டுக் கவலேயின்றி வருக எனக் கட்டளேயிட்டருளியது. அங்ஙனமே செய்து பிற்பகலிற் பாடங்கேட்டற்குச் சென்றயான், உண்ணுமிடத்துக் குறித்தகெடுவில் தொகைகொடுக்காது பேரிடர்ப் படுவதினும் தளிகை செய்து உட்கொள்ளுதல் தக்கதென்றும், வருவாயின்றேல் பட்டினி கிடத்தலும் வருத்துவதன்றென்றுங்கருதி, தளிகை செய்வதாயின் பாடங்கூற மாட்டேனென்ற அடிகளேயும் இணங்குமாறு செய்து அச் சோழவந்தான் பேட்டை மடத்தில் தளிகை செய்துண்டு படிக்கத்தொடங்கினேன். அடிகள் அரிசியும் மேல்செலவிற்குப் பொருளும் உதவியதோடு வேண்டியவற்றைத் தட்டின்றிக் கேட்கலாமென்றும், எம்பெருமான் கைவிடானென்றுங் கூறியது.

அங்ஙனம் சின்னுட்கள் செல்ல, கிண்ணிமடத்திற்கு ஸ்ரீ மகா சந்நிதானத்தைக் கண்டுகொள்ளவந்த கருப்பட்டி ஸ்ரீமான் ஆர். சுந்தர ராமானுச நாயுடு காரு

---

*அடிகள் தங்கையாற் பணத்தைப் பெறுதலேயும் கொடுத்தலேயும் வழக்கமாகக் கொண்டிலது. ரூபாவைத் தொட யானிருந்த காலமுற்றுங்கண்டிலேன். பிறரே எடுத்து வைத்திருத்தலும், வழங்கலும் வழக்கமாக இருந்தது.

அவர்கள் என்னை முன்னர் அறியாதிருந்தும், ஸ்ரீஸ்வாமிகள் என்னைக்குறித்து ஒன்றும் உணர்த்தாதிருந்தும், அங்கு யான் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, யான் பேட்டைமடத்தில் இருப்பதைத் தாமாகவே கேட்டறிந்து கொண்டு அங்கு வந்து என்னுடன் அளவளாவி, தேவரீர் அடியேனைப் பொருட்படுத்தி இச்சோழ வந்தானில் எழுந்தருளியிருக்கும் வரையிலும் 'அடியேன் தரும் அரிசியை உணவின் பொருட்டுப் பெற்றுக் கொண்டு உதவியருள வேண்டும்' எனக் குறையுறுவார் போலத் தாழ்ந்து வேண்டிக்கொண்டு, மறுநாளே சில திங்கள் காறும்வருமாறு அரிசியையும் அனுப்பிவைத்தார்கள். யான் சென்று கேட்கும் வேலைகூட மிகுதியும் நேராவாறு, அவர்களாகவே அவ்வூரில் யான் தங்கியிருந்த நாளெல்லாம் தாமாக ஏற்றுக் கொண்டவாறே கொடுத்துவந்தார்கள். காலத்திற்செய்த இவர்கள்தம் கைம்மாறு கருதாத பேருதவியை எழுமையும் மறவாமல் அவர்கள் எண்ணிய எண்ணிய எய்தி இனிது வாழுமாறு எம்பெருமானை என்றும் இறைஞ்சுவதன்றி என்னாற் செய்யலாவதென்?

அச்சோழவந்தானிலுள்ள பேட்டை மடத்தில் உறைபவரும் ஸ்ரீமகா சந்நிதானத்திடத்தில் பெருந்தொண்டு பூண்டு ஒழுகுபவரும் அறிவொழுக்கங்களிற் சிறந்தவருமாகிய ஸ்ரீமான் சுப்பையா உபாத்தியாயரவர்கள் இவ்விப் பொருள்கள் தட்டுப்பட்டிருக்கலாமெனத் தாமாகவே குறித்துணர்ந்து, அவற்றைக்கொணர்ந்து வைத்து* எடுத்துக் கொண்டருளுகவென இரப்பாரே போல வேண்டிக்கொடுத்து, அரிசியினும் வேருன பொருள்களைக் குறித்தும் யான் கவலை கொள்ளாதிருக்குமாறு வலிந்துதவி வந்தார்கள். அவர்களின் இன்சொற் கூறல், இயன்ருங்

---

*அந்தணர் கை கீழ்ப்படத் தங்கள் கை மேல் வரல் தகாததாமென்னும் கருத்தாற் கையிற் கொடுக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிலர். ஐயதருகவெனக் கைந்நீட்டின் தமது அகங்கையில் வைத்துக்கொண்டு எடுத்துக்கொண்டு அருளுங்களென்பார்.

குதவல், நன்னெறி நிற்றல் முதலாய நற்குணங்களை நெடுநாள் உடனுறைந்து நேரில் அறிந்தேனுதலின், அவர்கள் வியத்தகு குணங்கள் என்னெஞ்சினின்றும் என்றும் விலகாதனவாகும்.

ஸ்ரீமகா சந்நிதானத்தின் வயோதிக தசையைக் கருதி அவ்வடிகளை நெருக்கிப் பாடங் கேட்டலை விட்டு, யானுகவே கற்று என்னறிவிற்கு எட்டாதவற்றை அகத்தில் அமைத்துக்கொண்டு அவ்வடிகளின் அரும் பெறன் மாணுக்கரும் செருக்கென்பது எட்டுணையுஞ் சேரப் பெருதாரும் இல்லையென்னும் இரப்புச் சொல்லைக் கேளாது தாமாகவே குறிப்பறிந்து உள்ளது மருதுதவும் வள்ளலாவாரும், அரிதின் உணர்ந்த நூற்பொருள்களை யெல்லாம் எளிதில் எவரும் உணர எடுத்துரைக்கும் சொல்வன்மை மிக்காரும், அல்லன புரிவார்க்கும் நல்லனவே புரியும் நல்லியல்பினரும், வளர்பிறை போல வழிவழிப் பெருகும் வாய்ப்புடை நட்பாட்சியினரும் செய்யுளியற்றல், உரையியற்றல் முதலியவற்றிற் சிறந் தாரு மாகிய அச் சோழவந்தான் ஸ்ரீமான் மகா வித்துவான் அ. சண்முகம் பிள்ளை அவர்கள் பாற் சென்று கேட்டுத் தெளிந்து கொள்ளுதலை மேற்கொண் டேன். ஸ்ரீ பிள்ளையவர்கள் நெருக்கமான வேலைகளையும் புறங்காண வல்ல வேலைகளிடைப் பட்டிருந்தும் யான் ஐயமுற்ற இடங்களையெல்லாம் என் மனங் கொள்ள விரைவில் விளங்கவைத்தும், தம் புத்தக சாலையிலிருந்து விரும்பும் புத்தமுதன்ன புத்தகங்களையெல்லாந் தந்தும் உதவி புரிந்தமையோடமையாது, உற்றுழியெல்லாங் கற்றற்கும் பொருள் தந்து காப்பாற்றுவாராயினுர்கள். ஆசிரியர் அவ்வரசன் சண்முகனுரின் அருந்தமிழ்த் தேர்ச்சியும் திருந்திய மாட்சியும் பன்னுளும் உடனிருந்து பழகிய என்னைத் தமக்குரிமை கொண்டன. அறியாமை நீங்க அவர்கள் அளித்த நூற்பொருட் கொடைக்கும் ஆரிடர் நீங்க அளித்த அரும்பொருட் கொடைக்கும் என்றுங் கடமை பூண்டவனுவேன்.

யான் மதுரைக்குச் சென்றது முதல் என்னிலைமையை அறிவித்துக்கொள்ளாத பிழையுடையேனாகவும் அதனைப் பொருள் செய்யாது தம் பேரருளுடைமை தோன்றத் தாமாகவே அறிந்துகொண்டு சோழவந்தானுக்கு நேராக எழுந்தருளி உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்த உயர்ந்தாரும், எம்மவருள் கற்பாரைக் கல்வியில் ஊக்குங் கருத்து மிக்காரும், என்தந்தையாருக்குப் பெரிதும் வேண்டியாருமாகிய கம்மங்குடி ஸ்ரீ உ. வே. மாமாத் தாத்தா, கு. திருவேங்கடத்தய்யங்கார் ஸ்வாமி, யான் அக்காலத்துத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் வகுப்புப் பாடப் புத்தகங்களை வாங்கிப் படிக்க ஆவல் மிக்கிருப்பதைக் குறித்துணர்ந்து கொண்டு, ஊருக்கு எழுந்தருளியதும் தக்க பொருளைத் தாமாக அனுப்பிவைத் தருளினார். மற்றும் யான் விலா வலியால் பெரிதும் இடருற்றிருந்த காலத்துத் தமது திருமாளிகையில் என்னை அழைத்து வைத்துக்கொண்டு, தமக்குள்ள மருத்துவ நூற்பயிற்சியால் தக்க மருந்தைத் தந்து, அடிக்கடி வந்து வருத்திய அவ்வலியின் வலியற்று ஒருவாறு தணியுமாறு செய்து, என்னைச் சோழவந்தான் செல்லுமாறு ஏவியருளினார். அந்த ஸ்வாமி பின்னும் உற்றுழியெல்லாம் உதவி வரும் பெற்றி பெரிதும் அடியேன்பாராட்டத் பாலவேயாம். சோழவந்தானுக்கு எழுந்தருளிய என் னிளைய மாமனார் சூரனூர் ஸ்ரீ உ. வே. வேங்கட்டராம ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ சந்நிதாநத்தின் கட்டளைப்படி அரும்பொருளுதவிப் பெரும் பயன் கொள்ளச் செய் தருளினார். இக்காலத்து இவ்விரு ஸ்வாமிகளின் உதவியை எக்காலத்தும் மறவேன்.

யான் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் வகுப்பில் தேறிச் சில திங்கள் சென்றனவாக, வாளா இருப்பதை உணர்ந்து என்னுடன் வடமொழி பயின்ற அன்பர் திருக்கண்ணபுரம் ஸ்ரீமான் நாலுகவி திருவேங்க டாச்சாரியார் ஸ்வாமி சென்னைக் கிறித்துவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீஉ. வே. கா. ஸ்ரீ கோபாலா

சாரியார் ஸ்வாமி ஸந்நிதியில் நேரிலுணர்த்தியும் ஸ்ரீ முகம் விடுத்து நினைப்புண்டுபண்ணியும் வேலூர் ஸ்ரீமஹந்து தேவஸ்தானம் ஹிந்து ஹைஸ்கூலில் ஆக்டிங் தமிழ்ப் பண்டிதர் வேலையை யான் பெறுமாறு செய்தருளினர். அவ்வேலையைப் பெறுவதற்கு அம் மஹந்து ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. என். ஸ்ரீநிவாஸ வரதாசாரியார் ஸ்வாமியும் வேண்டிய விழைந்து செய்தருளினர். அடியேனுக்கென முயல முன்வந்த முற்கண்ட மூன்று ஸ்வாமிகள் திறத்தும் நன்றி யுள்ளவனுவேன். அப்புதிய வேலூரில், நெடுநாட் பழகிய ஊரிற்போல இடம் பொருள் முதலிய எவற் ருனும் குறைவுண்டாகாவாறு வேண்டிய வேண்டிய ஈண்டு மாறு செய்தவர்களான ஸ்ரீமான். வி. முத்துஸாமி ஐயரவர்கள் M. A. L. T. (அப்பொழுது வேலூநகர்க் காலேஜில் உதவி ஆசிரியர் வேலையிலமர்ந்திருந்தார்கள். இவர்கள் இப்பொழுது அறுப்புக் கோட்டையில் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்ந் துள்ளார்கள்) இவ்வுயர்ந்தார் பல்லாற்ருனும் பரிந் தியற்றிய உதவிகள் மிகப்பலவாம். அத்தகையாளரின் நுனியிற் கரும்பு தின்றன்ன நட்பின் மாட்சியும் நேர்மையும் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உயர் வுடையனவாம்.

பின்னர் இவ்வாணியம்பாடி மஹம்மதியர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் வேலையிலமர்ந்தேன். இவ்வேலையை யான் முயலாமற் பெறுமாறு முயன்றவர்கள் என்னிடம் தமிழ் பயின்ற மாணவர்கள் சிலரும் வாணியம்பாடி மதரஸே இஸ்லாமியா உதவி ஆசிரியருமான ஸ்ரீமான் ஆர். செங்கல்வராய அய்யர் அவர்களுமாவார்கள். ஸ்ரீ ஐயரவர்கள் இவ்வூருக்குவந்த புதியேனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் உடல் பொருள் கொண்டு உதவித் தளராது தங்கச் செய்தார்கள். இவர்கள் கால உதவிகள் சாலஉயர்ந்தனவே."

இவ்வாறு வரலாற்றுக் குறிப்புக்களை உரைத்துள்ள இவர் குறுந்தொகை நூலைத் தேடிக் கண்டுபிடித்து உரையெழுத முயன்ற செய்தி முதலியவைகளையும் அச் செய்தியில் குறித்துள்ளார். இதிலிருந்து அந்நாளில் தமிழ்க் கல்வி கற்பது எவ்வளவு துன்பமான நிலையில் இருந்ததென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம். வாணியம் பாடியில் தமிழாசிரியராகத் தொழில் புரிந்தவரை நிகழ்ந்த செய்திகள் குறுந்தொகை நூல் முன்னுரையால் அறியக்கிடந்தன. அதன் பிறகு நிகழ்ந்த செய்திகள் எவையும் புலனாகவில்லை.

## க. புலவர் பாண்டியனர்

வரலாறு

சில நூலாசிரியர்கள் தம்முடைய வரலாற்றுக் குறிப்புக்களைத் தாம் எழுதும் நூலின் முன்னுரையில் சில காரணங்களை முன்னிட்டு ஓரளவு குறிப்பிடுகின்றனர். அவ்வாறு குறிப்பிடுவது நூலைப்போல் அவர் தம் வரலாறும் நிலைத்து நிற்பதற்கு நல்வாய்ப்பாகிறது. ஆகவே ஒவ்வொரு நூலாசிரியரும் தத்தம் நூல்முகத்தில் வரலாற்றுக் குறிப்புக்களையும் கூடியவரையிற் கூறிவைப்பது மிகப் பயனுடையதாம். இவரும் தம்முடைய வரலாற்றுக் குறிப்புக்களைத் தாம் இயற்றிய நம்பியகவல் என்னும் நூன் முகத்திற் குறிப்பிட்டிருக்கிருர். அவ்வாறு குறிப்பிட்டிருப்பது அவர் தம் வரலாற்றுக் குறிப்புக்களை நாமனைவரும் உணர்ந்து கொள்வதற்கு எவ்வளவோ பயனுடையதாக இருக்கிறது. புலவர் பாண்டியனர் தம்மைப் பற்றித் தமது நூலில் குறிப்பிட்டிருக்குஞ் செய்திகளை அவர் குறிப்பிட்டுள்ளபடியே அடியில் தருகிறேன்.

எம் வரலாற்றுக் குறிப்பு

"இனி இந்நாளை வழக்குப்பற்றி இந்நூலுரைகளுடையேமாகிய யாமே எம் வரலாற்றுக் குறிப்புச் சில கூறி வைக்குதும்.

யாம் பாண்டிய நாட்டகத்துத் திருநெல்வேலிக் கூற்றத்து மலையடிக் குறிச்சியென வழங்குஞ் சிற்றூரிற் பிறந்தாம். இவ்வூர் பூழியன்குடியென்னுமூர்க்கு அணித்தாக வுளது. இப்பெயர் மலசையெனப் புலவர் வழக்காற்றின் மரீஇ வழங்குதலுமுண்டு. யாம் பிறந்தது கொல்லம் யாண்டு 1078 ஆடித்திங்கள் 25ஆம் வைகல் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் (கி.பி. 9-8-1903) 25½ நாழிகை யளவாகு

மென்ப. யாய் பெயர் கோமதியம்மை யென்பது. எந்தை பெயர் சிவனென்பது. எமக்குத் தமக்கை தம்பி யருமுளர். எந்தையார் கோயம்புத்தூரைச் சார்ந்த பொல்லாய்ச்சி யென்னு மூரகத்து வதிந்துகொண்டு அதனையடுத்த சிற்றூர்தொறுஞ் சென்று நாட்டு மருத்துவத் தொழில் செய்து கிடைக்கும் ஊதியங்கொண்டு இல்வாழ்க்கை புரந்தருபவராவர். யாய் துஞ்சிய பின் முதற் பள்ளிக் கல்வி முடிதலும் எஞ்சிறிய தந்தையார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யென்பவர்பால் அவர் மகனோடு நிகண்டு சூடாமணி கற்று வந்தாம். எம்மொடு கற்ற அவர் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியரு ளொருவராயிருக்கின்றார். அவர்பெயர் முத்துச்சாமி என்பது. யாண்டளவாக நிகண்டு கற்று வந்தும் முடிய மாட்டாத நிலையில் எந்தையாரொடு பொல்லாய்ச்சி போய் வதிய அக்காலத்துப் பொல்லாய்ச்சியை யடுத்த ரெட்டியாரூர் என்னுமூரில் வதிந்திருந்த சேற்றூர்க் கணபதி கவிராயர்பாற் கல்வி கற்குமாறு எந்தையார் செய்திருந்தனர். அவர்பாற் சின்னாள் திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி கற்று வந்தாம். அவர் பாலிருப்பிற் புலவராகாது மடைய (அட்டிற் றொழில் செய்பவ) ராதல் ஒருதலையென்று கண்டு அவர்பாற் சொல்லிக் கொள்ளாமல் எந்தையார்பாற் பொல்லாய்ச்சி வந்து சேர்ந்தாம். அங்கு முத்துச்சாமிக் கவிராயரென வொருவர் குடியிருந்தார். அவரிடந் திருவரங்கத் தந்தாதி கற்கத் தொடங்கி மூன்று நாளின்மேற் கற்பதற்கு யாம் விரும்பவில்லை. அவர் முதியவரும் நோயாளருமா யிருந்தனர்.

பின்னர், அப்பொழுது மதுரைத் தமிழ்ச்சங்கத்திற் கல்வி பயின்று வந்த சாமிநாதப் புலவரது துணையைக் கொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியிற் சில திங்கள் கல்வி பயின்று வரநேர்ந்தது. சாமிநாதப் புலவர் எமக்குப் பெரிய தாயார் மகனவர். எந்தையாரது சிற்றூதியம் எங்கல்விக்கு நெடுநாட் செலவு செய்தற்

கியைந்த தன்று. அதனல் அங்குக் கற்க முடியா தொழியவே நாட்டுக் கோட்டையிற் கோனர்பட்டுக் கற்பக விநாயகர் கலாசாலையிற் போய்ச்சேர்ந்து செஞ்சோறு பெற்றுக் கல்வி பயின்று வந்தாம். அக்காலை அங்குத் தலைமையாசிரியராயிருந்தவர் *மோகனூர் திருவேங்கடா சலம் பிள்ளையவர்களாவர். அவர் இப்பொழுது தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைமையாசிரியராயிருக் கின்ருர். அவர்பாற் சில திங்களே கற்ரும். அதற்கு அவர் அக்கலாசாலையை விட்டு நீங்க நேர்ந்ததே பொருட்டாகும். அந்நாளையில் எம்மோடு கற்ற பாழி யிளந்துறவியர் சிலருள் *திரு நாராயணசாமியவர்களு மொருவராவர். அவர் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவர். செந்தமிழு மாரியமுந் தெளிந்த வல்லுநர். இப்பொழுது திருவையாற்றுப் பாழித் தலைவராயிருக்கின்ரு ரெனத் தஞ்சையிலே திருவேங்கடாசலம் பிள்ளையவர்கள் கூறினர்கள்.

கோனர்பட்டு நீங்கி மேலைச் செவற்பட்டிச் சன்மார்க்க சபைக்கல்லூரியிற் சேர்ந்து மூன்று திங்கள் கற்க நேர்ந்நது. அக்காலை அங்குத் தலைமையாசிரிய ராயிருந்தவர் திரு. கந்தசாமியாரவர்களாவர். இவர் பின்பு அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சொற் பொழிவாளருளொருவராயிருந்து துஞ்சினர். இவ் வளவே யாமாசிரியர்பாற் கல்வி பயின்ற காலமாகும்.

பின்பு கோயமுத்தூரைச் சேர்ந்த தாராபுரத்துக் கண்மையிலுள்ள தளவாய்பட்டினத்து வாழ்ந்த பெருஞ் செல்வருஞ் சிறந்த நற்பண்பு பலவமையப் பெற்றவருந் தமிழ் மொழிக் கல்வியார்வலரும் புலவர் தோழருமாகிய, திரு. அழகர்சாமி ரெட்டியாராலும், அவர் யாக்கை நீத்த பின்னர் அவரருமைச் செல்வப் புதல்வர் திருமலைக் கோவிந்தசாமி ரெட்டியாராலும் தம்மோடு வேற்றுமை

*இக்குறியிடப் பெற்றவர்களிருவரும் இப்பொழுதிலர்; பல வாண்டுகட்கு முன்னரே காலமாயினர்.

யின்றி அன்பு பிழையாது ஊனுடையுறையுள் புத்தக முதலியன நல்கப்பெற்று அவர்கள் வீட்டிலே ஆறுண்டின் மேலு மினிதுவதிந்து எம்மளவிலே நல்குரவின் விடுபட்டுத் தமிழராய்ந்துகொண்டிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்குச் சென்று ஒருவாறு பாலபண்டிதர் வகுப்பிலே முதலாகத் தேறினம்.

பின்னர்ப் பண்டித வகுப்புத் தேர்வுக்குச் சென்று தேருதொழிந்தாம். இரண்டா முறையுமங்ஙனமே. இங்ஙனம் பலகாலுந் தவறுபடுதற்கு வாயில் எமக்கு மெய்ப் பொருளாராய்ச்சிக்கண்ணும் அதனையெய்தும் வழி யியலுதற் கண்ணு மினிது செல்லு முள்ளம் ஏனையவற்றுக் கண் வலிந்து செலுத்த வேண்டி நிற்றலேயாம். அதனல் ஏனை நூற்பொருள் எம் முள்ளத்துப் பதிதலு மரிதா யிருந்தது. சிறிதாவது பொருளீட்டற் பொருட்டே பிறநூல் கற்க வேண்டியதாயிற்று. அக்காலத்திலே சிறிது வடமொழிப் பயிற்சியும் வடமொழியிலே கீதை யோதலுமுடையம். பின்பு திருமலைக் கோவிந்தசாமி ரெட்டியார்பால் விடை பெற்றுக்கொண்டு எங்கானுங் கற்பித்தற்றொழில் செய்தூதிய மெய்துதற் பொருட்டு நாடி நெற்குப்பை வந்து கருப்பஞ் செட்டியாரைக் கண்ணுற நேர்ந்தது. அவர் யாம் மதுரைத் தேர்வுக்குச் சென்றிருந்த பொழுது தம் மகனது தேர்வுக்கு உடன் வந்திருந்தமையால் அறிமுகமாயினர். திரு. கருப்பஞ் செட்டியார் தம்மகன் இராமநாதனென்பவற்குக் கொழும் பிற் றம்மோடிருந்து கல்வி கற்பிக்குமாறு கேட்டுக் கொள்ள வறுமையை அஞ்சி அதற்குடன்பட்டு அவரொடு கொழும்பு சென்று கல்வி கற்பித்துக் கொடுத்துப் பெற்ற சிற்றூதியங் கொண்டு சுற்றத்துக்கு மெமக்குஞ் செலவு செய்து வந்தாம்.

அங்குக் கற்பித்துக் கொண்டிருந்த காலையில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் வகுப்புத் தேர்வுக்கு யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச

வித்தியாசாலைக் கட்டிடஞ் சென்று வித்தியாசாலைத் தலைவர் திரு. கைலாச பிள்ளையவர்களது மேற்பார் வையில் நடந்த தேர்தலிலே ஒருவாறு தேறிவிட்டாம். கொழும்பில் வதிந்த காலையில் நாட்டுக்கோட்டை வணிக நண்பர் பலருளராயினர். அவர்கள் பொருளுதவி செய்யாவிட்டாலும் அவர்கள் செய்த வேறுபல வுதவிகள் எமக்கு வேண்டியனவாயிருந்தன. புலவூண்டுறந்த வலம்புரி வயி. வ. இலக்குமணச் செட்டியார், வடுகநாதச் செட்டியாரென்றிவர்கள் பல்லாண்டு நல்லூணளித்து அன்புவைத்திருந்தார்கள். யாம் வேண்டுமுதவி செய்ய வெண்ணியிருந்தவர் நற்சான்றுபட்டி திரு. பெ. ராம. சிதம்பரஞ் செட்டியாரவர்களாவர்.

யாங்கொழும்பு சென்ற முதன் முவ்யாண்டின்பின் தளவாய் பட்டினத்திலே தந்தையார் போலவே எம்மைப் பல்யாண்டு புரந்து வந்த திருமலைக் கோவிந்தசாமி ரெட்டியார் மகப் பேறெய்தாமுற் றங் கட்டிளங் காளைச் செவ்வியிலே காற்கணுற்ற நோய்முற்றி அந்தோ தந்தை சென்ற திருநாடு தாமுஞ் சென்றனர். அவரொடு தந் தந்தை வழி மரபு முடிந்தது. அவர்கள் எமக்குச் செய்த நன்றிக்கு யாம் வாழ்த்துரை தானும் வழங்க முடியாமற் போயிற்று. அவர்களது நன்றி கிடைத்திரா விடின் எமக்கித்துணைக் கல்வியறிவும் இதன்வழிவரு முயிர் வாழ்க்கையு மெய்துதலியலா வாகும். எல்லாந் திருவருட் செயல்.

கொழும்பில் ஆருண்டு வரையும் இராமநாதற்குக் கற்பித்த பின்பு மீண்டு இந்தியா வந்து கைப்பொருளுங் கற்பித்தற் றொழிலுங் கிடையாது திரிந்துகொண்டிருந்து விட்டுத் தொழில் கிடைக்கக் கூடுமென வெண்ணி திரு. பெ. ராம சிதம்பரஞ் செட்டியாரது உதவியால் மீண்டுங் கொழும்பு நோக்கிச் சென்றும். அன்னுரொடு அளவளாவி யிருந்தொரு திங்கள் கழிந்தபிற் கொழும்பு விவேகாநந்த சபைச் சார்பிற் சமய பாடவகுப்

பாசிரியரா யூதியம் பெறலாயினும்? அதுமுதற் பன்னீர் யாண்டுக்கு மேல்வரையுந் தனித்தனியுந் தொகுதி தொகுதியுமாகிய வேத்தியல் வினைஞருங் கல்லூரி மாணவ மாணவியருமாகிய யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் பலர்க்குத் தமிழ் கற்பித்துப் பெற்ற ஊதியத்திற் சுற்றத்துக்கு மெமக்குஞ் செலவு செய்தது போக, எஞ்சியதனைச் சிறிது சிறிதாகத் தொகுத்து வைப்பாக்கி வந்தாம். இத்துணைக் காலத்திடையே இந்தியாவில் எந்தையாரும் யாக்கை நீத்தனர். யாம் வறுமை எளிமை முதலிய பல்லாற்றுனும் இல்வாழ்க்கை கோடற்குத் தகுதியிலமாத லறிதலிற் கொண்டிலம்.

இங்குக் கூறியவை யொழிந்த வரலாறெல்லாம் விரிவுந் துன்பமு மிளிவரலு மாதலின் அவையிற்றை யெடுத்துக் கூறிற்றிலம். எமக்கு யாண்டுபல வாதலானும் இருபத்து நான்காம் யாண்டு முதல் முயன்று வருதலானும் நிலையாமை நினைவு கூர்தலானும் உடம்பு தளர்ந் தோய்வு விரும்புதலானும் யாக்கை வீயுமுன் என்ன வானும் நூலுரைகள் வரைதல் வேண்டுமென்னு மவாவி னுனும் வருவாய்த் தொழிலை முடித்துக்கொண்டு அமைதிக்கும் உணவுக்குமியைந்த தாகுமெனக் கருதி நற்சான்றுபட்டி திரு. பெ. ராம சிதம்பரஞ் செட்டியார் தொல்கேண்மை வழுவாத் தூயரும் இற்சிறப்புடையாருங் கற்ரூேர் சார்பின்கணன்றி மற்ரூேர் சார்பின்கண் உள்ளு வகை கொள்ளுதலில்லாரு மாதலின் யாங் கேட்டுக் கொண்டவாறே உவகை கூர்ந்து தமது குறுவத்தை யென் னும் அழகிய தேயிலைத் தோட்டத்து விடுதியில் எமக்கு வேண்டுபவற்றைக் குறையறச் செய்துதவுமாறு தம் பணித் தலைவர்க்குக் கட்டளை தந்திருந்தனர். அங்ஙனம் அன்பர் திரு. சிதம்பரஞ் செட்டியாருடைய உணவும் பாலுந் தேநீரு மிசைந்தின்புற்று வதிந்து பத்துத் திங்களுட் புலவர்காஞ்சி, புணர்ப்பியல், நம்பியகவலென விம்முந்நூலு மூவுரையும் படைத்தாம். இங்ஙனம் நூலுரையாக்குதற்கியன்ற செவ்வி வாய்த்தற்குத் துணை

தின்ற வூழ்வினை நீடு நிற்குங் கொல்லோ வென்னு மையுறவினல் இவையிற்றை விரையச் செய்யவேண்டிற் ருயிற்று. ஒன்றுஞ் செய்யாது வறிதே மாய்ந்து போத லினும் எங்ஙனமானு மிவையிற்றைச் செய்து முடித்தல் சிறந்த தென்பதே யெமது கோட்பாடு.

நூான் மூன்றனுள்ளும் நம்பியகவலை முதற்கட் பதிப்பித்து வெளியீடு செய்வான் இந்தியாப் போந்து புதுக் கோட்டையிலும் அன்பர் திரு. சிதம்பரஞ் செட்டியா ருடைய அகனமர்ந்து செய்யாளுறையு மில்லத்துக்கண் முகனமர்ந்து நல்விருந்தளிக்கப்பெற்றுக் களி கூர வமர்ந்தாம். பின்னர்ப் பன்னுள் உடன்வைத்துண்டு மகிழுஞ் செட்டியார் புதுக்கோட்டையைச் சார்ந்த இராமச் சந்திர புரத்துப் பதிப்பகந் தகுதியுடையதென அங்கு நம்பி யகவல் பதிப்பித்தற்கு அப்பதிப்பகப் பணித்தலைவரோ டுரையாடி ஏற்பாடுகளை வரையறுத்துக் கொடுத்துத் துணை நின்ருர். இத்துணைகிடையாதாயின் இராமச்சந்திர புரத்து மதராசு ரிப்பன் பதிப்பகத் திந்நூற் பதிப்பு வெளி வந்திராது.

இவ்வெளியீட்டுக்கு நேர்ந்த பொருட்செலவு விலையா லாயினும் பரிசாலாயினும் எந்தொழிலா லாயினும் இம் மூன்ருனுமாயினும் ஈடு செய்யப் படினன்றி மற்றை நூல் களையு மிது போலப் பதிப்பித்து வெளியிடுதல் பெரிது மரிதாகும்.''

இவ்வாறு தமது வரலாற்றுரையை எழுதிய இவர் மேற்கூறிய நூல்களையே யன்றி 327 வெண்பாக்களைக் கொண்ட 'அழகியது' என்னும் வெண்பா நூலையும் இயற்றியுள்ளார். அந்நூல் 1965ஆம் ஆண்டில் கொழும்பு மெய்கண்டான் பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியாகி யுள்ளது. நம்பியகவல் என்பது பகவத் கீதையைப் பற்றியது. அதன் முதற் பாட்டை அடியிற்காண்க.

"அம்ம! கேண்மதி யஞ்சய முனிவ!
செம்மையும் புலமெனுஞ் சீர்சால் குருபுலத்
தடுபோ ரயர்வா ளவாவினர் குழீஇக்
கடுமா றென்னினிக் கண்டனர்
கெடுமா ரெமர்தா மைவரொடு கிளர்ந்தே."

## இறுதி

இப்புலவர் 1956ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

---

## ௬. ஈசுவர அடிகளார்

### முன்னுரை

அடியேன் 1926 முதல் பல ஆண்டுகள் திருவருணைக்குச் சென்றுள்ளேன். திருவருணையில் பல திங்கள்கள் தங்கியிருந்துள்ளேன். துறவிகளிடத்தில் நெருங்கிய தொடர்பும் உண்டு. இரமண மகரிஷிகளோடு சில காலம் உடனிருந்துள்ளேன். அந்நாளில் அருணையில் சுற்றிக்கொண்டிருந்த சேஷாத்திரி சுவாமிகளையும் பார்த்துள்ளேன். ஆனால் அருணைத் திருக்கோயிலில் தங்கியிருந்த ஈசுவர அடிகளார் என்னும் இப்பெரியாரைப் பற்றி அறிந்ததில்லை. இதற்குக் காரணம் இவர் அடக்கத்துடன் தம்மை விளம்பரஞ் செய்துகொள்ள விருப்பமில்லாது ஒரு மூலையில் தங்கியிருந்ததுதான். இத் தமிழறிஞரைப்பற்றி திரு. ஆர். கல்யாணசுந்தரம் என்னும் மெய்யறிவாளர் தவச் செல்வர்களின் வரலாறு என்னும் நூலில் எழுதியுள்ள செய்திகளிலிருந்து சில செய்திகளை இங்குத் தருகிறேன்.

### தோற்றம்

இப்பெரியார் நடுநாட்டிலே திருக்கோவலூருக்கு அண்மையில் உள்ள இறைவாச நல்லூர் என்னுஞ் சிற்றூரில் 12—11—1880இல் தோன்றினார். தந்தையார் பெயர் அருணசல தீட்சிதர், தாயார் பெயர் பாலாம்பிகையம்மாள்.

### கல்வி

இளமைப்பருவத்தில் ஆங்கிலம் தமிழ் வடமொழி முதலியவைகளை நன்கு கற்றுப் புலமை பெற்றார். "இனிப்பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞானம் எளிதிலுண்டாம்" என்பது ஆன்றோர் கொள்கை. அக்

கொள்கைக் கேற்ப இப்பெரியாருக்கும் இளமைப் பருவத்திலேயே மெய்யறிவு நாட்டம் உண்டாயிற்று. மெய்யறிவு நூல்கள் பலவற்றை ஓதியுணர்ந்தார். பழம்பிறப்பின் மெய்யறிவு மேலும் பரவியது. துறவிக் கோலத்துடன் 1911ஆம் ஆண்டில் திருவருணையை அடைந்தார். இத் திருவருணை மலை மற்றைக் கல்மலைகளைப் போல் ஒரு பொதுவான கல்மலையன்று. மெய்யறிவே வடிவமாக அமைந்த மலை. இம் மலை இறைவன் திருவருளே யாகும். ஞானத் தபோதனரை வாவென்றழைக்கும் மாமலையாகிய இம்மலையை அடைந்தவர்கள் மெய்யறிவு பெற்று வீடு பேற்றை யடைதல் ஒருதலை. தன்னை உள்ளத்தில் எண்ணுவார்களையே வீடுபேற்றில் அடைவிக்கும் இம்மலை தன்னை அடைந்தார்களை வீடு பேற்றில் சேர்ப்பது வியப்பாகுமோ? குரு நமசிவாய தேவர், குகை நமசிவாய தேவர், ஈசானிய ஞானதேசிகர், இரமண மஹரிஷி, சேஷாத்திரி சுவாமிகள் இப்படியாக எண்ணற்ற முனிவர் இம் மலையை அடைந்து தங்கி வீடுபேற்றை யடைந்தனர். இந் நாளிலும் பலர் வீடு பேற்றை நாடி இம் மலையில் வசித்து வருகின்றனர்.

**அருணையில் தவம்**

திருவருணையை அடைந்த இப் பெரியார் பலவிடங்களில் பல காலம் அமர்ந்து தவம் புரிந்திருந்தார். இரமண மஹரிஷிகட்கும் இவருக்கும் பழக்கம் உண்டாயிற்று. இருவரும் அடிக்கடி ஒன்று சேர்ந்து மலைவலம் வருதலும் உண்டு. பெரும்பாலும் இருவரும் மௌனமாகவே இருப்பார்கள். உரையாடத் தொடங்கினால் மெய்யறிவு நூற்பொருள்களையும் தத்தம் நிட்டையனுபவங்களையும் தாராளமாகக் கூறிக்கொள்ளுவர்.

**கோயிலில் உறைதல்**

இரமண மகரிஷிகட்கு மலையின் தென்பக்கத்தில் ஓர் இருப்பிடத்தை அன்பர்கள் அமைத்தார்கள். இரமண

மகரிஷிகள் அங்குச் சென்று தங்கத் தொடங்கியபின் இப் பெரியார் அண்ணாமலையார் திருக்கோயிலில் ஈசான திக்கி லுள்ள ஒரு கட்டிடத்தில் தங்கித் தவம் புரிதலை மேற் கொண்டார். ஏறக்குறைய முப்பத்தைந்தாண்டுகள் வரை அதே இடத்தில் தங்கியிருந்தார். இப் பெரியா ருடைய பெருமையைப் பெரும்பாலோர் அறிந்துகொள்ள வில்லை. ஒரு சிலரே உணர்ந்து பாராட்டிப் போற்றி னார்கள். அவர்கட்கு அடிகளார் நல்லுரைகள் வழங்கிக் கொண்டிருந்தார். நிட்டையில் அமர்ந்திராத நேரங் களில் மெய்யறிவு நூல்களை ஆராய்ந்துணர்தலையும் வீடு பேற்றில் விருப்புடையார்கட்கு நல்லுரையருளுதலையுமே செயலாகக் கொண்ட இவர் அண்ணாமலையாருடைய பெருமையை அனைவர்க்கும் உணர்த்தவேண்டி "அருணாசல மகாத்மியம்" என்னும் அரிய நூலை இயற் றினார். மிகச் சீரிய முறையில் எழுதப்பெற்ற இந்நூல் 1928ஆம் ஆண்டில் வெளியாகியது. இந்நூலைப் பலரும் விரும்பிப் படித்து மகிழ்ந்தனர். இந்நூல் பிறகு ஆங்கிலத் திலும் வெளியாகியது.

### பல கலையுணர்வு

இப் பெரியார் வேதாந்த நூல்கள் யாவற்றையும் நன்கு ஓதியுணர்ந்திருந்ததுடன் காலக் கணிதத்திலும் வான நூல் ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்கினார். மருத்துவ முறைகளையும் நன்குணர்ந்திருந்தார். ஆயினும் தாம் உணர்ந்திருந்ததை வெளியே காட்டிக்கொள்ள வில்லை. 'அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்' என்னும் உரைக்கேற்ப இவர் ஒன்றுமறியாதவரைப் போலவே அடங்கியிருந்தார்.

### பாடல்கள் இயற்றல்

கல்வியறிவிற் சிறந்து விளங்கிய இவர் பல செய் யுட்களை இயற்றியுள்ளார். அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க :

வெண்பா

"தத்துவங்க ளெல்லாந் தலைசாயத் தன்னறிவுள்
சுத்தமுறத் தூங்காமல் தூங்கிநிற்கும்—முத்திரையிதை
அந்தரங்கத் தாழி யரவின்மேல் கண்வளர்வான்
அந்தரங்க மென்று ரறிந்து."

"கூடு உலகுடலுங் கூத்தாடு மைம் புலனும்
பாடயர்ந்த நித்திரையில் பாழுடல்நின்—றுடுமுயிர்
சுத்த சிவனே சுடுகாட்டி லாடியெனத்
தத்துவத்தா ராய்ந்துரைத்தார் தாம்."

வடபழநியிற் பாடியது

"புவிபுனல் தீவிண் புணர்வளி கூடும்
புதுகுடில் தோறும் குடியேறிப்
பொறிவழி யாடும் சடமிது நாடும்
பொருளல வாமென் றுணர்வூறி
அவிருயிர் யாவும் குருகுக னுமென்
றனவிய நேயம் பெறுவேனே
அகிலமு மீரோன் றடியள வாநின்
றமர்நெடு மாலின் மருகோனே
மவுனிகள் தேரும் சிவனிரு காதின்
மழலையி னோதுங் குருநாதா
வருகென ஆள்நின் இணையடி சேர்என்
மனமயில் வேகம் பெரிதாமால்
தவமுயல் வார்வந் தடிநிழல் மேவும்
தமிழ்மணம் நாறும் மலர்சூடும்
தணிமுழு தியும் வடபழ நீநந்
தனதரு வேயெம் பெருமானே."

ஆலமர் கடவுளைப் பாடியது

"தன்னிலே யுதித்துத் தன்னிலே யொடுங்கும்
சருவமுந் தானதன் சான்று"

முன்னிய விழிப்புக் கனாவொடு துயிலாம்
    மூன்றெனும் மூவிரல் நீங்கில்
அன்னிய சுட்டு விரலெனுஞ் சீவன்
    அங்குட்ட சிவத்தொடொன் றெனவே
சன்னிதி மௌனக் குறிப்பினா லுணர்த்தும்
    தட்சணா மூர்த்திதாள் வாழி."

## இறுதி

இப் பெரியார் 1958ஆம் ஆண்டிற் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். பழவினைப் பயனை எவரும் நுகராதொழித லியலாதன்றோ? அந்நோயே காரணமாகத் தமது எழுபத்தெட்டாம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனோடிரண்டறக் கலந்தார். இவருடைய உடல் திருவண்ணாமலைக் கோயிலுக்கு ஈசான திக்கிலே ஈசான்ய மடத்திற்கு வடபால் அடக்கஞ் செய்யப்பட்டது. அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தில் திருக்கோயில் எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை.

## ரு. நாகர்கோயில் ஆறுமுக நாவலர்

### முன்னுரை

செந்தமிழ்நாடு சிவமணங்கமழும் தெய்வத்திருநாடு. சிவநெறியுஞ் செந்தமிழுஞ் செழித்து வளர்வது இந்த நாட்டிலேதான். நாவலரும் பாவலரும் தோன்றி நற்றொண்டு புரிந்ததும் இந்த நாட்டிலேதான். செந்தமிழ் நாட்டின் தென்பால் அமைந்தது கன்னியா குமரி மாவட்டம். இம்மாவட்டத்திலே பண்டைப் பெருமை பெற்றிலங்குவது நாஞ்சில் நாடென்னும் நன்செய் நாடு. நன்செய் நிலங்கள் செழித்துள்ள மையால் இந்நாட்டிற்கு இவ்வாறு பெயர்கள் அமைந்தன. இந் நாட்டிலே தென்பால் கன்னிக்குமரி தவஞ்செய்யும் குமரித்துறையும் வடபால் குடமுனி தவஞ்செய்யும் பொதியமலையும் உள்ளன. பொதியமலையில் தோன்றிக் குமரிமுனையின் மேல்பால் கடலில் கலக்கும் பழையாறு பண்டைத் தமிழ்நாட்டின் பஃறுளியாற்றை நினைவு படுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வாறு நினைவுறுத்திக் கொண்டிருப்பதன்றி இந்நாட்டை வளப்படுத்திக் கொண்டுமிருக்கிறது. திருப்பதிசாரம், சுசீந்திரம் முதலிய பதிகள் இவ்வாற்றின் கரையில் அமைந்த ஊர்களாகும். முருகப் பெருமான் வள்ளியம்மையாரைத் திருமணம் புரிந்து கொண்ட குமாரகோவில் எனப்பெறும் திருவேர கமும் இந்நாட்டின் கண்ணேதான் அமைந்துள்ளது. பொதிய மலைச்சாரலிலே புகழ்பெற்று விளங்கும் இப்பதி திருமுருகப் பெருமானுடைய ஆறு திருப்பதிகளிலே ஒன்றாகும். குமரி மாவட்டத்திற்குத் தலைநகராக விளங்குவது நாகர்கோயிலாகும்.

**தோற்றம்**

நாகர்கோயிலுக்குக் கிழக்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் திருநெல்வேலிக்குச் செல்லும் வழியில் வெள்ளமடம் என வழங்கப்பெறும் இராமநாதபுரம் என்னும் நல்லூர் ஒன்று இருக்கின்றது. இவ்வூரில் குற்றாலம்பிள்ளை யென்னும் பெயருடையார் ஒருவர் வீரம்மாள் என்னும் பெயருடைய விளங்கிழையோடு இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்திக் கொண்டிருந்தார். சிவநெறி மறவாச் சீர்மையுடன் வாழ்ந்திருந்த இவர்களுக்கு ஐந்தாவது பிள்ளையாக வந்து தோன்றினர் ஆறுமுகம் பிள்ளை. இவ்வாறுமுகம் பிள்ளை தோன்றிய காலம் ஆங்கிலம் 1895 மேத்திங்கள் 29 ஆம் நாளுக்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1817 கொல்லம் 1070 க்கு நேரான மன்மத ஆண்டு வைகாசித்திங்கள் பதினேழாம் நாளாகும்.

**கல்வி**

ஆறுமுகம் பிள்ளை ஆறுதிங்கட் குழந்தையாக இருந்தபோதே தோற்றப் பொலிவும் மற்றவர் மனங் கவர் ஆற்றலுடையவராகவும் விளங்கினர். இளம் பருவத்திலேயே இவரிடஞ் சொல்லழகு நன்கு அமைந்திருந்தது. ஐந்தாம் ஆண்டில் அருந்தமிழைப் பெற்றோர் வாயிலாகக் கற்கத் தொடங்கினர். தமிழ்க் கல்வி வீட்டளவோடு நின்றது. அந்நாளிலே குமரித் தமிழகம் மலையாள மன்னருடைய ஆட்சிக்குட் பட்டிருந்த படியினல் இப்பகுதிகளில் தமிழ்ப் பள்ளிகள் அமைந்திருக்கவில்லை. ஆகவே மலையாள மொழியைக் கற்று உயர்வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்ருர். தமிழ்க் கல்வியைத் தம்முடைய முயற்சியாற் கற்றுப் புலமை பெற்ருர். பிற்காலத்தில் மலையாள அரசாங்கம் தமிழ்ப் பள்ளிகளையும் தமிழ்த் தேர்வுகளையும் ஏற்படுத்தியது. அப்பொழுது ஆறுமுகம் பிள்ளை தமிழ் உயர் வகுப்புத்தேர்வில் வெற்றி பெற்று இரு மொழிப்புலவராக விளங்கினர்.

## ஆசிரியப்பணி

ஆறுமுகம் பிள்ளை யவர்களுடைய தமிழ்ப் புலமையையும் சொல்வன்மையையும் அறிந்து திருவிதாங்கூர் அரசினர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக அமர்த்தினார்கள். இவருடைய அருந் தமிழ்ப்பணி நாகர்கோவில் சேது இலக்குமிபாய் உயர்நிலைப் பள்ளியில் நீண்டகாலம் நிகழ்ந்தது. நற்றமிழை மாணவர்க்கு நன்கு போதிப்பதில் இவர் வல்லவராக விளங்கினார். இவருடைய தமிழ்ச் சுவையை இனிது மாந்திய மாணவர்கள் தாயினைப் பின் தொடர்ந்து செல்லுங் கன்றைப்போல இவரை அகலாது பின் தொடர்ந்து செல்வர்.

## மாணவர் பாராட்டு

இவர்பால் தமிழ்கற்றுப் பிற்காலத்தில் புலமை பெற்று விளங்கிய ஆதிமூலம் என்பவர்,

> "கன்றுதன் தாயின் பின்னே
> கால்தொடர்ந் தேகல் போல
> என்றுமா ணவர்கள் பின்னே
> ஏகுவார் அவரில் யானும்
> ஒன்றென இருந்த தாலே
> உரைத்தனன் இவன்றன் தொண்டு
> நன்றுசெய் பலரை யீங்கு
> நல்கிய தென்ன லாமே."

என்றும்,

> "கிள்ளைபோல் மொழிகள் பேசிக்
> கிட்டிடு இயற்கை காட்டிப்
> பிள்ளைகட் கமுதை யூட்டும்
> பெற்றநற் றாயைப் போல
> உள்ளிலே ஏறுப் பாடம்
> ஊட்டிய இவன்றி றத்தை

உள்ளிடில் புளக மெய்தி
உவந்துதாள் வாழ்த்து மன்றே"

என்றும்,

புகழ்ந்து பாடியிருக்கிருர்.

## இல் வாழ்க்கை

தருமபுரம் என்பது நாகர்கோவிலின் தென்பாலமைந்த ஒரு சிற்றூர். அவ்வூரிலே செல்வந்தர் குடியிலே தோன்றிய தங்கம்மாள்என்னும் அருங்குணச் செல்வியைத் திருமணம் புரிந்தார். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனு மது" என்னுந் தமிழ் மறைக்கேற்ப இல்வாழ்க்கையை இனிதுநடத்திஞர். மணவாழ்க்கையின் மங்கலப் பயனுக இரண்டு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் மக்கட் செல்வமாகத் தோன்றினர். மக்கட்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து அவர்களுடைய மாண்பமைந்த வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்தார். பேரன் பேத்திகளோடு அளவளாவி மகிழ்ந்தார். இவ்வாறு இவருடைய இல்வாழ்க்கை இனிது சிறந்து திகழ்ந்தது.

## திருநெறித் தொண்டர்குழாம்

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே மக்களுக்குச் சமயப் பணிபுரியுமாறு இறையருள் இவரைத் தூண்டியது; அன்பர் பலரைச் சேர்த்துத், 'திருநெறித் தொண்டர்குழாம்' என்னுஞ் சங்கத்தை 1928ஆம் ஆண்டில் நாகர்கோவிலைச் சார்ந்த வடிவீச்சுரத்தில் நிலைபெறுத்திஞர். அச் சங்கத்திற்குப் பல கிளைகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தோன்றின. ஒவ்வொரு கிளையிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பாடல்களைப் பண்ணோடு பாடும் ஓதுவார்களும் சொற்பொழிவாற்றுந் திறனுடைய அறிஞர்களும்

அமர்த்தப் பெற்றிருந்தனர். ஆறுமுகம் பிள்ளை ஓதுவார் சொற்பொழிவாளர்கள் முதலியவர்களோடு திருக் கூட்ட மாக ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் ஊராகச் செல்வார். முதலில் திருப்பாடல்களை இன்னிசையோடும் பின்னணி யோடும் பாடிக்கொண்டு ஊர்வலம் வருவார். ஊர் மக்களும் திரண்டு கூட்டமாக வருவார்கள். பிறகு ஒரு பொது இடத்தில் கூட்டம் நடைபெறும். அங்கு ஆறுமுகம் பிள்ளையும் சொற்பொழிவாற்றக் கூடியவர் களுஞ் சொற்பொழிவாற்றுவார்கள். இத் திருத் தொண்டு நாஞ்சில் நாட்டில் நல்ல சமய எழுச்சியை உண்டாக்கிற்று. மலைநாட்டுத் தொடர்பால் பகவத் கீதை முதலிய வேதாந்த நூல்களையே விரும்பிப் படித்துக்கொண்டிருந்த நாஞ்சில் மக்கள் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலியவைகளினுஞ் சித்தாந்த நூல்களினுஞ் சிந்தையைச் செலுத்தி ஈடுபட லானார்கள். தொண்டர்கள் பலர் நாஞ்சில் நாட்டிலேயே உருவாயினர். ஆறுமுகம் பிள்ளை இவ்வாறு ஆற்றிய பணியை ஆதிமூலம் என்பவர்,

> "எங்கெங்கு காணினுந் தொண்டர்குழாம்
> என்றபேச் சன்றியோர் பேச்சில்லை
> அங்கங்கு தங்கிடும் மக்களிறைக்
> கடியவ ராகி விளங்கினரே
> பொங்கு புகழுடை ஆறுமுகன்
> போதக னாகப் பணியாற்றி
> இங்கு மதத்தையும் மக்களையும்
> எழுப்பி விழிப்புறச் செய்தனவே"

என்று பாடியுள்ளார்.

சமயச் சொற்பொழிவு

ஒரு சமயம் இவர் தொண்டர் குழாத்தோடு திருச் செந்தூர்த் திருக்கோயில் திருவிழாவுக்குச் சென்றிருந் தார். அங்குத் திருக்கோவிலுக்குச் செல்லும் வழியில்

கிறித்துவ சமயச் சொற்பொழிவு நடந்து கொண்டிருந்தது. சமய அறிவில்லாத மக்கள் பலர் அங்குக்கூடி அச் சொற் பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். திருச்செந் தூர்த் திருவிழாவில் கிறித்துவ சமயச் சொற்பொழிவா? என்று ஆறுமுகம் பிள்ளை உள்ளங் கொதித்தார். தாம் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு சொன்மாரி பொழிய லானார். கிறித்துவர்களைச் சூழ்ந்து நின்ற கூட்டம் ஆறுமுகம் பிள்ளையைச் சூழ்ந்து நின்றது. ஆறுமுகம் பிள்ளையினுடைய சொல்லாற்றல் அனைவரையுங் கவரவே கிறித்துவச் சொற்பொழிவாளர்களைச் சூழ்ந்து நின்ற கூட்டத்தைவிடப் பெருங் கூட்டங் கூடிவிட்டது. கிறித்துவச் சொற்பொழிவாளர் சொற்பொழிவை நிறுத்தி விட்டு மெல்ல நழுவி விட்டார். அன்று வெகு நேரம் வரையில் இவருடைய சொற்பொழிவு நடைபெற்றது. திருக்கோயில் திருவிழாக்களுக்குச் சென்று சமயச் சொற் பொழிவுகள் நிகழ்த்த வேண்டுமென்று அன்று முதல் இவர் உறுதி கொண்டார். பிற சமயச் சொற்பொழிவுகள் இந்து சமயக் கோவில் விழாக்களை யொட்டி நடத்தப்படு வதையுந் தடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்.

### திருவிழாக்களில் சமயத் தொண்டு

அதுமுதற்கொண்டு திருக்கோவில்களில் திரு விழாக்கள் எங்கெங்கு நிகழ்கின்றனவோ அங்கெல்லாஞ் சென்று சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தலானார். இதனால் நல்ல பயன் விளைந்தது. அந்நாளில் திருக் கோவில்களாலோ அன்றி அவைகளைப் புரக்கும் அற நிலையங்களாலோ இத்தகைய சமயப் பணிகளுக்கு எத் தகைய ஆதரவும் அளிக்கப்படவில்லை. ஆயினும் பல திருக்கோயில் தருமகர்த்தர்கள் இத்தகைய திருப்பணிகள் மிகவும் இன்றியமையாதன என்று எண்ணினர். ஆறுமுகம் பிள்ளையவர்கள் தக்கார் பலரோடு அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தை அணுகினர். அக்காலை அக்கழக ஆணையாளராகக் கோவைகிழார் இராமச்சந்திரன்

செட்டியார் பணிபுரிந்திருந்தார். அவருடைய முயற்சியால் திருக்கோவில் வருமானத்தில் ஐந்து சதவீதம் சமயச் சொற்பொழிவுகளுக்குச் செலவு செய்யுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதுமுதல் பல திருக்கோயில்களில் திருவிழாச் சமயத்திற் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வழக்கம் உருவாகியது.

## சமயப்பணியில் எழுச்சி

ஆறுமுகம் பிள்ளையவர்களுடைய மனம் சமயப் பணியில்தான் மிகுந்த எழுச்சி கொண்டிருந்தது. ஆகவே இவர் தம்முடைய வேலையில் இருந்து ஓய்வு பெற வேண்டிய காலத்திற்கு ஏழு ஆண்டுகள் முன்னதாகவே ஓய்வு பெற்றுச் சமயப் பணி செய்யலானார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் நாவுக்கரசருடைய நன்மொழியை உள்ளத்தில் கொண்டு அல்லும் பகலுஞ் சமயப் பணியிலேயே ஈடுபட்டார். கால்நடையாகவே பலவிடங்கட்குஞ் சென்று சமயச் சொற்பொழிவுகள் செய்தார். பரசமய கோளரியாக விளங்கிய இவருடைய சொற்பொழிவால் இந்து சமய மக்களுக்குச் சமய உணர்ச்சியோடு சமயப் பற்றும் தன்மானமும் நாளும் நாளும் மிகுதிப்பட்டன. இந்து சமய வளர்ச்சிக்கொரு மறுமலர்ச்சி மக்கள்பால் அரும்பியது. நாத்திகர் பிற சமயத்தோர் முதலியவர்களுடைய கேள்விகட்கு இவர் தக்கவாறு மறுமொழியளித்து நாத்திகப் பேயை நாட்டை விட்டு ஓட்டினார். பேசாத நாளெல்லாம் பிறவா நாளே யாகையால் சிவபெருமானுடைய பெருமையை மக்களிடையே பேசினார்; 365 நாட்களும் பிறையணியிறையின் பெருமையையே எங்கும் பறையறைந்து கொண்டிருந்தார்.

## மனத்தை மாற்றிய மாண்பு

கிறித்துவ சமயத்தினர் இந்து சமயிகளைப், "பாவிகளே! அஞ்ஞானிகளே!!" என்று அழைத்துப் பல

வகையான பிதற்றுரைகளைப் பேசியதையும் இந்து சமயத்தையும் அதன் உட்பிரிவுகளான சைவத்தையும் வைணவத்தையும் பழித்துரைத்துப் பேதை மக்களைத் தம்முடைய சமயத்தில் சேர்த்துக் கொள்வதையும் கண்டு இவர் மிகுந்த கவலை கொண்டார்.

சைவ சமயத்தின் மீது குறை கூறுபவர்களுடைய உள்ளந் திருந்தவும் பிற சமயத்தினரின் கூற்றுக்களை மாற்றவும் சமயத்தின் பெருமைகளை விளக்கவும் சிவஞான போதம் சிவஞான சித்தியார் முதலிய சமய நூல்களில் காணப்படுங் கருத்துக்களை இனிய எளிய செந்தமிழ் நடையில் விளக்கிச் சொற்பொழிவுகளாற்றினர். இவருடைய கட்டுரை வன்மையாலும் விளக்கும் முறையாலும் மக்கள் உள்ளத்தில் உயரிய கருத்துக்கள் பதியலாயின. நமது இந்து சமயத்திலே பிறந்து, பிறந்த சமயத்தையே குறை கூறிக்கொண்டு திரிந்த பலர் மனம் மாறுபட்டுச் சமயப் பெருமைகளை நன்கு உணரலாயினர். தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான மக்களின் மனத்தை மாற்றிச் சமயச் சிறப்பை உணருமாறு செய்தார். இந்து சமயத்தின் பெருமையை நன்கு உணராமையால் கிறித்துவ சமயத்திற் புகுந்து கலங்கித் திரிந்த எண்ணற்ற மக்கள் மீளவுந் தமது தாய்ச் சமயத்திற்கே திரும்பினர். இது மட்டுமன்று. முகமதிய சமயத்திலேயே பிறந்த சிலர் நமது சமயச் சிறப்பை உணருமாறு செய்து இந்து சமயத்தைத் தழுவுமாறுஞ் செய்துவிட்டாரெனின் இவருடைய சொல்லாற்றலைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ ?

### ஈழ நாட்டிற் சமயத் தொண்டு

ஈழவள நாட்டிலுள்ள கொழும்பு, சிந்துபிட்டி சுப்பிரமணியர் திருக்கோயிலார் ஆடிவேல் விழாச் சொற்பொழிவுக்கு இவரை அழைத்தனர். அங்கு இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் இலங்கைக்கு ஒருசமயப்

புத்துணர்ச்சியை ஊட்டியது. ஆகவே ஈழநாட்டார் இவரை அடிக்கடி தமது நாட்டிற்குச் சொற்பொழிவின் பொருட்டு அழைக்கலாயினர். இவர் யாழ்ப்பாணம் திரிகோணமலை, அட்டன், கண்டி, பருத்தித்துறை, நல்லூர் முதலிய பல்வேறிடங்களுக்குச் சென்று சமயச் சொற்பொழிவுகள் செய்து அந்நாட்டு மக்களைக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடச் செய்தார்.

மதுரை ஆதீன அடிகள்

இலங்கையில் இவரைக் கொண்டு பல சைவர்கள் தீக்கை பெற்றுக் கொண்டார்கள். சில கிறித்துவர்களும் இந்து சமயத்திற் சேர்ந்து அறிவுரை பெற்றனர். கொழும்பு சுந்தரம் லிமிடெட் கம்பெனியின் உரிமையாளராகவும் புகழ்பெற்ற வணிகராகவும் சிறந்த செல்வராகவும் தூயமனம், இறைவழிபாடு முதலிய பண்புடையவராகவுந் திகழ்ந்த கே. வி. எஸ். சுந்தரம் என்பவர் ஆறுமுகம் பிள்ளையவர்கள் பால் பெரிதும் ஈடுபாடு கொண்டார். துறவறம் பூண்டு சமயத் தொண்டாற்ற வேண்டும் என்னும் எண்ணங்கொண்ட அவர் தம்முடைய கருத்தை இவரிடந் தெரிவித்தார். இவர் அச் செய்தியை மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத் தலைவருக்குத் தெரியப் படுத்தினர். ஆதீனத்தலைவர் சுந்தரத்தைத் தம்முடைய ஆதீனத்தின் இளவரசாக ஏற்றுக்கொண்டார். ஆறுமுகம் பிள்ளை இலங்கைக்குச் சென்று சுந்தரம் அவர்களை மதுரை ஆதீனத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். சுந்தரம் அவர்கள் துறவுபூண்டு இளவரசானர். அவர்தாம் தற்போது மதுரை யாதீனத் தலைவராக இருக்கும் சோமசுந்தர ஞானதேசிக பரமாசாரிய சுவாமிகளாவார்.

சமூகப்பணி

இந்து சமயம் தாழ்வடைவதற்கு முதன்மையான காரணம் சாதியின் பெயரால் உயர்வு தாழ்வு பாராட்டுதல்

என்னும் உண்மையை இவர் கண்டார். "ஆண்டவன் திருமுன்பு அனைவருஞ் சமமானவர்களே. திருக்கோவிலுக்குச் சென்று ஆண்டவனை வழிபடும் உரிமை அனைவருக்கும் வழங்கப்படவேண்டும்" என்பவை இவருடைய கருத்துக்கள். அந்நாளில் திருவாங்கூர் மன்னராக இருந்த சித்திரைத் திருநாள் அரசர் தம் நாட்டுத் திருக்கோவில்களில் இந்துக்கள் அனைவருஞ் சென்று வழிபாடு செய்யும் உரிமையைக் கொடுத்தார். உரிமையளிக்கப்பட்டாலும் தாழ்த்தப்பட்ட குலத்தினர் கோவிலுக்குச் செல்ல அஞ்சிக் கொண்டிருந்தனர். ஆறுமுகம் பிள்ளையவர்கள் அஞ்சியிருந்தவர்களையெல்லாம் ஒருசேரத் திரட்டிக் கொண்டு நாள்தோறுந் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யலானார். தாழ்த்தப்பட்டோர் என்பவர்களிற் பலர் நாள்தோறும் நீராடாமலும் சமய அறிகுறிகளை அணியாமலும் இருப்பதாலேயே அவர்களுக்குத் தாழ்வுண்டாகிறதென்பதை உணர்ந்த இவர் தூய்மையாக இருக்க வேண்டியதன் கட்டாயத்தையும் அவர்களுக்குப் போதித்தார். அதனால் 'அனைவரும் நாடோறும் நீராடித் தூய உடைகளணிந்து சமயக்குறிகள் தாங்கிக் கண்டோர் மகிழும் தூய நிலையில் விளங்கலாயினர்.

**உயிர்ப்பலி யொழித்தல்**

இந்துக்களிற் பலர் சிறுதெய்வ வழிபாடென்னும் பயனற்ற செயலை மேற்கொண்டிருக்கின்றனர். சிறு தெய்வ வழிபாட்டினால் சிறந்த பயனொன்றும் உண்டாக மாட்டாது. இதனைக் கருதியே பெரியோர்களுஞ், "சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோமல்லோம்" என்று திருவாய் மலர்ந் தருளியிருக்கின்றனர். உயிர்ப்பலி கொடுக்குங் கொடிய வழக்கத்தை இவர் அடியோடு ஒழிக்க வேண்டுமென்று உறுதி பூண்டார். சிறு தெய்வ வழிபாடும் உயிர்ப்பலியும் நிகழும் இடங்களுக்குச் சென்று அச்செயல்களின் பயனின்மையை விளக்கிப் பல சொற்பொழிவுகளைச் செய்தார். இதன் பயனாகப் பலர் தீவினைச்

செயல்களொழிந்து தூயவர்களானார்கள். நாளடைவில் பலிகொடுக்கும் கொடிய பழக்கத்தின் தீமையை மக்கள் உணர்ந்து கொண்டபடியால் நாடெங்கும் பலிகொடுக்கும் வழக்கம் பெரும்பாலும் மறைந்தது.

### சாம்பவர் சமூகப்பணி

இந்து சாம்பவர் சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்னுங் கருத்தோடு சய ஆண்டு தைத்திங்கள் முதனாள் (14—1—1955) தென்னிந்திய சாம்பவர் சங்கம் என்னும் பெயரோடு ஒரு சங்கத்தை நிறுவினார். அதற்கு இருபத்தைந்து கிளைகள் ஏற்படுத்தி நாஞ்சில் நாட்டில் உள்ள நூற்றைம்பது சேரிகளிலும் பணியாற்றுதற்கு ஏற்பாடு செய்தார். பிறசமயத்தினரால் அவர்கட்கு ஏற்படுந் துன்பங்களைத் துடைப்பதற்கு வழிதேடினார். அவர்கள் கல்வியில் முன்னேறுதற்கு அரசினரும் அறநிலையங்களும் பொருளுதவி யளிப்பதற்கு வகை செய்தார். பல சாம்பவர்களைச் சமயச் சொற்பொழிவாளர்களாக உருவாக்கினார். அச் சங்கத்தால் இன்றும் சாம்பவர்கள் பாதுகாக்கப் பெற்று வருகின்றனர். அறநிலையத்தார்களுடைய பொருளுதவியோடு அநாதை இல்லம் ஒன்றைத் தொடங்கினார். அங்கு இருபது ஏழை மாணவ மாணவிகள் சமயக் கல்வியும் சமூகக் கல்வியும் உணவு, உடை, இருக்கை முதலிய வசதிகளும் பெறலாயினர்.

### மதமாற்றத் திருப்பணி

இவருடைய சமயப் பணியின் முடியாக விளங்குவது மதமாற்றத் திருப்பணியாகும். ஆங்கில ஆட்சியின் துணையைக் கொண்டு அந்நாளில் கிறித்துவமதத் தலைவர்கள் எண்ணற்ற இந்து மக்களைப் பலவகைச் சூழ்ச்சிகளால் கிறித்துவ மதத்தில் சேர்த்துவிட்டனர். அம் மதத்தில் வகையறியாமல் மாட்டிக்கொண்ட மக்கள் பெரிதும் உள்ளம் வருந்தியிருந்தனர். இதனைக் கண்டு

மனம் வருந்திய இவர் தக்கவாறு ஏற்பாடுகள் செய்து தம்முடைய முன்னைய மதத்திற்குத் திரும்பச் செய்தார். இவருடைய இருபத்தைந்தாண்டுச் சமய வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான மக்களைத் தம் பழைய மதத்திற்கே திரும்பச் செய்தது செயற்கரிய அரும் பெருஞ் செயலாகும்.

### வடக்கன் குளத்தில் திருத்தொண்டு

திருநெல்வேலி மாவட்டம் நான்கு நேரி சிறுவட்டத்தில் உள்ள வடக்கன் குளம் ஒரு பேரூராகும். அவ்வூரில் வாழ்ந்து வந்தவர்கள் அனைவருமே கத்தோலிக்கக் கிறித்துவர்களாவர். இவ்வூரில் கிறித்துவக் கோவில் பெரும் பொருட் செலவிற் கட்டப்பட்டது. கத்தோலிக்கரால் அவ்வூர் தென்னிந்திய உரோமாபுரி என்று வழங்கப்பட்டது. அவ்வூரில் இந்துக்கள் எவரேனும் சமயக்குறிகளுடன் சென்றால் அங்குள்ள கிறித்துவர்கள் அவர்களை இகழ்ந்தும் கண்டித்துந் தண்டித்துந் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். வெளியூர் இந்துக்கள் எவரேனும் வேலையின் காரணமாக அவ்வூர்க்குச் சென்றாலும் அவர்கள் தங்குவதற்கு இடங் கிடைக்காது.

வடக்கன்குளக் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் தம்முடைய மதகுருமார்க்கு அடங்கி அவர்களிட்ட கட்டளையை மீறாமல் வாழ்ந்து கொண்டிருந்தனர். வடக்கன்குளத்து மிடுக்கான நிலைமை அறிஞர்கட்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்துக் கொண்டிருந்தது. அவர்கள் இந்து சமயக் கோட்பாடுகளைச் சிந்திக்கலாயினர். பிறவூர்களில் நிகழ்ந்து வந்த ஆறுமுக நாவலருடைய சொற்பொழிவு அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தது. இந்து சமயக் கொள்கைகள் கிறித்து சமயக் கொள்கைகளினும் மேம்பட்டிருத்தலை அவர்கள் நன்குணர்ந்தனர். இந்து மதம் விஞ்ஞானத்திற்குப் பொருந்திய முறையில் அமைந்திருத்தலையும் அதன் நுணுகிய தத்துவங்கள்

இறைவனை அடைவதற்கு உகந்தனவாக இருத்தலையும் நுண்ணறிவால் உணர்ந்தனர். தாய் மதத்துடன் சேர விரும்பினர். தங்களுடைய விருப்பத்தை இவருக்குத் தெரியப் படுத்திச் சொற்பொழிவாற்றுமாறு வடக்கன் குளத்துக்கு அழைத்துச் சென்றனர்.

முன்னாளில் பாண்டி நாட்டுமக்கள் சைவம் விட்டுச் சமண சமயம் சார்ந்து அறியாமையிருளில் மூழ்கிக் கிடந்த காலத்தில் சமண விருளையகற்றுதற்கு மதுரையை நோக்கிப் புறப்பட்ட திருஞான சம்பந்தக் கதிரவனைப் போன்று இவர் வடக்கன்குளம் நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது இவருடைய எண்ணம் "அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்சவருவது மில்லை" என்பதாக இருந்தது. இந்துக்கள் சமயக்குறிகள் அணிந்து செல்ல அஞ்சும் வடக்கன் குளத்தில் 21-9-1951 இல் ஆயிரக்கணக்கான கிறித்துவர் நடுவில் இவர் சொற்பொழிவு செய்யலானார். இவரை அடித்துத் துரத்துவதற்காகக் குழுமியிருந்த கூட்டம் சொற்பொழிவைக் கேட்டு அமைதிபெறலாயிற்று. இவருடைய சொற்பொழிவு வடக்கன்குள மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியது. அன்றே பலர் இவரிடம் தீக்கை பெற்று இந்துக்களாயினர். அதனைத் தொடர்ந்து பல முறை வடக்கன் குளஞ்சென்று சொற்பொழிவாற்றியும் மக்களைத் தாய்மதத்திற் சேர்த்தும் வந்தனர். 27-4-1952 ஆம் ஆண்டில் அவ்வூர்க் கிறித்துவக் கோயிலிற் கொடியேற்றும் உரிமை பெற்றிருந்த மரியந்தோனி நாடார் என்னும் பெரியவர் இவரிடந் தீக்கைபெற்று இந்துவாகிச் சிவப்போற்றி நாடார் என்று பெயர் பெற்றார். இதனையறிந்து மகிழ்ந்த மக்கள் இவரை யானைமேல் ஏற்றி ஊர்வலஞ் செய்வித்தனர். இதனைக் கண்டு வெகுண்டெழுந்தனர் எஞ்சிய கிறித்துவர். ஆயினும் அவர்களுடைய எதிர்ப்பு எத்தகைய பலனையும் அளிக்கவில்லை.

### அதிசய விநாயகர் கோவில்

அவ்வூரில் இந்துவான மக்களுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டுமென்று இவர் எண்ணினர். தம் கருத்தைச் சென்னை மதுரை கொழும்பு முதலிய இடங்களுக்குத் தெரிவித்தார். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர் உதவி செய்ய முன்வந்தார். சென்னை ஸ்ரீமகள் கம்பெனியாரும் கொழும்பு கலைமகள் கம்பெனி யாரும் உதவி செய்ய முன்வந்தனர். இவ்வுதவிகளைப் பயன்படுத்தி வடக்கன் குளத்தில் இந்துவான சிவமணி நாடார் என்பவர் மூலமாக மூன்று ஏக்கர் பரப்புள்ள இடம் வாங்கப்பட்டுத் திருக்கோவில் திருப் பணி தொடங்கப் பெற்றது. தொடங்கப்பட்ட அன்றே அவ்வூராட்சி மன்றத்தலைவர் அந்தோனி முத்துச்சாமி என்பவர் அழகர் சாமிநாதன் என்னும் பெயரோடு இந்துவானுர். மேலும் பலர் தொடர்ந்து இந்துக்களாயினர். தெய்வ அருளாலும் அருள் வழி நின்ற பெரியார்கள் பலருடைய முயற்சியாலும் வடக்கன் குளத்தில் அதிசய விநாயகர் திருக்கோயில் உருப்பெற்று 5-5-1955 வியாழக்கிழமை பகல் பதினொரு மணிக்குக் குடமுழுக்கு விழா இனிது நடைபெற்றது. மதுரையாதீன இளவரசுத் தம்பிரான் சோமசுந்தர சுவாமிகள் அன்று இரவு எழுந்தருளிச் சிறப்பித்தனர். பலர் அன்று இந்துக்களாயினர். பிறகு அவ்வூர் மக்களின் நன் முயற்சியினல் அம்பாள் கோயிலொன்றும் ஆறுமுகன் கோயிலொன்றுங் கட்டி முடிக்கப் பெற்றது. இவருடைய இத்தகைய தொண்டு நெல்லை மாவட்ட நாசரத் பகுதி களிலும் கன்னியாகுமரி மாவட்ட இடிந்தகரை என்ற இடத்திலும் நிகழ்ந்தது. இரண்டு இடங்களிலும் ஆறு முகக் கடவுள் திருக்கோயில்கள் எழும்பியுள்ளன.

### தொண்டன் திங்கள் வெளியீடு

சமயத் தொண்டாற்றுதற்குத் தக்கதொரு வெளியீடு இன்றியமையாதது எனக் கண்டார். தொண்டன் என்ற

திங்கள் வெளியீட்டைத் தொடங்கினர். அதில் சமயக் கட்டுரைகள், சமயப்பணிகள், சமய ஐயவினக்கட்கு விடைகள், சமய இன்னிசைப்பாக்கள் முதலியவைகளைப் பேரறிஞர்களைக் கொண்டு எழுதச் செய்தார். தாமும் பல அரிய கட்டுரைகளை எழுதினர். சமய ஐயவினக்கட்கு விடைகூறு முகத்தால் இந்துமத பாலபாடம் என்னும் நூல் ஒன்றைக் காலத்திற்கேற்ப எழுதித் தமிழிலும் மலையாளத்திலும் வெளியிட்டார். 'இந்துமத இணைப்பு' என்னும் பெயரில் இந்துமதத்தின் பலவேறு கொள்கைகளையும் இணைத்து நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். இந்நூல் சென்னை மாநில அறநிலையத்தார் நடத்தும் சமயத் தேர்வுகளுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## பட்டம், பரிசு, பாராட்டு

ஆறுமுகம் பிள்ளையவர்களுடைய அரும் பணியைக் கண்டு வியந்த தூத்துக்குடி சைவசித்தாந்த சபை "பண்டித பூடணம்" என்று பட்டமளித்துப் பாராட்டியது. திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர் தவத்திரு காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமியவர்கள் சென்னை மாநிலத்தில் சிறந்த சமயச் சொற்பொழிவாளருக்கென ஏற்படுத்தியிருந்த பரிசு ரூபா ஆயிரத்தையும் முதன் முறையாக இவருக்கு வழங்கியருளினர்கள். சமயப் பேரறிஞர்கள் 1945 ஆம் ஆண்டு சூன் திங்கள் நான்காம் நாள் தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் கூடி "நாவலர்" என்னும் பட்டத்தை வழங்கி வாழ்த்தினர்கள்.

திருவாவடுதுறையாதீனத்து இருபதாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த தவத்திரு அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளவர்கள் இவர்க்கு ஆதீனமகா வித்துவான் என்னுஞ் சிறப்பையளித்துப் பாராட்டினர்கள். தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் தவத்திரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் 'பரசமய கோளரி' என்னுஞ் சிறப்புப்

பெயரை வழங்கிப் பாராட்டியருளினர். இவ்வாறு இவருக்குப் பலவகையான பட்டங்களும் பாராட்டுக்களுங் குவிந்தன.

மணிவிழா

ஆறுமுக நாவலருடைய மணிவிழா 1955ஆம் ஆண்டு மேத்திங்கள் இருபத்தைந்தாம் நாள் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்திற் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தமிழகத்தில் உள்ள சமயத் தலைவர்கள், பேரறிஞர்கள், புலவர்கள், புரவலர்கள் முதலிய பல வகையினருங் கலந்து சிறப்பித்தனர். பொன்னுடை போர்த்தியதன்றிப் பூமாலையும் பாமாலையும் சாத்தி வாழ்த்தினர். பொன்னும் மணியுங் காணிக்கையாகச் செலுத்திப் போற்றினர். அப்போது நாகர் கோவில் இந்து கல்லூரிப் பேராசிரியர் புலவர் தாணு என்பவர்,

"செந்தமிழ்த்தாய் உளமகிழச் சிறுமை நீங்கச்
　　சீரியசொல் லேருழவர் செழுமை தாங்கச்
சுந்தரநீற் றொளிபெருகச் சைவம் ஓங்கச்
　　சுகம்பெருக அவர்அறுபா னுண்டு செந்நிற்
கந்தனருள் மேவிமன மொழியால் மெய்யால்
　　களைக்காமல் சளைக்காமல் திருத்தொண் டாற்றி
அந்தமிலாப் புகழெய்தி விழாக்காண் இன்னூர்
　　அவர்வாழ்க அவர்கிளைகள் வாழ்க வாழ்க"

என்னுஞ் செய்யுளைப் பாடி வாழ்த்தினர்.

**வியத்தகு செயல்கள்**

ஆறுமுக நாவலரவர்கள் தெய்வத் திருப்பணியில் ஈடுபட்டிருந்தபடியால் இவரிடம் சில வியத்தகு நிகழ்ச்சிகள் விளங்கலாயின. தெய்வநெறியைக் கடைப்பிடித்து நிற்பாரிடையே இத்தகைய புதுமைகள் நிகழ்வது இயற்கைதான்.

மதுரையில் இவர் சொற்பொழிவு செய்து கொண்டிருந்த காலத்தில் ஒருமுறை செட்டிநாட்டில் உள்ள வலம்புரி என்னும் ஊருக்குப் போகவேண்டிய வேலை ஏற்பட்டது. காலை நான்கு மணிக்குப் புறப்பட்டுப் போகவேண்டும் என்னும் எண்ணத்தோடு அறுபத்து மூவர் மடத்தில் படுத்துறங்கினர். அயர்ந்து தூங்கிய படியால் எழவேண்டிய நேரத்தில் எழவில்லை. சிறு குழந்தையொன்று குதித்தோடி வந்து எழுப்ப எழுந்தார். அக் குழந்தையைத் தம்முடைய மகள் மீனாட்சி என்று எண்ணினர். அக்குழந்தையைப் "பார்த்து நீ இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டார். அக்குழந்தை, "நான் மதுரை மீனாட்சி, இங்கேதான் இருக்கிறேன், நீ செட்டி நாட்டுக்குப் போய்வா" என்று கூறி மறைந்தது. இவர் அதனைக் கேட்டுப் பேரானந்தத்தில் திளைத்திருக்கும் போது தம்மைச் செட்டிநாட்டிற்கு அழைத்துச் செல்வதற்குப் பேருந்து வந்து காத்திருத்தலையும் உணர்ந்தார். எல்லாந் தெய்வத் திருவருளே என்று மகிழ்ந்தார்.

ஒருசமயம் நாவலர் திருச்செந்தூரிற் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்குக் கேட்டுக்கொண்டிருந்த அரிகேசவ நல்லூர்ச் சுப்பிரமணிய பிள்ளை என்னும் இளைஞரைப் பாம்பு கடித்து விட்டது. அவர் நஞ்சினல் மயங்கி வீழ்ந்தார். அப்பொழுது மருத்துவத்திற்கு வேறு வழி தோன்றவில்லை. நாவலர் தேவாரம் பாடித் திருநீறு வழங்கினர். அவ்வளவில் அவ்விளைஞர் நஞ்சு இறங்கிக் குணமடைந்தார். இந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் மிகுந்த வியப்படைந்தார்கள்.

சேலம் மாவட்டம் பாண்டமங்கலத்தில் கந்தர்சட்டி விழா நடத்திக்கொண்டிருந்த சோம சுந்தரம் பிள்ளையென்பவர் தமக்குப் பிள்ளையில்லாத குறையை நாவலரிடங் கூறி முறையிட்டுக்கொண்டார். நாவலர் அடுத்த கந்த சட்டித் திருவிழாவுக்குள் குழந்தை பிறக்கும்

என்று கூறினர். அவ்வாறே அவருக்கு அடுத்த கந்த சட்டிக்குள் ஆண் மகப்பேறுண்டாகியது.

தேவகோட்டை பாலகவி திரு வே. வயிநாகரம் இராமநாதன் செட்டியார் தம் மனைவியோடு கன்னியாகுமரிக்குச் சென்றார். பிறகு நாவலரோடு வேளி மலைக் குமரனை வழிபடுவதற்குச் சென்றார். ஆறுமுக நாவலருஞ் செட்டியாரோடு சென்றார். செட்டியார் மனைவி தமது நகைகளைக் கழற்றிப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டுப் பெட்டியைத் தாம் வந்த வாடகைக் காரில் வைத்துவிட்டு நீராடச்சென்றார். செட்டியார்மனைவி நகைகளைப் பெட்டியில் வைத்துக் காரில் வைத்துவிட்டு நீராடச்சென்ற செய்தி நாவலருக்குத் தெரியாது. நீராடிக்கொண்டிருக்கும்பொழுது செட்டியாரைப் பார்த்து, "வண்டியில் ஏதேனும் பொருட்களை வைத்துவிட்டு வந்திருக்கிறீர்களா? அப்படி வைத்துவிட்டு வந்திருந்தால் உடனே சென்று பாருங்கள்" என்று கூறினர். உடனே சென்று பார்க்கக் கார்துடைப்பவன் நகைகளோடு ஓடுவதற்குத் தயாராக இருப்பதைக்கண்டு அவனைப் பிடித்து நகைகளைக் கைப்பற்றினர்கள். களவு போதலைத் தமக்குணர்த்திய திருவருளை எண்ணி எண்ணி நாவலர் மனமுருகினர்.

ஈழநாட்டுக்குப்போய்க் கொழும்பிற் சொற்பொழிவு செய்து கொண்டிருந்த காலத்தில் கதிர்காமம் போய்க் கந்தக் கடவுளை வணங்க எண்ணினர். பல அன்பர்களோடு கதிர்காமம் போய்ச்சேர்ந்தார். கதிர் காமக் கோயிலின் நிலையும் அதிற் கட்டித் தொங்க விட்டிருக்கும் திரைகளின் மறைப்பும் பூசை செய்பவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளும் அவர்கள் மேற்கொண்ட பூசை முறைகளும் நாவலருக்குச் சிறப்பாகத் தோன்றவில்லை. கதிர்காமத்தைப் பற்றித் தாம் நூலிற் படித்திருந்த அளவுக்குச் சிறப்பாகக் காணப்படவில்லை யென்று எண்ணினர். தம்முடைய எண்ணத்தை உடன்

வந்தவர்களிடம் வெளிப்படையாகவுங் கூறினர். தங்குமிடஞ்சென்று உணவருந்திவிட்டு உறங்கினர். உறங்கும்போது கனவில் ஒரு பெரியவர் தோன்றினர். அவர் வெள்ளையாடை அணிந்திருந்தார். அவர் நாவலர் முன் தோன்றி, "நீ கதிர்காமத்துக்கு வந்தும் கந்தக் கடவுளை நன்ருக வணங்கவில்லை; என்னேடு வா நான் நன்ருகக் காட்டுகிறேன்" என்று கூறி அழைத்துக் கொண்டு சென்ருர். கோயில் பக்கத்திலுள்ள ஓர் ஆல மரம் வரை அழைத்துச்சென்று, "நீ என்னைப் பிடித்துக் கொள். நீயும் என்னேடு மேலே வரலாம்" என்று கூறிப் பிடித்துக்கொள்ளச் செய்து மேலுலகத்திற்குச் சென்ருர். பெரியவர் நாவலர்க்குக் கந்தலோகத்தைக் காட்டினர். அங்கு முருகப்பெருமானுக்கு நடைபெறும் வழிபாடுகளையுங் காணச் செய்தார். இவ்வரிய காட்சியை நாவலர் கண்குளிரக் கண்டு கை கூப்பித்தொழுதார். விழுந்து வணங்கினர். எழுந்து நின்று பலவகைப் போற்றிப் பாடல்களைப் பாடினர். பெரியவர், "நேரமாகி விட்டது போகலாம்" என்ருர். நாவலர் அப்பெரியவரோடு ஆலமரம் இருக்குமிடத்திற்குத் திரும்பிவந்தார். கோயிலுக்குட் சென்று மேலே கந்தலோகத்தில் கண்ட காட்சிகளை அவ்வாறே கதிர்காமக் கோயிலிலும் கண்டு வியந்து வணங்கி நின்ருர். பெரியவர் நாவலரைப் பார்த்து, அங்கும் இங்கும் கந்தன் கருணை ஒரே தன்மையில் இருப்பதை உணர்த்தி வெளியே அழைத்துக்கொண்டுபோய் மறைந்துவிட்டார்.

நாவலர் திடீரென்று உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார். தாம் கனவிற் கண்ட அரிய காட்சியை அப்பொழுதே தம்மோடு வந்துள்ளவர்களுக்குக் கூறினர். அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். மறுநாட் காலையில் மாணிக்கக் கங்கையில் நீராடிக் கதிர்காமப் பெருமானின் கழல் வணங்கினர். கந்தப்பெருமானுடைய வியத்தகு திருவருளைப் பாராட்டிப் பரவசமடைந்தார். தற்போதமிழந்து போற்றித் தண்ணருள் பெற்ருர்.

## எதிர்காலத் திட்டங்கள்

இந்து சமயம் இந்திய நாட்டில் மேலுந் தளர்ச்சி யடையாமல் வளர்ச்சிபெறப் பல திட்டங்களைத் தீட்டலானார். இந்துக் கோவில்களிலும் பிற அறநிலையங்களிலும் ஆதீனங்களிலும் அவைகளுக்கேற்ற செலவு போக எஞ்சிய பணத்தை ஒருங்கு திரட்டி அந்நிதியைக் கொண்டு காலத்திற்கேற்றவாறு சமயப் பணிகள் புரிதல் வேண்டும். தமிழகத்துக்கென்று ஓர் இந்து சமயக் கல்லூரி நிறுவி அதில் ஆகம நூல்கள் தோத்திர நூல்கள் முதலியவற்றைக் கற்பிக்கத் தனித் தனிப்பகுதிகள் வேண்டும்.

ஆகமப் பகுதியில் அருச்சகர் பயிற்சி நடைபெறுதல் வேண்டும். அதில் அனுட்டானவிதி முதலிய எல்லாக் கிரியா பாகங்களையும் அவற்றை ஆற்ற வேண்டிய முறைகளையும் விளக்க வேண்டும். கோவில், திருவிழாக்கள், மூர்த்திகள் இவற்றின் தத்துவங்கள், சமயச் சடங்குகள் நடத்தும் முறைகள், தீக்கைமுறைகள் ஆகியவைகளையும் அவர்கள் கற்றல் வேண்டும். இவற்றில் தேர்ச்சி பெற்றவர்களே கோவில் அருச்சகர்களாக நியமனம் பெறுதல் வேண்டும். இவர்கள் கோவிற் பூசனைகளோடு மக்களுக்கான சமயச் சடங்குகளையுஞ் செய்தல் வேண்டும். மற்றும் தீக்கை செய்தல், பிற மதத்தாரைத் தீக்கை செய்து தம் சமயத்திற் சேர்த்தல் ஆகிய திருப்பணிகளையுஞ் செய்தல் வேண்டும்.

சாத்திர தோத்திர வகுப்புக்களில் வேதம், உபநிடதம், சைவ சாத்திரங்கள், திருமுறை, திவ்ய பிரபந்தம், புராணங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதோடு சொற்பொழிவாளர்களையும் உருவாக்குதல் வேண்டும். மேலும் கோயில் நிருவாக வகுப்பு ஒன்று அமைத்துக், கோவில் துப்புரவு பாதுகாப்பு முதலியவற்றைக் கற்பித்து அதில் தேறியவர்கட்கே அறநிலையப் பதவி கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு திருக்கோவிலிலும்

சமய வகுப்பு நடத்தப் பெறுதல் வேண்டும். சமயச் சொற்பொழிவாளர் சமயச் சடங்கு செய்யும் அருச்சகர் ஆகியோர் அமர்த்தப்படுதல் வேண்டும். இவர்கள் மக்களுக்குச் சமயத் தொண்டாற்ற வேண்டும். மற்றும் தேவையான அநாதை விடுதிகள், சமூகப் பள்ளிகள், மருத்துவ விடுதிகள் ஆகியவைகளை அமைத்தல் வேண்டும்.

சமய அறிவற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளில் இவ்வுழைப்பு மிகுதியாக நிகழ்தல் வேண்டும். பிற மதத்தினர் இந்துக்களாக விரும்பினால் அவர்களிடம் எத்தகைய ஊதியமும் பெருமல் இந்துக்களாக்கி அவர்கள் வழிபாட்டிற்கும் வாழ்க்கைக்கும் வழிசெய்து கொடுத்தல் வேண்டும். இவ்வாறு சமயத் தொண்டுகள் நிகழ்ந்தால் இந்து சமயத்தின் இன்றைய தளர்ச்சி நீங்கிப் பெருமையெய்துமென்பது இவருடைய திட்டம். இதனை இவர் பல கூட்டங்களிலும் அறநிலைய ஆணையர்களிடமும் ஆதீனத் தலைவர்களிடமும் அமைச்சர்களிடமும் வற்புறுத்தி வந்தார்.

### இந்து மதப் பரப்புக் கல்லூரி

இவருடைய அரிய முயற்சியால் ககூசச ஆம் ஆண்டில் சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகச் சார்பில் நெல்லையில் இந்துமதப் பரப்புக் கல்லூரி நிறுவப்பெற்றது. அதற்குச் செயலாளராக இவர் இருந்து திறமையாகப் பணியாற்றினர். பிறகு மதுரை, திருப் பரங்குன்றம், மயிலை, பழநி, ஆகிய இடங்களில் தொடங் கப்பெற்ற பயிற்சிக் கல்லூரிகளிலும் இயக்குநராக இருந்து சமயத்தைப் பரப்புவதற் கேற்ற சமயச் சொற் பொழிவாளர்களை உருவாக்கினர்.

### தெய்வீகப் பேரவை

இவர் தம்முடைய எழுபதாவதாண்டு நிறைவு விழாவின்போது தம்முடைய உறைவிடத்திலேயே ஒரு

பெரிய மாநாட்டைக் கூட்டினர். அறநிலைய ஆணையர்கள், ஆதீனப் பிரதிநிதிகள் ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். அம்மாநாட்டிலே இவர் தம்முடைய கருத்தை எடுத்துரைத்தார். இப்பணியே இவருடைய இறுதிப்பணியாகும். இதன் பயனாகவே தமிழ்நாடு இந்து சமயத் தெய்வீகப் பேரவை தோற்றுவிக்கப்பட்டு அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினரால் பேணப்பட்டு ஓரளவு செயலாற்றி வருகிறது.

**இறுதி**

இவ்விருபதாம் நூற்றுண்டில் இந்து மத வளர்ச்சிக்கு இவரைப்போல் அருந்தொண்டு புரிந்தவர்கள் வேறு எவரும் இலர். இங்கொருவரும் அங்கொருவருமாக இப்பொழுது சிலர் சமயவளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுடைய ஈடுபாட்டுக்கு இவருடைய அரும்பெரும் உழைப்பே காரணமாகும். இந்து மதப்பரப்பு நிலையமாக, நடமாடுங் கலைக்களஞ்சியமாகச் சைவ வைணவ சமரச ஞானியாகத் தண்டமிழ் மாரிபெய்யுந் தனிப்பெருங் கொண்டலாகச் சமயப் பாதுகாவலராக, அநாதைகட்கோர் தருமகருத்தராக, அடியார்கள் வழி பற்றிய அடியாராக விளங்கிய இப்பெரியார் தம்முடைய எழுபத்து நான்காவது ஆண்டில் ௧௯௬௮ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்தேழாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்குத் தில்லைத் திருக்கூத்தன் திருவடியை அடைந்தார்.

**பரகதி நாள் முதலியவை குறித்துப் பாடியன**

* "**கீலக வாண்டு** ஊளர்த்தும் புரட்டாசி
மேலாம் பதினொன்று வெள்ளிநாள்—மாலில்

---

* இச் செய்யுள்களையும் வரலாற்றையும் எழுதியனுப்பியவர் கன்னியாகுமரி மாவட்டம் கணபதிபுரம் தமிழாசிரியர் நிருநெறிச் செம்மல் புலவர் திரு சி. குமரேசபிள்ளை அவர்களாவர்.

குருமணியாம் நாவலர் கூத்தனுர் ஆடுந்
திருவடியிற் சேர்ந்த தினம்."

"இந்து மதம்வளர ஏற்றமிகு திட்டங்கள்
சந்ததம் தந்துவந்த தக்கோனைச்—செந்தமிழ்க்
கொண்டலைச் சைவத்தின் கோமானைக் கண்குளிரக்
கண்டிடுமோ மேல்வைய கம்."

"துறைசைமா வித்துவானுய்த் தோன்றியே நாட்டில்
இறைபணி யாற்றியநல் லேறே—கறைமிடற்றோன்
பொன்னும்மம் பூசித்த புண்ணியனே பூதலத்துன்
நன்னமம் வாழ்கவே நன்கு."

---

## சுவ. ரா. பஞ்சநதம் பிள்ளை

### பிறப்பு

தமிழுக்கும் சமயத்துக்கும் சிறந்த தொண்டாற்றி வந்தவர்களில் ஒருவராகிய திரிசிரபுரம் பஞ்சநதம் பிள்ளையவர்கள் திரிசிரபுரத்தில் ஆங்கில ஆண்டு 1893 ஏப்ரல் முதல் தேதி யன்று பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் இராசரத்தினம் பிள்ளை; தாயார் பெயர் காந்திமதியம்மையார். பெற்றோர்கள் இருவரும் இறைவனிடம் பேரன்பு பூண்டவர்கள்.

### கல்வி

ஐந்தாம் ஆண்டிலேயே கல்வி கற்கத் தொடங்கிய இவர் தொடக்கக் கல்வியை முடித்தபிறகு திருச்சி அர்ச் சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாவது பாரம் வரையில் கல்வி கற்றார். ஆங்கிலப்படிப்பில் அதிகமாகக் கருத்தைச் செலுத்தி ஆங்கிலக் கல்வியை நன்கு கற்றார். அதில் ஓரளவு தேர்ச்சி பெற்றார். ஆங்கிலக் கல்வியில் கருத்தைச் செலுத்தியதுபோல் தமிழ்க் கல்வியிலும் மிகுதியாகக் கருத்தைச் செலுத்தினார். தாங்கற்ற கல்விச் சாலையில் தமிழாசிரியராகவிருந்த அ. சிவப்பிரகாசம் பிள்ளை என்பவரிடத்திலும், முதலில் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியிலும் பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொண்டாற்றிய ந. மு. வேங்கடசாமி நாட்டாரிடத்திலும், அமிர்தம் சுந்தரநாத பிள்ளை என்பவரிடத்திலும் தனிப்பட்ட முறையில் தமிழ்நூல்கள் பலவற்றையும் பாடங்கேட்டுத் தம்முடைய தமிழறிவைப் பெருக்கிக் கொண்டார்.

### அலுவலில் அமர்தல்

தமது கல்வியறிவு முற்றுப் பெருத நிலையில் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டிய கடமையை முன்னிட்டுத் திருச்சி மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் எழுத்துப்படிகள் தயாரிப்பவராக அமர்ந்து பணிபுரிய லானார். அலுவல் பார்த்துக் கொண்டிருக்குங் காலத்தில் ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் தாமே தமது சொந்த முயற்சியினாலும் முன்கூறிய தமிழறிஞர்களின் உதவி யாலும் முயன்று கற்றுத் தமிழறிவு ஓரளவு அமையப் பெற்றார்.

### தமிழாசிரியர்

தமிழறிவை நன்கு பெற்ற பிறகு தமிழாசிரியராகப் பணி புரிய வேண்டும் என்னும் விருப்பம் இவருக்குண்டா கியது. ந. மு. வேங்கடசாமி நாட்டார், அமிர்தம் சுந்தர நாத பிள்ளை ஆகிய அறிஞர்களுடைய முயற்சியினால் திருச்சி பிஷப்ஹீபர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரிய ராகப் பணிபுரியும் வாய்ப்பு இவருக்குண்டாகியது. இப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய பொழுது அப் பள்ளியைச் சேர்ந்த ஆங்கிலப் பாதிரிமார்களுக்குத் தமிழ் போதிப்பவராகவும் இருந்தார். மாணவர்கள் எளிதிற் புரிந்துகொள்ளும் வகையிற் போதிப்பதில் இவர் தனிச் சிறப்புடையவராக இருந்தார். இவருடைய போதனைத் திறனைக் குறித்துப் பாதிரிமார்களும் நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர். அப் பள்ளியில் தொடர்ந்து இருபத் தேழாண்டுகள் பணி செய்து ௧௯௪௯ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

### வேறு பள்ளியில் வேலை

ஓய்வு பெற்ற பிறகும் தமிழன்னை இவரை விடவில்லை. திருச்சி உறையூரில் உள்ள கிறித்துவப் பெண்பள்ளியில் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டு ௧௯௫௪ வரை பணிபுரிந்து

ஓய்வு பெற்றார். இரண்டாவது முறை ஓய்வு பெற்றும் வேலை இவரை விடவில்லை. திருச்சி சமால் முகமது கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றலானார்.

## சைவப் பணிகள்

மேற் கூறியவாறு தமிழாசிரியராகப் பணிபுரிந்த தன்றிச் சமய வளர்ச்சிக்கும் நல்ல பணிபுரிந்தார். சென்னை சைவ சித்தாந்த மகா சமாசம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருச்சி இராம கிருட்டிண சங்கம், சைவ சித்தாந்த சபை முதலியவைகளில் தொடர்பு கொண்டு பணிபுரிந்தார். திருச்சியில் தமிழாராய்ச்சிக் கழகத்தைத் தோற்றுவித்துப் பல ஆண்டுகள் பணியாற்றினார். இதன் மூலம் டாக்டர் உ. வே. சாமிநாதையர், மகிபாலன் பட்டிப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ரா. பி. சேதுப் பிள்ளை, கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் முதலியவர்களுடைய சொற்பெருக்குகளுக்குங் காரணமாகவிருந்தார்.

## மணிவிழா

௧௯௫௬ ஆம் ஆண்டில் இவருடைய மணிவிழா டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல பெரியோர்கள் இவருடைய நல்லியல்புகளையுஞ் சிறப்புக்களையும் பாராட்டிப் பேசிச் சிறப்புக்கள் செய்தார்கள்.

## திருக்கோயில் வரலாறுகள்

இந்து அறநிலையப் பாதுகாப்புக் குழுவினர் இவருடைய சேவையைப் பயன்படுத்தும் வகையில் சமயப் பரப்புநராகவும் (பிரசாரகர்) திருக்கோயில்களின் வரலாறுகளைச் சுருக்கமான முறையில் எழுதும்படியாகவும் பணித்தார்கள். அவ்வாறே இவரும் பெரும்பாலும் எல்லாத்

திருக்கோயில்களின் வரலாறுகளையும் எழுதினர். அவைகளெல்லாம் புத்தகவடிவமாக வெளியிடப் பெற்றன. திருக்கோயில்கள் பலவற்றின் வரலாறுகளை இவரைப் போல் எவரும் எழுதியதில்லை யென்பதை அனைவரும் நன்குணர்வர்.

### பல்வகைச் சிறப்புப் பெயர்கள்

இவருடைய தொண்டைப் பாராட்டிக் காஞ்சிக் காமகோடிப் பெரிய சுவாமிகளவர்கள் "ஆராய்ச்சி மணி" யென்னும் பட்டத்தையும், மதுரைத் திருஞானசம்பந்தராதீனத் தலைவரவர்கள் "புலவர் மாமணி" என்னும் பட்டத்தையும், திருமுருக கிருபாநந்த வாரியாரவர்கள் "வரலாற்றுச் செல்வர்" என்னும் பட்டத்தையும் வழங்கினர்கள்.

### அற்புதக் கனியும் ஆற்றுப்படையும்

கோயில் வரலாறுகள் சமயச் சொற்பொழிவுகள் ஆகியனவேயல்லாமல் வானொலி மூலமாகவும் பணி செய்திருக்கிறார். காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதியைப் பற்றியும் திருமுருகாற்றுப் படையைப் பற்றியும் வானொலியில் தொடர்ந்து பேசியிருக்கிறார். இவருடைய மணிவிழா வெளியீடாக மேற்படி நூல்களின் உரைகள் "அற்புதக்கனி" "திருமுருகாற்றுப் படைவிளக்கம்" என்னும் பெயருடன் வெளிவந்தன. சில ஆண்டுகளுக்குமுன் அற்புதக்கனி என்ற நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்புக்கு உபபாடமாக வைக்கப் பட்டது.

### தொடர்புகள்

இவர் தம்முடைய வாழ்நாளில் பல பெரியார்களோடு பழக்க முடையவராக இருந்தார். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள்,

திருப்பராய்த்துறைத் தபோவனத் தலைவர் தவத்திரு சித்பவாநந்த சுவாமிகள் முதலியவர்களாவர். அவர்களுடைய அன்பையும் தொடர்பையும் இவர் பெற்றிருந்தார். தமிழகப் புலவர் குழுவில் ஓர் உறுப்பினராகவும் இவர் சேர்க்கப் பெற்றிருந்தார்.

### நூல்கள்

இவரால் எழுதப்பெற்ற திருக்கோயில் வரலாற்று நூல்களைப்பற்றிய விவரப்பட்டியல் அகப்படவில்லை.

### இறுதி

சைவத்திற்குந் தமிழுக்கும் நல்ல தொண்டு செய்திருந்த இவர் தம்முடைய எழுபத்தாறுவது ஆண்டில் சென்னை மாநகரில் 1968ஆம் ஆண்டு சூன் திங்கள் பதின்மூன்றும் நாள் இரவு இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

## எ. கோவைகிழார் ம. இராமச்சந்திரன் செட்டியார்

### தோற்றம்

"நீடு வாழி நீடு வாழி
பீடுயர் தோன்றல் நீடு வாழி
கோவைமா நகரின் குலவுதெய் வப்பெயர்ப்
பாவை தன்னொடு மேவிய பண்பன்
மருதா சலப்பெயர் மருவிய பெருந்தகை
தருமகார் மூவருள் வருநடு நாயக
இராமச்சந் திரனென விராவிய புகழாய்
நல்லதே வாங்க நன்குல மணியே!
வல்லபல் கலைகளும் மாண்புறப் பயின்றாய்
பொதுநலச் சேவை புகழெனப் பூண்டாய்
கல்வித் துறையுஞ் சரிதத் துறைகளும்
நாட்டினர் நலம்பெறக் கூட்டிய பணியாய்
சைவமுந் தமிழுங் கைவரச் செய்வோய்
கோவைத் தமிழ்ச்சங் கத்திற் சுநிகநற்
சேவை புரியுஞ் செம்மால் நின்றன்
கொற்றம் வாழ்க குறிக்கோள் வாழ்க
மைந்தரு மனைவியு மொக்கலு மனமகிழ்த்
திந்திரச் செல்வத் தினிது வாழ்கநின்
அறுபதிற்றி யாண்டு நிறைவுறு மிந்நாள்
நின்னுளங் கருதிடும் நன்னல முற்றும்
நல்குக வென்று நயந்து
வெல்குக வடியிணை வேண்டினம் பெரிதே"

என்று சிவக்கவி மணி சுப்பிரமணிய முதலியார் அவர்களால் புகழ்ந்து பாராட்டப்பெற்ற ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் கொங்குவள நாட்டில் கோயம்புத்தூரில் மருதாசலஞ் செட்டியார் என்பவருக்கும் அவருடைய

வாழ்க்கைத் துணைவியாகிய கோனம்மாள் என்பவருக்கும் அருமைப் புதல்வராக 1888 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் முப்பதாம் நாளுக்குச் சரியான சர்வதாரியாண்டு கார்த்திகைத் திங்கள் பத்தொன்பதாம் நாள் வெள்ளிக் கிழமை சித்திரை நாளில் இத்தரையிற் பிறந்தார்.

கல்வி

ஆரும் ஆண்டில் இராமச்சந்திரர் தொடக்கப் பள்ளியிற் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். பள்ளிப் படிப்பில் மிகுந்த திறமையுடையவராக விளங்கியிருந்தபடியால் இரண்டாம் வகுப்பில் இருந்து நான்காம் வகுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். 1898ஆம் ஆண்டில் தொடக்கத் தேர்வில் ஆங்கிலத்தில் முதலாவதாகத் தேறினர். பிறகு முதல் பாரம் முதல் மூன்ரும் பாரம் வரையில் இலண்டன் மிஷனிலும் நான்காம் பாரம் முதல் ஆரும் பாரம் வரை கோயமுத்தூர்க் கல்லூரியிலும் படித்து 1906ஆம் ஆண்டில் மெட்ரிக் என்ற புகுமுகத் தேர்வில் தேறினர்.

அந்நாளில் குடும்பத்து வாணிகமுஞ் செல்வாக்கும் பெருகியிருந்தன. பொதுவாக இக்குடும்பத்தினர் ஊரை விட்டு வெளியே செல்வதில்லை. முதன் முதலாக 1902ஆம் ஆண்டில்தான் பவானி, திருச்செங்கோடு முதலிய இடங்களுக்கு இருப்புப்பாதை வழியாகப் பயணஞ் செய்தார்கள். பிறகு 1903ஆம் ஆண்டில் இரண்டு மூன்று திங்கள்வரை மதுரை, இராமேசுவரம் முதலிய இடங்களுக்குச் சென்ருர்கள். இப்பயணத்தினல் மற்றவர்களை விட இராமச்சந்திரர் மிகுந்த பயனடைந்தார். இராமேசுவரத்தில் இருந்தபொழுது கிழக்கிந்தியத் தீவு நாணயம் ஒன்று அகப்பட்டது. அதனைப் பாதுகாத்துவைத்ததோடு மேலும் பலவகையான நாணயங்கள் சேர்ப்பதை ஒரு விளையாட்டாகக் கொண்டார். 1904ஆம் ஆண்டில் கல்லூரியில் தமது வகுப்பில் இரண்டாவது மாணவராகத்

தேறியிருந்தார். விதிகளின்படி உதவி ஊதியம் கிடைக்க வேண்டியதாகவிருந்தது. ஆயினும் குடும்பச் செல்வாக்கையெண்ணி அது கொடுக்கப்படவில்லை.

### செய்யுளியற்றல்

அந்நாளிலேயே ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறு சிறு பாடல்கள் இயற்றும் பழக்கம் இவருக்குண்டாயிற்று. கணக்கில் மிகுந்த பயிற்சி பெற்றிருந்தார். 1907, 1908 ஆம் ஆண்டுகளில் சென்னைக்குச் சென்று பி.ஏ. வகுப்பில் மாநிலக் கல்லூரியிற் சேர்ந்து அதில் தேர்ச்சி யடைந்தார்.

### தமிழ் கற்றல்

கோவையில் புலவர் திருச்சிற்றம்பலம் பிள்ளை, சபாபதிப்பிள்ளை என்பவர்களிடமும், சென்னையில் உ. வே. சாமிநாதையர் அவர்களிடத்திலும் தமிழ்நூல்களைக் கற்றார். கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில், மறைமலையடிகள் வேதாசலம் பிள்ளை என்ற பெயரோடு கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தபொழுது அவருடைய தலைமையில் கந்தபுராணம் பற்றி ஒரு கட்டுரைப் பேச்சு நிகழ்த்தினார். பிறகு சட்டக் கல்லூரியில் படித்து 1912 ஆம் ஆண்டில் பி.எல். பட்டம் பெற்றார். இத்துடன் கல்லூரிப் படிப்பு முடிவுபெற்றது.

### திருமணம்

பி.ஏ. வகுப்பில் கல்விகற்றுக் கொண்டிருக்கையிலேயே 1907ஆம் ஆண்டில் அங்கண்ண செட்டியார் மகள் செல்லம்மாள் என்னும் பெண்மணியைத் திருமணஞ் செய்து கொண்டார். திருமணம் மிகுந்த சிறப்போடு நடைபெற்றது. மணமகள் மணப் பருவம் எய்துவதற்கு முன்னரே திருமணம் நடைபெற்றது. இராமச்சந்திரனார் தம்முடைய தொழிலில் ஈடுபட்ட பிறகுதான் மணமக்கள்

இல்லறம் நடத்தத் தொடங்கினர்கள். இதனல் திருமணம் கல்விக்கு இடையூருக இருக்கவில்லை.

### மக்கட்பணி

இராமச்சந்திரனர் பாடசாலைகளில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே சொற்பொழிவுகட்குப் போய்வரும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இவர் சமயக் கல்வி கற்றிருந்ததோடு சமூகப்பணியிலும் பயிற்சி பெற்ருர். வடமொழி, தெலுங்கு முதலியவைகளைத் தாமே கற்றுணர்ந்தார். சென்னையில் படித்துக்கொண்டிருக்கை யில் திருவல்லிக்கேணி கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் ஞாயிறுதோறும் சமூகசேவை வகுப்புகள் நடைபெற்று வந்தன. இவ்வகுப்புகளில் இவர் சேர்ந்து பயிற்சி பெற்றதோடு சமூகப் பணியிலும் ஈடுபட்டார். தம் தொழிலுக்குச் சென்ற பிறகு தங்குலத்துச் சிறுவர்கட்குப் பணிபுரிய வேண்டுமென்று எண்ணினர். ''தேவாங்கர் சிறுவர்சபை'' என்னும் பெயரோடு ஒரு சபையை அமைத்தார். அச்சபையின் செயலாளராக இருந்து கொண்டு வேலை செய்தார். அச்சபையில் பாடசாலை மாணவர்கள் சேர்ந்து மாலை நேரங்களில் வாசக சாலை களில் வாசிப்பதும் கிழமைக்கொருமுறை யாதாவதொரு பொருளைப் பற்றிப் பேசுவதும் நடைபெற்றன. திக்கற்ற பிள்ளைகட்கு உதவித் தொகை கொடுப்பதற்கு ஒருநிதியும் திரட்டப்பட்டது. அச்சபை இன்றுவரை நடைபெற்று வருகிறது.

### சிற்றூர்த் திருத்தொண்டு

இவர் தம்முடைய தொழிலிற் சேர்ந்த உடனேயே சிலரோடு சேர்ந்து கிராம ஊழியர் சங்கம் ஒன்றை நிறுவினர். இச்சங்கத்தினுடைய வேலை சிற்றூர்களுக்குச் சென்று ஐம்பெருங் குழுக்களை ஏற்படுத்துவதும் அவை களுக்கு நடப்பு விதிகளைக் கற்றுக் கொடுப்பதும்

உடனலத்தைப்பற்றிச் சொற்பொழிவுகள் செய்வதுமே அச்சங்கத்தினுடைய முதன்மையான நோக்கமாகும். இச்சங்க வேலைக்காக ஒரு காட்சிக் கருவியும் ஐநூறு ரூபா மதிப்பில் தருவிக்கப்பட்டது. அதனைக்கொண்டு சுகாதாரப்படங்கள் சிற்றூர் மக்களுக்குக் காட்டப்பட்டன. இப்பணியை இராமச்சந்திரனார் சிறப்பாகச் செய்தார். ஓய்வு நாட்களிலே மிதிவண்டியில் சென்றும் இப்பணியைச் செய்து வந்தார். கணபதி, சீரநாயக்கன் பாளையம், பன்றிமடை, ஒண்டிபுதூர் முதலிய இடங்களிலே பஞ்சாயத்து, கிராம சபை முதலியவைகள் ஏற்படுத்தப் பட்டன. இத்திருப்பணி செய்வதற்கு அரசினரும் உடன்பாடு வழங்கினார்கள். கிராமங்களில் பொருளாதாரக் கணக்குப் புள்ளிகள் தொகுக்கப்பட்டன. இப்பணியினால் சிற்றூர் மக்களுக்கு மிகுந்த நன்மையேற்பட்டது. இச்சங்கம் பத்தாண்டுகள் வரை நன்றாக வேலை செய்தது.

## தொழிலும் வாழ்க்கையும்

சட்டக் கல்வித் தேர்வில் தேர்ச்சியடைந்தவுடன் கோவையில் வழக்கறிஞராகத் தொழில்புரியத் தொடங்கினார். தொடக்கத்தில் கோவையில் ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞரிடம் சில திங்கள் வேலை பழகினார். அதனாலே மிகுந்த பயனடையவில்லை. பிறகு தாமாகவே தொழில் புரியத் தொடங்கினார். சிறிதுசிறிதாக வேலை கிடைத்தது. நாளடைவில் வேலை பெருகியது. மிகுதியாகப் பொருள் தேடவேண்டும் என்னும் எண்ணம் இவருக்குண்டாக வில்லை. இவருடைய கருத்து முழுவதும் மக்களுக்குப் பணிபுரிவதிலேயே பதிந்திருந்தது. இவர் எப்பொழுதும் மதிப்பான முறையிலேயே தொழில் நடத்திவந்த படியினால் வருவாய் குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது. தொழில் நடத்தத் தொடங்கிய காலம் முதல் மிகுந்த வசதியுடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். இவர் தம்முடைய முயற்சியினால் கிடைத்த பொருளைக் கொண்டு வாழ்க்கையை நடத்தி

ஞரேயல்லாமல் பெற்ருேர்களுடைய பொருளைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

தாம் மேற்கொண்ட வழக்கறிஞர் தொழில் தம்முடைய மனப்போக்கிற்கு ஏற்றதன்று என்று இவர் அடிக்கடி எண்ணினர். மற்றவர்களும் இவ்வாறே எண்ணினர்கள். ஒருமுறை ஆசிரியப் பயிற்சி முறைப் பாடசாலையின் தலைமையாசிரியர் இவருடைய சொற்பொழிவைக் கேட்டுவிட்டு, " இவர் வழக்கறிஞர் அல்லர் ; ஒரு போதகாசிரியர், தவறுதலாக வழக்கறிஞர் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிருர்'' என்று கூறினர்.

### மக்கட்பேறும் தந்தையார் மறைவும்

1915ஆம் ஆண்டில் இராமச்சந்திரனுருடைய தந்தையார் இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவருக்கு ஒரு மகளும் மகனுந் தோன்றினர்கள். நாளடைவில் குடும்பம் பெருகிக்கொண்டு வந்தது. ஆனல் இவருக்குக் குடும்பத் தொல்லை பெரிதாக இருக்கவில்லை.

### பல கழகங்களின் தொடர்பு

இளம் பருவத்திலேயே பல பொதுப்பணிகளில் ஈடுபட்ட இவர் தம்முடைய சிறிய தகப்பனரைப் பின்பற்றி நகர சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். பத்து ஆண்டுகள் சேவை செய்தார். 1918ஆம் ஆண்டில் நகர சபையின் துணைத் தலைவராக ஆனர். நகரசபையினரால் மாவட்டக் கல்விச் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு முறை துணைத்தலைவர் பதவியையும் நான்கு முறை தலைவர் பதவியையுந் தாங்கினர். மற்றும் மத்திய கல்விச் சங்கம், கலால் ஆலோசனைச் சங்கம், வைத்திய ஆலோசனைச் சங்கம், கோவை தாலுகா சங்கம் முதலியவற்றினும் பங்குகொண்டு பணியாற்றியுள்ளார். ஒரு

முறை மாவட்டச் சபையின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

1943, 1946 ஆகிய இரண்டு காலப் பகுதிகளில் பட்டதாரிகள் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுப் பல்கலைக் கழக உறுப்பினராக இருந்ததன்றி அக்கடமிக் கவுன்சிலிலும் உறுப்பினரானார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ் வளர்ச்சி ஆலோசகராக இருந்தார். கோவையிற் சிறப்பாக நடைபெற்று வந்த இலண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி பல இடையூறுகளால் நின்று போகும் நிலையை அடைந்தபொழுது அதன் ஆட்சிக் குழுவில் உறுப்பினராக இருந்து அதனை உயிர்ப்பித்தார். பல காலம் அதன் பொறுப்பினராகவும் பொருளாளராகவும் இருந்தார். தேவாங்க உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்குரிய அரிய முயற்சிகளை மேற்கொண்டார். அதன் ஆட்சிக் குழுவில் உறுப்பினராக இருந்தார். கோவைத் தமிழ்ச் சங்கத்தைச் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைவராக இருக்க இவர் செயலாளராக இருந்து நடத்தி வந்தார். சேக்கிழார் திருக்கூட்டத்திலும் இவருக்குப் பங்கு இருந்தது. சென்னைக் கையேட்டுப் பிரதிச் சாலை, தஞ்சை சரசுவதி மகால் புத்தகசாலை ஆகியவற்றிலும் இவர் உறுப்பினராக இருந்தார். கோவை அரசினர் கலைக்கல்லூரிப் பழைய மாணவர் கழகத்திலும் கோவை காஸ்மாபாலிடன் கிளப்பிலும் இறுதிவரையில் தலைவராக இருந்தார். இவையன்றிக் கூட்டுறவுச் சங்கம் முதலியவைகளினும் இடம் பெற்றிருந்தார். இவர் இடம் பெருத கல்விக் கழகமோ பொதுப்பணி மன்றமோ சமயச் சபையோ பொழுது போக்குக் கழகமோ, பொது மாநாடுகளோ இல்லையென்றே கூறலாம். எந்த ஒரு நிறுவனம் தொடங்க வேண்டுமென்ருலும் அல்லது மறைந்து போகக்கூடிய நிலையில் இருப்பதை நிலைநிறுத்த வேண்டுமென்ருலும் அதனுடைய பொறுப்பை இவரிடம் ஒப்படைப்பதென்பது அந்நாளில் வழக்கமாக இருந்தது. இவரும் தடை

சொல்லாமல் தம்மாலியன்ற உதவிகளையெல்லாம் செய்து வந்திருக்கிறார்.

## அரசியல் தொடர்பு

சென்னையிற் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில் கடற் கரையில் நடைபெற்ற தேசீய இயக்கக் கூட்டங்களுக்குச் சென்று வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். கோவையிலும் தேசிய சபை மாநாடு, பார்ப்பனரல்லாதார் மாநாடு முதலியவற்றிற் கலந்து கொண்டார். தேசீய இயக்கத்தின் முதன்மையான தலைவர்களுள் வ. உ. சி. போன்றவர்களோடும் இவருக்குப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. காந்தியடிகள், குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன், துணைத்தலைவர் சாகிர் உசேன் ஆகியவர்களை நேரிற்கண்டு உரையாடியிருக்கிறார்.

## குலப்பணி

தம் குலத்தவர் நெசவுத்தொழில் ஒன்றிலேயே நின்று அது தழைக்கும் பொழுது தழைத்தும் குன்றும் பொழுது குன்றியும் துன்புறுதலைக் கண்டார். அத் தொழிலை வளமுடையதாகச் செய்யவேண்டு மென்னும் எண்ணத்தோடு பல கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியும் மாநாடுகள் நடத்தியும் பணிபுரிந்தார். வெளிமாநிலங்களில் உள்ள தம் குலத்தவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பல மாநாடுகளில் கலந்து உழைத்திருக்கிறார். தங் குலத்தவரில் தம்மையொத்த ஒரு சிலரே உயர்படிப்புப் படித்திருப்பதை யறிந்தார். கல்வியில் எல்லோரும் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தேவாங்க சிறுவர் சபை, சாரதா பாடசாலை, தேவாங்க உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றைத் தொடங்கி அவைகள் நடைபெறுவதற்கு உழைத்தார். இப்பொழுது இக்குலத்தவர் பலர் உயர் கல்வி கற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர். தங்குலத்தவர் வாழ்கின்ற இடங்களுக்கெல்லாம் நேரிற்

சென்று பார்த்தார். அவர்களுக்குள்ள குறைகளை யறிந்து நீக்குதற்கு முயன்றார்.

### பொதுப்பணி

சென்னையிற் கல்வி கற்ற காலத்தில் சில பொதுச் சபைகளிற் சேர்ந்து மதுவிலக்குச் சொற்பொழிவு, சமூக திருத்தச் சொற்பொழிவு முதலியன செய்திருக்கிறார். கோவைப் பகுதியில் கிராம ஊழியர் சங்கத்திற் சேர்ந்து ஊர்ப் புறங்களில் நல்ல பணிபுரிந்தார்.

### சமயப்பணி

இவர் சமய நிலைப் பாதுகாப்புத் துறையில் ஆணையாளராக இருந்தபொழுது சமய நிலையங்களின் வருவாயில் ஒரு பகுதியைச் சமய வளர்ச்சிச் செலவுக்கென ஒதுக்க வேண்டுமென்றும், அதைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள், நூல் வெளியிடுதல், நூல் நிலையம் அமைத்தல் முதலியன செய்ய வேண்டுமென்றும் திட்டம் வகுத்தார். கோவில்களில் திருமுறையோதுதல், திருமுறைப் பதிகத்தைக் கல்லில் எழுதச் செய்தல் முதலிய பணிகளைச் செய்தார். பல புலவர்களைக் கொண்டு தல வரலாறுகள் முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியமுங் கிடைப்பதற்கு வகை செய்தார். சமயச் சொற்பொழிவாளர்கள் பலரை ஏற்படுத்தினர். திருகோவில்களில் நடைபெறுங் குடமுழுக்குகள் ஆகம முறைப்படி நடக்கவேண்டுமென்பதில் ஊக்கமுடையவராக இருந்தார். குடமுழுக்குகளை முன்னின்று நடத்துவதற்குச் சிவக் கவிமணி சுப்பிரமணிய முதலியார், ஈசான சிவாச்சாரியார் ஆகியவர்களை அனுப்பிவைப்பார். இவ்வாறு நடத்தப்பட்ட குடமுழுக்குகளுள் சிறந்தவை திருவாரூர், திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய தலங்களில் நடந்த குடமுழுக்குகளாம், இவைகளெல்லாம் இத்துறையில் இவருக்குமுன் எவருஞ் செய்யாதன. சமயச் சான்றோர்கள் இச்செயலைப் பெரிதும் வரவேற்றனர். ஓதுவார்களிடத்தில் இவருக்குத் தனியான அன்புண்டு. கோவில்

கட்கு வரும்பொழுதெல்லாம் ஓதுவார்களுடைய பாடல் களை ஊன்றிக் கேட்பார். அவர்களோடு அன்புடன் அளவளாவுவார். தமிழில் அருச்சனை செய்யும் முறையை யுந் தொடங்கினர். பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகும் குன்றக்குடி அடிகளுடன் சேர்ந்து சென்னை முதலமைச்சரைக் கண்டு தமிழ்நாடெங்கும் தமிழில் அருச்சனை செய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத் தினர். சேக்கிழார் திருக்கூட்டத்தில் ஓர் உறுப்பினராகிச் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்களுடன் கேரள நாட்டுத் திருவஞ்சைக் களத்தில் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனர் ஆகியவர்களுடைய குருபூசை நடை பெறுவதற்கு முயற்சிகள் செய்து வெற்றி பெற்றார். சைவசித்தாந்த சமாசத்தில் பங்கு கொண்டு பல பணிகள் செய்திருக்கிறார்.

### கல்விப்பணி

மாவட்டக் கல்விச் சங்கம், மத்திய கல்விச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப்பதவி தாங்கிய காலத்தில் தொடக்கக் கல்வி முறையைச் சீர்திருத்தியமைத்தார். அதிகமான பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்தார். ஆசிரியர்களுடைய பொருளாதாரத்தில் மிகுந்த கருத்துச் செலுத்தினர். அடிக்கடி ஆசிரியர் சங்கக் கூட்டங்களைக் கூட்டி ஆசிரியர்களின் நிலைமையை அறிந்து உயர்கல்வி அதிகாரிகளுக்கும் அமைச்சருக்குந் தெரியப்படுத்தினர். ஆசிரியர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்குப் பாடுபட்டார். பதவியில் இருந்து நீங்கிய பிறகு பல கல்விக் கூடங்களின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருந்து நடத்தி வந்தார். கோவை மாவட்ட நூலகக் குழுவின் தொடக்க காலத்தில் தலைவ ராக இருந்து சிறந்த முறையில் நூலகம் உருவாவ தற்கும் பல கிளைகள் தோன்றுவதற்கும் அரும்பாடு பட்டார். இதில் ஐந்தாண்டுக் காலந் தலைவராக இருந் தார்.

## தமிழ்ப்பணி

இவர் கல்லூரியிற் பயின்றது பௌதிகமும் சட்டமுமே என்றாலும் தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை பெற்றிருந்தார். உரைநடையாகவும் செய்யுளாகவும் பல நூல்களை இயற்றியுள்ளார். ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். பல பேரவைகளில் தமிழின் பெருமைகளை விளக்கிச் சொற் பொழிவுகள் செய்திருக்கிறார் தமிழ் நாட்டின் வரலாறு களையும் புலவர்களின் வரலாறுகளையும் கல்வெட்டின் துணைகொண்டு ஆராய்ந்து தெளிவு செய்திருக்கிறார்.

## தமிழ்க்கல்லூரி

தமிழகத் தமிழ்க் கல்லூரிகளுள் மயிலங்கல்லூரியும், தருமபுரங்கல்லூரியும் தோன்றுவதற்கு இவர் பெரிதும் உதவியாக இருந்தார். பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் இளையபட்டம் தவத்திரு இராமசாமியடிகள் தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்க விரும்பினார். இவரோடு தொடர்புகொண்டார். இவருக்கும் கொங்கு நாட்டில் ஒரு தமிழ்க்கல்லூரி தொடங்கவேண்டு மென்னும் எண்ணம் முன்னரே இருந்தது. ஆகவே இவர் இதுவே தகுந்த சமயம் என்று எண்ணினார். டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்களையும் திரு. நா. மகாலிங்கம் அவர்களையும் அணுகி இதுபற்றி உசாவினார். பிறகு சுப்பையகவுண்டர் என்பவரும் இதிற் கலந்துகொண்டார். சுப்பைய கவுண்டரும் கோவைகிழாரும் சாந்தலிங்க அடிகளா ருடைய திருமடத்தோடு முன்னரே தொடர்புடையவர்கள். பெரும் பொருள் திரட்டப்பட்டன. பேரூர்த் தமிழ்க் கல்லூரிக்கழகம் என்னும் பெயரோடு ஒரு கழகம் நிறுவப் பெற்றது. இதில் கோவைகிழார் செயலாளராக இருந்து பணியாற்றினார். பல்கலைக் கழகத்தாருடன் தொடர்பு கொண்டு உடன்பாடு பெற்று 1953ஆம் ஆண்டில் சாந்த லிங்க அடிகளார் திருமடத்தில் தமிழ்க்கல்லூரி தொடங்கப் பெற்றது. தொடக்கத்தில் கோவைகிழார் கல்லூரி

முதல்வராகவும் பொருளாளராகவும் இருந்து பணியாற்றினர். கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல செல்வரிடஞ் சென்று பொருள்வேண்டிப் பெற்றுர். கழகத்திற்குக் கட்டணம் செலுத்தும் உறுப்பினர்களை மிகுதியாகச் சேர்த்தார். கல்லூரிக்குத் தகுந்த கட்டிடங்கள் கட்டுவதற்கும் மாணவர்களுக்கு உணவு விடுதி வசதியளிப்பதற்கும், அரிய முயற்சிகளை மேற்கொண்டார். எளிய மாணவர்களுக்குப் பல செல்வர்களிடமிருந்து உதவி வாங்கிக் கொடுத்தார். கல்லூரியில் கொண்டாடப்பட்ட தமது பிறந்தநாள் விழாக்களில் நல்ல நூல்களை வழங்கினர். மற்றும் ஆசிரியர்கட்கு வீடுகட்டும் முயற்சியையும் மேற்கொண்டார்.

திருமடத்தின் சார்பில் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்கும் இவர் மிக உதவியாக இருந்தார். மற்றும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் நிகழ்ந்த விழாக்களிலுங் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறுர். இளம் பருவம் முதற்கொண்டே அம்மடாலயத்திற்கு இவர் அடிக்கடி போய் வருவது வழக்கம்.

இதழாசிரியர்

கோவைத் தமிழ்ச்சங்கத்தில் இவர் செயலாளராக இருந்த காலத்தில் 'கொங்குமலர்' என்னும் திங்கள் இதழுக்கு இவர் ஆசிரியராக இருந்து மூன்றுண்டுகள் வரை அவ்விதழைச் சிறப்பாக நடத்தினர். அதிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினர். அக்கட்டுரைகளிற் சில நூலாகவும் வெளியிடப்பட்டன.

சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசத்தின் இதழான சித்தாந்தத்திற்கு 1947 முதல் 1953 வரை ஆசிரியராக இருந்து நடத்தினர். இவர் ஆசிரியராக இருந்தகாலத்தில் இதழில் வெளியிடப்படுஞ் செய்திகளைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு தலைப்பிலும் அததற்கு ஏற்ற கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து

வெளியிடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இவரும் பல கட்டுரைகளை எழுதினர். இதனல் சித்தாந்தம் திங்களிதழ் சிறந்து விளங்கிற்று. படிப்பவர்களின் தொகையும் மிகுதியாகப் பெருகிற்று.

பதிப்பாசிரியர்

சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில் உறுப்பினராக இருந்து சோழன் பூர்வபட்டயம், கொங்கு தேச ராசாக்கள், பேரூர்க்கோவை ஆகிய நூல்களையும், தஞ்சை சரசுவதிமகால் புத்தகசாலையில் உறுப்பினராக இருந்து இராமப்பையன் அம்மானை என்னும் நூலையும், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் வழியாகத் தமிழிசைக் கருவிகள் என்னும் நூலையும் பதிப்பித்திருக்கிருர். இராமப்பையன் அம்மானை நூல்பதிப்பை இதழ்களெல்லாம் நன்கு மதித்துப் பாராட்டின.

ஆராய்ச்சியாளர்

இதுவரை யாரும் அறிந்து எழுதாத கொங்கு நாட்டின் வரலாற்றைச் செவி வழிச்செய்தி, இலக்கியங்கள், நாட்டுப்பாடல்கள், கல்வெட்டுகள் ஆகியவைகளின் துணைகொண்டு ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார். எப்பொருளை ஆராய முற்பட்டாலும் அதன் பழைய வரலாற்றுச் சிறப்பை ஆராய்ந்தறிவார். தொல் பொருள் ஆராய்ச்சிக்கழகத்தில் பங்குகொண்டு பழங்காலத்து அணிவகைகளையெல்லாம் கல்வெட்டின் துணைகொண்டு ஆராய்ந்து அவை வழக்கிலிருந்த காலங்களுடன், 'அணிப்பித்து' என்னுந் தலைப்பில் எழுதி வெளிப்படுத்தியிருக்கிருர். சென்னை மாநிலம் பூவியல் ஆராய்ச்சிக் கழகத்தில் தலைவராக இருந்தபொழுது சென்னை மாநிலத்தைச் சார்ந்த இடப்பெயர்கள் பற்றி ஓர் ஆராய்ச்சி நடத்திஞர். சென்னை மாநிலத்தில் வழக்குகள் விவகாரங்கள்) என்பதைப்பற்றி ஓர் ஆராய்ச்சி நிகழ்த்தி

இராசாசீ தலைமையில் சொற்பொழிவு செய்தார். அச் சொற்பொழிவை இராசாசீ பாராட்டிப் பேசினர்.

### கல்வெட்டுப் பேரறிஞர்

கல்வெட்டுக்களைப் படித்து அதிற் கூறப்படுஞ் செய்திகளை ஆராய்ந்து வெளியிடுவதில் இவர் தனித் திறமை படைத்தவராக விளங்கினர். பல கல்வெட்டுத் தொகுதிகளைச் சேர்த்து வைத்திருக்கிறார். எச்செய்தியை யுங் கல்வெட்டுச் சான்றுகளுடன் நிலைநாட்டுவார். 'அடியார்களும் கல்வெட்டுகளும்' என்னுந் தலைப்பில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சேக்கிழார் காலத்தைக் கல்வெட்டின் துணைகொண்டு நிலைநாட்டியுள்ளார். பல்கலைக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபொழுது கோவில்களில் உள்ள கல்வெட்டுகளிற் காணப்பெறும் செய்யுட்களைக் காலமுறைப்படி தொகுத்து அச்சிட முயன்றார்.

### மாநாடுகளில் தொடர்பு

இவர் பல மாநாடுகளிற் கலந்துகொண்டதன்றிச் சிலவற்றைத் தாமே முன்னின்று நடத்தியுள்ளார். டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியாருடன் சேர்ந்து கோவையில் தமிழர் மாநாடு நடத்தியுள்ளார். அதனோடு தமிழ்ப் பொருட் காட்சி ஒன்றையும் நடத்தினர். அகில இந்திய தேவாங்க சபையின் இரண்டாவது மாநாட்டைச் செய லாளராக இருந்து கோவையிற் சிறப்புற நடத்தினர். 1938ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த சமாச மாநாட்டையும் செயலாளராக இருந்து கோவையில் நடத்திவைத்தார். தில்லையில் நடைபெற்ற சிவக்கவிமணியவர்களின் பெரிய புராணப் பேருரை வெளியீட்டு நிறைவு விழாவினையும் செயலாளராக இருந்து நடத்தினர். 1922ஆம் ஆண்டில் பம்பாயில் பெசண்ட் அம்மையார் தலைமையில் நடை பெற்ற மாநாட்டிற் கலந்து கொண்டார். சைவசித்தாந்த சமாச மாநாட்டில் இரண்டுமுறை தலைமை தாங்கியிருக்

கிருர். ஓரியண்டல் மாநாடுகள், சயன்ஸ் சங்க மாநாடுகள், பூவியல் சங்க மாநாடுகள், தொல்பொருள் ஆராய்ச்சிக் கழக மாநாடுகள் ஆகியவற்றிற் கலந்து அரிய ஆராய்ச்சி யுரைகள் நிகழ்த்தியிருக்கிருர். 1959ஆம் ஆண்டில் டில்லி யில் நடைபெற்ற ஓரியண்டல் மாநாட்டில் தமிழ்நாடு இடப்பெயர்கள் பற்றிய ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். இவருடன் இராமசாமியடிகளுஞ் சென்றிருந்தார். பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் மடம், சத்வித்யா சன்மார்க்க சங்கம், தூத்துக்குடி சைவசித்தாந்த சபை, சாத்தூர்த் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றிலுந் தலைமை தாங்கி யிருக்கிருர். 1958ஆம் ஆண்டில் பொள்ளாச்சியில் நடை பெற்ற தமிழ்நாடு எழுத்தாளர் மாநாட்டில் சொற்பொழி வாற்றியுள்ளார். இலங்கையில் 1951ஆம் ஆண்டில் நடை பெற்ற சர் பொன்னம்பலம் இராமநாதன் நூற்ருண்டு விழாவுக்கு இவர் சென்று கலந்துகொண்டார்.

## நாட்டுப்பற்று

எந்த ஒரு நாட்டின் வரலாற்றுப் பெருமையினை யறிந்தாலும் அதைத் தாம் பிறந்த நாடாகிய கொங்கு நாட்டுடன் ஒத்திட்டுப் பார்ப்பது இவருக்கு வழக்கம். கொங்கு நாட்டின் மலைகள், ஆறுகள், கோவில்கள் முதன்மையான சிற்றூர்கள் முதலிய யாவற்றையும் இவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். பெரும்பாலான இடங்களுக்கு இவர் நேரிற் சென்றிருக்கிருர். பல மலை களை முடிவரை ஏறிப்பார்த்திருக்கிருர். இவர் எழுதிய, ''இதுவோ எங்கள் கோவை'' 'எங்கள் நாட்டுப்புறம்' என்னும் நூல்கள் கோவை மாவட்டத்தைப்பற்றிய இவ ருடைய அறிவையும் நாட்டுப்பற்றையும் நன்கு உணர்த் துவனவாம்.

## பேரூர்த் தொடர்பு

கொங்கு நாட்டின் சிறந்த ஊர்கள் பலவற்றுள் பேரூர் முதன்மை வாய்ந்தது. இளமை தொட்டே இவ

ருக்கு இவ்வூருடன் மிகுந்த தொடர்புண்டு. பட்டிப் பெருமான் திருக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் இவருடைய கருத்தை மிகுதியாகக் கவர்ந்தன. சத்வித்யா சன்மார்க்க சங்கமும் இவருடைய பேரூர்த் தொடர்புக் குப் பெரிதுங் காரணமாக இருந்தது. பேரூர்ப் புராண வெளியீட்டில் பேரூரைப்பற்றிய அரிய செய்திகளை ஆராய்ந்து கட்டுரைகளாக்கிச் சேர்த்திருக்கிறார். மைசூர் மன்னர் பேரூர்க் கோவிலுக்கு வரும்பொழு தெல்லாம் இவர் வந்திருந்து அவரை வரவேற்றுக் கோவிலைப் பற்றிய விவரங்களை யெல்லாம் அறிவிப்பார். சிறந்த வரலாற்றாசிரியராகிய இராஸ் பாதிரியார் 1953ஆம் ஆண்டில் கோவைக்கு வந்த பொழுது அவரைப் பேரு ருக்கு அழைத்து வந்து அவருக்குப் பேரூரைப் பற்றிய வரலாற்று விவரங்களை யெல்லாம் விளக்கினார்.

சுற்றுப்பயணம்

பொதுப் பணியின் பொருட்டும் அலுவல் காரண மாகவும் இவர் பல முறை தமிழ் நாட்டில் பல மாவட்டங் களிலும், வடநாட்டின் பெரும் பகுதிகளிலும் சுற்றுப் பயணஞ் செய்திருக்கிறார். பல விடங்களைப் பார்க்க வேண்டும் என்னும் விருப்பத்தினாலும், திருக்கோயில் வழிபாடுகள் செய்ய வேண்டும் என்னும் விருப்பத் தினாலும் பல பயணங்களை மேற்கொண்டார். இவ ருடைய இந்தியப் பயணங்களுள் 1922, 1924, 1927 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட பயணங்கள் குறிப் பிடத் தக்கன. தாங்கண்ட கோவில்களைப் பற்றிய வரலாறு களையும் பட்டறிவுக் கருத்துக்களையும் எழுதித் தொகுத்து வைத்திருக்கிறார். இவை சுற்றுப் பயணம் மேற்கொள் பவர்கட்குப் பெரிதும் பயன் படக் கூடியன. ஈழநாட்டுக்கு ஆறு முறை போய் வந்திருக்கிறார். இலங்கைச் செலவு பற்றி மூன்று நூல்கள் எழுதி யிருக்கிறார். அவற்றுள் "எழுவர் நாங்கள்" 'கடலின் கண்முத்து' என்னும் இரண்டு நூல்கள் அச்சிடப்பட்டன. ஒன்று அச்சிடப் பெறவில்லை.

பெருமக்கள் தொடர்பு

கோவை நகரத்துப் பெருமக்களில் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், டாக்டர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் ஆகியவர்களோடு தொடர்புகொண்டு, தமிழர் மாநாடு, பொருட்காட்சி முதலியன நடத்தினர். இவருடைய சிறந்த நண்பர் என்று குறிப்பிடத் தக்கவர் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்களாவர். முதலியாரும் கோவை கிழாரும் திருச்சிற்றம்பலம் பிள்ளையிடம் தமிழ் கற்றவர்கள். இவர்களிருவரும் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து கோவைத் தமிழ்ச் சங்கத்தை நடத்தினர். எச்செயலைச் செய்வதாக இருந்தாலும் இவர்களிருவரும் சேர்ந்தே செய்வார்கள். முதலியாரவர்களுடைய வாழ்க்கை வரலாறு இவரால் எழுதப்பட்டது. கண்ணுச்சாமிக் கவுண்டர், சி. ஆர் இராமசாமி ஐயங்கார் என்பவர்கள் இவருடைய நண்பர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர். தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிய வகையில் திரு. நா. மகாலிங்கம், திரு. வெ. சி. சுப்பையாக் கவுண்டர், தவத்திரு இராமசாமியடிகள் ஆகியோர் இவரோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். கோவை நகரத்தில் எல்லாப் பொது நிறுவனங்களிலும் இவர் தொடர்பு கொண்டு உழைத்தபடியினால் எல்லாப் பொது மக்களும் இவரோடு தொடர்புடையவர்களேயாவர். தமிழகத்தில் உள்ள சைவாதீனங்களெல்லாம் இவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தன. சைவசித்தாந்த மாசமாசத்தில் சேர்ந்து பணியாற்றிய படியினால் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், திரு. சச்சிதாநந்தம் பிள்ளை, டி. எஸ். கந்தசாமி முதலியார், சிவகுருநாத பிள்ளை, திரு. வி. க., ஞானியாரடிகள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், மறைமலை யடிகள் ஆகியோர் நெருங்கிய தொடர்புடைவர்களாவர். தமிழகத்தில் இவருடன் தொடர்பு கொள்ளாத அறிஞர் எவருமிலர். இலங்கையில் அருளம்பலம், நவரத்தினம், சு. நடேசபிள்ளை, மயில்வாகனம் ஆகியோர் தொடர்புடை

யவர்களாக இருந்தனர். மலேயாவில் இராமநாதன் செட்டியார் என்பவர் குறிப்பிடத்தக்க நண்பராக விருந்தார்.

### பாராட்டும் பட்டங்களும்

இவருடைய பணியைப் பாராட்டி அரசினர் 1930 ஆம் ஆண்டில் இராவ்சாகேப் பட்டமும் 1938 ஆம் ஆண்டில் இராவ்பகதூர்ப் பட்டமும் அளித்துப் பாராட்டினர். இவர் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூல் வெளியானபொழுது (1954ஆம் ஆண்டில்) பேரூர்த் தமிழ்க் கல்லூரியின் சார்பில் பாராட்டு விழா நடத்திப் பொன்னுடை போர்த்தப்பட்டது. விழாவில் சிவக்கவி மணியவர்களும் குன்றக்குடி அடிகளாரும் கலந்து கொண்டனர். ஆங்கிலப் பூவியல் சங்கத்தார் இவரை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டு, F. R. C. S. என்னும் பட்டம் வழங்கினர். இச்சிறப்புப் பெற்றவர்கள் மிகச் சிலரே என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை மாநிலத் தமிழ்க் கழகம் இவருக்குச் செந்தமிழ்ப் புரவலர் என்னுஞ் சிறப்பு அளித்தது. சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் சித்தாந்தப் புலவர் என்னுஞ் சிறப்புக் கொடுத்துப் பாராட்டியது. மதுரை ஆதீனத் தலைவர் சைவ ஞாயிறு என்னும் பட்டங் கொடுத்துப் பாராட்டினர். 1957ஆம் ஆண்டில் கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் பரிசு வழங்கப்பட்டது. இதனைச் சென்னை மாநில ஆளுநர் கொடுத்தார். 1958ஆம் ஆண்டில் பொள்ளாச்சியில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவருக்குப் பொற்பதக்கம் அளித்துப் பாராட்டினர். 1961ஆம் ஆண்டில் கோவை நன்னெறிக் கழகத்தினர் பொன்னுடை போர்த்திப் பொற்பதக்கம் அளித்தனர்.

### அன்றாட அலுவல்

இவர் நாள்தோறும் பொழுது விடிவதற்கு முன் படுக்கையை விட்டு எழுவார். காலையில் இறைவழி

பாடுந் திருமுறை ஓதுதலும் நடைபெறும். காலை உண வுக்குப் பிறகு படிப்பதும் எழுதுவதும் வேலை. நண்பகல் உணவுக்குப் பிறகு ஓய்வு. மாலை நேரத்தில் தம்மைக் காண வருபவர்களோடு உரையாடுவார். அல்லது நண் பர்களோடு உலாவச் செல்லுவார்.

## இவருடைய இயல்புகள்

இவர் எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசுவார். இவரிடம் இருந்து யாருங் கடுஞ்சொல்லைக் கேட்டிருக்க மாட்டார்கள். தம்மால் பிறர்க்கு ஒரு துன்பம் வருவதை இவர் பொறுத்துக் கொள்ள மாட்டார். இவர் தம் கீழ் வேலை செய்த எவர் மீதும் ஒரு முறைகூட நடவடிக்கை எடுத்ததில்லை. இவர் எவரையும் எளிதில் நம்பிவிடும் இயல்புடையவர். தமக்கு ஒரு பதவி வேண்டும் என்பதற் காக ஒரு நிறுவனத்தில் இடம் பெற மாட்டார். தம் முடைய சொந்தப் பொருளைச் செலவிட்டாயினும் ஒரு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பார். தாம் அந்நிறுவனத்தால் பொருளை எதிர்பார்க்க மாட்டார். வருந்தித் தம்மிடம் வந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பார். சிறப்பாகக் கல்வியின் பொருட்டு வரும் ஏழை மாணவர்கட்குப் பிறரை யிரந்தும் உதவி செய்வார். தம்முடைய மக்களிடஞ் செலுத்தும் அன்பைக் காட்டிலும் மாணவர்களிடம் மிகுதியாக அன்பைச் செலுத்துவார். நூல்களை உயிரினும் மேலாகப் போற்றுவார். நூல் கள் இதழ்கள் குறிப்புக்கள் கடிதங்கள் எல்லாம் ஆண்டு திங்கள் நாள் வரிசைப்படி அட்டை கட்டி ஒழுங்காக அடுக்கப்பட்டிருக்கும். பல ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி எழுதப்பட்ட ஏட்டை மிகு எளிதாகக் கண்டு எடுத்து விடலாம். அவ்வளவு ஒழுங்குமுறையோடு அவைகள் அடுக்கப்பட்டிருக்கும். பொதுவாக எளிமை, இனிமை, கனிவு, உழைப்பு, உதவி இவையே கோவை கிழாருடைய உருவ மென்றால் அது மிகையாகாது. இவரைப் பற்றித் திரு. வி. க. தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

## இராமச்சந்திரஞ் செட்டியார்

"ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாருக்கும் எனக்கும் கூட்டுறவு பண்ணிய இடம் திருவதிகை (1934). அதற்கு முன்னரே செட்டியாரின் ஆராய்ச்சி மொழிகளையும் பாட்டுக்களையும் யான் பார்த்திருக்கிறேன். அப்பார்வை, 'இராமச்சந்திரஞ் செட்டியார் ஒருகலைக் கூடம்' என்று தெளிவித்தது.

இராமச்சந்திரஞ் செட்டியாரின் கலைத்திறத்தை அவர் தலைமை வகிக்குங் கூட்டங்களில் நோக்குதல் வேண்டும். பலர் பல திறப் பொருள் பற்றிப் பேசுவர். ஒவ்வொன்றுக்கும் அவர் திறம்பட முடிவுரை கூறுவர். அவரது முடிவுரையைக் கேட்கக் கேட்க நெஞ்சம் கலையினிடஞ் செல்லும்; அவ் வேளைகளில் செட்டியாரின் பல கலைப் புலமை நன்கு விளங்கும். இக் காட்சியை யான் பலமுறை கண்டிருக்கிறேன்.

இத்தகைய ஒரு கலைஞரை இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகம் ஒரு ஆணையராகப் பெற்றிருக்கிறது. பெற்றும் என்ன? ஏதேனும் பயன் விளைகிறதா? கோயில்களைத் தக்க முறையில் சீர்திருத்தஞ் செய்யச் செட்டியார் என்னென்னவோ எண்ணுகிருர். அவர் எண்ணம் ஈடேறுவதில்லை. அவர் முழுவதிகாரம் பெற்ருல் அவரது எண்ணம் ஈடேறுதல் கூடும்.

இராமச்சந்திரஞ் செட்டியார் ஊக்கமுடையவர். அவரது ஊக்கம் சட்ட வரம்பில் நின்று சில நலன்களைப் புரிந்து வருகிறது. அவை தல வரலாறுகள் வெளியீடு, தர்ம கர்த்தர் மகாநாடு, நூல்நிலைய அமைப்பு, ஓவியக் காட்சி முதலியன. செட்டியார் திறத்தை நாடும் பயன் படுத்தவில்லை; அரசாங்கமும் பயன்படுத்தவில்லை.

கோயில் சீர்திருத்தம் பல செட்டியாரிடம் கருக் கொண்டிருக்கின்றன. 'அவைகள் நூலுருவங் கொள்ளும்

என்று நம்புகிறேன். அதனல் நாட்டுக்கு நலன் விளையும்''.

**நூல்கள்**

இவர் பல நூல்கள் எழுதியிருக்கிருர். அவைகளுள் வெளிவந்த செய்யுள் நூல்கள் கச. உரைநடை நூல்கள் கூஉ. நாடக நூல்கள் ரு. வாழ்க்கை நூல்கள் எ. இவற்றுள் பின்வரும் நூல்கள் சிறந்தவை :

**சிறந்த செய்யுள் நூல்கள் சில :**

இளைஞர் பாடல்கள், தமையனும் தங்கையும், கடவுள் வணக்கம், வாழ்க்கையோ கவலையோ என்பன.

**சிறந்த சில உரைநடை நூல்கள் :**

கோயில் பூனை, பேரூர் வரலாறு, சமயங்கள், தமிழிசைக் கருவிகள் முதலியன.

**சிறந்த சில நாடக நூல்கள் :**

வீழ்ச்சியும் மீட்சியும், நாட்டுப் பற்று, காஞ்சி மாதேவி.

இவையேயன்றி உரைநடையும் செய்யுளுமாக நாற்பது நூல்கள் வரை வெளிவராதிருக்கின்றன.

**இறுதி**

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்பதற்கேற்பப் புகழொடு தோன்றிய இவர் தம்முடைய அஉஆம் ஆண்டில் 3-12-1969 இல் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

## அ. கந்தசாமிப் பிள்ளை

### தோற்றம்

"காஞ்சிமா நதியின் மூழ்கிக்
கருவினை பாவந் தீர்ப்ப
தாஞ்சிவ பிரம தீர்த்தத்
தரும்புன லாடி நீர்ப்பூ
பூஞ்சினை கொடிமு தற்பூ
பொதுளுநந் தனப்பூக் கொய்து
வாஞ்சையின் வணங்க ஐயர்
மன்னருள் வருத்த வாறே"

—அ. கந்தசாமிப் பிள்ளை.

பண்டித அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் கொங்குவள மண்டலத்திலே பூவாணி நாட்டிலே தோரமங்கலம் என வழங்குந் தாரமங்கலத்திலே அப்பாச் சாமிப்பிள்ளை என்பவருக்கும் அவருடைய மனைவியாகிய வரதம்மாள் என்பவருக்கும் அருமைப் புதல்வராக ௧௮௮௫ ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களிலே பிறந்தார். திரு அ. வரத நஞ்சைய பிள்ளை அவர்கள் இவருடைய தமையனாராவர்.

### முன்னோர்கள்

கந்தசாமிப் பிள்ளையினுடைய தந்தையாராகிய அப்பாச்சாமிப் பிள்ளையின் தந்தையார் பெயரும் கந்த சாமிப் பிள்ளை தான். இந்தக் கந்தசாமிப் பிள்ளையும் ஒரு சிறந்த புலவரே. ஒருநாள் இந்தக் கந்தசாமிப் பிள்ளையின் வீட்டிற்கு இவருடைய மைத்துனர் வந்தார். சமையலானவுடன் கந்தசாமிப் பிள்ளை தம்முடைய மைத் துனரை உணவருந்த அழைத்தார். அந்த மைத்துனர்

இவரிடமிருந்து ஒரு புதிய செய்யுள் கேட்க வேண்டுமென்று எண்ணினர். தம்முடைய மைத்துனராகிய கந்தசாமிப் பிள்ளையைப் பார்த்து, 'இப்படிச் சும்மா கூப்பிட்டால் வரமாட்டேன். ஒரு செய்யுள் மூலமாக அழைத்தால்தான் வருவேன்' என்று கூறினர். உடனே கந்தசாமிப் பிள்ளை,

"தோப்படி யான அரிசி வடித்துச் சுவையுடனே
காற்படி யான துவரம் பருப்பும் கறிவகையும்
வாய்ப்புடைத் தாக வுமக்கென வாக்குமெம் வாழ்மனையில்
சாப்பிட வாரும் செலவிடை மேவுந்தா மோதரனே"

என்னும் பாட்டைக் கூறி அழைத்தார். இவ்வாறழைத்த கந்தசாமிப் பிள்ளையின் மகனாகிய அப்பாச்சாமிப் பிள்ளையும் ஒரு புலவரே.

### நோய் நீங்கியது

அப்பாச்சாமிப் பிள்ளைக்கு மகனாகத் தோன்றிய புலவர் அ. கந்தசாமிப் பிள்ளை தம்முடைய தமையனாகிய வரத நஞ்சைய பிள்ளையவர்கள் பிறந்த பிறகு ஒன்பதாண்டுகள் கழித்துப் பிறந்தனர். இவருக்கு அகவை மூன்றான பொழுது கண்டமாலை யென்னுங் கொடிய நோய் உண்டாகியது. திருச்செங்கோடு உமையொருபாகத் திறைவனை வேண்டிக் கொள்ள நோய் நீங்கிற்று. அது முதல் ஆண்டுதோறும் ஆடி தை அமாவாசைகளில் செங்குன்றூர் சென்று இறைவழிபாடு செய்தலை மேற்கொண்டிருந்தனர். பிறகு ஒவ்வோராண்டிலும் காளையூர்திக்காட்சியைக் கண்டு போற்றும் வழக்கத்தைக் கடைசிவரை மேற்கொண்டிருந்தனர்.

### கல்வி

நாமக்கல்லுக்கு அண்மையில் உள்ள இலத்திவாடிப் பெருநிலக்கிழார் இராமசாமி ரெட்டியார் என்பவர் தம்

முடைய ஒரே மகனை சின்னச்சாமி ரெட்டியார் தமிழ் பயில வரத நஞ்சைய பிள்ளையைத் தமிழாசிரியராக ஏற்பாடு செய்தார். கந்தசாமிப் பிள்ளையும் வேறு சிலரும் அப்போது பல அந்தாதிகளைப் பாடங் கேட்டனர். பிறகு நாமக்கல் உயர்நிலைப் பள்ளியில் வரத நஞ்சையபிள்ளை தமிழாசிரியரானார். அப்போது கந்தசாமிப் பிள்ளை தமையனரிடம் சமய இலக்கியங்கள் பலவற்றையும் பாடங் கேட்டார்.

### தூரமங்கல வாழ்க்கை

பிறகு வரதநஞ்சைய பிள்ளை தம்முடைய பிறந்த ஊரான தூரமங்கலத்திற்கு வந்து குலத் தொழிலான ஊர்க் கணக்கு வேலையை மேற்கொண்டார். அப்பொழுது சிவஞான முனிவருடைய நூல்கள் பலவற்றையும் தமையனர் தம்பியார்க்குப் பாடஞ் சொல்லி வந்தார். தூரமங்கலத்தை யடுத்த சலகண்டபுரம் என்னும் ஊரில் சன்மார்க்க சங்கம் நிறுவிக் கிழமைதோறும் கொல்லாமை பற்றி வரதநஞ்சைய பிள்ளை சொற்பொழிவுகள் செய்து கொண்டு வந்தார். திருக்குறள் புலால் மறுத்தல் கொல்லாமை அதிகாரக் கருத்துக்கள் சாந்தலிங்க சுவாமிகள் கொலை மறுத்தல் உரை ஆகியவைகளைத் துணையாகக் கொண்டு 'புலால் மறுத்தல்' என்னும் நூலைத் தமையனர் எழுதினர்.

### புலவராதல்

தமையனராகிய வரதநஞ்சையபிள்ளை காற்பள்ளி என்னும் ஊரில் மாமனருடைய குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டுத் தங்கியிருந்தார். அப்பொழுது பலர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதத் தேர்வுக்குப் பாடங்கேட்டுக் கொண்டிருந்தனர். கந்தசாமிப் பிள்ளை அப்பொழுது பிரவேச பண்டிதத் தேர்வுக்குப் படிக்கத் தொடங்கினர். ஆசிரியரிடம் காட்டவேண்டிய அன்பு

அடக்கம் முதலிய பண்புகளோடு தமையனரிடம் பாடங் கேட்டார். யாப்பருங்கலக்காரிகை படிக்கும் பொழுதே செய்யுள் செய்யும் ஆற்றலடைந்தார். தம்முடைய தமையனர் மேல்,

"பழுத்த செந்தமிழ்ச் சுவையுணர் சிவபிரான் பதத்தில்
அழுத்து சிந்தையை உய்தியஞ் செழுத்தினென் றருளிப்
புழுத்த நாயினும் கடையனு மெனைப்புகுந் தாண்ட
தழைத்த சீர்வர தநஞ்சைய வடிகள்எஞ் சரணே"

என்று தமையனர் மேல் குரு வணக்கப்பாடல் பாடினர். கல்வி கற்றுக் கொண்டிருந்த பொழுது நிகழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டு பல பாடல்கள் இயற்றினர்.

கசுூ௫ஆம் ஆண்டில் பிரவேச பண்டிதத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ந்து பரிசு பெற்றூர். ககூ௦சுஆம் ஆண்டு பால பண்டிதத் தேர்வில் முதலாவதாகத் தேர்ந்து பொற் பதக்கம் பெற்றூர். ககூகக ஆம் ஆண்டு பண்டிதத் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ந்து தங்கத்தோடா பரிசு பெற்றூர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள் மூன்றிலும் முதற்பரிசு பெற்றவர் இரண்டொருவரே.

பண்டிதத் தேர்வுகளில் செய்யுள் செய்யுமாறு ஈற்றடி கொடுப்பதுண்டு. "விடத்தை அமுதென்று கூறிடுமால் இந்த மேதினியே" என்னும் ஈற்றடி கொடுத்துக் கட்டளைக் கலித்துறை பாடுமாறு கேட்கப்பட்டிருந்தது. அதற்கு இவர் கீழ்வருமாறு பாடினர்:

"கடத்தை அமுதம் பொழிந்தன கொங்கைக் கவுரிபங்கன்
படத்தை அமுதம் பொழிகதிர்ப் பால்விரி பாப்பணியோன்
நடத்தை அமுத மொழிகாணு ஆடிநன் நாடுநிரா
விடத்தை அமுதென்று கூறிடு மாலிந்த மேதினியே"

### பொருளதிகார ஆராய்ச்சி

கொழும்பில் இருந்த செல்வர் ஒருவர் தமிழர் நாகரிகம், வரலாறு, வாழ்க்கை நெறிபற்றிப் பொருளதிகார ஆராய்ச்சி எழுதுபவர்கட்கு இருநூறுரூபாய் பரிசளிப்பதாகவும் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சிறந்த கட்டுரையைத் தேர்ந்தெடுப்பாரென்றும் விளம்பரஞ் செய்திருந்ததைப் பார்த்து இவர் நூறு பக்கங்களில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியனுப்பினர். இவ்வகையில் இவர் ஏமாற்றப் பட்டார்.

### ஆசிரியப்பணி

1907 ஆம் ஆண்டில் காட்டுப் புத்தூர்ப் பெருநிலக்கிழார் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையில் 'மழவர்' பற்றிச் சொற்பொழிவு செய்தார். அச்சொற்பொழிவு செந்தமிழில் கட்டுரையாக வெளிவந்தது. அக் கட்டுரை பிற்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் பலருக்கும் பேருதவியாக அமைந்தது.

### கல்லூரியில் வேலை

1915 ஆம் ஆண்டில் உமாமகேசுவரன் பிள்ளையினுடைய அழைப்பின்படி தஞ்சை கரந்தைத் தமிழ் சங்கத்திற்குச் சென்று தி. அ. இராமலிங்கஞ் செட்டியார் என்பவர் தலைமையில் சங்க இலக்கியம் பற்றிச் சொற்பொழிவு செய்தார். இவருடைய புலமையை அறிந்த செட்டியார் கோவைக் கலைக் கல்லூரிக்கு அழைத்தார். 1916 ஆம் ஆண்டில் கோவைக் கலைக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியரானர். திங்களுக்கு முப்பது ரூபா ஊதியங் கொடுத்தனர். 1919 ஆம் ஆண்டிற் கோவைக் கலைக் கல்லூரியை அரசினர் மேற்கொண்டனர். மருத்துவருடைய சான்று பெற்றவர்க்கே அரசினர் வேலையுண்டு

என்றதால் மருத்துவரிடஞ் சான்று பெறச் சென்றார். மருத்துவருக்குக் கைக்கூலி கொடாதபடியினால் மருத்துவர், "இவர் நோயுடையவர். வேலைக்குத் தகுதியற்றவர்" என்று சான்றிதழ் அளித்தார். பேரூர்ப் பட்டிப் பெருமானை வழிபட்டார். வேலை பெறுவதற்கு வேறு முயற்சி செய்யவில்லை. சிறிது காலம் வேலையில்லாமலிருந்தார். பழைய மருத்துவர் மாற்றலாகி வரதராசுலு நாயுடு என்னும் மற்றொரு மருத்துவர் வந்தபொழுது இவருக்கு நற்சான்றிதழ் கிடைத்தது. வேலையுங் கிடைத்தது.

**தலைமை யாசிரியர் அச்சம்**

கந்தசாமிப் பிள்ளை இறைவழி பாட்டில் ஈடுபாடும் நம்பிக்கையும் உடையவர். காலையில் வழிபாடாற்றிச் செல்வதால் கல்லூரிக்குச் செல்லச் சிறிது நேரமாகிவிடும். நேரங்கழித்து வந்ததற்காகக் கல்லூரித் தலைவர் இவருடைய ஊதியத்தில் இரண்டு ரூபாயைப் பிடித்துக் கொண்டார். கல்லூரித் தலைவருடைய பெயர் இராமகிருட்டிண ஐயர். ஊதியத்தில் பிடித்ததைக் குறித்து இவர்,

> "மலைகொடுக்கும் புயமுடையாய் இராமகிருட்டிண
> பூபாலா மகிழ்ந்திந் நாட்டார்
> தலைகொடுத்தும் தமிழ்ப்புலவர் தமைப்புரந்தார்
> நின்கலா சாலை தன்னில்
> கலைகொடுக்குந் தொழில்நிற்பேன் சம்பளத்தில்
> இருரூபாய் பிடித்துக் கொண்டு
> விலைகொடுத்தல் கூலிதரல் எனக்கொடுத்தல்
> நியாயமதோ மேதக் கோனே"

என்னும் பாடலைக் கூறினார். இதனைக் கண்ட கல்லூரித் தலைவர் இவர் வசைபாடினாலும் பாடக் கூடும் என்று அஞ்சி முழுப் பணத்தையுங் கொடுத்து விட்டார்.

### தேர்வாளர்

1920ஆம் ஆண்டில் பள்ளியிறுதித் தேர்வு விடைத் தாள் திருத்தும் வேலைவந்தது. சென்னைக்குச் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் செல்வக் கேசவராய முதலியார் தலைமைத் தேர்வாளராக இருந்தார். பேரூரில் காளையூர்திக்காட்சியைக் காண முடியவில்லையே என்று உள்ளம் வருந்தியவருக்கு மயிலை கபாலீசுரர் கோயிலில் காளையூர்திக்காட்சி கிடைத்தது. இதனால் மிகுந்த ஆறுதலடைந்தார்.

### வேலைமாற்றம்

1928 ஆம் ஆண்டில் கும்பகோணம் என்னுந் திருக்குடந்தைக்கு மாற்றப்பட்டார். அச்சமயத்தில் பேரூரில் குடமுழுக்கு நடைபெறுவதாக இருந்தது. பன்னிரண்டு ஆண்டுகள் பேரூரில் வாழ்ந்திருந்தும் குடமுழுக்கைக் காணமற் செல்லுகிறோமே யென்னும் வருத்தம் இவருடைய உள்ளத்தில் உண்டாகியது. திருக்குடந்தைக்கு அண்மையில் உள்ள திருநாகேசுரத்தில் அச்சமயம் குடமுழுக்கு நடைபெற்றது. அதனைக் கண்டு இறைவன் திருவருளை வியந்து பாடினர்.

### வறுமை நிலை

இவர் பல சமயங்களில் வறுமைநிலையால் வாடினர். திருவாவடுதுறையாதீனத்துச் சிறப்பைப் பற்றிக் கேள்விப் பட்டவராகையால் நேரிற் காண எண்ணினர். கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரிடம் கடிதம் பெற்றுக்கொண்டு திருமடத்தின் தலைவர்மீது பாடல்கள் பாடித் தாமே அச்சிட்டுக் கொண்டு சென்றார். ஐந்து முறை சென்றும் பார்க்கமுடியவில்லை. அதனால் மனம் வருந்தி,

> ''கச்சிட் டொளிர்ஒப்பி லாமுலை உள்ளக் கரு வூலத்தே
> வைச்சிட் டீர்மாசி லாமணி யேஎன்ன மாயங்கொலோ

..............................ஐந்துநடைக் கூலியும்
அச்சிட்ட கூலியும் கைநட்ட மாக்கி அனுப்பியதே"

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

பிறகு திருப்பனந்தாளுக்குச் சென்றுந் திருமடத்தின் தலைவரைக் காண முடியவில்லை. கருவூருக்கு அண்மையில் உள்ள தென்னூர்ப் பெருநிலக்கிழார் பெத்தான் செட்டியார் என்பவர் பெருவள்ளல் எனக் கேள்விப்பட்டுப் பார்க்கச் சென்றுர். அவரையும் பார்க்க முடியவில்லை.

"பெத்தாச்சி மன்னரிடம் தென்னூர்க்குப் போகவரப்
பத்தாச்சிதனைச் சரிசெய வழியெங் [பிடித்த ரூபாய்,
கென்றெண்ணுதொறும் பதைத்தாச்சு நெஞ்சம் பித்தாச்சு"

என்று ஒரு பாடலைப் பாடிவிட்டு அதன்பின் எவரிடமுஞ் செல்லவில்லை. இவருடைய வறுமைநிலை மிகக்கொடிதாக இருந்தது. தம்முடைய வீட்டு நிலையை எண்ணி,

"எண்ணெயிருக் காதரிசி ஏதுமிருக் காதுறியில்
வெண்ணெயிருக் காதேயென் வீட்டிலே—உண்ண
இலையுமிருக் காதேபோய் என்செய்வன் பேரூர்த்
தலைவனே பட்டீச னே"

என்னும் பாடலைப் பாடினர்.

### வற்றிய கிணறு நீர் பெருகியது

சேலம் மாவட்டம் சிற்றனூத்தூர்ப் பெருநிலக்கிழார் சபாபதிக் கவுண்டர் என்பவர் இவரை ஆதரித்தார். இவர் ஒருமுறை கவுண்டருடைய இல்லத்திற்குச் சென்றிருந்தபோது பூசைக்குத் தண்ணீர் எடுப்பதற்குக் கிணற்றிலே தண்ணீர் இல்லை. தொலைவிலுள்ள கிணற்றில் இருந்து நீர் எடுத்துவர ஆளனுப்புவதாகக் கூறினர். ஆனல் இவரோ தாமே சென்று நீர் எடுத்துக் கொண்டு வரவேண்டுமென்று எண்ணினர்.

"யோசனைபோய்ப்புக் கொணர்ந்தங்கு ஒருநாளு மொழியாமே
பூசனையால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே"

என்னுந் தேவார அடியைக் கூறிவிட்டு இரவு உறங்கச் சென்றார். விடிவதற்குள் பெருமழை பொழிந்தது. கிணற்றில் அரைக் கிணற்றளவு தண்ணீர் நிரம்பியது. உடன் சென்றிருந்தவர்கள் இதனைக் கண்டு வியந்தனர். பெருநிலக் கிழார் புலவரின் பெருமையை வியந்து புகழ்ந்தார். அப்பொழுது இவர்,

"பூசைசெய் நீர்க்குப் புறம்போகேம் அர்த்தநா
ரீசன் செயலையே என்னென்பேம்—நேசமிக்கார்
சிற்றளுந்தூர்ச் செல்வர் சபாபதியார் சீர்மனையில்
உற்றகிண றாறிற் றுயர்ந்து"

என்னும் பாடலைப் பாடினார்.

பேரூர் வாழ்க்கை

கோவைக் கல்லூரியில் வேலைசெய்யும்பொழுது பேரூரில் ஆதீனத் திருமடம் ஒன்றில் வாழ்ந்துவந்தார். மடத்தில் இருந்த சிலர் உடனே வெளியேறுமாறு கூறினர். அப்பொழுது இவர்,

"படியிருக்க வானவரும் தவமிருக்கும்
திருப்பேரூர்ப் பட்டி சாறின்
அடியிருக்க நிழல்வேட்ட அப்பர்செயல்
அடியனையும் அறிவித் தற்கோ
கொடியர்க்கே யதிகாரங் கொடுத்தவர்க்கீழ்
எனைக்காட்டிக் கொடுத்திவ் வூரில்
குடியிருக்க வோர்வீடும் கொடாதிருக்கும்
திருவுள்ளக் குறிப்ப தென்னே"

என்னுஞ் செய்யுளைப் பாடி வருந்தினர்.

"இருகாற் குடம்பை இதுநான் உடையது இதுபிரிந்தால்
தருவாய் எனக்குத் திருவடிக்கீழொர் தலைமறைவே"

என்ற அப்பர் வாக்கை நினைந்து பாடினார். சில நாட்களில் ஒரு வீடு ஏலத்திற்கு வந்தது. அதனைச் சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாருடைய உதவியால் வாங்கினார்.

### சாந்தலிங்க அடிகளார் திருமடத் தொடர்பு

பேரூரில் உள்ள சாந்தலிங்க அடிகளாரின் திருமடத்தில் அப்பொழுது தலைவராக இருந்த மாணிக்கசுவாமிகள் சன்மார்க்க சங்கம் அமைத்தார். அப்போது கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், மறைமலையடிகளார், திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் முதலியோர் ஆண்டுவிழாக்களில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினர். மறைமலையடிகள் வந்திருந்தபோது இவர் அடிகளாரைச் சென்று கண்டார். இதுபற்றி திரு. மறைதிருநாவுக்கரசு அவர்கள் மறைமலையடிகளின் வரலாற்றில் எழுதியுள்ள சில செய்திகளை இறுதியிற் காண்க. சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் செயலாளராக இருந்து பலநற்பணிகள் செய்துள்ளார். மற்றைத் திருமடங்களில் உள்ளேகூட நுழைய முடியாமல் வந்த நிலைமையையும் சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் செயலாளர் பதவி கிடைத்ததையும் எண்ணி மகிழ்ந்தார்.

### தேர் ஓடியது

இவர் திருச்செங்கோட்டில் சுப்பிரமணிய பிள்ளை வீட்டு மேன்மாடியில் தங்கிப் பூசைசெய்து கொண்டிருந்தார். அப்பொழுது திருச்செங்கோட்டுத் தேர் அவ்வழியே வந்தது. இவர் தங்கியிருந்த வீட்டுப்பக்கம் வந்ததும் நின்றுவிட்டது. எவ்வளவோ முயற்சிசெய்து இழுத்தும் தேர் ஓடவில்லை. தேர் நின்று விட்டதையறிந்த இவர் மாடியைவிட்டு இறங்கிவந்து தேர் இழுக்கும் பணியைத் தொடங்கினார். இவர் வடத்தைப் பிடித்த உடனே தேர் ஓடத்தொடங்கியது. அப்பொழுது உடனிருந்த திரு ஆ. பொன்னுசாமிப் பிள்ளையவர்கள்,

"கந்தசா மிப்பெருமான் கண்ணுதற்குன் போலன்பர்
எந்தவரு ணத்தும் இலையுண்மை—இந்தநிலத்
தெல்லோரும் ஈர்க்க இறைவன்தேர் வாராது
வல்லோய்நீ ஈர்க்க வரும்"

என்னுஞ் செய்யுளைப் பாடினர். மற்றவர்களும் இதைப் பார்த்து வியந்தனர்.

### ஓய்வுக்குப் பிறகு

அரசினர் கலைக்கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு சில ஆண்டுகள் பேரூரில் தங்கிப் பலருக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தார். இவராற் பலபேர் புலவ ராயினர். 1953ஆம் ஆண்டில் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி தொடங்கியபோது பேராசிரியராகப் பணியாற்றினர்.

### தருமபுரத்தில்

சில திங்களுக்குப் பிறகு தருமபுர ஆதீனத்தார் அங்கு வந்து தமிழ்ப்பணி புரியவேண்டு மென்று விரும் பினர். இவரும் அவ்வாறே தருமபுரஞ் சென்றார். அங் கிருந்தபோது மூன்றாந் திருமுறைக்கு ஓர் அரிய உரை எழுதினர். பிறகு அவ்வுரை ஆதீன வெளியீடாக வந்தது. இவருக்குத் தருமபுரத்தில் இருப்பதில் விருப்ப மில்லை. பேரூர்ப்பட்டிப் பெருமானிடமே இவருடைய உள்ளம் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தது. ஆகவே பேரூர்க்குப் போய்ச் சேர்ந்தார். இவரை வளர்த்துப் புலவராக்கிய தமையனர் வரதநஞ்சைய பிள்ளை இச் சமயத்தில் இறைவன் திருவடி நீழலை யடைந்தார். அப்பொழுது இவர் பெரிதும் உள்ளம் வருந்தி இரங்கற் பாக்கள் பல பாடினர் அவைகளில் ஒரு பாடல்;

தந்தைபுரி அறம்பாவம் தமிலறந்தான்
தனதுருவாய்த் தரநீ வந்தாய்
முந்துபுரி பவமனைத்தும் நிரண்டடியேன்
ஒருருவாய் முனைத்திட் டேனல்

வந்தமுறைப் படியேநீ புகழ்பூணப்
பழியடுத்தே மயங்கு கின்றேன்
ஐந்துபெருங் குரவருமாய் அடியேனை
ஆளவந்த அண்ணா அண்ணா.

என்பதாகும்.

### மீண்டும் தமிழ்த்தொண்டு

1956ஆம் ஆண்டில் மீண்டுந் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரியத் தொடங்கினர். 1958ஆம் ஆண்டில் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் பாராட்டுவிழா நடத்திப் பொன்னாடை போர்த்திப் பொன் முடிப்புத் தரப்பெற்றது.

### புலவர் குழு உறுப்பினர்

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அமைத்த நாற்பத் தொன்பதின்மரைக் கொண்ட தமிழகப் புலவர் குழுவில் இவரும் ஒருவராகச் சேர்க்கப் பெற்றிருந்தார்.

### மனைவியைப் புலவராக்கினர்

இக் காலத்தில் பலருந் தம்முடைய வாழ்க்கைத் துணைவியுந் தம்மைப்போல் அறிவு நலம் பெற்றுத் திகழ் தலையே விரும்புகின்றனர். அறிவிலாப் பெண்டிர்களால் அல்லல்கள் பல நேருகின்றன. இவருடைய மனைவியின் பெயர் பொன்னம்மாள் இவர் தம் மனைவிக்குந் தமிழ் போதித்துப் புலவராக்கினர்.

### இறுதி

கோவை தமிழ்ச் சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் விநாயக புராணம் பாடஞ் சொல்லிக்கொண் டிருந்தார். தவத்திரு இராமசாமி அடிகளார் 11-7-67 இல் அருளாட்சி ஏற்றபொழுது "ஆதீனப் புலவர்"

என்னும் பட்டங்கொடுத்து இவரைப் பாராட்டினர். இவர் தம்மை யாதரித்தவர்கள்மீது செய்யுள்கள் பாடியுள்ளார். உடல் மிகவுந் தளர்ச்சியுற்றிருந்தபடியால் நெருங்கியவர்களுடைய வற்புறுத்தலுக் கேற்பச் சிவபூசையினை நாகராச ஓதுவார் என்பவரிடம் ஒப்படைத்தார். கல்லூரி வாயிலாகப் பேரூர்ப் புராணத்திற்கு உரை யெழுதத் தொடங்கிய முயற்சி முற்றுப்பெறவில்லை. சிவபூசையிலும் தமிழாராய்ச்சியிலும் உள்ளந் தோய்ந்த இவர் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத் தொன்பதாம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள் (15-12-69) சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

### இவரைப்பற்றிப் பிறர்

மறைமலையடிகளாருடைய திருமகனராகிய மறை திருநாவுக்கரசு அவர்கள் தாம் எழுதிய மறைமலை யடிகள் வரலாற்றில் இவரைப்பற்றிப் பின் கண்டவாறு எழுதியுள்ளார்.

### பண்டிதர் அ. கந்தசாமிப் பிள்ளை

"இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டத்திற்குப் பயின்று வென்றவர். தமையனரைப் போலவே தமிழ் முழுதுணர்ந்த தக்கோராவர். அதனல் கோவை, கும்பகோணம், சென்னை முதலிய நகரங்களில் உள்ள அரசாங்கக் கல்லூரிகளில் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்றுப் பேரூரில் வாழ்பவர். இவர் பண்பு நடத்தை யெல்லாம் தமையனரை ஒத்திருக்கும். தோற்றமும் சற்று அவ்வாறுதான். சிவபூசையை முறைப்படி ஆற்றிவிட்டுத்தான் கல்லூரிக்குச் செல்வர். அதனல் சிறிது நேரங் கடந்து விடும். இது பற்றிக் கதைகள் பலவற்றை இவர் மாணவர் கூறுவர். அடிகள்

இவரைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டுள்ளார். யானும் அப்படியே.

இவர் பேரூரில் வாழ்வது எங்களுக்குத் தெரியும். இவர்களைப் பார்க்க வேண்டும் என்னும் ஆர்வம் பேரூருக்கு வந்தது முதல் எங்கட் குண்டு. சிலரிடத்தில் கேட்டோம். அவர்கள், "கந்தசாமிப் பிள்ளை பெரிய வைதீகர்; சிவபூசை புரியும் செம்மலார். திருக்கோயில் வழிபாட்டினைக் காலை மாலைகளிற் செய்வர். அவர்க்குப் பிற பணிகளை மேற்கொள்ள வாய்ப்பு இருக்காது" என்றனர். எனவே இப்புலவர் பெருமகனைப் பார்க்க முடியாதோ என்ற கவலையும் எங்கட்கிருந்தது. இவர் வரவேற்பைத்தான் அடிகள் எதிர்பார்த்திருந்தார். அது கிட்டவில்லை.

பேரூர்விழா முடிந்த மறுநாள் என்றெண்ணுகின்றேன். ஒருநாட் காலை அடிகளைக் காணப் பலர் போந்து உட்கூடத்தில் அமைதியாய் அமர்ந்திருந்தனர். வருவாரை எல்லாம் யான் வரவேற்று அமர வைத்துக் கொண்டும் அங்குமிங்கும் ஓடியாடி எனக்குள்ள கடமைகளைச் செய்து கொண்டுமிருந்தேன்.

சற்று நேரத்தில் இரண்டு மூன்று பேர் உடன்வர ஒருவர் வந்தார். அவரை யான் வரவேற்றேன். கூர்ந்து நோக்கினேன். நெட்டையான வடிவம்; மாநிறம். நரம்புகள் எழுந்த கட்டுடல். ஆனால் பருமனில்லை. சந்தனப் பொட்டுடன் கூடிய நிறைந்த நீறணிந்த நெற்றியும் மேனியும், உள்ளமைந்த சிறு கண்கள், ஒட்டிய கன்னம், அப்பளக் குடுமி, மார்பில் உருத்திராக்கக் கண்டி, இடுப்பில் பூங்காவி போன்ற தார்ப்பாய்ச்சு, அதன் மேல் இடுப்பைச் சுற்றிக் கட்டப்பட்ட, பிடியாகச் சுருக்கிய துண்டு; இக்கோலத்துடன் அவர் சிறந்த சிவனடியாராக விளங்கினர். துணியால் மூடப்பட்ட பழங்கள் நிறைந்த ஓர் தட்டை அவர் தம் கைகளில் ஏந்திக்கொண்டு - தம் எடுப்பான பல்வரிசைகள் தோன்ற மிக வணக்கமாக

உடலை வளைத்துக்கொண்டு "சுவாமிகளைப் பார்க்க வேண்டும் அவர்கட்கு வசதி இருக்குமா" என்று கேட்டார். கவர்ச்சியில்லாத-ஆனால், ஓரளவு தோற்றப் பொலிவுள்ள இவர் யாராக இருக்கலாம்? என்று கருதினேன். விளங்குமா? ஒரு நொடி இவ்வாறெண்ணிச் சற்றுத் தயக்கத்துடன் "அடிகள் சிற்றுண்டி கொள்கிறார்கள். இன்னும் அரை மணி நேரம் சென்றால் காணலாம்" என்றேன். போய்விட்டார்.

உண்டியை முடித்துக்கொண்ட அடிகள் ஒரு நாற்காலியில் அமர்ந்து கீழே உட்கார்ந்து கொண்டிருந்த அன்பர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அரை மணிக்கு முன்வந்த அவரே மீண்டும் சிலருடன் போந்து வில்லாக வளைந்து அடிகள் திருமுன்பு பழத்தட்டை வைத்து வீழ்ந்து நெடுவணக்கஞ்செய்தார். உட்கார்ந் திருந்த அன்பர்கட்கெல்லாம் அவர்பெருமை தெரியு மாதலால் அவர்களெல்லாரும் சற்றே பரபரப்புடன் அகன்று இடந்தந்தனர். வணங்கிய அவரை அடிகள் அமரச்செய்து "தங்களை அறியக்கூட வில்லையே" என்றனர்.

அவர் தமது இடதுகையை வயிற்றில் சுற்றிக் கொண்டு வலது கையால் வாயைப் பொத்திக்கொண்டே "அடியேன் கந்தசாமி" என்று குறுநகை தோன்ற மெது வாகச் சொன்னார். அடிகள் மிகவும் வியப்பான தோற்றத் தோடுங் குரலோடுந் "தாங்களா? தங்களைப் பார்க்க வேண்டுமே என்று மிகவும் ஆவலுடன் இருந்தேன். தங்கள் அருமை பெருமைகளை எல்லாம் பல்லாண்டு களாகக் கேள்விப்பட்டு வருகிறேன்; தங்கள் தமையனாரைப்பற்றியும் மிகுதியாய்க் கேள்விப்பட்டிருக் கிறேன்; தாங்கள் இக்காலத்து இரட்டையர்கள் அன்றோ? தங்களைப்பார்ப்பது அளவு கடந்த மகிழ்ச்சியைத் தரு கின்றது" என்று அடிகள் முகமலர்ந்து ஆர்வமுடன்-ஆராமகிழ்ச்சியுடன் பேசினர்.

அவர் அடிகள் உரைகளால் மிகமகிழ்ந்து மிகப்பணிவான சொற்கள் பலவற்றைச் சிறிதே பேசினர். அடிகள் தம் முன் வந்தமர்ந்தவர்களை எல்லாம் விட்டு அவரிடமே பல்துறைகளைப்பற்றிய ஆய்வுரைகளைப் பேசி அளவளாவினர். இவர்தாம் கந்தசாமிப்பிள்ளை என்றறிந்தபோது எனக்கு ஏற்பட்ட திகைப்பும், வியப்பும், மகிழ்ச்சியும் சொல்லிமுடியாது. இவ்வளவு பெரும்புலவர் இவ்வளவு அடக்கமும் பணிவுமாக இருக்கின்றாரே என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.''

## ரூ. வை. சுந்தரேச வாண்டையார்

### தோற்றம்

கல்வெட்டு ஆராய்ச்சிக்கலைஞர் எனவும் சைவ சித்தாந்த வித்தகர் எனவுஞ் சிறப்புப்பெயர்கள் பெற்ற திரு. சுந்தரேசவாண்டையாரவர்கள் சோழவள நாடென்னும் பொன்னிவள நாட்டிலே மாயூரம் சிறு வட்டத்திலே திருக்குறுக்கை வீரட்டானத்திற்கு மேல்பால் உள்ள சோத்த மங்கலம் என்னும் ஊரில் வையம் புரந்த வண்டமிழ் மன்னர்மரபிலே, பெரிய அரண்மனையாரின் வழித்தோன்றலாகிய வைத்தியலிங்க வாண்டையார் என்பவருக்கும் அவர்தம் மனைவியாராகிய சிவகங்கை யம்மையார் என்பவருக்கும் அருமைப் புதல்வராகச் சிதம் பரத்தையடுத்த இராதாநல்லூர் என்னுஞ் சிற்றூரிலே 1899ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் மூன்றும்நாள் ஞாயிற்றுக்கிழமை மார்கழித் திருவாதிரை நன்னாளிலே இம்மாநிலத்திலே பிறந்தார்.

### கல்வி

இவருக்குக் கல்வியில் ஆர்வத்தையூட்டியவர் சிதம் பரஞ் சிறுவட்டத்தில் உள்ள ஆதிவராக நல்லூர் கிருட்டிணசாமி ஐயர் என்பவராவர். ஆட்கொண்ட நத்தம் என்னுஞ் சிற்றூரில் தொடக்கப்பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியிற் பயின்று மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றிபெற்றார். பிறகு சிதம்பரம் போதனுமுறைப் பாடசாலையிற் பயிற்சி பெற்று வெற்றி பெற்றார்.

### திருமணம்

திருக்குடந்தையை அடுத்த திருப்புறம்பயம் என்னும் ஊரில் பெருநிலக்கிழாராக இருந்தவரும், சிவ

நெறிப்பற்றும் செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே அமையப் பெற்றவரும், துறவியர்க்கும், புலவர்கட்கும் புரவலராக விளங்கியவரும், திருப்புறம்பயம் பதிகம், தமிழ் மன்னர் வரலாறு முதலிய நூல்களை இயற்றியவரும் ஆகிய கிருட்டிணசாமி என்பவருடைய மூன்றாவது மகளாகிய சாரதாதேவி என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்தார்.

## மனைவியின் மாண்பு

மனைவியாக வாய்த்த பெண்மணி பேரறிவும் பேரழகும் சிவபத்தியும் அமையப்பெற்றும், தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சிபெற்றும், திருக்கோவிலில் வழிபாடு புரியும்போது பூசகர் மலரை இறைவன்மீது போடத் தாம் மந்திரங்களை உரைக்கும் ஆற்றலுடையவராகவும் அமைந்திருந்தனர். இவ்வம்மையாருடைய தாயார் அம்மாக்கண்ணு என்பார் இறந்தபொழுது தம்கணவனார் பாடியது போன்று இரங்கற்பா இயற்றிக்கொடுத்தனரெனின் இவ்வம்மையாருடைய கல்வியறிவைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இவ்வம்மையார் தங்கணவனார்க்கு அந்நாளில் தமிழில் பற்றை மிகுதியாக ஊட்டிய படியினால்தான் வாண்டையார் அவர்கள் பின்னாளில் பெரும் புகழ் பெற்றார். ஏழுவேலி நிலமுடைய பெருஞ் செல்வக் குடும்பத்தில் தோன்றியிருந்தும் இவ்வம்மையார் செல்வச் செருக்குச் சிறிதும் இல்லாமல் அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல் முதலிய இல்லற தருமங்களை இனிது நடத்தியிருந்தனர். மேலும் இவ்வம்மையார் வெயில் நேரத்தில் திருக்கோயிலைச் சுற்றிலுந் தண்ணீர் தெளித்தல், கோலமிடுதல் மலர்மாலை தொடுத்து இறைவனுக்கணியக் கொடுத்தல் முதலிய சிவத்தொண்டுகளையுஞ் செய்தனர். இப்பெண்மணி இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தியது ஓராண்டும்

பத்தொன்பது நாட்களுமேயாம். ஒரு பெண் மகவைப் பெற்ற மூன்றாம்நாள் நோய்வாய்ப்பட்டு ஒன்பதாம்நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தனர்.

### மறுமணமும் மக்கட்பேறும்

மனைவி இறந்த பிறகு ஏழாண்டுகள் வரை வாண்டையார் மணஞ் செய்து கொள்ளாதிருந்தார் பின்னர் உறவினர்களுடைய வேண்டுகோட் கிணங்கி மல்லியம் என்னும் ஊரில் மங்கையர்க்கரசி என்னும் மாது நல்லாளைத் திருமணம் புரிந்து கொண்டார். இப்பெண் மணியிடம் இரண்டு பெண் மக்களும் ஓராண் மகனுந் தோன்றினர்.

### ஆசிரியத் தொழில்

முதன் முதலாகத் திருவையாற்றில் ஆசிரியத் தொழில் புரியத் தொடங்கினர். தமிழ் நூல்களைக் கற்றுப் புலவர் தேர்வுக்குச் செல்ல வேண்டு மென்னும் பேரவா இவரிடம் மிகுதியாக விருந்தது. அந்நாளில் அரசர் கல்லூரியில் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை பேராசிரியராக விளங்கியிருந்தார். அவரிடந் தனிப்பட்ட முறையில் சங்கநூல்களைப் பாடங் கேட்டார். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல் களைப் பேரூர்ப் புலவர் அ. கந்தசாமிப் பிள்ளையவர் களிடம் பாடங் கேட்டார்.

### புலவர் தேர்வில் தேர்வு

புலவர் தேர்விற்குரிய பாடநூல்களைப் பாடங் கேட்டு முடித்த இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் புலவர் தேர்வுக்கு எழுதிப், புலவர் தேர்வில் வெற்றி பெற்றார்.

**கல்வெட்டுக் கலைஞர்**

சமயம் கிடைக்கும் பொழுதெல்லாந் தக்கார்களுடன் சேர்ந்து கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்யும் பணிகளில் ஈடுபட்டார். கல்வெட்டுக்களைப் பற்றிய சாதன நூல்களை ஆராய்ந்து கற்பதிலும் ஈடுபட்டார். இதனால் இவருக்குக் கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்யுந் துறையில் நல்ல புலமை யுண்டாகியது. ஐயாற்றில் ஆசிரியராகப் பணி யாற்றுங் காலத்திலேயே அரசர் கல்லூரி மாணவர்கள் இவருடைய இல்லத்தை எய்திக் கல்வெட்டுப் பாடங் கேட்கலாயினர்.

**பல இடங்களில் பணிபுரிதல்**

இவருடைய புலமையின் புகழ் பலவிடங்களினும் பரவியது. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக முத்துப் பேட்டை, குத்தாலம், திருத்தருப்பூண்டி முதலிய இடங் களிற் பணிபுரிந்தார். பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரை விரும்பி யழைத்தது. ஆகவே அண்ணா மலைநகர் சென்று திராவிட மொழியியல் துறையில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டார். அக்காலை சர் சி. பி. இராமசாமி ஐயர் போன்றவர்கள் இவருடைய கல்வெட்டு ஆராய்ச்சிப் புலமையைப் பெரிதும் பாராட்டினர். அங்குச் சில ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு வேலையில் இருந்து ஓய்வு பெற்று மேலும் கல்வெட்டு ஆராய்ச்சிகளில் ஈடு பட்டிருந்தார்.

**பனசையில் வேலை**

திருப்பனந்தாளில் நடைபெறும் கல்லூரியில் காசி மடத் தலைவரவர்கள் விருப்பப்படி பணிபுரிந்து பிறகு அதிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

**பலவிடங்களிற் பணி**

பிறகு சென்னையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சியாளராகவும் உறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

சென்னையிற் பணிபுரியுங் காலத்தில் நக்கீரர் கழகத்தாரின் விருப்பத்திற் கிணங்கக் கல்வெட்டு வகுப்புகள் நடத்தி, அனைவரும் பயனடையச் செய்தார். இவருடைய கல்வெட்டாராய்ச்சியினால் பல ஊர்களிலும் இருந்தவர்கள் சிறந்த பயனை யடைந்தனர்.

**புலவர்குழு உறுப்பினர்**

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தமிழகப் புலவர் குழு ஒன்று அமைத்து நடத்தி வருதலை அனைவரும் அறிவர். அக் குழுவிலும் இவர் ஓர் உறுப்பினராக விளங்கியிருந்தார். திருப்பதியிற் கூடிய தமிழகப் புலவர் குழுவின் கூட்டம் இவருடைய தலைமையின் கீழ் நடை பெற்றது.

**குணநலன்கள்**

நற்குணமும், நல்லொழுக்கமும், அன்புகனிந்த உள்ளமும், காந்தீயம் தவழும் எளிய நடையும் சிறிது போது பழகினும் ஒருவரை நண்பராக்கிக் கொள்ளும் நல்லியல்பும் இவரிடஞ் சிறந்த குணங்களாக அமைந் திருந்தன.

**இறையன்பு**

இவரிடம் கடவுளன்பு மிகுதியாகக் குடிகொண் டிருந்தது. தில்லைக் கூத்தப் பிரானிடத்திலும் ஐயாற்றப் பரிடமும் அளவிலாப் பேரன்பு கொண்டிருந்தார். ஐயாற்றில் தென்கயிலாயக் கோயிலில் எழுந்தருளியுள்ள அப்பர் பெருமானுக்குப் பலவகையான பணிகள் புரிந் துள்ளார். எவ்வூர்க்குச் சென்று தங்கினாலும் அவ்வூரில் அதிகாலையிலேயே எழுந்து நீராடித் திருக் கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்து உளமுருகிப் போற்றும் உயரிய பண்பினை இவர் தம்முடைய வாழ்நாள் முழுதுந் தவறாமல் கடைப்பிடித் தொழுகி வந்தார். அதனால் இவரிடந் தெய்வத் திருவருள் நன்கு அமைந்திருந்தது.

### பாராட்டுக்கள்

இவர் ஏறக்குறைய நாற்பத்தைந் தாண்டுகளாகக் கல்வெடடு ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினர். தமிழ் நூற் பயிற்சிக்குக் கல்வெட்டுக்கள் எவ்வாறு உதவு கின்றன என்னும் பொருளில் முதன் முதலாகக் கட்டுரை யெழுதி வெளியிட்டவர் இவரே யாவர். பல்கலைக் கழகத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் கல்வெட்டுகட்கு இவர் எழுதிய உரையையே பெரிதும் விரும்பிக் கற்கின் றனர். திருக்கோயில்களிற் செதுக்கப்பட்டுள்ள கல் வெட்டுக்களைப் புத்தகத்தைப் பார்த்துப் படிப்பதைப் போல விரைந்து படிக்கும் ஆற்றல் இவரிடம் நன்கு அமைந்திருந்தது. இவருடைய கல்வெட்டுப் புலமையை மகாமகோபத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், மதுரை டாக்டர் சோமசுந்தர பாரதியார், டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர், பட்டாபிராமசாத்திரி முதலியோர் பாராட்டிப் புகழ்ந்து நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ளனர்.

### கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர்

இவருடைய கல்வெட்டுப் புலமையைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் 'கல் வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்' என்னும் பட்டத்தை வழங்கி யருளினர்கள்.

### சைவசித்தாந்த வித்தகர்

குத்தாலம் உயர்நிலைப் பள்ளியிற் பணிபுரியுங் காலத்தில் அவ்வூர்ச் சிவன் கோவிலில் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கப் பெரியபுராணச் சொற்பொழிவு செய்தார் பலவகையான பொருள்களைக் குறித்து விரிவுரைகளாற்றினர். திருமுறைகளை ஊர்வலஞ் செய் வித்தார். இவருடைய சைவப் பணியைப் பெரிதும் பாராட்டிய அவ்வூர் மக்கள் இவரைப் பாராட்டிச், 'சைவ

சித்தாந்த வித்தகர்' என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கினார்கள். சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்க வேண்டுமென்பதையே சிறந்த தம்முடைய நோக்கமாகக் கொண்டு, 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்னுந் திருவாக்கிற் கேற்ப நாளும் பணிபுரிதலையே இவர் தம்முடைய கடமையாகக் கொண்டிருந்தார். இவர் தம்மையோ தம்முடைய குடும்பத்தையோ கவனித்துப் போற்றியவரல்லர். தக்கார் பலருடைய நல்லுறவு இருந்துங்கூடத் தம்முடைய மக்கட்கு உயர் பதவியையோ பொருளையோ தேடிவைத்தவரல்லர். இறுதிக் காலத்திற்கூடத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் அனுப்பிய பணியைச் செய்து அனுப்பி வைத்தார்.

### தருமையிற் பணியும் உடல்நலக்கேடும்

இறுதியில் தருமபுரம் ஆதீனத்தில் ஆதீனத் தலைவரவர்களுடைய விருப்பத்திற்கிணங்கப் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஒருநாள் காலையில் நீராடி இறைவழிபாடு முடித்தபிறகு உணவருந்தச் செல்லுங்கால் தந்நினைவற்றுக் கீழே விழுந்தார். ஆதீனத்தலைவரவர்களுடைய ஆதரவால் மருத்துவ பரிகாரஞ் செய்யப் பட்டது. மீண்டும் உணர்வு திரும்பியது. மாயூரம் மருத்துவமனையிற் சேர்க்கப்பெற்றார். நெல்லை மாவட்டத்தில் கோவிற்பட்டியில் மின்சார அலுவலகத்திற் பணியாற்றி வரும் மூத்த மருகனார்க்குச் செய்தி தெரிவிக்கப் பட்டது. அவர் விரைந்து வந்து மாமனாருடைய நிலையைக் கண்டு வருந்தினார். ஆடியமாவாசையன்று ஐயாற்றிற் கயிலைக் காட்சியைப் பற்றிப் பேச முடியவில்லையெனப் பெரிதும் வருந்தினார். தம்முடைய மூத்தமகள் கயிலைக் காட்சியின் ஒரு பகுதியை இசையுடன் படிக்கக்கேட்டு மகிழ்ந்தார். இரவு கயிலைக் காட்சியின் திருவுருவப்படம் ஆதீனத்தலைவரவர்கள் எழுந்தருளத் திருமுறைப் பாராயணம் முழங்கத் திருவுலாவருங் காட்சியை இறுதியாகக் கண்டு வணங்கினார். தாம் இறைவன் திருவடி

நீழலையடைதல் உறுதியென்னும் எண்ணம் இவருடைய உள்ளத்தில் உண்டாகியது. தம்முடைய உடலை ஐயாற்றில் தீயிடவேண்டுமெனத் தெரிவித்தார். ஆதீனப் பேருந்து வாயிலாக ஐயாறு சென்றடைந்தார். காலில் ஏற்பட்ட சிறு கட்டியின் காரணமாக மிகுந்த காய்ச்சல் நோய்கண்டது. மருத்துவமனையிற் சேர்க்கப்பெற்று அறுவை மருத்துவம் நடைபெற்றது. ஏழு இடங்களில் புரையோடிய காரணத்தால் அறுவை ஏழு இடங்களிற் செய்யப்பட்டன. ஆயினும் நல்ல உடல்நலம் ஏற்பட வில்லை.

## இறுதி

இனிமேல் இவ்வுடல் நிலைக்காதென்பதையுணர்ந்த இவர் தம்மக்கள் நால்வருக்கும் மருகனுர்க்கும் பன்னிரண்டு பேரக் குழந்தைகட்கும் திருநீறு வழங்கி வாழ்த்துரை கூறினர். மூத்த மருகனுர் தம்முடைய மாமனுர்க்கு இச்சமயத்தில் செய்யவேண்டிய உதவிகளை யெல்லாஞ் செய்து தம்முடைய அன்பைப் புலப்படுத்தினுர். நிலைமை தடுமாற்றமாக இருந்தபொழுது கூடத், "திருவாவடுதுறை செல்லுகின்றேன் இன்று என்னுடைய சொற்பொழிவு, தருமபுரஞ் செல்லுகின்றேன் அங்கு ஆக வேண்டியவைகளைக் கவனிக்கவேண்டும்" என்று தம் முடைய கடமைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். பிறகு எவரிடத்தும் எதுவும் பேசவில்லை. 'ஐயாரு! ஐயாறுடைய அடிகளோ!!" என்று கூறிக்கொண்டிருந் தார். ஆவணித்திங்கள் பத்தொன்பதாம்நாள் (4-9-69) காலை பத்துமணிக்கு மருத்துவமனையில் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

தருமையாதீனத் தலைவரவர்களுடைய ஆணையின்படி கோவில் சிறப்புடன் கோவில் மேலாளர்கள் வாண்டை யாரின் புகழைப் பாராட்டிப் பேசி இறுதிக் கடன்களைச் செலுத்தினர். கல்லூரி மாணவர்களும் புலவர்களும் மலர்

வளையங்கள் வைத்துப் போற்றினர். புலவர் அவர்கள் புகன்றிருந்தவாறே புலவரவர்களுடைய மூத்தமகன் திருநாவுக்கரசு புலவருடலுக்குத் தீயிட்டார். வாண்டையாரவர்கள் மண்ணுலகை விட்டு மறையினும் அவர் தம் ஆராய்ச்சிப் பெரும்புகழ் என்றுங் குன்றின் மேலிட்ட விளக்கென நின்று விளங்குவதாகும்.

### எழுதிய கட்டுரைகளும் நூல்களும்

இவர் தம்முடைய ஆராய்ச்சியின் பயனாகக் கீழ்க் குறிப்பிடும் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

### கட்டுரைகள்

(1) சைவமுந்தமிழும் (2) ஞாயிற்றின் வழிபாடு (3) கோயினுன்மணிமாலை (4) பொதுநிலை (5) ஓங்கார ஈஸ்வரமுடையார் கோவிற் கல்வெட்டு (6) மேற்காநடும் கீழ்க்காநடும் (7) திருப்பெருந்துறை ஆளுடையார் கோவில் கனக சபை மண்டபத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுப் பாடல்களின் விளக்கம் (8) திருவைகாவூர்க் கோவிற் கல்வெட்டு (9) தஞ்சை நாயக்க மன்னர்கள் கல்வெட்டு (10) மன்னார்குடி இராசகோபால சுவாமி கோவிற் கல்வெட்டு (11) திருப்பந்தணை நல்லூர்க் கோயிற் கல்வெட்டு (12) திருவேந்திபுரங் கோவிற் கல்வெட்டு (13) திருத்துருத்திக் கோவிற் கல்வெட்டு (14) திருவெதிர் கொள்பாடிக் கோவிற் கல்வெட்டு (15) திருப்பாச்சிலாச்சிராமங் கோவிற் கல்வெட்டு (16) திருவிந்தளூர்த் திருமால் கோவிற் கல்வெட்டு (17) கல்வெட்டால் அறியும் இருநாடக நூல்கள் (18) திருவண்ணாமலைக் கோவிற் கல்வெட்டுகள் (19) திரு அருணாசலமுடையார் கோவிற் கல்வெட்டுப் பாடல்கள் (20) கிடங்கில் திருத்திண்டீசுரம் கோவிற் கல்வெட்டு (21) மதுரை அச்சுதப்பநாயக்கர் கல்வெட்டு (22) திருவேள்விக்குடிக் கல்வெட்டு (23) பழுவேட்

டரையர் (24) திருவைகாவூர்க் கோவிற் கல்வெட்டு (25) இரும்புதல் என்னும் வைப்புத்தலம் (26) திருவலஞ் சுழிக் கோவிற் கல்வெட்டுகள் (27) தஞ்சை இராச ராசேசுரக் கல்வெட்டுகள் (28) திருவையாற்றுக் கோவிற் கல்வெட்டுகள் (29) ஒலோகமாதேவீசுரம் கல்வெட்டு (30) காந்தாரப்பண் (31) காந்தாரப் பண்ணின் இரு வகைகள் (32) காந்தாரப் பதிகங்கள் (33) வீராணத்து ஏரி (34) திருப்புவனம் கோவிற் கல்வெட்டுகள் (35) ஆச்சாள்புரம் கோவிற் கல்வெட்டுகள் (36) திரு நாவலூர்க் கோவிற் கல்வெட்டுகள் (37) சாத்தனூந் திருக்கோயிலும் (38) திருச்செந்தூர்க் கோவிற் கல் வெட்டுகள் (39) திருமுக்கூடற் கல்வெட்டு (40) திரு வாலங்காட்டுச் செப்பேடுகள் (41) திருபுவனை வரதராசப் பெருமாள் கோவிற் கல்வெட்டுகள் (42) திருக்கோளிலிக் கோவிற் கல்வெட்டுகள் (43) பலபொருள் உருவகப் பாசுரம் (44) எண்ணுயிரங் கல்வெட்டு (45) திருப்புறம் பயக் கல்வெட்டு (46) ஆதியுலாவை வெளியிட்ட சாத்தனூர் எழுந்தருளியுள்ள திருப்பிடவூர்க் கோவிற் கல் வெட்டுகள் (47) திருவொற்றியூர்க் கல்வெட்டு (48) திரு விசயமங்கை (49) திருவெண்ணெய் நல்லூர்க் கல் வெட்டு (50) திருக்கயிலாய ஞான உலா (51) திருவா வடுதுறைக் கல்வெட்டுகள் (52) திருமாணிகுழிக் கல் வெட்டு (53) மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (54) மதுரைத் திருக்கோவிற் கல்வெட்டு (55) கன்னியா குமரிக் கல்வெட்டு (56) தமிழ்த்தேன் (57) நந்தனூர் திருப்பதி (58) செருத்துணை நாயனூர் திருப்பதி முதலியன.

எழுதிய நூல்கள்

(1) கொட்டையூர்த் தலவரலாறு
(2) கொட்டையூர்த் தலமான்மியம்
(3) செம்பியன்மாதேவியார்
(4) திருவுசாத்தானக் கல்லெழுத்து

(5) அன்புநெறியினர் தம் வாழ்க்கைநெறி
(6) கல்வெட்டுத் தருங்கருத்துக்கள்
(7) கரும்படு சொல்லி மாலை
(8) அப்பர் ஐம்மணிமாலை
(9) மயிலாப்பூர்ப்பதிகம்
(10) தமிழ் நாட்டுக்கோவில்களின் கல்வெட்டுகள்
(11) இரண்டாந் திருமுறையில் உள்ள தலங்கள்
(12) ஒன்பதாந் திருமுறையில் உள்ள தலங்கள்
(13) அப்பருக்கு அப்பர் அளித்த கயிலைக்காட்சி
(14) திருக்குறள் பரிமேலழகர் உரையில் வந்துள்ள இலக்கணக் குறிப்புகள் விளக்கம்
(15) கல்வெட்டுக்களுக்கு விளக்கவுரை
(16) திருவடித் திருவிருத்தம்
(17) திருக்குறுகை வீரட்டம் திருநேரிசை

இவருடைய நாட்குறிப்பினால் பல ஆராய்ச்சியுரைகளை எழுதியுள்ளார் என்று அறியப்பெறுகிறது.

[வாண்டையார் என்னுடைய நண்பராக விருந்தும் பலமுறை நேரிற்கேட்டும் வரலாற்றுக் குறிப்புக்களை அவரிடமிருந்து பெறமுடியவில்லை. மேற்கண்ட குறிப்புகள் புலவரவகளின் அருமைப் புதல்வி திருமிகு செல்வி கரும்படு சொல்லியின் மூலமாகப் பெறப்பட்டன. இவ்வம்மையார் புலமைத்தேர்வு பெற்றுத் தமிழாசிரியையாகப் பணி புரிகின்றனர்.]

## க௦. காசிகாநந்த அடிகள்

### தோற்றம்

வேதாந்த சமயத்திற்கு நல்ல பணிகள் புரிந்த காசிகாநந்த ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் பாண்டி வளநாட்டிலே தேவி கோட்டை என்னுந் திருநகரிலே இராமசாமிச் செட்டியார் என்னுந் தனவைசியருக்கும் அவர் மனைவியாராகிய உமையாம்பிகையாச்சிக்கும் அருந்தவப் புதல்வராக ஆங்கிலம் 1887க்குச் சரியான விய ஆண்டு சித்திரைத்திங்கள் ஒன்பதாம்நாள் பிறந்தார்.

### உடலமைப்பு

இவருடைய உடல்திறம் கருமையாக இருந்தது. கண்ணில் செவ்வரி படர்ந்து விளங்கியது. உருவம் நீண்டு பெருத்திருந்தது. பார்வை யாவரும் கண்டு நடுங்கும் படியாக இருந்தது. கைகால் முதலிய எல்லா உறுப்புக் களும் ஆடவர்கட்மைந்திருக்க வேண்டிய முறைப்படியே அமைந்திருந்தன. இடத் தொடையில் மச்சம் ஒன்று இருந்தது. உடல் முழுவதும் கரிய மயிர் அடர்ந்திருந்தது. காது நன்றாக நீண்டு விரிந்திருந்தது. கண்கள் பெரியவாக இருந்தன. மார்பு விரிந்து விளங்கியது. கையில் துறவுக் குறியும், கல்விக் குறியும், எல்லா மக்களையும் தம் வழிப்படுத்தும் குறியும், அனைவர்க்கும் ஆசிரியராக இருக்கும் குறியும், சமயத்தை நிலைநிறுத்தும் குறியும் பிறசமய மறுப்புக் குறியும் ஆகிய ஆறு கைக்குறிகளும் பொருந்தியிருந்தன. வாக்கு வன்மையுடையதாக அமைந் திருந்தது. ஆடவர்கட்கிருக்க வேண்டிய எல்லா இலக் கணங்களும் இவரிடம் நன்கு அமைந்திருந்தன. இவருக்குக் காளியப்பன் என்று பெயரிட்டுக் காசி என்று அழைத்தனர்.

## கல்வி

இவருக்கு அகவை ஐந்தானவுடன் பள்ளியில் வைத்துக் கல்வி கற்பிக்கச் செய்தனர். இவர் அப்பள்ளியில் கற்கவேண்டியவைகளையெல்லாம் ஐந்தாண்டுகளில் கற்று முடித்தனர்.

## தொழிலில் இறங்குதல்

கல்வியை ஓரளவு இவர் கற்று முடித்தபிற்பாடு தாய் தந்தையர் இவரைத் தம்முடைய குலவழக்கப்படி வாணிபத் துறையில் பழகச்செய்தனர்.

## பர்மா செல்லுதல்

சில ஆண்டுகள் சென்றன. தொழிலின் பொருட்டுப் பர்மாவுக்குச் சென்றார். அங்குச் சில காலந் தங்கி வாணிப முறைகளைப் பழகியதன்றிப் பர்மா இந்துத்தானி ஆகிய இரண்டு மொழிகளையும் பேசவும் எழுதவுங் கற்றுக் கொண்டார். பிறகு தாய் நாட்டிற்குத் திரும்பினார்.

## கோவிலூரையடைதல்

தாய்நாட்டிற்குத் திரும்பிய இவர் தமிழ்மொழிதான் மற்றைய மொழிகள் எல்லாவற்றினுஞ் சிறந்தது; ஆகவே தமிழ்மொழியை நன்கு கற்றுணரவேண்டும் என்று எண்ணினார். வேதாந்த நூல்களையும் பிறநூல்களையும் கோவிலூர் மடத்திற்குச் சென்றால் நன்கு ஓதியுணரலாம் என்று முடிவுசெய்த இவர், தம்முடைய இல்லத்தை விட்டுப் புறப்பட்டுக் கோவிலூரையடைந்தார். அப்பொழுது அங்குத் தவத்திரு வீரசேகர ஞானதேசிகரென்னும் பெரியார் மெய்ஞ்ஞானச் செல்வராக எழுந்தருளியிருந்தனர். அப்பெரியாருக்குத் தொண்டுபூண்டு வேதாந்த நூல்களைக் கற்றுக்கொண்டிருந்தார்.

### காசிக்குச் செல்லல்

அந்நாளில் அண்ணுமலைச் சுவாமிகள் என்னும் பெரியார் காசிக்குச் சென்று உலகநாதப் பெருமானை வழிபட எண்ணினுர். வடநாட்டில் பேசும் மொழியாகிய இந்தி தெரியாதபடியால் இந்தி தெரிந்த இவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டுபோக எண்ணித் தமது விருப்பத்தை வீரசேகர ஞானதேசிகரிடந் தெரிவித்து அவருடைய உடன்பாட்டைப் பெற்ருர். இவரையும் உடனழைத்துக் கொண்டு தென்னுட்டிலுள்ள இராமேசுவரம் முதலிய சிவப்பதிகட்குச் சென்று இறைவழிபாடு செய்துகொண்டு இறுதியில் காசியை அடைந்தார். அங்கு அண்ணுமலைச் சுவாமிகள் சிலகாலந் தங்கினுர். இவர்மட்டும் திரும்பித் திருத்தில்லையை அடைந்து அங்கு ஆறு திங்கள் வரை தங்கிக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். பிறகு கோவிலூரை யடைந்து தம்முடைய ஞானுசிரியரிடம் நாநாசீவவாதக்கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசிவன்னபோதம், மகாராசாதுறவு, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், வேதாந்த சூடாமணி, இலட்சணுவிருத்தி, கைவல்லியநவநீதம் முதலிய வேதாந்த நூல்களை ஓதியுணர்ந்தார். காசிக்குச் சென்று வடமொழியைக் கற்றுணரவேண்டும் என்று எண்ணினுர். துறவுபெற்றுக்கொண்டு காசிக்குப்போக முடிவுசெய்து தம்முடைய விருப்பத்தை ஞானுசிரியரிடம் தெரியப்படுத்தினுர்.

### துறவு பெறல்

அப்பெரியார் இவருடைய பக்குவத்தை யாராய்ந்து கல்லாடையளித்துக் காசிகாநந்தர் என்று பெயர் சூட்டினுர்.

### காசிக்குச்சென்று வடமொழி கற்றல்

காசிக்குப் புறப்பட எண்ணிய இவர்க்குக் காரைக்குடி, தேவிகோட்டை, பலவான்குடி, கொத்தமங்கலம், கடியாப்

பட்டி, தேனிப்பட்டி, இராயவரம், கோனுபட்டி, கீழைச் சிவல்பட்டி, பனையப்பட்டி முதலிய ஊர்களிலுள்ள தன வைசியர்களும் சாக்கோட்டை வேதாந்த மடத்தலைவரும் பொருள் உதவிசெய்தனர். வீரசேகரஞானதேசிகரிடம் முதலிலே சரண்புகுந்த சுப்பைய ஞானதேசிகர் என்னும் பெரியார் காசியில் இருந்து வடமொழி கற்கும் முறைகளையும் தாம் முன்பு கற்ற முறைகளையுங் கூறியனுப்பினர். காசியை அடைந்த காசிகாநந்த அடிகள் துறவிகளின் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள வடமொழிப் பாடசாலையில் தாமும் ஒரு மாணவராகச் சேர்ந்து வடமொழியைப் பயிலலானர். அவ்வடமொழிப் பாடசாலையில் அடிகளாருக்கு ஆசிரியராக அமைந்தவருடைய பெயர் அச்சுதாநந்தபண்டிதர். இவர் உலகப் புகழ்பெற்ற சிவகுமார மிசிர பண்டிதரின் மாணவர். வடமொழி நூல்கள் யாவையுங் கற்றுத் தேறியவர். தமக்கிணையில்லையென்னும் புகழ்பெற்றவர். இத்தகைய பெரியாரிடம் அடிகளார் வடமொழி நூல்களைப் பாடசாலையிற் கற்றதன்றித் தம்முடைய இருப்பிடத்திற்கும் எழுந்தருளுமாறு செய்து கல்வி கற்றனர். அவ்வாறு இருப்பிடத்திற்கு எழுந்தருளுதற்காகத் திங்கள் ஒன்றுக்குப் பத்து ரூபா வீதம் கொடுத்து வந்தனர். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் வரை வட மொழிகள் பலவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். மேலும் தேவி பிரசாதகவி என்னும் புலவரிடத்தில் பூர்வமீமாம்சை யோகநூல் முதலியவைகளையும் நித்தியாநந்தர் என்னும் பண்டிதரிடத்தில் தருக்கம், வியாகரணம் ஆகியவைகளையும் ஓதியுணர்ந்தார்.

**கற்ற நூல்கள்**

அடிகளார் காசியில் கற்ற நூல்கள் இலகு சித்தாந்த கௌமுதி, சித்தாந்த கௌமுதி, நியாயகாரிகாவலி, நியாய சித்தாந்த முக்தாவலி, திநகரி, தருக்க சங்கிரகம், தருக்கசங்கிரக தீபிகை, நீலகண்டி, பதகிருத்தியம், நியாய போதினி, அநுமாநகண்டம், யோகசூத்திரம், வியாச

பாடியம், வாசஸ்பதி மிசிர வியாக்கியானம், போசவிருத்தி, சாங்கிய காரிகை, சாங்கிய தத்துவகௌமுதி, அருத்த சங்கிரகம், நியாயப்பிரகாசம், சைமிநீய நியாயமாலை, வேதாந்த பரிபாஷை, பேததிகாரம், பஞ்சதசி, பிரம சூத்திர சாரீரக பாஷியம், பகவத் கீதை பாஷியம், பத்து உபநிடதங்கள், தத்துவப் பிரதீபிகை, அத்வைத சித்தி, கண்டனகண்ட காத்தியம், நைஷ்கர்மசித்தி, கிராதார்ச்சுநீயம், இரகுவம்சம், சங்கர திக்விசயம் முதலியனவாம்.

### உதவி

அடிகளார் காசிமாநகரில் தங்கிக் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் உணவு முதலிய செலவுகளுக்கு அறப்பெருஞ் செல்வர்கள் சிலர் திங்கள் ஒன்றுக்கு ஐம்பது ரூபா வீதம் உதவி செய்து கொண்டிருந்தனர். இவ்வாறு ஐந்தாண்டுகள் வரை உதவினர். அதன் பிறகு அடிகளார் கோவிலூரை யடைந்தனர்.

### திருப்பூவணத்தில் திருமடம்

கோவிலூரை யடைந்த அடிகளார் அங்குச் சில ஆண்டுகள் தங்கியிருந்தனர். பிறகு திருப்பூவணத்தில் அன்பர்கள் பலருடைய உதவியைக் கொண்டு வேதாந்த மடம் அமைத்து அதில் மாணவர் பலருக்கு வேதாந்த நூல்களைப் போதித்துக் கொண்டும் வேதாந்த நூல்களுக்கு உரையெழுதி அச்சிட்டுக் கொண்டும் இருந்தனர். அடிகளாரால் இயற்றப் பெற்றனவும் உரை யெழுதப் பெற்றனவும் அச்சிற் பதிப்பிக்கப் பட்டனவுமான நூல்கள் பலவாம். அவற்றுள் சில நூல்களின் பெயரை அடியிற் காண்க.

(1) வேதாந்த பதார்த்த மஞ்சூஷா வசனம்

(2) விசாரசாகர வசனம் இந்தி மொழிபெயர்ப்பு

(3) சுவராச்சிய சித்தி வசனம் மொழி பெயர்ப்பு

(4) வியாச தாற்பரிய நிர்ணயம் வசனம் மொழி பெயர்ப்பு
(5) நைஷ் கர்ம்ய சித்தி வசனம் ஷை
(6) வேதாந்த சித்தாந்த முக்தாவலி வசனம் ஷை
(7) வேதாந்த பரிபாடை வசனம் ஷை
(8) கதாசரித் சாகரம் வசனம் ஷை
(9) மண்டல பிராமண உபநிடத் ராசயோக [பாடியம் ஷை
(10) ஈசாவாசிய உபநிடத் சங்கர பாடியம் [வசனம் ஷை
(11) வேதாந்த சஞ்ஞா வசனம் ஷை
(12) அரி மீடே ஹரிதத்வ முக்தாவலி உரை
(13) பகவத் கீதை 15 ஆவது அத்தியாயம் மூர்க்க சதகம் பதவுரை
(14) நாநா சீவ வாதக் கட்டளை சத்தியார்த்தப் பிரகாசிநி உரை
(15) கீதாசாரத் தாலாட்டு லகுசந்திரிகை உரை
(16) ஷை மின்னொளி பதவுரை
(17) மகாராசா துறவு மனப் பிரசாதிநி உரை
(18) பக்திசதக பதவுரை பொழிப்புரை
(19) சீடாசாரம் பால போதினி உரை
(20) வைராக்கிய சதகத் தோத்திர உரை
(21) வைராக்கிய தீபம் பதவுரை
(22) திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சி உரை
(23) மந்திரோப தேசம்
(24) மகான்கள் வரலாறு
(25) துவித சைவ கண்டனம்
(26) வீரசேகர ஞான தேசிகர் வரலாறு
(27) மார்கழித் திங்கள் பாராயண மஞ்சரி

(28) ஒன்பது துறவிகள் திருவெம்பாவை
(29) வேதாந்த சாஸ்த்ர ரத்நாவலி
(30) விவேக சூடாமணி
(31) அஞ்ஞவதைப் பரணி
(32) கைவல்யநவநீதம்
(33) ஈசுவரகீதை
(34) பகவத்கீதை
(35) பிரமகீதை
(36) ஞானவாசிட்ட மூலம்
(37) பஞ்சதசி மூலம்

இப் பெரியார் 100 நூல்கள் வரை இயற்றியும் அச்சிட்டும் வெளியிட்டுள்ளார். அதனால் இவருக்குச் சதகிரந்த கர்த்தா என்று ஒரு பெயரும் வழங்கியது. இவரிடம் பலபேர் கல்லாடை பெற்றுத் துறவியாயினர்.

**இறுதி**

எண்பத்திரண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்திருந்த இவர் 30-1-1970 க்குச் சரியான சௌமிய ஆண்டு தைத் திங்கள் பதினேழாம் நாள் வீடு பெற்றார்.

அடிகளார் காலமான நாட்குறிப்பைப் பற்றித் தவத்திரு மகா சோமசுந்தர ஐயா என்பவர் பின்வருஞ் செய்யுளைப் பாடியுள்ளார்.

**நாற்பத்தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

*சீர்கொண்ட கலிவருட மையாயி ரத்திஞெடு*
*சேர்ந்தவெழு பத்தொன்றினிற்*
*செப்புசௌ மியவாண்டு மகரமதி பதினேழு*
*தேதிகவி வாரமதனிற்*
*றினகர னுதித்தபின ரிருபத்து மூன்றின்மிசை*
*சேருமுக் காற்கடிகையிற்*
*றிதியபர பட்சமுறு மட்டமிகொள் சோதியுறு*
*திகழ்மிதுன லக்கினத்தே*

செந்தமிழ்க் கும்பமுனி தங்குமல யாசலத்
தென்றல்வரு பாண்டிநாட்டிற்
றெண்டிரைகள் வீசுமணி வையையின் றீரமொளிர்
சினகர மெழுந்தருள்பிரான்
சிவபரஞ் சோதியுமை சௌந்தரிய தேவியருள்
செய்திருப் பூவணத்தே
திகழுமொரு வேதாந்த மாமட மமைத்துயர்
சிறப்புற விருந்தபெரியோன்

பேர்கொண்ட நகரதன வணிகர்தொண் ணூற்றூறு
பெருநகரு ளொன்றதாகிப்
பிங்கல மலர்ப்பெணுறை தேவிகோட் டைப்பதி
பிறப்பிடம தாகவுடையான்
பெருகுமாத் தூர்க்கோயின் மணலூர் வகுப்பினிற்
பெருமைபெற வந்தசீமான்
பேணுதவ ராமசா மிக்குரிசி லுமையம்மை
பெற்றமக வானபெருமான்
பெட்புநட் பாதிபல நற்குண மிகுந்தறிஞர்
பிரியமுறு திருவுளத்தான்
பிஞ்சகன் காந்தையுமை ராஜரா ஜேஸ்வரி
பிரார்த்தனை புரிந்துவந்தோன்
பேருலகி லேமகன் றந்தைக் கெயற்றுதவி
பிழைபடா தாற்றிநின்றோன்
பேசுபொழு தெதிருற்ற பேர்கண்மன மகிழ்வுறும்
ப்ரசபப்ர வசனமொழிவோன்

தார்கொண்ட சமிவனக் கோயிலூர் மடமெனுந்
தவராச தானியைந்தாஞ்
சற்குரவன் வீரசே கரஞான தேசிகன்
றுண்மலர் முடிக்கணிந்தோன்
தவமுனிவர் அண்ணா மலைப்பரன் மகாதேவ
சற்குருவி னெடுநியாயச்
சந்திரவே தாந்தபாஸ் கரவீர கப்பைய
சாமிசக பாடியானோன்

சானவி கறங்கிவரு காசியம் பதிசென்று
தங்கியிரு மொழிபயின்றோன்
தர்க்கமொடு காவிய வியாகரண வுபநிடத
சலதியிடை நீந்திவந்தோன்
தனதுநூல் பிறர்களூல் நூறுநூல் வெளியிட்ட
தக்கமதி நுட்பமுடையான்
தரணிமிசை மணிமகுட மன்னரும் பார்க்கநிலை
தருதிமிகு பெருமைநிறைவோன்

ஆர்கொண்ட மதியாளர் வாதப்ரசண்டம
தசைக்கரிய கனகமேரு
ஐயமறி யாமைவிப ரீதகிரி தூளிசெயும்
அவனியொளிர் வஜ்ராயுதம்
அத்துவித பட்சப்ர 'தூடணப் பரசமய
அபரிமித மதகரியெலாம்
அகம்வெருவி யோடிவிட அந்தர முழங்கிவரும்
அசனியென ஆர்த்தசிங்கம்
ஆதவனு மம்புவியு முள்ளவரை கீர்த்திபெறும்
அறிவுநிறை புதியசனகன்
அந்தமறு மிவன்மகிமை யிந்தவொரு செய்யுளி
லடங்கவிட மில்லையந்தோ
ஆசிலா மணியெங்கள் காசிகா னந்தனூ
ஞசிரிய னங்கம்விட்டே
அமிர்தமய மானபரி பூரண மகாசச்சி
தானந்த மாகினனரோ !

## ௬௬. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை

**தோற்றம்**

*"சிந்தனை செய்கநீ சிந்தித்துக் கண்டதை*
*நிந்தனைக்கஞ் சாது நிகழ்த்தென்ற—*சிந்தைத்*
*திருகூட சுந்தரத்தின் தீந்தமிழ்ச் சொல்லை*
*அருமறை யென்றே அறி"*

என்று அறிஞர்களாற் பாராட்டப்பெற்ற திருகூட சுந்தரம் பிள்ளை ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றொன்றும் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள், திக்கெலாம் புகழுந் திருநெல்வேலியிலே சிந்து பூந்துறையிலே பொன்னப்ப பிள்ளை என்பவருக்கும் சுவர்ணத்தம்மாள் என்பவருக்கும் அருமைப் புதல்வராகப் பிறந்தார். தந்தையார் ஊர்காவல் வட்ட ஆய்வாள (போலீசு சர்க்கிள் இன்ஸ்பெக்ட)ராகப் பணிபுரிந்திருந்தார்.

**நன்னெறி பயிற்றல்**

தம் மகனை நன்னெறியிற் பயிற்றல் வேண்டும் என்று எண்ணிய தாய் தந்தைய ரிருவரும் சன்மார்க்க பத்தி, தாய்நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று, கல்வியிடத்திலே ஆர்வம், எளியவர்களிடத்திலே ஈவிரக்கம் முதலிய பண்புகளை இளமைப் பருவத்திலேயே கற்பித்தார்கள்.

**கல்வி**

திருகூட சுந்தரனுர் ஆண்டு ஐந்து நிரம்பியவுடன் பள்ளியிற் சேர்க்கப் பெற்றுர். ஐந்தாம் படிவம் வரை நெல்லை இந்து கல்லூரியிற் பயின்ருர். ஐந்தாம் படிவத்தில் முதல் மாணவராகத் தேறியபடியால் முதற் பரிசு பெற்ருர். பிறகு வேலூர் மகந்து உயர்நிலைப்

* சிந்தை—சிந்துபூந்துறை.

பள்ளியில் பள்ளி இறுதி (மெட்ரிகுலேஷன்) வரை பயின்றார். இங்கும் இவருக்கு முதற் பரிசு கிடைத்தது. பிறகு இடைநிலையை (இண்டர்மீடியட்டை) நெல்லை இந்து கல்லூரியில் பயின்று அதிலும் முதற் பரிசு பெற்றார். பீ. ஏ. ஆனர்ஸை சென்னை மாகாணக் கல்லூரியிற் பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் எப். எல். பயின்று சென்னை அரசாங்கத்தின் ரொக்கப் பரிசு பெற்றார். பி. எல் தேர்வையும் எழுதி வெற்றி பெற்றார். வழக்கறிஞர் தேர்வில் வெற்றிபெற்ற பின் 1919ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார். 1921ஆம் ஆண்டுவரை அங்கு வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்.

## நாட்டு விடுதலைக்குத் தொண்டு

1921 ஆம் ஆண்டில் நாட்டு விடுதலை யியக்கம் நாடெங்கும் பரவியது. பலரும் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டு விடுதலைக்கு உழைத்தார்கள். அச்சமயத்தில் திருகூட சுந்தரனாரும் வழக்கறிஞர் தொழிலை உதறிவிட்டு நாட்டு விடுதலைக்கு உழைக்கத் தொடங்கினார். 1921 ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டுவரை ஊதியம் பெறாத காங்கிரசு ஊழியராக உழைத்தார்.

நெல்லை மாவட்டக் காங்கிரசுச் செயலாளராக இருந்து மாவட்டம் முழுவதினும் காங்கிரசு இயக்கத்தைப் பரப்பினார். தென்காசியில் தாலுகா மாநாடும் கோவிற்பட்டியில் மாவட்ட மாநாடும் நடைபெறச் செய்தார். 1922 ஆம் ஆண்டில் நெல்லை நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராகிக் கூட்டத்தின் நடவடிக்கைகளைத் தமிழில் எழுதுமாறு செய்தார். சட்டை தலைப்பாகை முதலியன அணியும் வழக்கத்தை விட்டு விட்டு வேட்டியும் மேல் துண்டும் அணியும் பழக்கத்தை மேற்கொண்டார். கதரினால் ஆகிய குல்லாவையும் அணிந்தார்.

1921ஆம் ஆண்டு முதல் மூன்ருண்டுகள் நெல்லை மாவட்டக் காங்கிரசின் செயலாளராக இருந்து காரியங்களைத் திறமையுடன் நடத்தினுர். நெல்லை மாவட்டத்தில் காங்கிரசு சோசலிசப் பிரசாரஞ் செய்தார். ஐம்பது ஊர்களில் 'காங்கிரசுக் கமிட்டி'களை நிறுவினுர். 1922ஆம் ஆண்டில் "சுயராச்சியம்—அதன் பொருளும் அவசியமும்" என்னுஞ் சிறு வெளியீட்டை வெளியிட்டார். அதனை மக்கள் படிக்காமல் எறிந்துவிடக் கூடாது என்னும் எண்ணத்தோடு அவ்வெளியீட்டிற்கு ஒரு தம்படி விலை வைத்தார். மற்றும் ஆயிரக்கணக்கான துண்டு விளம்பரங்களை விருதுநகர் மாரியம்மன் திருவிழாச் சமயத்தில் வெளியிட்டார்.

1924ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சென்று காங்கிரசுப் பிரசாரம் செய்தார். இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டு இலங்கை அரசினர் மருண்டு அச்சங் கொண்டனர். மக்கள் உரிமைப்போர் தொடங்கி விடுவரோ என நடுங்கினர். இவரை வலுக்கட்டாயமாகப் பிடித்துக் கப்பலேற்றி இந்தியாவுக்கு அனுப்பிவிட எண்ணினர். ஆனுல் அவ்வாறு அனுப்ப முடியவில்லை. எதற்கும் அஞ்சாமல் இவர் தம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். 24 மணி நேரத்தில் இலங்கையை விட்டு இவர் வெளியேறிவிட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தனர்.

**கைக்கூலிக்கு இணங்காமை**

1926ஆம் ஆண்டில் சென்னைச் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு இவர் தாமும் ஒரு வேட்பாளராக நின்ருர். இவரை எதிர்த்து நின்றவர் இருபதாயிரம் ரூபா தருவதாகவும் தம்மை யெதிர்த்துப் போட்டியிடுவதினின்றும் விலகிக் கொள்ள வேண்டுமென்றுங் கட்டாயப்படுத்தினுர். இவருடைய தாயார் இதனைக் கேட்டு, "எங்களுக்குக் காசு வேண்டாம் கடப்பாட்டினின்றும் வழு

வாமைதான் வேண்டும்'' என்று கூறி மறுத்துவிட்டார். எதிர்த்து நின்றவரோ அப்பொருளைத் தேர்தலிற் செல விட்டுத் தாம் வெற்றி பெற்று இவரைத் தோற்கடித்து விட்டார். ஆயினும் வெற்றி பெற்றவருக்கு நடக்க வேண்டிய பெரிய ஊர்வலம் முதலிய சிறப்புக்கள் இவருக்கு நடைபெற்றன.

மறியலுஞ் சிறையும்

1930 ஆம் ஆண்டில் செட்டி நாட்டில் உப்பு அறப்போர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதனாற் சிறைக்குஞ் சென்றார். விடுதலை யடைந்தவுடன் துணிக் கடை மறியல் கள்ளுக்கடை மறியல் முதலியவைகளை நடத்தினார். 1936 ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் நடை பெற்ற மாநாட்டில் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சிக் கழகத் தேர்தல் சட்டமன்றத் தேர்தல் ஆகியவை களில் மனைவியோடு கடுமையான முயற்சியில் ஈடுபட்டுத் தங் கொள்கைகளை யாண்டும் பரப்பினார். காங்கிரசின் கொள்கைகளை நன்கு உணர்ந்து கொள்ளாமலிருந்த செட்டி நாட்டில் காங்கிரசின் உரிமைக் கொள்கை எங்கும் பரவுமாறு செய்தார். பலரும் உரிமைப் போரில் ஈடுபட்டு நாட்டு விடுதலைக்காக உழைக்கலாயினர். இவர் கதர்த் துணியைத் தோளிற் போட்டுக் கொண்டு எங்குஞ்சென்று விற்பனை செய்தார். இராட்டினங்கள் செய்வித்துப் பல ருக்கும் விலையில்லாமல் வழங்கினார். 1927 ஆம் ஆண்டில் காந்தியடிகள் உரிமைப் போரின் பொருட்டுங் கதர் வளர்ச்சியின் பொருட்டும் நிதி திரட்டவந்த காலை பல ஊர்களிலும் பணமுடிப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார். காரைக்குடியில் இருந்தபோது கதரணிபவர் ஊர்வலம் நடத்தினார். மூடிவிடும்படியான நிலையிலிருந்த கதர்க் கடைகளை யெல்லாம் நன்றாக நடைபெறச் செய்தார். அமராவதி புதூரில் ஆசிரியர்களையும் மாணவர் களையுஞ் சேர்த்துக் கொண்டு தெருக்களைச் சுத்தஞ் செய்தார். 1931ஆம் ஆண்டில் திருமணப் பந்தர்,

மேளம், நகை, தாலி, வைதிகச் சடங்குகள் முதலியன இல்லாமல் பலருக்குத் திருமணங்களைச் செய்துவைத்தார். மணமக்கள் இருவருஞ் சேர்ந்து நாட்டுத் தொண்டு செய்யுமாறு செய்தார். பலருக்குக் கலப்பு மணங்கள் செய்து வைத்தார். 1932ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் தீண்டாமை விலக்குச் சங்கம் நிறுவி அதன் செயலாளர் ஆனுர். பெண்கள் பகுதிக்கு மனைவியார் செயலாளராக விருந்தார். இருவரும் நாஞ்சில் நாட்டில் மிகு அதிகமாகச் சொற்பொழிவு செய்து கோவிலில் தீண்டப்படாத மக்களும் நுழைந்து வழிபாடு செய்தற்கு அடிகோலினர். நீலவானிற் கதிரவனுடைய தோற்றத்தைக் காட்டும் தீண்டாதார் விடுதலைக் கொடியை உண்டாக்கி எங்கும் பறக்க விட்டனர். நற்குடியில் தோன்றிய பெரியோர்களைச் சேர்த்துக்கொண்டு தெருக்களைச் சுத்தஞ் செய்தார்.

## பலவிடங்களில் நாட்டுத்தொண்டு

1935 ஆம் ஆண்டில் பர்மாவுக்குப் போய்க் கதர்த் துணியின் பெருமையை யாண்டும் பரப்பினுர். 1936ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் நடந்த மாநாட்டில் தலைமை தாங்கினுர். இவர் மனைவியார் படத் திறப்புவிழா நடத்தினுர். 1938 ஆம் ஆண்டில் தேவகோட்டையில் நகர் மன்றத் துணைத் தலைவரானுர். இவருடைய மனைவியார் உறுப்பினராக இருந்தார். நகர்மன்றத் தீண்டப்படாத் தொழிலாளர்களுக்கு நல்ல வசதிகள் ஏற்பட வழி செய்தார். 1939ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்ற உறுப்பினரானுர். 1941ஆம் ஆண்டு முதல் 1946 ஆம் ஆண்டுவரை நாகர் கோவிலில் நாட்டு விடுதலைக் கொள்கைச் சொற்பொழிவுகளை மிகு அதிகமான அளவிற் செய்தார். 1946 ஆம் ஆண்டில் சென்னையில் "தமிழ் அரிசன்" இதழுக்கு ஆசிரியரானுர். 1947ஆம் ஆண்டில் கலைக் களஞ்சிய ஆசிரியர் குழுவில் சேர்ந்து அப்பணி முற்றுப் பெறும் வரை கூட்டாசிரியராகப் பணி

புரிந்தார். 1963ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் எம். லிட். தேர்வுக் குழுவில் ஓர் உறுப்பின ராஞர். சொர்ணம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்திஞர். காந்தியடிகளின் கட்டுரைகளைத் தமிழில் முதன் முதல் மொழி பெயர்த்து வெளியிட்டவர் இவரே. "பாபுஜீ காட்டும் பாதை" என்பது இவருடைய மொழி பெயர்ப்புக்களில் குறிப்பிடத் தக்கது.

## குடும்பக் கட்டுப்பாடு முதலியன

1921 ஆம் ஆண்டுமுதல் சோஷலிசம், குடும்பக் கட்டுப்பாடு, நாட்டு விடுதலை மூன்றையும் பற்றிப் பேசி வந்தார். 1937 ஆம் ஆண்டில் திருப்பூண்டி மாநாட்டுத் தலைமை யுரையிலும் இம் மூன்றையும் வற்புறுத்திப் பேசிஞர். குடும்பக் கட்டுப்பாடு பற்றி இவர் எழுதிய நூலே தமிழிற் சிறந்ததாகும். இந் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் பாராட்டுப் பத்திரம் வழங்கி யுள்ளனர். இந்நூல் இதுவரை பதிஞெரு பதிப்பு வரை வெளிவந்துள்ளது. "அறுவை மருத்துவத்துக்கு அஞ்ச வேண்டாம்" என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார்.

## பாரதியார் பாடல்

பாரதியாருடைய பாடல்களை நெல்லை மாவட்டத் திலும் செட்டி நாட்டிலும் முதன் முதலாகப் பரவச் செய்தார். பாரதியாரைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் முதன்முதல் பத்திரிகைகளில் எழுதியவர் இவரே. பாரதியாருடைய பாடல்கள் சிலவற்றைப் பொறுக்கி யெடுத்து அவைகளோடு பாரதியாருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் முதலியவைகளையுஞ் சேர்த்துச் சிறுநூலாக அச்சிட்டு எங்கும் பரப்பிஞர். இத்தகைய நிகழ்ச்சிகளால்தான் பாரதியாருடைய பாடல் சிறப்பு பாரதியாருடைய நாட்டு விடுதலைப் பற்று முதலிய செய்திகள் மக்களுக்கு நன்கு தெரியலாயின.

### தீண்டாமை விலக்கு

நாஞ்சில் நாட்டில் உள்ள வடிவீச்சுரம் என்னும் ஊர் வைதிகப் பார்ப்பனர்களால் நிறையப் பெற்றது. அவ்வூரில் இவர் தீண்டாமையைப் பற்றிச் சொற்பொழிவுகள் செய்தார். இவருடைய தீண்டாமைச் சொற்பொழிவுகளைக் கேட்ட வைதீகப் பார்ப்பனர்களும் பாராட்டினரேயன்றி யாரும் வெறுத் தொதுக்கவில்லை. 1932 ஆம் ஆண்டில் இவர் ஓர் ஊருக்குச் செல்லப் புகைவண்டி நிலயத்திற்குச் சென்றார். தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஓர் ஆள் இவருடைய பெட்டி படுக்கை முதலியவைகளைத் தூக்கிக்கொண்டு சென்றான். தீண்டத் தகாதான் படுக்கையைத் தீண்டித் தூக்கிச் சென்றது இவருடைய தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஊருக்குப் போய்த் திரும்பி வந்ததும் தாயார் "படுக்கை தீட்டாகி விட்டது" என்று கூறி அதனை நனைக்க வேண்டும் என்று கூறினார். இவர் அதனை மறுத்தார். ஓர் அறையில் தீண்டாதானைப் போல ஒரு திங்கள் தங்கியிருந்தார். இதன் பிறகு தாயார் சமாதானம் அடைந்தார். கோயில் நுழைவின் தொடக்க காலத்தில், பார்ப்பனர், வேளாளர், தீண்டாதார் ஆகியோர் சேர்ந்து சமைத்த பொங்கலை எல்லோருக்கும் வழங்கி உண்ணச் செய்தார். இவருடைய மனைவியார் உயர்குல இந்துப் பெண்களைச் சேர்த்துக் கொண்டு கோயில் நுழைவுக்கு உடன்பாட்டுக் கையெழுத்துக்களை மிகுதியாக வாங்கி அவைகளைத் திருவனந்தபுரம் அரசருக்கு அனுப்பிக் கோயில் நுழைவுக்கு அடிகோலினார். தீண்டாமை விலக்கை வற்புறுத்தும் வகையில் நந்தன் நாடகம் எழுதச் செய்து நடிக்கச் செய்தார். நாடகத்தின் இறுதிக் காட்சியில் இவரும் இவருடைய மனைவியாரும் தீண்டாதாராக நடித்தனர். தோட்டிகளை மாமா, அண்ணன் என்று இப்படியாக அழைக்குமாறு தம்முடைய மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

1945 ஆம் ஆண்டில் பெங்களூரில் சதாநந்தம் என்பவர் நடத்திய தீண்டப் படாதார் விடுதியில் மாணவர்

களோடு உறவாடினுர். தீண்டாதவர்களுடைய அழைப்புக்கு இணங்கி அவர்களுடைய வீடுகளில் விருந்துண்டார். அவர்களுடைய சங்கத்தில் இவருக்கு வரவேற்பிதழ் அளித்தனர். 1946 ஆம் ஆண்டுமுதல் இரண்டு ஆண்டுகள் சென்னையில் 'அரிசன்' தமிழ் இதழுக்கு ஆசிரியராக இருந்தார்.

1930 ஆம் ஆண்டில் காரைக்குடியில் கருத்தடைச் சங்கமும் இளமை மணத் தடைச் சங்கமும் ஏற்படுத்த எண்ணினுர். கருத்தடைச் சங்கத்திற்கு அந்நாளில் போதிய வரவேற்பில்லை. இளமை மணத் தடைச் சங்கத்திற்கு அரசர் அண்ணுமலைச் செட்டியாரைப் பாதுகாப்பாளராக இருக்குமாறு கேட்டுக் கொண்டார். அரசரும் அதற்கு இணங்கினுர். ஆனுல் இவர் திடீரென்று கைது செய்யப்பட்டபடியால் இரண்டு சங்கங்களும் நிறுவப் படாமலே போயின.

**கருத்தடை**

1931ஆம் ஆண்டில் வேலூர்ச் சிறையில் இருந்தார். அப்பொழுது காங்கிரசுக்காரர்கள் இவரைக் 'கருத்தடை' என்று கேலி செய்தனர். காந்தியடிகள் கூறிய தன்னடக்க முறையை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டு ஆண்டுகடோறுங் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டிருந்த காங்கிரசுக்காரர்களை இவர் கேலி செய்தார்.

**"விவாக மானவர்கட்கு ஒரு யோசனை"**

1934ஆம் ஆண்டில் தூத்துக்குடியிற் சொற்பொழிவு செய்தார். வ. உ. சி. அச் சொற்பொழிவைக் கேட்டு இவருடைய கொள்கையை ஆதரித்தார். 1936 ஆம் ஆண்டில் சாமிநாத சர்மாவை ஆசிரியராகக் கொண்ட திங்கள் இதழில், "ஒரு யோசனை" என்னும் கட்டுரையை எழுதினுர். பிறகு அதனைச் சிறிய நூலாக வெளியிட்டார். 1945ஆம் ஆண்டில் "விவாகமானவர்கட்கு ஒரு யோசனை"

என்னும் விரிவான நூலை எழுதினார். இந் நூலுக்குச் சென்னை ஸ்டான்லி மருத்துவ இல்லம் முதல்வர் முகவுரையெழுதினார். இந்நூல் அனைவராலும் நன்கு பாராட்டப் பட்டது.

துறவிகள் நட்பு

எம். ஏ. மாணவராக இருந்தபோது இந்து உயர் நிலைப் பள்ளியில் அன்னிபெசண்டு அம்மையார் சமய வாழ்வுக்குச் சின்னங்கள் தேவையில்லை யென்று கூறியதைக் கேட்டது முதல் திருநீறு அணிவதில்லை. குலசேகரம் பட்டினம் சாம்பிராணி சுவாமி, நெல்லை தட்சணா மூர்த்திசாமி, மதுரை நாகப்பசாமி, தருமபுரம் இராமலிங்கத் தம்பிரான் முதலியோர் இவருடைய துறவற நண்பர்களாக இருந்தனர்.

சமரச மனப் பான்மை

நெல்லையில் 1922 இல் 'சமய சமரச' சங்கம் ஏற்படுத்தினார். பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் டி. கே. சி. தலைமையில் இவரும் ஒரு நண்பரும் பேசினர். கிறித்தவக் கூட்டங்களில் கிறித்தவக் கொள்கைகளையும் முஸ்லீம் கூட்டங்களில் முஸ்லீம் கொள்கைகளையும் விளக்கிப் பேசினார். 1928ஆம் ஆண்டில் நெல்லையில் நடந்த சைவப் பெரியார் கூட்டத்தில் குழப்ப முண்டாகாதவாறு பாதுகாத்தார்.

பலவிடங்களிற் சொற்பொழிவு

தருமபுரம் ஆதீனம் இராமலிங்கத் தம்பிரான் திருநள்ளாற்றுக்கழைத்துச் சொற்பொழிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அங்கு சமயச் சொற்பொழிவும் அரசியற் சொற்பொழிவுஞ் செய்து பலருடைய பாராட்டுதலையும் பெற்றார். தச்ச நல்லூர்ப் பகுத்தறிவுச் சங்கத்தில்

கடவுள் உண்மை, கடவுள் இலக்கணம், கடவுள் வழிபாடு முதலியன குறித்து மூன்று நாட்கள் சொற்பொழிவு செய்தார். சைவசித்தாந்த சங்கத் தலைவர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை இவருடைய சொற்பொழிவுகளைப் பாராட்டினர். திருக் கோயில்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி "ரிவோல்ட்" என்ற பத்திரி கையில் எழுதினர். "வேயுறு தோளிபங்கன்" என்று தொடங்கும் கோளறு திருப்பதிகத்தில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தார். சிவபெருமானை நம்பி யவர்கள் நாளுங் கோளும் பார்க்க வேண்டியது இல்லை யென்பது இவருடைய அழுத்தமான எண்ணம். இதனைத் தம்முடைய நண்பர்களிடத்திலும் வற்புறுத்திக் கூறுவார். சென்னை தியாகராய நகர் தருமபுர ஆதீன மடாலயத்தில் ஆனைமுகக் கடவுள் நான்காம் நாள் விழாவில் திருநீறு உள்ளத்தைத் தூய்மை யாக்கவும் சிவமணி தீமையை எதிர்க்கவும் நினைவூட்டிகள் ; வெறுஞ் சின்னங்கள் அல்ல என்று விளக்கிப் பேசினர். திருத்தொண்டர் பதிகத்தில் திருநீலகண்டரை முதல் அடியாராகப் போற்றுவதேன் என்பதை விளக்கிக் கட்டுரை எழுதினர்.

### இலக்கியப் பணிகள்

பன்னிரண்டு உலக மதங்களின் சாரமான கருத்துக் களைத் தொகுத்து "அழியாச் செல்வம்" என்னும் பெயரோடு நூல் ஒன்று எழுதி வெளிப்படுத்தினர். நல்லறம் என்னும் சமண சமயப் பத்திரிகையில் புகையிலை விளம்பரம் வெளியானதைக் கண்டித்தார். அதன் பிறகு அப்பத்திரிகை ஆசிரியர் புகையிலை விளம்பரஞ் செய்தலை நிறுத்திக் கொண்டார். கிறித்தவர்களுடைய அவைகளில் சிலுவையின் பொருளை விளக்கினர்.

பாஞ்சாலி சபதம் என்னும் பாரதியார் காவியத்தைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சிக்குப் பரிசு தருவதாகப் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை விளம்பரஞ் செய்தார். அதற்கு

இவர் ஒருவர் மட்டுமே எழுதியனுப்பினர். மற்றவர்கள் எழுதியனுப்பாமைக்குக் காரணம் அரசினரிடங் கொண்டிருந்த அச்சமே யாகும்.

### கட்டுரைகள்

நாள் இதழ், திங்கள் இதழ் முதலியவைகளில் இவர் பல கட்டுரைகள் எழுதினர். அவைகளில் குறிப்பிடத் தக்கவை குறள் கற்கும் முறை, பாரதி பாடல்கள், பாரதி கொள்கைகள், தமிழ் இலக்கியம், தமிழ்மொழி வளர்ச்சி, பண்டைத் தமிழும் தற்காலத் தமிழும், இரண்டு அமுத சுரபிகள், வள்ளுவர் கூறும் கற்பு, காரணம் யாது? சங்க காலக் காதல், செங்குட்டுவன் வீரனா வெறியனா, கண்ணகி செய்த தவறு, பசலைநோய், இளங்கோ வடிகள் சிலப்பதிகாரஞ் செய்தது ஏன்? கம்பனைத் துய்க்கும் முறை, கம்பன் எதற்கு? வள்ளுவரும் வனிதையரும் என்பன முதலியன.

### இவர் இயற்றிய நூல்களும் மொழி பெயர்த்தவைகளும்

மந்தரை சூழ்ச்சி, சங்ககால வீரம், மாதவியின் மாண்பு, எனது பூங்கா, போருங் காதலும், டால்ஸ்டாய் நாவல், ஆங்கிலக் கவிதை மலர்கள், இதய உணர்ச்சி, தாசியின் காதல், சீனக் கதைகள், அழியாச் செல்வம், அறிவுக் கனிகள், அமுத மொழிகள், இனிய சுவைகள், அணையா விளக்கு, விஞ்ஞானப் பெரியார்கள், விஞ்ஞானம் எதற்கு?, குழந்தைகள் கேள்வியும் பதிலும், அப்பாவும் மகனும், அண்ணனுந் தங்கையும், தந்தையும் மகளும், குழந்தை எப்படிப் பிறக்கிறது? விவாகமானவர்கட்கு ஒரு யோசனை, கொக்கோக விளக்கம், ஆபரேசனுக்கு அஞ்ச வேண்டாம், பொழுது புலர்ந்தது, சைவ உணவு எது? காந்தி நூல்கள், மகாத்மாவின் பொன் மொழிகள், சத்தியாக் கிரகம், தீண்டாமை விலக்கு, காந்திவழி, பாபுசி காட்டும் பாதை முதலியன இவருடைய நூல்கள்.

**தந்துரை தந்த தமிழறிஞர்கள்**

இவருடைய நூல்களுக்கு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், ரா. பி. சேதுப்பிள்ளை, வ. வே. சு. அய்யர், தி. சு. அவிநாசிலிங்கம், எம். பக்தவத்சலம், பேராசிரியர் மகமது கனி, கோ. சுப்பிரமணிய பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, மு. வரதராசனார், பேராசிரியை இராசேசுவரி அம்மையார், பேராசிரியர் டி. என். சேஷாத்திரி, டி. கே. சிதம்பரநாத முதலியார், கல்கி. ரா. கிருட்டிணமூர்த்தி, பேராசிரியர் டாக்டர் மணவாள ராமானுசம், டாக்டர் சதாசிவம், திருமூர்த்தி, சர். பி. எஸ். வேங்கட்ராமன் முதலிய அறிஞர்கள் முகவுரை எழுதிச் சிறப்பித் திருக்கிறார்கள்.

**பி. ஸ்ரீ.**

இவரைப் பற்றி திரு. பி. ஸ்ரீ அவர்கள் சுதேசமித்திரன் இதழில் "நான் அறிந்த தமிழ் மணிகள்" என்னும் வரிசையில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதனில் ஒரு பகுதியை அடியிற் காண்க:

"தமிழ் நாட்டின் விடுதலை வரலாற்றுடன் இரண்டறப் பிணைந்து கிடப்பது பொ. திருகூட சுந்தரனாரின் தியாக வரலாறு. என்னைப்போல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்; தமிழன்பர். போலீசுத் தொடர்பும் உள்ளவர். இத் தேசபக்தர் அன்றைய சென்னை இராசதானியில் பிரசித்தராக இருந்த போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எஸ். பொன்னப்ப பிள்ளையின் செல்வப் புதல்வர்............

நான் திகைத்தேன்; சற்றுப் பயந்தேன்; வியந்தேன்; பாராட்டினேன்; நாளடைவில் வணக்கஞ் செலுத்துதற்குரிய ஒரு பெரியராகவும் மதித்தேன். ஏன்; நாளடைவில் ஒரு குட்டி மகாத்மாவாகவும் போற்றத் தொடங்கினேன். அப்படி வளர்ந்து வந்தது இவரது தியாக சௌந்தரியத்தின் விசுவரூபம்.

செட்டிமார் நாட்டிலே இவரது தேசியத் தொண்டின் அந்த உச்சநிலையை நான் காண நேர்ந்தது. ஆனால் ஆரம்ப சந்திப்புகளிலேயே பத்தரை மாற்றுத் தங்கமாகத் தெரிந்து கொண்டேன் இவரது குணாதிசயத்தை.

மறக்கமுடியாத குணசித்திரம்

இவரது பிரசாரத் துறைகள் பல. ஆனால் எல்லா வற்றுக்கும் ஓர் உயிராக அமைந்தது எது என்று சொல்லவா வேண்டும்? சுடச்சுட ஒளிவீசும் பொன்போல் துன்பங்களுக்கிடையே சொலித்த அந்தத் தியாக உணர்வு தான். வழக்குரைஞரின் தொழிலை விட்டுத் தேசிய உரிமை களுக்காகப் போராடிக் காங்கிரசில் சேர்ந்துகொண்ட அந்த 1921ஆம் ஆண்டு முதல் இவரது வாழ்க்கை அரசியல் தியாக நெறியில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளரலாயிற்று.

தண்பரைப் போலச் சிறைபுகுந்து தவங்கிடக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. இவருடைய கொள்கைகள் பலவற்றையும் நான் வியந்து போற்றிய போதினும் அவற்றை இவரைப்போல் தீவிரமாகப் பிரசாரஞ் செய்யும் நெஞ்சுத் துணிவும் எனக்குக் கிடை யாது. உதாரணமாகச் சுதந்திரம், சோஷலிசம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய மூன்றும் இவரது மூன்று காதலாக இருந்தது போல் என் உள்ளத்தையும் அந்த நாளில் வசீகரித்திருந்தன. ஆனால் அவற்றை நான் வற்புறுத்தி எந்த மேடையிலும் பேசத் துணிந்ததில்லை.''

**இறுதி**

புகழுடன் விளங்கிய இப்பெரியார் 1970ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

---

## ௯௨. பரலி சு. நெல்லையப்பர்

### தோற்றம்

பரலி சு. நெல்லையப்பர் திக்கெலாம் போற்றுந் திருநெல்வேலிக் கடுத்த பரலிக்கோட்டை என்னுஞ் சிற்றூரிலே 1889ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினெட்டாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய பிள்ளை. தாயார் பெயர் முத்து லட்சுமியம்மாள்.

### கல்வி

நெல்லையப்பர் திண்ணைப்பள்ளி, நெல்லை இந்து கல்லூரி ஆகியவற்றில் பள்ளிக் கல்வியை நன்கு கற்று முடித்த பிறகு சிவராம பிள்ளை என்னுந் தமிழ் அறிஞர் ஒருவரிடஞ் சிறிது காலம் தமிழ்மொழியையுங் கற்றுத் தமிழிலே செய்யுள் பாடுந் திறத்தையும் அடைந்தார். வங்காளி, வடமொழி, இந்தி ஆகியவைகளிலும் போதிய அளவு பயின்றிருந்தார்.

### பத்திரிகைப் பணி

இவருடைய உள்ளம் இளமைப் பருவத்திலேயே நாட்டு விடுதலைக் குழைப்பதிலும் அதன்பொருட்டுப் பத்திரிகைத் தொழிலை மேற்கொள்வதினுஞ் சென்றது. நாட்டு விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்ட சுப்பிரமணிய பாரதியார், வ. உ. சிதம்பரம்பிள்ளை போன்ற பெரிய விடுதலை வீரர்களின் கூட்டுறவும் இவருக்கு அமைந்த படியால் இவருடைய நாட்டுப்பற்று நாளுளும் வளர்ந் தோங்கியது. 1910ஆம் ஆண்டில் புதுச்சேரியில் இருந்து தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரை ஆசிரியராகக்

கொண்டு வெளிவந்து கொண்டிருந்த 'சூரியோதயம்' என்னும் இதழின் உதவியாசிரியராகப் பொறுப்பேற்ருர். பாரதியார் பாராட்டும் வகையில் இந்தப் பணியை இரண்டாண்டுகள் இனிது புரிந்தார் நெல்லையப்பர். 1910ஆம் ஆண்டில் தொடங்கிய இவருடைய இதழாசிரியப் பணி பல இதழ்கட்கும் பரவி ஏறக்குறைய நாற்பத்தைந் தாண்டுகள் வரையில் நீடித்து நின்றது.

## பாரதி

சூரியோதயம் என்னும் இதழுக்குப் பிறகு, பாரதி என்னுஞ் சீரிய இதழை தெ. பொ. கிருட்டிணசாமிப் பாவலர் (தெ. பொ. மீனுட்சி சுந்தரனரின் தமையனர்) அவர்களின் துணைகொண்டு தொடங்கினர். அவ்விதழை 1914, 15, 16 ஆகிய மூன்று ஆண்டுகள் நடத்தினர். மாபெருங்கவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் பல முதன்முதல் இந்த இதழிலேதான் வெளியாயின. "செந்தமிழ் நாடேனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று தொடங்கும் இந்தப் புதுமையான அருமைப் பாடலை முதன்முதல் பாரதி இதழ் மூலம் உலகுக்கு அறிமுகஞ் செய்தவர் இவர்தாம்.

## தேசபக்தன்

தமிழ்த் தென்றல் திரு. வி. க அவர்களை ஆசிரியராகப் பெற்றுப் பெரும்புகழ் ஈட்டிய தேசபக்தன் என்னும் நாளிதழுக்கு திரு. வி. க., வ. வே. சு. ஐயர் ஆகியோருக்குப் பிறகு ஆசிரியராக அமர்ந்து அவ்விதழை நன்முறையில் நடத்திச் சென்ற பெருமையும் இவருக்குண்டு.

## லோகோபகாரி

இவ்வாறு பல இதழ்கள் பரலி. சு. நெல்லையப்பர் அவர்களின் ஆதரவையும் பணியையும் பெற்றன வென்ருலும் இறுதியில் இவருடைய முழுப்பற்றும் லோகோபகாரி

யின் மீதுதான் விழுந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் நடராச ஐயர் என்பவரால் தொடங்கப் பெற்று கோ. வடிவேலுச் செட்டியார் முதலிய பல அன்பர்களால் நடத்தப்பெற்று வந்த இந்தக் கிழமை யிதழுக்கு நெல்லையப்பர் 1913ஆம் ஆண்டில் துணையாசிரியராக அமர்ந்தார். 1922 ஆம் ஆண்டில் லோகோபகாரியை உரிமையுடன் பெற்று உரிமையாளராகவும் ஆசிரியராகவும் அமைந்து அவ்விதழைச் சீரான முறையில் நடத்தினுர். 1949ஆம் ஆண்டு வரையில் இவ்விதழ் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. பரலி சு. நெல்லையப்பர் இவ்விதழோடு ஒன்றுபட்டவராக விளங்கினுர். பரலி சு. நெல்லையப்பர் என்ருல் லோகோபகாரி நினைவும், லோகோபகாரி என்ருல் பரலி சு. நெல்லையப்பருடைய நினைவும் எல்லோருக்கும் உண்டாக்கிக் கொண்டிருந்தன. நன்முறையில் நடைபெற்ற இவ்விதழை மக்கள் சரியான முறையில் உணர்ந்து போற்ருதபடியால் அவ்விதழ் படிப்படியாகத் தேய்ந்து நாளடைவில் மறைந்தொழிந்தது. பல திங்கள்கள் கட்டிட வாடகை கொடாதபடியால் கட்டிட உரிமையாளர் கட்டிடத்தை இழுத்துப் பூட்டினுர். இதழை அஞ்சலில் அனுப்ப அஞ்சற் கூலிச் சீட்டு வாங்கப் பொருளின்றி இதழை அனுப்பாமலிருந்ததும் உண்டு.

### நூலாசிரியர்

நெல்லையப்பர் இதழாசிரியராக இருந்தது மட்டுமன்றிச் சிறந்த நூலாசிரியராகவும் விளங்கினுர். 1941ஆம் ஆண்டில் வ. உ. சி. வரலாற்றை எழுதி வெளியிட்டார். 1920 ஆம் ஆண்டில் காந்தியடிகள் எழுதிய இந்திய சுயராச்சியம் என்னும் நூலை மொழி பெயர்த்து வெளியிட்டார். 1945ஆம் ஆண்டில் மெய்யறிவாளர் அரவிந்தர் வங்காள மொழியில் தம்முடைய மனைவியாருக்கு எழுதிய கடிதங்களைத் தமிழில் மொழி பெயர்த்து நூல் வடிவாக வெளியிட்டார். 1941 ஆம் ஆண்டில்

வங்காள நாவலாசிரியர் பக்கிங் சந்திர சட்டர்சியால் இயற்றப்பட்ட சோடி மோதிரம், இராதா ராணி என்னும் இரண்டு நவீனங்களை எளிய இனிய தமிழில் எழுதி வெளியிட்டார். மார்க்க அரேலியரால் எழுதப்பட்டு இராசகோபாலாச்சாரியர் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை என்னும் நூலை வெளியிட்டார். மேலும் வடநாட்டில் இமயமலையில் ரிஷிகேசத்தில் எழுந்தருளி யிருந்த சிவானந்தர் ஆங்கிலத்தில் எழுதிய அறிவுரை மொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்துச் சிவாநந்தர் உபதேச மொழிகள் என்னும் பெயரோடு வெளியிட்டார். மற்றும் இவரால் அவ்வக் காலங்களில் லோகோபகாரி வெளியீடாக வெளியிடப் பெற்ற நூல்கள் பல.

## பாரதி பாடல்கள்

பாரதியார் பாடல்களின் அருமை பெருமைகளை அக்காலத்தில் யாரும் உணர்ந்து கொள்ளவில்லை. தமிழுலகம் பாரதியாரை ஒரு பொருட்படுத்தாமல் ஒதுக்கியிருந்தது போலவே அவருடைய பாடல்களையும் ஒரு பொருட்படுத்தாதிருந்தது. அரசினருடைய பலமான எதிர்ப்புக்கும் அச்சுறுத்துதலுக்குமிடையே இவர் பாரதியார் பாடல்களை வெளிப்படுத்தினர்.

## தம்பி

பாரதியார் அந்நாளிலேயே நெல்லையப்பரின் தன்மையை உள்ளவாறுணர்ந்திருந்தார். இவரைத் தம்முடைய உடன்பிறந்தாராகவே கொண்டு தம்பி என்று பாராட்டினர். தமக்கு எவ்வகையினும் பொருளுதவி யளிக்குமாறு இவரிடந்தான் உரிமையொடு கேட்பார். இவரும் ஒல்லும் வகையாலெல்லாம் முயன்று அவருடைய விருப்பங்களைக் கூடியவரையில் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

### சிறை வாழ்க்கை

ஆங்கிலப் பேரரசின் இரும்புப் பிடியில் இருந்து இந்தியாவை விடுதலை பெறச் செய்வதற்காக இருமுறை சிறைவாசஞ் செய்த சிறப்பும் இவருக்குண்டு. கப்ப லோட்டிய வீரத் தமிழர் வ. உ. சிதம்பரனாரோடு 1908ஆம் ஆண்டில் ஒருசேரச் சிறையில் இருந்த புகழும், 1941ஆம் ஆண்டில் காந்தியடிகளால் தனிப்பட்டோர் அறப்போர் தொடங்கப்பெற்றபோது மீண்டும் ஒரு முறை சிறை புகுந்த சிறப்பும் நெல்லையப்பருடைய வாழ்க்கை வரலாற்றில் ஒளிவீசித் திகழும் இரண்டு சிறந்த பகுதிக ளாகும். வ. உ. சிதம்பரனார் தொடங்கிய சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியில் தம் தமையனார் தம்பியார் ஆகிய இருவரோடு தாமுஞ் சேர்ந்து அலுவல் பார்த்த பெருமையும் இவர் பெற்றிருந்தார்.

### மாணி வாழ்க்கை

தம்முடைய நேரம் முழுவதையும் நாட்டுத்தொண்டு, மொழித் தொண்டு, மக்கட்டொண்டு ஆகியவற்றிற்கே செலவிட வேண்டும் என்னும் விழுமிய நோக்கத்தால் திருமணமே செய்து கொள்ளாமல் தனி வாழ்வையே மேற்கொண்டு தியாக வாழ்வு வாழ்ந்தவர் நெல்லையப்பர். இவர் தமக்கு ஒரு தாயாரை வளர்ப்புத் தாயாராகப் பின் னாளில் பெற்றிருந்தார். இவருக்குச் சண்முக சுந்தரம் பிள்ளை என்ற தமையனாரும் குழந்தை வேலாயுதம் பிள்ளை என்னும் தம்பியும் இருந்தனர். அவர்களும் நெல்லை யப்பரைப் பின்பற்றியே வாழ்க்கையை மேற்கொண்டிருந் தனர்.

### சைவசமயத் தொண்டு

சைவ சமயத்தில் இவர் ஆழ்ந்த பற்றுக்கொண் டிருந்தார். அந்நாளில் திருவாசகம் முதலிய நூல்களை எளிதாக வாங்க வியலாது. ஒரு ரூபா ஒன்றரை ரூபா

கொடுத்தால்தான் ஒரு திருவாசக நூலைப் பெற்றுப் படித்து மகிழ முடியும். அந்நிலை நெல்லையப்பருக்கு மிகுந்த வருத்தத்தை யுண்டாக்கியது. திருவாசகத்தை ஆயிரக்கணக்கில் வெளியிட்டு அடக்க விலைக்கு வழங்கி நாடெங்கும் பரப்பித் திருவாசக மணம் எங்குங் கமழச் செய்ய எண்ணினர். வேண்டுகோள் வெளியிட்டுப் பொருள் திரட்டித் திருவாசகத்தை இரண்டணா விலையில் அடக்க விலைப் பதிப்பாக இருபதினயிரம் படிகள் அச்சிட்டுத் தமிழ் நாடெங்கணும் பரப்பினர். தேவாரம் முதலிய பிற திருமுறைகளையும் அடக்க விலைப் பதிப்பாக வெளியிடும் முயற்சி இதன் பிறகே தோன்றிப் பன்னிரு திருமுறைகளும் அடக்க விலையில் வெளியாகி யாண்டும் பரவின. நெல்லையப்பர் இவ் வழியைக் காட்டியிராவிடின் தமிழ்மக்கள் பன்னிரு திருமுறைகளையும் குறைந்த விலையில் அடைந்திருக்க முடியாது. நெல்லையப்பர் காட்டிய இந் நல்வழி இன்றும் பலராற் பின்பற்றப் படுகிறது.

## பாராட்டு

நெல்லையப்பருடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் கேடயம் வழங்கினர்கள். பாரதியார் பாடல்களைப் பாரில் பரப்பியதற்காகப் பாரதி சங்கத்தார் பின்னுளிலே பொன்னுடை போர்த்திக் கேடயம் வழங்கிப் பாராட்டினர்கள்.

## அரவிந்தரை வரவேற்றல்

அரவிந்தர் அந்நாளில் அரசப் பகைமைக் குற்றஞ் சாட்டப் பெற்று மறைந் துறைதலாகிய கரந்துறைதலை மேற்கொண்டிருந்தார். அவர் புதுச்சேரியை அடையத் திட்டமிட்டுப் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது புதுவைக் கடற்கரையில் அரவிந்தரை வரவேற்கக் கூடிய திருக் கூட்டத்தில் நெல்லையப்பரும் ஒருவர்.

### நெல்லைத் தென்றல்

உரைநடை யெழுதுவதைப்போல் பாடல்கள் எழுதுவதிலும் நெல்லையப்பர் மிக வல்லவர். அவ்வக் காலங்களிற் பற்பலவகையான பாடல்களைப் பாடியிருக்கிறார். அப்பாடல்களிற் பல "நெல்லைத் தென்றல்" என்னும் பெயரோடு 1966ஆம் ஆண்டில் புத்தகமாக வெளியிடப் பட்டிருக்கிறது. அந்நூலுக்கு நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள் முகவுரை யெழுதியுள்ளார். இவருடைய பாடல்களில் வரம் என்னும் தலைப்புள்ள பாடல் ஒன்றை அடியிற் காண்க :

"என்றேனும் ஒருநாளிற் சாக வேண்டும்
இறைவாஉன் திருநாமம் மறவா தென்றும்
குன்றாமல் அறஞ்செய்திங் கன்பு செய்து
கோதற்ற நல்வாழ்வு வாழ வேண்டும்
அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னாய்நீ
அடியனேன் உளத்தென்றும் அமர்ந்து வாழ்வாய்
மன்றாடும் மணியேயென் மனத்தும் ஆடும்
மாசிலா மணியேயிவ் வரமீ வாயே".

### அடியேனும் நெல்லையப்பரும்

1922ஆம் ஆண்டில் கோமளேசுரன் பேட்டையில் அடியேன் முதன் முதலாக நெல்லையப்பரைக் கண்டேன். அப்பொழுது அங்கு சந்திரபானு தெருவில் நெல்லையப்பர் லோகோபகாரி இதழை நடத்திக் கொண்டிருந்தார். இதழ் நடத்தும் ஆசிரியர்களிடத்தில் அடியேனுக்கு அந்நாளிலேயே இயற்கையான பற்றுதல் ஏற்பட்டிருந்தது. அப் பற்றுதலால்தான் நெல்லையப் பரைப் பார்த்தேன். இத்தகைய பண்பால் திரு. வி. க அவர்களை இராயப்பேட்டை நவசக்தி அலுவலகத்தில் கண்டு பேசினேன். தெ. பொ. கிருட்டிணசாமிப் பாவலரைச் சிந்தாத்திரிப் பேட்டையில் தேசபந்து

அலுவலகத்தில் கண்டு தொடர்பு கொண்டேன். நா. முனுசாமி முதலியாரை ஆனந்த போதினி அலுவலகத்தில் கண்டு பழக்கங் கொண்டேன். திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களை லிங்கிச் செட்டித் தெரு 306 ஆம் எண்ணில் இருந்த கழக அலுவலகத்தில் கண்டு தொடர்பு கொண்டேன். இவ்வாறு அடியேன் கண்ட இதழாசிரியர்கள் பலராவர். நெல்லையப்பரைக் கண்டு கொண்ட தொடர்பு இறுதிவரை நீடித்திருந்தது. சிந்தாத்திரிப் பேட்டையில் அவர் தங்கி இதழ் நடத்திய போது அடியேனுஞ் சிறிது நாள் உடனிருந்து பணி புரிந்துள்ளேன். அடியேனுடைய கட்டுரைகள் பல லோகோபகாரியில் வெளிவந்துள்ளன. அவர் குரோம் பேட்டையிற் சென்று தங்கிய காலத்தும் பலமுறை அவரிடஞ் சென்று வந்தேன். செல்லும் ஒவ்வொரு தடவையும் அவரோடு உணவு கொண்டுதான் வருவது வழக்கம். தம்மிடம் வந்தவர்களை உண்ணுமற் சென்று விடுமாறு விடமாட்டார். கையிற் பொருளிருந்தால் கேட்பவர்களுக்குங் கேட்காதவர்களுக்குங் கொடுப்பார். இல்லாவிட்டால் மற்றவர்களிடம் கேட்பார். அவர் கேட்டால் எவரும் இல்லையென்று கூறுவதுமில்லை. பின்னுளில் இவர் வறுமைச் சுழலில் சிக்கியபோது நடுவணரசும் தமிழக அரசும் இவருக்கு உதவி செய்தன. தமிழக அரசு இறுதிவரை திங்கள் தோறும் பொருளுதவி செய்துவந்தது. இவர் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு என்னைக் குறித்து ஓர் அறிமுகக் கடிதங் கொடுத்தார். அக் கடிதத்தில் என்னைப் பலவாறு பாராட்டி எழுதியிருந்தார். இவர் காலமாவதற்குச் சில திங்கள் முன்னுல் போய்ப் பார்த்து வந்தேன். பிறகு பார்க்க முடியாமலே போய்விட்டது. அடியேனுக்கு அறுபதாண்டு நிறைவு விழா நடைபெற்ற போது அழைப்பிதழ் அனுப்பி யிருந்தேன். வாழ்த்துக் கூறிக் கடிதம் எழுதியிருந்ததுடன் "புலவர் பெருமானுக்கு எனது அன்பார்ந்த காணிக்கை" என்று எழுதி ரூபா முப்பது பண விடையில் அனுப்பியிருந்தார். இவருடைய பிரிவு

என் உள்ளத்தை இன்னும் வருத்திக் கொண்டேயிருக்கிறது.

### இறுதியிலும் பாரதியார்க்கு உதவி

புகழ்பெற்ற பாரதியாரால் தம்பியென்று அருமையாகப் பாராட்டப் பெற்ற இவர் பாரதியார் திருவல்லிக்கேணியில் இறைவன் திருவடி நீழலையடைந்தபோதும் உடனிருந்து பாரதியாருடைய இறுதிக்காலச் சடங்குகள் நடைபெறுதற்குந் துணை புரிந்தார். பாரதியாரின் உடலைச் சுடலைக்குச் சுமந்து செல்லும் பேறும் இவருக்குக் கிடைத்தது. மாபெருங் கவிஞர் பாரதியாரின் புகழ் நாட்டிற் பரவாத அந்நாளில் இவர் பாரதியாருக்குச் செய்த சிறந்த தொண்டு என்றும் பாராட்டற்குரியதாகும்.

### இறுதி

இவர் 1971 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28 ஆம் நாளில் இவ்வுலக வாழ்வைத் துறந்து அம்மை யம்பல வாணர் அடிமலர் நீழலை யடைந்தார்.

## கக. பாலூர் கண்ணப்ப முதலியார்

### தோற்றம்

"தமிழகம் போற்றுஞ் சைவ சிரோமணி
அமிழ்தினு மினிய தமிழ்நலங் கவினிச்
செந்தமிழ்ச் செல்வராய்த் திகழும் பாலூர்
வந்தகண் ணப்பர் வளர்புக ழுடனே
பாவலர் நாவலர் பரிவுடன் போற்ற
யாவரும் வாழ்த்த ஏற்கும் மணிவிழா
உள்ளுந் தோறும் உள்ளங் களிக்கும்
வள்ளுவர் வகுத்த வாழ்நெறி யொழுகி
வகுத்தவாழ் நாள்வரை மங்கலம் பெருகத்
தகும்வகை தமிழ்க்குத் தனித்தொண் டாற்றப்
பரமன் திருவருள் பாலிக்க வென்று
விரவுநல் லன்பால் வேண்டுமென் னுள்ளம்
என்மா ணவருள் முன்மா ணவராய்ப்
பன்மா ணலங்களும் பயில வாழ்வது
கண்டென் னுள்ளங் கழிமகிழ் வெய்தும்
பண்டைப் புலவர்தம் தண்டமிழ் செழிக்கப்
பல்வகை நூல்களைப் பயன்தர இயற்றியும்
சில்வகை நூற்குச் சிறப்புரை வகுத்தும்
எண்ணறு மாணவர்க் கியற்றமிழ் பயிற்றியும்
நண்ணிய சைவம் நலம்பெறப் பற்பல
சொற்பொழி வாற்றியுந் துறவியர் வாழ்த்தப்
பொற்புறு பணிகளாம் நற்புக ழெய்தியும்
வாழ்கபல் லாண்டு வாழ்கபல் லாண்டு
வாழ்கபல் லாண்டென வாழ்த்துவ வினிதே"

என்று, தம் ஆசிரியராற் போற்றி வாழ்த்தப் பெற்ற கண்ணப்ப முதலியார் தொண்டைவள நாட்டிலே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பாலூரிலே

வேளாளர் குலத்திலே 1908 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் துரைசாமி முதலியார், தாயார் பெயர் மாணிக்கம்மாள்.

## கல்வி

பாலூராருடைய தந்தையார் செந்தமிழ்ப் பற்றுஞ் சிவபிரானிடத்திலே பேரன்பும் உடையவராகத் திகழ்ந்தார். தம்முடைய புதல்வருக்கும் இவைகள் இனிதமைய வேண்டுமென்று பெரிதும் முயன்றார். பள்ளிக் கல்வியைக் கற்று முடித்த பிறகு செந்தமிழ்க் கல்வி கற்பதிலே சிந்தையை அதிகமாகச் செலுத்தினார். அக் காலத்தில் சென்னையில் இருந்த கலா நிலைய இதழாசிரியர் டி. என். சேஷாசல ஐயர் இவருக்கு ஆங்கிலத்தையும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்பித்தார். மேலும் பெரும் புலவர் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை யவர்களிடம் நன்னூல் விருத்தி, தண்டியலங்காரம், திருவிளையாடற் புராணம், அட்டப் பிரபந்தம், சீவகசிந்தாமணி முதலிய நூல்களைப் பயின்றார். கோ. வடிவேல் செட்டியார் என்பவர் வேதாந்தத்திலும் இலக்கண இலக்கியங்களிலும் தருக்க நூலிலுஞ் சிறந்த புலமை யமையப் பெற்றவர். இதனால் இவருடைய பெயர் 'இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த போதகாசிரியர்' என்று நீண்டு வழங்கி நின்றது. இப்பேரறிவாளரிடம் திருக்குறள், திருவாசகம் முதலியவைகளைப் பயின்றார். சூளையில் இருந்த வைத்தியலிங்கம் என்பவரிடம் தேவாரத்தை இசையுடன் கற்றார். சித்தாந்த நூல்களைத் தாமே பயின்றார். சித்தாந்தச் செல்வர்களின் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டார். இதனால் கூடிய அளவு சைவசித்தாந்த நூலறிவையும் பெற்றார். பி.ஓ.எல். எம்.ஏ. முதலிய பட்டங்களையும் பெற்றார். பல வழிகளினுந் தம்முடைய அறிவைப் பெருக்கிச் சிறந்த தமிழறிஞரானார்.

**ஆசிரியத் தொழில்**

நல்ல தமிழ்ப் புலமையை அடைந்த இவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபடலானார். சென்னைப் புரசை ஊத்தரன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். அங்கு எட்டாண்டுகள் பணியாற்றினார். பிறகு சென்னை முத்தியாலுப் பேட்டையில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார். பிறகு திருவல்லிக்கேணி கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் பதினோராண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தார். பிறகு இராயப்பேட்டை புதுக் கல்லூரியில் தொடக்க காலத்தில் இருந்து பதினான்டுகள் வரை தமிழ்த் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் விளங்கினார். ஆசிரியராக இருந்த காலையில் மாணவர்களை அன்புடனும் ஆதரவுடனும் நடத்தி அவர்களுக்குக் கற்பித்து அவர்கள் கல்வித் துறையிற் சிறந்து விளங்குமாறு செய்தார். கேட்டார்ப் பிணிக்குந் தகைய பண்பில் பேசுவதில் இவர் மிக வல்லுநர்.

**பல் பணிகள்**

இவர் பள்ளியிற் கல்வி கற்பித்ததோடு நின்றிடாமல் வெளியிலும் பலருக்குக் கல்வி கற்பித்தார். பெரம்பூர், இராயப்பேட்டை, குயப்பேட்டை முதலிய இடங்களில் நடைபெற்ற இரவுப் பாடசாலைகளில் பாடம் நடத்தினார். சென்னை மது விலக்குச் சங்கத்தில் தலைவராக இருந்து, மதுவிலக்குச் சொற்பொழிவுகள் பல செய்தார். புரசவாக்கம் சுந்தரர் கல்லூரியில் புலவர் வகுப்பு நடத்தினார். புரசைக் கம்பர் கழகம், சிந்தாத்திரிப் பேட்டைத் தமிழ்ச் சங்கம் முதலிய பல பொது நிலையங்களில் சமய நூல்களையும், தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் பாடம் நடத்தினார். "அம்மையப்பர் கழகம்" என்னும் பெயருடன் ஒரு கழகத்தை நிறுவித் தமிழ் நாட்டமுடைய பலருக்குக் கல்வி கற்பித்தார். சென்னை சூளை இளைஞர்

கழகத்து உறுப்பினர்களுக்குக் கலித்தொகையையும் புரசை திருவள்ளுவர் கழகச் சார்பில் பெரியபுராணத்தை யும், பவழக்காரத் தெரு மாணவர்களுக்குப் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களையும் போதித்தார். சென்னைச் சைவசித்தாந்த சமாசம், சென்னை எழுத்தாளர் சங்கம், செங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கம் போன்றவற்றில் பல பணிகளைச் செய்தார். தமிழாசிரியர்களின் நிலை உயர வேண்டுமென்பது இவருடைய பெருவிருப்பம். அதன் பொருட்டு இவர் மிகுதியாக முயற்சிகள் செய்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடத் திட்டக் குழுவிலும் சிறந்த முறையில் நற்பணி யாற்றினர்.

**இல்வாழ்க்கை**

தெய்வானை யம்மையார் என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்து தம்முடைய இல்வாழ்க்கையைத் தொடங்கினர். (1) அமுதாம்பிகை (2) மங்கையர்க்கரசி (3) பாலாம்பிகை (4) ஞானம்பிகை (5) கற்பகாம்பிகை (6) தமிழரசி (7) இசையரசி என்னும் ஏழு பெண்மக்கள் தோன்றினர்.

**நூல்கள் எழுதுதல்**

இவர் ஆசிரியராகப் பலருக்குக் கல்வி கற்பித்ததோடு அமைந்துவிடவில்லை. நூலெழுதும் பணியிலும் ஈடு பட்டுப் பல நூல்கள் எழுதினர்.

**இவரால் எழுதப்பெற்ற நூல்கள்**

(1) பொய்யடிமையில்லாத புலவர் யார்?

(2) திருமணம்

(3) தமிழ்நூல் வரலாறு

(4) அமலநாதன்

(5) தமிழிலக்கிய அகராதி
(6) திருக்குறள் அறத்துப்பால் உரை நடை
(7) வள்ளுவர் கண்ட அரசியல்
(8) மாணவர் திருக்குறள் விளக்கம்
(9) கவிபாடிய காவலர்கள்
(10) சங்ககால வள்ளல்கள்
(11) சங்கச் சான்றோர்
(12) தொழிலும் புலமையும்
(13) அதிகமான்
(14) தமிழர் போர் முறை
(15) கட்டுரைக் கதம்பம்
(16) கட்டுரைக் கொத்து
(17) தமிழ்ப் புதையல்
(18) மாணவர் தமிழ்க் கட்டுரை
(19) அறுசுவைக் கட்டுரைகள்
(20) சான்சன் வாழ்க்கை வரலாறு
(21) புதுமைகண்ட பேரறிஞர்
(22) கலை வல்லார்
(23) பழமை பாராட்டல்
(24) பாண்டிய நாட்டுப் பாடல்பெற்ற சிவதலங்கள்
(25) தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவ தலங்கள்
(26) வையம் போற்றும் வனிதையர்

*

(27) நானே படிக்கும் புத்தகம்
(28) இன்பக் கதைகள்
(29) அன்புக் கதைகள்
(30) சிறுவர் கதைக் களஞ்சியம்
(31) நீதி போதனைகள்
(32) நகைச்சுவையும் கவிச்சுவையும்
(33) கந்தர் சட்டிச் சொற்பொழிவுகள்
(34) தமிழ்த் தொண்டர்
(35) இலக்கிய வாழ்வு
(36) இலக்கியத் தூதர்கள்
(37) மாண்புடைய மங்கையர்
(38) சீவகன் வரலாறு
(39) தமிழ்ப் புலவர் அறுவர்
(40) சமரச சன்மார்க்க சத்திய சங்க விளக்கம்
(41) தொடக்கப்பள்ளி மாணவர் இலக்கண விளக்கம்
(42) நடுநிலைப்பள்ளி மாணவர் இலக்கண விளக்கம்
(43) உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கண விளக்கம்
(44) கல்லூரி மாணவர் இலக்கண விளக்கம்
(45) பூந்தமிழ் இலக்கணம்
(46) புதுமுறை இலக்கணமுங் கட்டுரைகளும்
(47) குமுதவாசகங்கள் (நடுநிலை வகுப்பு)

(48) செந்தமிழ்ச் சிலம்பு (உயர்நிலை வகுப்பு)
(49) தமிழ்ப் புதையல் ( ,, )
(50) திருவெம்பாவை முதலிய உரை
(51) திருவீங்கோய்மலை எழுபது உரை
(52) தமிழ் மந்திர உரை
(53) சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை
(54) திருவருள் முறையீடு உரை
(55) வடிவுடை மாணிக்கமாலை உரை
(56) இங்கிதமாலை உரை
(57) பல்சுவைப் பாமாலை குறிப்புரை

**மணிவிழா**

இவருக்கு 16-10-1969இல் அறுபதாண்டு நிறைவுற்றது. அந்நாளில் சிறப்புமலர் ஒன்று வெளியிட்டு அன்பர்கள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். அம்மலரில் சனாதிபதி வி. வி. கிரி, எஸ். ராதாகிருட்டிணன், கே. இ. அருணாசல முதலியார், மு. ரா. பெருமாள் முதலியார், பி. சோதிமுத்து, டி. ஆர். பார்த்தசாரதி, காஞ்சி காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராசாரிய சுவாமிகள், தமிழக முதல்வர் மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், சி. சுப்பிரமணியம், தமிழவேள் பி. டி. ராசன், மா. முத்துசாமி, ம. பொ. சிவஞானம், பொள்ளாச்சி நா. மகாலிங்கம், புலவர் கா. கோவிந்தன், நெ. து. சுந்தரவடிவேலு, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர், பி. நடராசன், வே. ரா. தெய்வசிகாமணி கவுண்டர், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், தா. ஏ. ஞானமூர்த்தி, தமிழ்ப் பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார், கீ. இராமலிங்கனார், பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார், டி. எம். பி. மகாதேவன்,

ம. ப. பெரியசாமித்தூரன், ஈ. வி. கே. சம்பத், பேராசிரியர் எஸ். வி. வரதராச ஐயங்கார், மறை. திருநாவுக்கரசு, வ. சுப. மாணிக்கம், க. வச்சிரவேல் முதலியார், முதலிய பலர் வாழ்த்துரை கூறியுள்ளனர்.

## பாராட்டுரைகள்

மற்றும் இவரைக் குறித்து ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, தா. ம. பார்த்தசாரதி, கா. தி. அண்ணாமலை முதலியோர் பாராட்டுக் கட்டுரைகள் எழுதியிருத்தலோடு, சுத்தாநந்த பாரதியார், சாந்தலிங்க இராமசாமி அடிகள், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் சி. இலக்குவனார், கி. வா. சகந்நாதன், ரம்போலா மாஸ்கரேனஸ், அ. கி. பரந்தாமனார், கா. ம. வேங்கடராமையா, ரா. நடேச நாயகர், வே. த. அர்ச்சுனனார், இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, க. வெள்ளைவாரணனார், வல்லை பாலசுப்பிரமணியம், சி. கைலாயம், அ. மு. கருணையாநந்தர், கவிஞர் சுந்தரச் சோழன் ஆகியோர் வாழ்த்துப் பாக்களும் பாடிப் பாராட்டியுள்ளனர். அப்பாடல்களுள் ரம்போலா மாஸ்கரேனஸ் பாடலை அடியிற் காண்க.

*பாலூரரார் கண்ணப்பர் பண்பின் மிக்கார்*
*பரிவுநல் லறிவுமிகு சமயச் செம்மல்*
*மாலூன்றி மனத்தளர்ச்சி யுற்ற பேர்க்கும்*
*மதிநலத்தால் தெளிவுறுநி வழங்கு நீரார்*
*காலூன்றி நின்றுயரும் கவினைச் சேர்த்தே*
*கருத்துமழை பொழிந்தருளும் காள மேகம்*
*சாலூரம் பெற்றவராய்ச் சான்றோர் போற்றச்*
*சார்ந்துவரு மணித்திருநாள் சீர்த்தி நன்றே.*

## சிறப்புப் பெயர்கள்

இவருக்கு மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத் தலைவர் ''சைவசமய சிரோமணி'' என்னுஞ்

சிறப்புப் பெயர் அளித்திருந்தார். திரு. சச்சிதானந்தம் பிள்ளை "செந்தமிழ்ச் செல்வர்" என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கியிருந்தார்.

## நூலினைப் பாராட்டியோர்

இவருடைய நூல்களை கா. மு. சின்னப்பா பிள்ளை, பம்மல் சம்பந்த முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், மு. வரதராசனார், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கி. பாலசுப்பிர மணிய ஐயர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், வன்மீக நாதப் பிள்ளை, காஞ்சி காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள், ம. கி. சண்முகம், எஸ். வி. வரதராச ஐயங்கார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், மறை திருநாவுக்கரசு. பொ. முத்தரசு, மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை, சிவஞான பாலைய சுவாமிகள், மா. சே. சாரங்கபாணி முதலியார், டி. இராமலிங்க ரெட்டியார், பி. சொ. சண்முகம், மதுரை திருஞான சம்பந்த ராதீனத் தலைவர், தவத்திரு. அ. வித்தியாநந்தகிரி சுவாமிகள் முதலியோர் பாராட்டி எழுதியுள்ளனர்.

## பாராட்டுரைகளிற் சில

பாராட்டுரைகள் மிகுதியாக உள்ளன. எல்லா உரை களையும் ஈண்டுக் காட்ட முடிவாவாகலின் அவர்களிற் சிலருடைய பாராட்டுரைகளை அடியிற் காண்க.

## மே. வி. வேணுகோபாலப் பிள்ளை

"திருமூலர் என்னும் சித்தபுருடர், ஆண்டுக் கொன்றும் மூவாயிரம் ஆண்டுகள் வரை மூவாயிரம் மந்திரங்களை அருளிச் செய்தனர் என்றும், அவை 'திரு மந்திரமாலை' என வழங்கப்பட்டுச் சைவத் திருமுறை களுள் ஒன்றாகக் கொண்டாடப்பட்டு வருகின்ற தென்றும் அறிகிறோம். சித்த புருடரான திருமூலர் திருமந்திரங்

களுக்கு உண்மைப் பொருள் கண்டறிவது எளிய செயலன்று.

இத்தகைய மந்திர நூலுக்குத் துணிந்து உரை கண்ட சைவப் பேரறிஞர்களைப் பின்பற்றி, என் அன்பிற்குரிய இயற்றமிழ் மாணவரும், செந்தமிழ்ச் செல்வர், சைவசமய சிரோமணி, பேராசிரியர் என்னும் சிறப்புகளை உடையவரும், சென்னைப் புதுக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவருமாகிய வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி. ஓ. எல்., சித்தபுருடர் ஆண்டுக்கொன்ருகப் பாடியருளிய அருமந்திரமாகிய திருமந்திரத்தைத் தம் ஆன்ம ஈடேற்றத்திற் கருத்துடைய அன்பர் பலரும் நாளுக்கொன்ருகப் பயின்று ஓராண்டிற்குள் உறுபயன் பெறக்கருதி 365 மந்திரங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்கு விரிவான முறையில் உரை விளக்கஞ் செய்து இந்நூலை வெளியிட்டிருக்கிருர். அவரது இந் நன்முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அன்பரவர்கள் அண்மையில் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு விளக்க உரை கண்டு தொள்ளாயிரத்தெட்டுப் பக்கங்கள் கொண்ட பெருநூலைத் திருப்போரூர் திருக் கந்தப் பெருமான் தேவத்தான வெளியீடாக வெளியிடச் செய்தார். அவ்வெளியீட்டைச் சென்னை முதலமைச்சர், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் வெளியிட்டருளினர். உரையாசிரியருக்கு அவ்வமயம் பொற்கிழி யளித்துப் பொன்னுடை போர்த்தித் தேவத்தானத்தவரால் பாராட்டு வழங்கப்பட்டது.

தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை (பன்மொழிப் புலவர்)

"திருவாளர் பாலூர் கண்ணப்ப முதலியார் இயற்றிய "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?" என்ற நூலை ஓதும் பேறு பெற்றேன். இவ்வாறு எழும் வினவிற்கு

ஏற்றதொரு விடையாக மணிவாசகரே எனப் பல சான்று கள் காட்டிக் கூறுகின்றார். சேக்கிழார் திருவாசகத்தில் திளைத்து நிற்பதனையும் இனிதே விளக்குகின்றார். சிக்க லான கேள்வி இது. இருந்தாலும் இவர் நூல் இனி தாகவும் எளிதாகவும் அமைந்துள்ளமை பாராட்டத் தக்கதே யாம்.''

மா. இராசமாணிக்கனார்

''சென்னைப் புதுக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ள தமிழ் இலக்கிய அகராதி என்னும் நூலைப் பார்வையிட்டேன். இதன்கண் சொல்லகராதி, தொகையகராதி, பிரபந்த அகராதி, நூல் அகராதி, புலவர் அகராதி, பிற்சேர்க்கை என்னும் பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இவர் அகராதி மாணவர்க்கும், மற்றவர்க்கும் நன்கு பயன்பட வல்லது. இதனைத் தொகுத்து வெளியிட்ட ஆசிரியரது முயற்சி பாராட்டற் பாலது.''

அ. வித்தியானந்தகிரி சுவாமிகள்

''திருமந்திரம் என்பது நிறைமொழி மாந்தர் ஆணை யிற்கிளந்த மறைமொழி ஆகும். அஃது இலைமறை காய் போன்று அரிதில் காணும் அரும்பொருளைத் தன்னகத்தே கொண்ட சக்தி வாய்ந்தது. இதனைத் தமிழ்மொழியில் திருமூலர் என்னும் அரும்பெரும் தவயோகப் பெரியார் ஆண்டுக்கு ஒவ்வொரு மந்திரமாகத் தமது அருந்தவ யோகக் காட்சியில் கண்ட உண்மையை மூவாயிரம் மந்திரங்களாகப் பாடியுள்ளார் என்பது தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான், உமாபதி சிவாச்சாரியார் போன் றோர்களின் கருத்தாகும். இம்மந்திரம் ஒன்பது தந்திரங் களைக் கொண்டது............

இத் தமிழ் மந்திரத்திற்குக் கற்ரேர் போற்றும் அரும்பெரும் புலவர் பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் தாம் தேர்ந்தெடுத்த 365 மந்திரங்களுக்குத் தெளி பொருள், அருஞ்சொல் உரை விளக்கம் எழுதிப் பண்டிதர் முதல் பாமரர்வரை அனைவருடைய உள்ளங்களையும் கவரும் வகையில் உலகிற்கு அளித்திருப்பது மிகமிகப் போற்றற்கும் பாராட்டற்கும் உரியது. இவ்வுரை சாலச்சிறந்ததாகும். மந்திரத்தைப் புரிந்துகொள்ள இயலாது திகைப்புக் கொள்ளும் மக்களுக்கு இவ்வுரை ஒரு பெருந் துணையாகும் எனில் அது மிகையாகாது. ஒரு சிலர் தமிழில் 'மந்திர நூல்கள் இல்லை என்று கூறும் கூற்றுக்கு இந் நூல் "இதோ உளது" என்று எடுத்துக் கூறுதற்கு ஏற்ற சான்ருக அமைந்துள்ளது. இத்தமிழ் மந்திர நூலில் எல்லாச் செய்திகளையும் கருத்துக்களையும் தெள்ளத் தெளியக் காணலாம்."

## சாந்தலிங்க இராமசாமி யடிகளார்

பேராசிரியர் சைவத்திரு பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் செந்தமிழ்ப் புலமையும் சிவநெறிப் பண்பும் நிறைந்தவர். பல நூல்கட்கு உரைகண்டவர். 19ஆம் நூற்ருண்டில் சமயப்பொது நெறியைச் சமரச நெறியை வளர்த்த வள்ளல், வடலூர் இராமலிங்க அடிகளார் அருளியது. தேனினும் இனிய திருவருட்பா. திருவருட்பாவில் செஞ்சொற் புலவர் உளங்களிக்க, சொல்நயம், பொருள் நயம் பொதுள அருளிய பாடல் இங்கிதமாலை. இங்கிதம் என்னுஞ் சொல் குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில்களைக் குறிப்பது. இந்நூல் திருவொற்றியூர்ப் பெருமானின் சொல்லாடலும் ஒரு தலைவியினது சொல்லாடலுமாக அமைந்தது. புறத் துறுப்புக்களாலும், பாவின் உறுப்புக்களாலும் குறிக்கப் பெறும் பொருள் நோக்குகளை விளக்கு முறையில் இந் நூலுக்கு முன்னும் உரை வகுக்கப்பட்டுள்ளது. தற்போது

சைவத்திரு பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் இப்பாடல்களின் அரிய பொருட் செறிவை இனிது விளக்கி ஒரு சொல்லுக்கு இரு பொருளுக்கு மேற்பட்ட பொருள்கள் அமைந்துள்ள திறத்தினை எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டுதற் குரியது. இவ்வரிய நூலின் உரையினைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுப் பயன் பெறுவதாகுக. இவ்வுரையாசிரியர் மேலும் பல நூல்கட்கு நல்லுரை வகுத்துச் செம்பொருட் செல்வராய்த் திகழச் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருள் புரிவாராக"

## இறுதி

இவ்வாறு அறிஞர் பலராலும் போற்றற்குரிய பல நூல்களை இயற்றிய இவர் தம்முடைய இறுதிக் காலத்திற் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அப்பரடிகள் திருமுறை பற்றிய ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்பணி நிறைவேறுவதற்கு முன்னரே தமது அறுபத்திரண்டாம் ஆண்டில் 1971ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 29ஆம் நாள் காலையில் இறை வழிபாடு செய்து எழுந்து வரவே திடுமென எதிர்பாராத நிலையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

## தமிழ்ப் புலவர் வரிசை

தமிழ்ப் புலவர் வரிசை என்னும் பெயரோடு இதுவரை இருபத்தொன்பது நூல்கள் வெளிவந்துள்ளன. இருபத்தொன்பதிலும் ஏறத்தாழ ஆயிரம் புலவர் பெருமக்களுடைய வரலாறுகள் வெளியாகியுள்ளன. கம்பர் ஒளவையார் ஒட்டக்கூத்தர் காளமேகப்புலவர் போன்ற ஒரு சிலருடைய வரலாறுகளையே உணர்ந்துள்ள தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நூற்றுக்கணக்கான புலவர்களுடைய வரலாறுகளைக்கொண்ட இத்தமிழ்ப்புலவர் வரிசை நூல்கள் கிடைத்தற்கரிய பெரும் பேருகும் என்பதை நாம் எடுத்துக் கூறத் தேவையில்லை. இப்புலவர் வரிசை நூல்களைப் படித்துணர்வோர் தமிழ் வரலாற்றைப் படித்தவர்களாவர். பல புலவர்களுடைய தனிப் பாடல்களும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. புலவர்கள் பலரிடம் நிகழ்ந்த வியத்தகு தெய்வீக நிகழ்ச்சிகளையும் இவ்வரலாறுகளில் காணலாம். இவ்வரிசைகளைப் படிக்கும் போது கதைகளைப் படிப்பதைப் போன்ற இன்ப உணர்ச்சி அனைவரிடமும் உண்டாவதாகும். படிப்பவர்களின் நன்மையைக் கருதி மும்மூன்று நூல்கள் ஒவ்வொரு பெரும் நூலாகக் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கட்டப்பெற்றுள்ள தொகுதிகள் ஒன்பது. ஒவ்வொருதொகுதியும் விலை ரூ. ஐந்து.

| | |
|---|---|
| 28 ஆவது புத்தகம் | ரூ. 2-00 |
| 29 ஆவது புத்தகம் | ரூ. 2-50 |

---

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1

கழக வெளியீடு : ௧௪௧௨

# தமிழ்ப் புலவர் வரிசை

[முப்பதாம் புத்தகம்]

★

ஆசிரியர் :

கருப்பக்கிளர் திரு சு அ இராமசாமிப் புலவர்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1972

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

© 1972 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed I November 1972

O31,6wN7
H7.30

THIMIZHP PULAVAR VARISAI
XXX

Thiruvaranganar Achakam, Madras-13. (I/2)

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம் தத்தம் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்துப் பயன்பெறுகின்றன. அத்துடன் அப்புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடாமுயற்சி, அஞ்சாமை, வாய்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து நற்பயன் எய்துகின்றன.

அம்முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் நற்றொண்டாகும் எனக் கருதித் தமிழ்ப் புலவர் வரிசையில் இதுகாறும் இருபத்தொன்பது நூல்களை வெளியிட்டோம். இந்நூல் இவ்வரிசையில் முப்பதாம் புத்தகம் ஆகும்.

இதன்கண் சிறைமீட்டான் கவிராயர் முதல் உரத்தூர் கோ வைத்தியலிங்கனர் ஈருக உஅ புலவர் பெருமக்கள் வரலாறுகளும் அவர்கள் யாத்த பாடல்கள், அவர்களைப்பற்றி எழுதப்பட்ட பாடல்கள் ஆகியனவும் செவ்விய முறையில் எழுதப் பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்திற்கிணங்கத் தொகுத்துத் தந்த திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களுக்குக் கழகத்தின நன்றி என்றும் உரித்தாகும்.

முன்னர் வெளியிடப்பெற்ற இருபத்தொன்பது புத்தகங்களைப் போலவே இதனையும் தமிழ் அன்பர்கள் வாங்கிக் கற்றும் கற்பித்தும், நூல் நிலையங்களில் வாங்கி வைத்தும் புலவர் பெருமக்கட்குச் செய்யுங் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவிப்பார்களென நம்புகின்ருேம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | சிறைமீட்டான் கவிராயர் | 1 |
| உ. | பொன்னுச் செல்லைய பாரதி | 3 |
| ங. | பீர்முகமது அப்பா | 5 |
| ச. | அவிநாசி நாதர் | 12 |
| ரு. | நகரம் சங்கரபாண்டியனார் | 16 |
| சா. | ஆ. தி. இராமலிங்கம் பிள்ளை | 23 |
| எ. | திம்மப்ப அந்தணனார் | 28 |
| அ. | இளசை திருமலைச்சாமி | 31 |
| கூ. | தா. ந. கந்தசாமிப் பிள்ளை | 33 |
| க0. | வா. மகாதேவ முதலியார் | 37 |
| கக. | சுப்பிரமணியக் கவிராயர் | 43 |
| கஉ. | கவி முத்துச்சாமிப் பிள்ளை | 45 |
| கங. | ஆத்துமாநந்த அடிகள் | 47 |
| கச. | கவிராஜ் தமிழ்ச்சித்தர் எ. சு. இராமசாமி சோதிடர் | 51 |
| கரு. | மு. திருவிளங்க தேசிகர் | 62 |
| கசா. | இராமச்சந்திர திட்சிதர், வி. ஆர். | 69 |
| கஎ. | வே. முத்துச்சாமி ஐயர் | 73 |
| கஅ. | அறிஞர் அண்ணாதுரை | 76 |
| ககூ. | பேராசிரியர் கோ. சுப்பிரமணியனார் | 97 |
| உ0. | தாமரைக் கண்ணியார் வ. பா. | 107 |
| உக. | டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை | 114 |
| உஉ. | பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் | 126 |
| உங. | திரு. ஐயன் பெருமாள் கோனார் | 138 |
| உச. | சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை | 146 |
| உரு. | நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை | 156 |
| உசா. | ச. சச்சிதானந்தம் பிள்ளை | 163 |
| உஎ. | புலவர் குழந்தை | 169 |
| உஅ. | உரத்தூர் கோ. வைத்தியலிங்கனார் | 177 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## (முப்பதாம் புத்தகம்)

### க. சிறை மீட்டான் கவிராயர்

**தோற்றம்**

இவருடைய முழுப்பெயர் பிள்ளைப்பெருமாள் சிறை மீட்டான் கவிராயர் என்பது. இவர் கொங்குவள நாட்டில் பாகை என்னும் ஊரில் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தவர். இவருடைய இடுகுறிப் பெயரே இதுதானு அல்லது வேறு வழங்கியதா என்பது தெரியவில்லை. இவரைப் பற்றிய பிறசெய்திகளும் விளக்கமாகவில்லை. இவர் கல்வி கேள்விகளில் வல்லவர் என்பது இவர் இயற்றிய நூல்களாற் பெறப்படுகின்றன.

**இயற்றிய நூல்கள்**

இவரியற்றிய நூல்கள் *சோழீசுவரர் மல்லைக் கோவை, அர்த்த நாரீசுவரர் சந்திரசேகர மாலை, கபிலமலைக் குழந்தைக்குமாரர் வருக்கக் கோவை முதலியன. மல்லைக்கோவை என்பது மல்லை என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் மீது பாடப்பட்டது. மல்லை என்பது மல்ல சமுத்திரம் என்பதன் மரூஉப் பெயர். இவ்வூர் கொங்கு நாட்டில்

---

* இக்கோவை எழுமாத்தூர் வேலம்பாளையம் திரு. புலவர். வே. ரா. தெய்சிகாமணிக் கவுண்டர் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புரை முன்னுரை முதலியவற்றுடன் வெளிவந்துள்ளது. இவ்வரலாற்றுக் குறிப்புகட்கு ஆதாரம் இக் கோவையே.

உள்ளது. திருச்செங்கோட்டில் இருந்து சேலத்திற்குச் செல்லும் வழியில் பன்னிரண்டு கல்தொலைவில் உள்ளது. இவ்வூர் இறைவன் பெயர் சோழீசுவரன்; இறைவி பெயர் திரிபுர சுந்தரி.

"முப்போதும் போற்றி வணங்கடி
யாருக்கு முத்திதரும்
கைப்போ தகவுரிச் சோழீசர்
மல்லைக் கனகவெற்பின்
செப்போது மென்முலை யீர்முகம்
பார்த்தொன்று செப்பினிரால்
எப்போது முங்கட் கடியேன்
அடிமை யெழுதிக்கொள்ளே."

என்பது கோவையில் ஒரு பாட்டு. இவரைப் பற்றிய பிறசெய்திகள் யாதும் புலனாகவில்லை.

———

## உ. *பொன்னுச்செல்லைய பாரதி

### தோற்றம்

இவர் கொங்கு வள நாட்டிலே திருச்செங்கோட்டுக்கு வடகிழக்குத் திசையில் உள்ள மங்கலம் கிராமம் ஊமையம்பட்டி என்னுஞ் சிற்றூரிலே சீர் கருணீகர் மரபு கவுணிய கோத்திரத்திலே வேலையபிள்ளை என்பவருடைய புதல்வராகச் சென்ற பத்தொன்பதாம் நூற்ருண்டில் தோன்றினர்.

### கல்வி

கல்வி கற்றுச் சிறப்புற்ருேங்கிய இவர் பாவியற்றுவதிலுஞ் சிறந்து விளங்கினர். இவரை ஆசிரியராகக் கொண்டு கல்வி கற்றுப் பலர் சிறப்புற்றனர்.

### நூல் இயற்றுதல்

புலவர்களானோர் தம் பெயர் என்றும் நிலவுலகிலே நிலைபெறுவான் விரும்பி நூல்களியற்றுதல் வழக்கம். இப் புலவரும் தம் பெயரை என்றுந் தரணியில் நிலை நிறுத்துவான் செங்கோட்டுப்பள்ளு முதலிய நூல்களை இயற்றித் திருச்செங்கோட்டு இறைவன் திருமுன்பு அரங்கேற்றஞ் செய்தார்.

### போற்றியவர்கள்

இப் புலவரைப் போற்றிப் புரந்தவர்கள் இவருடைய ஊரிலே சித்த மருத்துவராய்ச் சிறந்து விளங்கிய பெருமாள் முதலி, அவர் தம்பி முத்தண்ண முதலி,

---

* ஆதாரம் : கவிஞர் திரு. க. கந்தசாமி வெளியிட்ட செங்கோட்டுப்பள்ளு.

கொங்கு எழுகரை நாட்டுச் செங்குந்த குலப்பட்டக்கார நல்லைய முதலி, திருச்செங்கோட்டில் அந்நாளில் வாழ்ந்திருந்த செங்குந்தர்கள், மல்லூர் குமரநகர் அர்த்தநாரி முதலி, பழநியாண்டி முதலி ஆகியோராவர்.

### பிறநூல்கள்

செங்கோட்டுப்பள்ளைத் தவிர இவர் இயற்றிய பிறநூல்கள், செங்கோட்டு வேலவர் ஈரிசைக் காதல், மல்லூர் குமரநகர் பொன்மாரியம்மன் ஊஞ்சல் முதலியன. இவர்தம் நூலிலே தம்மைப் புரந்தவர்களை ஆங்காங்குச் சுட்டிக் காட்டியுள்ளார்.

### மழை பொழிதல்

சிந்து

பாகசாதனன் ஏவல்கொண்டொரு
மேகமானது படிந்துமே
பாய்ந்துவாரியில் சூலதாகியும்
மேய்ந்து வாரியும்ஏகியே
வேகமாகவும் பரந்துவிண்டெனும்
சதேகமாகவு முறைந்துமே
விரைந்துகமலத் தயனுமாய்—நதி
நிறைந்தசடிலச் சிவனுமாய்
நாகமாமலை மீதிலே—வளர்
தியாகநாயகர் குடையைப்போல்
நளினஞ்செறிந்து லாவியே—வரை
வழிகொண்டிழிந்து மேவியே
ஏகநாயகர் அருளின்பார்வை
போகமாகிய வாறுபோல்
இந்திரவானம் பொழிந்துமே—புவி
சந்ததியாகித் தழைந்ததே.

———

## க. *பீர்முகமது அப்பா

### தோற்றம்

"பாதங்கள் மேலும் சிரங்கீழு மாய்ப்பத்து
நாரு யிரமாண்டு நுவலரிய பரம்பொருளை
வேதங்க ளெல்லாம் விளக்கரிய பேரொளியை
ஓதிப் புகழ்ந்தாலும் ஒப்பாகா உத்தமராம்
நீதர்நபி நாயகத்தின் நேர்வழிசே ரும்மத்தாய்
நிறைவுடனே இறைபடைத்த நன்றிக்கா மென்றுரைத்தார்
போதவிழும் பொய்கைநிறை பொன்வகராம் தக்கலையின்
மாதவத்து ஞானியராம் மாமேதை பீரப்பா"

என்று அறிஞர்களாற் பாராட்டப்பெற்ற பீர்முகமது அப்பா என்னும் முகமதியப் பேரறிஞர் பதினாரும் நூற்ருண்டின் இறுதியில் தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசி என்னும் ஊரில் சிறுமலுக்கர் என்பவருடைய புதல்வ ராகத் தோன்றினர்.

### கல்வி

மிகு இளமைப் பருவத்திலேயே கல்வியை நன்கு கற்றுத் தம் சமய நூல்களையும் பிறசமய நூல்களையும் இலக்கண இலக்கியங்களையுங் கற்றுச் சிறந்த அறிவாளி யாக விளங்கினர். இவர் முதலில் ஏதோ தொழிலில் ஈடுபட்டிருந்தார். அத் தொழில் நெசவுத் தொழில் என்பர். நாளடைவில் இவருக்கு மெய்யறிவு வளர்ந்து வந்த படியால் மெய்யறிவு மார்க்கத்தைப் பற்றிய செய்யுட்கள் பாடுவதில் ஈடுபட்டார். நாகர்கோயிலை யடுத்த தக்கலை யென்னுமிடத்திற்குச் சென்று அவ் விடமே தங்கியிருந்தார்.

---

* ஆதாரம்: பீர்முகமது அப்பா மலர்.

## அறிவு நூல்கள் இயற்றல்

இவருக்கு நாணுளும் மெய்யறிவு மிகுதிப்பட்டு வந்தது. அதன் பயனுக மெய்யறிவுப் பாக்கள் பல உள்ளத்திலே தோன்றின. அந்த வகையில் இவர் பல நூல்களை யியற்றினர். இவரைப் பற்றி அறிஞர்கள் பலர் பாராட்டி எழுதியுள்ளனர். அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க.

## அறிஞர்கள் பாராட்டு

"வேதகுல வாவாஞ்சி பேரனுன
வேந்தரென்னுஞ் சிறுமலுக்கரீன்ற பாலன்"

என்று தம்முடைய பாடல்களிலே குறிப்பிடுகின்ற ஒலியுல்லாஹ் அவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசியிலே, பூர்வீகமான முஸ்லிம் குடும்பம் ஒன்றிலே தோன்றினர்கள். இவர்கள் பிறந்த சரியான ஆண்டு தெரியவில்லையெனினும், அவர்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்த மெய்ஞ்ஞானி சதக்கத்துல்லா அப்பா ஆலிம் ஒலியுல்லாஹ் அவர்களின் காலத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிகிறது. இவர்களின் இளமைப் பருவத்திலே பல விந்தைகள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. தமது வாலிபப் பிராயத்திலேயே குடும்பத்தை விட்டுப் பிரிந்து சுமார் 95 வருடங்கள் வரை அடர்ந்த காடுகளிலும், மலைகளிலும் சஞ்சரித்ததாகத் தெரிகிறது. வடமலையாளத்தைச் சேர்ந்த பகுதிகளிலே உறைந்து பின்னர் நாடு பல சுற்றி, மீண்டும் யானை மலைப்பகுதி ஒன்றில் அன்னபானமற்றுச் சுமார் 15 வருடங்கள் நிட்டையிலிருந்தார்கள். இப் பெரியார் உறைந்த பகுதியே அவர்கள் பெயரால் பீர்மேடு என்று வழங்கி வருகிறது. ஒலியுல்லாஹ்வின் மகத்துவத்தை யறிந்த சேர மன்னன் பரம்பரையினரான முத்துசாமித் தம்பிரான், பெரியாரின் தீட்சை பெற்றுப் பின்னர் அவர்களை நகருக்குள் இடம்பெறச் செய்தார். மொத்தம்

300 ஆண்டுகள் உலகிலே வாழ்ந்த இப் பெரியாரின் பெரும்பகுதி தென் திருவாங்கூரைச் சேர்ந்த தக்கலையிலே கழிந்தது. இவ்வூர் நாகர்கோவிலிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலே இருக்கிறது.

திக்குத் தெரியாது திகைத்த எண்ணற்ற பலருக்கு நேர்வழி காட்டிய கலங்கரை விளக்கான ஒலியுல்லாஹ் அவர்கள் மகுபூபு, சுபுஹானி, குதுபுரப்பானி, கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகையவர்களின் காதிரீயா தரீக்காவைப் பின்பற்றி வந்தார்கள் என்பதற்கு அவர்களின் பாடல் ஒன்று ஆதாரமாய் அமைந்துள்ளது ஆன்மச்சுடர் கொளுத்திய ஒலியுல்லாஹ் அவர்கள் நிர்யாண மடைந்தபின் அவர்களது பூதவுடல் தற்கலையிலேயே அடக்கப்பட்டது. எண்ணற்ற நோயாளிகள் தற்காவைச் சுற்றிச் சதா உறைந்திருப்பதை இன்றும் காணலாம். ஆண்டு தோறும் ஒலியுல்லாஹ் அவர்களின் கந்தூரி மகோற்சவம் ரசப்மாதம் நடைபெறுகிறது. அச்சமயம் ஒலியுல்லாஹ் அவர்களின் பாடல்கள் பாடப்படுகின்றன "தமிழகத்திலே பதினெண் சித்தர்கள் பாடலெனப் பிரபல்யமாக வழங்கப்படும் பெரிய ஞானக்கோவையில் ஒலியுல்லாஹ் வின் ஞான ரத்தினக் குறவஞ்சியும் இடம் பெற்றுள்ளது. மனிதனுடைய சுவாசம் எந்தெந்த நிலையில் எந்தெந்த அளவு வெளியேறுகிறது என்பதை விளக்குகிறது ஞான சரநூல். புறப்புலன்களை ஒடுக்கி, அக அழுக்கைக் கழுவ எந்தெந்தப் படித்தரங்களில், எந்தெந்த திக்றுகளைச் செய்ய வேண்டுமென்பது பற்றிப் பிஸ்மில் குறம் கூறுகிறது. இப்படியே பல மர்மங்களைப்பற்றி ஒவ்வொரு நூலிலும் கூறியுள்ள ஒலியுல்லாஹ் அவர்கள், எத்துணைக் கல்வி கற்றவனுயினும் ஆசானின் துணை கொள்ளல் வேண்டும் என்பதைப் பல இடங்களிலே வற்புறுத்தியுள்ளார்கள்" அல்ஹாஜ் எம். எம். பீர் முகம்மது.

"இவ்வகையில் பார்போற்றும் ஞானமேதை பீர் முகம்மது சாகிப் ஒலியுல்லா அவர்களின் எழுத்தோவியங்களையும், "பாடல்கள்" என்றே குறிப்பிடுகின்றோம். ஆனால், துடிப்பும் எடுப்பும் நிறைந்த செந்தமிழ் நடையில், தொடை நடை நயத்துடன் எதுகைமோனைச் சீருடன், கவிமணங்கமழும் கனிந்த இணைந்த தமிழில் அகவிருள் அகற்றும் அருட்பாக்களை - பொருட் பாக்களை அள்ளிச் சொரிந்து தந்திருக்கும் பேரருள் ஞானி பீர்முகமதப்பா அவர்களின் பாடல்களில் கவிதைக் கனிவும் செய்யுட் சிறப்பும் மலிந்து தெளிந்து காணப் படுகின்றன, என்ற உண்மையைத் தமிழறிஞர்கள் அறிவார்கள். அப்பா அவர்கள் பல்வேறு பாவினக் கவிதைகளும், கீர்த்தனை, ஆனந்தக் களிப்புப் போன்ற இசைப் பாடல்களும் மரபு கெடாமல் பல்லாயிரக் கணக்கில் படைத்தளித் திருக்கின்றார்கள். எனினும், "அப்பா பாடல்கள்" என்று அனைவரும் அன்புடன் கூறிவரும் சிறப்புப் பெயரே நிலைத்து விட்டது என்பதையும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே நாமும் பாடல்கள் என்றே குறிப்பிடுவோம். கூறி மகிழ்ந்திடுவோம்."

தக்கலைத் தவஞானி தனிப்பெரு மெய்ஞ்ஞானி தியாகச் செம்மல் பீர்முகதப்பா அவர்கள் தென்றல் வீசித் தேன் சிந்துபாடும் தென்சீமையாம் தென்காசியில் பதினேழாம் நூற்றாண்டில் தொல்புகழ் படைத்த இசுலாமிய நற்குடியில் பிறந்து வாழ்ந்தவரென்று அறிஞர் கூறுவர். அவர்கள் ஆனை மலையில் அநேக ஆண்டுகள் அருந்தவமேற்று நின்றபடியால், அவர்கள் பெருந் தவம்புரிந்த பகுதிக்குப் பீர்மேடு என்ற சிறப்புப் பெயர் அமைந்த தெனக் கூறுவர். உள்ளத்தால் ஆத்மீகத்தை உணர்ந்து நின்று இறையுடன் ஒன்றித்து இணைந்து, இறை தம் அன்பும் அருளும் பெற்றுத் திகழ்ந்து, அரும்பெரும் ஞான நூல்களை அருளிச் செய்தார்கள் அவர்கள்." கல்லிடை டி. எம். பீர்முகம்மது.

## இவர் இயற்றிய நூல்கள்

க. ஞான மணிமாலை, உ. ஞானப் புகழ்ச்சி ௩. ஞானப்பால், ௪. ஞானப்பூட்டு, ரு. ஞானக்குறம் ௬. ஞான ரத்தினக் குறவஞ்சி, எ. ஞானனந்தக் களிப்பு, அ. திருமெய்ஞ்ஞான சர நூல், ௯. ஞான நடனம், க௦. ஞான முச்சுடர் காப்புப்பதிகம், கக மெய்ஞ் ஞான அமிர்தகலை, கஉ. ஞான உலக உருளை, க௩. ஞான சித்தி, க௪. ஞானத் திறவு கோல், கரு. ஞான விகடம். க௬. ஞானக் கண், கஎ. மெய்ஞ் ஞானத் திருப்பாடற்றிரட்டு, கஅ. ஞான முச்சுடர்ப் பதிகங்கள், க௯. மிகுராசுவளம், உ௦. திருநெறி நீதம், உக. பிசுமில்குறம், உஉ. ரோக மீசாக்குமாலை என்பன இப்பெரியார் இயற்றிய நூல்களாகும்.

## இவர் இயற்றிய பாடல்கள்

"அஞ்சுமுயர் தஞ்சமொடு நெஞ்சறிவு நீயே
அகரமுத லுயிரெவையும் வணங்குமிறை நீயே
நஞ்சிலமு தஞ்சியுயிர் நம்புமிறை நீயே
நகரமதி லுருகவரும் நாயகனும் நீயே
என்செயல்கொ டஞ்சுடரை மிஞ்சுமிறை நீயே
இரங்கியுன்னே டிரக்கதற்குன் உதவியருள் வாயே"

"அறுநான் கோடட் சரக்கோ
டாரி கொண்டே யறிந்துளத்தில்
மறிவான வஞ்ச மனத்தைத்
தறித்து வயற்புன மாய்ச்
செறிவான தினி லமுதான
வித்தினைச் சேர நட்டுப்
பொறிவீண் களைபறித் தாற்பெற
லாஞ்சொர்க்கப் பொற்பதி யே."

பாடல்களைப்பற்றி அறிஞர்கள்

"இனி, தக்கலைப் பீர்முகம்மது சாகிபு அப்பா அவர்கள் இயற்றிய பாடல்களை நோக்குவோம். அவர்தம் ஞானமணி மாலையை எடுத்துக் கொள்வோம். கலிமாவைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது ஞானமணி மாலை. கலிமாவின் தாத்பரியங்களை அடிப்படையாக வைத்து ஞானமணி மாலையைப் பாடியுள்ளார். அரபு எழுத்துக் களைக் கொண்ட, "லாஇலாஹ இல்லல்லாஹ முஹம்மது நசூலுல்லாஹ்" என்ற சொற்ருெடரிலே இருபத்து நான்கு அரபு அட்சரங்கள் - (எழுத்துக்கள்) ஹர்புகள் உள்ளன. அந்த இருபத்து நான்கு எழுத்துக் களையும் நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளார் பீர் முகம்மது சாகிபு அப்பா அவர்கள். 'லாஇலாஹ' என்றும் 'இல்லல்லாஹ்' என்றும் 'முஹம்மத்' என்றும் 'நசூலுல்லாஹ்' என்றும் நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கலிமாவின் தாத்பரியங்களை விளக்கி உள்ளார் ஞானியார் சாஹிப் அவர்கள். உருவகம் மூலம் கலிமாவின் தாத்பரியங்களை எடுத்தோதுகிருர்.

ஞானியார் அப்பா அவர்கள் பல்வேறு வகையான யாப்பு முறையை ஞானமணி மாலையிற் கையாண் டுள்ளார். அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம், எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம், வெண்பா, கலி நிலைத்துறை, பஃருெடை வெண்பா, கலிவிருத்தம், கலிவெண்பா, கலித்துறை, விருத்தம் கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, சந்தவிருத்தம், எழுசீர் சந்தவிருத்தம் எனப் பல்வேறு யாப்பமைதியுடைய செய்யுட்களைப் பயன் படுத்தி உள்ளார். அல்லாஹ்வின் தன்மைகளைக் கூறும் ஞான மணிமாலையில் உள்ள ஒரு வெண்பாவை ஈண்டு எடுத்துக் கொள்வோம்.

*பெருமைக் குரியோனைப் பிறப்பிறப்பொன் றில்லானை*
*அருமைப் பெரியானென் றூர் சொன்னார்—பெருமையுறுங்*
*காணிகவ கோடிதரும் ஹக்காமெய்ஞ் ஞானமதைப்*
*பேணி யுளத்தே பிடி.*

பீர்முகம்மது சாகிப் அப்பா அவர்களது இப் பாட்டைப் படிக்கும்பொழுது காளமேகப் புலவர் மனக்கண் எதிரே தோன்றுகிறார். தனிப்பாடற்றிரட்டிலே ஆலங் குடியில் எழுந்தருளும் சிவபெருமானைப் பற்றிய காள மேகப் புலவரது வெண்பா நினைவுக்கு வருகிறது. அந்த வெண்பாவுக்கும் ஞானியார் அப்பா பாடலுக்கும் ஓசை நயத்தைப் பொறுத்த மட்டிலாவது ஒற்றுமை இருப் பதைக் காணலாம். காளமேகப் புலவர் வெண்பா இவ்வாறு அமைந்துள்ளது.

"ஆலங் குடியானை ஆலால முண்டானை
ஆலங் குடியானென் றூர்சொன்னார்—ஆலங்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லா
மடியாரோ மண் மீதிலே"

பேராசிரியர் ம. முகம்மது உவைஸ், இலங்கை

———

## ச. அவிநாசிநாதர்

### தோற்றம்

அய்யன் திருக்கோவ லாறுமுக தேசிகன்மேல்
துய்யதமிழ் நெஞ்சுவிடு தூதுரைத்தான்—தையலிடம்
மன்னும் பரமன் மலர்த்தாள் இதயமதில்
உன்னுமவி நாசியைய னோர்ந்து.

அஞ்சுமுக மோர்முகமாம் ஆறுமுக தேசிகன்மேல்
நெஞ்சுவிடு தூதுரைத்தான் நேரிலதா—வெஞ்சில்
அவிநாசி நாதன் அடியிணையைப் போற்றப்
பவநாசம் போமே பறந்து.

என்று ஆன்றோர்களாற் பாராட்டப்பெற்ற அவிநாசி நாதர் கொங்குவள நாட்டில் அந்தியூரில் பிறந்தார்.

### கல்வி

மிகு இளம்பருவத்திலேயே தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேறினார். அறிவுநூல்களைக் கற்றலின் பயன் வீடுபேறடைதலே யாதலின் இவருடைய உள்ளம் துறவுநிலையை நாடியது. துறவறத்தை மேற்கொண்டு தாம்பிரவேணியில் அன்பர் ஒருவர் அமைத்துக் கொடுத்த திருமடத்தில் தங்கியிருந்தார்.

### தில்லையை அடைதல்

கூத்தப்பிரானைப் போற்றி வழிபடற் பொருட்டுத் திருத்தில்லையை அடைந்தார். அங்குச் சில காலந்

தங்கி அம்பலவாணனைப் போற்றிக் கொண்டிருந்தார். தகுந்த குருநாதரைப்பெற்று அவருடைய அருளைப்பெற வேண்டுமென்பது இவருடைய கருத்தாக இருந்தது. இதற்கு எப்பொழுது காலங்கிட்டுமோ என்று இறையருளை எண்ணிக்கொண்டிருந்தார். அந்நாளில் வேதபுரி என்னும் ஊரில் இருந்து தில்லைக்கு வந்திருந்த சிற்றம்பலத்தர் என்பவர் இவரைக் கண்டார். இவருடைய கல்வியறிவொழுக்கம் முதலியவைகளைப் பார்த்து வியந்தார். தம்முடைய ஊருக்கு வருதல் வேண்டுமென்று இவரைக் கூப்பிட்டார்.

## வேதபுரிக்கு மேவல்

இவரும் அவருடைய வேண்டுகோட்கு இசைந்தார். சிவிகையில் அமரச்செய்து வேதபுரிக்கு அழைத்துக் கொண்டு சென்றார். சிற்றம்பலத்தர் முதலிய அன்பர்கள் அமைத்த திருமடத்தில் தங்கி அவ்வூரவர்கட்கு மெய்யறிவு நூல்களைப் போதித்துக்கொண்டிருந்தார். இவரால் அவ்வூரவர்கள் நன்னெறி தலைப்பட்டு நலம் பல பெற்றனர்.

## திருக்கோவலூர் சேறல்

அக்காலத்தில் ஒருநாள் அவ்வூரில் திருக்கோவலூர் ஞானசாரியருடைய அடியவர்களில் ஒருவர் தம்மை மறந்து அருள்வசமான உண்மையனுபவத்தைச் சில குறிப்புக்களால் உணர்ந்தார். திருக்கோவலூரரை யடைந்து அறிவாசிரியரை வழிபட்டுச் சிவக்குறியணிந்து கொள்ளவும் அறிவுரை பெறவும் எண்ணினர். தம்முடைய எண்ணத்தை ஊரவர்க்கும் உணர்த்தி உடன்பாடு பெற்றார். திருக்கோவலூரரையடைந்து மெய்யறிவாசிரியரை வழிபட்டார். தம்முடைய விருப்பத்தை ஆசிரியருக்கு அறிவித்தார். ஆசிரியர் இவருடைய பக்குவநிலையை உணர்ந்து மூவகைத் தீக்கைகளையும் முறையே

செய்தார். அறிதுயில் நிலையை உண்டாக்கினர். தம்முடைய ஞானக்குழந்தைகளுட் சிறந்தவர்களாகிய பூங்கோட்டு அம்பலவாண அடிகளோடும் சம்பூர்ணப் பிரகாச அடிகளோடும் உடனிருக்கச் செய்தார். இவருக்கு அவ்வப்போது உண்டாகும் ஐயங்களை அகற்றச் செய்தார். இவர் அறிதுயில்நிலையை நன்கு பழகி அந் நிலையிலேயே அதிகமாக இருந்தார்.

## நூல்கள் இயற்றல்

அறிதுயில்நிலையில் இல்லாதபோது தமக்கு அத்தகைய மேலான நிலையை உண்டாக்கிய அருளாசிரியர் மீது நெஞ்சு விடுதூது, சிகாமணிப்பதிகம், அபிடேக மாலை, அட்டகம், மங்களம் முதலிய நூல்களைப் பாடிப் பரவினர். பிறகு வீடுபேற்றை யடைந்தார். நெஞ்சு விடுதூது முந்நூற்றுக்கு மேற்பட்ட கண்ணிகளை யுடையது. சிகாமணிப்பதிகம் பத்துப்பாடல்களை யுடையது. அபிடேகமாலை பதினொரு பாடல்களையுடையது. அட்டகம் எட்டுச் செய்யுட்களையுடையது. மங்களம் ஓர் இசைப் பாடலால் ஆகியது. சிகாமணிப்பதிகம் முதலிய பாடல்கள் யாவுமே மிகு இனிமை பொருந்தியதாகத் திகழ்கின்றன. சிகாமணிப்பதிகத்தின் முதற்பாடலை அடியிற் காண்க.

திருவளர் கயிலைச் சயிலமுஞ் சயிலச்
செல்வியும் தூம்புடை யெயிற்றுத்
தீவிடப் பணியும் பாலலோ சனமுந்
திரையெறி வரநதி மதியுங்
கருகிறச் சிறுகட் புகர்முகச் சுருள்கைக்
கடாக்களிற் றுரிவையம் போர்வை
கனலுமிழ் மழுமான் கொடும்புலி யுடையுங்
கரந்தெனைப் பணிகொள வினைந்தே

பெருகொளி யருளே திருவடி வாகப்
பேரளி முதலவோர் நான்கும்
பேருறுப் பாக வோருருத் தாங்கிப்
பெருந்தரைக் கண்ணின்வந் தெனக்கு
அருளொடும் வேதா கமச்சிரப் பொருளை
அருளிய கருணைவா ரிதியே
அணிகிளர் கோவல் நகரில்வாழ் அரசே
ஆறுமா முகசிகா மணியே.

---

## ௫. நகரம் சங்கரபாண்டியனுர்

### தோற்றம்

நகரக் கிழாரென்னும் நகரம் சங்கரபாண்டியனு ராகிய இவர் தென்பாண்டி நாட்டில் சங்கரநயினர் கோவிலுக்கு அண்மையில் உள்ள நகரம் என்னுஞ் சிற்றூரில் கொல்லமாண்டு 1067க்குச் சரியான 1891ஆம் ஆண்டிற் பிறந்தார்.

### இறைவழிபாடுங் கல்வியும்

இளமை முதற்கொண்டே இவருக்கு முருகக் கடவுளிடத்தில் அளவு கடந்த அன்புண்டாகியது. அக் கடவுளை எக்காலும் போற்றிப் பணிதலையே தம் தலையாய கடனுகக் கொண்டார். கல்வி கற்கத் தொடங்கிய காலத்தில் முருகப்பிரான் திருவருளால் கல்வியறிவு நன்கு உண்டாகியது. அகவை பதினைந்து நிரம்பு வதற்குள் கற்க வேண்டியவைகளையெல்லாம் நன்கு கற்றுத் தேறினர். பதினருவது ஆண்டு முதல் செய்யுளியற்றும் ஆற்றலும் உண்டாகியது.

### முன்னேர்கள்

இவருடைய முன்னேர்கள் செப்பறை முதலிய இடங்களில் உள்ள திருக்கோயில்களில் அக்கோயிற் பாதுகாப்பாளராக விளங்கியிருந்தார்கள். பிற்காலத்தில் வடகரைக் கோட்டை முதலிய இடங்களில் அரசாட்சி செய்துவந்த குறுநில மன்னர்களுக்கு அமைச்சர்களா கவும் படைத் தலைவர்களாகவும் இருந்து அரிய தொண்டுகள் செய்து அம் மன்னர்களின் புகழைப் பெருக்கியவர்கள். இவர்களுடைய அரிய திறனும் புலமையும் சமயத்திற்குத் தகுந்தவாறு செயல் புரியும்

அறிவு நலமும் இக்கால மக்களாலும் வியந்து பாராட்டப் பெறுகின்றன. இவர்கள் இறைவழிபாடு செய்வதினுஞ் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் அவ்வக் காலங்களிற் செய்த நூல்களும் இயற்றிய தனிப்பாடல்களும் பல. அவற்றுட் பல இன்னும் அச்சாகாமல் உள்ளன.

**பொன்னம்பலம் பிள்ளை**

இவருடைய முன்னோர்களிற் சிறந்து விளங்கியவர் பொன்னம்பலம் பிள்ளை. இவர் வடகரைத் தானாதிபதியாக இருந்து தம்முடைய கூரிய அறிவாலும் வாக்கு வன்மையினாலும் சிறந்து விளங்கினார். தமிழ் நாட்டில் இவரைப் பற்றி அனைவரும் நன்கறிவர். இப் பொன்னம்பலம்பிள்ளை இராமநாதபுரம் சென்றிருந்தார். இவருடைய புலமையைக் கண்டு அழுக்காறு கொண்ட அரண்மனைப் புலவர்கள் இவரை இழிவு படுத்த வேண்டுமென்று எண்ணினர். "கடுமையான முறையில் செய்யுளியற்றுமாறு கூறி இவருடைய புலமையை ஆராய்ந்து பாருங்கள்" என்று மன்னரிடத்தில் கூறினர். மன்னரும் அவ்வாறே ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினார். "பத்துப்படிகள் உள்ள நம் அரியணையின் ஒவ்வொரு படிக்கும் முறையே எண் பொருந்த உவமையமைத்துப் பாடவேண்டும்; இன்றேல் உம்முடைய ஊருக்கு உடனே திரும்பிச் செல்ல வேண்டும்" என்று கட்டளையிட்டார். உடனே பொன்னம்பலம்பிள்ளை,

"திருமால் பிறப்பது பத்துநவமணி திக்கெட்டுடன்
உருவாரி யேழுகத் சாத்திரமாறுஉயர் கிருபைத்
தருவானதைந்து மறைநான்கு தமிழ்மூன்று சாதி
இரண்டு சேதுபதி வார்த்தை யொன்றே"

என்று பாடினார். இதனைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டனர். இவரிடம் மிகுந்த அச்சங்கொண்டு போற்றினர். சேதுமன்னர் தகுந்தவாறு சிறப்புச் செய்து பாராட்டினார்.

வேறொரு சமயத்தில் இவர்,

"பொன்மலைக்குஞ் சேதுவுக்கும் புகழ்பெற்றோ
னெதிர்வந்து பொருதார் தம்மை
வின்மலைக்கப் பொருது குறும்படக்கி யடங்காத
பெருவிசயங் கொண்டு நின்றோன்
தென்மலைக்கும் திருமலைக்கும் ஆஸ்திகொடுத்
தேன்கருணைச் செவ்வே ளன்றிக்
கன்மலைக்கு மனத்தாரைக் கையெடுக்க
இனியெனக் குக்கடப்ப டாவே"

என்று பாடினார். இவர் வாசுதேவ நல்லூர்ப் புராணம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

பாடல் திறம்

இளமையிலேயே செய்யுள் பாடுந்திறம் படைத்த சங்கர பாண்டியனார் முருகக் கடவுள்மீது பல செய்யுட்களைப் பாடலானார். பொதியமலைச் சார்பில் திருக்குற்றாலத்திற்கு அண்மையில் திருமலையில் திருக்கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான்மீது கொம்பில்லா வெண்பா வந்தாதி, கொம்பில்லா நிரோட்டக வெண்பா வந்தாதி, திருமலை உச்சி விநாயகர் வெண்பா வந்தாதி, திருமலைக் குமாரசாமி திருப்புகழ் முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

"வாலைக் குறத்தி வடிவழகி மாதங்கக்
காலைப் பிடித்திணக்குங் கந்தாசிர்—வாலை
அபிராமி தந்த அறுமுகவா ஞான
அபிவிர்த்தி தந்தாண் டருள்"

என்பது கொம்பில்லா வெண்பா வந்தாதிப் பாடல்களில் ஒன்று.

"தாளை யகத்தணிந்தார் சாகார் தரணிதனில்
காளையா ராகிக் கதிகலஞ்சிர்—ஆளியாய்
நாணவினத் தாளினலன் நன்குய தாயணைந்தார்
காணகிலைக் காணியதாய்க் காண்"

என்பது கொம்பில்லா நிரோட்ட வெண்பா வந்தாதிப் பாடல்களில் ஒன்று.

இவரியற்றிய திருமலைக் குமாரசாமி திருப்புகழ் ஆயிரத்தெட்டுப் பாடல்களை யுடையது. திருமலைக் குமாரசாமி திருமுன்பு அரங்கேற்றப்பட்டு 1940ஆம் ஆண்டில் வெளிவந்திருக்கிறது. பாடல்களெல்லாம் அருணகிரி நாதருடைய திருப்புகழ்ப் பாடல்களைப் போலவே விளங்குகின்றன.

"நினைத்ததை முடித்து நலத்தினை யளித்து
நெறிப்படி பதத்தை அருள்வாயே
நினைப்பவர் உள்ளத்தில் இருப்பவ சுகத்தின்
நிலைத்தவ கரிக்கு மிளையோனே
அனைத்துல குயிர்க்குள் ஒளித்தவ பரைக்கும்
அருட்சுத வரற்கும் ஒருபாலா
அனத்திரள் படைத்த பணைத்தட முடுத்த
அகிற்பொழி லுடுத்த பொழிலூரா
கனைத்தெதிர் பெடுத்து இருட்கடல் கவிழ்த்து
கனப்பெயல் மிகுத்த வளநாடா
கணத்தவர் களுக்கு வலப்படை கொடுத்து
கனத்தசுர் தொலைத்த செகவீரா
நனைத்திர ளலர்த்த ஒழுக்கறல் பெருக்கி
நதித்திர ளொடுக்கு மலைவேளே
நவத்தவ மியற்று திருக்குடி படைத்த
நகத்திடை யுதித்த பெருமாளே"

என்பது திருப்புகழ்ப் பாடல்களில் ஒன்று.

மழைபெய்யப் பாடியது

வாசுதேவ நல்லூருக்கு அடுத்து துட்டரண்டாப் பேரிக்குளத்தில் தண்ணீரற்றுப் பயிர்கள் வாடின. மக்கள் குடிதண்ணீருக்கு மிகுந்த துன்புற்றனர். கால் நடைகளும் தண்ணீரின்றி வாடின. சிலர் சங்கர பாண்டியனரை யடுத்துப், "பெரியீர்! பெரியோர்கள்

பாடினுல் மழைபெய்யுமே. மழைபெய்து ஊர் செழிக்குமாறு தாங்கள் பாடியருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். இவர்,

"எட்டிரண்டா யணுமுதலாய் மேருதாணு
யிலங்குகின்ற பேரொளியா யெங்கு மாகிப்
பட்டிரண்டார்த் திடுபரமாய்ப் பேரொளியாய்ப்
பழம்பொருளாய்ப் பொருண்மயமாய்ப் பரவிநின்று
கட்டரண்டா வகைபுரியுஞ் சிவஞானக்
கரும்பெனவே கருணையினைக் கலந்தூட்டும்
துட்டரண்டாப் பேரிவளர் சுயவரதப்
பெருக்கமுதந் தளிர்த்தொழுகுஞ் சுவாமி கேண்மோ"

என்று பாடிய அளவில் மழைபொழிந்தது. குளங் குட்டைகளெல்லாம் நிரம்பி வழியலாயின. பொது மக்கள் இந் நிகழ்ச்சியை இன்றும் கூறிப் பாராட்டு கின்றனர்.

## குமரன் புகழ் கவிக்கொண்டல்

செய்யுள் பாடுவதினும் சிறப்பாகக் குமரன் புகழ் பாடுவதினும் அருட்டிறனும் உயரிய பண்பும் உடையவ ரென்பதைப் பாராட்டித் திருமலைக் குமரன் முன்னிலையில் இவரியற்றிய வருகைப் பதிகம் அரங்கேற்றும் பொழுது "குமரன் புகழ் கவிக்கொண்டல்" என்னும் சீரிய பட்டம் இவருக்கு வழங்கப்பெற்றது.

## மருத்துவத்திலுந் திறமை

செய்யுள் பாடுவதுமன்றி மருத்துவத் துறையிலும் இவருக்கு நல்ல பயிற்சி யிருந்தது. இவருடைய முறை ஆயுர்வேத யூனனி சித்தர் முறைகளுக்கெல்லாம் மேம்பட்டுக் குமரனையே குருவாகக் கொண்ட ஒரு தனிமுறை. ஆங்கில மருத்துவர்களாற் கூடத் தீர்க்க முடியாத பல நோய்களை இவர் தம்முடைய தனிப்பட்ட முறையினுல் குணப்படுத்தி யிருக்கிருர். மருத்துவத்

துறையில் குமரனே தமக்குக் குருவென்பதைத் தம்முடைய பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

குமரனுக்கு விழா

திருமலைக் குமரனுக்கு ஒவ்வொரு கிருத்திகையிலும் சிறப்பான திருமுழுக்கு முதலியன செய்து விழா நடத்தினார். அவ் விழாவைக் கண்டுகளித்துப் பல மக்கள் முருகனடியவரானார்கள்.

பாராட்டு

இவருடைய நூல்களைப் பாராட்டி ஆ. தி. இராமலிங்கம் பிள்ளை யென்பவர்,

"இலக்கணம் வல்லே மென்ன
இறுமாப்புக் கொள்வோ ரெல்லாம்
அலக்கணுற் றம்மா வந்தத்
திருமலை யாண்டான் பாதம்
நிலக்கணே வழுத்தி னல்லால்
நேருமோ புலமை யென்றே
மலைக்குமா றிந் நூல் யாவும்
வளமுறப் பொலியு மம்மா.

சந்தப்பா சொல்ல வல்லார்
சண்முகன் அடியா ரல்லால்
இந்தப்பா ரகத்தே வேறு
புலவரும் இன்றே யென்பார்
அந்தஉண் மைக்குச் சான்றாய்
அறுமுக னருளை மிக்கச்
சொந்தமாக் கொண்டா னிந்தச்
சொல்வலான் என்ன லாமே.

இலக்கண வரம்பு மோசை
இனிமையும் பொருள்தேர் வார்க்குக்
கலக்கமென் பதுவே யின்றிக்
கரதலா மலகம் போலப்

புலக்கணே யடுத்துத் தோன்றப்
பொலிக்திடு மிந்நூல் யாவும்
கிலக்கணே யென்று மெங்கு
நீடுழி வாழ்க மாதோ.''

இவரைக் குறித்து வாசுவேத நல்லூர் சின்ன சொக்கலிங்கம் பிள்ளை யென்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிருர்: "இவண் எங்களுக்குப் பாத்தியப்பட்ட துட்ட ரண்டாப்பேரி என்னுங் குளத்தில் தண்ணீர் இல்லாது பயிர்களும் வாடி மக்களும் வாடுங்காலை, அக்குளத்தையனுர்க்குப் பூசை முதலியன செய்யப்பட்டன. அப்பொழுது அங்குள்ள பெரியோரெல்லாம் இப்புலவரின் தோற்றங் கண்டு மழைக்குறை நீங்கப் பாமாலை சாற்ற வேண்டினர். அப்பொழுதே கவிதை ஒன்றில் வீடு செல்லு முன்பு மழைபெய்து குளம் நிறைந்து மறுகால் சென்றின்புற வேண்டுமென்று பாவைத் தொடுத்தனர். வீட்டிற்குப் புறப்படு முன்னரே குளமும் பெருகி மறுகால் சென்றதைக் கண்டோம். பொன்னம் பலவனுர் மரபின் புகழ் நீடுழி வாழ்க வென்று கூறினோம்.''

## இறுதி

இவர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாகவில்லை.

## ௬. ஆ. தி. இராமலிங்கம் பிள்ளை

### தோற்றம்

இவர் பாண்டி வளநாட்டிலே திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆற்றூரில் வேளாளர் குலத்தில் திருச்சிற்றம்பலம் பிள்ளை என்பவருடைய அருந்தவப் புதல்வராகச் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிற் பிறந்தார்.

### கல்வி

ஐந்தாண்டளவிலே கல்வி கற்கத் தொடங்கிய இவர் பள்ளிக் கல்வியைப் பாங்குடன் கற்றுத் தேறிய பின்பு புலமைக் கல்வியும் கற்றுப் பாவியற்றும் ஆற்றலைப் பெறவேண்டும் என்று எண்ணினார். தக்க புலவர்களிடத்திலே இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமைத் திறமும் கைவரப் பெற்றார்.

### அலுவல்

நல்ல அறிவுத் திறமை பெற்று விளங்கிய இவர் தலைவன்கோட்டை சமீனுக்கு மேலாளராக அமைந்து நின்று அலுவல் பார்த்தார்.

### முருகனிடம் அன்பு

இவர் முருகப் பெருமானிடத்திலே முதிர்ந்த பேரன்புடையவராக விளங்கினார். முதற்கண் திருச்செந்தூர் மும்மணிக் கோவை என்னும் நூலை அப் பெருமான்மீது இயற்றினார். அந்நூல் 1904ஆம் ஆண்டு உறையூர் சைவசித்தாந்த சபையாரால் மதுரைத்

தமிழ்ச் சங்கப் புலவர் சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் முதலிய பல புலவர்களுடைய சாற்றுக் கவிகளோடு அச்சிட்டு வெளியிடப் பட்டது. இந்நூலின் இரண்டாவது பதிப்புக்கு ஊற்றுமலைச் சமஸ்தான வித்துவான் சு. கந்தசாமிப் புலவர் சாற்றுக்கவி வழங்கியுள்ளார். அவற்றுள் இரண்டை அடியிற் காண்க.

தன்னிலுயர் கங்கைகுலத் தவதரித்தோன் வாய்மை
தயைமுதற்சற் குணமமைந்தோன் தக்கதிருச் செந்தூ
மன்னியதண் கடலருகில் வளர்கருணைக் கடலாம்
வடிவேலெம் முருகனிரு மலரடியை மறவா
துன்னியுபா சனைபுரியு முயர்தகவா லுலகில்
ஒப்பிலமு தெனப்பலநூல் செப்பியகா வலவன்
இன்னியமமார்க்கலையா பீசுமுத லாய
இடங்கடொறும் பிரபலமா இனிதுறகன் கோங்கி.

விசயதலை வன்கோட்டை ரிசிவரென வந்தோன்
மேன்மைய விராமலிங்க பூமனவ்வே லவன்மேல்
நசவாண்டின் முன்னியற்றிப் பூவையிலட் டாவ
தானங்கல் யாணசுந்த ரக்கவிஞன் முதலோர்
இசைபலசாத் துக்கவிக ளுடனேகன் கச்சிட்
டெங்கும்விளங் கியமும்ம ணிக்கோவை யெனுநூல்
அசைவறுமன் பினர்விருப்பின் வண்ணமிரண் டாவ
தச்சுக்கு வரவுங்கண் டதியப்புற் றேமால்.

## இவரைப்பற்றிப் பிறர்

இவரைக் குறித்துப் பொன்னம்பல நாத முதலியார் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:

''குமரனிடம் இவர் கொண்ட பக்திக்கு அளவில்லை. நம்போலியர் சாமானியமாய் நினைக்குங் காரியங்கட்குக் கூட இவர் குமரனையே துணைக்கு அழைப்பர். குமரனுக்கும் இவருக்குங் கொண்டாட்டம் போலும். இவருக்குப் புரோகிதருங் குமரனே, மருத்துவனுங்

குமரனே, நண்பனுங் குமரனே, அரசனுங் குமரனே, தந்தை, தாய், தமர், தாரம் மக்களுங் குமரனே. முருகன்தான் பெண் கொள்ள கொடுக்க இவருக்கு வழி கூறவேண்டும். நோய்வரின் அவர் மருந்துதான். விவகாரம்வரின் அவர்தாம் முன்னின்று நியாயவாதி முதலிய கண்டு முடிக்கவேண்டும். உத்தியோக முறையிலுள்ள மேம்பாடுகளை அளிக்கவும் குறைகளை நீக்கவும் முருகன்தான் வரவேண்டும். இவர்க்கு நினைப்பும் முருகனே உயிர்ப்பும் முருகனே. ஆகா! இவர் பக்திப் பெருமைதான் என்ன? "முன்னவனே முன்னின்ருல் முடியாத பொருளுளதோ?" என்றபடி இவர் இவ்வுலகில் இருவகைச் செல்வமும் ஒருங்கே நிரம்பப் பெற்றவராய் "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்லபிற", "பெண்ணிற் பெருந் தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண் டாகப்பெறின்" என்னும் பொய்யா மொழியார் வாக்கியங்கட்கு இலக்கியமாய் மக்கட்பாக்கியமும் மனைப்பாக்கியமும் பெற்றுளராய், ஆங்கிலம், தமிழ் என்னும் இருமொழிகளிலும் மிக வல்லுநராய், சர்க்கார் வேலையில் படிப்படியாய்த் தாலுகா சிரஸ்தாதார் என்னும் உத்தியோகம் வரை பெற்று நன்மதிப்புடன் பென்ஷன் பெறுபவராய்ச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகளிலும் நடமாடி வருகின்ருர். அற்புதமாய் அவனருளாற் கிடைத்த லிங்கத்தினிடமாய்ச் சிவபூசை நாடோறும் நடத்தி வருகின்ருர். கண்டார்க்கவரும் அருள் வனப்பு வாய்ந்தவர்.

இத்தகைய பேராளர்தாம் யாரோ எனில் திருநெல்வேலி சில்லா திருச்செந்தூர்த் தாலுகா ஆற்றூர் திருவாளர் திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் செய்த மாதவத்தால் சைவவேளாளர் குலம் பெருமிதமுற அவதரித்த கௌமார பக்தி வித்துவ ரத்தினம் ஏ. டி. இராமலிங்கம் பிள்ளையவர்கள் ஆவர். இவர் இவ்வுலகினர் நல்வழிப்படும் பொருட்டு இன்னும்

பல்லாண்டு பல்லாண்டுகளாய்க் கலங்கரை விளக்கம் போல் பல நூல்களியற்றி மனத்துக்கண் மாசிலனய் இன்பந்தரும் அறத்தையே கைக்கொண்டு பேரானந்தம் அடையும்படி எல்லாம் வல்ல முருகன் திருவடிகளை மனமொழி மெய்களால் இறைஞ்சுதும்.''

### இவர் இயற்றிய நூல்கள்

ஆத்தியடி விநாயகர் நான்மணிமாலை, திருச்செந்தூர் மும்மணிக் கோவை, ஆறைப் பதிற்றுப்பத் தந்தாதி, திருவருட்பத்து, அகிலாண்ட நாயகி மும்மணிக் கோவை, திருச்செந்தூர்த் தண்டகமாலை, அடைக்கலப் பத்து, உயிர்த்துணைப் பத்து, சிவானுபூதி, திருவருள் விண்ணப்பம், திருவடிக் கலத்தல் விண்ணப்பம், திருத்தணிகை மும்மணிக் கோவை, தச்ச நல்லூர்ச் சித்தர் நான்மணிமாலை, குமரகுருபர சுவாமிகள் மும்மணிக் கோவை, மாதவச் சிவஞான யோகிகள் நான்மணிமாலை, அருணகிரிநாதர் நான்மணிமாலை, தாயுமான சுவாமிகள் நான்மணிமாலை, பட்டினத்தடிகள் நான்மணிமாலை, திருக்குருகூர்ச் சித்தர் கலிவெண்பா, தச்ச நல்லூர்ச் சித்தர் மான்மியம், சுப்ரமசொரூபாநந்த சுவாமிகள் மான்மியம், ஆனந்த சண்முக சரணலய சுவாமிகள் மான்மியம் என்பன இவரியற்றிய நூல்கள்.

### பாராட்டினேர்

இவருடைய நூல்களை, அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார், கோட்டையூர் கந்தசாமிப் புலவர், திருச்செந்தூர் ஆறுமுக சுவாமிகள், சீவை குண்டம் பொன்னம்பலநாத முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர், தூத்துக்குடி சிந்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை, தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, மு சு. பூரணலிங்கம்பிள்ளை, கு. அண்ணமலைப் பிள்ளை, பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் முதலியோர் பாராட்டிச் சாற்றுக் கவிகள் பாடியுள்ளனர்.

**இட்டபணி**

வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் இவருக்குக் கீழ்க்காணும் செய்யுளை எழுதியனுப்பினார்.

"செவ்வேற் பெருமான் திருவடிக் கேமனம்
எவ்வே லையிலும் இருத்தும் பெரியோய்
குமர குருபரர் மும்மணிக் கோவை
கிடைத்த விடயங் கிட்டிய உடனே
எழுதாக் குறையைப் பழுதகூ றாது
பொறுத்தது பெரியோய் போற்றத் தக்கத்;சிற்கத்
தவராச ராசனும் சிவஞான யோகியின்
திருவடி மலருக் கொருமன முருகி
நான்மணி மாலை நன்றுசூட் டினதைத்
தொட்டும் பார்த்துந் துருவிய நறுமணம்
நன்கனு பவித்தேன் நானொரு விண்ணப்பம்
செய்வேன் அதுதான் திருப்புக ழளித்த
அருண கிரியார் அவர்சூ டிடவொரு
மும்மணிக் கோவையோ நான்மணி மாலையோ
பாடுதல் வேண்டும் பக்தர்கள் தலைவனே."

**இறுதி**

இவர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாகவில்லை.

## எ. திம்மப்ப அந்தணனர்

### தோற்றம்

கவிராச பண்டிதர் ஆந்திர காசிய திம்மப்ப அந்தணனர் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்த இவர் ஆந்திர நாட்டில் சமய சங்கிலி என்னுஞ் சிற்றூரில் இராமசாமி ஐயர் என்பவருடைய அருந்தவப் புதல்வராகச் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் தோன்றினர்.

### கல்வி

இவர் ஆந்திரராக இருந்தும் தமிழ்மொழியினிடத்தில் எவ்வாறோ பற்றுண்டாகியது. தமிழ்மொழியை நன்கு கற்றுணர வேண்டுமென்று அவாக் கொண்டார். தமிழ் நாட்டை யடைந்து மதுரைமா நகருக்குச் சென்ருர். தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து நன்கு கல்வி பயின்று பண்டிதத் தேர்வில் தேறினர்.

### ஆசிரியத் தொழில்

திம்மப்ப அந்தணனராகிய திம்மப்ப ஐயர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குதலை யுணர்ந்த சேலங் கல்லூரித் தலைவர் இவரைத் தம்முடைய கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தினர். கல்லூரியில் ஆசிரியராக இருந்ததன்றிக் கல்லூரியின் வெளியிலும் பலர்க்குக் கல்வி போதித்துச் சிறந்த தமிழ்த் தொண்டு செய்தார்.

### பாடல்கள் இயற்றல்

செய்யுள்கள் இயற்றுவதினும் சிறந்த திறமடைந்து விளங்கிய இவர் தனிப்பாடல்கள் பல இயற்றியதன்றி

முருகக் கடவுள் மீதும் பல பாக்கள் இயற்றினர். திருவேங்கடமுடையான்மீது திருவேங்கட மும்மணிக் கோவை என்னும் நூலை இயற்றினர். இந் நூலைப்பற்றி டாக்டர் உ. வே. சாமிநாதையர் பின்வருமாறு கூறினர்:

"சேலம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ திம்மப்பையரவர்கள் இயற்றிய 'திருவேங்கட மும்மணிக் கோவை'யைப் படித்துப் பார்த்தேன். இதில் அங்கங்கே பத்துப்பாட்டு, திவ்யபிரபந்தம் முதலிய பழைய நூல்களிலுள்ள கருத்துக்களுஞ் சொற்றொடர்களும் பிற்காலத்து நூல்களாகிய அட்டப்பிரபந்தம் முதலியவற்றிலுள்ள பிரயோகங்களும் அமைந்துள்ளன. வேங்கடத்தின் பெருமையையும் ஆழ்வார்கள் முதலிய திருமாலடியார்களின் சிறப்பையும், திருமால் தமிழிலன்புடையவரென்பதற்கேற்ற வரலாறுகளையும் இதில் இவர் எடுத்துக் கூறியிருத்தல் பொருத்தமுடையதாக இருக்கின்றது. பழைய தமிழ்ப் பிரபந்தங்களைப் படித்தறிந்து இன்புற்று வரும் இவர், தாமும் அத்தகைய நூல்களை இயற்ற வேண்டுமென்னும் ஆர்வமுடையவராகி ஊக்கத்தோடு உழைத்து வருதல் பாராட்டுதற்குரியதாகும்."

### சிறப்புப் பாயிரங்கள்

இந்நூலுக்கு அ. சுப்பிரமணிய பாரதியார், பண்டித ரத்னம் புழலை திருநாவுக்கரசு முதலியார், எஸ். கிருட்டிணசாமி ஐயர், அ. வரத நஞ்சைய பிள்ளை, தா. சுப்பராயச் செட்டியார், பழநிச்சாமிச் சிவாச்சாரியார், டி. வீரராகவ ஐயங்கார் என்போர் சிறப்புப்பாயிரம் அளித்திருக்கின்றனர்.

### பாடல்கள்

*"காரணி தவமுஞ் செய்ய சேலமா நகரக் கல்விச்*
*சீரணி சாலை தன்னில் செந்தமிழ் வளர்க்கும் ஆசான்*
*தாரணி மதுரைத் தெய்வச் சங்கநூற் புலமை யாளன்*
*பேரணி மறையி ராம சாமிவேள் பெற்ற மைந்தன்.*

மறுவறு நேர் மையாளன் மாகிறை செல்வன் சீர்சால்
அறுபடை வீட்டோன் வேண்ட அகவிட மளித்த நெஞ்சன்
உறுபுக முடியாத் கேற்ற தயாரச முற்ற சிலன்
நறுநறை கிகர்த்த வாக்கான் 'நிம்மப்ப நாவ லோனே''

என்பன சிறப்புப்பாயிரப் பாடல்களில் இரண்டு.

இறுதி

இவர் காலமான ஆண்டு முதலியன தெரியவில்லை. அண்மைக் காலம் வரையில் வாழ்ந்திருந்தவர்.

---

## அ. இளசை திருமலைச்சாமி

### தோற்றம்

"கொம்மைநகில் மறச்சிறுமிக் குளமகிழும்
முருகனிரு மலர்த்தாட் கன்பால்
செம்மையுறக் கிளிக்கண்ணி யெனுமொருநூல்
செந்தமிழாற் செப்பி னுைல்
மும்மைவகைச் செங்கனியோ கற்கண்டோ
வெனப்புலவர் மொழிந்து போற்ற
இம்மைநலம் படைத்ததிரு மலைச்சாமி
எனும்புலமை இசைவல் லோனே"

என்று ஆ. தி. இராமலிங்கம் பிள்ளை என்பவரால் பாராட்டப்பெற்ற இவர் பாண்டி வளநாட்டில் எட்டைய புரம் என்னும் ஊரில் எசுர்வேதியர் குலத்தில் சீநிவாச ஐயங்கார் என்பவருடைய அருமைப் புதல்வராகச் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தோன்றினுர். எட்டையபுரம் எனப் பெயர் வழங்கும் இவ்விளசை நகரானது மிகச் சிறந்த வருணனை மலிந்த சமுத்திர விலாசம், குவலாயாநந்தம் என்னும் நூல்களை ஆக்கிய புலவர்களையும் முத்தமிழையும் பாதுகாத்துப் போற்றிய மன்னர் செக வீரராம வேங்கடேசுவர எட்டப்ப நாய்க்கர் என்பவருடைய ஆட்சியில் அந்நாளில் அமைந்திருந்தது.

### கல்வி

திருமலைச்சாமி தம்முடைய தந்தையாரிடமும் பிறரிடமுங் கல்வியை நன்கு கற்றுத் திருந்திய பேரறிவு பொருந்தியவராக விளங்கினுர். செய்யுள் பாடுந்திறமும் இவரிடம் நன்கு அமைந்திருந்தது

### கிளிக்கண்ணி

பலருடைய வேண்டுகோளின்படி கந்த புராணச் சுருக்கமாக, "முருகன் கிளிக்கண்ணி" என்னும் நூலை இயற்றினுர். மற்றும் இவரால் இயற்றப்பெற்றன பல.

### பாராட்டு

இவருடைய கிளிக்கண்ணியைப் பாராட்டித் திருநெல்வேலியை யடுத்த மங்கைநகர் த. ஆறுமுக நயினர் பிள்ளை, அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், காருடை சூரிய மூர்த்திப்பிள்ளை, திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர் ஆ. தி. இராமலிங்கம் பிள்ளை முதலியோர் பாராட்டுரை வழங்கியுள்ளனர்.

### நூல்

"ஆழ்கட லாரமுதை அங்கணத் துகுப்பவரின்
தாழ்குழல் தையலாலே தவமழிக் தேங்கிலையோ?

வாசக் கமலமுக வாணுதல் அகலிகையால்
வாசவற் காயிரங்கண் வந்த தறிந்திலையோ?'

என்பன நூலில் இரண்டு கண்ணிகள். இவர் 'திருப்பணி நயினர் மயில் விடுதூது' என்னும் நூலும் இயற்றியிருப்பதாகத் தெரிகிறது.

### சாற்றுக்கவி

"செல்வ முயர்ந்திவர் கல்வியுஞ் சிறந்தோவிர்
சொல்வளர் பெரியோர் மல்கிய சபைத்ததாம்
எட்டய புரமெனும் இளசையம் பதிக்கண்
கட்டிசை நான்மறைக் கண்ணெசுர் வேதியர்
மரபிலோர் திலகராய் வந்தமெய்ஞ் ஞானக்
குரவராம் சிவா சக்குரி சில்மா
தவசுதன் திருமலைச் சாமிமால் இயற்றிய
சுவைதெரி முருகன் சொற்சுகக் கண்ணியாம்
காணக் கிடைத்தது களிமிகத் தந்தது"

என்பது ஆறுமுக நயினர் பிள்ளை என்பவருடைய சிறப்புப்பாயிரத்தின் ஒருபகுதி.

———

## ௬. தூ. ந. கந்தசாமிப்பிள்ளை

### தோற்றம்

இவர் பாண்டிவள நாட்டில் திருமந்திர நகர் என்னும் தூத்துக்குடியில் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றினார்.

### கல்வி

இளமைப் பருவத்தில் பள்ளிக் கல்வியைப் பாங்குடன் கற்றுமுடித்த பிறகு அறிஞர்பலரிடம் புலமைக் கல்வியுங் கற்றுச் செய்யுள் பாடுந் திறமடைந்தார். திருச்செந்தூர் முருகப்பெருமானிடத்தில் பேரன்பு கொண்டு அப்பெருமானை எப்பொழுதும் போற்றிச் செய்யுட்கள் இயற்றலானார். இதனால் இவருடைய வாழ்க்கை சீருஞ்சிறப்பும் அமைந்து சிறந்து விளங்கியது.

### தரகுத் தொழில்

அந்நாளில் விருதுப் பட்டியில் பஞ்சுவாணிகத் தலம் ஒன்று இருந்தது; அதில் இவர் தரகராக அமர்ந்து தொழில் புரிந்தார். அதனால் வாழ்க்கையை இனிது நடத்துவதற்கு வேண்டிய பொருள் வசதி யுண்டாயிற்று. வேறுசில வணிகநிலையங்களினும் அலுவல் பார்த்தார்.

### மழை பொழியப் பாடுதல்

தாது ஆண்டில் மழைபெய்யாமல் போய் விட்டது. அதனாற் பெரும் பஞ்ச முண்டாகியது. வற்கடத்தின் கொடுமை தாளாயல் மக்கள் பெரிதும் வருந்தினர்கள்.

சிலர் இவரைப் பார்த்து, "முருகப்பெருமானிடத்தில் பேரன்புடைய தங்கள் வாக்கால் செய்யுள் பாடினல் மழை பொழியும். ஆகவே, மழைபொழியுமாறு பாடியருள வேண்டு"மென்று வேண்டிக் கொண்டனர். இவரும் அவர்களுடைய வேண்டுகோளுக் கிசைந்து,

"பஞ்ச காலத்தால் கஞ்சிக் கற்றிந்தப்
பாவ பூமியில் வாழு மானிடர்
நெஞ்ச டைத்து நாவ றண்டுசாகிறுர்
நின்னருள் சுரந்துலக மெங்கணும்
கொஞ்ச காலத்தில் மழைபெய் யாவிடில்
கூட்டங் கூட்டமா மாளு முன்னமே
அஞ்ச லென்றுகாப் பாற்ற வேண்டுமே
அமரர் கோனென்னுங் குமர வேலனே.

கால காலத்தின் மழையில் லாமலே
காட்டிற் கானலும் பறக்க லானதால்
கோலு மேரும்போட் டுரை விட்டுக்
கூகா வென்றேசனஞ் சோறு சோறெனக்
காலுங் கையுமே யோய்ந்து சோர்ந்துயிர்
கன்றிச் சாகிறு ரிந்தச் சோதனை
சாலு மஞ்சலென் றுள வேணுமே
சரவ ணத்துறி குமர வேலனே.

பச்சைப் பிள்ளைகள் எற்பு டம்புடன்
பரத விக்குதே தெருவில் நின்றையோ
பிச்சை பிச்சையென் றேங்கிச் சாகுதே
பின்னை யார் துணை நின்னை யன்றியார்
இச்ச கத்திற்காப் பாற்றுவார் கொலோ
ஏது மேயறி யாத பேதைகட்
கிச்சை வைத்தருள் செய்ய வேண்டுமே
இறைவன் ஈன்றகற் குமர வேலனே.

இவ்வாறு பல பாடல்களைப் பாடவும் சிலதினங் களில் பெருமழை பெய்தது. எங்கும் நீர்ப் பெருக்

மாகி மிகுமழையாலுந் தொல்லை யுண்டாகியது. மழையை அளவாகப் பெய்யுமாறுஞ் செய்யுள்பாடிச் பெருமழையால் விளைந்த அல்லலைப் போக்கினர். இச் செய்கையால் மக்கள் இவரிடத்தில் நன்மதிப்புக் கொண்டு பாராட்டலாயினர்.

தனிப்பாடல்கள்

இவர் முருகக் கடவுள் மீது ஏறக்குறைய இருபது பதிகங்கள் பாடியதன்றி அவ்வக் காலங்களில் தனிப் பாடல்கள் பலவும் பாடினர். அவ்வாறு பாடிய பாடல்கள் இருநூற்றுக்குமேல் உள்ளன. அவற்றுள் சிலவற்றை அடியிற் காண்க.

"உன்னைத் தவிர வேறொருத்தர்
உதவியிலையே இப்புவியில்
என்னைக் காக்குங் கருத்துடையோன்
என்றுநீயே ஏழைமுகம்
தன்னைப் பாரிப் பாரதனில்
தமியன்பிழைக்கும் வழியருள்வாய்
பின்னைக் கிடமாஞ் செந்திநகர்
பெருமை யுறவாழ் குகவேளே"

"செந்தில்வாழ் முருகா உன்றன்
செவிகளில் இந்நாளில்
அந்தமோ டடியே னிப்போ
தாண்டருள் செய்வாயென்று
சிந்தித்து வேண்டுஞ் செய்யுள்
புகுந்திடுஞ் செய்திசொல்வாய்
கந்தனே உன்னை யல்லாற்
கதியெனக் காரெக்காலும்"

"செந்தில்வாழ் நாயகமேதேனே பாலே
சீரியரின் மனத்திருக்குஞ் தேவ தேவே
எந்தகிமி டந்தனிலும் நின்பொற் றாளை
ஏத்துவதே தொழிலாக இருக்கு மென்றன்

சிந்தையின் நினைப்பறிவாய் இப்போ தேகா
சிறியனுடை மனமகிழச் செய்வா யானும்
உன்றனுயர் பெயருடையேன் அதனால் ஏழை
உன்வினவை முடிப்பதுன்றன் கடனென் றேனே''

### தோத்திரப் பாமாலை

இவர் முருகப் பெருமான் மீது பாடிய பாடல்கள் யாவும் 'தோத்திரப் பாமாலை' என்னும் பெயரோடு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந் நூலைப் பாராட்டி, சேற்றூர் சமஸ்தான வித்துவான் மு. ராம. அருணாசலக் கவிராயர், அரிகேசநல்லூர் அரிகர ப்பாரதிகள், திருநெல்வேலி கவிராச நெல்லையப்பபிள்ளை அவர்கள், சேற்றூர் இராமசாமிக் கவிராயர் அவர்கள், திருநெல்வேலி பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி பு. வேங்கடசாமிப் பிள்ளை, திரிசிரபுரம் தி. ராச. காந்தபெருமாள் பிள்ளையவர்கள், ச. கந்த முத்துப் பிள்ளையர்கள் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

"தேமணக்கும் மலர்க் கூந்தல் வள்ளிநா
யகிக்குகந்த செவ்வேள் பொற்றாள்
பாமணக்க உரைத்த கந்தசாமி வள்ளல்
தமிழ்மாலை படிக்குந் தோறும்
நாமணக்கு மனமணக்கு உடல்மணக்கும்
புலன்மணக்கும் நவிலக் கேட்போர்
தாமணக்கக் கண்டவுடன் தற்போதம்
நீங்கியுயர் தவமுற் றுரே''

என்பது பாராட்டுப் பாடல்களில் ஒன்று.

## ௪0. வா. மகாதேவ முதலியார்

### தோற்றம்

"உலகமொரு குடைநிழலில் காத்தளிக்கும்
திகிரியோற் குரிய வாகத்
தலைமையுறும் அரசிருக்கை தமிழெனென்ருஞ்
சென்னையப் பாச்சாமி வள்ளல்
அலகிலதா இயற்றுதவப் பயனானேன்
மெய்யுணர்த்து மடைவிற் போதித்
நிலகியசொக் கலிங்க குருதிருவருள்பெற்
றவனடிகள் இறைஞ்சி வாழ் வோன்

செந்தமிழின் இலக்கியமும் இலக்கணமுஞ்
சிந்தாந்தத் தெய்வ நூலும்
சந்தமுறு தருக்கமுதற் பலநூலொ
டாங்கிலமுந் தகக்கற் றுய்ந்தோன்
வந்தடையு மாணவகர்க் கன்பினொடு
நூல்கள்பல வழங்குங் காலைச்
சிந்தைகொள நுண்பொருளும் எண்மைபெற
அவர்க்குணர்த்துஞ் சிறப்பின் மிக்கோன்."

என்று சொ. வேலுச்சாமிக் கவிராயரால் பாராட்டப் பெற்ற இவர் சென்னை மாநகரில் அப்பாச்சாமி முதலியார் என்பவருடைய அருந்தவப் புதல்வராக 1874 ஆம் ஆண்டிலே பிறந்தார்.

### கல்வி

ஐந்தாண்டளவில் பள்ளிக்கனுப்பப் பெற்ற இவர், சிந்தாத்திரிப் பேட்டையில் வெள்ளியம்பல உபாத்தியாயர் என்பவர் வைத்திருந்த திண்ணைப் பள்ளிக்

கூடத்திற் சிறிதுநாள் கல்வி பயின்ருர். பிறகு சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலே சேர்ந்து இளங் கலைத் தேர்வு (எப். ஏ.) வரை பயின்ருர்.

### ஆசிரியத்தொழில்

கல்வி கற்ற அதே கல்லூரியிற் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். கல்லூரியில் தமிழுக்கிருந்த சிறப்புநிலை நீங்கியது. 1908 ஆம் ஆண்டில் வேலையை விட்டு விலகினர்.

### தேவகோட்டையில் வேலை

அந்நாளில் தேவகோட்டையில் சின்னமைனர் என்று அழைக்கப்பெற்ற அருணைசலஞ் செட்டியார் என்பவருக்கு ஆங்கிலமுந் தமிழுங் கற்பித்துக் கொண்டு 1908 ஆம் ஆண்டுமுதல் 1915 ஆம் ஆண்டுவரை இருந்தார். மேற்படி செட்டியாருக்குக் கல்விகற்பித்து முடிந்தபின் சென்னையை அடைந்தார்.

### மீண்டுஞ் சென்னையில் வேலை

1915 இல் சென்னையை அடைந்ததும் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு ஆசிரியராகப் பணி புரிந்தார். பிறகு கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமது இறுதிக் காலம்வரை பணிபுரிந்தார்.

### விரிவுரை முதலியன

கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் மாணவர் பலருக்குத் தனியாகவும் பாடஞ் சொல்லுதல், பெரியபுராணம், கம்பராமாயணம் முதலியவைகளைப் பற்றி விரிவுரை செய்தல் முதலிய பணிகளையும் மேற்கொண்டிருந்தார். சென்னைமாநகரிற் பெரும் புலமை வாய்ந்து பெரியபுராண விரிவுரையாளராகத் திகழ்ந்து

காலஞ்சென்ற இராசாராம் பிள்ளை என்பவர் இவருடைய மாணவரே யாவர்.

### உரையெழுதுதல்

மேலும் முதலியார் நூல்கட்கு உரையெழுதும் பணியையும் மேற்கொண்டு சோமேசர் முதுமொழி வெண்பா, நளவெண்பா, நாலடியார் ஆகிய நூல்களுக்குச் சிறந்த விளக்கத்துடன் இலக்கணக் குறிப்புகள் தோன்ற உரையெழுதியுள்ளார்.

### பெரியபுராண ஆராய்ச்சி

மற்றும் இவர் பெரியபுராண ஆராய்ச்சி என்னும் நூலையெழுதி 1924 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினர். பெரியபுராணத்தைப் பற்றி முதன் முதலாகத் தோன்றிய ஆராய்ச்சி நூல் இதுவேயாகும். இதன்கண் நூல் வரலாறு முதலாகச் சில தடைகளுக்கு விடை என்பது முடிவாகப் பதினொரு தலைப்புக்கள் உள்ளன. இத் தலைப்புக்கள் நூலாய்வார்க்கு ஆயுநன்முறையினை வகுத்துக் காட்டும் இலக்கணம் போன்றமைந்துள்ளன. கம்பராமாயண மேற்கோள், வடமொழி மேற்கோள், திருமுறை, கந்தபுராணம், சேக்கிழார் புராணம், காஞ்சிப் புராணம், உண்மை விளக்கம், சீகாழிப் புராணம், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருவாரூர் நான்மணிமாலை, திருக்குறள் முதலிய பல சிறந்த நூல்களின் மேற்கோள்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

மேலும் "மாந்தாதா" முதலிய மன்னர் வரலாறுகளும் காணப்படும். திருவூர்ப் பெயரொடு திருக்கோயில்களுக்கு அமைந்த பெயர்க் காரண விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. சில திருக்கோயில்களின் பண்டைய விளக்கங்கள், கண்ணப்பநாயனரின் தனிச் சிறப்பு,

பழமொழிகள் எடுத்துக்காட்டல், 23 திருப்பாடல்கட்கு இருபொருள் பெறவைத்தல் சிலபாடல்களின் அருமை முடிபுகள் புராணத்துள் வரும் நானிலத்தைந்திணை வளச்சிறப்பு, 'கற்பகத்தின் பூங்கொம்போ' என்னும் பாட்டின் விளக்கம், தடைகளுள் 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன், எனத்தொடங்குந் திருப்பாட்டிலுள்ள குற்ற நீக்க விளக்கம், மங்கையர்க்கரசியார் சமணம் புகாது சைவச் செந்நெறியினின்று கணவனைக் கைதூக்கி யெடுத்தமை, ஆண் பெண் ஆகிய இரு பாலார்க்கும் ஆன்மநாயகன் சிவபெருமானே என்பது முதலிய பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் 1970 ஆம் ஆண்டில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் இரண்டாவது பதிப்பாக நல்ல முறையில் அழகிய நூலாக வெளியிடப் பெற்றுள்ளது

## இவர் இயற்றிய செய்யுள் நூல்கள்

இவர் செய்யுள் நூல்கள் சிலவற்றையும் தனிப் பாடல்கள் சிலவற்றையும் இயற்றியுள்ளார். இவரால் இயற்றப் பெற்ற செய்யுள் நூல்கள் திருச்செந்தூர் முருகர் பதிகம், பழநி யாண்டவர் பதிகம், பழநி நான் மணிமாலை, திருமயிலம் இரட்டைமணிமாலை, பரமா சாரியர் பாமாலை, சொக்கலிங்க சுவாமிகள் வெண்பா, பன்னிருபாட்டு என்பன. பரமாசாரியர் பாமாலை என்பது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னுஞ் சைவசமயாசாரியர்கள் நால்வர் மீதும் பாடப்பட்டுள்ளது. பன்னிருபாட்டு என்பது வறுமையின் பயன், வாழ்க்கை நலம், மாதர் தன்மை, குருவழிபாடு, மாந்தர் பொதுவியல், அவையஞ்சாமை, புலவர் சில வரியல்பு, தாயின் அன்பு, மக்கள் இயல்பு, அறிஞர் அடக்கம், பயனிலசொல்லாமை முதலிய செய்திகளைப் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

தனிப்பாடல்கள்

விரோதாபாசாலங்காரம் அமையுமாறு ஒரு செய்யுள் பாட வேண்டுமென்று ஒரன்பர் விரும்பியபோது பாடியது.

பண்ணுனே அண்டமெலாம் பண்ணி ஞனேப்
 பத்தர்கள்தம் மனத்தினிக்கும் பாகைமூன்று
கண்ணுனே மேதக்கோர் கண்ணி ஞனேக்
 கைலேவாழ் அரசையுரு வொன்ப தென்னும்
எண்ணுனே யீடேற்ற எண்ணி ஞனே
 எங்கோனே யீடேற்ற மில்லா தானே
மண்ணுனே வனவேடன் மண்ணி ஞனே
 மாசற்ற மணி விளக்கை வழுத்து வாமே.''

ஒரு போலித் துறவியைப்பற்றிப் பாடியது.

''செந்நீர் தசையிரண்டுஞ் சேர்ந்தான துன்னுடம்பும்
எந்நாளு மும்முறைநீ என்னினுண் பாய்—இந்நாளில்
எற்றே பெண் ணுசை யிகந்தா யிசைத்திடுதி
வற்ருந் துறவொழுக்கு வாய்ந்து.''

சென்னையைக் குறித்துப்பாடிய பாடல்களில் ஒன்று.

''வானுடும் வந்துபுகக் காதலிக்குஞ்
 செவ்வியதாய் மலர்க்க ரத்து
மானுடுஞ் சம்புமகிழ் திருப்பதிகள்
 அகந்தழீஇ மாக்கண் மொய்த்துத்
தேனுடுங் குழனல்லார் பொற்பாலுங்
 கற்பாலும் திகழ்ந்து நின்ருர்
கோனுடுங் கலவி யினிற் புலவியினிற்
 கலனேரியுங் குவளச் சென்னை.''

திருச்செந்தூர் முருகர் பதிகத்தில் ஒருபாட்டு :

"மணியாழிப் பெரும்புவியின் மன்னும் வாழ் வார்
மகப்பெறு வார் வாழ்நாளு மிகுவார்சிந்தா
மணியாவைக் கற்பகத்தை வளபத் மத்தை
வைத்தேவல் கொள்வார்கின் ஞமங் கற்பார்
குணியாகிக் குணமாகிக் குறிய தாகிக்
குறிகண்டு துணிபொருளாய்க் குலவு மொன்றே
கணியாகிப் புனத்தருகே காண நின்ற
கருத்தனே செந்தூர் வாழ் கருணைத்தேவே."

## இறுதி

சிறந்த புலமை நலம் வாய்ந்து திகழ்ந்த இவர் தமது ஐம்பதாவது அகவையில் 1924 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் முப்பதாம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

## கக. சுப்பிரமணியக் கவிராயர்

### தோற்றம்

இவர் சோழ வளநாட்டில் திருக்கடவூரில் சைவ வேளாண் குடியிலே பத்தொன்பதாவது நூற்றுண்டில் தோன்றினுர்.

### ஓதுவார்

இளமைப் பருவத்திலேயே கல்வியை நன்கு கற்ற இவர் செய்யுள் பாடுந்திறமும் அடைந்தார். தேவாரப் பாடல்களை இசையுடன் ஓதுதலைப் பயின்று திருக்கோயிலின் வழிமுறை ஓதுவாராகப் பணிபுரிந்தார்.

### நூல்கள் இயற்றல்

ஓதுவார் பணியை மேற் கொண்டிருந்ததன்றி நூல்களியற்றும் பணியையும் மேற்கொண்டு திருக்கடவூருலா, திருக்கடவூர்ப் புராணம், மயிலைக் கோவை, மயிலையந்தாதி முதலிய நூல்களையும் இயற்றினுர். இவர் சைவசமய ஆகம புராணங்களையும் வேத வேதாந்தங்களையும் நன்குணர்ந்தவர்.

### உற்றுர்

இந்நூலாசிரியருடைய உடன் பிறந்தார், மைந்தர், பேரர் முதலியவர்களுஞ் சிறந்த தமிழ்ப்புலமை யுடையவர்களாகத் திகழ்ந்தனர்.

சிறப்புப்பாயிரம்

திருக்கடவூர் உலாவைப் பாராட்டிப் ப அ. முத்துத் தாண்டவராய பிள்ளையவர்கள் இயற்றிய சிறப்புப்பாயிரப் பாடல்களில் ஒன்று,

"வால்புகழ் தமிழ் இயப்பதி உதித்த
வாலிய சுத்தசை வத்தன்
பால்புரை நீறுங் கண்டியுந் தரித்துப்
பரம்பரத் தெழுதெழுங் குணத்தன்
மால்கெழு மயக்க மொருவிய சிந்தை
மன்னவர் பலர்வியப் புறுவான்
சால்பினன் சுப்ர மணியனெ னுமத்
தடம்புயக் கவிவலான் மாதோ"

என்பது.

"மங்கைப் பருவ மடமாது மாரவேள்
பங்கப் படவளரும் பாலெகினம்—வெங்கனலில்
பெய்யாத சொன்னம் பிரச மணிபரப்பக்
கொய்யா தவிருங் கொழுங்கமலம்—வெய்ய
புருவச் சிலையைப் புருடர்த முள்ள
முருவத் தனிக்கோட்டு மோவந்—துருவிச்
சிறுகாலிங் காராத தேறல் குயிற்றுக்
குறைவு படர்த்தரளக் கோதை—கறியவலி
ஓட்டித் தகர மொழுகும் புரிகுழலார்
தீட்டிப் பரிமளிக்குஞ் சிந்தூரம் வாட்டமிகப்
பெற்றுவிர கத்தா லிளைஞர் பெருங்காதல்
உற்றமக ராலயத்துக் கோர்மிதவை—யற்று
விரிந்த கரண மிகப்புனித மாக்கும்
அருந்தவரை வாட்டு மணங்கு—பரந்துவரி
வண்டாடும் புண்டரிக மாதும் புலோமிசையும்
கொண்டாட வந்த குலக்கோதை—"

என்பன நூலின் சில அடிகள்.

இறுதி

இவர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாக வில்லை.

———

## கஉ. கவி முத்துச்சாமிப் பிள்ளை

### தோற்றம்

பாண்டி வளநாட்டில் இந்நாளில் எட்டையபுரம் என வழங்கப்பெறும் இளசையின் அண்மையில் உள்ள நடுவிற்பட்டி என்னும் ஊரில் 1862ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய பிள்ளை; தாயார் பெயர் விநாயகத்தம்மையார். சுப்பிரமணிய பிள்ளையினுடைய ஊர் சங்கரநயினர் கோவில். முத்துச்சாமிப் பிள்ளை பிறந்தது தம்முடைய தாயார் பிறந்த வீட்டில்.

### எட்டையபுர வாழ்க்கை

தாது ஆண்டில் பெரும் பஞ்சம் உண்டாகியது. அது மிகக் கொடுமையாக மக்களை வருத்தியது. அந்நாளில் சுப்பிரமணிய பிள்ளையும் சங்கரநயினர் கோயிலைவிட்டு எட்டையபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அரண்மனைக் கணக்கு வேலையை ஏற்றுக்கொண்டு அலுவல் பார்த்து வந்தார்.

### கல்வி

முத்துச்சாமிப் பிள்ளை இளமை முதற்கொண்டே நல்லொழுக்கம் உடையவராக விளங்கினர். ஆங்கிலமுந் தமிழும் ஒருங்கே பயின்ருர். தமிழில் நல்ல புலமை பெற்றுச் செய்யுள் பாடுந் திறத்தையும் அடைந்தார். காலக் கணிதத்தையும் பயின்று அதனிலுஞ் சிறந்து விளங்கினர்.

### தொழில்

முத்துச்சாமிப் பிள்ளை தம் நண்பராகிய சின்னச்சாமி ஐயருடனும் (இவர் சுப்பிரமணிய பாரதியாருடைய

தந்தையார்) எட்டையபுரம் சின்ன அரசருடனுஞ் சேர்ந்து மொத்த வாணிகத்தில் ஈடுபட்டு அதனைப் பெருநிலையில் நடத்தினர். பங்குகள் பல சேர்த்துப் பஞ்சாலை ஒன்றையும் இவர்கள் ஏற்படுத்தினர்கள். அவ்வாலை இந்நாளினும் நன்கு நடைபெறுகிறதாகத் தெரிகிறது.

## இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

சைவப் பஞ்சாங்கக் கணிதரும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சரும், தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத் தலைவரும் ஆகிய தமிழ்ப் பெரும்புலவர் கணியர் டாக்டர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களும், நாகனேரி நாட்டாண்மை உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகிய இ. மு. அருணசலம் பிள்ளையவர்களும் இவருடைய அருமைப் புதல்வர்களாவர்.

## இயற்றிய நூல்கள்

இவர் திருக்கழுகுமாமலை சிவக்கொழுந்து மாலை, சிவபெருமான் இரட்டைமணி மாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

> "தேடினன் ஏனமாய்த் தேவன் திருமாலும்
> தேடினன் நான்முகனுஞ் சீரனமாய்த்—தேடி
> அடியும் முடியும் அவர்காண தெய்த்தார்
> கடியார் கழுகா சலா."

என்பது இரட்டைமணி மாலையில் ஒரு பாட்டு.

## இறுதி

இவர் 1900 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

## கசு. ஆத்துமாநந்த அடிகள்

### தோற்றம்

திருவளர் பாண்டி நாட்டில் சீருடனுஞ் சிறப்புடனுந் திகழ்ந்து விளங்கும் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி சிறுவட்டத்தில் அய்யர்பட்டி என்னுஞ் சிற்றூரில் கொல்லமாண்டு ஆயிரத்து முப்பத்தைந்துக்குச் சரியான சித்தார்த்தியாண்டு மார்கழித் திங்கள் இருபத்து மூன்ரும் நாள் இவர் பிறந்தார்.

### கல்வி

இளம்பிராயத்திலேயே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்ட இவர் சில ஆண்டுகள் கல்வி கற்று அறிவுநலஞ் சிறக்கப் பெற்ருர்.

### இல்லறம்

தாய் தந்தையர்கள் இவருக்குத் திருமணஞ் செய்து வைத்தனர். சில ஆண்டுகள் இல்வாழ்வில் இருந்தார். இவருடைய உள்ளம் துறவறத்தையே நாடி நின்றது. அறிவு நூல்கள் பலவற்றைக் கற்ருர். இல்லந்துறந்து துறவியாக வேண்டுமென்னும் எண்ணம் மிகுதியாகியது. ஆகவே, இல்லந்துறந்து செல்ல முடிவு செய்தார்.

### துறவு

அந்நாளில் கோவிற்பட்டி என்னும் ஊரில் முக்தாநந்த அடிகள் என்னும் பெரியார் அறிவு நூல்களைக் கற்றுச் சிறந்த மெய்யறிவாளராகத் திகழ்ந்திருந்தார். அப்பெரியாருடைய பெருமைகளையெல்லாம் நன்குணர்ந்த

இவர் அப்பெரியாரை யடைந்து குருவாகக் கொண்டு அறிவு நூல்கள் பலவற்றையும் ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தார். மேலுங் கற்க வேண்டிய நூல்களை யெல்லாங் கற்றுணர்ந்தார்.

**நூல்கள் செய்தல்**

ஞான வாசிட்டம் என்பது மெய்யறிவு நூல்களுள் ஒன்று. அதனில் உத்தாலகர் கதை என்பது ஒன்று உண்டு. அஃது எழுபத்தொன்பது செய்யுட்களை யுடையது. அவ்வெழுபத்தொன்பது செய்யுட்களுள் ஏழு செய்யுட்கள் அக்கதையின் சாரமாக விளங்குகின்றன. அச்செய்யுட்களின் பெருமையை நன்குணர்ந்த இவர் அச்செய்யுட்களைத் திரட்டி "உத்தாலகருபசாந்தி" என்று பெயரிட்டு அதற்குத் "திருவருள் விளக்கத் தெளிவுரை" என்னும் பெயரிய உரை யொன்று எழுதி அதனை ஒரு நூலாக வெளியிட்டார். பாகவத அந்தர்க்கதமான தத்தாத்திரேய யதுசம்வாதச் செய்யுள் என்பதற்கு ஆத்துமா நந்தீயம் என்னும் உரையை எழுதி வெளிப்படுத்தினர்.

**சிதம்பர தேசிகர் அந்தாதி**

திருப்போரூரில் எழுந்தருளியிருந்த சிதம்பர சுவாமிகள்மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். அப்பெரியாரின் பெருமையைப் பாராட்டிச், "சிதம்பர தேசிகரந்தாதி" என்னும் நூறு வெண்பாக்களைக் கொண்ட அந்தாதி ஒன்றைப் பாடினர்.

"நீயாரென் பார்க்கெதிரே நிற்பதுட லென்றுதுா
காயினுங்கீ ழாய்நா னரனென்று—பேய்பிடிக்கப்
பட்டேன்போற் கூறும் பழியையம ரூரிலத்தர்
தொட்டழித்தாய் நீயே துணை"

என்பது நூலில் ஒரு பாட்டு. இவ்வந்தாதியைப் பாராட்டித் திருவண்ணமலை நடேச சுவாமிகளவர்கள்,

"ஏரோங்கு போரூர்ச் சிதம்பரதே வற்கணிந்தான்
பாரோங்கந் தாநிப்ர பந்தத்தை—நாரோங்கக்
காத்தும் படைத்துங் கரந்துமருண் முத்தனையே
ஆத்துமா நந்தமுனி யாய்ந்து"

என்று சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

ஆத்துமாநந்த விளக்கம்

இவர் தம் ஆசிரியர்க் கெழுதிய கடித முகப்பில் வேதாந்தக் கருத்துக்கள் அடங்கிய தோத்திர வடிவமான செய்யுட்களை யெழுதுதலை மேற் கொண்டிருந்தார். பிறகு தம்முடைய குருவின் கட்டளைப்படியே அப்பாடல் களைத் தொகுத்து ஆத்துமாநந்த விளக்கம் என்னும் பெயரோடு ஒரு நூலாக வெளியிட்டார்.

"கங்குலெல் லோனுநி களை விளக்கு வானல்லன்
மங்கியவற் ருல்விளங்கு வானல்லன்—எங்கடமை
எத்தானுங் காக்க இயைந்த அருண்மேனி
மூத்தானந் தப்பேர் முனி"

என்பது அப்பாடல்களில் ஒன்று. இந்நூலைப் பாராட்டி அரிமழம் சிவானந்த சுவாமிகள், சிவஞானபுரம் இலக்கண முத்துக் கவிராயர், செப்பறை சங்கர சுப்பிர மணியபிள்ளை, வெள்ளைக் கோவில் சோணுசலம் பிள்ளை, வேலாயுதம் பிள்ளை, அரிகேசனல்லூர் முத்துச் சுப்ப பாரதி, சோழவந்தான் கந்தசாமியார், அரிகேசனல்லூர் அரிகர ஐயர் என்போர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

இலக்கண முத்துக் கவிராயருடைய பாடல்களில் ஒன்று:

"புலமலியான் மாநந்த விளக்கமெனப்
　　புகலுமியத் புண்ணியோன் றிந்தத்
தலமலியச் செய்தளித்தான் வீராசுழுப
　　ரநியிரண்டுந் தழுவ வாய்ந்த

வலமலினா னம்படைத்துச் சிவவேடப்
பொலிவுமுள மாறு வுண்மை
நலமுமலி தவனுன்மா நந்தனெனப்
புவிபுகழ்நன் னுமன் மாதோ.”

என்பது. இந்நூல் எ. செனமல்லுக் கவுண்டர் என்பவருடைய உரையோடு அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. இவர் “நித்தியா நித்யவத்து விவேகம்” முதலிய உரைநடை நூலும் இயற்றியுள்ளார்.

இறுதி*

மாணவர் பலர்க்கு அறிவு நூல்களைப் போதித்து அவர்கட்கும் வீடுபேற்று வழியைக் காட்டிக் கொண்டிருந்த இப்பெரியார் தமது அறுபதாம் ஆண்டில் வைகாசித் திங்களில் வீடுபேற்றை யடைந்தார்.

பார்த்திவவை காசியிரு பானுஞ் கசுவினிநாள்
போர்த்தபிற்பக் கத்தே புதனிரவி—லார்த்தமணி
தொல்லைமூன் றின்மேடஞ் சோபனஞ்சேர் சௌலவம்
புல்லுக் துவாதசிப் போது.

---

* இவ்வரலாற்றிற்குரிய நூல்கள் அம்பை ஆத்துமானந்தாசிரமம் தவத்திரு. அ. ஆ. சின்மயானந்த சுவாமிகளவர்களால் உதவப்பெற்றன.

## கச. *கவிராஜ் தமிழ்ச் சித்தர் எ. சு. இராமசாமி சோதிடர்

### தோற்றம்

சேர நாட்டைச் சார்ந்ததும் கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டைச் சிறுவட்டத்தைச் சேர்ந்ததுமாகிய எரிசினம்பட்டி என்பது ஒரு சிற்றூர். அஃது ஏறக் குறைய எழுநூறு வீடுகளைக் கொண்டது. அச்சிற்றூரில் செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்த ஓர் உபாத்தி யாயர் குடும்பம் வழி வழியாக வாழ்ந்து வந்தது. அந் நாளில் உபாத்தியாயர் குடும்பம் என்றால் படித்த குடும்பம் என்று பொருள். அந்த முதலியார் உபாத்தி யாயர் குடும்ப வழிமுறையினர். சோதிடம் (காலக்கணிதம்) மருத்துவம் முதலியவைகளைத் தொழிலாகக் கொண் டிருந்தனர்.

அக்குடும்பத்தில் வழிவழியே வந்த ஆறாவது தலை முறையில் சுப்பையா உபாத்தியாயர் என்பவர் தம் மனைவியோடு இல்வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந் தார். குடும்பம் ஏழ்மையர்ன நிலையில் நடந்தது. சுப்பையா உபாத்தியாயர் சோதிடத்தில் வல்லவர். சேரநாடு முழுவதும் அவர்புகழ் எட்டியது. கருத்தாழ முள்ள குழந்தைப் பாடல்களையும், அறிவூட்டும் பெண்கள் கும்மிப் பாடல்களையும் அவர் எழுதியுள்ளார். கலைச் செல்வஞ் சிறந்திருந்த உபாத்தியாயர் குடும்பத்திலே பொருட்செல்வம் இல்லை. இத்தகைய குடும்பத்தில் நான்கு பெண்கட்குப் பிறகு முதல் மகனாக இராமசாமி

---

* இவ்வரலாற்றுக் குறிப்புக்களை எழுதியனுப்பியவர் வரலாற்றுக் குரியவரின் அருமைப் புதல்வரும் டாக்டரும் ஆகிய திருவாளர் சிவானந்தம் C.C.I., M.D., M.E.S., அவர்களாவர்.

அவர்கள் விரோதிகிருது ஆண்டு சித்திரைத்திங்கள் பதினேழாம் நாள் சனிக்கிழமை பிறந்தார். அந்நாளில் உடுமலைப்பேட்டையில் முத்துச்சாமிக் கவிராயர் என்பவர் சிறந்த கவியரசராக விளங்கியிருந்தார். அவர் சுப்பையா உபாத்தியாயருக்கு மகன் பிறந்ததைப்பற்றி,

"லக்கினத்தோன் நட்பாச்சி கேந்திர கோணம்
கண்ணிடவே சுபர்கள்விழி நயந்தே நோக்கப்
பக்குவமாய் வந்துதித்த பாலன் தானும்
பசுபாக்கிய முள்ளவனுய்ப் பரிந்தெங் நாளும்
தக்கபுகழ் மூலனுமாய்ச் சதுருபாயத்
தலைவனுமாய் நலஞ்சிறந்த சமர்த்த னுகித்
திக்குவிச யஞ்செலுத்தும் கோனு யிந்தச்
செகத்தினிலே வாழ்வனெனச் செப்ப லாமே"

என்று புகழ்ந்து பாடியுள்ளார். இச்செய்யுளால் கவிராயர் எதிர்கால ஞானமுஞ் சிறக்கப் பெற்றவர் என்பது இனிது விளங்கும்.

### கல்வி

இராமசாமியவர்கள் இளம்பருவத்திலே கல்வியிற் கவனஞ் செலுத்தவில்லை. கோழி, புரு, மாடு முதலிய உயிரினங்கள்மீது அன்பு செலுத்துவதும் அவைகட்கு உணவு கொடுப்பதும் அவைகளைப் பார்த்து மகிழ்வதுமாக இருந்தார். பல தொல்லைகட்கிடையே ஐந்தாவது வகுப்பு வரையிலும் படித்தார். அக்காலத்தில் சிற்றூர் களில் அதற்குமேல் படிப்பதற்கு வசதியில்லை. வெளியே சென்று படிப்பதற்கும் குடும்பத்தின் பொருளாதாரநிலை இடங் கொடுக்கவில்லை. காலங்கடந்து கொண்டிருந்தது. உற்ருரும் உறவினரும் இவர் கல்வியறி வில்லாமல் இருப்பதைக் குறித்து எள்ளி நகையாடினர். ஆண்டு பத்தே நிரம்பப்பெற்ற இவருக்குக் குடும்பத்தின் நிலை உள்ளத்தை உருக்கியது. படிக்க வசதியில்லை. உண்ண உணவு இல்லை; உடுப்பதற்கு நல்ல உடையில்லை;

செய்வதற்குக் தொழில் இல்லை. பச்சைப் பாலகனாக விளங்கிய இராமசாமியின் உள்ளங் கொதித்தெழுந்து குமுறியது. உடுப்பதற்குத் நல்ல உடை வேண்டும்; உண்ண உணவு வேண்டும்; செய்வதற்குத் தொழில் வேண்டும்; பலகலைகளையும் பயின்றே தீருவேன் என்று உள்ளத்தில் உறுதிபூண்டார்; விடாமுயற்சியை மேற்கொண்டார். "முயற்சி திருவினையாக்கும்" என்பர் பெரியோர். அதற்கு இவருடைய வாழ்க்கையே சான்றாகியது.

கவியரசர் முத்துச்சாமிக் கவிராயர் அவர்களோடு தொடர்புகொண்டார். இலக்கிய நூல்களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் பயின்றார். திருக்குறள் முதலிய நூல்களை ஆழ்ந்து பயின்றார். அதன்பொருட் செறிவுகளிற் கருத்தைச் செலுத்தினார். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிருந் தொழும்" என்னுங் குறள் இவருடைய உள்ளத்திற் பசுமரத்தாணி எனப் ப்திந்தது. இக்குறளைப் படித்த வன்றே புலால் உண்ணலை அடியோடொழித்தார்; அன்றுமுதல் வாணாள் அளவும் புலாலுண்ணாமையை மேற்கொண்டு சிறந்த சைவராகவே விளங்கினார். தம்முடைய பதினைந்தாவது அகவையில் இலக்கண இலக்கியத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். பதினைந்து வயதிலேயே இவருடைய கையெழுத்து மிகக் கவர்ச்சியுடையதாக இருந்தது. சிறந்த கலைஞர்களும் இவருடைய கையெழுத்தைப் பார்த்து வியந்து புகழ்ந்தார்கள். இவருடைய தந்தையார் இவர் சோதிடமுங் கற்கவேண்டுமென்று எண்ணினார். தந்தையாரிடமிருந்த சோதிட நுட்பங்களைப் பத்தே நாட்களிற் கற்றுக்கொண்டார். இதனைக் கண்டு பலரும் வியப்படைந்தனர். இவர் இவ்வளவு விரைவிற் சோதிடத்தைக் கற்றுக்கொண்டது எரிசினம்பட்டியில் வாழும் முதியோர்களால் இன்றும் பேசப்படுகிறது. பிறகு தேக்கப்பட்டி முருகைய சோதிடர், பறங்கிப்

பேட்டை குமாரசாமி ஆச்சாரியார் ஆகியோரிடஞ் சென்று சிலநாட்கள் தங்கிச் சோதிடம் பயின்றார். மேற்கூறிய சோதிடர்கள் அக்காலத்திலே புகழ்வாய்ந்த சோதிடர்களாக விளங்கியிருந்தவர்களாவர். அவர்களும் இவருடைய சோதிடத் திறமையைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். இவர் சோதிடத்திலும் மாதிடத்தராய் விளங்குகிருர் என்னுஞ் செய்தி நாடெங்கும் பரவியது.

### குடும்ப பாரம்

தம்முடைய பதினாரும் வயதிலேயே குடும்ப பாரத்தை ஏற்றுக்கொண்டார். இவர் தம்முடைய தகப்பனரிடம் இருந்து பணப்பெட்டியின் சாவியைப் பெற்றுக் கொண்டபோது பெட்டியில் இருந்தது இரண்டே ரூபாய்தான். அந்நாள் முதல் சோதிடத்தின் மூலம் குடும்பத்தை நடத்திவந்தார். குடும்பம் ஓர் அளவு முன்னேற்றமடைந்ததே தவிர முழுஅளவில் அடையவில்லை.

### திருமணம்

தம்முடைய இருபதாம் ஆண்டில் திருமணத்தை முடித்துக் கொள்ள எண்ணினர். பெண்பார்த்த இடங்களில் எல்லாம் குடும்பத்தின் ஏழ்மைநிலையைப் பார்த்து யாரும் பெண்கொடுக்க முன்வரவில்லை. இறுதியில் உடுமலைப்பேட்டை சிறுவட்டம் தாந்தோணியில் இருந்த அரங்கசாமி முதலியார் என்பவருடைய திருமகள் சங்கரம்மாள் (பாப்பாள்) என்னும் மங்கையைத் தம்முடைய வாழ்க்கைத்துணைவியாகத் திருமணஞ் செய்து கொண்டார். இவர் சோதிடம் வல்லுநர். என்பது மலேயா, சிங்கப்பூர், இலங்கை முதலிய வெளிநாடுகளிலெல்லாம் பரவியபடியால் சோதிட வருவாய் பெருகியது. குடும்பநிலை உயர்ந்தது.

## நூல்கள் வெளியிடல்

'பஞ்சபட்சி' நூல் எழுதித் தாமே அச்சிட்டு வெளியிட்டார். பிறகு, 'திருக்கணித இராமசேகரம்' என்னும் நூலை அச்சிட்டு வெளியிட்டார் திருக்கணித இராமசேகரம் என்பது எளிய முறையில் கிரகங்களைக் கணிக்கத் தமிழுணர்ந்த சோதிடர்கட்கெல்லாம் பயன்பட்டு வருகிறது. 'மூலகணிதக் கோள்நூல்' என்பதையும் எழுதி முடித்தார். இந்நூல் தமிழரின் ஆராய்ச்சித் திறன், அறிவுத்திறன், நாகரிகம், முன்னேற்றம் முதலிய சிறப்பியல்களை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்நூல் இன்னும் அச்சிடப்படவில்லை.

## புகழ் நூல்கள்

குடும்பநிலை உயர உயர இவருடைய மனநிலையும் தெய்வநிலையும் உயர்ந்துகொண்டே வந்தன. தெய்வங்களின்மீது புகழ்ப்பாக்களைப் பாடத்தொடங்கி, "இராமன் அந்தாதி" "முருகன் அந்தாதி" என்னும் நூல்களைப் பாடினார். இந்நூல்களால் இவருடைய இலக்கிய இலக்கணப் புலமையும் அறிவுத்திறமையும் நன்கு புலப்படும். இவருடைய செய்யுள் பாடுந்திறமையைக் கண்ட அறிஞர்கள் இவருக்குக் 'கவிராஜர்' என்னுஞ் சிறப்புப் பெயரையும் வழங்கிப் பெருமைப் படுத்தினார்கள்.

## மருத்துவத்துறை

இவருடைய வழிமுறையிலே தொடர்ந்துவந்த சித்தவைத்தியம் 1940 ஆம் ஆண்டுமுதல் இவருடைய கவனத்தைக் கவர்ந்தது. மருத்துவநூல்களைக் கற்கலானார். எங்கு பழைய சித்தவைத்தியத் தொடர்பான ஏட்டுப் பிரதிகள் கிடைத்தாலும் விலைகொடுத்து வாங்கலானார். ஓர் ஏட்டுப் பிரதிமட்டும் ரூபாய் இரண்டாயிரங் கொடுத்து விலைக்கு வாங்கியது இவருடைய குடும்பத்தினரையும் பிறரையும் மிகுந்த வியப்புக்குள்

ஆழ்த்தியது. சென்னையிற் புகழ்பெற்ற சித்த வைத்திய ராக விளங்கிய கண்ணுச்சாமிப் பிள்ளை என்பவரிடந் தொடர்பு கொண்டார். அவர் தாம் எழுதிய சித்த வைத்திய நூல்களை அனுப்பினர். மேலும் இறுதிக் காலத்தில் பல சித்த வைத்திய இரகசிய முறைகளையுந் தெரியப்படுத்தினர். அதனால் அக் கண்ணுச்சாமி இந்தவிராமசாமிபால் கொண்டிருந்த அன்பும் நம்பிக் கையும் புலனும். சித்த வைத்தியத்தோடு ஹோமியோ பதி மருத்துவத்தையும் பயின்றார். 1943ஆம் ஆண்டு முதல் வைத்தியத் தொழிலிலும் பேரும் புகழுங் கிடைக்கத் தொடங்கியது.

## நாகூர் ஆண்டவர் அருட்பா

பல வேலைகளுக்கிடையேயும் இவர் ஆண்டவனை மறக்கவில்லை. எல்லாச் சமயங்களும் இறுதியில் ஓர் ஆண்டவனையே அடையும் என்பதை நன்கு உணர்ந் திருந்த இவர், "நாகூர் ஆண்டவர் அருட்பா" என்னும் நூலைப் பாடி வெளியிட்டார்.

## தமிழ்ச் சித்தர்

மருத்துவத் தொழில் விடாமுயற்சியின் பயனாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கியது. ஆயிரக் கணக்கான மருந்துகளைச் சித்தர் முறைப்படி செய்து நோயாளிகளுக்குக் கொடுத் தார். இரசமணி, முப்பூ, காந்தக் கிண்ணம் போன்ற இக்கால — சித்த வைத்தியர்களின் கனவாகவுள்ள அரிய பெரிய மருந்துகளை எளிதாகச் செய்து முடித்தார். சித்த வைத்தியர்களாற் செய்ய முடியாமலிருந்த 'இரசமணி'யைச் செய்து அதன் மூலமாகப் பற்பல மருந்துகளையுஞ் செய்து சித்த வைத்தியத்தை நிலை நாட்டினர். அரும்பெருஞ் சாதனைகளைச் செய்து முடித்த கவிராஜ், வைத்திய சரபம், எ. சு. இராமசாமி சோதிடர் R.I.M.P.M.I.H., அவர்கட்கு உயரிய சிறப்புப் பெயர் வழங்க

வேண்டுமென்று எண்ணிய சித்த மருத்துவத் துறையினர் 'தமிழ்ச் சித்தர்' என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கினர்கள். இப்பெயர் இவருக்குப் பொருத்தமானதே என்று பலரும் பாராட்டினர். இவ்வாறு பல துறையினும் உயர்ந்த இவர் பொருளை நாடி எங்குஞ் செல்லவில்லை. பொருள் இவர் இருக்குமிடத்தை நாடி வந்தது.

### தமிழ்ப்பணி

காலக்கணிதத் தொழில், மருத்துவத் தொழில் ஆகியவைகளில் இவர் மிகுதியாக ஈடுபட்டிருந்த போதினும் தமிழ்ப்பணியை மறக்கவில்லை. ஒய்வு நேரங்களில் கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டார். கம்பராமாயண ஆராய்ச்சியின் பயனாக "வாலிகதி" என்னும் புரட்சிக் கருத்துக் கொண்ட நூல் வெளியாயிற்று.

### திருக்குறள் புத்துரை

திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் பலனாகப் பல குறள்கட்குப் புதுமையான உரைகள் இவருள்ளத்தில் தோன்றின. ஆகவே திருக்குறளுக்கு உண்மையுரை ஒன்றை எழுதத் தொடங்கினர். "திருக்குறள் உண்மையுரை உருவாகிறது. 'திருக்குறள் உண்மை உரை' விளக்கமே எனது வாழ்க்கையின் கடைசி விருப்பம்" என்று பலரிடமுஞ் சொல்லி வந்தார். ஏறக்குறைய 1500 பக்கங்கள் கொண்ட உண்மையுரையை 13-3-1972இல் எழுதி முடித்தார். மே மாதத்தில் அரங்கேற்றஞ் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தினமணியில் இதைப்பற்றி அறிக்கையும் வெளிவந்தது. அடியேனும் வேறு சிலரும் திருக்குறளுக்குப் புத்துரை யொன்று வெளிவரப் போகிறது என்று எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தோம். அடியேன் என் பெயருடையராகிய (இராமசாமி என்னும் பெயரினர்) இவரைச் சென்று காணவேண்டும் என்றும் எண்ணிக் கொண்டிருந்தேன்.

## இறுதி

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியுடைந்து விட்டதைப்போல் இப்பெரியார் தம்முடைய அறுபதாம் அகவையில் 18-3-1972இல் இவ்வுலக வாழ்வைத்துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார். இவருக்கு ஓர் ஆண் மகனும் இரண்டு பெண் மக்களும் உள்ளனர்

## இவருடைய கொள்கைகள்

"செல்வர்கள் புலவர்களைக் கறிவேப்பிலைக்கு நிகராக மதித்துள்ளார்கள். கறிவேப்பிலையை எப்படி வாசத்தின் பொருட்டுக் காய்கறிகளிற் போட்டுப் பிறகு சாப்பிடும் போது எறிந்து விடுகிறோமோ அதைப் போல் தங்கட்கு வேண்டியபோது ஆதரவு செய்வர்; வேண்டாதபோது வெறுத் தொதுக்குவர். செல்வர்களை விரும்பிக் கீழ்ப் படிந்து நடந்து அவர்களிடம் உதவி எதிர்பார்ப்பதை விடக் கூலிவேலை மேலானது. கடவுள் நம்பிக்கை யுடையவர்களை எவராலுங் கெடுக்க முடியாது. எச் செயலையும் செய்கையில் காண்பிக்க வேண்டுமே தவிரப் பேச்சில் அன்று. மதிப்பில்லாத இடத்தை மனத்திலும் எண்ணாதே. சிக்கனமாகச் செலவு செய்தால் பிறகு நன்மையுண்டாகும். எவரையும் விரும்பி அடிக்கடி செல்லாதே" என்பன போன்றவைகள் இவருடைய கொள்கைகளாக இருந்தன.

## நூல்கள்

இவருடைய திருக்குறள் உரையான, உண்மைப் பொருள் விளக்கம் தகுந்த மேற்கோள்களோடு எழுதப் பெற்றுள்ளது. நாகூர் ஆண்டவன் அருட்பா நூறு பாடல்களும் பிணிநீக்க, ஞானசித்தி பெற, தலைமை உத்தியோகம் பெற, நல்வாக்குப் பெற, மாய்கையுற, தேக திடம் பெற, ஞானப் பற்றடைய, பகைஞர் இல்லா திருக்க, இலட்சுமி கடாட்சம் பெற, ஞான பூமியாக,

ஞானம் பெற, பக்தி அதிகமாக, ஞானந்தெளிவு பெற, காரிய செயம் பெற, வினையகல, காட்சி பெற, மனமடங்க, ஒரு நிலைபெற, மாதர் மயக்கமற, குறைவிலக்க, மாயை விலக்க, பூரணாயுள் பெற, பிணிநீக்க, வலிமை பெற, இடையூறு நீங்க, துராலோசனை நீங்க, ஆனந்தம் பெற, இரசமணி முடிவு பெற, துன்பம் நீங்க, நவக் கிரகங்கள் என்றும் நலந்தர, உலக மயக்கம் நீங்க என்பன போன்ற சிரிய பொருள்களை அடைதற்கு ஏதுவாக யாக்கப்பட்டுள்ளன.

"மொழிந்திடு மென்பா மூறைக்குநீ மகிழ்ந்து
முன்னிய காரியம் யாவும்
தழைத்திடக் கற்ப சரீரமாய் நின்றன்
சரோருகப் பாதசே வைக்கு
விழைந்தகன் மணியே பொலிவுடன் முற்றி
மேவுசீர் தன்னிலை யதிக்து
உழைந்தசிர் மாய்கை அகன்றுஎன் பிணிதீர்
ஒளிமிகும் ஆண்டவ குருவே"

என்பது மாய்கையறும்படி வேண்டுகிற பாட்டாகும்.

## மருந்துகள்

இவருடைய மருந்துகள் யாவும் மிகவுஞ் சிறந்தன என்று பலரும் உரைப்பர். இவருடைய மருந்துகள் பழலேகியம், இரசிதலேகியம் கல்யாண மயனம், மேக சஞ்சீவி சூரணம், மின்சார லேபம், சக்தி மாத்திரை, பாலரமுதம், காந்தமாமணி, அயத்தங்க செந்தூரம், தங்கச் செந்தூரம், தங்கச் சுன்னம், புவனாமிர்தம், சித்த கல்பம், தாமிரபற்பம், தாமிர கல்பம் முதலியனவாம்.

## இவரைப்பற்றிப் பிறர்

இமாலய சுவாமி என்பவர் இவரைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

"பற்பல நூலாசிரியர் E. S. இராமசாமி அவர்களைப் பல வாரங்கள் உடனிருந்து பார்த்தேன். பல விஷயங்கள் கேட்டேன். தோற்றம் முதிர்ந்த இல்லற வாசி. நோக்கம் துறவுநிலை. உலக வேதாந்திகள் யாவரும் ஒன்று கூடிவந்து கடவுளைப்பற்றி நேரில் கேட்டால் என்போல மாணவராகி விடுவீர்கள். மெய்ம்மை நிலையைப் பெறுவீர்கள். ஹிமாலய முதல் கன்னியாகுமரி வரையுள்ள பல பெரிய வைத்தியர்களை யெல்லாம் பார்த்திருக்கிறேன். இவருக்குச் சமம் யாருமில்லை. இவரிடமுள்ள அபூர்வங்கள் வெளிவரு மேல் ஆச்சரியப்படுவார்கள். புகழ் வார்த்தை யல்ல! உலகம் உண்மை உணர வேண்டுமென்பதே குறிக்கோள். நவீன வைத்திய முறைகள் தற்கால சாந்திக்கான சாதாரணம் என்பதை நான் (89 வயது) இன்று வரை கவனித்துக் கொண்டே யிருக்கிறேன். உலகம் செழித்துக் களிப்புற்று வாழ வேண்டுமானால் உண்மை உணரும் சித்த வைத்தியர்களை உருவாக்க வேண்டும். எங்கும் எவராலும் தீர்க்கமுடியாத நோய் நீங்கி நல்வாழ்வு விரும்புவோர்கள் புகலிடம் E. S. இராமசாமியின் மருந்துதான். இவரால் நோய் தீரவில்லையென்றால் அவர் தங்குமிடம் எமன் லோகமே. இரண்டாயிரம் வருடமாகப் பற்பல மேதாவிகள் ஞானிகளெனத் தோன்றி நின்ற உலகம் அகநோக்க மெய்யுணர் வின்மையால் திருக்குறட் பாக்களுக்கு உண்மையுரை கண்டு கூறத் தவறி விட்டது. இந்தச் சீரிய வேலையை இடையறுத இன்றியமையாத பற்பல அலுவல்களினூடே தொடர்ந்து செய்து வருகிறார். இதற்காகவே வந்தவர் என்றே உணர்கிறேன். உலகம் நேரில் கண்டுணர்ந்து உண்மை செழிக்க உதவுமாக. திருவருட் சகாயம்."

மற்றும் பண்டித லா. சி. சுப்பிரமணியம், டாக்டர் டி. எம். முனிசாமி நாயுடு, மாவட்டக் கலெக்டர் ஜி. எம். முத்துச்சாமி, பறங்கிப்பேட்டை சு. ஏ. குமார சாமி ஆச்சாரியார் ஆகியோரும் இவரைப் பாராட்டி

எழுதியுள்ளனர். சுவாமி பொன்னம்பலசிவம் அவர்கள் நாகூர் ஆண்டவன் அருட்பாவுக்குக் கீழ்வருஞ் செய்யுட் களைச் சிறப்புப்பாயிரமாகப் பாடியுள்ளார்:

*புவிராச ரோடு தவராசர்வந்து புகழ்ந்து பணி*
*சிவராச யோகி நாகூ ராண்டவர்தந் திருவடிகட்*
*கெவராலும் பாராட் டருட்பா விசைத்துநல் லேற்றமுற்ருன்*
*கவிராச ராம சாமி சோதிடன் என்னுங் கண்ணியனே.*

*விசயோக சித்தர் விளைந்தேசெய் யாருயிர் நேருமணி*
*ரசயோக சித்தியை நாடிநா கூர்வள ராண்டவனின்*
*இசையோது தாண்மலர்க் கேகுட்டு பாமலர் ஏற்றருள்வாய்.*
*மிசையோர் எரிசின வூர்வா ழிராமசா மித்தவனே.*

---

## கடு. *மு. திருவிளங்க தேசிகர்

### தோற்றம்

திருவுங் கல்வியுஞ் சிறந்து விளங்கும் ஈழ வளநாட்டில் யாழ்ப்பாணத்தில் மானியம்பதி என்னும் ஊரில் ஆங்கிலம் கி. பி. 1859ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30ஆம் நாள் திருவிளங்க தேசிகர் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் முருகேச முதலியார்; தாயார் பெயர் சிவகாமி யம்மையார். தாயாராகிய சிவகாமி அம்மையார் சைவாசாரத்தில் மிகுந்த பற்றுடையவர். தெய்வ வழிபாடுகளில் மிகுந்த கண்ணுங் கருத்தும் உடையவர். இவ்வம்மையார் தெய்வ பக்தியிற் சிறந்த நன்மகவு தமக்குண்டாக வேண்டுமென மருதடி விநாயகப் பெருமானை நோக்கி நோன்பிருந்து இவரைப் பெற்ருர்.

### முன்னேர்கள்

இவருடைய முன்னேர்கள் மிகுந்த செல்வாக்கும் சிறப்பும் பொருந்திய வேளாண் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அக் குடும்பத்தினர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே அரசியல் அலுவல்களில் ஈடுபட்டவர்கள். இப்பொழுதும் அரசியல் அலுவல்களில் அமர்ந்துள்ளனர்.

### இந்துக் கல்லூரி

கல்வி வளர்ச்சியிலும் சைவ வளர்ச்சியிலும் நாட்டங் கொண்ட இக் குடும்பத்தினர் அறுபதாண்டுகட்கு முன்பு மானிப்பாயில் இந்துக் கல்லூரி யொன்றை நிறுவிச்

---

* இவ் வரலாற்றுக் குறிப்புக்களை எழுதி உதவியவர் பண்டிதர், புலவர்மணி திரு. சோ. இளமுருகனர் அவர்களாவர்.

சைவக் கல்வியை வளர்த்து வருகின்றனர். இவருடைய தந்தையாராகிய முருகேச முதலியாரும் அவர் தந்தையாரும் சைவசித்தாந்த நூலறிவுத் திருமுறைப் பயிற்சியும் உடையவர்களாய்ச் சிவபூசை புரிபவர்களாய்ச் சிறந்து விளங்கினர்கள்.

## கல்வி

முருகேச முதலியார் தம்முடைய புதல்வரின் கல்விப் பயிற்சியில் மிகுந்த ஊக்கங் கொண்டார். தொடக்கக் கல்வி முதலியன முடிந்ததும் உயர்தரக் கல்வியையுங் கற்கச் செய்தார். இவர் தம்முடைய தொடக்கக் கல்வியை வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்று முடித்தார். அக் காலத்தில் தொடக்க வகுப்புகளில் ஆங்கில மொழித் தரம் மிக உயர்ந்திருந்தது. அதைப் போலவே அவ் வகுப்புக்கட்குரிய தமிழ்த் தரமும் உயர்ந்திருந்தது. இதனல் திருவிளங்கருடைய கல்வியும் தரமுடையதாகப் பொருந்தி யமைந்தது. உயர்தரக் கல்வியைக் கொழும்பில் உள்ள அருண்மிகு தோமசுக் கல்லூரியிற் கற்றுத் தேறினர். தோமசுக் கல்லூரியில் ஆங்கிலப் படிப்போடு செந்தமிழ் நூல்களையும் முடிந்தபடி தாமே கற்றும் நல்லாசிரியரிடங் கேட்டும் புலமை யெய்தினர். இவருடைய கல்வித் திறத்தையும் நல்லொழுக்கத்தையுங் கண்ட கல்லூரித் தலைவர் இவரிடத்திலே மிகுதியான மதிப்பு வைத்திருந்தார்.

## ஆசிரியத் தொழில்

இவரிடம் நன்மதிப்பு வைத்திருந்த கல்லூரித் தலைவர் தம்முடைய கல்லூரியிலேயே ஆசிரியராக இருக்குமாறு கேட்டுக் கொண்டார். இவரும் அவருடைய விருப்பத்திற் கிணங்கிச் சில ஆண்டுகள் அங்கே ஆசிரியராக இருந்தார். கற்பிக்கும் காலத்தில் திருவிளையாடற் புராணம், பெரிய புராணமென்னுந் திருத்

தொண்டர் மாக்கதை, கந்த புராணம் முதலிய சமய இலக்கியங்களையும் வடமொழியையுங் கற்றுக் கொண்டார். இவருக்கு இசைப் புலமையும் உண்டு. அதிகாலையில் எழுந்திருந்து தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலிய பாடல்களை இசையுடன் பாடுவார். கேட்போர் மிகுந்த இன்பம் அடைவர். வழிமுறையாக வந்த சைவப்பற்று இவரை இளம் பருவத்திலேயே பற்றிக் கொண்டது. இளம் பருவத்திலேயே தேவார திருவாசகப் பாக்களை யோதி இறைவழிபாடு செய்வதிற் சிறந்து விளங்கினர். அருட்பாடல்களை ஒருமுறை கற்றுக் கொண்டாராயின் அவை மிக எளிதாகவே இவர் மனதைப் பற்றிக்கொண்டு பதிந்துவிடும். இவ்வழக்கம் மேலுந் தொடர்ந்து வந்தது.

வழக்கறிஞர்

தம்முடைய மனப்போக்குக்கு இணக்கமாகவும் ஏற்றதாகவும் இல்லாமையினுல் ஆசிரியத் தொழிலைக் கைவிட்டார். வழக்கறிஞராகக் கல்வி கற்றுத் தேறினர். 1888ஆம் ஆண்டிலே கொழும்பிலுள்ள நீதிமன்றங்களில் வழக்கறிஞராகத் தொழில் புரியத் தொடங்கினர். தம்முடைய கடமையைத் திறமையாகச் செய்தார். சட்டநூற் புலமையும் நேர்மையும் இவருடைய புகழை மிகுதிப் படுத்தின. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இவரை நன்கு மதித்தனர். வழக்குரைஞராகத் தொழில் புரிந்த நேரம் போக எஞ்சிய நேரங்களில், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திராவிட மாபாடியம் முதலிய சைவசித்தாந்த நூல்களை ஆராய்ந்து கற்ருர். சித்தாந்த சைவமே மேலான சமய மென்றும் அதுவே தமக்கு விடுதலை பயக்கக் கூடியதென்றும் துணிந்து அச் சித்தாந்த நூல்களிற் கூறப்பட்ட பதி பசு பாசம் என்னும் அப்பொருள்களின் தன்மைகளையும் இயைவுகளையும் நுணுகிக் கற்றுத் தெரிந்து கொண்டார்.

**நீதிபதி**

அந்நாளில் ஆங்கிலேயருடைய ஆட்சியாக இருந்தமையின் ஆட்சியாளர்கள் ஆங்கிலேயர்களையே பெரும்பாலும் பதவிகளில் அமர்த்துவது வழக்கமாக இருந்தது. ஆனால், இவருடைய திறமையைக் கண்ட ஆட்சியாளர்கள் இவரைச் சலாபத்திலுள்ள நீதிமன்றத் துக்குத் துணைப் போலீசு நீதிபதியாக ஏற்படுத்தினர். நீதிபதியாக இருந்து தம்முடைய கடமையை நேர்மை யாகவுந் திறமையாகவும் மிகுந்த சதுரப்பாட்டோடுஞ் செய்தார். இஃதன்றி உறுதி முறி எழுதும் மாணாக்கரைப் பரீட்சை செய்யுங் குழுவிலும் ஒருவராக இருந்து கடமை புரிந்தார்.

**பொதுச் சேவை**

இவர் நீண்டகாலம் கொழும்பில் வாழ்க்கை நடத்தினர். எல்லா மக்களோடும் பேரன்பு பூண்டு பழகினர். பொதுமக்களின் தொடர்பு அதிகமாக இருந்தது. "கொழும்புத் திருவிளங்கம்" என்று எல்லோராலும் கூறப்பட்டார். கொழும்பு நகர்ச் சமுதாயத்துக்கு நற்பணி செய்தலைக் குறிக்கொண்டு தொடர்ந்து பதினைந்தாண்டுகள் மாநகரசபையின் உறுப்பினராக இருந்தார். அக்காலத்தில் இவர் செய்த பொதுச் சேவைகள் பல.

**பரிபாலகர்**

தம்முடைய குடும்பத்தார் நிறுவிய மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாக இருந்தார். இயக்குநர் குழுவிலே தாமும் ஒருவராக இருந்து பொது வகையிற் கல்வியும் சிறப்பு வகையிற் கலாசாரமும் சிறந்து விளங்கும்படி தகுந்த ஆசிரியர்களை ஏற்படுத்தினர். இவருடைய செயற்றிறமையைக் கண்ட இயக்குநர் குழு இவரையே பரிபாலகராக இருக்கும்படி வேண்டியது. இரண்டாண்டுக் காலம் அப்பதவியை

மேற் கொண்டிருந்தார். புலோலி நகர்ச் சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரனார் சில திங்கள் துணை அதிபராக இருந்தார். 1921ஆம் ஆண்டு முதல் ஈராண்டுகள் பிற்காலத்தில் விபுலாநந்தர் என்று பெயர் பெற்ற பண்டித மயில் வாகனனார் அதிபராக இருந்தார். அதிபர் இருவரும் சைவப் பெரியார்களாக இருந்து கடமை புரிதல் தமக்குப் பெருமையென்று எண்ணினார். பண்டித மயில் வாகனனார் இராமகிருட்டிண மடத்தைச் சேர்ந்த சாமி சர்வானந்தரோடு உண்டாகிய தொடர்பி னாலே துறவற வாழ்வை விரும்பி அம்மடத்திற் சேர்வதை மனத்திற்கொண்டு அதிபர் பதவியை விடுதற்குப் பலமுறை முயன்றார். ஆனால், பரிபாலகராக இருந்த திருவிளங்கருடைய அன்பாற் பிணிப்புண்டு இவர் தம் வேண்டுகோளின்படி தமது விருப்பத்தைக் கைவிட்டு இவர் திருவடியடையும் வரையிலும் அதிபராக விருந்தார்.

சைவ வாழ்வு

நம்முடைய சைவப் பெரியாராகிய இவர் முறை தவருமற் சிவபூசை செய்தன்றி உணவு கொள்ளார். எந்நேரமும் திருநீறு விளங்கும் நெற்றியை உடையவ ராக இருந்தார். இவருடைய மார்பிலே எப்பொழுதுஞ் சிவ கண்மணி விளங்கும். திருக்கோயில்களையும் சிவனடியார்களையும் வணங்குவதும், சிவனடியார்கட்குத் திருவமுதூட்டுவதும் தமக்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்று எண்ணியிருந்தார். திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவாசகம் என்பன இவருடைய பாராயண நூல்களாக விளங்கின. அடங்கன் முறையையும் திருத்தொண்டர் புராணத்தையும் தம்முடைய பூசையறையில் பீடத்தில் வைத்துப் பட்டணிந்து மலரிட்டு வழிபடுவது இவருடைய வழக்கம். சமய குரவரும் சந்தான குரவரும் திருவடி யெய்திய திருநாள்களில் தமது இல்லத்தில் குருபூசை செய்து அவர்களை வழிபடுவார். "நிலையில்லாத உலகப்

பற்றுக்களை அறவே நீக்கி நிலையுள்ள திருவடிப் பற்றை வேண்டுமின்; மக்கட் பிறவியின் பயன் அதுவே'' என்று தம்முடன் நெருங்கிப் பழகிய அன்பர்கட்கு அடிக்கடி அறிவுரை கூறுவார். ஒழிவு நேரங்களிலெல்லாஞ் சைவசித்தாந்த நூல்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

நூல்களுக்கு உரை செய்தல்

சுத்தாத்துவித சித்தாந்த சைவத்திலே கூறிய முப்பொருள்களின் தன்மைகளையும் ஆன்ம விடுதலைக்குரிய வழி முறைகளையும் விளக்கமாயுணர்ந்து கடைப்பிடித்து அநுபூதிச் செல்வராய் நின்ற இச்சைவப் பெரியார் தம்மைப் போலவே மற்றையோரும் சமய விளக்கம் அடைய வேண்டுமென்று அருள் உள்ளங் கொண்டார். வழி நூலாகிய சிவஞான சித்தியாரில் சுபக்கத்துக்கும் சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்துக்கும் முன்னோர் எழுதிய உரைகள் இக்காலத்தார்க்கு எளிதில் விளங்க மாட்டாவென்று எண்ணினர். எல்லார்க்கும் பயன்படுமாறு விளக்கமான உரைகளை எழுதத் தொடங்கினர். ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் இருந்தமையால் சித்தாந்தப் பொருட் கூறுகளில் வருஞ் சிக்கல்களையும் இடர்ப்பாட்டையும் நுணுகியாராய்ந்து தெளிய வாய்ப்புண்டாயிற்று. சித்தியாருரையும் சிவப்பிரகாச வுரையும் எல்லோர்க்கும் இனிது விளங்குமாறு மிகத் தெளிவாக எழுதினர். அருணகிரி நாதர் இயற்றிய கந்தர் அலங்காரச் செய்யுட்களிலும், திருப்புகழ்ப் பாடல்களிலும் அமைந்த தத்துவப் பொருள்களை ஆங்காங்கே விளக்கியுள்ளார். இவரிடம் உண்டாகிய திருவருட் பதிவே இவர் உரை திறம்பட அமையக் காரணமாயிற்று.

யோகர் சுவாமிகள்

தருக்க நூலுணர்வு மிகுந்தவர்கள் ஒரு பொருளைப் பல கோணங்களில் ஆராய்வர். சித்தாந்த நூல்கட்கு

உரையெழுதும்பொழுது எத்தனையோ ஐயப்பாடுகள் தோன்றக்கூடும். இவர் தமக்கு எளிதிற் புலப்படாத பொருள்களை மனத்திலே குறித்துக்கொண்டு அவற்றைத் தெரிவிக்கத் தக்கவர் கொழும்புத் துறையில் உள்ள சிவயோக நாதரேயாவரென்று கருதி அவரிடஞ் செல்வர். சில காலங்களில் அவருடைய காட்சி இடை வழியிற் கிடைக்கும்; குருமணியின் இருப்பிடத்திலுங் கிடைக்கும். யோகநாத சுவாமியைக் கண்டதும் அவருடைய திருவருள் நோக்கத்தால் ஐயங்கள் எல்லாம் அகன்று தெளிவாகிவிடும். சொல்லில் அடங்காத மகிழ்ச்சியடைந்து தங்குருமணியை வணங்கி வீடுசென்று உரையை எழுதி முடிப்பார். இந்நிகழ்ச்சி அடிக்கடி ஏற்படுவதுண்டு. குருமணியின் திருவருணோக்கம் பக்குவமெய்திய இச்சைவப் பெரியாரின் நல்லுயிரிலே ஊடுருவி நின்று உள்ளொளியைச் சுடரச் செய்தது வியக்கத்தக்க புதுமையாகும்.

## திருவடிப் பேறு

இவ்வாறு புகழ்பெற்று விளங்கிய இப்பெரியார் திருவிளங்க தேசிகர் 1922ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இருபத்திரண்டாம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார். இவர் இறைவன் திருவடி நீழலை யடைந்த நாளில் இவருடைய குருநாதராகிய சிவயோக நாதர் இருப்பிடத்தினின்றும் வெளியே வந்து வானத்தை நோக்கி "அவன் சோதியுடன் கலந்து விட்டான்" என்று திருவாய் மலர்ந்ததாகக் கூறுவர்.

## அணிந்துரை

இவருடைய உரைக்கு யாழ்ப்பாணப் பெரும் புலவர் பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளை என்னும் பேரறிஞர் அணிந்துரை வழங்கியுள்ளார்.

## கசு. இராமச்சந்திர தீட்சிதர் (வி. ஆர்)

### தோற்றம்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாற்றுத் தொல் பொருள் ஆய்வுத் துறைகளின் பேராசிரியராக விளங்கிய வீ. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் 1896ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப் பள்ளிக்கு அண்மையில் உள்ள விஷ்ணும்பேட்டை என்னும் சிற்றூரில் எளிய அந்தணர் குடும்பத்திற் பிறந்தார். இவருடன் பிறந்த ஆண்கள் நால்வரில் இவர் இளையவர். இவருக்கு இரண்டு தங்கைகளும் இருந்தனர்.

### தமையனர்கள்

இவருடைய தமையனர்களாகிய இராமசாமி தீட்சிதரும் நடேச தீட்சிதரும் வடமொழியில் வல்லவர்கள். சோமயாகம் என்னும் வேள்வி நடத்திப் புகழ் பெற்றவர்கள். இவர்தம் இளமையிலேயே தந்தையை இழந்தார்.

### கல்வி

திருக்காட்டுப் பள்ளியில் உள்ள பி. எஸ். சிவசாமி ஐயர் உயர்நிலைப்பள்ளியில்பள்ளியிறுதிவகுப்புவரை கல்வி பயின்ருர். படிப்பதற்கு விளக்கு வசதிகூட இல்லாத படியால் தெரு விளக்குகளில் படித்தார். [இவரைப் போல் பலபேர் தெரு விளக்குகளில் படித்துப் பின்னளில் முன்னுக்கு வந்துள்ளனர்.] பள்ளிப்படிப்புடன் இவருடைய படிப்பை நிறுத்திவிட்டு வேலைபார்த்துப் பொருள் தேடுமாறு உடன்பிறந்தார்கள் கூறினர். ஆனல், இவர்

மேலும் கல்வி கற்று முன்னேறுவதிற் பிடிவாதமுடையவ ராய்த் திருச்சி செயின்ட் சோசப் கல்லூரியில் சேர்ந்து 1920 ஆம் ஆண்டிற் பட்டமும் பெற்றார்.

**திறமை**

கல்லூரியில் படிக்கும் பொழுது பாதிரிமார்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். பேச்சுத் திறமைக் காகவும் எழுத்துத் திறமைக்காகவும் எல்லோருடைய பாராட்டையும் பெற்றதோடு பல பரிசுகளையும் பெற்றார்.

**மணமும் மேலுங் கற்றலும்**

பட்டம்பெற்ற பிறகு சென்னையில் அஞ்சல் துறை கணக்குத் தணிக்கைப் பிரிவில் பணிபுரியத் தொடங் கினார். பணிபுரியத் தொடங்கிய அதே ஆண்டில் சானகி என்னும் பெண்மணியை மணம் புரிந்தார். அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பினும் இவருடைய கல்வியார்வம் தணிந்தபாடில்லை. அஞ்சல் துறையிற் பணியாற்றிக் கொண்டே பொருளியல் துறையிற் பயின்று எம்.ஏ., பட்டமும் பெற்றார். 1923ஆம் ஆண்டு முதல் 1927ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். 1927ஆம் ஆண்டு மத்திய அரசின் டில்லி அலுவலகத்தில் இவருக்கு உயர்ந்த வேலை கிட்டியது. ஆனால், இவருடைய தாயார் நெடுந்தொலை போகக்கூடாது என்று தடுத்துவிட்டார். ஆகவே பெங்களூர் செயின்ட் சோசப் கல்லூரியில் வரலாற்று விரிவுரையாளராக 1927ஆம் ஆண்டிற் பணியேற்றார்.

**சென்னையில் வேலை**

அடுத்த ஆண்டிலேயே சென்னைப் பல்கலைக்கழக வரலாற்று விரிவுரையாளராகப் பணியேற்று 1946ஆம் ஆண்டு வரை அப்பணியில் தொடர்ந்திருந்தார்.

### தமிழின்மீது பற்று

தமிழின்மீது இவருக்கு இயற்கையாக மிகுந்த பற்றும் ஈடுபாடும் இருந்தது. தமிழை மேலும் மேலும் நன்கு பயின்ருர். பேராசிரியர் மு. இராகவையங்காரையே தம்முடைய தமிழாசிரியராகக் கொண்டார்.

### பேராசிரியர்

1946ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் துணைப் பேராசியராகப் பொறுப் பேற்ருர். மறு ஆண்டில் இருந்து 1953 வரை அத் துறையில் பேராசிரியராக விளங்கினுர்.

### நூல்கள் இயற்றல்

தொல் பொருள் ஆராய்ச்சியிலேயே கருத்துச் செலுத்திய இவர் அரிய வரலாற்று ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். சிலப்பதிகாரம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். மணிமேகலையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் திட்டமிட்டிருந்தார். ஆனல் அத்திட்டம் நிறைவேறவில்லை. இவர் இயற்றிய வரலாற்று நூல்களில் குறிப்பிடத் தக்கவை ''தமிழினத்தின் தோற்றமும் வளர்ச்சியும், வரலாற்றுக்கு முற்பட்ட தென்னிந்தியர், தென்னிந்தியாவுஞ் சீனுவும்'' முதலியன வாகும். தமிழினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலில் தொல் பொருள், பூவியல் உண்மைகளை அடிப்படையாக வைத்து, மறைவுற்ற குமரிக் கண்டத்தில் தான் தமிழினந் தோன்றியது என்று நிறுவியுள்ளார். தமிழ் இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையில், 'தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுகள்' என்னும் நூலில் தமிழ் இலக்கியத் தொடர்புடைய பல ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

### கட்டுரைகள்

இவர் ஆராய்ச்சித் துறையில் நூல்கள் எழுதியது மட்டுமல்லாமல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை ஆராய்ச்சி இதழ்களில் எழுதினர்.

### சொற்பொழிவுகள்

நூல்கள் கட்டுரைகள் எழுதியதோ டன்றி ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் சர்வில்லியம் மேயர் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சங்கர பார்வதி அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆகியவற்றையுஞ் செய்தார். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் அழைப்பை யேற்று அமெரிக்காவுக்குச் சென்று பல சொற்பொழிவுகள் செய்தார். இவர் செய்த சொற்பொழிவுகள் மற்றும் பலவாகும்.

### குழுக்களில் உறுப்பினர்

பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்ததோடு பல்வேறு குழுக்களில் உறுப்பினராகவும் விளங்கினர். அங்ஙனம் உறுப்பினராக விளங்கிய குழுக்கள் இந்திய வரலாற்றுப் பத்திரக் குழு, இந்திய வரலாற்றுப் பேரவை, சென்னைப் பல்கலைக் கழகம், திருவாங்கூர் பல்கலைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஆகியவைகளின் அகடாமிக் குழுக்கள் முதலியனவாம்.

### மக்கட்பேறு

இவருக்கோர் ஆண் மகனும் இரண்டு பெண் மக்களுந் தோன்றினர்.

### இறுதி

1953ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 24ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத்துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

## கஎ. வே. முத்துச்சாமி ஐயர்

### தோற்றம்

சோழ வளநாட்டில் திருக்காட்டுப் பள்ளியை ஒட்டியுள்ள அரங்கநாத புரத்தில் வாழ்ந்திருந்த இவர் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தோன்றினர்.

### கல்வி

இவர் உயர்நிலைப்பள்ளிக் கல்வியை முடித்த பிறகு மேலுங் கல்வி கற்கத் தொடங்கி எம்.ஏ., எல்.டி., வரையில் கல்வி கற்ருர்.

### அலுவல்

இவர் பள்ளிக் கூடங்களின் பரிசோதகராகப் பணியாற்றினர்.

### செய்யுள் இயற்றுதல்

செய்யுள் செய்யும் திறமும் இவருக்கு நன்கு அமைந்திருந்தது. தாம் பள்ளிக்கூடச் சோதனையின் பொருட்டுச் செல்லும் ஊர்களிலுள்ள திருக்கோயில்களி லெல்லாம் வழிபாடு செய்தலை மேற்கொண்டதுடன், அவ்வவ்வூரில் எழுந்தருளிய கடவுளர்மீது செய்யுள் செய்தலையும் மேற்கொண்டார். தாம் பாடத் தொடங் கியது குறித்து இவரே முகவுரையில் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்.

"இத்துதிப்பாக்கள் பல ஆண்டுகளாகப் பற்பல தலங்களில் முருகக் கடவுளை வழிபட்டபோது பாடியன.

பாடசாலைப் பார்வைப்பணி மேற்கொண்டும் தலயாத்திரையாகவும் சென்ற ஊர்கள் தோறும் வாய்த்த இடங்களில் மூர்த்தி தல தீர்த்தங்களில் ஈடுபடும் பேறு எனக்கு முன்வினைப்பயனால் மூண்டது. இங்ஙனம் ஈடுபட்டபோது பாடிய துதிப்பாக்கள் பலவாகும்.

இவற்றை ஒவ்வொரு இயைபு பற்றித் தொகுத்து வெளியிட எண்ணி முருகன் துதியை இந்நூலிற் கோக்கின்றேன். இம்முறையில் மாயூர நாதர் அந்தாதியும், தேவி கோட்டைச் சிதம்பர விநாயகர் மாலையும் அண்மையில் வெளிவந்துள்ளன. ஆசிரியர் துதிக்கொத்து திருவாரூர்த் தியாகராசர் துதிப்பாக்கள் அண்ணாமலையார் துதிக்கவிகள் முதலியன அடுத்து வெளிவரும்.

சில அறிஞர்கள் இக்காலத்தில் செய்யுள் நூல்கள் - அதிலும் துதி நூல்கள் மிகையெனக் கருதுவர். இறைவனே, "அருச்சனை பாட்டே யாகும்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பணித்ததை நோக்க, எம்பிரானுக்குத் துதிப்பாக்கள் உகப்பென்பது தேற்றம். அன்றியும் நுட்பமான கருத்துக்களைத் திட்ப ஒட்பம் செறிய வெளியிடுவது செய்யுளிற்போல வசனத்திலமையாது. இது செந்தமிழ்ப் பாக்களில் தேக்குறுவார் கண்ட அநுபவ உண்மையாதலின், சிற்றணில் சேதுபந்தனம் செய்தாங்கு, முருகன் புகழைச் சிறியேனும் பாவாற் பரவலுற்றேன். கலைநலம் துய்ப்பவர் பிழை பொறுத்து அன்பு செய்வார்களாக."

இவரியற்றிய முருகன் துதிப்பாக்கள்

*தலத்திற் சிறந்தது குன்றக் குடியாம் சரவணனூர்*
*வலத்திற் சிறந்தது மாமயில் வாகனம்; வாய்ந்தபடைக்*
*கலத்திற் சிறந்தது கைவேல்; எந்நாளுங் கருதியுய்ய*
*நலத்திற் சிறந்தது சண்முகன் பாத நளினங்களே.*

கந்தா! சரணம் கடம்பா! சரணம் கழுகுமலை
வந்தாய் சரணம் வரதா! சரணம் மயிலுகக்கும்
எந்தாய்! சரணம் இறைவா! சரணம் இறைஞ்சவருள்
தந்தாய் சரணம் தருவே! சரணம் சரவணனே!

என்பன இவருடைய பாடல்களில் இரண்டு. இவரால் இயற்றப்பெற்றவை தொல்காப்பியம் பொருளதிகார ஆராய்ச்சி, தனிப்பாக் கோவை, பத்மினி, தேவி கோட்டைச் சிதம்பர விநாயகர் மாலை, மாயூர நாதர் அந்தாதி, முருகன் துதிப்பாக் கோவை, கதையும் பாட்டும், கசாரணி யேசுரர் பதிகம், காமாட்சியம்மை பதிகம், அலங்கார நாயகி பதிகம், வரகூர் வேங்கடேசுரர் பதிகம், முருகவேள் போற்றித் துதிகள் முதலியன.

### பாராட்டு

இவருடைய நூலைப் பாராட்டித் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, புதுக்கோட்டை கவிராச பண்டித நா. கனகராச ஐயர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர் சிறப்புப்பாயிரங்கள் வழங்கியுள்ளனர்.

"அருமைத் தமிழும் ஆங்கிலமும்
　　ஆழங்கண்ட அறிவுடையோன்
திருவே முத்துசாமி ஐயன்
　　திருந்தும் அன்பால் செய்தளித்த
முருகன் துதிப்பாக் கோவையினை
　　முற்றுப் பாடிப் பாடிமனம்
உருகும் அடியார்க் கவ்வின்பம்
　　உம்ப ருலகம் தந்திடுமோ?"

என்பது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களுடைய பாட்டாகும்.

## கஅ. அறிஞர் அண்ணாத்துரை

### தோற்றம்

தொண்டை வளநாட்டில் காஞ்சி மாநகரில் 1909ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள் அண்ணாத்துரை பிறந்தார். அண்ணாத்துரையின் தந்தையார் பெயர் நடராசன்; தாயார் பெயர் பங்காரு அம்மையார்.

### கல்வி

பள்ளி இறுதி வகுப்புவரை காஞ்சி மாநகரில் கல்வி கற்ருர். மேலுங் கல்வி கற்க விரும்பினுராயினும் குடும்பப் பொருளாதார நிலைமை அதற்கு இடங்கொடுக்க வில்லை. ஆகவே ஏதேனும் ஒரு தொழிலில் அமர்ந்து பொருள்தேட வேண்டியவரானுர்.

### அலுவல்

காஞ்சியில் நகராட்சியில் எழுத்தர் பணியை மேற் கொண்டார். அப்பணியைச் சில காலம் மேற்கொண் டிருந்தார். மேலுங் கல்வி கற்க வேண்டுமென்னும் எண்ணம் அண்ணாவிடம் மிகுதியாகத் தலைதூக்கி நின்றது. கல்வி கற்க ஏதேனும் வழியுண்டா என்று பலரிடமும் உசாவிக் கொண்டிருந்தார். பிற்பட்ட வகுப்பினக்குக் கல்லூரியில் கல்வி கற்பதற்கு உதவியுண்டு என்னும் நற்செய்தி யொன்று அண்ணாவுக்குத் தெரிந்தது. இச் செய்தியைத் தாய்தந்தையரிடங் கூறினுர். தாய்தந்தையர் முதலில் விரும்பவில்லை யாயினும் பிறகு ஒருவாறு உடன்பாடு தந்தனர்.

### முதுகலை வகுப்பிற் சேர்தல்

அண்ணுவின் கல்விப் பயணம் மேலுந் தொடர்ந்தது. சென்னை மாநகரை யடைந்து பச்சையப்பன் கல்லூரியிற் சேர்ந்தார். அண்ணுவின் கல்வியாசையைக் கண்ட கல்லூரி முதல்வர் தக்கவாறு உதவி புரிந்தார். அரசியல், பொருளாதாரம், வரலாறு ஆகியவைகளைச் சிறப்புப் பாடங்களாக எடுத்துக்கொண்டு பி.ஏ., ஆனர்ஸ் வகுப்பிற் சேர்ந்தார்.

### அண்ணுவின் கல்வி

பள்ளியிற் கல்வி கற்பதென்ருல் பாடப் புத்தகங்களை மட்டும் படிப்பதென்பது சிலருடைய எண்ணம். பள்ளியிற் பாடப் புத்தகத்தைப் படிப்பதால் மட்டும் எத்தகைய பயனையும் பெற்று விடமுடியாது. இதுபற்றியே "பள்ளிக் கல்வி புள்ளிக் குதவாது" என்னும் பழமொழியும் தோன்றியிருக்கிறது. அண்ணுத்துரை கல்லூரியிற் பாடப் புத்தகங்களைப் படிப்பதோடு மட்டும் நின்று விடவில்லை. அறிவு வளர்ச்சிக்குத் தகுதியான நூல் எங்கெங்கிருந்தனவோ அங்கங்குஞ் சென்று தம்முடைய அறிவைப் பெருக்கிக் கொள்ளலானுர். நூல் நிலையங்கள் பலவற்றிற்குஞ் சென்று நல்ல நூல்களையெல்லாம் தேடிப் பிடித்துக் கற்கலானுர். இவ்வாறு கற்றமையின் அண்ணுவின் அறிவு நாள்தோறும் பெருகிக் கொண்டு வந்தது. ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் அழகாகப் பேசவும் எழுதவும் நன்கு கற்றுக் கொண்டார். இவருடைய பேச்சும் எழுத்தும் எல்லாருடைய உள்ளங்களையுங் கொள்ளை கொள்வனவாக இருந்தன. மற்றவர்கள் அண்ணுவின் பேச்சைக் கேட்டு மயங்கினர். உள்ளத்தைப் பறி கொடுத்தனர். மாணவர்கள் அண்ணுவின் ஆற்றலைக் கண்டு வியந்து அவரைத் தம் தலைவராகக் கொண்டு செயலாற்றினர். அண்ணுவுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களும் அண்ணுவின் பேச்சைக்

கேட்டு வியப்படைந்தனர். மேலுங் கேட்பதற்கு ஆவல் கொண்டனர். அண்ணு 1934ஆம் ஆண்டு தமது கல்வியை முடித்துக் கொண்டு கல்லூரியை விட்டு வெளிவந்தார்.

## திருமணம்

அண்ணு கல்வி கற்றுக் கொண்டிருக்கும்போதே 1930ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. பெற்றேர்கள் பார்த்து முடிவு செய்த பெண்ணையே அண்ணு திருமணம் புரிந்து கொண்டார். வாழ்க்கைத் துணையாக அமைந்த அம்மையார் பெயர் இராணி என்பது. அண்ணுவுக்கும் இராணிக்கும் மக்கட்பேறு உண்டாகவில்லை. ஆகவே பிள்ளைகளை வளர்ப்பெடுத்து வளர்த்துப் பிள்ளையில்லாப் பெருங் குறையை போக்கிக் கொண்டனர்.

## ஆசிரியத் தொழில்

படிப்பை முடித்து வெளியேறிய அண்ணு வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டார். எம்.ஏ., பட்டம் பெற்ற அண்ணுவுக்கு நடுத்தரப்பள்ளி யொன்றில் ஆசிரிய வேலை கிடைத்தது. சிறிது காலம் அத்தொழிலை மேற் கொண்டிருந்தார். ஆனல், அண்ணுவுக்கு அவ்வேலை பிடிக்கவில்லை. பொதுநலத் தொண்டில் ஈடுபட்டு உழைப்பதற்கே அவருடைய உள்ளந் துள்ளியது.

## நீதிக்கட்சி

அந்நாளில் நீதிக்கட்சி என்னும் பெயரோடு ஒரு கட்சியிருந்தது. அக்கட்சியின் போக்கு அண்ணுவுக்குப் பிடித்திருந்தபடியால் அக்கட்சியிற் சேர்ந்து பொதுநலத் தொண்டு புரியலானர். நீதிக்கட்சி ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய அந்நாளில் சிறந்த செல்வாக்குப்

பெற்றிருந்தது. அக்கட்சி 1920ஆம் ஆண்டில் முதன் முதலாகச் சென்னை மாநிலத்தை ஆளும் பொறுப் பேற்றது. பொப்பிலி அரசர் என்பவர் அக்கட்சியின் தலைவராக இருந்தார்.

### பெரியார் தொடர்பு

1935ஆம் ஆண்டில் மாநாடொன்று திருப்பூரில் நடை பெற்றது. அண்ணா அம்மாநாட்டிற்குச் சென்றிருந்தார். அம்மாநாட்டிற்கு ஈரோட்டுப் பெரியாரும் வந்திருந்தார். அண்ணாவும் பெரியாரும் ஒருவரை ஒருவர் கண்டு நெருங்கிய உறவு கொண்டனர். இது முதற்கொண்டு அண்ணா பல பொதுக் காரியங்களில் ஈடுபட்டு நாட்டிலே புகழ்பெறத் தொடங்கினார்.

### இந்தியெதிர்ப்பு

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். பள்ளிகளில் மாணவர்கள் இந்திமொழியைக் கட்டாயம் படித்தே தீர வேண்டுமென்று அவர் சட்டங் கொண்டுவந்தார். ஆச்சாரியாரின் இச்செயல்கண்டு தமிழக மக்கள் கொதித் தெழுந்தனர். நாடெங்கும் எதிர்ப்பு மிகுதியாயிற்று. அண்ணாவும் இந்தியெதிர்ப்பில் பெரும் பங்கு கொண்டு உழைத்தார். இதனால் இந்தியெதிர்ப்பு நாட்டில் மிகுந்த வலுப்பெற்றது. இளைஞர்கள் மட்டுமல்லாமல் முதியவர்களும் அண்ணாவின் பேச்சுவன்மையால் புரட்சி வீரர்களாக மாறி இந்தியெதிர்ப்பில் ஈடுபட்டனர். அண்ணா இந்தியெதிர்ப்பை நாடெங்கும் வளர்த்து விட்டார் என்று குற்றஞ் சாட்டி அவரைச் சிறையில் அடைத்தனர். 1940ஆம் ஆண்டில் இந்தி கட்டாயப் பாடமல்ல என்று அரசாங்கம் அறிவித்தது.

## இதழ்த் தொண்டு

நாளிதழாகவிருந்த 'விடுதலை' என்னும் ஏட்டின் ஆசிரியராக அமர்ந்து நாட்டு மக்கட்கு நன்முறையில் தொண்டு செய்தார். 1942ஆம் ஆண்டில் "திராவிட நாடு" என்ற கிழமையிதழையுந் தொடங்கி நாட்டு மக்களுக்குத் தம்முடைய கொள்கைகளை விளக்கிவந்தார். அண்ணா இதழ்த்தொண்டில் மட்டுமன்றிப் பிற தொண்டு களிலும் ஈடுபட்டு அவைகளை நன்முறையிற் செயல் படுத்தி வந்தார். நாளடைவில் நீதிக்கட்சி மறைந்து 'திராவிடர் கழகம்' தோன்றியது. அண்ணாவுக்கும் பெரியார்க்கும் அடிக்கடி மனத்தாங்கல்கள் ஏற்படுவதுந் தீர்வதுமாக இருந்தன.

## திராவிட முன்னேற்றக் கழகம்

பெரியார் தம்முடைய எழுபத்தோராவது அகவையில் முப்பத்திரண்டாண்டு அகவையே நிரம்பிய மணியம்மை யென்னும் மங்கையை மணம் புரிந்துகொண்டார். இத் திருமணம் 9—7—1949இல் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியைக் கண்டு தமிழக மக்கள் பெருவியப்படைந் தனர். திராவிடர் கழகத் தோழர்களோ மிகுந்த அதிர்ச்சியடைந்தனர். இத் திருமணத்தாற் பெரியா ரிடத்தில் வெறுப்புக் கொண்ட பல தோழர்கள் தனியே பிரிந்தனர். பிரிந்தவர்களில் ஒருவராகிய அண்ணா 17—9—1949இல் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பெயரோடு புதிய கழகம் ஒன்றைத் தோற்றுவித்தார். இக் கட்சிக்குக் கறுப்பும் சிவப்புங் கூடிய இருவண்ணக் கொடி அடையாளச் சின்னமாக அமைக்கப்பட்டது. இக்கழகத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உறுப்பினராகச் சேர்ந் தனர். நூற்றுக்கணக்கான கிளைக் கழகங்களும் அமைக்கப் பட்டன. அண்ணா பொதுச் செயலாளராகத் தெரிந் தெடுக்கப்பட்டார். இக்கழகமும் இந்தி கட்டாய பாடமாக வரும்போதெல்லாம் அதனை எதிர்த்து விரட்டியடித்துக் கொண்டிருந்தது.

வழக்குஞ் சிறையும்

1949ஆம் ஆண்டில் சட்டத்துக்கு முரணாக வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிடக் கூடிய கட்டுரைகளைத், "திராவிட நாடு" இதழில் வெளியிட்டார் என்று குற்றஞ் சாட்டி அண்ணாமீது அரசினர் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால், இவ்வழக்கில் அண்ணாவுக்கு வெற்றி கிடைத்தது. அண்ணா பல வகையான நூல்களை எழுதியுள்ளார். அந் நூல்களில் 'ஆரியமாயை' என்பதும் ஒன்று. அது 1943 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாயினும் அந்நூலுக்கு 1950ஆம் ஆண்டில் தடை விதித்து அண்ணாமீது அரசாங்கத்தினர் வழக்குத் தொடர்ந்தனர். அண்ணாவுக்கு ஆறு திங்கள் சிறைத் தண்டனை கிடைத்தது. விடுதலை பெற்று வெளிவந்தபோது சென்னைக் கடற்கரையில் அண்ணாவுக்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. திராவிட முன்னேற்றக் கழகம் பலவிதமான பணிகளிலும் ஈடுபட்டது. கழகத் தொண்டர்களும் தலைவர்களும் பன்முறை சிறை சென்றனர்.

சட்டசபையில் நுழைதல்

தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி மன்றத்தில் நுழைய வேண்டுமென்று அண்ணா முடிவு செய்தார். 1956ஆம் ஆண்டில் திருச்சியில் கூடிய தி. மு. க. மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று முடிவுசெய்தது. 1957ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. க. பங்கு கொண்டு சென்னைச் சட்ட மன்றத்தில் பதினைந்து இடங்களையும் தில்லிப் பாராளு மன்றத்தில் இரண்டு இடங்களையும் கைப்பற்றியது. அண்ணா தாம் பிறந்த காஞ்சி மாநகரில் சட்டமன்றத் திற்குத் தேர்தலில் நின்றார். பலமான எதிர்ப்பு இருந்தும் தேர்தலில் வெற்றி பெற்றார். 1957ஆம் ஆண்டில் அண்ணா முதன்முதலாகச் சென்னைச் சட்ட மன்றத்தில் நுழைந்தார்.

### மாநகராட்சியைக் கைப்பற்றல்

1959ஆம் ஆண்டில் நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி. மு. க. போட்டியிட்டு நாற்பத்தைந்து இடங்களைக் கைப்பற்றி ஆளும் பொறுப்பையும் ஏற்றது.

### மூன்ருவது பொதுத்தேர்தல்

1962ஆம் ஆண்டில் மூன்ருவது பொதுத் தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் முன்பைவிட அதிகமான வெற்றி தி. மு. க.வுக்குக் கிடைத்தது. ஐம்பது சட்ட மன்றத் தொகுதிகள் ஏழு பாராளுமன்றத் தொகுதிகள் கிடைத்தன. ஆனுல், காஞ்சியில் போட்டியிட்ட அண்ணுவுக்கு வெற்றியேற்படவில்லை. வெற்றியேற் படாதது நல்லதாகவே முடிந்தது. ஐம்பது சட்ட மன்றத் தி. மு. க. உறுப்பினர்களால் தில்லிப் பாராளு மன்ற மேலவை உறுப்பினராக அண்ணு தெரிந்தெடுக்கப் பட்டார். இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழு வதுமே அண்ணுவைப்பற்றி அறிந்துகொள்ளும் நல்ல சூழ்நிலை உருவாயிற்று. 1962 மே முதல்நாள் அண்ணு பாராளுமன்றத்தில் உரை ஆற்றினுர். தம்முடைய அரிய பேச்சால் பாராளுமன்றத்தையே கவர்ந்து விட்டார்.

### சீனப் படையெடுப்பு

1962ஆம் ஆண்டில் விலை உயர்வைக் கண்டித்து அண்ணு போராட்டம் நடத்தினுர். அதன் பொருட்டுக் கைது செய்யப்பட்டுப் பத்து வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். இச்சமயத்தில் இந்தியாவில் சீனப் படையெடுப்பு நடைபெற்றது. ஆகவே அண்ணு விடுதலை செய்யப்பட்டார். விடுதலையானவுடன் சீனப் படையெடுப்பைக் கண்டித்து, "சீனர்களின் ஆக்கிர மிப்பை ஒருபோதும் பொறுத்துக் கொண்டிருக்க

மாட்டோம். சீனர்களை நாட்டை விட்டு விரட்டும் வரையில் போரிடுவோம்'' என்று அறிக்கையொன்று வெளியிட்டார்.

### வெளிநாடு செல்லல்

கடல்கடந்து வெளிநாடுகட்குச் சென்று ஆங்குள்ள தமிழர்களிடத்திலுந் தம்முடைய கொள்கையைப் பரப்ப வேண்டும் என்னும் எண்ணம் அண்ணாவுக்கு நெடு நாளாக இருந்தது. 1965ஆம் ஆண்டில் மலேசியா, சப்பான், சிங்கப்பூர் முதலிய கீழை நாடுகளுக்குச் சென்று வியக்கத் தக்கவாறு சொற்பொழிவுகள் செய்து அந் நாட்டுமக்களின் பாராட்டினைப் பெற்று வந்தார்.

### பிரிவினையைக் கைவிடல்

அண்ணாவின் தி. மு. கழகம் திராவிட நாட்டைத் தனியே பிரித்துவிட வேண்டுமென்னும் கொள்கையையே தனக்கு அடிப்படை ஆதாரமாகக் கொண்டிருந்தது. "பிரிவினை பேசுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்'' என்னும் நோக்கத்தால் இந்திய அரசு "பிரிவினைத் தடைச்சட்டம்'' ஒன்றைக் கொண்டு வந்தது. இச்சட்டத்தினால் பிரிவினைகோரும் தி. மு. கழகம் அழிக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்த அண்ணா தம்முடைய பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு விட்டார்.

### முதலமைச்சராதல்

1967ஆம் ஆண்டில் நான்காவது பொதுத் தேர்தல் வந்தது. காங்கிரசு அல்லாத மற்றைக் கட்சிகள் அண்ணாவின் கையை வலுப்படுத்தும் நோக்கத்தோடு கூட்டணியாக ஒன்று சேர்ந்தன. எதிர்பாராத விதமாக திராவிட முன்னேற்றக் கழகம் நூற்று முப்பத்தெட்டுச் சட்டமன்ற இடங்களையும் இருபத்தைந்து பாராளுமன்ற

இடங்களையும் கைப்பற்றியது. இதனால் தி. மு. கழகம் அமைச்சர் அவையினை அமைக்கும் பொறுப்பினை யடைந்தது. பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட அண்ணா பலருடைய வேண்டுகோளுக்கிணங்கி அவ்வுறுப்பினர் பொறுப்பினின்றும் விலகிக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணாவைச் சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந் தெடுத்தார்கள். கட்சித் தலைவர்தாம் முதலமைச்சரா யிருக்க வேண்டும் என்ற முறைப்படி அறிஞர் அண்ணா தமிழ் நாட்டின் முதலமைச்சரானார்.

மக்கட்கு நலம்புரிதல்

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் மக்களுக்கு நலம் பல செய்யத் தொடங்கினார். ரூபாய்க்கு ஒரு படியரிசி போடுந் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். சென்னையிலுங் கோவையிலும் ரூபாய்க்கு ஒருபடி அரிசி போடப்பட்டது. அமைச்சர்களின் ஊதியத்தைப் பாதியாகக் குறைத்தார். அமைச்சர்களுக் கென்று அமைக்கப்பட்ட பெரிய மாளிகைகளிற் குடி புகாமல் தம்முடைய இல்லத்திலேயே வாழலானார். தமக்குப் பெரிய பேருந்து வண்டிகள் வேண்டாமென்று கூறிச் சிறிய வண்டிகளிலேயே சென்று வரலானார். 1964-65ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி யெதிர்ப்புப் போரில் கைதாகிச் சிறை சென்றவர்களை விடுதலை செய்து வழக்குகளையும் திரும்பப் பெறுமாறு கட்டளையிட்டார். கல்லூரிகளில் புகுமுக வகுப்புக்கு இலவசக் கல்வி யளிக்க ஏற்பாடு செய்தார். நிலமற்ற வறியவர்கட்கு நிலம் வழங்குந் திட்டத்தைக் கொண்டு வந்து நிலம் வழங்கினார். மதுவிலக்கை மேலுஞ் செயல் படுத்தினார். சென்னை மாநிலத்திற்குத் "தமிழ்நாடு" என்று பெயர் வழங்கச் செய்தார். இந்தி தமிழ்நாட்டை விட்டு அடியோடு அகலுமாறு செய்தார். சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் என்று சட்டங்கொண்டு வந்தார்.

உலகத் தமிழ்மாநாடு

அண்ணாவின் பெருமுயற்சியால் இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னை மாநகரில் 1968ஆம் ஆண்டு சனவரித் திங்களிற் சீருஞ்சிறப்புமாக நடைபெற்றது. சென்னைக் கடற்கரைச் சாலையில் கம்பர், ஔவையார், திருவள்ளுவர், பாரதியார், கால்டுவெல், போப் ஐயர், வீரமாமுனிவர், வ. உ. சிதம்பரனார் முதலிய தமிழறிஞர்கட்குச் சிலைகள் வைக்கப்பெற்றன.

அமெரிக்கப் பயணம்

அறிஞர் அண்ணாவின் புகழ் நாடெங்கும் பரவியது. அமெரிக்க அரசாங்கம் அண்ணாவைத் தன் நாட்டிற்கு வந்து செல்ல வேண்டுமென்று அழைப்பு விடுத்தது. அவ்வழைப்பின் பேரில் அண்ணா அமெரிக்கா சென்றார். அந்நாட்டில் சிறந்த முறையில் வரவேற்றுப் போற்றப் பெற்றார். பின் தமிழ்நாடு திரும்பினார். இங்குஞ் சிறந்த முறையில் வரவேற்றுப் போற்றப்பெற்றார். அரசியல் அலுவல்களிலே அளவு கடந்து ஈடுபட்டு அரும்பணி புரிந்தார்.

மீண்டும் அமெரிக்கா செல்லுதல்

1968ஆம் ஆண்டில் தமிழகச் சட்டமன்றத்தில் வரவுசெலவுத் திட்டக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அண்ணாவுக்கு உடல்நலங் குன்றியது. மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டார். சிறிது நாட்கள் சென்றன. அண்ணாவுக்கு உண்டாகியிருந்த நோய் இவ்விடத்திலேயே தீர்க்க முடியாததாக இருந்தது. அறுவை மருத்துவஞ் செய்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றார். அண்ணாவுடன் மனைவியார் இராணி அம்மையாரும் வளர்ப்பு மகன் பரிமளமும் டாக்டர் சதாசிவமும் பாராளுமன்ற உறுப்பினர்களான

செழியன், இராசாராம் ஆகியோரும் உடன் சென்றனர். அண்ணு உடல் நலம்பெற்றுத் திரும்பி வரவேண்டுமென அனைவரும் கடவுளை வேண்டிக் கொண்டனர். அமெரிக்காவில் புற்று நோயின் பொருட்டு அறுவை மருத்துவஞ் செய்விக்கப் பெற்று ஓரளவு உடல்நலம் பெற்றுத் திரும்பினுர். அமெரிக்க மருத்துவர் அண்ணு ஆறு திங்களாவது முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார். ஆனுல், அண்ணு அம் மருத்துவரின் அறிவுரையை ஒரு பொருட் படுத்தாது கடுமையாக உழைத்தார்.

## அண்ணுவின் இறுதி

1968ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப் பட்டது. இதற்கெனப் பெருவிழா வொன்று சென்னை மாநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மருத்துவர்கள் கூறியிருந்த அறிவுரைகளையும் பொருட்படுத்தாமல் அண்ணு இந்த விழாவிற் கலந்து கொண்டு பேருரை யாற்றினுர். ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைத்தபடியால் அண்ணுவுக்கு மீண்டும் புற்றுநோய் உண்டாகியது. உடல்நிலை கவலைக் கிடமாயிற்று. அடையாறு மருத்துவ மனையிற் சேர்க்கப்பட்டார். நோய் கடுமையாக இருந்தது. அமெரிக்காவில் முன்பு அறுவைமருத்துவஞ் செய்த மருத் துவரே சென்னைக்கு வந்து மீண்டும் அறுவை மருத்துவஞ் செய்தார். அண்ணுவின் உயிரைக் காப்பாற்ற மருத்து வர்கள் இரவு பகலாகப் பெருமுயற்சி செய்தார்கள். என்ன செய்தும் எத்தகைய பயனும் இல்லாமற் போயிற்று. 1969ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாள் நள்ளிரவில் அண்ணு இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

## அண்ணு வாழ்க்கையிற் சில வியத்தகு நிகழ்ச்சிகள்

### சிறந்த கட்டுரை

அண்ணு பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது கல்லூரிப் பேராசிரியர் மாணவர்களிடம் கட்டுரை எழுதிவரும்படி கட்டளை யிட்டார். மாணவர்களனைவருங் கட்டுரைகள் எழுதி வந்தனர். பேராசிரியர் கட்டுரைகளைத் திருத்துவதற்காக எடுத்துக் கொண்டு சென்ருர். அண்ணுவின் கட்டுரையைப் படித்துப் பார்த்துத் திடுக்கிட்டார். அண்ணுவின் கட்டுரையில் தாம் எதிர்பாராத பல புதிய செய்திகள் இருப்பதைக் கண்டார். "நாம் கூறியவை களைத் தானே எல்லா மாணவர்களும் எழுதியிருக் கிருர்கள். நாம் சொல்லிக் கொடுக்காத புதுமையான கருத்துக்களை எழுதுவதற்கு அண்ணுத்துரையால் மட்டும் எவ்வாறு முடிந்தது. இத்தகைய சிறந்த கருத்துக்களைக் கல்வி கற்கும் ஒரு மாணவரால் எழுத முடியாது. ஏதோ புத்தகத்தைப் பார்த்துக் காப்பியடித்திருக்கிருர்" என்று அவர் முடிவு செய்தார். மறுநாள் பேராசிரியர் அண்ணுத் துரையை அழைத்து இதைப்பற்றி விசாரித்தார். "எந் நூலில் இருந்து காப்பியடித்தாய்?" என்று கேட்டார். அண்ணு தாம் எந்நூலில் இருந்துங் காப்பியடிக்கவில்லை யென்றும் எல்லாந் தம்முடைய உள்ளக்கருத்துக்கள் தாம் என்றும் உரைத்தார். இதனைக்கேட்ட பேராசிரியர் பெரு வியப்படைந்தார்.

### சிறிய சொற்றொடர்கள்

அண்ணு ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதுவ திலுஞ் சிறந்து விளங்கிஞர். ஆசிரியர் ஒருவருக்கு அண்ணுவின் கட்டுரைகள் பொருமையை உண்டாக் கிற்று. இவ்வளவு நன்ருகக் கட்டுரையெழுதுகிருனே

ஒரு மாணவன் என்று உள்ளம் புழுங்கினர். அண்ணத்துரைக்கு ஏதேனும் அறிவுரை கூறித் தம்முடைய பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணினர். அவர் அண்ணத்துரையைப் பார்த்து, "உன்னுடைய கட்டுரையில் சொற்ருெடர்கள் நீளமாக இருக்கின்றன. சிறிய சிறிய சொற்ருெடர்களாக இருந்தால் தான் நன்ருக இருக்கும். இனிமேல் நீளமான தொடர்களாக எழுதாதே" என்று அறிவுரை கூறினர். அண்ணவும் "அப்படியே எழுதுகிறேன்" என்று கூறினர். மறுமுறை அண்ணவின் கட்டுரையை ஆசிரியர் பார்த்தார். "ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் சந்தைக்குச் சென்ருன். அங்கு சில பொருள்கள் வாங்கினன். அதைக் கையில் எடுத்தான். வீட்டுக்கு வந்தான். மனேவியிடம் தந்தான். அவள் மகிழ்ந்தாள்" என்பன போல் இரண்டு மூன்று மொழிகளே ஒவ்வொரு தொடர் மொழியிலும் அமைந்திருந்ததைக்கண்ட ஆசிரியர், அண்ணத்துரையைப் பார்த்து "என்ன இப்படி எழுதியிருக்கிருய்?" என்று உசாவினர். அதற்கு அண்ண "நீங்கள் தானே சிறு சிறு சொற்ருெடர்களாக எழுதுமாறு கூறினீர்கள்" என்று மறுமொழி கூறினர். இது முதல் அவ்வாசிரியர் அண்ணவிடம் மிகுந்த விழிப்புடன் நடந்து கொள்ளலானர்.

### பேச்சுப் போட்டி

அண்ண ஆனர்ஸ் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது லயோலாக் கல்லூரியில் பேச்சுப் போட்டியொன்று நடைபெற்றது. அண்ண அப்பேச்சுப் போட்டியிற் கலந்து கொண்டு பேசினர். அமர்ந்திருந்த பேராசிரியர்கள் பலரும் "அண்ணவின் பேச்சுத்தான் நன்ருக இருந்தது" என்று கூறினர்கள். ஆயினும் வேருெரு மாணவருக்குத்தான் முதற் பரிசு என்று அறிவிக்கப்பட்டது. அவ்வளவில் கூடியிருந்த

எல்லோரும் "அண்ணாத்துரைக்குத்தான் பரிசு கொடுக்க வேண்டும்" என்று ஒரே குரலாகக் கூச்சலிட்டார்கள். பிறகு அண்ணாவுக்கும் ஒரு பரிசு கொடுக்கப்பட்டது.

எதிர்பாராத நிகழ்ச்சி

உறவினர்களின் வற்புறுத்துதலின் பேரில் அண்ணா ஒரு வேலை தேடினார். அதன் பொருட்டு மாசிஸ்டிரேட் ஒருவரிடஞ் சென்றார். தம்மை அறிமுகஞ் செய்து கொண்டார். அதற்குமுன் அம்மாசிஸ்டிரேட் அண்ணாவைப் பார்த்ததில்லை. ஆனால், அண்ணாவைப் பற்றி அறிந்திருந்தார். அண்ணாவைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அண்ணா எதற்காக வந்திருக்கிறார் என்பதைக்கூட அறிந்துகொள்ள முயலவில்லை. அண்ணாவைப் பார்த்ததும் "ஆற்காடு இராமசாமி முதலியார் உங்களுக்குப் பழக்கமாமே அவரிடம்கூறி எனக்குச் சட்ச் வேலை கிடைக்குமாறு செய்யவேண்டு"மென்று வேண்டிக்கொண்டார். இதனைக் கண்ட அண்ணா, "அப்படியே செய்கிறேன்" என்று கூறி விட்டுத் தாம் அங்குச் சென்றதன் காரணத்தைக் கூறாமலே திரும்பினார். இவ்வாறு அண்ணாவின் வாழ்க்கையில் எத்தனையோ வியத்தகு நிகழ்ச்சிகள் நடை பெற்றுள்ளன.

## அறிஞர் அண்ணாவைப்பற்றிப் பிற அறிஞர்கள்

திரு. வி. க.

அண்ணாவைப்பற்றித் திரு. வி. க. கீழ்வரும் பாடலைப் பாடிப் பாராட்டியுள்ளார்.

"அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்—பண்ணவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரக நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றுடு"

### பாரதிதாசன்

புதுவையில் வாழ்ந்திருந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"தமிழுக்குத் தொண்டுசெய்து சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சு வல்லோன் தமிழவீரன்
தமிழென்றும் தானென்றும் நினைப்ப தன்றித்
தமிழ்நாட்டின் நலத்தினுக்கே உயிருடல்கள்
அமைகவென இரவுபகல் உழைக்கும் மேலோன்"

என்று வியந்து கூறியுள்ளார்.

### நாவலர் சோமசுந்தர பாரதியார்

சிறந்த தமிழறிஞராக விளங்கிய நாவலர் சோம சுந்தர பாரதியார்,

"திருவாளர் சி. என் அண்ணாத்துரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவர்களைத் தெரியாதார் யாரும் இரார். திராவிடநாடு பரவாத இடமில்லை. அப்பத்திரிகைக்கு அப்பெருமை தந்த வித்தகர் திரு. அண்ணாத்துரை என்ற உண்மை ஒன்றே அவர் ஆள்வினை அருமைக்கும், உளங்கவரும் உரை வரையுந் திறமைக்கும் சான்றாகும். அண்மையில் சென்னையில் நிகழ்ந்த புரட்சிக்கவி பாரதிதாசர் பாராட்டுப் பெருவிழாவும் அதில் தந்த கால்இலக்கப் பொன்முடியும் அவர் முயற்சிதரும் பயனை அளப்பதற்குப் போதியதாகும்.

ஆங்கிலத்தில் பண்டிதர் பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர் எனில், எழுத்திலும் பேச்சிலும், பழுத்தமொழி ஆட்சியிலும் திறனுடையார் மிகச்சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லவர் தம் வரிசையிலே முன்னணியில் இடம் உடையார் இவர். தமிழினிலோ, அமிழ்துமிழும் சொல்வளமும் உணர் வெழுப்பும் தொடர்ச்செறிவும், குரவரிடம் கல்லாமல்

தாம் பயின்று திறம் பெற்ற சொல்லின் செல்வர். தமிழ் இளைஞர் புத்துலகு விரைந்து தொழில் கேட்க நிரந் தினிது சொல்லுதல் வல்ல நாவலர். கிண்டலோடு நகைச்சுவையும் கொண்டுருளும் நடையுடையார்.

இன்னும் இவர் முதிராத இளமையோடு மூதறிவு மிக்குடையார். அதிமதுரச் சொல்லுடையார். தளராத உள உரனும், வளரறிவும், வளமலியும் உரைத்திறமும் தமதுடைமையாகக் கொண்டோர். இளம் தமிழர் தளபதி. சுயமரியாதை இயக்கத் துணைத்தலைவர். தமிழரிடைத் தன் மதிப்பும் உரிமையுணர்வும் உண்டாக வித்திட்டார் இராமசாமிப் பெரியார். அவை தழைய நீர்பாய்ச்சி எருவிட்டு வளர்ப்பவர் திரு. அண்ணுத்துரை. தமிழ் உயர்வும் தமிழர் தமது உரிமையையும் பெற உஞற்றும் (உழைக்கும்) மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராவர். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர் புகழ் புலவர். இவர் பணியின் பயனாகத் தமிழ் ஓங்க தமிழர் நிலை உயர்வதாக.''

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை

''இளந்தமிழுலகத்தில்—எழுகின்ற தமிழகத்தில்—இன்று 'அண்ணு' என்று அருமையாக அழைக்கப் படுகின்றவர் தோழர் திரு. அண்ணுத்துரை. அவர் திராவிட நாட்டின் ஆசிரியர். ஆயிரம் மேடையேறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணுத்துரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். ''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது, காளைகளாய்க் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர். தமிழ்க்

குலத்தை அரிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை ; ஊழ்வினையே பேசி ஆள்வினையற்றிருக்கும் அளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ் நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், "நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும், வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. புண்ணுற்ற மேனியைப் புறம்பொதிந்து மூடுதலால் என்ன பயன்? என்பது அவர் கேள்வி.

மதிநலம் வாய்ந்த மருத்துவர் அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால் தமிழ்க்குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப் பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி? தமிழர் வாழவேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும்பெருங் குறிக்கோளுடைய அண்ணா அவர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்."

மற்றும் பெரியார் ஈ. வே. இராமசாமி, சுத்தானந்த பாரதியார், சாமி கைவல்யம், ப. சீவானந்தம், கி. ஆ. பெ. விசுவநாதம், புலவர் குழந்தை, ஏ. என். சிவராமன், திருலோக சீதாராம், கல்கி கிருட்டிண மூர்த்தி, ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனுர், என். எஸ். கிருஷ்ணன், கா. அப்பாத் துரையார், நாரண துரைக்கண்ணன், அ. மு. பரம சிவானந்தம், க. அன்பழகன், இரா நெடுஞ்செழியன் முதலிய பலர் அண்ணாவைப் பாராட்டி எழுதியுள்ளனர்.

## அண்ணா எழுதிய நூல்கள்

சிறந்த கல்வி நலம்பெற்றுத் திகழ்ந்த அண்ணா, ஆளுங்கட்சிக்கு அறைகூவல், ஆரியமாயை, அண்ணாவின்

கதை, அண்ணாவின் சிறுகதைகள், புராண மதங்கள், எட்டு நாட்கள், எனது திருமணப் பரிசு, ஆரும்பாரம், மகாத்மா காந்தி, முக்கனி, இலட்சிய வரலாறு, கற்பனைச் சித்திரம், குமஸ்தாவின் பெண், தேவ லீலைகள், சமீன் இனாம் ஒழிப்பு, வாழ்க்கைப் புயல், தி. மு. க. வெற்றி முரசு, நிலையும் நினைப்பும், சாது முதலிய கதைகள், சிறுகதைகள், அண்ணாவின் ஆறு கதைகள், தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள், இரங்கோன் ராதா, கொள்கையில் குழப்பமேன்? விடுதலைப் போர், பொதுச் சேவையா சொந்தத் தொழிலா? அறநிலையங்கள், அன்பு வாழ்க்கை, தீ பரவட்டும், பார்வதி பி.ஏ., சுதந்திரம், பொன்னொளி, நமது முழக்கம், செபமாலை, வர்ணாஸ்ரமம், ஒட்டுமாஞ்செடி, ஆலையூரார் உபதேசம், அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன், அறப்போர், ரோமாபுரி ராணிகள், பொன் விலங்கு, போராட்டம், சமதர்மம், புன்னகை, அண்ணா நகைச்சுவைக் கதைகள், மாஜி கடவுள்கள், சிந்தனைச் செல்வம், புதிய பொலிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புப் பேருரை, கபோதிபுரக் காதல், குமரிக் கோட்டம் என்னும் பல நூல்களை எழுதியுள்ளார்.

### அண்ணாவைப் பற்றிப் பிறர் எழுதிய நூல்கள்

தமிழ் உலகில் தோன்றிய தமிழறிஞர்களில் பேரும் புகழும் பெற்றவர் அண்ணா. அண்ணா அளவு புகழ் பெற்றவர் இதுவரையில் தோன்றியதில்லை. இனிமேலும் தோன்றப் போவதில்லை யென்பது உறுதி. அண்ணா அவர்கள் உயிரோடிருந்தபோதே அவரைப்பற்றிப் பல நூல்கள் தோன்றித் தமிழகத்தில் உலாவரத் தொடங்கி விட்டன. இவரைப்பற்றி எழுந்த நூல்களைப் போன்று கடவுளர்கள்மீதுகூட நூல்கள் தோன்றியதில்லை.

அண்ணாவின் அரிய மொழிகளைத் திரட்டி அண்ணாவின் பொன்மொழிகள் என்னும் பெயரோடு ஒருவர் ஒரு நூலைத் தொகுத்து வெளியிட்டார்.

மா. தங்கவேலர் என்பவர் அண்ணாவின் அரசியல் பாதை என்னும் நூலை எழுதினார். அண்ணா பேசிய பேச்சுக் களின் கருத்துக்களைத் திரட்டி வி. பொன்னுசாமி என்பவர் ஒரு நூலாக்கினார். நாகை தருமன் என்பவர் அண்ணாவின் திருக்குரல்கள் பலவற்றை ஒன்று படுத்தினார். பல அறிஞர்கள் அண்ணாவின்மீது செய்யுட்கள் பாடினர். அவை கவிதாஞ்சலி என்னும் பெயருடன் வெளியாயின. கம்பரப்பர் என்பவர் அண்ணாமீது ௪உ௦ பாடல்கள் கொண்ட அண்ணாத்துரைக் கோவை என்னும் நூலைப்பாடி வெளியிட்டார். அண்ணா பல பெரியோர்களைப் பாராட்டிப் பேசியுள்ளார். அப் பேச்சுக்களை ஒன்று படுத்தி மறைமலையான் என்பவர் 'அண்ணா போற்றிய அறிஞர்கள்' என்னும் பெயரோடு நூலுருவாக்கினார். சு. ப. ஞான வடிவேலன் என்பவர் அண்ணா தமிழையும் முற்காலத் தமிழையும் குறித்து 'அண்ணா தமிழும் முற்காலத் தமிழும்' என்னும் நூலொன்று எழுதினார். அண்ணாவின் ஆட்சியைக் குறித்து மா. தங்கவேலர், 'அண்ணாவின் அரசு' என்னும் பெயரோடு ஒரு நூல் எழுதினார். கே. எஸ். லெட்சுமணன் என்பவர் அண்ணாவின் நல்ல உவமைகளைத் தொகுத்து, "அறிஞர் அண்ணாவின் உவமை நயம்" என்னும் நூலை உருவாக்கினார். கவிஞர் பொன் வெங்கடேசன் என்பவர் அண்ணாமீது அண்ணா பிள்ளைத்தமிழ் பாடினார். சி. கெ. இராமன் என்பவர், அண்ணாவைக் குறித்துத், 'தீர்க்கதரிசி' என்னும் நூலை எழுதினார். தமிழ்ப்பித்தன் என்பவர் அண்ணாவின் நல்லுரைகளைத் திரட்டி, 'அண்ணாவின் அறிவுரைகள்' என்னும் நூலை வெளி யிட்டார். புதுவைப் புலவர் சுந்தர சண்முகனார் என்பவர் "அண்ணா நாற்பது" என்னும் நூலைப் பாடினார். கு. வெற்றியழகன் என்பவர் அண்ணாவின் ஆட்சியில் நிகழ்ந்த அருஞ்செயல்களைக் குறித்து, 'அண்ணா ஆட்சியின் அருஞ்செயல்கள்' என்னும் நூல் எழுதினார். அண்ணா கவியரங்கம் என்னும் நூலும் வெளியாகியது. வண்ணை தியாகராயர் கல்லூரிப்

பேராசிரியர் திரு. சோமசுந்தரம் என்பவர் அண்ணாவின் வரலாற்றைப் புராணமாக கԻகசு பாடல்களில் பாடித் தாமே பதிப்பித்து வெளியிட்டார்.

### தமிழ்ப் பேரொளி

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சித் தலைவராகிய திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் அண்ணாமீது அன்பும் விருப்பமும் உடையவர். அவர் அண்ணாவின் மறைவுக்குப் பின் மறைவு குறித்துப் பெரிதும் வருந்தித் தமிழ்ப் பேரொளி என்னுந் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டார். இந்நூலில் அண்ணாவின் தமிழ் வாழ்வு, பேராவியற்கை, வாழ்க்கைக் குறிப்பு, தம்பிக்கு அண்ணாவின் இறுதிக் கடிதம், கதையும் கருத்தும், சுவையான நிகழ்ச்சிகள், கருத்துக் கோவை, புகழ்மாலை, இந்திய வெளிநாட்டுத் தலைவர்களின் இரங்கலுரைகள், தமிழகத் தலைவர்களின் இரங்கலுரைகள், நகர்ப் பெருமக்களின் இரங்கலுரைகள், ஆட்சி மன்றங்களின் இரங்கலுரைகள், இதழ்களின் இரங்கலுரைகள் ஆகிய பல செய்திகள் அமைந்து அண்ணாவின் புகழை மலை மேலிட்ட விளக்கென விளக்குவதாகத் திகழ்கிறது. இந்நூலில் அடியேன் பாடிய இரங்கற்பாப் பாடல் ஒன்று,

> "எண்ணிய எண்ண மெல்லாம்
> இனிதுற முடித்தி டாமல்
> நண்ணிய புகழ்சேர் அண்ணா
> நானிலம் விட்டுச் சென்றார்
> பண்ணிய வினையு மீதோ
> பரமனே என்றே மக்கள்
> திண்ணிய நெஞ்சம் வாடித்
> தியங்கியே மயங்கி னாரால்"

என்பது.

அண்ணாவின் வாழ்க்கையில் நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சிகள் பல "அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்" என்னும் பெயரோடு நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

———

## ௬௬. பேராசிரியர், கோ. சுப்பிரமணியனுர்

**தோற்றம்**

"செந்தமிழ் எழுத்தும் பேச்சும்
சிறந்திடும் புலமை மிக்கோன்
இந்நாள் ஆங்கி லத்தின்
இனியநல் லுதவி பெற்றே
எந்நகத் காவி யத்தும்
ஏற்புற உள்ளந் தோய்ந்தே
விந்தையாய்ச் சுவைகள் எல்லாம்
விளங்கவே தெரிந்து ரைப்போன்.

ஒப்பிலா வகையில் நூல்கள்
ஒளிபெற் றுத் துலங்க ஆய்வோன்
மெய்ப்பொருள் தெளிந்த நல்லோர்
மேன்மையே போற்றும் மேலோன்
செப்புறும் அறுபான் ஆண்டின்
சிறப்பினைக் காணுஞ் சீலன்
சுப்பிர மணியச் செம்மல்
செந்தமிழ்ச் சீர்போல் வாழி"

என்று தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் திரு. மு. வரதராசனுர் அவர்களால் வாழ்த்தப் பெற்ற கோ. சுப்பிரமணியனுர் தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக் கண்மையில் உள்ள சிந்துபூந்துறையில் 1906ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஏழாம் நாள் பிறந்தார். தந்தையார் பெயர் கோமதிநாயகம் பிள்ளை, தாயார் பெயர் உலகம்மாள்.

### கல்வி

திருநெல்வேலி இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரையிற் பயின்றார். பள்ளியிற் படிக்கும் பொழுதே பைந்தமிழிற் பற்றுக் கொண்டு பல வகையான இலக்கியங்களையுங் கற்றார். பிறகு பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியிற் சேர்ந்து படித்து 1928ஆம் ஆண்டில் பொருளியல் துறையில் பி.ஏ. பட்டம் பெற்றார். பிறகு சென்னையை அடைந்து சட்டக் கல்லூரியிற் சேர்ந்து படித்துப் பி.எல். பட்டம் பெற்றார்.

### வழக்குரைஞர்

சட்டத் தேர்வில் தேறிய பிறகு திருநெல்வேலியை அடைந்து வழக்குரைஞராகத் தொழில் புரியத் தொடங்கினார். ஏழாண்டுகள் வரை வழக்குரைஞராகத் தொழில் புரிந்தார். இத்தொழில் இவருடைய மனத்திற்குகந்ததாகத் தெரியவில்லை. தமிழை மேன்மேலுங் கற்பதிலேயே உள்ளஞ் சென்றது. வழக்குரைஞர் தொழிலை விட்டுவிட்டு மீண்டுஞ் சென்னைக்குச் சென்று தமிழ் கற்க எண்ணினார்.

### எம்.ஏ. பட்டமும் புலவர் பட்டமும்

சென்னையை அடைந்து தனியாக இருந்து தமிழ் கற்றார். 1939இல் தமிழில் எம்.ஏ. பட்டமும் 1940இல் புலவர் பட்டமும் பெற்றார்.

### மனப்பாடஞ் செய்தல்

சென்னையில் தங்கித் தமிழ்கற்ற நான்காண்டுக் காலங்களில் பல நூல்களை மனப்பாடஞ் செய்தார். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம், அகப்பொருள், புறப்பொருள், திருக்குறள், தண்டியலங்காரம், நன்னூல் முதலிய நூல்களை

யெல்லாம் நெட்டுருச் செய்து உள்ளத்திலமைத்தார். எந்த நூலைக் கேட்டாலும் தலைகீழாகச் சொல்லுவார். தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் மூல பாடங்கள் முழுவதையும் தம்முடைய உள்ளத்தில் பொறித்து வைத்தார். ஏடாயிரங்கோடி தம் மனத்தெழுதாது எழுதிப் படித்த விரகரானார்.

### சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணி

எம். ஏ., பட்டம் பெற்றதும் 1939 முதல் 1941 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பேரறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளையின்கீழ் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். அப்பொழுது, "தமிழ் இலக்கியத்தில் வரலாற்றுச் செய்திகள்" என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சி செய்தார். இச்சமயத்தில் செர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளையுங் கற்றார். இதனால் 'பன்மொழிப் புலவர்' என்னும் பெயருக்கும் தகுதியுடையவரானார்.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணி

வழக்குரைஞராகவும், தமிழறிஞராகவும், பன்மொழிப் புலவராகவும் விளங்கும் இவருடைய அறிவு நலத்தையும் ஆராய்ச்சித் திறத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் உணர்ந்தனர். தம்முடைய பல்கலைக் கழகத்தில் பணிபுரியுமாறு அழைப்பு விடுத்தனர். இவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியை ஒப்புக் கொண்டு 1941ஆம் ஆண்டில் இரா. இராகவையங் காருக்குப் பதிலாகத் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந் தார். 1951ஆம் ஆண்டில் பேராசிரியராகித் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவரானார். 1952 முதல் கம்பராமாயணப் பதிப்பு வேலையில் ஈடுபட்டார். சேதுப் பிள்ளைக்குப் பின் கம்பராமாயணப் பதிப்புக் குழுவின் தலைவராகவும் இருந்தார்.

### இவருடைய சிறப்பு

இவருடைய எழுத்தும் பேச்சும் தனிச் சிறப் புடையனவாக விளங்கின. கேளாரும் வேட்ப மொழியுந் திறம் இவரிடம் தலைசிறந்து விளங்கியது. தமிழ் நாட்டில் இவர் பேசாத இலக்கிய மேடைகளே இல்லை. ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகள் செய்திருக்கிருர். இவருடைய பேச்சு பொருள் நுட்பம் அமைந்ததாகவும் கேட்போரை நகைக்க வைக்கும் நகைச்சுவை யுடைய தாகவும் விளங்கியது. இவருடைய பேச்சைக் கேட்ப வர்கள் நகைக்காமல் இருக்கமாட்டார்கள். அவ்வாறு ஒருவர் இருப்பராயின் அவர் நகைச்சுவையின் பயனை இழந்தவராகவே யிருப்பர். இவருடைய சொற்பொழிவில் கேட்போர் ஆழ்ந்து சிந்திக்கும்படியான பொரு ளாழமும் இருக்கும். கம்பராமாயணத்தையுஞ் சிலப்பதி காரத்தையும் இவர் தம்முடைய இருகண்களாகக் கொண்டிருந்தார். கம்பராமாயணப் பாடல்கட்குப் பொருள் விளக்கஞ் செய்வதில் இவர் மிகவும் வல்லவர். எத்தகைய கடுமையான விளங்காத கருத்துக்களையும் மிக விளக்கமாகவும் எளிமையாகவும் எல்லாரும் நன்குணர்ந்து கொள்ளும் வகையில் எடுத்துக் கூறுவதில் சிறந்தவர். இவருடைய சொற்பொழிவை ஒருமுறை கேட்போர் மீண்டுங் கேட்க வேண்டுமென்று விரும்புவர்.

### சைவசித்தாந்தச் சொற்பொழிவு

இவர் ஆங்கிலத்திலும் மிக நன்ருகப் பேசுவார். திருப்பனந்தாள் காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் நிறுவிய அறக்கட்டளையின் சார்பில் 1947ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் காசி அலகபாத் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று சைவசித்தாந்தத்தின் உட்பொருளையும் வரலாற்றையும் பற்றி ஆங்கிலத்தில் எளிய முறையில் விரிவாகவும் விளக்கமாகவும் சொற் பொழிவுகள் செய்தார். இவ்வறக் கட்டளையின் சார்பில்

முதன்முதலாகச் சொற்பொழிவாற்றியவர் இவரே. இச் சொற்பொழிவுகளின் தொகுப்பு ஆங்கிலத்தில் நூல் வடிவாக வெளிவந்துள்ளது. 1942ஆம் ஆண்டில் ஐதராபாத்தில் நடந்த அகில இந்தியக் கீழ்க்கலை மாநாட்டில் கலந்து சொற்பொழிவாற்றினர். வானெலி யிலும் இவர் பல சொற்பொழிவுகள் செய்துள்ளார்.

### சிறந்த எழுத்தாளர்

இவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளருமாவர். ஆனந்த விகடன், கல்கி, செந்தமிழ்ச் செல்வி, குமர குருபரன், ஞான சம்பந்தம், தமிழ்ச்செல்வி முதலிய பல இதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவருடைய கட்டுரைகள் கதை போலவே அமைந்திருக்கும். ஆங்கிலத்திலும் அழகாகவுந் தெளிவாகவும் எழுதுந் திறம் பெற்றவர்.

### நூல்கள் எழுதுதல்

மரவழிபாடும் நாகவழிபாடும் என்பதுபற்றி ஆங்கிலத்தில் ஒருநூல் எழுதியுள்ளார். அந்நூலில் இவ்வழிபாடுகள் தமிழர் வாழ்வில் எவ்வாறு பங்கு கொண்டிருந்தன, தமிழர் சமயத்தோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தன என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். மற்றும் ஆங்கிலத்தில், "பண்டைத் தமிழரிடை வழங்கிய நிமித்தங்களும் நம்பிக்கைகளும்" என்னுந் தலைப்பிலும் ஒருநூல் எழுதியுள்ளார். மேற் கண்ட இருநூல்களும் தமிழரின் சமூக இயல், தமிழ் மக்களினப் பண்பாட்டியல் ஆராய்ச்சியில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இத்தகைய ஆராய்ச்சித் துறைகளில் முதன்முதலாக நூல்கள் எழுதி வழிகாட்டிய பெருமை இவரையே சாரும். இவருடைய ஆங்கில மொழி பெயர்ப்பு ஆற்றல் வாய்ந்த மொழிபெயர்ப்பாகும். திருக்கோவையாரின் பாடல்கள் இருபதை அழகிய முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் குமரகுரு பரன் திங்களிதழில் வெளியிட்டுள்ளார்.

**இவர் எழுதிய தமிழ் நூல்கள்**

புதுமணப் பரிசு, துள்ளி வருகுது வேல், முத்தமிழ் முழக்கம், வெண்ணிலவில் தமிழ் உள்ளம், வள்ளுவர் விருந்து, அப்பர் விருந்து, கவியின்பம், எத்தன் ஏகாம்பரம் முதலியன இவர் எழுதிய நூல்கள். "அரும்பு ஏறஏறக் குறும்பு ஏறும். கூட்டாளிகள் கூடுவார்கள். திரைப் படங்கட்கு ஓடுவார்கள். பெற்றோர்களும் தேடுவார்கள்; வாடுவார்கள்" என்பன போன்று எதுகைமோனை அமைய இயற்றமிழையும் இசைத் தமிழாக எழுதுவதில் இவர் கைதேர்ந்தவர். வள்ளுவர் விருந்து என்னும் நூலில் பிறநூல்களையும் குறளையும் ஒப்பிட்டுக் காட்டிக் குறளின் சிறப்பை யெடுத்துக் கூறியுள்ளார்.

**சைவப் பேராசிரியர்**

இவருடைய நிரம்பிய தமிழ்ப் புலமையை அறிந்து மகிழ்ந்த மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தார், இவருக்குச், "சைவப் பேராசிரியர்" என்னும் பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினர்.

**செந்நாவலர்**

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையினர் "சித்தாந்தச் செந்நாவலர்" என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தனர்.

**இவருடைய தலைமையில் ஆராய்ச்சி**

மு. கோவிந்தசாமி, க. த. திருநாவுக்கரசு முதலியோர் இவருடைய தலைமையில் ஆராய்ச்சி செய்து எம்.லிட்., பட்டம் பெற்றுள்ளனர்.

**மணிவிழா**

இவருக்கு 1966ஆம் ஆண்டில் மணிவிழா நடைபெற்றது. அப்போது திருநெல்வேலி அன்பர்கள்

மணிவிழா நினைவாக மணிவிழா மலர் ஒன்று வெளியிட்டனர். அம்மலரில் டாக்டர் மு. வரதராசனுர், அ. சிதம்பர நாதனுர், சு. சண்முகம், மு. பி. பாலசுப்பிரமணியன், மு. அண்ணுமலை முதலியோர் பாராட்டுரை எழுதியுள்ளனர்.

## மணிவிழா மலர்க் குறிப்புக்கள்

மணிவிழா மலரில் கீழ்வருங் குறிப்புக்கள் வெளியாகியுள்ளன. இளமை வித்து "பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வாழையடி வாழையாக வளர்ந்துவரும் சைவத்திரு மரபில் வந்தவர்கள். சிந்தை இடையருத அன்பும், திருமேனி தன்னிற் பொலிவும், எந்த வேளையிலும் சிவசிவ என்ற மந்திரச் சொல்லையே தாரக மந்திரமாகவுங் கொண்டிருந்த இவர்களுடைய தந்தையாரான திரு கோமதிநாயகம் பிள்ளை அவர்கள் இளமையிலேயே தம்முடைய செல்வ மைந்தனுக்குச் சிவபக்தியை வளர்த்துச், செஞ்சடையண்ணலின் புகழ்பாடும் செஞ்சொற் பாமாலைகளான தேவாரம் திருவாசகங்களைக் கசடறக் கற்பித்தார்கள். தென் தமிழ்நாட்டு முதற் புலவரான திருவள்ளுவரது திருக்குறளை நாள்தோறும் ஒவ்வொன்ருகப் (பரிமேலழகர் உரையோடு) படித்து, அதனைத் தந்தையாரிடம் மனப்பாடமாக ஒப்புவித்து வந்ததால் திருக்குறள் இளமையிலேயே இவர்களுக்கு நன்கு பாடமாகிவிட்டது.

திருநெறி போற்றும் தேவாரம் திருவாசகங்களும், வாழ்வு நெறிகாட்டும் வள்ளுவமும் இவர்களது செந்நாவில் இன்றும் வந்துவந்து விளையாடுவதற்குக் காரணம் இளமையிலேயே இவர்கள் அவற்றைக் கசடறக் கற்றுத் தெளிந்ததால்தான் என்பது அங்கை நெல்லிக் கனியாகும். இளமையில் விதைத்த அந்த இலக்கிய வித்தே இன்று சுவைநலம் ததும்பும் இலக்கிய இன்பமாகப் பூத்துக் குலுங்குகின்றது.

### ஆங்கிலக் கல்வி

தமிழ் மொழியினை இவர்கள் இளமையில் ஓதி நன்கு உணர்ந்ததைப் போன்று ஆங்கில மொழியினையும் ஆசறக் கற்ருர்கள். திருந்திய ஆங்கிலத்தில் தினந் தோறும் பேசிப் பழகினுர்கள். ஆங்கில அகராதியினையே மனப்பாடம் பண்ணினுர்கள். இது வெறும் புகழ்ச்சி யன்று. நாள் ஒன்றுக்கு ஒரு புதிய ஆங்கிலச் சொல்லாவது கற்றுக் கொள்ளவில்லையென்ருல் அன்று இவர்களுக்கு உண்ணவும் முடியாது; உறக்கமுங் கொள்ளாது. இளமையில் இவர்களுக்கு ஏற்பட்ட இந்த ஆங்கில அறிவை, இன்றும் இவர்களிடையே காணலாம். இவர்களது ஆங்கிலப் பேச்சையும், ஆங்கில நூல்களையும் கற்றறிந்த மேதைகள் வாயார வாழ்த்திப் போற்றுகின்றனர். திருக்கோவையாரில் இவர்கள் பல பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். இவைகளைக் கற்போர்கள் பேராசிரியர் அவர்களது தெள்ளிய ஆங்கிலப் புலமையினைத் தெள்ளிதாக அறிவார்கள். "இவர்களது மொழிபெயர்ப்பு இவர்களது ஆழமான ஆங்கிலப் புலமையினை மட்டுங் காட்டாது. மூலத்திலிருந்து சுவை குன்ருத வண்ணம் மொழிபெயர்த் திருக்கும் தனித் திறமையினையுங் காட்டுகின்றது" என்று அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. பி. சந்திரா ரெட்டி கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்கள், ஆங்கிலப் புலவன் மில்டனைப் பெரிதும் விரும்பிப் படித்தார்கள். இதனுல் இவர்களுடைய கல்லூரி நண்பர்கள் இவரை "மில்டன்" என்றே அழைத்தார்கள். மில்டன் போன்ற தமிழ்க் கவிஞர்களை இவர்கள் தேடியபோதுதான் கம்பன் இவர்கள் கண்ணில் தென்பட்டான். கம்பனைக் கண்டதும் அவனது கவிச்சுவையில் உருகினுர்கள். கம்பனை இனி விடேன், என்று தமது இலட்சியக் கவிஞனுக அவனையுங் கொண்டார்கள்.

**கம்பனைப் பற்றிய கன்னிப் பேச்சு**

பேராசிரியர் அவர்களது கம்பனைப் பற்றிய முதல் பேச்சு காரைக்குடி கம்பன் விழாவிலேயே தொடங்கியது. தமிழ்ப் பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களிடம் ஆராய்ச்சி மாணவராகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அவர்கள் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். ஒரு நாள் காரைக்குடி திரு. சா. கணேசன் அவர்கள் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களைப் பார்க்க வரவே, அப்போது ஆராய்ச்சி மாணவராக விருந்த பேராசிரியர் சுப்பிரமணிய பிள்ளை அவர்களது ஒளிபடைத்த கண்களைப் பார்த்துத், "தாங்களும் கம்பன் விழாவில் கலந்துகொள்ள வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்கள். பேராசிரியர் கோ. சு. பிள்ளையவர்களும் "கேள்விச் செல்வம்" என்ற தலைப்பில் பேசுவதாகக் கூறி அந்த ஆண்டில் காரைக்குடி கம்பன் விழாவில் முழக்கமிட்டுக், கம்பன் விழாவில் தமக்கென்று ஒரு புதிய அத்தியா யத்தைப் படைத்தார்கள். இவர்களது பேச்சின் சுவையினை அறிந்த கம்பன் கழகத்தார் இரசிகமணி டி. கே. சி. தலைமையில் நடந்த "கதைக்கு வருணனை வேண்டுமா? வேண்டாமா?" என்ற பட்டி மண்டபத் திலும் கலந்துகொள்ள வேண்டினார்கள். பேராசிரியர் இதற்கு இசைந்து எடுத்த எடுப்பிலேயே, "திருமணத் துக்குப் பெண் வேண்டுமா? வேண்டாமா? என்பதைப் போன்றது இக்கேள்வி" என்று கூறியவுடன் எழுந்த கையொலி கம்பன் கழகத்தையே அதிரச்செய்தது. கதைக்கு வருணனை வேண்டும் என்ற கட்சியில் நின்று இவர்கள் பேசிய பேச்சைத் தலைமை வகித்த டி. கே. சி. அவர்கள் "எனது மகன் (தனது நண்பர் மகன்) பேசிய பேச்சு,

> *'மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன் தந்தை*
> *என்நோற்றான் கொல்எனும் சொல்'*

என்ற குறளை எனது நெஞ்சத்தில் நிலைநிறுத்துகின்றது'' என்றார். செய்தித்தாள்கள் இவர்களைப் பாராட்டின. பொதுமக்கள் போற்றினார்கள்.

**சிங்கத்தையும் ஈர்த்தார் ஜி. எஸ்.**

யாரையும் ஈர்க்கவல்ல இவர்களது பேச்சுத் திறமையால் ஈர்ப்புண்ட பெரியோர்கள் பலப்பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அறிஞர் ப. ஜீவானந்தம் அவர்களும் ஒருவர். நாகர்கோயிலுக்கு இலக்கியக் கூட்டத்திற்குக் கம்பனைப் பற்றிப் பேசப் பேராசிரியர் அவர்கள் சென்றிருந்தார்கள். அரசியல் வாதியான அறிஞர் ஜீவானந்தம் அவர்களது கூட்டமும் அருந்தமிழ் மேதையான ஜி. எஸ். அவர்களது கூட்டமும் பூதப் பாண்டியில் ஒரே நாளில் நிகழ இருந்தது. அறிஞர் ஜீவா ஜி. எஸ். அவர்களது இலக்கியக் கூட்டம் இன்றிருப்பதால் அரசியல் கூட்டத்துக்கு ஆள்வராது என்று எண்ணி ஆட்படையுடன் இலக்கியக் கூட்டத்தைக் கலைக்கச் சென்றார். கலைக்கச் சென்ற அவர் பேரா சிரியரது கம்பனைப் பற்றிய சொற்பொழிவைக் கேட்டதும் தம்மை மறந்து தலைப்பட்டு நின்றதோ டல்லாமல், பேராசிரியர் அவர்களிடம் வந்து தாம் இனிக் கம்பனைக் கற்கப் போவதாகவும் கூறிக் கம்பனது நூல்களையும் வாங்கிச் சென்றார். பின்னாட்களில் ஜீவா கம்பனது பாடல்களுக்குச் சிறந்த சுவை நலங்களை எடுத்துச் சொல்லும் பான்மையினைச் செந்தமிழ் நாட்டார் அறிவர். எத்தனையோ முறை காரைக்குடி கம்பன் விழாவில் தமது இலக்கிய குரு பேராசிரியர் ஜி. எஸ். தாம் என்று ஜீவா கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

**இறுதி**

சிறந்த புகழோடு விளங்கிய இவர் தம்முடைய அறுபத்தைந்தாவது அகவையில் 26-8-71இல் திருநெல் வேலியில் தம்முடைய இல்லத்திற் காலமானார்.

———

## உ०. *தாமரைச் கண்ணியார் வ. பா

### தோற்றம்

சலசாட்சி என்னும் பெயரைத் தாமரைக்கண்ணி என்று மாற்றிக்கொண்ட இவ்வம்மையார் சென்னை மையத் தந்தி நிலைய அலுவலகத் தலைமை யெழுத்தர் வேலூர் மாணிக்க முதலியார் அவர்கட்கும் பெங்களூர் யசோதையம்மையாருக்கும் புதல்வியாக 6-1-1911இல் பிறந்தார்.

### கல்வி

இளம்பருவத்திலேயே கல்வி கற்கத் தொடங்கி தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி களையும் நன்கு கற்றுத் தேறினர். கட்டுரை எழுதுதல், செய்யுள் இயற்றுதல், நூல் எழுதுதல் முதலிய துறை களிலும் வல்லவரானார்.

### இசை ஞானியார்

இசைத் துறையிலும் அம்மையாருக்கு ஈடுபாடு உண்டு. வாய்ப்பாட்டிலும் வீணை வயலின், ஆர்மோனியம், சலதரங்கம் ஆகியவைகளை மிழற்றுவதிலும் வல்லவ ரானார். ''இசைஞானியார்'' என்று திரு. வி. க. அவர் களாற் பாராட்டப் பெற்றார். ''தாமரைக் கண்ணியார் பாடக் கேட்டால் என் நோய் நீங்கிவிடும்'' என்று திரு. வி. க. அவர்கள் பன்முறை பொது மேடைகளிற் பாராட்டியதுண்டு.

---

* திரு. வ. பா. கோபாலன், B.SC., B.T., சித்திலக் குவியலில் எழுதிய குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டது.

திருமணம்

கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய அம்மையார் 19-5-1929இல் வல்லை திரு பாலசுப்பிரமணியம் அவர்களைத் திருமணம் புரிந்து கொண்டார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்

1938ஆம் ஆண்டில் சென்னை அரசினர் இந்தியைக் கட்டாயமாகக் கொண்டு வந்தபோது தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியது. அப்பொழுது அம்மையாருடைய அளவு கடந்த தமிழ்ப் பற்று வெளியாகியது. 1938ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பதின்மூன்றும் நாள் சென்னை ஒற்றைவாடைக் கொட்டகையில் கூடிய தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் வரவேற்புக் குழுவுக்குத் தலைவியாக இருந்து வீர வுரையாற்றினார். இதனைத், தாமரைக் கண்ணியாரின் தனிப்பேருரை என்று அந்நாளில் விடுதலையேடு பாராட்டியது.

சூறாவளிப் பயணம்

பிறகு, வேலூர், சேலம், நிலக்கோட்டை, அருப்புக் கோடை, தென்காசி, திருப்பத்தூர், நாகை முதலிய இடங்களுக்குச் சென்று சூறுவளிப் பிரசாரஞ் செய்து இந்தியை ஒழிக்கப்பெரிதும் பாடுபட்டார்.

கட்டுரைகளும் நூல்களும்

செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், பாசறை, திருவிளக்கு, தமிழ்நாடு, லோகோபகாரி, பூந்தோட்டம், அமுதசுரபி, தமிழ்முரசு, தமிழோசை, திருவள்ளுவர், போர்வாள், மாலுமி முதலிய இதழ்களுக்கும் பல சிறப்பு மலர்களுக்கும் கதைகளும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, "அழகை வெறுத்த அழகி" என்னுங் கட்டுரைத் தொகுப்பு

நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் 1950ஆம் ஆண்டில் கோவையில் பாராட்டுப் பத்திரம் வழங்கினார்கள். இவர் எழுதிய மற்றொரு நூல் வண்ணத் தாமரை. இஃது ஆங்கிலப் பேராசிரியரான "ஆஸ்கர் ஒயில்டு" எழுதிய ஐந்து சிறுகதைகளின் தமிழாக்கம் ஆகும்.

**மாணவர் மன்ற உறுப்பினர்**

அம்மையார் தொடர்ந்து சென்னை மாணவர் மன்றத்தின் உறுப்பினராகவும் 1946, 47ஆம் ஆண்டின் அதன் தலைவராகவும் இருந்து பணிபுரிந்ததன்றிப் பின்னர் ஓராண்டு துணைத் தலைவராகவும் தொடர்ந்து செயற்குழு உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

**மக்கட்பேறு**

அம்மையாருக்குக் கோபாலன், புருடோத்தமன் என்று இரு ஆண்மக்கள் தோன்றினார்கள். கணவனாரின் உடன்பிறந்தார் புதல்வர் ஒருவரையும் அம்மையார் தம் மகனென வளர்த்துப் பாராட்டிற்குரியவரானார்.

**பிறர் கூறுவன**

அம்மையாரைப் பற்றிப் பிறர் கூறுவன சிலவற்றையும் ஈண்டுக் காண்போம்.

**சிறுவை மோகன சுந்தரனார்**

"1938இல் இந்தி தமிழகத்தின்மீது படையெடுத்த போது தமிழர்கள் ஒன்றுபட்டுத் திரண்டனர். இந்திப் படையெடுப்பினை எதிர்த்துப் போராடினர். திரண்டெழுந்து பணிசெய்த ஒரு பாசறை தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் பாசறை. அப்பாசறையின் வீராங்கனைகளில் ஒருவர் தாம் திருமதி. வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்.

### பணிகளின் பட்டியல்

1938இல் தொடங்கிய தாமரைக் கண்ணியார் பணி 1951 ஏப்பிரல் 30ஆம் நாள் வரை தொடர்ந்து நடைபோட்டது. தாமரைக் கண்ணியார் கணவர் அரசாங்க அலுவலில் இருந்ததால் தாம் சிறை செல்லவில்லை. மற்ற எல்லாப் பணிகளிலும், வேல் வடித்துக் கொடுக்கும் பணிவரை சுணங்காது துவளாது செய்தார்கள். தமிழ்த் திருமண மாநாடு நடத்தினர். மகளிர் ஒன்று சேர்ந்து திரு. வி. க. வுக்கு மணிவிழாச் சிறப்புச் செய்தனர். தங்கள் தலைவி டாக்டர் தருமாம்பாள் அவர்களுக்கு மணிவிழா எடுத்தனர். பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத்தைச் சிறப்பாக நடத்தினர்கள். நக்கீரர் கழகத் தமிழ் விழாக்களில் பலமுறை கலந்து கொண்டு சிறப்பித்தனர். சென்னை மாணவர் மன்றத்தில் அங்கம் வகித்து அதனைச் சிறப்புற வளர்த்தனர். டாக்டர் தருமாம்பாள் மகளிர் இலக்கிய வட்டம் இவர்களது வருகையால் சிறப்பெய்தியது. இத்தனைக்கும் மேலாக, தாமரைக்கண்ணி அம்மையார் செய்து வைத்த தமிழ்த் திருமணங்களும், வாழ்த்துரை வழங்கிய திருமணங்களும் பல நூறு......''

### நாட்டுப் பெண்கள்

''உலகத்தில் காணக் கிடைக்காத பொருள்களைக் குறிப்பிட வேண்டுமானல் மக்கள் வேடிக்கையாக, 'முயற்கொம்பு,' 'ஆகாயத் தாமரை,' 'மலடிமகன்,' 'மாமியார் மெச்சிய மருமகள்' என்றெல்லாம் சொல்வார்கள். இவைகள் எல்லாம் இல்லை என்பது கருத்து.

இவற்ருேடு, 'மருமகள் மெச்சிய மாமியார்' என்பதையுஞ் சேர்த்துக் கொள்ளலாம். ஆனல், இதற்கு எங்கள் மாமியார் தாமரைக் கண்ணியார் விதிவிலக்காவார். நாட்டுப் பெண்களாகிய எங்களைத் தம் சொந்தப் புதல்வியர்களாகவே ஏற்றுக் கொண்டு,

தமக்குப் பெண் இல்லாத குறையை நிவர்த்தி செய்து கொண்டார். எங்கள் மாமியார் கோசலைப் பிராட்டியை நிகர்த்தவர். அவர் 'மறுவில் நால்வர்க்கும் வேற்றுமை மாற்றினாள்' என்று கம்பர் பரவசமாகப் பாடுகிறார். எங்கள் மாமியாரும் எங்கள் மூவரிடையே வேற்றுமை பாராட்டியதில்லை. அவரை நாங்கள் 'அம்மா' என்றே அழைப்போம். 'மாமி' 'அத்தை' என்றெல்லாம் அழைப்பதில்லை. அவர் காணக் கிடைக்காத தங்கம்.''

கணவர் வல்லை - பாலசுப்பிரமணியம்

''ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் மூத்தமகள் பரமேஸ்வரிக்குத் திருமணம் நடைபெற இருக்கிறது. வழக்கம்போல் திருமண மலருக்கு வாழ்த்துப்பா எழுதிக் கொடுக்கும்படி ஆசிரியர் எங்களைக் கேட்டார். அப்போது எனக்கு அலுவலக வேலைச் சுமை அதிகம். இரண்டாம் உலகப் பெரும்போர் காரணமாகச் சென்னை மாநகரம் காலி செய்யப்படுஞ் சமயம். வேலை நெருக்கடிக் கிடையே சிறிது நேரம் கண்டுபிடித்து வெண்பா எழுத உட்கார்ந்தேன்.

*''சிவமுத்து மாமகளாம் செல்விபர மேஸ்வரியும்
தவத்திலுயர்ந் தான்விசுவ நாதனுமே—அவனியிலே
திங்கள் ஒளியேய்ப்பத் தேனுஞ் சுவையுமென''

பாட்டு இதற்குமேல் ஓடவில்லை. மற்ற சமயமாயிருந்தால் நான்காம் வரி வெகு எளிதில் வந்துவிட்டிருக்கும். ஆனால், அப்போதிருந்த குழப்பமான மனநிலையில் பாட்டு தடை செய்தது.

அப்போது என்னைப் பகலுணவுக்கு அழைக்க வந்த என் துணைவியார், நான் பேனா பிடித்துக் கொண்டு

* இவ்வெண்பாவின் தளை சரியாக அமையவில்லை.

ஆழ்ந்த யோசனையிலிருப்பதைக் கண்டு, "என்னங்க யோசனை?" எனக் கேட்டுவிட்டு அருகே வந்தார். நான் படுகிற இடர்ப்பாட்டினைச் சொன்னேன். பூர்த்தியாகாத பாட்டை வாங்கிப் படித்து, "இது என்னங்க பிரமாதம், "எங்களைப் போல் வாழ்வீர் இசைந்து" என்று முடித்து விடுங்களேன்" என்றார். என்மேனி சிலிர்த்தது.

அவ்வாறே பாட்டினை முடித்துச் சுத்தப் படி செய்து சிவமுத்து அவர்களிடங் கொடுத்தேன். அவர் அதை வாங்கிப் படித்து வெளிப்படுத்திய பரவசநிலை என்னால் சொல்லுந் தரத்ததன்று.

"இப்படிப் பாட்டுப் பாடியவர்களை என் வாழ்நாளில் இதுகாறும் யான் கண்டதில்லை! என்ன மனவுறுதி? என்ன தன்னம்பிக்கை! ஞானசம்பந்தர் தம்மேல் ஆணையிட்டுச் சொல்வது போலல்லவா இருக்கிறது இவர்கள் பாட்டு" என்றெல்லாம் கூச்சலிட்டுக் கூத்தாடத் தொடங்கி விட்டார். அவருடைய ஒவ்வோர் அங்கமும் மீசையும் தாடியுங் கூடத் துடித்தன. அதற்குப் பிறகு சமய சந்தர்ப்பம் பாராமல் எல்லாரிடமும் சொல்லிக் காட்டி மகிழ்வது அவருடைய வழக்கமாகி விட்டது.

**நன்றிக் கடன்**

இனி இறுதிக் கட்டத்துக்கு வருகிறேன். தாமரைக் கண்ணியின் நாடகம் 30-4-71 வெள்ளிக் கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு முடிந்து, வெளிப்படுதாவும் இறங்கி விட்டது. அந்தச் சமயத்தில் என் ஆற்றலெல்லாம் என்னை விட்டுப் போய்விட்டது. இனி எனக்கு வாழ்க்கைத் துணை நலம் இல்லை என்னும் நிலையை எண்ணிப் பார்க்கவும் முடியாத நான் கையறுநிலை என்ன என்பதை அப்போதுதான் உண்மையில் உணர்ந்தேன்......."

**இறுதி**

அம்மையார் 1971ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்

**கவிஞர் பூ. ச. சண்முக சுந்தரம்**

மேன்மைகலி ஐபாயி ரத்தெழுப தொடுமூன்று
விரோதிகிரு தாண்ட தனிலே
விளங்குசித் திரைத்திங்கள் பதினேழு வளர்மதியில்
மிருகசட்டி ஆதிரை நன்னாள்
வேன்முருகன் வாழ்வல்லக் கோட்டைபுகழ் மிருசீலன்
பாலசுப் பிரம ணியனின்
மேன்மைக் கிழத்தியாய் மிருகத்பு சீலமும்
விருந்தோம்பு மேன்மை குணமும்
தான்பெற்ற மக்களுக் கொருகுறையும் நேராது
சதுரா னகட ஞற்றிய
சற்குணத் தம்மையார் தாமரைக் கண்ணியார்
சரவணன் திருவ டிகளில்
வான்செய்த தவமிதோ வருகின்ற தென்னவே
வானுளார் மகிழ்ச்சி கொளவும்
மண்ணுளார் வாழ்வரசி கோலங்கா ணீரென்று
வழுத்திடத் திளைத்தன ரரோ.

———

## உக. டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை

### தோற்றம்

தணிகைமணி என்னுஞ் சிறப்புப் பெயரைத் தம் பெயருக்கு முன்னால் பின்னளில் பெற்ற வ. சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை என்பவரின் அருந்தவப் புதல்வராக 1883ஆம் ஆண்டிற் பிறந்தார்.

### கல்வி

தொடக்கக் கல்வியைக் கற்று முடித்த பிறகு உயர் தரக் கல்வி கற்று எம்.ஏ., பட்டமும் பெற்றார். ஆவணப் பதிவுத்துறையில் பணிபுரிந்தார். ஆவணப் பதிவுத் துறைத் தலைமைச் செயலகத்தில் தலைமை மேற்பார்வை அதிகாரியின் நேர் உதவியாளராக இருந்து 1938ஆம் ஆண்டில் ஒய்வு பெற்றார்.

### அரசினர் பட்டம்

இவருடைய உண்மையோடு கூடிய சீரிய பணியை அப்போதிருந்த இந்திய அரசு பாராட்டி இவருக்கு இராவ்பகதூர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்தது.

### அறுமுகன் மாட்டன்பு

இவருடைய தந்தையாராகிய சுப்பிரமணிய பிள்ளை மிகுந்த தெய்வ பக்தியுடையவர். முருகக் கடவுளிடத்தில் பேரன்பு கொண்டிருந்தார். திருப்புகழ்ப் பாடல்களை யெல்லாந் தேடித் தொகுத்துச் சுத்தப் பிரதியாக வெளியிட்டார். தேவாரம் பெற்ற சிவப்பதிகட்கெல்லாம்

பயணஞ்சென்று தலயாத்திரை நூலொன்றும் எழுதி வெளியிட்டார். அவர் முன்சீபாகத் தொழில் புரிந்திருந்த போதினும் தமிழ் நூல்களைக் கற்பதினும் எழுதி வெளியிடுவதினுங் கருத்துச் செலுத்திக் கலைத் துறையிலும் பணிபுரிந்தார். அம்முறை தம் மக்கட்கும் படியுமாறு வளர்த்தார். அதனால் அவருடைய மக்களாகிய இவரும் சண்முகம் பிள்ளை என்னும் இவருடைய உடன்பிறந்தாருந் தந்தையாரைப் போலவே முருக பத்தியிலும் தமிழ்நூல் ஆராய்ச்சியிலுஞ் சிறந்து விளங்கினர். செங்கல்வராய பிள்ளை முருகக் கடவுளிடத்தில் முறுகிய காதலுடையவராக விளங்கினர். முருகப் பெருமான்மீது பாடல்கள் பலவற்றை இயற்றினர். திருத்தணிகை முருகப் பெருமானிடத்தில் அளவிறந்த அன்புடையவர். அடிக்கடி திருத்தணிகை சென்று வழிபாடுசெய்வார். அதனால் இவருக்குத் 'தணிகை மணி' என்னுஞ் சிறப்புப் பெயரும் உண்டாகியது.

### நூல்கள் வெளியிடுதல்

ஒய்வுபெற்ற பிறகு தமிழ்நூல் ஆராய்ச்சியிலேயே தம்முடைய முழு நேரத்தையும் போக்கினர். நாற்பது ஆண்டுகட்கு மேலாகத் தமிழ் ஆராய்ச்சியிலேயே அழுந்திய உள்ளமுடையவராய் ஈடுபட்டார். செய்யுள் இயற்றுவதிலும் வல்லவராகிய இவர் பாடிய சிறு நூல்கள் பல அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டுள்ளன. இவர் உபதேச காண்டத்தை நன்ருக ஆராய்ந்து வெளியிட்ட பதிப்பு இவருடைய ஆராய்ச்சித் திறமையை நன்ருக எடுத்துக் காட்டுகிறது. முருகக் கடவுளைப்பற்றிய புகழ்ப் பாடல்களையெல்லாந் தொகுத்துச் சைவசமயத்திற்குரிய சைவத்திருமுறை பன்னிரண்டைப் போலக் கௌமார சமயத்திற்கும் பன்னிரண்டு திருமுறைகளை வகுத்திருக்கிருர். அவை "முருகவேள் பன்னிரு திருமுறை" என்னும் பெயரோடு வெளியிடப்பட்டிருக்கின்றன. இப் பன்னிரு திருமுறையில் 7 தேனூர் வரகவி சொக்கலிங்கம்

பிள்ளை என்பவர் இயற்றிய முருகனடியார்கள் வரலாறாகிய சேய்த்தொண்டர்புராணம் திருத்தொண்டர் புராணத்தைப்போற் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## பன்னிரு திருமுறை ஒளிநெறிகள்

முருகவேள் திருமுறை வேலை முடிந்த பிறகு தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளை ஆராயப் புகுந்தார். சொல்லடைவு பொருளடைவு எழுதியதோடு அவைகளைப் பற்றிய கட்டுரைகளும் எழுதினார். பல பேரறிஞர்கள் சேர்ந்து செய்ய வேண்டிய வேலையை இவர் ஒருவரே செய்யத் தொடங்கினார். இத்தகைய ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை நூல்கள் எழுதுவதற்குத் தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், சமய நூல்கள், பிற்காலத்து இலக்கியங்கள், மெய்கண்ட நூல்கள், புராணங்கள் ஆகியவற்றை ஒருவர் துறைபோகக் கற்றுத் திருந்திய புலமை பெற்றிருத்தல் வேண்டும். இறை வழிபாட்டிலும் சமய இலக்கியங்களிலும் மனம் ஒன்றி அழுந்திய பற்றிருக்க வேண்டும். மேலுந் தெளிந்த நினைவாற்றலும் எல்லையில்லாத பொறுமையும் வேண்டும். இத்தகைய சிறப்புடையவர்களே இத்தகைய நூல்களை இயற்ற முடியும். இந்நூல்களைக் கொண்டு அறிஞர்கள் எத்தனையோ நூல்களை எழுதக்கூடிய ஆற்றலைப் பெறலாம்.

## ஒளிநெறி அமைப்பு

ஒரு நூலில் சொல்லப்பட்ட எல்லாப் பொருள்களையும் அகரவரிசையில் அமைத்தல் வேண்டும். அப்பொருளை விளக்கும் சொற்களும் தொடர்களும் பாட்டு எண்களுடன் அகரவரிசையில் அமைக்கப் பெறுதல் வேண்டும். சம்பந்தர் தேவாரத்தில் என்ன சொல் என்ன பொருள் வேண்டுமானாலும் அகராதியில் ஒரு சொல்லை எடுப்பது போல் எளிதிலே தெரிந்தெடுத்துக் கொள்ளலாம்.

இதுவன்றி ஒப்புமைப்பகுதி ஒன்றுஞ் சேர்க்கப்படுகின்றது. அதில் இன்ன பொருளடங்கிய தொடர் இன்ன இன்ன நூல்களில் காணலாம் என்பதாகும். இஃதல்லாமல் நூலிற் காணப்படும் இலக்கண நுட்பங்கள் தனிப்பகுதியாக விளக்கப்படுகின்றன. ஒரு பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புக்களில் வருமானால் உரிய தலைப்புக்கள் எல்லாவற்றினும் அது குறிக்கப்பட்டுள்ளது.

### ஒளிநெறிக் கட்டுரை அமைப்பு

ஒளிநெறியிலுள்ள தலைப்பிற்கண்ட சொற்களுடி பொருள்களும் முறைப்படுத்திக் கட்டுரை வடிவிலே விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஆராய்ச்சியாளர்கட்கு மட்டுமன்றிப் பொதுவாகத் திருமுறை நூல்களின் தனிப்பெருமையினையும் சிறப்பினையும் அறிய விரும்பும் அனைவர்க்கும் நன்கு பயன்படும்.

### அருமையறியாமை

பல பெரும் புலவர்களைக் கூட்டிப் பல நூறுயிரரூபா செலவிடினும் எந்தப் பல்கலைக் கழகமும் செய்ய இயலாத ஒப்பில்லாப் பெருஞ்செயலை இவர் தாம் ஒருவராகவே தம் கையாலேயே செய்து முடித்தார். இத்தகைய பேரறிஞர்கள் மேனாட்டில் தோன்றியிருப்பின் மிகு விரைவில் நோபெல் பரிசு பெற்றிருப்பர். ஆனால், தமிழ் நாட்டினரோ தமிழக அரசினரோ இவர்தஞ் செயற்கருஞ் செயலின் அருமை பெருமைகளை அறிந்து பாராட்டி எத்தகைய சிறப்புஞ் செய்யவில்லை.

### திரு. வ. சு. அவர்கள்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை அதன் தொடக்க காலம் முதலே நன்முறையில் இயக்கி அதன் பொன்விழாவையும்

நடத்திப் புகழ்பெற்ற திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்கள் ஒரு புதுமையான மனிதர். தக்கவர்களைக் கொண்டு நூல்கள் எழுதச் செய்து அவைகளை வெளி யிடுவதில் வல்லவர். ஒருவர் எத்துறையில் நூல் எழுத வல்லவர் என்பதை எவ்வாறே உணர்ந்து அவரை அத் துறையிற் செலுத்துவதில் வல்லவர். குணங் கண்ட விடத்திற் போற்றுவதினும் சீரியர். பல பழம்பெரும் நூல்களைப் பதிப்பித்தால் அவை விற்பனையாகுமா என்பதைக்கூடப் பாராமல் அந்நூல் மறைந்தொழியாமல் இருக்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பலநூல்களை வெளியிட்டிருக்கிருர். இவர் இவ்வாறு செய்யாமலிருப்பின் எத்தனையோ நூல்கள் மறைந் தொழிதல் திண்ணம். இத்தகைய இயல்பு வாய்ந்த இவர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர் களிடம் நெருங்கிய நட்பும் தொடர்பும் உடையவராக இருந்தார். தணிகைமணி அவர்களின் நூல்களின் தகுதியறிந்து அவைகளை வெளியிட்டதுடன் தணிகை மணியவர்கட்கு ஊக்கமுங் கொடுத்து வந்தார். இதனுல் தான் தணிகைமணியவர்கள் தேவாராதி ஒளிநெறி நூல்களை எழுதுவதில் ஊக்கமுடையவராய் அகவை எண்பத்தொன்பதிற்கூட ஈடுபட்டிருந்தார். சிறந்த தொண்டு செய்யும் தணிகைமணி அவர்கட்கு ஏதேனுஞ் சிறப்புத் தேடிக் கொடுத்து உலகினரின் அறிமுகத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்று எண்ணினுர். டாக்டர் பட்டங்கொடுக்கச் செய்தல் சிறந்ததென்று அவர் உள்ளத்தில் தோன்றியிருக்கிறது. இதைக் குறித்து திரு. வ. சு. அவர்களே பின்கண்டபடி செந்தமிழ்ச் செல்வியில் எழுதியிருக்கிருர்.

சைவத் திருமுறைகட்கு ஒளிநெறியும், ஒளிநெறிக் கட்டுரையும், முருகன் அருட்பனுவல்கட்கு உரை விளக்கமும் எழுதிய அருட்டிரு தணிகைமணி ஐயா அவர்களின் செயற்கரிய சீரிய தொண்டினைப் பாராட்டித் தமிழ் நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களில்

ஏதாவதொன்றில் டாக்டர் பட்டம் (D. litt.) வழங்குதல் வேண்டுமென்று திருவருள் உணர்த்த உணரலானேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலே அதனைப் பெறுவது எளிதாகாது என்று கருதி, அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலே வழங்கும்படி யானும் திருவாளர் மீ. ப. சோமு அவர்களும் டாக்டர் இராசா சர் முத்தையா செட்டியாரவர்களைக் கண்டு வேண்டினேம். அவர்களும் உள்ளவுவகையோடு இசைவு தெரிவித்துக் கட்டாயம் அதற்காவன செய்து தெரிவிப்பதாகச் சொன்னர்கள். முன்னுள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ண அவர்கட்கும், முன்னுள் குடியரசுத் தலைவர் டாக்டர் சாகிர் உசேன் அவர்கட்கும் டாக்டர் பட்டம் வழங்கியபோது தவத்திரு தணிகைமணி ஐயா அவர்கட்கும் வழங்கியிருத்தல் வேண்டும். ஆனல், ஏனே வழங்கப் பெறவில்லை.

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழிய னவர்கள் எனது விருப்பத்திற் கிசைந்து 9-5-1968இல் தணிகைமணி ஐயா அவர்கள் 'சிவனக'த்துக்கு வந்து மிக்க தளர்வுற்ற முதுமையிலும் அவர்கள் செய்துவருந் திருத்தொண்டினைப் பாராட்டினர்கள். அவர்கட்கு டாக்டர் பட்டம் வழங்குவது மிகவும் பொருத்தமாகும் என உணர்ந்தார்கள். எனவே அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் தே. பொ. மீனுட்சி சுந்தரனுரவர்களிடம் பரிந்துரைத்தார்கள். பன்மொழிப் புலவர் துணை வேந்தரவர்களும் தணிகைமணி ஐயா அவர்களுடைய செயற்கருந் தொண்டினை நன்கு அறிந்தவர்களாதலால் டாக்டர் பட்டம் (D. litt) வழங்கு வதற்குப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே ஒப்புதல் பெற்ருர்கள் அதன்படி 1-9-1969 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மதுரைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற பட்டமளிப்பு (Convocation) விழாவிலே தமிழக ஆளுநர் மாட்சிமைமிகு சர்தார் உச்சல்சிங் அவர்கள் தணிகைமணி ஐயா அவர்கட்கு டாக்டர் பட்டம் (D. litt.) வழங்கினர்.

சென்னையில் வழியனுப்பு அறிக்கை அச்சிட்டுப் புலவர்கள், அறிஞர்கள் முதலியோர்க்கு வழங்கப்பட்டது. அவ்வறிக்கையின்படி 30-8-69 சனிக்கிழமை இரவு 8-10 மணிக்குத் திருவனந்தபுரம் விரைவுவண்டி புறப்படுவதற்கு முன்னதாகவே வடபழனி முருகன் கோயில், மயிலைக் கபாலீசுரர் கோயில், முத்தியாலுப்பேட்டை மல்லீசுரர் கோயில், காளியம்மன் கோயில் ஆகிய நான்கிலிருந்தும் குருக்கள்மார் வந்து திருவருட் செல்வரவர்கட்கு மலர்மாலை அணிவித்துத் திருநீறும் குங்குமமும் வழங்கி வாழ்த்தினர். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. முத்து இராசாக்கண்ணனார், மாணவர் மன்றச் சார்பில் வல்லை பாலசுப்பிரமணியம், தமிழாசிரியர் கழகச் சார்பில் புலவர் மு. சண்முகம் பிள்ளை முதலியோர் நிலையத்துக்கு வந்து வழியனுப்பி வைத்தனர். தணிகைமணி ஐயா அவர்களோடு அவர்கள் துணைவியாரும், மைத்துனரும், அடியேனும், என்மனைவியும் சென்றோம்.

மதுரையில் வரவேற்பறிக்கை அச்சிட்டுப் புலவர்கள், அறிஞர்கள் முதலியோர்க்கு வழங்கப்பட்டது. அவ்வறிக்கையின்படி 31-8-69 ஞாயிறு காலை 8 மணிக்கு மதுரை நிலையத்துக்குக் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்களுடைய வகையாள் மகிழுந்து வண்டியுடன் வந்து வரவேற்றனர். உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, திரு. கலியாணம் பிள்ளை, திருப்புகழ்ச் சபையினர், பன்னிரு திருமுறை மன்றத்தினர், திருவள்ளுவர் கழகத்தினர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர், தமிழாசிரியர் கழகத்தினர் ஆகியோர் நிலையம் வந்து மலர்மாலை அணிவித்து மிகச் சிறப்பாக வரவேற்பளித்தனர்.

நிலையத்திலிருந்து மகிழுந்து வண்டியில் மீனாட்சி சுந்தரர் திருக்கோயிலை வலம் வந்து சுற்றுலா மாளிகையில் தங்கினோம்.

அன்று மாலை 6 மணிக்குத் திருப்பரங்குன்றம் முருகன் திருக்கோயில் வழிபாட்டிற்குச் சென்றோம். திருப்பரங்குன்றம், மீனாட்சிசுந்தரர் திருக்கோயில்களின் செயலதிகாரி உயர்திரு. எஃச். திருமலையப்பன் அவர்கள் கூடவே வந்து அருட்டிரு ஐயா அவர்களை மேள தாளத்தோடு மலர்மாலை நிறைகுடத்துடன் வரவேற்கச் செய்தார்கள். பின் திருக்கோயிலுக்குள் நாற்காலியில் அமர்த்தித் தூக்கிச் சென்று வழிபடச் செய்த காட்சி தெய்வப் பொலிவு பெற்றதாக அமைந்தது.

1-9-69 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குத் தணிகைமணி ஐயா அவர்களை மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றோம். அங்கே பட்டம் பெறுவதற்குரிய தனி மேலுடை (Gown)யை அணியச் செய்து மேடையிலுள்ள அவர்கட்கென உள்ள நாற்காலியில் அமர்த்தப் பெற்றனர். பல்வேறு பட்டங்கள் பெறும் மாணவ மாணவிகளும் பார்வையாளர்களும் எதிரிலுள்ள மேடை இருக்கை வரிசைகளில் அமர்ந்திருந்தனர். மேடையில் துணைவேந்தர், தமிழக ஆளுநர் (வேந்தர்), மத்திய அரசு மாண்புமிகு கல்வி அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் தணிகைமணி ஐயா அவர்கட்கு வலப்பக்கம் வரிசையாக அமர்ந்தனர்.

தணிகைமணி ஐயா அவர்களின் தகுதிபற்றிய அறிமுகவுரை (Citation) யினைத் துணைவேந்தரவர்கள் படித்தார்கள். மாட்சிமைமிகு ஆளுநர் அவர்கள், டாக்டர் பட்டச் (D. litt ) சான்றிதழ் அடங்கிய வெள்ளிச் சிமிழைத் தணிகைமணி ஐயா அவர்களிடம் அளித்தனர். பின்னர் முறையே பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டுப் பாடலுடன் 11 மணிக்கு விழா இனிது முடிந்தது.

அன்று மாலை 6 மணிக்குத் திருவருள் சிந்தையரான ஐயா அவர்களை மீனாட்சிசுந்தரர் திருக்கோயில் வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றோம். செயலதிகாரி திரு எஃச். திருமலையப்பன் அவர்கள் முன்போல் தவத்திரு ஐயா அவர்களை மேளதாளத்தொடு மலர்மாலை நிறைகுடத்துடன் வரவேற்கச் செய்து நாற்காலியில் அமரச் செய்து திருக்கோயிலுக்குள் தூக்கிவரச் செய்தார்கள். கருவறையின் முன்னுள்ள அறைக்கு அழைத்துச் சென்று அங்கயற்கண்ணியையும், பின்னர்ச் சொக்கரையும் வணங்கி வழிபட ஏற்பாடு செய்தது ஐயா அவர்களின் அருளுள்ளத்தை நெக்குருகச் செய்தது.

திருக்கோயில் வழிபாடு முடிந்ததும் வடக்காடி வீதியிலுள்ள திருவள்ளுவர் கழகத்துக்கு அருள்மிகு ஐயா அவர்களை அழைத்துச் சென்றனர். சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் பாராட்டு விழாத் தொடங்கியது. மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் அருளையா அவர்கட்குப் பொன்னாடை போர்த்தி மிகப் பெரிய மலர்மாலை அணிவித்துப் பாராட்டினார்கள். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது :

"நம்முடைய பல்கலைக் கழகங்கள் பெருந்தொகை நன்கொடை அளிப்பவர்கட்கும் அரசியல் தலைவர்கட்குமே பட்டம் வழங்கி வருகின்றன. ஆனால், அருளையா அவர்கட்குக் கொடுத்தது அவர்கள் செய்த தொண்டினைக் கருதியதாகும். அவர்கட்குப் பட்டம் வழங்கிப் பல்கலைக் கழகம் தனக்குப் பெருமை தேடிக்கொண்டது."

தலைமையுரைக்குப் பின் திருவள்ளுவர் கழகச் செயலர் புலவர் திரு. ச. சாம்பசிவனாரும், தமிழாசிரியர் கழகச் செயலர் புலவர் திரு. இரா. இளங்குமரனாரும் பாராட்டிதழ்கள் படித்து வழங்கினர். திருப்புகழ்ச் சபை

யாரும், பன்னிரு திருமுறை மன்றத்தாரும் பாராட்டுரை பகர்ந்தனர். கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அருள்மிகு ஐயா அவர்களின் பொருட்டு நன்றியுரை ஆற்றினர். இறைவணக்கத்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

2-9-69 செவ்வாய் இரவு தணிகைமணி ஐயா அவர்கள் மதுரையிலிருந்து திருவனந்தபுரம் விரைவு வண்டியில் சென்னைக்குப் புறப்பட்டனர்.

இவ்வாறு டாக்டர் பட்டம் பெறச் செய்த திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களை வாழ்த்தித் தணிகைமணியவர்கள் பின்வருங் கடிதத்தை எழுதியனுப்பினர்.

எனது பேரன்புக்கு மிக உகந்த பிள்ளை அவர்களுக்கு,

தாங்கள் என் பொருட்டு எடுத்துக் கொண்ட முயற்சியையும் அதன் முடிவையும் நினைக்கும்போது தாங்கள் 'எண்ணிய எண்ணியாங்கு முடிக்கவல்ல திண்ணியர்' என்பது நன்கு விளங்குகின்றது. எனது சிறிய பணியைப் பெரிதாக மதித்து நினைத்தற்கரிய ஒரு மதிப்பை எனக்கு அளித்துள்ளீர்கள். தங்கள் உதவியில்லாவிட்டால் தேவார ஒளிநெறி நூல்களும், கட்டுரை நூல்களும் வெளிவந்திரா என்பது திண்ணம். தாங்கள் இம்முயற்சியை இறைவன் திருவருளை நம்பியே எடுத்துக் கொண்டபடியால் தாங்கள் நினைத்தபடியே எல்லாம் நல்ல வண்ணம் நிறைவேறிற்று என்பது கண்கூடாகப் புலப்படுகின்றது.

பெரிய நன்முயற்சிகளை நன்கு முடிக்க வல்ல தங்கள் பேராற்றலை மிகவும் வியந்து பாராட்டுகின்றேன்.

தாங்களும் தங்கள் குடும்பத்தவரும் நோயின்றிப் பல்லாண்டு காலம் வாழுமாறும் தங்கள் தமிழ்த் தொண்டு மேலும் மேலும் சிறக்குமாறும் எங்கள் தணிகையம்பெருமான் திருவருளை நாடிப் பணிகின்றேன்.

## திருவாசக ஒளிநெறி முகவுரையில் கழக ஆட்சியாளரைத் தணிகைமணி ஐயா அவர்கள் பாராட்டி வரைந்த பாடல்

தமிழே என்றன் மூச்சாகும், தமிழே என்றன் பேச்சாகும்
தமிழன்பர்களே எனக்குரிய தமராம் என்றே மகிழ்வேன், நல்
தமிழ் நூலெல்லாம் மொழிபெயர்த்துத் தரணியெங்கும்
[தமிழ்மணமே
கமழச் செய்யும் பணியதுவே கடமையாகப் பூண்டுள்ளேன்;
என்ற விரதந் தனைக்கொண்ட ஏந்தல் சுப்பையா நம்பி
நன்றே இந்த நானிலத்தில் நோயே யின்றிப் பல்லாண்டு
வென்றியுடனே வாழ்க என வேண்டித் தணிகை முதலான
குன்றுதோறும் விளையாடும் குமரன் திருத்தாள் பணிகுவனே.

### இவர் எழுதிய நூல்கள்

தணிகைமணியவர்கள் பின்வரும் நூல்களை எழுதி யுள்ளார்கள்.

க. தமிழ் உரைநடை இலக்கிய வரலாறு
உ. வேல் பாட்டு, மயில் பாட்டு, சேவல் பாட்டு
ங. தணிகை நாயகர் மாலை
ச. வள்ளி கலியாணக்கும்மி
ரு. வள்ளி கிழவர் வாக்குவாதம்
சு. முருகரும் தமிழும்
எ. 64 திருவிளையாடல் துதிப்பா
அ. தணிகைக் கலிவெண்பா
கூ. தணிகேசன் திருவெம்பாவை
க0. தணிகேசன் திருப்பள்ளி எழுச்சி
கக. தணிகை முப்பூ
கஉ. தணிகை தசாங்கம்
கங. தணிகைப் பிள்ளைத்தமிழ்
கச. ஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ்

கரு. சச்சிதாநந்தர் கலிவெண்பா
கசு. வ. ச. சுப்பிரமணிய பிள்ளை வரலாறு
கஎ. திருப்புகழ் உரை
கஅ. கந்தர் அலங்கார உரை
ககூ. கந்தர் அநுபூதி உரை
உ0. திருவகுப்பு உரை
உக. சம்பந்தர் ஒளிநெறி
உஉ. அப்பர் ஒளிநெறி
உங. சுந்தரர் ஒளிநெறி
உச. திருவாசக ஒளிநெறி
உரு. திருக்கோவையார் ஒளிநெறி
உசு. தேவார ஒளிநெறிக் கட்டுரை
உஎ. திருவாசக ஒளிநெறிக் கட்டுரை
உஅ. திருக்கோவையார் ஒளிநெறிக் கட்டுரை
உகூ. அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும்
ங0. திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒளிநெறி
ஙக. ௸ ஒளிநெறிக் கட்டுரைகள்

இறுதி

இவ்வாறு சீரிய தமிழ்த் தொண்டு செய்திருந்த இவர் தம்முடைய எண்பத்தொன்பதாம் அகவையில் 25-8-71 பிற்பகல் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவனுடைய திருவடி நீழலையடைந்தார்.

## உஉ. பெருமழைப்புலவர் சோமசுந்தரனர்

### தோற்றம்

சோழ மன்னர்களால் ஆட்சி புரியப்பட்ட சோழ வளநாட்டில் தஞ்சகாசுரன் என்னும் அசுரன் இருந்த படியால் தஞ்சாவூர் என்று பெயர் பெற்ற தஞ்சை வளநாட்டின் மாவட்டத்தில் திருத்தருப்பூண்டிக் கூற்றத்தில் மேலைப் பெருமழை என்னுஞ் சிற்றூர் ஒன்று உள்ளது. கீழ்ப் பக்கத்தில் உள்ள ஊர் கீழைப் பெருமழை என்று வழங்கப்பட்ட படியால் மேற்குப் பக்கத்தில் உள்ள ஊர் மேலைப் பெருமழை என்று வழங்கப் பெறுவதாயிற்று. இம்மேலைப் பெருமழையில் முக்குலத்தார்களில் ஒரு பிரிவினர் என்று கூறப்பெறும் அகம்படியர் என்னும் அகமுடையார் குலத்தில் 1909ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் சோம சுந்தரனர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வேலுத்தேவர். தந்தையார் உழவுத் தொழிலை மேற் கொண்டிருந்தார். இவர் திண்ணைப் பள்ளியிற் கற்ற அறிவு மட்டுமே உள்ளவர். இவர் மட்டுமேயன்றி இக்குலத்தினரிற் பெரும்பான்மையோர் இத்தகைய திண்ணைப்பள்ளிக் கல்வி ஒன்று மட்டுமே அந்நாளில் உடையவர்களாக விளங்கினர்.

### கல்வி

சோமசுந்தரனர் முதற்கண் திண்ணைப்பள்ளியிற் கல்வி கற்கத் தொடங்கினர். அக்காலத்துத் திண்ணைப் பள்ளிக் கூடங்களிலே, அரிச்சுவடி, ஆத்திசூடி, வெற்றி வேற்கை, நிகண்டு, நைடதம், கிருட்டிணன் தூது, அருணசலப் புராணம் முதலிய நூல்கள் கற்பிக்கப்

பட்டன. சோமசுந்தரனுர் ஏறக்குறைய ஐந்தாண்டுகள் வரை மேற்படி நூல்களிற் சிலவற்றைப் பயின்ருர். இவருடைய தந்தையார் இவருக்கு மிகுதியாகக் கல்விப் பயிற்சியை அளிப்பதற்கு விரும்பவும் இல்லை முயலவும் இல்லை. இவர் மேலும் மேலுங் கல்வி கற்பதைத் தடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். "சான்ருேனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் மொழியை அவர் உணர்ந்திருந்தால் அன்ருே தம் மகனை அறிவாளியாகச் செய்வார். தம் மகனுக்கு அகவை ஏழு நிரம்புவதற்கு முன்னரே உழுதொழிலில் ஈடுபடுத்துதற்கு முயன்ருர். சோமசுந்தரனுருக்கோ முன் பிறவிக் கல்விப் பயனுல், கல்வி கற்பதில் ஊக்கம் மிகுதியாகச் சென்றது. தந்தையாருடைய உழுதொழிற் பயிற்சிக் கட்டளைக்கு அகப்படாமல் மறைவான இடங் கட்குச் சென்று தாமே நூல்களைப் படித்து வரலானுர். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்பது பொய்யாமொழியன்ருே?

இவருடைய திண்ணைப்பள்ளியின் ஆசிரியர் தமிழ் இலக்கியங்களிலே பெரிதும் ஆர்வம் உடையவர். வில்லிபாரதச் செய்யுட்கள் பலவற்றை அவர் மனப் பாடஞ் செய்திருந்தார். அப்பாடல்களை ஊக்கத்தோடு பிறருக்குக் கூறிப் பொருள் விளக்கமுஞ் செய்வார். அவர் செய்த பாரதச் சொற்பொழிவு இவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இவரும் அத் துறையிற் பயிலலானுர். எவ்வாருே முயன்று நூல்கள் பெற்றுப் பயின்ருர். இவர் நூல்களைக் கற்பதைத் தந்தையார் முதலியோர் வெறுத்தனர். அவர்களுக்குத் தெரியாமல் இவர் கோயில் மடம் முதலிய இடங்கட்குச் சென்று தனித்திருந்து படித்தார். வீட்டினருக்குத் தெரியாமல் பிறரிடம் பணம் கடன்வாங்கிப் பாரதம் இராமாயணம் முதலிய பெருநூல்களை விலைக்கு வாங்கினுர். இவருடைய செய்தியை உணர்ந்த குடும்பத்

தார் இவருக்கு 'உருப்படான்' என்று சிறப்புப் பெயர் வழங்கினர்கள்.

**தாய்மாமன்**

இவருடைய தாயார் இவருடைய பத்தாம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். தந்தையார் மறுமணஞ் செய்து கொண்டார். மாற்ருந்தாய்க் கொடுமைக் கஞ்சிய இவர் தம்முடைய தாய்மாமன் இல்லத்தில் தங்கியிருந்தார். அவர் இவருடைய கல்வியார்வத்தைப் பாராட்டினராயினும் மேலுங் கல்விப் பயிற்சிக்கு உதவி செய்ய இயலாதவராக இருந்தார்.

**சர்க்கரைப் புலவர்**

இவருடைய ஊருக்குப் பக்கத்தில் நான்கு கல் தொலைவில் உள்ள ஆலங்காடு என்னும் ஊரில் அந்நாளில் சர்க்கரைப் புலவர் என்னும் அறிஞர் ஒருவர் இருந்தார். இவர் அவரைக் கண்டு உரையாட எண்ணினர். அவர்மீது ஐந்து பாடல்களை எழுதிக் கொண்டு சென்ருர். அந்நாளிலேயே செய்யுள்பாடும் ஆற்றல் ஓரளவு அமைந்திருந்தபடியால் இவ்வாறு பாடல் இயற்றிக் கொண்டு போவது இயல்வதாயிற்று. இவருடைய பாடல்களைப் பார்த்த சர்க்கரைப் புலவர் இவருடைய கல்வியார்வத்தைப் பெரிதும் பாராட்டினர். மேலுங் கல்வி கற்ருல் சிறப்படைவார் என்று எண்ணினர். அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று கல்வி கற்குமாறு வற்புறுத்திக் கூறினர். புகுமுக வகுப்பில் தமிழாசிரியராக இருந்த பூவராகம் பிள்ளை என்பவருக்கு அறிமுகக் கடிதங்கொடுத்தார்.

**பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றல்**

அண்ணமலைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து கல்வி கற்கத் தொடங்கினர். அப்பொழுது அக்கழகத்தார்

உதவித் தொகையாகப் பெரும்பான்மையான மாணவர்கட்குத் திங்கள் ஒன்றுக்குப் பன்னிரண்டு வெண்பொற்காசுகள் அளித்தனர். அவ்வுதவித் தொகை இவருக்குங் கிடைத்தது. அதைத் தவிர வேறு உதவியொன்றுங் கிட்டவில்லை. குடும்பக் காரியங்களைக் கவனிக்காமலும் குடும்பத்தார்களுடைய எண்ணத்திற்கு மாறுபாடாகவுங் கல்வி கற்க வந்தபடியாலுங் குடும்பத் தொடர்பும் அறுந்துவிட்டது. உண்டிக்கும் உடைக்கும் பெரிதுந் திண்டாடினர். மூன்றுகல் தொலைவில் வசித்திருந்த நண்பர் ஒருவருடைய இல்லத்திலே தங்கினர். அங்குச் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டுக் கல்வி கற்றார். ஐந்தாண்டுகளையும் போக்கினர். கந்தலாடை, கிழிந்த சட்டை, தொடு தோலற்ற வெறுங்கால் ஆகியவற்றோடு பல்கலைக்கழகப் பயிற்சியை முடித்தார். இவர் கல்வி கற்ற காலத்தில் சோழவந்தான் கந்தசாமியார், விபுலானந்தர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், பொன்னோதுவார், பூவராகன் பிள்ளை முதலிய பெரும் புலவர்கள் அங்கு ஆசிரியர்களாக விளங்கியிருந்தனர். ஆகவே அவர்களிடமெல்லாம் கல்வி கற்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. பல்கலைக்கழகம் புகுமுன்னரே இவர் கல்வியில் நிரம்பியிருந்தார். கால் ஆண்டு என்றும் அரையாண்டு என்றும் நிறையாண்டு என்றும் வருந் தேர்வுகளில் முதல்வராகத் தேறினர். இறுதி யாண்டில் முதல்வராகத் தேறியவர்கள் யாவரினும் இவரே முதல்வராக நின்றார். அக்காலத்தில் முதல்வராகத் தேறுபவர்கட்கும் எத்தகைய பரிசுங் கொடுப்பதில்லையாகையால் இவருக்கும் ஒன்றுங் கிடைக்கவில்லை. தமிழறியாத கவர்னர் எர்ஸ்கின் பிரபு கை குலுக்கி வழங்கிய தகுதிச் சீட்டை அஃதாவது புலமைச்சான்றை (டிப்ளமா) கிழித்துக் காற்றிலே பறக்குமாறு விட்டுவிட்டு ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். இவர் கல்வி கற்றது ஆசிரியத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்துவதற்கன்று. கல்வியைக் கற்க வேண்டுமென்று தோன்றிய விருப்பத்திற்காகக் கற்றார். ஆகையால் அத்தகுதிச்

சீட்டை இவர் ஒரு பொருளாக மதியாது கிழித்துக் காற்றிற் பறக்கவிட்டது வியப்பன்று.

**இல்வாழ்க்கை**

ஊரை யடைந்த இவர் உழுதூண் சுவையையே இனிதெனக் கொண்டார். அத்தொழிலை விருப்பத்துடன் மேற்கொண்டார். மாமன் மகளாகிய மீனம்பாள் என்னும் மெல்லியலை மணந்து இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாக நடத்தினர். இவருக்கிருந்த நிலங் குடும்பத்தைப் பேணுவதற்குப் போதியதாக இருந்தது.

**எழுத்தாளர்**

வயல் வேலை எல்லாக் காலங்களினும் இராது. சில காலஞ் சும்மா இருக்கும்படியாகவும் நேரும். அவ்வாறு சும்மா இருந்த காலங்களில் அகப்பட்ட வேலையைச் செய்வார். எத்தகைய தொழிலையும் இழிவென்று எண்ணமாட்டார். இவர் ஒரு நண்பரைப் பார்க்க அண்ணாமலை நகர் சென்றிருந்தார். அப்பொழுது தம்முடைய ஆசிரியராகிய பண்டிதமணி கதிரேசச் செட்டியாரையும் போய்ப் பார்த்துப் போகலாம் என்று எண்ணி அவரிடஞ் சென்றார். பண்டிதமணி இவரை யாது செய்து கொண்டிருக்கிறாய் என்று உசாவினர். தாம் எழுதிக் கொண்டிருந்த திருவாசக உரையைத் தாஞ் சொல்லி இவரைக் கொண்டு எழுதலாம் என்று முடிவு செய்தார். திங்கள் ஒன்றுக்கு ரூபா நாற்பது ஊதியந் தருவதாகவும் தாஞ்சொல்லுந் திருவாசக திருச்சதக உரையை எழுத வேண்டும் என்றுங் கூறினர். இவரும் அவ்வேலையை மேற் கொண்டு எழுத்தாளராகப் பணிபுரிந்தார். இப்பணி இவர் பின்னளில் உரையாசிரியராவதற்கும் ஓர் ஏதுவாக அமைந்தது. சில காலம் பண்டிதமணியோடு தங்கி அவ்வேலையைச் செய்தார். பிறகு ஊரையடைந்து குடும்ப வேலையில்

ஈடுபட்டார். சில ஆசிரிய நண்பர்கள் இவரிடம் சில சிறு நாடகங்கள் கட்டுரைகள் முதலியவைகளை எழுதி வாங்கிப் பயன்படுத்தினர். புலமைத் துறையில் மிகத் தேர்ந்திருந்த இவருடைய நாட்டம் அத்துறையிலேயே சென்றது.

## அடியேனுடைய தொடர்பு

அடியேன் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு நூல்கள் எழுதிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன். அடியேனுக்கும் பெருமழைப் புலவருக்கும் அந்நாளில் தொடர்பில்லை. ஆனல், ஒருவரை ஒருவர் பார்த்ததுண்டு; பேசிக் கொண்டதில்லை. இவர் தில்லையில் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது என் சிறிய தந்தையாராகிய சொக்கலிங்க சுவாமிகள் என்பவரிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்திருக் கிறேன். இருவரும் ஒருவரை ஒருவர் ஓரளவு உணர்ந் திருந்தோம். திருவாரூரில் தமிழ்த் திருவிழா நடை பெற்ற பொழுது இவர் அவ்விழாவுக்கு வந்திருந்தார். ஆனல், அழைப்பில்லை. அழைப்பில்லாமலே விழாவைக் காணவந்தவர்களில் ஒருவராக வந்திருந்தார். இவ ருடைய நண்பர்கள் இவரைச் சாப்பிட அழைத்தனர். "நான் அழைப்பில்லாமல் வந்துள்ள படியால் அழைக்கப் பட்டு வந்திருக்கும் உங்களோடு சாப்பாட்டுக்கு வருவது சரியன்று; ஒட்டலிற் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டார். அறிவுக்குத் தகுந்த தன்மான உணர்ச்சி இவரிடம் இருந்தது. எவரேனுந் தம்மை அலட்சியமாக எண்ணுகிருர்கள் என்று இவருடைய கருத்துக்குத் தோன்றினல் பிறகு அவர்களை இவர் ஒரு பொருளாகவே மதிக்க மாட்டார்.

மருதவனம் திரு. கு. குருசாமி என்பவர் ஒரு சிறந்த புலவருடைய திருமகனர் இவர் புலவராக

இல்லாவிடினும் புலவர் மகனுக்கிருக்க வேண்டிய பெருந்தன்மை இவரிடம் உண்டு. பெருமழைப் புலவரும் இக்குருசாமியாரும் நண்பர்களாக இருந்தனர். ஒருநாள் பெருமழைப் புலவர் குருசாமியார் இல்லத்துக்குச் சென்றபோது குருசாமியாரிடம் என்னைப்பற்றி உசாவி யறிந்தார். என்னை இராசாமிப் புலவரிடம் அழைத்துப் போய் அறிமுகஞ் செய்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேற்படி குருசாமியாரும் என்னை முன்னரே அறிந்திருந்தபடியால் ஒருநாள் பெருமழைப் புலவரை என்னிடம் அழைத்துக் கொண்டு என் இல்லத்துக்கு வந்தார். அது முதற் பெருமழைப் புலவருக்கும் எனக்குந் தொடர்புண்டாகியது. அதுவரை நான் எழுதியிருந்த ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களைக் காட்டினேன். "சிற்றூரில் இருந்து கொண்டு இவ்வளவு நூல்களை எழுதியிருக்கிறீர்களே! நல்ல தமிழ்த் தொண்டு செய்கிறீர்கள். எனக்கும் நூல்கள் எழுதும் வேலை கொடுங்கள்" என்றார். அப்பொழுது அடியேன் தோலாமொழித் தேவர் சூளாமணிக்கு உரையெழுதிக் கொண்டிருந்தேன். அதில் நன்கு ஆராய்ந்து எழுதப்பட வேண்டிய பாடல்களையெல்லாம் பாட்டுமட்டில் எழுதி உரையெழுதாமல் விட்டிருந்தேன். அதனைக் காட்டி இப்பாடல்கட்கு உரையெழுத முடியுமா? என்று கேட்டேன். முயன்று பார்ப்பதாகக்கூறி அதனை வாங்கிச் சென்றார். சில பாடல்களின் உரை நன்றாக அமைந்தும் சில பாடல்களின் உரை மேலும் ஆராய்ந்து எழுதப்பட வேண்டியனவாகவும் இருந்தன. அதன் பொருட்டு ஆராய வேண்டிய நூல்களையுங் கொடுத்தனுப்பினேன். சில நாட்களில் உரையைச் செம்மையாக எழுதிக் கொண்டு வந்தார். அவ்வுரை நன்றாக அமைந்திருந்தது. எஞ்சிய உரை முழுவதையும் எழுதி முடிக்கச் சொன்னேன். இவரும் எழுதி முடித்தார். இவர், 'செங்கோல்' என்னும் பெயரோடு வரலாற்று நாடகம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அதனை என்னிடங் காட்டி இதனை வெளியிடச் செய்ய முடியுமா? என்று

கேட்டார். நாடகம் முழுவதையும் படித்துப் பார்த்தேன். கிராமியச் சொற்கள் மிகுதியாக இருந்தன. அவைகளை யெல்லாம் நீக்கிக் கொச்சைச் சொற்களை ஒழித்துக் கொண்டு வந்தால் முயற்சி செய்யலாம் என்று கூறினேன். இவரும் அப்படியே செம்மை செய்து கொண்டுவந்து கொடுத்தார். அதனைக் கழகத் தலைவர் திரு. சுப்பையா பிள்ளையவர்கட்கு அனுப்பி வைத்தேன். பிறகு சென்னை சென்ற பொழுது பெருமழைப் புலவரையும் உடனழைத்துக் கொண்டுபோய்க் கழகத் தலைவருக்கு அறிமுகஞ் செய்து வைத்தேன். அது முதல் கழகத் தலைவருக்கும் பெருமழைப் புலவருக்குந் தொடர்புண்டாயிற்று. செங்கோல் நாடகத்தை வெளி யிடுவதாக ஏற்றுக் கொண்டதோடு அதற்குரிய தொகையையுங் கொடுத்தார். அந்நாடகமே இப்பொழுது பி.ஏ., தேர்வுக்குப் பாடமாக அமைந்துள்ளது. அது முதல் இறுதி வரை கழகத்திற்குச் சங்கநூல் உரைகள் எழுதிக் கொடுக்கலானுர்.

## சங்க நூல்கட்கு விளக்கவுரை

சங்க நூல்கள் பலவும் முன்னரே உரை வரையப் பெற்றிருந்தனவாயினும் அவ்வுரைகள் போதிய விளக்கத் தையுந் தெளிவையும் பெற்றதாக இல்லை. ஆகவே இவரைக் கொண்டு எல்லா நூல்கட்கும் விளக்கமான உரைகளை எழுதச் செய்து கழகத்தார்கள் வெளியிடச் செய்தனர். அங்ஙனம் இவரால் விளக்கவுரை எழுதப்பட்ட நூல்கள்: மணிமேகலை, சிலப்பதிகாரம், அகநானூறு, பெருங்கதை, உதயணகுமார காவியம், வளையாபதி, குண்டலகேசி, ஐங்குறு நூறு, புறப்பொருள் வெண்பா மாலை, கல்லாடம், பட்டினத்தார் பாடல், பரிபாடல், குறுந்தொகை, நற்றிணை, ஐந்திணையெழுபது, ஐந்திணை ஐம்பது, சீவகசிந்தாமணி, கலித்தொகை, திருக்கோவை யார் உரை முதலிய பலவாம். செங்கோல் நாடகம் தவிர, மானனீகை என்னும் நாடகத்தையும் இவர்

எழுதியுள்ளார். உரைநடை எழுதுவதினும் வல்லவராகிய இவர் பெருங்கதை உரைநடை, பண்டிதமணி வரலாறு முதலிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். தம் விளக்கவுரையில் நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலிய பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களையும் ஆங்காங்கு மறுத்து விளக்கந் தந்துள்ளார்.

## சிறப்பியல்பு

இவருடைய உரை விளக்கங்களைப் பார்க்கும் புலவர்கள் பெரு வியப்படைகின்றனர். பழைய பேராசிரியர்களையும் மறுத்துரையெழுதத்தக்க மாண்பு வாய்ந்த இவர் யாரிடங் கல்வி கற்றவர்? என்று என்னிடங் கேட்டிருக்கின்றனர். 'இவ்வாறு உரையெழுதக்கூடிய புலவன் இக்காலத்தினும் இருக்கின்ருனு' என்று சிலர் வியந்தும் இருக்கின்றனர். இளமை முதற்கொண்டே புலமைத் துறையில் பயின்ற இவர் உரையெழுதுவது ஒன்றில் மட்டுஞ் சிறந்தவராக இருக்கவில்லை. செய்யுள் பாடுதல், உரை நடையெழுதுதல், நாடகம் எழுதுதல் முதலிய எல்லாத் துறைகளினுமே வல்லவராக விளங்கினர். வயிற்றுப் பிழைப்பின் பொருட்டே கல்வியைக் கற்று உடனே ஆசிரியத் தொழிலிற் புக எண்ணுஞ் சிலர் இக்காலத்தில் நூல்களைக் கூட வாங்கிப் படிக்காமல், பொருள் தேடுவது ஒன்றிலேயே நாட்டமுள்ள குறுகிய மனப்பான்மை வாய்ந்த சிலர் வெளியிடும் வினவிடைப் புத்தகங்களை வாங்கிப் படித்துப் பரீட்சையெழுதிவிட்டுத் தமிழாசிரிய வேலை வேட்டையிற் புகுந்து விடுகின்றனர். இவர்களைப்போல் பெருமழைப் புலவரும் வயிற்றுப் பிழைப்பொன்றையே குறிக்கோளாகக் கொண்டு கல்வி கற்றிருப்பின் இவ்வளவு பேரறிவு பெற்று உரையெழுதிப் புகழடைந்திருக்க இயலுமோ? சங்க நூல்கள் பலவற்றிற்கும் விளக்கவுரைகள் வரவேண்டுமென்று எண்ணிய இறைவன்

இவரை ஆசிரியத் தொழிலிற் புகுத்தாது விட்டனன் போலும். பிற புலவர்களைப் போல் பெருமழைப் புலவரும் ஆசிரியத் தொழிலில் புகுந்திருப்பரேல் இவ்வளவு நூல்கள் விளக்கவுரைகளோடு வெளிவந்திரா என்பது திண்ணம். என் வாயிலாக இவர் இப்பணியிற் புகுந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. கழகத் தலைவர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களும் அடியேன் பெருமழைப் புலவரைக் கழகத்திற்கு ஆற்றுப் படுத்தியது குறித்து நன்றியுடையவராக இருக்கின்றனர்.

பாராட்டு

இவரைத் தமிழ் நாட்டினரும் தமிழக அரசினரும் பாராட்டிப் போற்றியிருக்க வேண்டும். ஆனல், அவ்வாறு பாராட்டிப் போற்றத் தவறி விட்டனர். பெரும் புகழ் பெற்றவர் மாண்ட பிறகுதான் பாராட்டப் பெறுவது உலக வழக்கம். அம்முறையில் இனியேனும் பாராட்டப் பெறலாம். ஆனல், கழகத்தினர் நன்றி யறிவுடையவர் களாக இருந்து பன்முறை பாராட்டி விழாவெடுத் துள்ளனர். சூளாமணி உரை வெளியீட்டின்போது அடியேனுக்கும் பெருமழைப் புலவருக்கும் பொன்னடை போர்த்திப் பாராட்டுரைகள் வழங்கினர். பிறகு கழகத்தின் ஆயிரத்தெட்டாவது நூல் வெளியீட்டு விழாவின்போது கேடயம் வழங்கிப் பாராட்டப் பெற்ற எழுவரில் இவரும் ஒருவராகப் பாராட்டப் பெற்றார். பின்னர்க் கழகத்தின் பொன்விழாவின்போதும் சங்க நூல் உரை முடிவு விழாவின்போதுமாக வேறுபல சமயங்களினும் பாராட்டிப் போற்றப் பெற்ருர். இப் பாராட்டுகள் எல்லாவற்றிற்கும் இவர் சிறந்த தகுதி வாய்ந்தவராவர்.

**இறுதி**

உடலால் உழைத்து வேலை செய்பவர்கட்கு உடல் உரம்பெற்றுத் திடமாக இருக்கும். ஆனல், மூளை

வேலை செய்பவர்கட்கோ உடல் அவ்வளவாக உரம் பெற்றிருப்பதில்லை. அடிக்கடி நோய்கள் பல வந்து உடலை வருத்திக்கொண்டே யிருக்கும். இஃது உலகத்தில் வழக்கமாகவே யிருக்கிறது. பெருமழைப் புலவருக்குக் கடந்த ஏழெட்டாண்டுகளாகவே உடல்நலஞ் சரியாக இல்லை. அடிக்கடி நோய்வாய்ப் பட்டுக் கொண்டே யிருந்தார். மூச்சுத் திணறல் என்னும் நெஞ்சடைப்பு நோயும் இருந்தது. நோய்களின் பொருட்டு இவர் கண்டகண்ட மருந்துகளையெல்லாம் நாடோறும் பயன் படுத்திக் கொண்டே யிருந்தார். அம்மருந்துகள் மேலும் பற்பல புதிய நோய்களை உண்டாக்கிக் கொண் டிருந்தன. சில ஆண்டுகளாகத் தம் கையினுல் எழுத முடியாமல் எழுத்தர்கட்குக் கூலி கொடுத்து எழுதச் செய்து கொண்டிருந்தார்.

இறுதியில் பக்கவாத நோய் இவரைத் தம் பக்கமாகப் பற்றிக் கொண்டது. 21-12-1971இல் புதுவை சிப்மர் மருத்துவமனையிற் சேர்க்கப் பெற்ருர். செய்தியை உணர்ந்த கழகத் தலைவர் திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்கள் தம் மருகரோடு மேற்படி மருத்துவமனைக்குச் சென்று ஆவன புரிந்து உள்ளங் கலங்கி மீண்டார். மருத்துவமனையிற் சேர்க்கப்பெற்ற புலவர் தம்முணர்வையு மிழந்து சிலநாள் இருந்தார். பின் 3-1-1972இல் இறைவனுடைய திருவடி நீழலை யடைந்துவிட்டார். இச்செய்தியை உணர்ந்த கழகத் தலைவர் பெரிதும் உள்ளம் வருந்திஞர். இத்தகைய புலவரை இனிமேல் காண்டலும் அரிதே என்று ஏங்கிஞர். புலவருடைய மறைவைக் குறித்து அட்டைகள் அச்சிட்டு அறிஞர் கட்கெல்லாம் அனுப்பிஞர். புலவருடைய ஊருக்குச் சென்று வருத்தந் தெரிவிக்க எண்ணிஞராயினும் உடனடியாகச் செல்லக் கழகத் தலைவருடைய உடல் நிலையும் இடங்கொடுக்கவில்லை.

புலவருடைய மறைவு அவரோடு நெருங்கிப் பழகிய எனக்கும் மிகுந்த கலக்கத்தை யளித்துக்கொண்டே

யிருக்கிறது. என்மகன் திரு. மயிலேறும் பெருமாளுடைய திருமணத்தை இவருடைய தலைமையில் நடத்த எண்ணி யிருந்தேன். அவரும் கட்டாயம் வந்து சிறப்பாக நடத்துவதாகக் கூறிக் கொண்டிருந்தார். ஆனல், இறைவனுடைய எண்ணம் இவ்வாறு வேருக மாறி விட்டது. பெருமழைப் புலவருடைய பெருமையை அவர் உரையெழுதிய நூல்கள் எஞ்ஞான்றும் நிலைபெற்று நின்று உலகிற் குணர்த்தி வரும் என்பது உறுதி.

---

## உக. *திரு. ஐயன் பெருமாள் கோனார்

**தோற்றம்**

*"கற்றவர்க்கு நற்றலைவர் கனியுளத்து*
*இன்மொழியர் கலைகள் ஓர்ந்த*
*நற்றவத்து மறைமுனிவர் நலம்பயிற்றும்*
*நல்லுளத்தர் நாட்டார் ஏத்தும்*
*வெற்றிமிகு தொண்டுளத்தர் விழைந்தெவர்க்கும்*
*தாமுதவும் விறலோன் என்றே*
*உற்றுரைக்க வாழ்ந்திருந்தாய் உயர்கோனார்*
*ஐயனின் நாமம் வாழி"*

என்று புலவர் ப. அரங்கசாமி என்பவரால் போற்றிப் பாராட்டப்பெறும் இவர் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்திருந்த திருவேங்கடக் கோனார் என்பவருடைய அருமைப் புதல்வராய் 5-1-1905இல் மதுரையம்பதியில் பிறந்தார். கோனாருடைய தாயாரின் பெயர் அகிலாண்டத்தம்மையார். இவ்வம்மையாருடைய பிறந்த ஊர் மதுரையம்பதியாகையால் ஐயன் பெருமாள் கோனார் பிறந்த ஊரும் மதுரையாயிற்று. ஐயம் பெருமாள் கோனார் இளமையிலேயே தாயை இழந்தார். பெரிய தாயாருடைய ஆதரவில் திருச்சிராப்பள்ளியில் வளர்ந்தார்.

**கல்வி**

கோனாருடைய தந்தையார் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தார். தந்தையாருடைய குடும்பத்தில்

---

* ஆதாரம்: நினைவு வெளியீடு.

யாரும் படித்ததில்லை. ஆகவே கோனரும் இளமையில் அவ்வளவாகக் கல்வியிற் கருத்துச் செலுத்தவில்லை. வீட்டில் பால், தயிர், நெய் வாணிகம் நடந்து கொண்டிருந்தபடியால் பொருள்முட்டுப்பாடில்லாதிருந்தது. அந்தணச் சிறுவர்கள் பலர் இவருடைய வீட்டிற்குப் பால் தயிர் நெய் வாங்குவதற்கு அடிக்கடி வருவார்கள். அவர்கள் வரும் போதெல்லாம் கையில் புத்தகத்தோடு வந்து காத்திருக்குஞ் சிறிது நேரத்தையும் வீண்போக்காது படித்துக் கொண்டிருப்பது வழக்கம். கோனருடைய பெரிய தாயார் அப்பையன்களை இவருக்குச் சுட்டிக் காட்டி, "நீயும் இவர்களைப்போல் நன்ருகப் படிக்க வேண்டும்" என்று அறிவுரை கூறிக் கொண்டிருப்பார். அவ்வறிவுரையே இவரைப் பெரிய அறிவாளியாக்கியது.

### தொடக்கக்கல்வி

இளம் பருவத்தில் ஆரியன் உயர்தொடக்கப் பள்ளியிற் சேர்ந்து படிக்கத் தொடங்கினர். மூன்ரும் படிவம் படிக்கும்போது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்திற்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அப்பொழுது ஞானியார் அடிகளார் இவருக்குக் கந்தர்கலி வெண்பா என்னும் நூலை வாழ்த்துரையுடன் வழங்கியருளினர்கள். கல்வி கற்பதில் ஊக்கமுடையவர்கள் அந்நூலை நாடோறும் படித்தால் கல்வியறிவு சிறந்தோங்குமென்பது பலருடைய கொள்கை. இவர் அந்நூலை நாடோறும் போற்றிப் படித்ததோடு இறுதிவரை அந்நூலைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருந்தார். இவருக்குத் தமிழ்ப்பற்று நாளும் வளர்ந்தோங்கியது. பிறகு தேசிய உயர்நிலைப்பள்ளியிற் சேர்ந்து படித்தார். அப்பொழுது இவருக்குத் தமிழாசிரியர்களாக அமைந்து தமிழறிவு புகட்டியவர்கள் தி. பொ. பழநியப்ப பிள்ளையவர்களும் சீதாராமையர் என்பவரும் ஆவர்.

**உரைநூலாசிரியராகக் காரணம்**

அந்நாளில் சடகோபராமாநுசாச்சாரியார், கோபால கிருட்டிணமாச்சாரியார் என்போர் தமிழ் நூல்கட்கு விளக்கமான உரைகள் எழுதிப் புகழ்பெற்று விளங்குனர்கள். இவர்களுடைய உரைகள் எல்லாருக்கும் எளிதில் விளங்கும் வண்ணஞ் சிறந்த முறையில் திகழ்ந்தது. அவர்கள் கல்லூரி மாணவர்களின் பாடப் புத்தகங்களுக்கும் உரைகளெழுதி வெளியிட்டு கொண்டிருந்தார்கள். அவ்வுரை நூல்களைப் பயின்றமையே இவர் பிற்காலத்தில் உரையாசிரியராதற்குக் காரணமாக அமைந்தது.

**தமிழாசிரியர்**

பள்ளி இறுதித்தேர்வில் தமிழ்ப்பாடத்தில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றுர். மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய மெட்ரிக்குலேஷன் தமிழ்த் தேர்விலும் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிருந்தார். இவைகளைக் கண்ணுற்ற திருச்சி புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளியினர் வேறு எவ்வகையான தேர்தலுமில்லாமல் 1925ஆம் ஆண்டில் தம் பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்த்துக் கொண்டார்கள். இவர் அவ் வேலையைப் பெருமகிழ்ச்சியோடு ஏற்று நன்முறையில் செய்தார். தமிழாசிரியராகவே இவருக்குத் தமிழ்க் கல்வியில் மிகுந்த ஊக்கம் உண்டாயிற்று. தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைத் தாமே கற்றும் ஐயப்பட்டவைகளை அறிந்தார்பாற் கேட்டறிந்தும் நன்கு கற்றுர். 1926ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கப் பிரவேச பண்டிதத் தேர்வில் எழுதி வெற்றி பெற்றுர். அடிக்கடி பாட நூல்களுக்கு உரைநூல்கள் எழுதி வெளியிடும் பணியை மேற்கொண்டிருந்தார். 1933ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் எழுதி வெற்றி பெற்றுர்.

### தமிழ்ப் பேராசிரியர்

1942ஆம் ஆண்டில் புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மு. நடேச முதலியார் காலமான பிறகு இவருக்கு அப்பதவி அளிக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டில் தமக்கு அகவை 60 நிரம்பும் வரையிலும் அப் பணியை நன்முறையில் மேற்கொண்டிருந்து பலருடைய பாராட்டுக்கும் உரியவராக விளங்கினர்.

### பல் வெளியீடுகள்

கல்லூரிப் பேராசிரியரான பிறகு கல்லூரித் தமிழ்ப் பாட நூல்களுக்கும் உரையெழுதத் தொடங்கினர். இவருடைய சிறப்பினையும் உரைநூல்களின் புகழையும் உணர்ந்த உயர்திரு செ. மெ. பழநியப்ப செட்டியாரவர்கள் இவருடைய உரைநூல்களில் பள்ளியிறுதி வகுப்பு, கல்லூரி இடைநிலை வகுப்பு ஆகியவற்றின் தமிழ்ப்பாட நூல்களுக்கான உரைநூல்களைத் தமது வெளியீடுகளாக வெளியிட விரும்பியேற்றுக்கொண்டார். பின்னர் இவர் எழுதிப் பிறர் வெளியிட்டுவந்த தமிழ் உரை நூல்களையும் பழநியப்பா சகோதரர்களே வெளியிட லானர்கள். அதன்பிறகு பி. யூ. சி. உரைநூல்களும் வெளி வரலாயின. மற்றும் பல உரைநூல்களையும் வெளியிட்டார்கள். "கோனர் தமிழ்க் கையகராதி" என்னும் அகராதியொன்றும் வெளியாகியது. பி.ஏ. வகுப்புத் தமிழ் உரைநூலை இவர் மைத்துனர் மதுரை எம் சீனிவாசக் கோனரின் வாசன் பதிப்பகத்தின்மூலம் வெளியிட்டு வந்தார். மேலும் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பாட நூல்களின் உரைகளும் வெளியிடப் படுகின்றன. இவர் தமக்கு உதவியாக வேறு சிலரையுஞ் சேர்த்துக் கொண்டு அவர்களுக்குந் தக்கவாறு உதவி புரிந்து வந்தார்.

### சிறந்த சொற்பொழிவாளர்

சொற்பொழிவுகள் செய்வதிலும் இவர் சிறந்து விளங்கினர். "சாந்தமல்கும் தடம்பொதியச் சைலத்

திருக்கும் தமிழ்க் கோதாய்'' என்னும் பாட்டை இவர் இசையுடன் பாடத் தொடங்கிய பொழுதே அவையினர் தம்மையும் மறந்து மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்கி விடுவர். பாடங்கள் கற்பிக்கும் பொழுதும் விரிவான விளக்க வுரைகள் கூறி மாணவர்கள் அழுத்தந்திருத்தமாக அறிந்து கொள்ளுமாறு இனிய முறையிற் போதிப்பார்.

### பட்டமும் பாராட்டுக்களும்

இவர் 1965ஆம் ஆண்டில் மணிவிழாக் கொண்டார். இவருடைய தமிழ்ப்பற்றையும் தமிழ்த்தொண்டையும் 'ஆனந்த விகடன் பாராட்டியது. ''ஆசிரிய ரத்தினங்கள்'' என்ற தலைப்பில் பாராட்டுரை வழங்கிப் படம் வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. இவருடைய இறையன்பினையும் அதனை வளர்க்குத் தொண்டினையும் போற்றும் முறையில் உறையூர் வாகீச பக்தசன சபையார் மதுரைத் திருஞான சம்பந்த மடத்தின் தலைவர் அவர்கள் தலைமையில் இவருக்குப் பொன்னுடை போர்த்திச், ''செம்பொருட் காட்சியர்'' என்னும் பட்டத்தைக் கொடுக்கச் செய்தனர். மேலும் இவருடைய சமயத் தொண்டினையறிந்து பாராட்ட விரும்பிய காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கித், ''திருப்பாவை யாராய்ச்சி மணி'' யென்று பட்டமும் வழங்கினர்.

### பண்பு

இவருடைய வரலாற்றுக் குறிப்புக்களையெழுதிய புலவர். த. கி. குப்புச்சாமி யாழ்வார் அவர்கள் இவருடைய பண்பு நலத்தைச் சுட்டிப் பின்வருமாறு எழுதுகிறார்.

''ஊருணி நீர் அவ்வூரினர் பலருக்கும் பயன்படுவது போல இவர்தம்பால் நிறைந்த கல்விப் பொருளைத் தம்மைச் சார்ந்தோர்க்கெல்லாம் வழங்கி வந்தார்.

அறிஞர்களைப் போற்றி ஆதரித்தவர். கல்விப் பொருளையே அன்றித் தமிழ்தந்த வளமாகிய தம் செல்வப் பொருளையும் தக்கபல வழிகளில் வழங்கி மகிழ்ந்தவர். 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்னும் தமிழ் மறைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர். பணிவுடைமையையும் இன்சொல்லையும் அணியாகக் கொண்டவர். அமைந்த நிறைந்த தோற்றமும் பக்தியும் பண்பும் மிகுந்த பார்வையுமுடையவர். எழில்மிகுந்த எடுப்பான தோற்ற முடையவர். அகன்ற நெற்றியும் அதனை அலங்கரிக்கும் அழகிய திருமண்ணும் அணியப்பெற்றவர். வைணவத் தோற்றத்தினர். தூய வெள்ளாடையையே விரும்பி அணியும் இயல்பினர். அறுபத்து மூன்று ஆண்டுகள் நிரம்பப் பெற்றவர்.''

''இவ்வாறு தம் பணியினால் மாணவருலகம், ஆசிரிய ருலகம், சமயவுலகம், தமிழுலகம் பயனுறுமாறு போதகா சிரியராகவும், உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், சொற்பொழிவாளராகவும் விளங்கியவர் திரு. ஐயன் பெருமாள் கோனார் அவர்கள்.''

## இறுதி

பழநியப்பா சகோதரர்கள் திருவேங்கடமுடை யானுக்கு நேர்ந்து கொண்டிருந்த திருமுழுக்குச் சிறப்புப் பூசை முதலியவைகளைக் கண்டு மகிழ்தற்கு இவரையுந் தம்முடன் திருவேங்கடமலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு இறைவழிபாடு செய்துகொண்டு திரும்பினார். 29-12-68இல் திருச்செந்தூரில் நடந்த திருப்பாவை மாநாட்டிற் கலந்து சொற்பொழிவாற்றுதற்கு நேரே திருச்செந்தூர் சென்றார். மாநாட்டிற் கலந்து சொற் பொழிவாற்றினார். திருச்செந்திலாண்டவன் திருவடி களைப் போற்றிப் பரவினார். பின் திருச்சிக்குப் புறப் பட்டார். புகைவண்டியில் வந்து கொண்டிருக்கும் பொழுதே இவருடைய உடல்நலம் குன்றியது. திருச்சி

வரை செல்வது இயலாதென்றெண்ணிய இவர் மதுரையில் இறங்கித் தம் மைத்துனர் திரு. சீனிவாசக் கோனருடைய இல்லத்துக்குச் சென்றார். இவருடைய மைத்துனர் இவருடைய நிலைமையைப் பார்த்து உடனே மருத்துவமனையிற் சேர்த்துத் தக்க மருத்துவஞ் செய்ய ஏற்பாடு செய்தார். திருச்சியிலிருந்து மனைவி மக்களும் மதுரைக்கு விரைந்து வந்து சேர்ந்தனர். தாம் பிறந்த மதுரை மாநகரிலேயே 1-1-69இல் இவர் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

### குடும்பம்

இவர் ஒருவர்பின் ஒருவராக மூன்று மனைவிகளை மணந்தார். மக்கள் பதின்மர் நல்ல நிலையில் உள்ளனர்.

### இரங்கலுரைகள்

ஐயன் பெருமாள் கோனருடைய மறைவு வானொலி மூலமாகவும் நாளிதழ்கள் வாயிலாகவும் எங்கும் பரவியது. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் வ. சுப. மாணிக்கம், புலவர் நா. துரைசாமி, பேராசிரியர் அன்புகணபதி, அ. மு. பரமசிவானந்தம், பேராசிரியர், நா. பாலுசாமி, வி. மி. ஞானப்பிரகாசம், ம. ரா. போ. குருசாமி, சண்முக சுந்தரம், நாக சுந்தரம், தி. க. சண்முகம், வி. சௌ. கோதண்டபாணி, வெ. வித்யாசாகர், எஸ். இராமன், கீ. இராமலிங்கனார், இருதயசாமி ரெட்டியார், பேராசிரியர். க. பெருமாள், அழ. வள்ளியப்பா, பித்துக்குளி முருகதாஸ், மு. சு. கார்த்திகேசு, கே இராசேந்திரன், மு. இராம தாசன், ஆ. சண்முகவேல், பி. முருகேசன், த. நடேசன், எஸ். பெரியண்ணன், நா. இராமையாபிள்ளை, சுரேந்திரன், குருகுலம் அழகரடிகள் முதலிய பலர் குடும்பத்தினர்க்கு இரங்கலுரைகளனுப்பினர். பல அன்பர்கள் இரங்கற்பாக்கள் பாடினர். அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க:

**வித்துவான் வி. சுந்தரம்**

பெற்ற புதல்வர் அலறப் பெருப்புதல்வர்
சுற்றி யலறச் சுடுதீயால்—பற்றியே
பாவை விளக்கும் பவளவாய் வேருவதோ
சேவைப் பயனிதுவோ செப்பு.

**வித்துவான் பால. கண்ணன்**

அந்தோ மறைந்தனை அய்யம் பெருமாளே
இந்த உலகம் இழந்தது—செந்தமிழில்
நன்றே உரைகண்ட நற்றமிழ்க் கோனரே
என்றுமைக் காண்போம் இனி.

**வித்துவான் கி. இராமசாமிக் கோனர்**

வேங்கடத்தான் அழைப்பிற்கோ வேலவனின்
அழைப்பிற்கோ விருந்தாய் விரைந்தாய்
பாங்குடைய திருஐயன் பெருமாளே
பார்போற்றுங் கோனர் ஐயா
நீங்காத பெரும்புகழை நீள்நிலத்தில்
நிறுத்தி மறைந்தாய் அந்தோ
தாங்கவொணுத் துயர்க்கடலில் தத்தளிக்க
விட்டனையே தமரை யெல்லாம்.

**புலவர் ந. கி. குப்புச்சாமி ஆழ்வார்**

அந்தோசெந் தமிழ்த்தாயின் அரும்புதல்வ
பெரும்புலவர்க் கனியே அன்றுய்
நந்தாச்செந் தமிழ்பயி லும் மாணவர்க்கு
நானிலக்கற் பகமே ஒப்பாய்
பைந்தார்நற் றுழாய்முடியோற் கன்பஐயன்
பெருமாளே பரன்தாள் சேர்ந்தாய்
நொந்தாழ்வெந் துயருறுமெம் போல்வாருக்
குறுதுணையார் நுவல்வாய் ஐயா.

---

## உச. சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை

### தோற்றம்

திக்கெலாம் புகழும் தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருமுருகன் திருக்கோயில் கொண்டுள்ள திருச்செந்தூருக்குத் தென்பாலுள்ள குலசேகரன் பட்டினம் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பரமசிவன் பிள்ளை என்பவருக்கும் வீரலட்சுமி அம்மையார் என்பவருக்கும் அருமைப் புதல்வராக இராமநாத பிள்ளையவர்கள் 5-3-1890இல் பிறந்தார்.

### கல்வி

இளமைப் பருவத்திலே கல்வி கற்கத் தொடங்கிய இவர் ஐந்தாம் ஆண்டில் தாணுவலிங்கம் பிள்ளை என்னும் அறிஞர்பால் கல்விகற்கத் தொடங்கினர். பிறகு வேருெரு திண்ணைப் பள்ளியிற் சிலகாலம் பயின்ருர். அதன்பின் ஆங்கிலப் பள்ளியில் மூன்ரும் படிவம் வரை படித்தார். விடியற்காலை தோறும் பெரிய தந்தையாரால் நாவலர் பாலபாடம், திருவிளையாடற் புராணம், தேவாரம் முதலிய நூல்கள் ஓதுவிக்கப் பெற்ருர்.

### வணிகத்துறையும் கல்வியும்

பிறகு தம்முடைய தந்தையாரோடு வணிகத்துறையில் உழைத்து வந்தார். 1916ஆம் ஆண்டில் கொழும்பில் இவருக்கும் விபுலாநந்தருக்கும் நட்புண்டாகியது. அந்நாளில் அங்கிருந்த சித்தாந்தப் பெரும் புலவரும் ஞானசித்தி ஆசிரியரும் சித்தாந்தப் போதகராகத் திகழ்ந்தவரும் ஆகிய யாழ்பாணம் சி. தாமோதரம்

பிள்ளையவர்களின் போதனைகளை இடையிடையே கேட்டு வந்தார். செந்தமிழ்ப் பேராசிரியரும் முதுபெரும் புலவருமாகத் திகழ்ந்த பண்டிதர் யாழ்ப்பாணம் மு. நல்ல தம்பியவர்களின் நட்பும் இவருக்குக் கிடைத்தது. இவர்களிருவரும் யாழ்ப்பாணம் பெரும் புலவர் பண்டிதர் சி. கந்தையா பிள்ளையவர்களிடம் சிலநாள் தணிகைப் புராணம் பாடங்கேட்டனர். ஊரிலே இருந்த காலத்தில் உடன்குடிப் புலவர் புகழ் முத்துச்சாமிப் பிள்ளையவர்களிடம் நன்னூலைப் பாடங்கேட்டிருந்தார்.

## இலக்கியப் பயிற்சி

இலக்கண இலக்கியங்களைப் பயில்வதில் இளமை முதற்கொண்டே மிகுந்த ஊக்கமுடையவராகத் திகழ்ந்தார். திருமுறைகளையுஞ் சைவ சித்தாந்த நூல் களையும் முறையாகப் பயில்வதில் பேரார்வங்காட்டினர். இறையனர் களவியலுரை, திருக்குறள் பரிமேலழகர் உரை முதலிய பல நூல்களை முழுமையும் உரையுடன் கையால் எழுதிப் பலகாற் பயின்ருர். இவருக்குப் பல நூல்கள் உரையுடன் மனப்பாடமாக இருந்தன. காலத்தை வீணுக்காது இளமைமுதல் நூல்களைப் படித்த வண்ணமே இருக்கும் பண்பு இவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. தொல்காப்பியத்தை எவரிடமும் பாடங்கேட்காமல் தாமே ஆழ்ந்து பயின்று தம்முடைய புலமையைப் பெருக்கிக் கொண்டார்.

## திருமணம்

1922ஆம் ஆண்டில், உடன்குடியில் வேளாண் மரபில் தோன்றிய பெருமாள் பிள்ளைக்கும் சுப்பம்மா ளுக்கும் இளைய மகளாகத் தோன்றிய சங்கர வடிவு அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாகத் திருமணம் புரிந்துகொண்டார். இல்வாழ்க்கையில் மூன்று பெண் மக்களும் ஐந்து ஆண்மக்களும் பிறந்தனர்.

### ஆசிரியத் தொழில்

இவர் கொழும்பில் தங்கியிருந்தபோது நகரத்தார் பலருடைய தொடர்பு உண்டாகியது. இவருடைய அறிவாற்றலைக் கண்டு வலம்புரி இலட்சுமணன் செட்டியார் தம்முடைய ஊருக்கு அழைத்து வந்து, "அலமேலு பெண்கள் பாடசாலை"க்குத் தலைமை யாசிரியராக அமர்த்தினர். 1941ஆம் ஆண்டு வரை அங்கு ஆசிரியராக இருந்தார்.

### மனைவி மறைவு

1941ஆம் ஆண்டு இறுதியில் இவருடைய மனைவியார் நோய்வாய்ப்பட்டார். மனைவியின் அண்மையில் இருந்து தொண்டு புரிதல் மருத்துவஞ் செய்தல் முதலியவற்றையும் இவரே மேற்கொண்டார். மனைவியார் 1942ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார்.

### சித்தாந்த பண்டிதர் முதலிய பட்டங்கள்

1942ஆம் ஆண்டில் மீண்டுங் கொழும்புக்குச் சென்றார். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் புரிந்தார். அங்கு சிவஞான போத விரிவுரை முதலியன நிகழ்ந்தன. அங்குச் 'சித்தாந்தமணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையினர் இவருடைய சித்தாந்தப் புலமைத் திறத்தையறிந்து வியந்து, "சித்தாந்த பண்டிதர்" என்னும் பட்டத்தை வழங்கினர். மதுரைத் திருஞான சம்பந்தராதீனத் தலைவர் திரு. சோமசுந்தர அடிகளார் 'செந்தமிழ்ப் புலவரேறு' என்னும் பட்டத்தை வழங்கினர்.

### கழகப் புலவர்

1946ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து தாயகந் திரும்பினர். அப்போது அகவை 56 ஆகியிருந்தது.

வேலையிலிருந்து ஒய்வுபெற வேண்டிய இக்காலத்தில் இவர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைமைப் புலவராகப் பணிபுரியத் தொடங்கினர். உரையெழுத வேண்டிய நூல்கட்கு உரையெழுதல், அச்சுப்படிகளைச் சரிபார்த்தல் முதலிய பணிகளை மேற்கொண்டார். கழக வழி வெளிவந்த சமய சாத்திர நூல்கள் அனைத்தையும் பார்வையிட்டுப் பதிப்பித்தார். உரையெழுதுவதற்கு அருமையாகிய திருமந்திரம், திருவாசகம் போன்ற நூல்கட்கு உரையெழுதினர். எளிதில் அறிந்துகொள்ள இயலாத சாத்திர நூல்களின் பழைய உரைகளுக்கு ஆங்காங்கு எளிய குறிப்புரைகள் எழுதினர். திருவிளக்கு வழிபாடு, பள்ளிக்கூட வழிபாடு, திருக்கோயில் வழிபாடு, திருநீறும் சிவமணியும், திருவைந்தெழுத்து, சிவதீக்கை முதலிய தொகுப்பு நூல்களைத் தொகுத்து வெளியிடச் செய்தார். திருமுறைகளிற் காணப்பெறும் நோய் தீக்கும் ஆற்றல் வாய்ந்த மந்திரப் பதிகங்களைத் தொகுத்து 'வேண்டுகோள் பதிகங்கள்' என்னுந் தலைப்பில் ஐந்து சிறு நூல்களை வெளியிடச் செய்தார்.

## பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு

பன்னிரு திருமுறையிற் காணப்பெறும் சிறந்த பாடல்களைத் தொகுத்துச் சமயகுரவர் வரலாறும் தல விளக்கங்களும் எழுதிப் 'பன்னிரு திருமுறைப் பெருந் திரட்டு' என்னும் பெயரில் கழகத்தின் ஆயிரத் தெட்டாவது வெளியீடாக வெளியிடச் செய்தார். மூவர் தேவாரங்களினின்றுஞ் சிறந்த பதிகங்களைத் தொகுத்து விளக்கவுரையோடு வெளியிடச் செய்தார். அவ்வகையில் 'தேவாரப் பதிகத் திரட்டு' என்னுந் தலைப்பில் மூன்று திரட்டு நூல்கள் வெளியாயின. திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திற்கு விரிவான விளக்கவுரையொன்றும், எல்லாரும் படித்துப் பயனடையத் தக்க வகையில் தெளிவுரை ஒன்றும் எழுதி வெளியிடச் செய்தார்.

**பல நூல்கள்**

திருமந்திர நூலுக்குப் பலரும் இதுவரையிற் சிற்சில பகுதிகளுக்குத்தான் குறிப்புரை முதலியன எழுதி வெளி யிட்டனர். இவர் திருமந்திரம் முழுவதற்கும் சிறந்த உரை எழுதி வெளியிடச் செய்தார். பதினொராந் திருமுறையில் இடம் பெற்றுள்ள பட்டினத்துப் பிள்ளையா ருடைய திருப்பாடல்களுக்கு விளக்கவுரையெழுதி வெளி யிடச் செய்தார். பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணம் கழகப் பொன்விழா வெளியீடாகத் 'திருத்தொண்டர்மாக்கதை' என்னும் பெயரோடு வெளி யிடப்பட்டபொழுது வரலாற்றுக் குறிப்புரைகள் எழுதினர். பெரியபுராணத்தின் பகுதிகளாகிய இலை மலிந்த சருக்கம், திருநாவுக்கரசர் வரலாறு, சுந்தரர் வரலாறு என்னும் மூன்று பகுதிகட்கும் குறிப்புரை பொழிப்புரை விளக்கவுரை இலக்கணக்குறிப்பு முதலியன எழுதித் தனித்தனி நூல்களாக வெளியிடச் செய்தார். இவை புலவர் தேர்வுக்குப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன. பதினன்கு சைவ சித்தாந்த நூல்களும் பழைய வுரைகளோடு இவர் எழுதிய புது விளக்கங்களுஞ் சேர்ந்து வெளியாகியுள்ளன. சிவஞான போதச் சிற்றுரை இவர் எழுதிய விளக்கவுரையோடு வெளி வந்துள்ளது. தாயுமானவடிகளின் திருப்பாடல்களுக்குச் சித்தாந்தச் சிறப்புரையொன்றும் எழுதி வெளியிடச் செய்திருக்கிறார். சிவநெறிச் செய்யுட்டிரட்டு என்னும் நூலொன்றும் இவரால் செம்மை செய்யப்பட்டு வெளி யாகியுள்ளது.

**பாடங்கள் நடத்துதல்**

தாம் கற்றுணர்ந்தவற்றை மற்றவர்கட்கு எவ் வகையினும் போதித்துவிட வேண்டுமென்னும் பேரூக்கம் இவரிடம் மிகுதியாக இருந்தது. 1952ஆம் ஆண்டில் திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச்சங்க ஆதரவில் கோடை விடுமுறை நாள்களில் நெல்லையில் ஒரு திங்கள்

சித்தாந்த வகுப்பு நடைபெற்றது. சாத்தூர் தூ. சு. கந்த சாமி முதலியார் வகுப்புக்களை நடத்தினர். அப்பொழுது இவர் வினு விளக்கத் தெளிவு வகுப்பு நடத்தினர். பல மாணவர்களும் ஆசிரியர்களும் இதிற் கலந்து பயன் பெற்றூர்கள். சென்னை முதலிய இடங்களில் சைவ சித்தாந்த வகுப்புக்களையும் திருக்குறள் வகுப்புக்களையும் தம்முடைய இறுதிநாள் வரையில் நடத்திக்கொண்டே யிருந்தார்.

### செல்வியிற் கட்டுரைகள்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் நடத்தப்பெறும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னுந் திங்கள் இதழில் பல அரிய கட்டுரைகளை எழுதியிருக்கிருர். வெண்பாப் பாடுவதில் புலியாக விளங்கிய இவர் தமது கருத்துக்களின் தொகுப்புக்களை வெண்பாவாக்கிச் செல்வியில் வெளியிட்டிருக்கிருர்.

### புதுமையான புலவர்

உலகத்தில் நாம் சில புதுமையான மனிதர்களைக் காணலாம். அத்தகைய மனிதர்களில் இவர் ஒருவர். பெரும் புலவராக இருந்தும் ஒன்றுந் தெரியாதவர்போற் காணப்பெறுவார். இவரை முன்பின் தெரியாதவர்கள். இவர் ஓர் இரவலர் போலும் என்றே எண்ணுவார்கள். ஆண்பெண் சிறுவர் பெரியவர் என்னும் பேதம் இவரிடஞ் சிறிதும் எந்நாளிலும் உண்டானதில்லை. மெய்யறிவாளர்களின் இயல்பு இவ்வாறுதான் இருக்கு மென்று நூல்கள் கூறுகின்றன. மலையிடிந்து தலைமேல் வீழினும் இவர் தந்நிலையிற் சிறிதுங் கலங்கார். எண்ப தாண்டுகளில் எழுபத்தைந்தாண்டுகள் நூல்களோடு பழகியபடியால் எல்லாச் செய்திகளையும் உணர்ந் திருந்தார். யாருக்கும் பொருள் விளங்காத செய்யுள் கட்கும் சிறிதுபோதில் பொருள் கண்டுபிடித்துவிடும்

ஆற்றல் இவரிடம் அமைந்திருந்தது. குன்றக்குடி யடிகளார் இவரைப்பற்றிக் கொண்டிருந்த உள்ளக் கிடக்கை: "புலவர் அவர்கள் நெஞ்சில் இடம் பெருத பாடல்கள் வெளியிலே இருக்குமா என்பது ஐயப்பாடு. எனக்கு ஏதாவதொரு பாடல் வேண்டுமென்ருல் நான் முதலில் தேடும் நூலகம் கழகப் புலவர் இராமநாத பிள்ளை அவர்கள்தாம். அடுத்துச் செய்யுள்கட்கு இனிய உரைகூற வல்லவர்கள்; குறிப்பாகச் சொன்னுல் அருள் உலகத்தில் எனக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிற பொழு தெல்லாம் அவர்கள் துணையாக நின்று இதுதான் மரபு என்றும் இது தொன்மை நெறி என்றும் எடுத்துக் காட்டுகிற ஆற்றலுடையவர்களாய் இருக்கிருர்கள். திருமந்திரம் போன்ற நல்ல சமய நூல்களுக்கு உரை யெழுதியிருக்கிருர்கள். தமிழ் மரபையொட்டி உரை யெழுத வல்லவர்கள்.

ஐயா அவர்கள் புறத்தோற்றத்தாலும் புலமை யினுலும் சங்க காலத்துச் சான்ருேர்களை நினைவூட்டிக் கொண்டிருக்கிருர்கள். எளிய தோற்றம்! ஏற்றமிக்க புலமை! சிவவேடம் தாங்கிய திருக்கோலம்! சிந்தையில் சிவம் மணக்கும் பொலிவு! புலனழுக்கற்ற தன்மை! அருளார்ந்த கவர்ச்சி! தாயிற் சிறந்த பரிவு அனைத்தும் ஐயா அவர்கள்; உரத்த குரல் ஒரு பொழுதும் எழுப்பாத உயரியநா, புலமையாலும் செந்நா! உயர் செம்மைப் பண்பாலும் செந்நா! செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்ற இலக்கணத்திற்கு இலக்கியம் ஐயா! ஆரவாரம் ஐயா அறியாத ஒன்று. பழக்கத்திற்கு இனிய நெஞ்சு! பண்புக்கோர் உறைவிடம்! செந்தமிழாயும் திறத்திஞேர்க்கு ஓர் ஊன்றுகோல்! ஐயத்தைத் தெளிவிக்கும் அகன்ற புலமை! கழிவிரக்கம் ததும்பும் பேருள்ளம்! இன்னும் எவ்வளவோ பாராட்டலாம். சொற்களில்லை! பைந்தமிழ் பயின்ற நம் நெஞ்சு சுவைத்தது இரண்டு. ஒன்று தமிழ்; பிறிதொன்று ஐயா அவர்களின் உழுவலன்பு" என்பதாகும்.

### பாராட்டு

எல்லாருடைய பாராட்டுக்கும் உரிமையாக இருந்த இவரை ஒரு சிலரே அறிந்து பாராட்டியுள்ளனர். இவரைக் குறித்துத் திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் சில செய்யுள்கள் பாடியுள்ளார்; அவற்றில் இரண்டை அடியிற் காண்க.

*அன்பினிற் சிறந்த நல்லார்*
*அருளியல் நலங்கள் வாய்ந்தார்*
*நன்றுயர் ஒழுக்கம் மிக்கார்*
*நற்றமிழ்ச் சைவத் தோன்றல்*
*ஒன்றிநற் காந்தி அப்பர்*
*உயர்திரு வள்ளு வர்தாம்*
*இன்றிவண் வந்தாற் போல்வார்*
*எம்குரு இராம நாதர்.*

*தனித்தமிழ் வீரர்சைவத்*
*தனிப்பெருஞ் சான்றோர் யாரும்*
*நினைத்தலும் இயலா நேர்மை*
*நெறிப்பெருந் தொண்டர் மேலோர்*
*மனித்தருள் தெய்வம் என்றே*
*மதித்திவண் வணங்கத் தக்கார்*
*இனித்தொளிர் பண்பின் எங்கள்*
*எழிற்குரு இராம நாதர்.*

### புகழ்நூல்

சென்னைச் சைதாப்பேட்டையில் 'சைதைத் தமிழ்ச் சங்கம்' என்றொரு சங்கந் தோன்றியது. அச்சங்கத்தைத் தோற்றுவித்த இளைஞர்கள் இராமநாத பிள்ளையவர்களின் பெருமையை உணர்ந்து தம் சங்கக் குருவாகவுங் கொண்டு பாராட்டிப் போற்றினர். சங்கத்தின் துணைத் தலைவராகிய திரு. முத்து முருகன் என்பவர் 'முதுபெரும் புலவர் மூவாப்பெருமை' என்னும் கவிதை நூலை இயற்றினார். இந்நூல் டை சைதைத் தமிழ்ச் சங்க

வெளியீடாகவும் புலவரவர்களின் இறுதி விழாவில் நூல் வெளியீடாகவும் வெளியாகியது. அந்நூலிற் புலவரவர்களின் பெருமையையும் உண்மையையும் உணர்ந்துரைக்கும் சில செய்யுள்கள் அமைந்துள்ளன. அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க.

தொன்னூலாம் காப்பியத்தை ஆசிரியர் இன்றித்
தூய்மையுடன் கற்றவர்தாம் ஒருவருள ரென்றால்
எம்மாசான் இராமநாத அடிகளே ஆவர்
எனிஃதை உரைக்கின்றேன் என்றாலோ நண்பீர்
நன்னூலைக் கற்பதற்கே நாலாசான் தேடும்
நல்லூக்கம் இல்லாதார் எண்ணிடவே சொன்னேன்
எந்நூலைக் கற்பதற்கும் ஊக்கமிருந் திட்டால்
எளிதாகக் கற்றிடலாம்; எம்மாசான் சான்றே.

சித்தாந்த நூல்களுக்கு விளக்கஞ் செய்யும்
சிறப்புடையார் தமிழகத்தில் சிலரே யுள்ளார்
ஒத்தபெரும் புலவரெலாம் அடிகள் சொல்லும்
உயர்வான விளக்கத்தைப் போற்று கின்றார்
அத்தனுடை அருள்பெற்ற மூவர் தந்த
அருமறையாம் தேவார ஒளியில் வையம்
மெத்தமகிழ் வோடுசெலக் கருத்தை நல்கும்
மேன்மைமிகும் எம்மாசான் நீடு வாழ்க.

தனையீன்ற அன்னைக்கே உடைது வைத்தல்
தாழ்வாகு மெனவெண்ணும் உலகந் தன்னில்
மனைவியுடல் நலங்குன்றி யிருந்த போது
மாண்புமிகும் எம்மாசான் மலத்தை நீக்கிப்
பணிபுரிந்த பெருமையினை அடிகள் செல்வன்
பாங்குகதிர் வேல்முருகன் உரைக்கக் கேட்டேன்
அணியாசான் பெண்ணுரிமை காத்த தன்மை
ஆர்வமிகும் இளைஞர்கட் கூக்கம் நல்கும்.

**கழகப் பாராட்டு**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இவராற் பெற்ற பெரும்பயனை மறவாது கேடயம் வழங்கியும்

பொன்னுடை போர்த்தியும் பொற்கிழி வழங்கியும் பாராட்டியதன்றிப் புலவரவர்களின் இறுதிக் காலத்தில் நேர்ந்த செலவுகளையும் மேற்கொண்டு தங்கடனை ஓரளவு தீர்த்தது.

### முத்துவிழா முடிவு விழாவாகியது

இவருடைய தொண்டைப் பாராட்டி முத்துவிழாக் கொண்டாடுவதென முடிவு செய்த அன்பர்கள் குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் விழாக்குழு வொன்றமைத்துப் பொருள் திரட்டல் முதலிய செயல்களை மேற்கொண்டிருந்தனர். அதன் பொருட்டு அறிக்கையும் அச்சிடப்பட்டு வெளியாகி யிருந்தது. ஆனால், அக்குழு விரைந்து செயல் புரியாது நீட்டித்துக் கொண்டு போயிற்று. இந்நிலையில் இவருக்கு விபத்து ஒன்று ஏற்பட்டு அதனால் உடல்நலங் குன்றி ஒரு திங்கள்வரை மருத்துவமனையிலும் இல்லத்திலும் துன்பத்தோடு கூடிய படுக்கையிலிருந்தார். முத்து விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த அன்பர்கள் அவ்விழா நடைபெறாது என்பதை யுணர்ந்து கொண்டு இவர் மருத்துவமனையில் இருந்தபோது ரூபா ஆயிரத் தொன்றைப் பொற்கிழியாக அளித்தனர்.

### இறுதி

புலவர் அவர்கள் 26-3-1972ஆம் நாளன்று இறைவன் திருவடி நீழலையடைந்தனர். முத்துவிழாக் குழுவினர் நிறைவு விழாமலர் ஒன்று வெளியிட்டு 9-4-1972இல் திரு. கோ. முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள் (ஐ. ஏ. எஸ்) தலைமையில் இறுதி விழாக் கொண்டாடினர்.

---

## ௨௫. நாமக்கல் கவிஞர்
## வே. இராமலிங்கம் பிள்ளை

### தோற்றம்

அரசவைக் கவிஞராக விளங்கிய நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை சேலம் மாவட்டத்தில் மோகனூர் என்னுஞ் சிற்றூரில் வேங்கடராமப் பிள்ளை என்பவருக்கும் அம்மணி அம்மையார் என்பவருக்கும் அருமைப் புதல்வராக 1888ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பத்தொன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை பிறந்தார். பெரியவர் ஒருவருடைய கட்டளைப்படி புதல்வருக்கு இராமலிங்கம் என்று பெயர் சூட்டப் பட்டது.

### கல்வி

கல்வி கற்கத் தொடங்கிய இராமலிங்கம் முதலில் பழனி உபாத்தியாயர் சண்முகம் பிள்ளை என்பவரிடஞ் சில காலங் கல்விகற்ருர். பிறகு நம்மாழ்வார் பள்ளியிற் சிறிதுகாலம் பயின்ருர். பின் கோயமுத்தூரில் கிளைப் பள்ளி ஒன்றில் கற்ருர்.

### ஓவியத்தில் ஊக்கம்

கவிஞருக்கு ஓவியத்தில் ஊக்கமும் ஆர்வமும் மிகுதியாக இருந்தன. படிப்பைச் சரியாகக் கவனியாமல் பல முறை ஓவியங்கள் எழுதி ஆசிரியரால் தண்டனைபெற்ருர். ஆயினும் ஓவியப் பழக்கத்தை விட்டுவிடவில்லை. இறுதியில் ஓவியத்திலும் வல்லவராகத் திகழ்ந்து பல பரிசுகளும் பாராட்டுகளும் பெற்ருர்.

### மேலுங் கல்வி கற்றல்

மேலும் பலவிடங்களில் கவிஞர் கல்விகற்று 1906ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வுக்குச் சென்றார். 1907ஆம் ஆண்டில் தேர்ச்சிபெற்றார். பின்னர்த் திருச்சியில் உள்ள பிஷப்பு ஈபர் கல்லூரியில் இடைக்கால வகுப்பிற் சேர்ந்தார். பிச்சை இபுரகீம் என்னும் புலவரிடந் தமிழையும் பயின்றார். கல்வியில் மிகுந்த ஊக்கத்தோடு இவர் கற்றும் கல்விப் பயிற்சி இடையே தடைப் பட்டது. தேர்வுக்குப் போகுமுன் கவிஞருக்குக் காதுவலி ஏற்பட்டது. பலவகையான மருத்துவங்கள் நடை பெற்றன. காதுவலி தீர்ந்ததாயினும் காது சரியாகக் கேளாமற் போயிற்று. பிறகு நாட்டுமருத்துவங்களைச் செய்து ஓரளவு குணம்பெற்றார்.

### திருமணம்

இடையே கவிஞருக்குத் திருமணஞ் செய்துவிடப் பெற்றோர் முயற்சி செய்தனர். கருவூரில் இருந்த வீரப்பர் என்பவருடைய மகளான முத்தம்மாள் என்னும் மங்கை நல்லாளை மணமகளாகத் தேர்ந்தெடுத்து மணஞ் செய்வித்தனர்.

### தந்தையார் முயற்சி

ஒவ்வொரு தந்தையாரும் தம்முடைய மகனையும் தம்மைப்போல் தொழில்புரியச் செய்துவிட வேண்டுமென்று எண்ணுவது பெரும்பாலும் இயற்கை. ஒருசிலர் மட்டும் தம்முடைய மைந்தன் தம்மிலும் உயர்ந்த நிலையில் விளங்கவேண்டுமென்று எண்ணுவர். கவிஞருடைய தந்தையார் தம்முடைய மைந்தனையும் ஊர்க்காவல் துறையிற் பணிபுரியச் செய்துவிடவேண்டும் என்று பெரு முயற்சி செய்தார். கவிஞருக்குக் காது கேளாதநிலை இருப்பதைக்கூட அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆனல் கவிஞருடைய உள்ளமோ ஓவியத் துறையில்தான்

உள்ளவாறு பற்றுக்கொண்டிருந்ததே தவிர வேறு எத் துறையிலுஞ் சிறிதும் நாட்டங்கொள்ளவில்லை. ஆயினுந் தந்தையாருடைய கட்டாயத்திற்காகச் சிலகாலம் அரசினர் அலுவலகத்தில் எழுத்தராகவும் பள்ளியாசிரிய ராகவும் பணிபுரிந்தார்.

### முடிசூட்டு விழாப்படம்

பிறவேலைகளையெல்லாம் வெறுத் தொதுக்கிய நம் கவிஞர் வீட்டில் சோம்பேறியாக உட்கார்ந்துகொண் டிருக்கவில்லை. ஓவியங்கள் வரைவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். தந்தையார் இவருடைய ஓவியத் திறமையைக் கண்டு உள்ளம் வியக்காதொழியினும் இவருடைய ஓவியத்திறனை உள்ளம் வியந்து பாராட்டிய வர்கள் பலர் இருந்தனர். பொறியாளர் (இஞ்சினீயர்) திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் நம் கவிஞரிடம் அன்பு கொண்டிருந்தார். சார்ச் மன்னரின் முடிசூட்டு விழா தில்லியில் நடந்தது. முடிசூட்டு விழாப்படம் எழுதுமாறு திரு. நாயக்கர் கவிஞரைத் தூண்டினர். மன்னர் அரி யணையில் அமர்ந்திருக்க இந்தியத் தாய் முடிசூட்டுவதைப் போலக் கவிஞர் கற்பனைத் திறமமையப் படம் ஒன்றைத் தீட்டினர். நாயக்கர் கவிஞரைப் படத்துடன் தில்லிக்கு அழைத்துக்கொண்டு சென்றார். கவிஞர் வரைந்த படம் கண்டவர் கருத்தையுங் கண்ணையுங் கவர்ந்தது. படத் திற்காகக் கவிஞருக்குப் பரிசு கிடைத்தது. பரிசு பெற்ற கலைஞர்கட்கு மன்னர் விருந்து நடத்தினர். நம் கவிஞர் மன்னரின் அண்மையில் அமர்ந்து விருந்துண்டார். பாராட்டுக்கு அறிகுறியாகத் தங்கப் பதக்கம் ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

### அரசியல் மாநாட்டிற் பரிசு

தில்லியில் இருந்து திரும்பியபின் ஓவியத் தொழிலை ஊக்கத்தோடு செய்து கொண்டிருந்தார். 1914ஆம் ஆண்டில் திருச்சியில் அரசியல் மாநாடு ஒன்று நடை

பெற்றது. அம் மாநாட்டின் சார்பில் பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. அப்பொருட்காட்சியில் நம் கவிஞருடைய படங்கள் பல இடம்பெற்றன. இளம்பள்ளி பெருதிலக்கிழார் என்பவர் அம் மாநாட்டின் வரவேற்புத் தலைவர். இவர் கவிஞரின் ஓவியப் புலமை கவிதைப் புலமை முதலியவற்றை நன்குணர்ந்து ஊக்கியவர். கருணாகரமேனன் என்பவர் மாநாட்டுத் தலைவராக இருந்தார். அன்னிபெசன்ட் அம்மையார் மாநாட்டைத் திறந்து வைத்தார். அம் மாநாடடில் கவிஞர் படங்கள் நல்லபரிசு பெற்றன. சென்னையில் நடந்த ஓவியக் கண் காட்சியிலும் கவிஞருடைய படங்கள் பரிசு பெற்றன. படங்களைப் பாராட்டி நாளிதழ்கள் பாராட்டுரைகளையும் வரைந்தன.

### துரையின் பரிசு

சிம்சன் துரை என்பவர் சென்னையிற் பெரிய பொறி யாளராக இருந்தார். அவர் கலையுணர்ச்சியிலும் வல்லவர். அவருக்கு ஒரு பெண்குழந்தை இருந்தது. அஃது இறந்து போயிற்று. நம் கவிஞர் ஓவியந்தீட்டு வதில் வல்லவர் என்பதையுணர்ந்த துரை கவிஞரைக் கொண்டு குழந்தையின் படத்தை வரையச் செய்தார். துரை எதிர்பார்த்ததற்குமேல் நல்ல விதத்தில் படம் அமைந்தது. ஐம்பது ரூபாய்கள் தருவதாகப் பேசி யிருந்த படத்திற்கு எதிர்பாராவிதத்தில் அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய்கள் கிடைத்தன.

### அரசியல் வாழ்வு

1906ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் வங்காளப் பிரிவினையைச் செய்தனர். இதன் பயனாக நாடெங்கும் விடுதலைப் போராட்டம் கொழுந்துவிட்டெரியத் தொடங் கிற்று. நம் கவிஞரும் அப்போராட்டத்திற் கலந்து கொண்டார். அரசியல் இதழ்களைத் தவறாமல் படித்தார்.

அரசியல் கட்டுரைகளை நெட்டுருச் செய்தார். அரசியல் கூட்டங்கள் அனைத்துக்குஞ் சென்றார். அரவிந்தருடைய கடிதங்களைப் படித்தார். விடுதலைப் போராட்ட உணர்ச்சி நாளும் வளர்ந்தோங்கிற்று. அரசியற் கூட்டங்களிற் சொற்பொழிவுகளுஞ் செய்யலானார். காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் இந்தியர் உரிமைப் போர் நடத்தினார். அப்போரின்பொருட்டு அடிகள் இந்தியாவில் இருந்து பொருளுதவியை எதிர்பார்த்தார். இங்குக் கோகலே தலைமைபூண்டு நிதி திரட்டினார். நம் கவிஞரும் இம் முயற்சியில் ஈடுபட்டார். நாமக்கல்லில் மட்டும் மூவாயிரம் வெண்பொற்காசுகளை நம் கவிஞர் திரட்டினார்.

### காந்திப் பித்தன்

காந்தியடிகளின் கொள்கைகள் மக்கள் அனைவருடைய உள்ளங்களையுங் கவர்ந்தாற்போல் கவிஞருடைய உள்ளத்தையுங் கவர்ந்தன. காந்தியடிகளின் போதனையைப் பின்பற்றி அடிகளின் அடிச்சுவட்டிலே ஒழுகினார். தம்மைக் 'காந்திப் பித்தன்' என்று கூறிக்கொண்டார். நாளடைவில் கவிஞர் தலைவர்களுள் ஒருவரானார். காங்கிரசுத் தலைவர்கள் பலருடைய நட்பு நம் கவிஞருக்குக் கிடைத்தது. கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார் கவிஞரின் தமிழறிவைப் பெரிதும் பாராட்டிப் போற்றினார். செய்யுளியற்றும் ஆற்றலையும் புகழ்ந்தார். கவிஞர் இயற்றிய நாட்டுக் கும்மியைக் கேட்டு மகிழ்ந்தார். சிதம்பரனாருடைய குண நலங்களும் கவிஞருடைய உள்ளத்தைக் கவர்ந்தன.

### சிறைவாழ்வு

அரசியல் காரணமாகக் கவிஞர் சிறைக்குஞ் சென்றார். 1932ஆம் ஆண்டில் காந்தியடிகளுடைய மெய்வழிப் போரில் ஈடுபட்டபடியால் ஓராண்டுச் சிறை வாழ்வு கிடைத்தது. சிறைவாழ்வு கவிஞரின் நலன்களைக் கெடுத்தது. கவிஞரின் உடல் தளர்ச்சியடைந்தது.

முதன்மனைவியார் உலகவாழ்வைத் துறந்தார். ஓவியத் தொழிலும் அடியோடு நின்றுவிட்டபடியால் வாழ்க்கை சீர்குலைந்தது. ஆயினும் இவற்றை ஒருபொருட்படுத் தாமல் நாட்டு விடுதலையிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

**ஓவியப் புலவர்**

புதுமைக்கவி சுப்பிரமணிய பாரதியார் தம் கவிஞருடைய ஓவியத்திலே மிகுந்த ஈடுபாடுகொண்டார். ஒருமுறை கவிஞரைக் கண்ட பாரதியார், "ஓவியப் புலவரே ! வருக வருக !!" என்று கூறி வரவேற்றார்.

**நாடகப் பாடல்கள்**

அந்நாளில் நாடக மேடைகளில் புகழ்பெற்று விளங்கிய கிட்டப்பா நம் கவிஞருடைய பாடலைப்பெரிதும் விரும்பினார். நாடகப் பாடல்கள் பலவற்றை இயற்றித் தருமாறு வேண்டிப்பெற்றார். அந்நாளில் கவிஞர் பாடிய பாடல்கள் எண்ணற்றன. அவற்றைப் பேணிக்காவாத படியால் அப் பாடல்கள் நாளடைவில் மறைந் தொழிந்தன.

**"கத்தியின்றி இரத்தமின்றி"**

காந்தியடிகள் உப்பு வரி மறுப்புப்போர் தொடங் கினார். நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட மக்கள் கூட்டங்கூட்டமாக அப்போரில் ஈடுபட்டனர். அப்பொழுது கவிஞர் "கத்தியின்றி இரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது" என்று தொடங்கும் பாடல் ஒன்றைப் பாடினார். இப்பாட்டு அனைவருடைய உள்ளங்களையுங் கவர்ந்தது. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அப்பாடலை மிகவும் புகழ்ந்து பாராட்டினார். இராசாசியின் தலைமை யில் தொண்டர் படை ஒன்று திருச்சியினின்றும் புறப் பட்டுச் சென்றது. உப்புப் போர் வீரர்கள் அப்பாடலைத் தங்களுடைய வழிநடைப்பாட்டாகப் பாடிக்கொண்டு

சென்றனர். இதனால் 'தமிழ்நாட்டின் தேசிய கவி' என்ற சிறப்புப் பெயரும் கவிஞருக்குக் கிடைத்தது. கவிஞர் மேலும் பல தேசியப் பாடல்களைப் பாடினர். இதனால் கவிஞருக்குக், 'காங்கிரசுப் புலவர்' என்னும் பெயரும் வழங்கலாயிற்று.

## இயற்றிய நூல்கள்

க. திருக்குறள் புத்துரை, உ. அவனும் அவளும், ௩. இலக்கிய இன்பம், ௪. என்கதை, ரு. மலைக் கள்ளன், ௬. தமிழிசையின் சிறப்பு, எ. சங்கொலி அ. தமிழன் இதயம், ௯. கவிஞன் குரல், க0. கம்பரும் வால்மீகியும் முதலியன இவர் இயற்றிய நூல்கள்.

## பாராட்டு

கவிஞர் வறுமையால் வருந்திய காலத்தில் அன்பர்கள் கவிஞருடைய தொண்டை மறவாமல் பொருள் திரட்டிப் பொற்கிழி வழங்கினர். அரசினர், 'பத்மஸ்ரீ' 'பத்மவிபூஷண்' என்னும் பட்டங்களை வழங்கிச் சிறப்புச் செய்ததோடு அரசவைக் கவிஞராகவும் சில காலம் இருக்கச்செய்து பெருமைப்படுத்தினர். இறுதிக் காலத்தில் கவிஞரின் நிலையை உணர்ந்து திங்கள்தோறும் பொருளுதவியுஞ் செய்தனர். இவ்வுதவி கவிஞரின் இறுதிக் காலம் வரையில் நீடித்திருந்தது.

## மறைவு

கவிஞராக மட்டுமன்றிச் சிறந்த பேச்சாளராகவும், அரசியலாளராகவும், ஓவியராகவும், கதாசிரியராகவும், உரையாசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், இசைப் பேரறிஞராகவுஞ் சிறந்து விளங்கிய இவர் தமது எண்பத்து நான்காவது ஆண்டில் 24-8-72இல் இவ்வுலக வாழ்வைத் துறந்து புகழுடலைப் பெற்றார்.

———

## உகூ. ச. சச்சிதானந்தம் பிள்ளை

### தோற்றம்

சைவப் பாதிரியார் என்று அறிஞர்களாற் பாராட்டப் பெற்ற திரு. சச்சிதானந்தம் பிள்ளை சென்னை மாநகரில் சபாபதிப்பிள்ளை என்பவருக்கும் மீனாட்சி அம்மையார் என்பவருக்கும் அருந்தவப்புதல்வராக 30-7-1887இல் பிறந்தார். சச்சிதானந்தம் பிள்ளையின் தந்தையாராகிய சபாபதிப்பிள்ளை ஈசூர் சச்சிதானந்த சுவாமிகளின் அடியவராக விளங்கியபடியால் தம் மைந்தருக்கு ஆசிரியருடைய பெயரையிட்டு மகிழ்ந்தார். மேற்படி சச்சிதானந்த சுவாமிகள் அந்நாளில் சென்னை மாநகரில் புகழ்பெற்று விளங்கிய வேதாந்தப் பெரியாராவர்.

### கல்வி

சச்சிதானந்தர் இளமையில் இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியிற் படித்தார். பிறகு பச்சையப்பன் கல்லூரியில் தத்துவ நூல்கற்றுப் பி.ஏ., பட்டம் பெற்ருர். ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிற் படித்து எல்.டி. பட்டமும் பெற்ருர்.

### தொழில் புரிதல்

சிறிது காலம் சென்னை வருவாய்த்துறையிற் பணிபுரிந்தார். பிறகு கல்லூரியில் தருக்க நூற் பாட ஆசிரியராகப் பணிபுரிந்தார். பிறகு அரசாங்கக் கல்வித் துறையில் துணை ஆய்வாளராகப் பணிபுரிந்தார். பிறகு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், மாவட்டக் கல்வி யதிகாரியாகவும், சென்னை மாநகராட்சிக் கல்வி அதிகாரியாகவும் தொழில் புரிந்து படிப்படியாக

உயர்ந்து முடிவில் மாநிலக் கல்வித் துணை இயக்குநராக விருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பிறகும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில காலம் பதிவாள ராகப் பணிபுரிந்தார்.

## சைவத் தொண்டு

தமிழ் மொழியிடத்தும் சைவ சமயத்திடத்தும் சச்சிதானந்தருக்குப் பெரும்பற்று இளம்பருவம் முதற் கொண்டே அமைந்திருந்தது. "சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்க ஒல்லும் வகையாலெல்லாம்" உழைத்து வந்தார். பாம்பன் குமரகுருதாச சுவாமி களைத் தமிழுலகம் நன்குணரும். முருகப்பெருமா னிடத்துப் பேரன்பு கொண்டு 6666 பாடல்களை இயற்றிய அப்பெரியாரிடத்தில் இவர் மெய்யன்பு பூண்டு ஒழுகினர். அவ்வடிகளாரின் முதன் மாணவராகத் திகழ்ந்து அடிகளாரின் கொள்கைகளை யாண்டும் பரப்பி வந்தார். அவ்வடிகளாரின் நூல்கள் பலவற்றை அழகிய முறையிற் பதிப்பித்து வெளியிட்டதன்றி அந்நூல்கட்குச் சிறந்த பதிப்புரைகளும் எழுதினர்.

## சமாசத் தொண்டு

அந்நாளில் சைவசித்தாந்த மகாசமாசம் என்னும் சைவசமய வளர்ச்சி நிலையம் ஒன்று தோன்றிச் சைவ சமயக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பிப் பெரும் பணிபுரிந்தது. நம் சச்சிதானந்தரும் அச்சமாசத்திற் சேர்ந்து சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் பணி புரிந்தார்.

## சிவ சின்னங்களணிவதேன்?

சிவ சின்னங்களணிவதேன்? என்னுஞ் சிறு நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். சமாசம் நடத்திய

சித்தாந்தம் என்னும் திங்களிதழுக்கு ஆசிரியராக இருந்து அவ்விதழைத் தக்க முறையில் நடத்தினர். பாம்பன் சுவாமிகளின் வரலாற்றுக் குறிப்புக்களை யெல்லாத் தொகுத்து நூல் வடிவாக வெளியிட்டார். சைவசமயத்தைப் பற்றிய கட்டுரைகள் பலவற்றை ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார்.

### சைவப் பாதிரியார்

கிறித்தவ சமயப் பாதிரிமார்கள் நமது நாட்டில் தங்களுடைய கிறித்தவ சமயத்தை வளர்ப்பதற்காகப் பெரும் பணிபுரிவதை நாம் பார்க்கிறோம். அவ்வாறே இவரும் சைவசமயத்தை வளர்ப்பதற்காகப் பெரும் பணிபுரிந்தார். இவருடைய சைவசமயப் பணியைப் பார்த்து மகிழ்ந்த திரு. வி. க. அவர்கள் இவரைச் சைவப் பாதிரியார் என்று குறிப்பிட்டார். 'சைவப் பாதிரியார்' என்னும் அச்சிறப்புப் பெயர் இவருக்குத் தொடர்ந்து வழங்கியது. மேலும் திரு. வி. க. அவர்கள் தமது வாழ்க்கைக் குறிப்பு நூலில் "தமிழ் நாட்டில் கலைமலையாய், ஒழுக்க ஊற்ருய், தமிழ்த் தென்றலாய், சைவச் சாரலாய், வாரங் கொழிக்கும் வழிபாட்டு மணியாய், வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாய்ப் பொலிவு தரும் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை" என்று குறிப்பிட்டிருத்தலோடு மற்றும் பலவாறு பாராட்டியுள்ளார்.

### தலைமை

சமாசத்தை நன்முறையில் நடத்திய இவர் 1929ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் நடைபெற்ற ஆண்டு விழாவிலும் தூத்துக்குடி, இராமநாதபுரம், கோவை, திருக்கேதீச்சரம் முதலிய இடங்களில் நடைபெற்ற ஆண்டு விழாக்களிலுந் தலைமை தாங்கிச் சீரிய சொற்பொழிவுகளைச் செய்தார்.

### அறுபதாண்டு நிறைவு விழா

இவருடைய அறுபதாண்டு நிறைவு விழா பாலசுப்பிரமணிய பக்த சனசபையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நிறைவு விழாவின் அன்பளிப்பாகத், 'தமிழ் மறைத்திரட்டு' என்னும் நூலைச் சாது அச்சுக் கூடத்தாரான முருகவேள் புத்தக சாலையார் வெளியிட்டு வழங்கினர். அந்நூலுக்கு முன்னுரை எழுதிய திரு. வி. க. "எனக்கும் சச்சிதானந்தத்திற்கும் உற்ற உறவை எம்மொழியால் இயம்ப வல்லேன்? தம்பி இல்லா எனக்கு, அவர் சத்தாய் - சித்தாய் - ஆனந்தமாய் - என் உள்ளங்கவரும் ஓர் உயிர்த் தம்பியாய்க் கிடைத்தனர் என்று சுருங்கச் சொல்லும் அளவில் நின்று விடுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

### திரு. வி. க. மணிமண்டபம்

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் 1953ஆம் ஆண்டில் செப்டம்பர்த் திங்களில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவருடைய நினைவாக, அவரால் தோற்றுவிக்கப்பெற்று வளர்க்கப்பெற்ற பாலசுப்பிரமணிய பக்தசன சபையின் வெற்றிடத்தில் திரு. வி. க. மணிமண்டபம் அமைக்கக் குழுவொன்று அமைத்து அதன் செயலாளராக இருந்து அரும்பணிபுரிந்து அம்மண்டபத்தைக் கட்டி முடித்துத் திறப்பு விழாவுஞ் செய்தார்.

### நான்கண்ட சச்சிதானந்தர்

சைவசமயப் பெரியாராகிய இவரை நான் சென்ற ஆண்டில்தான் நண்பர் ஒருவரோடு சென்று கண்டேன். அவருடைய காட்சி அன்பே ஓர் உருவெடுத்து வந்தாற்போல் விளங்கியது. "ஒரு நாளும் என்னிடம் வாராத பெரும் புலவராகிய தாங்கள் என் இருப்பிடந்தேடி வந்திருக்கிறீர்களே, மிக்க மகிழ்ச்சி மகிழ்ச்சி" என்று அன்புரைகள் பல கூறிப் பாராட்டினர்.

### சைவம் பெருக்குஞ் சீலர்

இவருடைய சைவசமயத் தொண்டிற்குப் பெரிதும் மனமகிழ்ந்த தருமையாதீன குருமகா சந்நிதானம் அவர்கள் இவருக்குச், "சைவம் பெருக்கும் சீலர்" என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கிப் பாராட்டினுர்கள்.

### இறுதி

எண்பத்தைந்தாண்டுகள் வரை வாழ்ந்திருந்த இப்பெரியார் 6-7-1972இல் இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

### இரங்கல் மலர்

இவருடைய பிரிவைக் குறித்துச் சைவசித்தாந்த மகா சமாசத்தினர் சித்தாந்தத்தின் ஆவணி இதழை இரங்கல் இதழாக வெளியிட்டுத் தம்முடைய ஆற்ருமை யைப் புலப்படுத்தினர். அவ்விதழில் சிதம்பரம் தவத்திரு சபாபதி சுவாமிகள், சாந்தலிங்க இராமசாமி அடிகளார், நல். முருகேச முதலியார், முத்துச்சாமிப்பிள்ளை, நடராச நாடார், கோ. நீ. சிங்காரவேலு, பூ. ஆலாலசுந்தரம், க. சோமசுந்தரஞ் செட்டியார், சுகவனம் சிவப்பிரகாசன் முதலிய பெருமக்கள் இவரைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். சிலர் இரங்கற் பாக்களும் பாடி யுள்ளனர்.

*"சைவ சமயப் பாதிரியார்*
*சாற்றுந் தமிழின் தகைப்புலவர்*
*தெய்வ நெறியை உளங்கொள்ளச்*
*செப்பும் தகைசால் நல்லன்பர்*
*உய்யும் அமைதி கௌமாரர்*
*உற்ற மடம்என் றிங்குரைத்த*
*மெய்கொள் சச்சி தானந்த*
*மேலோர் இன்று மறைந்தாரே"*

''சித்தோ டதனில் திருமுருகன்
செய்ய கோயிற் கோபுரத்தை
வைத்த மகிழ்வால் நாந்தலைமை
வகிக்கத் திறப்பு விழாச்செய்தால்
சித்தம் உவந்தே நம்பேச்சுச்
சிந்தை கவர்ந்த எனச்சொன்னார்
இத்தா ரணிவிட் டின்றிறைவன்
இணையார் அடியிற் கலந்தாரே''

என்பன கோவை, தவத்திரு சுந்தர சுவாமிகள் பாடல்

## ௨௭. புலவர் குழந்தை

**தோற்றம்**

கொங்கு மண்டலத்தில், கோவை மாவட்டத்தில் ஈரோட்டு வட்டத்தில் ஈரோட்டிற்குத் தெற்கே பதினாருவது கல்லில் உள்ள ஒலவலசு என்னுஞ் சிற்றூரில், 'ஒலவலசுப் பண்ணைக்காரர்' என்னும் பழம்பெருங் குடியில் 1-7-1906இல் புலவர் குழந்தை பிறந்தார். இவருடைய தந்தையாருடைய பெயர் முத்துச்சாமிக் கவுண்டர். தாயார் பெயர் சின்னம்மையார்

**கல்வி**

புலவர் குழந்தை சில திண்ணைப் பள்ளிக் கூடங்களில் ஏழு அல்லது எட்டுத் திங்கள்களே கல்வி கற்றார். இந்த எட்டுத் திங்கள்களும் தொடர்ந்தாற் போற் கற்கவில்லை. இடையிடையே விட்டு நான்கு ஆண்டுகளிற் கற்றார். "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற் கெழுமையும் ஏமாப் புடைத்து" என்பது திருவள்ளுவர் திருவாக்கு. அவ்வாறு முன் பிறவிகளிற் கற்ற கல்வியே இவர்க்கு இப்பிறவியில் கைகொடுத் துதவலாயிற்று என்பது தேற்றம்.

**இளங்கவி**

இவர் பத்தாண்டுச் சிறுவராக இருக்கும்போதே செய்யுளியற்றத்தக்க ஆற்றலுடையவராகத் திகழ்ந்தார். அவ்விளம் பருவத்தில் ஒரு பாட்டைப் பிறர் பாடக் கேட்டால் உடனே இவர் அப்பாட்டின் போக்கில் புதுப் பாட்டொன்றைப் புனைந்து விடுவார். எப்பொழுதும் ஏதாவதொரு பாட்டை எழுதிக் கொண்டிருப்பதே இவருக்கு வேலையாக இருந்தது. இதுவே இவருடைய

பொழுது போக்கு விளையாட்டாக இருந்தது. இவர் முதன்முதலாக இசைப் பாடல்களைப் பாடினார். செய்யுள் பாடும் இவருடைய நிலைமையைக் கண்ட அறிஞர்கள் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்று செய்யுள் பாடுமாறு கூறினார்கள். அந்நாளில் ஒலவலசிலோ அல்லது அதனைச் சேர்ந்த சுற்று வட்டாரங்களிலோ தமிழ் படித்தவர்கள் எவருமிலர். ஆகவே, இவர் ஆசிரியருடைய உதவியில்லாமலே இலக்கண இலக்கியங்களைக் கற்றார். 1934 ஆம் ஆண்டிற் சென்னைப் பல்கலைக் கழகத்துப் புலவர் தேர்விலும் வெற்றி பெற்றார். 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் மூதுரைக்கு இவரே தக்க சான்றாக அமைந்தார். இவருடைய பிறப்பிடமாகிய ஒலவலசில் இவருக்கு முன் படித்தவர் எவரும் இலர். ஊரார்கட்குக் கையெழுத்துப் போடவுந் தெரியாது. கல்வியிற் பேரூக்கம் கொண்டிருந்த இவர் தாம் கல்விகற்றுக் கொண்டிருந்தபொழுது முதியவர் பலருக்கும் எழுத்தறிவித்து அவர்களனைவரும் கையெழுத்துப் போடுந்திறமை பெறச்செய்தார். தாமே போதித்ததன்றித் தம்மையொத்த சிறார்களைக்கொண்டும் முதியவர்கட்குக் கல்விகற்பிக்கச் செய்தார். யாப்பிலக்கணம் படிக்கத் தொடங்குவதற்கு முன்னரே 1918 ஆம் ஆண்டில், "கன்னியம்மன்சிந்து" என்னும் நூலைப் பாடினார். அந்நூல் அச்சாகி வெளிவந்துள்ளது. கல்வியறிவற்ற எளியவர்கட்கு விளங்கும் வகையில் இவர் பல சிறு சிந்து நூல்களைப் பாடியுள்ளார்.

"செங்கரும்பை வாங்கித்
திருக்கையிலே தாங்கி
அங்கசவே ளோட
அவன்செயலைப் பாட
மங்கையர்கள் கூடி,
மணாளருட னாடித்
தெங்கிளநீ ருண்பாரடி
என் தங்கமே
தெருவில் திரிவாரடி."

என்பது கன்னியம்மன் சிந்தில் ஒரு பாட்டு. கல்விகற்றுக் கொண்டிருந்தபொழுதும் புதுச்செய்யுள்களை இயற்றுதலை இவர் மேற்கொண்டிருந்தபடியால் செய்யுள் பாடுந்திறம் இவருக்கு நன்கு அமைவதாயிற்று.

### ஆசிரியத் தொழில்

புலவர் தேர்வில் வெற்றிபெற்ற இவர் 39 ஆண்டுக் காலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

### தன்மான இயக்கத்திற் பணி

1925ஆம் ஆண்டில் பெரியார் ஈ. வெ. ரா. தன்மான இயக்கத்தைத் தொடங்கியதும் இவர் அவ்வியக்கத்திற் சேர்ந்து தொண்டாற்றலானார். பின்னர்த் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலத்தில் அதிலுஞ் சேர்ந்து பணிபுரிந்தார்.

### இந்தி எதிர்ப்பு

1938ஆம் ஆண்டிலும், 1948ஆம் ஆண்டிலும் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டார். பாடல்களாலுஞ் சொற்பொழிவுகளாலும் பெருந்தொண்டாற்றினார். இந்தி ஆட்சிமொழியானால் தமிழுக்கும் தமிழருக்கும் உண்டாகும் தீமையை விளக்கி, 'இந்தி ஆட்சிமொழியானால்' என்னும் ஆராய்ச்சி நூலினை எழுதி அச்சிட்டுக் கோவையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் வழங்கினார். இந்திமொழி தமிழருக்குத் தேவையில்லையென்பதையும் வற்புறுத்தியுள்ளார்.

### வேளாளன்

வேளாள வகுப்பாரிடையேயுள்ள பல பிரிவினரையும் ஒன்றுசேர்க்கும் பொருட்டும், அவ்வகுப்பினைஞர்களை முன்னேற்றப் பாதையிற் செலுத்தும்பொருட்டும் பல

ஆண்டுகள் வேளாளன் என்னுந் திங்களிதழை நடத்தினர். விதவை மணம், கலப்பு மணம், சீர்திருத்தமணம் முதலியன பரவுமாறு அவ்விதழில் எழுதினர். இவ்விதழால் இளைஞர்கள் புத்துணர்ச்சியும் புதுஊக்கமும் பெற்றனர்.

### விதவை மணம்

வேளாள சமூகத் தலைவரான வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் தலைமையில் தருமபுரி மாவட்டம் அரூரில் நடந்த வேளாளர் மாநாட்டில் விதவைமணத் தீர்மானங் கொண்டுவந்து நிறைவேற்றி நூற்றுக்கணக்கான விதவை மணங்கள் நடக்குமாறு செய்தார்.

### திருக்குறள் உரை

1948ஆம்ஆண்டில் சென்னையில் நடந்த திருக்குறள் மாநாட்டில் பகுத்தறிவுக்குப் பொருந்துமாறு திருக்குறளுக்கு ஓர் உரையெழுத வேண்டுமென்று ஈ. வெ. ரா. தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அப்புலவர் குழுவில் சோமசுந்தர பாரதியார் முதலிய ஐவரில் இவரும் ஒருவர். ஆனல், மற்றவர்கள் திருக்குறளுக்கு உரையெழுதுவதிற் சிந்தை செலுத்தவில்லை. இவர் ஒருவரே தனித்துநின்று பகுத்தறிவுக்குப் பொருந்த ஓர் உரையை எழுதி முடித்தார். அவ்வுரை இருபத்தைந்து நாள்களில் எழுதி முடிக்கப்பட்டது, குழந்தையுரை என்னும் பெயருடைய அவ்வுரை இவராலேயே அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### அண்ணவின் புலவர்

அறிஞர் அண்ணு அவர்கள் விடுதலை ஆசிரியராக ஈரோட்டில் இருந்தபொழுது அண்ணுவுடன் இவர் நெருங்கிப் பழகிக்கொண்டிருந்தார். அண்ணு இவரைப் பெயர் சொல்லிக் குறிப்பிடாமல் புலவர் என்றே குறிப்

பிட்டும் அழைத்தும் வந்தார். இறுதிவரையில் புலவர் என்னும் பெயரே அண்ணாவிடம் இவருக்கு நிலைத்து விட்டது.

**அனைவரும் மதித்தனர்**

புலவர் குழந்தை சிறந்த அறிஞராகத் திகழ்ந்தமையின் முதல்வர் கருணாநிதி முதலிய பிறரும் இவரிடத்திற் சிறந்த மதிப்புக்காட்டி வந்தனர்.

**கடவுள் இல்லை**

தன்மானக் கொள்கைக்காரராகிய இவர் சமய நம்பிக்கை சிறிதும் இல்லாதவர். வெள்ளக் கோவில் தீத்தாம்பாளையத்தில் 1930ஆம் ஆண்டில் சுவாமி சிவானந்த சரசுவதி என்பவரோடு கடவுள் இல்லை யென்று நான்கு நாள்கள் சொற்போரிட்டார்.

**எழுதிய நூல்கள்**

இவர் பள்ளிப் பாடநூல்கள் பலவற்றை எழுதியதோடு பிறநூல்களையும் எழுதியுள்ளார். இவரால் எழுதப்பெற்ற நூல்கள்: க. இராவண காவியம், உ. அரசியலரங்கம், ௩. தெருஞ்சிப்பழம், ௪. காமஞ்சரி; ௫. உலகப்பெரியோன் கென்னடி, ௬. திருநணாச் சிலேடை வெண்பா, ௭ புலவர் குழந்தை பாடல், ௮. திருக்குறள் குழந்தையுரை, ௯. தொல்காப்பியப் பொருளதிகாரம் குழந்தையுரை, க0. நீதிக் களஞ்சியம் உரை, கக. யாப்பதிகாரம், கஉ. தொடையதிகாரம், க௩. இன்னூல், க௪. தொல்காப்பியகாலத் தமிழர், க௫. திருக்குறளும் பரிமேலழகரும், க௬. பூவாமுல்லை, க௭. கொங்கு நாடு க௮. தமிழக வரலாறு, க௯. தமிழ் வாழ்க, உ0. தீரன்சின்னமலை, உக. கொங்குநாடுந் தமிழும், உஉ. கொங்குக் குலமகளிர், உ௩. அருந்தமிழ் விருந்து, உ௪. அருந்தமிழ் அமிழ்து, உ௫. சங்கத்

தமிழ்ச் செல்வம், உசு. ஒன்றே குலம், உஎ. அண்ணல் காந்தி, உஅ. தமிழெழுத்துச் சீர்திருத்தம், முதலியன இவர் இயற்றிய நூல்கள். இந்நூல்களில், செய்யுள், இலக்கணம், ஆராய்ச்சி, நாடகம், உரை முதலிய யாவும் அமைந்துள்ளன.

**பகவத்சிங் பாட்டு**

நாட்டு விடுதலைக்குழைத்த வீரர்களிடம் இவர் மிகுந்த பற்றுக்கொண்டிருந்தார். பகவத்சிங் முதலிய விடுதலை வீரர்களின் கொள்கையில் இவர் மிகுந்த பற்றுடையவராக விருந்தார். 1931ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியாளர்கள் அச்சீரிய பெருமக்களைத் தூக்கிலிட்டுக் கொன்றபொழுது இவர் உணர்ச்சிமிக்க பாடல்களைப் பாடி வருந்தினர். அப்பாடல்கள், "புலவர் குழந்தை பாடல்கள்" என்னும் நூலிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

**இராவண காவியம்**

இராவண காவியம் என்னும் நூல் சிறந்த விருத்தப் பாக்களால் அமைந்தது. புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டது. இந்நூலைக் கண்டு மருட்சியடைந்த காங்கிரசாட்சியாளர் இக்காவியம் மக்களிடையே பரவுவதை விரும்பவில்லை. எனவே, இதனைப் பறிமுல்த செய்தனர். பிறகு தி. மு. க. அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், கலைஞர் கருணாநிதியால் அந்நூல் மீதிருந்த தடை நீக்கப்பட்டது.

**காமஞ்சரி**

காமஞ்சரி என்னும் நூல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையினுடைய மனோன்மணியத்தைப் போன்ற போக்கில் அமைந்து மனோன்மணியத்திலுஞ் சிறந்து

விளங்குகிறது. ஆயினும் காமஞ்சரி என்னும் பெயர் கவர்ச்சிகரமாக அமையாததால் நூல் புகழ்பெற்று விளங்குவதற்கு இடமில்லாமல் மறைந்து நிற்கிறது.

## தமிழ் வளர்ச்சியிற் கருத்து

தமிழ் வளர்ச்சியில் இவர் விழுமிய கருத்துக்கொண்டிருந்தார். தப்புந் தவறுமாகச் செய்யுளியற்றினால் அதனைப் பொறுக்கமாட்டார். அப்பாடல்களை ஒழுங்கு செய்து நன்முறையில் விளங்குமாறு திருத்திக்கொடுப்பார். தவறான பாட்டுக்களைப் பாடுவதால் பாடுபவர்கட்குண்டாகும் இழுக்குகளையுஞ் சுட்டிக்காட்டி அறிவுரை கூறுவார். தப்புந்தவறுமாகப் பாடல்கள் பாடிப் பிறர் இகழ்ச்சிக்குள்ளாவதை இவர் பொறுக்கமாட்டார். இத்தகைய பண்புநலம் எல்லாரிடத்திலும் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

## பாராட்டு

புலவர் குழந்தையின் புலமைத் திறத்தை மக்கள் அறிந்து பாராட்டாமல் விட்டுவிடவில்லை. பவானிக் குமார பாளையம் பகுத்தறிவுக் கழகத்தார் பொதுக்கூட்டம் நடத்திப் புலவரைப் பாராட்டினர். புதுவை முதல்வர் பருக்மரைக்காயர் பொன்னாடை போர்த்திப் பெருமைப் படுத்தினர். விழுப்புரம் பகுத்தறிவாளர் கழகத்தார் பாராட்டுக் கூட்டம் நடத்திப் பெரியார் அவர்களைக் கொண்டு பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தனர். வேறிடங்களிலும் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெற்றன.

## வாழ்க்கைத் துணையும் மக்கட் பேறும்

புலவர் குழந்தைக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த அம்மையார் பெயர் முத்தம்மையார். இவர்

கல்வியறிவு பெருதவராயினும் கணவரின் கருத்தறிந்து நடப்பவராகச் சிறந்து திகழ்ந்தார். இவர்கட்குச், சமத்துவம், சமரசம் என்னும் இருபெண்மக்கள் மக்கட் செல்வமாகத் தோன்றினர். இவர்களும் கல்வியறிவிற் சிறந்து பட்டம் பெற்றனர்.

**இறுதி**

வையத்து வாழ்வாங்கு வாழுஞ் சிறப்புப் பெற்று இலக்கண இலக்கிய உலகிற்கு பல நற்றொண்டுகள் ஆற்றிய புலவர் குழந்தை அவர்கள் தமது அறுபத் தாருவது ஆண்டில் 25-9-72இல் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறவாத புகழுடம்பைப் பெற்ருர்.

---

## *உ-அ. உரத்தூர் கோ. வைத்தியலிங்கனார்

### தோற்றம்

சோழ வளநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலத்திற்கு அண்மையில் உள்ள உரத்தூர் என்னுஞ் சிற்றூரில் அகமுடையார் குலத்தில் 1870ஆம் ஆண்டில் வைத்தியலிங்கனார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கோவிந்தப் பிள்ளை; தாயார் பெயர் இராசம்மாள்.

### கல்வி

அகவை ஐந்து நிறைந்ததும் வைத்தியலிங்கனார் திண்ணைப் பள்ளியிற் சேர்க்கப்பட்டுக் கல்விகற்கத் தொடங்கினார். பள்ளியில் ஓரளவு கல்வி கற்றதும் தமிழ் நூல்களைத் தாமே படிக்கத் தொடங்கினார். நிகண்டு நன்னூல் முதலியவற்றை மனப்பாடஞ் செய்து நன்கு கற்கலானார். பல தமிழ் நூல்களையும் பயின்று தம்முடைய அறிவைப் பெருக்கிக் கொண்டார். தம்முடைய பொழுதைத் தமிழறிவைப் பெருக்குவதிலேயே செலவிடலானார். இலக்கண இலக்கியப் பயிற்சி ஓரளவு உண்டாயிற்று. தாமே செய்யுள் இயற்றும் ஆற்றலையும் அடைந்தார். வைத்தியலிங்கனார் தம்முடைய பொழுது முழுவதையும் கல்விகற்றலிலும் தமிழறிவைப் பெருக்குவதிலுமே செலவிட்டமை இவ

---

* இவ்வரலாற்றுக் குறிப்புக்களை எழுதியனுப்பியவர் புலவரவர்களின் புதல்வரும் நாகையில் தமிழாசிரியராக உள்ளவருமாகிய உயர்திரு. கோவை இளஞ்சேரன் அவர்களாவர்.

ருடைய தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. இவ்வாறிருக்கும் இவன் உதவாக்கரையாகப் போனாலும் போகக்கூடும் என்று எண்ணினார். "உருப்படியான வேலைகளைச் செய்; சுவடிகளைப் போட்டுப்புரட்டி வீண்பொழுது போக்காதே" என்று கண்டித்தார். ஆனால், வைத்தியலிங்கனாரோ தந்தையார் கூறுவதை ஒருபொருட் படுத்தாமல் தம் முடைய போக்கிலேயே போய்க் கொண்டிருந்தார். தந்தையார்க்கு மிகுந்த சீற்றமுண்டாகியது; வீட்டை விட்டு வைத்தியலிங்கனாரை விரட்டிவிட்டார். வீட்டை விட்டு வெளியேறிய வைத்தியலிங்கனார் எவ்வாறு யினும் நன்கு கல்விகற்க வேண்டும் என்று உறுதி கொண்டார்.

ஈழத்திற் கேகல்

அந்நாளில் ஈழவள நாட்டில் பொன்னம்பலம் பிள்ளையென்பவர் புகழ்பெற்ற புலவராக விளங்கியிருந் தார். அவருடைய புலமைத் திறத்தைப் பலராலுங் கேள்விப்பட்டிருந்த இவர் எவ்வாறேனும் இலங்கைக்குப் போய் அப்புலவரிடங் கல்விகற்க வேண்டுமென்று எண்ணினார். சிலருடைய துணைகொண்டு ஈழத்தை யடைந்து பொன்னம்பலனாரைக் கண்டு தம்முடைய விருப்பத்தையும் தாம் மிகுந்த தொல்லைப்பட்டு இந்தியாவி லிருந்து வந்திருத்தலையுந் தெரியப்படுத்தினார். பொன் னம்பலனார் வைத்தியலிங்கனாருடைய கல்வியார்வத்தைக் கண்டு மிகுந்த இறும்பூதெய்தினார். இலக்கண இலக் கியங்களை நன்கு போதித்துச் சிறந்த புலவராக்கினார். பொன்னம்பலனார் சிறந்த புலவராதலின் இவருடைய புலமையுஞ் சிறந்து விளங்கியது. சொற்பொழிவு செய்தல் முதலியவற்றினும் புகழ்பெற்றார்.

தாயகந் திரும்பல்

பொன்னம்பலனாரிடம் கல்விகற்ற இவர் அந்நாட் டிலேயே இலக்கியச் சொற்பொழிவு சமயச் சொற்பொழிவு

முதலியன செய்யலானுர். இவற்ருல் இவருக்குப் புகழும் பொருளும் குவியலாயின. இனிமேல் தமிழகம் திரும்பலாம் என எண்ணிய இவர் தமிழ்நாட்டை யடைந்தார். ஆங்காங்குச் சொற்பொழிவுகள் செய்துகொண்டு உரத் தூரையடைந்தார். மைந்தன் பொருளுடனும் புகழுட னுந் திரும்பியிருத்தலைக் கண்ட தந்தையார் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்.

### செந்தமிழ்க் கல்வி நிலையம்

வைத்தியலிங்கனூர், "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று எண்ணினூர். நீடாமங்கலத்தில், "செந்தமிழ்க் கல்வி நிலையம்" என்னும் பெயரோடு ஒரு தமிழ்க் கல்விச்சாலையை ஏற்படுத்தினூர். பலருக்குந் தமிழ்க் கல்வியைப் போதித்து அவர்களையெல்லாம் அறிவுடையவர்களாகச் செய்தார். அவர்களனைவரும் இவரை நன்கு மதித்துப் பாராட்டிப் போற்றினர். இவ்வாறு தமிழாசிரியராக இருந்ததோடு அமையவில்லை. பல ஊர்கட்குஞ் சென்று சொற்பொழிவாற்றினூர். மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடாகிய செந்தமிழில் பல கட்டுரைகள் எழுதினூர்.

### மாணவர்கள் பற்று

இவரிடங் கல்விகற்ற மாணவர்கள் இவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தனர். வைத்தியலிங்கனூருடைய மாணவர்களில் ஆறுமுகம் பிள்ளை, கறுப்பையாப் பிள்ளை என்று இரு மாணவர்கள் இருந்தனர். ஆறுமுகம் பிள்ளையென்பவர் புலவர்க்கு உறவினர். புலவரை 'அத்தான்' என்று அழைப்பார். சில சமயங்களில் நையாண்டி செய்வதும் உண்டு. ஒருநாள் புலவர் மேற் கூறிய இருவரோடும் மாலை நேரத்தில் உரையாடிக் கொண்டு உலாவி வந்தார். அப்பொழுது ஆறுமுகம் பிள்ளை ஏதோ கடுமையான நையாண்டியாகப் பேசி

விட்டார். இத்தையாண்டியைப் பொறுக்காத கறுப்பையாப் பிள்ளை ஆறுமுகம் பிள்ளையைத் தூக்கிப் பக்கத்திலிருந்த சப்பாத்திப் புதரிற் போட்டுவிட்டார். இதனைக் கண்டு புலவர் பதறிப்போனார். பிறகு அவரை வெளியே தூக்கச் செய்து முள்ளைப் பிடுங்கி யெடுத்தனர்.

### திருமணம்

இவருக்கு அகவை முப்பத்தைந்தாகியும் திருமணஞ் செய்து கொள்ளாமலே யிருந்தார். தந்தையார் திருமணஞ் செய்துகொள்ளுமாறு கூறும்போதெல்லாம் ஏதாவது சாக்குப்போக்குக் கூறித் தட்டிக்கழித்துக் கொண்டே யிருந்தார். தந்தையார் இயற்கையெய்தினார். இயற்கையெய்துமுன் தம்முடைய மூத்த மகனாகிய கண்ணப்பனிடம் "உன் தம்பியின் திருமணத்தை விரைவில் நிறைவேற்று" என்று கூறியிருந்தார். வைத்தியலிங்கனாருந் தம்முடைய தந்தையாரின் இறுதி விருப்பத்தை நிறைவேற்ற உடன்பட்டார். கண்ணப்பர் முத்துப் பேட்டையில் இருந்த உறவினர் வீட்டில் பெண் பார்த்தார். மீனாட்சியென்னும் மெல்லியலை மணமகளாக முடிவு செய்தார். திருமணம் இனிது நிறைவேறியது.

### இரங்கூன் ஏகுதல்

வைத்தியலிங்கனாருக்குத் திருமணம் நடைபெற்ற சில திங்களில் தமையனாராகிய கண்ணப்பர் இயற்கையெய்தினார். அவர்க்கு மூன்று பெண்மக்கள் இருந்தனர். அக்குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பும் இவருடைய தலையில் விழுந்தது. ஆகவே, பொருள் தேடும் பொருட்டு இரங்கூனுக்குச் சென்றார். இவருடைய புலமைத் திறத்தை உணர்ந்த பலர் அங்கிருந்தபடியால் இவர் பத்தாண்டுகள்வரை அங்குத் தங்கிச் சொற்பொழிவு முதலியன செய்து பொருள் திரட்டிக் குடும்பத்

திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். பத்தாண்டுகளுக் குப் பிறகு ஊருக்குவந்து சேர்ந்தார்.

### செட்டி நாட்டு வாழ்க்கை

ஊரையடைந்த புலவர் சிலகாலம் ஊரில் இருந்தார். இவருடைய புலமைத் திறமையை நன்குணர்ந்திருந்த தனவைசிய அன்பர்கள் தம் நாட்டிற்கு அழைத்தனர். செட்டிமார் நாட்டுக்குச் சென்று பல ஊர்களினும் கம்ப ராமாயணச் சொற்பொழிவு, பெரிய புராணச் சொற் பொழிவு முதலியன நிகழ்த்தினர். அடிக்கடி அங்கு சென்று மீண்டுவந்த புலவர் அன்பர்களுடைய வேண்டு கோளுக் கிணங்கி நாட்டரசன் கோட்டை, கல்லல் முதலிய நகரங்களில் தங்கித் தமிழ்த் தொண்டு செய்தார். இவரிடம் பலபேர் கல்விகற்றுச் சிறப்புற்றனர்.

### மக்கட் பேறு

வைத்தியலிங்கனர் திருமணம் ஆன ஆண்டிலேயே இரங்கூன் சென்று விட்டபடியாலும் அங்குப் பத் தாண்டுகள்வரை தங்கிவிட்டபடியாலும் திருமணமான பத்தாண்டுகள் வரையிலும் இவருக்கு மக்கட்பேறு உண் டாகவில்லை. இவர் திரும்பிவந்த பிறகு முதலாவதாக ஓர் ஆண்குழந்தை தோன்றியது. ஆனல், பிறந்த அறைக்குள்ளேயே அக்குழந்தை இறந்தது. இரண்டாவ தாக ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் குஞ்சிதபாதம் என்று பெயரிட்டார். மூன்ருவதாக நாட் டரசன் கோட்டையிற் பிறந்த ஆண்குழந்தைக்குத் தம் முடைய தமையனரின் நினைவுக் குறியாகக் கண்ணப்பன் என்று பெயரிட்டார். தம்முடைய தமையனர் பெண்கள் மூவருக்குந் தம்முடைய பொறுப்பில் திருமணஞ் செய்து வைத்தார். புலவர் கல்லல் நகரில் தங்கியிருந்தபோது தோன்றிய ஆண்குழந்தைக்கு மெய்கண்டசிவம் என்று பெயரிட்டார். இம்மெய்கண்டசிவம் இந்நாளில் கோவை இளஞ்சேரன் என்னும் பெயரோடு விளங்குவதுடன்

புலமைக் கல்விகற்றுப் புலவராகி நாகையில் உள்ள உயர் நிலைப் பள்ளியொன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றுவ துடன் தனித்தமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார்க்கு நாகை நகரில் பார்வையான இடத்தில் உருவச் சிலை அமைத்தல் நாகைத் தமிழ்ச் சங்கத் தொண்டு முதலிய வற்றை செய்து சிறப்புடன் வாழ்கிறார். இம் மெய்கண்ட சிவம் இன்னும் பல்லாண்டினிது வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிவாராக!

## கோவைக் குடும்பம்

மெய்கண்டசிவம் என்னும் பிள்ளைப்பெயர் பெற்ற கோவை இளஞ்சேரன் தம்பெயருக்கு முன்னால் கொண் டுள்ள கோவை என்னுஞ் சொல்லைக் கொண்டு சிலர் இவர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர் போலும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். வைத்தியலிங்கனார் திருக்கோவையாரைத் திறம்பெறப் பாடஞ் சொல்லு தலைக் கண்ட பண்டிதமணி கதிரேசன் செட்டியார் வைத் தியலிங்கனாரைக் கோவைப் புலவர் என்று பாராட்டிப் பேசினார். அச்சொல்லில் கோ என்பது கோவிந்தப் பிள்ளையையும், வை யென்பது வைத்தியலிங்கனாரையுஞ் சுட்டி நிற்றலால் கோவைப் புலவர் என்பது குடும்பப் பெயராகவும் அமைந்து விட்டது.

## மருத்துவம் முதலியன

வைத்தியலிங்கனாரிடம் தமிழ்ப் புலமையொடு காலப் போக்கில் மருத்துவப்புலமையும் வளர்ந்து கொண்டு வந்தது. காரைக்குடியில் இருந்தபோது, மருத்துவப் பணிகளைப் பெருக்கினார். அருமைவாய்ந்த மருந்துகளைப் படைத்தார். அவை பலருக்கும் பயன்படுமாறு செய் தார். காரைக்குடியில் அன்பர்கள் பலர் இவரைப் போற்றிப் பாராட்டினார்கள். அத்தகைய அன்பர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள் அரைக் காசு செல்லப்பசெட்டியார், மெய்யப்பச் செட்டியார் முதலியோராவர். தமிழ்க் கட

லெனத் தற்காலம் போற்றப்பெறும் திரு. ராய. சொ. அவர்கள் வைத்தியலிங்கனர் பல அன்பர்கட்குப் பாடம் நடத்தியபோது கேட்டுக்கொண்டிருந்தவராவர்.

**நூல்கவியற்றல்**

இவர் அடிக்கடி நூல்களும் இயற்றிக் கொண்டிருந் தார். இவரால் இயற்றப்பெற்ற நூல்கள் செந்தமிழில் வெளிவந்த சாவித்திரி கதை, நளாயினி கதை. கம்ப ராமாயண உரை நடை முதலியன. இவை சிறுசிறு நூல் களாக வெளிவந்தன. மற்றும் இவரால் எழுதப்பெற்ற நூல்கள் ஆத்திசூடி விருத்தியுரை, சண்முக நாதபுரச் சிலேடை வெண்பா, ஆட்கொண்ட மாலை, திருவிளை யாடல் மாலை, சமயங்கள், சிவதீக்கை, சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறு, பெரியபுராண உரைநடை, புலால் மறுத்தல் முதலியன.

*வாழ்வை நிறுத்தலால் வான்கதியை காட்டுதலால்*
*ஆழிவாய்த் தோன்றும் அருமையால்—வாழ்விலுயர்*
*சண்முக நாத புரமேவு தாழ்குழலீர்*
*விண்ணமுது மந்திரமும் ஏல்.*

என்பது அமிழ்தத்திற்கும் மந்திரத்திற்கும் இரட்டுற மொழிதலாகப் பாடிய சண்முகநாதபுரச் சிலேடை வெண் பாவில் ஒரு பாட்டு.

*"சுந்தரர்தம் பாட்டிற்கே மாந்து மன்றல்*
*தோன்றியவர் தமைத்தடுத்தாட் கொண்டு தூது*
*விந்தைபெறச் சென்றுவிழி கரந்து மீந்தும்*
*வெறுநிலத்து முதலைவாய் மதலை தந்தும்*
*சந்ததமுஞ் சைவநெறி தழைக்கச் செய்தும்*
*தனிவெள்ளை யானையின்மேல் வரவழைத்துக்*
*கந்தமலர்க் கடிபொழில்சூழ் கைலை நல்கும்*
*கடவுளரைக் கல்விநகர் தனிற்கண் டேனே."*

என்பது ஆட்கொண்ட மாலையில் ஒரு பாட்டு.

"வாசவன்முன் விருத்திரனைக் கொன்ற தாலே
வலியபழி பிரமகத்தி யாகப் பற்றிப்
பாசம்போற் றுயர்ப்படுத்தப் பாரி லெங்கும்
பலதலமுஞ் சென்றுமது தொடர்ந்து மேவ
நேசமுடன் கடம்பவனங் கண்ட வன்றே
நீங்கிடவே செய்தவனை நிலைமி ஞண்ட
காசலகங் கயற்கணிசேர் மதுரை வேந்தாம்
கல்லிநகர்க் கடவுளையாங் கண்டுய் வோமே."

என்பது திருவிளையாடல் மாலையில் இந்திரன் பழிதீர்த்த பாட்டு.

**உத்தரம் வரை உரையெழுதிய புலவர்**

இவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்ற போது கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, தமிழ வேள் உமாமகேசுரனார் முதலியவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். இவர் ஆத்திசூடிக்கு விருத்தியுரை யெழுதியுள்ளார் என்பதை அறிந்த அவர்கள் 'மைவிழி யார் மனையகல்' என்பதற்கு எவ்வாறு உரையெழுதி யிருக்கிறீர்கள்? மை தீட்டிய விழிகளையுடையார் என்பது மகளிர் யாவரையுங் குறிக்குமே; அவ்வாருக, 'மைவிழி யார் மனையகல்' என்ற தொடரில் ஒளவையார் பரத்தை யரை 'மைவிழியார்' என்று குறித்திருப்பது ஏன்? அஃதெவ்வாறு பொருந்தும்?" என்று கேட்டனர். அதற்கு இவர், "மைவிழியார் என்பது எல்லாமகளிரை யுங் குறிக்குந் தொடரே. அத்தொடர்மட்டும் நின்று பரத்தையரைக் குறிக்கவில்லை 'மனை' என்ற சொல்லுஞ் சேர்ந்து பரத்தையரைக் குறிக்கின்றது. மைதீட்டிய விழியை உடையார்க்கு உரிமையான - உடைமையான வீட்டை நெருங்காமல் அகன்றுசெல் என்பது அதற்குப் பொருள். நிலம், வீடு முதலிய உடைமைகள் ஆண்கள் பெயரில்தான் உடைமையாக வழங்கப் படுவது மரபு. பெண்கள் பெயரால் வழங்கப்படுவதில்லை. பரத்தையர் தாம் தங்கள் பெயரிலேயே உடைமையாகக் கொள்வர்.

இங்கு 'மைவிழியாரது மனே' என்று உடைமைப் பொருளில் உண்மையால் மைவிழியார் என்பது பரத்தையரைக் குறிப்பதாகின்றது" என்று முடித்தார். இவ்வுரையை அனைவரும் பாராட்டினர். இவ்வுரை எத்தனை பக்கம் வரக் கூடுமென்று கேட்ட உமாமகேசுரனுர்க்குப், "பக்கக் கணக்கை எவ்வாறு சொல்வது? கையாற் செய்யப்பட்ட தடித்த தாளில் எழுதியுள்ளேன். அவற்றை அடுக்கினுல் அந்த அடுக்கு உத்தர முகடுவரை உயரும்'' என்ருர். இதனைக் கேட்ட கரந்தைக்கவியரசு, ''தாங்கள் உத்தரம் வரை உரையெழுதிய உரை ஆசிரியர் என்று கூறலாம்'' என்ருர். இதனைக் கேட்டு அனைவரும் நகைத்தனர். உத்தரம் வரை உரையெழுதிய புலவர் என்று இவருக்கு ஒருபெயரும் ஏற்பட்டது.

### இறுதி

வைத்தியலிங்கனுரவர்கள் பலவாறு பொருள் திரட்டியும் தமக்கென்ருே தங்குடும்பத்திற் கென்ருே பிற்கால வாழ்க்கைக் கென்று பொருள்தொகுத்து வைக்காமல் வருகிற வருவாய்களையெல்லாம் கல்விகற்பவர் கட்கு உணவிடுதல் முதலிய நல்ல காரியங்களிற் செலவிட்டுக்கொண்டிருந்தார். இதனுல் இவரிடம் பொருளில்லாமற் போயிற்று. இந்நிலையில் அகவையும் அறுபதை நெருங்கியது. நாம் இனிமேலேனும் சிறிது பொருள் தொகுத்து வையா தொழியின் நங்குடும்பத்தினர் நமக்குப்பின் அல்லலுறுவர் என்று முடிவுசெய்த புலவர் இரங்கூன் சென்று பொருள் திரட்டிவர முற்பட்டார். 1930 ஆம் ஆண்டிற் புறப்பட்டு இரங்கூனுக்குச் சென்ருர். அங்குதங்கிப் புராணச் சொற்பொழிவு முதலியன நிகழ்த்திப் பொருளீட்டும் பணியிலீடுபட்டிருந்தார். ஒருநாள் இரவு பதினெருமணிவரை கம்பராமாயணச்சொற்பொழிவுநிகழ்த்தினுர். அதன்பின்னரும் அன்பர்கள் பலரோடு உரையாடிக்கொண்டிருந்து பின் படுக்கைக்குச் சென்ருர். படுக்கையில் படுத்தும் நன்கு

உறங்காமல் சிறிதுநேரத்தில் எழுந்து திருவாசகத்தை ஓதினர். பின் படுத்தவர் திருவாசகத்தின் பொருளாகிய சிவபெருமானுடைய திருவடி நீழலிற் கலந்து விட்டார். அன்பர்கள் துயர்க் கடலிலாழ்ந்து இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். பொருளோடும் புகழோடும் புலவர் மீண்டுவருவார் என்று எண்ணிக் கொண்டிருந்த புலவரின் குடும்பத்தினர் அரும் பொருள் தேடச் சென்றவர் பரம்பொருளோடு கலந்தார் என்னுஞ் செய்தியையே கேட்கமுடிந்தது.

## இருபத்திரண்டு முதல் முப்பது முடிய உள்ள
## ஒன்பது புத்தகங்களில் வெளிவந்துள்ள
# 205 புலவர் பெருமக்களின் பெயர் அகரவரிசை

[எண் : புத்தக எண்]


அகிலேச பிள்ளை, வே. 23
அழகசுந்தர தேசிகர் 29
அடுக்கு மொழி ஆவுடையப்ப செட்டியார் 27
அப்துர் ரஹ்மான் புலவர் 23
அப்பாச்சாமிப் பிள்ளை 25
அமுதபாலியார் 22
அருணாசல பிள்ளை, வே. 26
அருளம்பலவனார் 28
அவிநாசிநாதர் 30
அறிஞர் அண்ணாத்துரை 30
அனந்தராமையர் 23
ஆத்துமாநந்த அடிகள் 30
ஆரணி குப்புச்சாமி முதலியார் 28
ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் 22
ஆனந்த குமாரசாமி, மு. 27
இரசபதி அடிகள் 28
இராகவ ஐயங்கார், மு. 24
இராசமாணிக்கனார், மா. 28
இராசுப்பிள்ளை, நா 24
இராமசாப்பிள்ளை, செ ரெ. 25
இராமசாமி யடிகள் (கீழ்வல்லம்) 27
இராமச்சந்திர தீட்சிதர், (வி. ஆர்) 30
இராமநாத பிள்ளை, சித்தாந்த பண்டிதர் ப 30
இராமலிங்கம் பிள்ளை, ஆ. தி. 30
இராமாநுசதாசர் 23
இலக்குமண பாரதியார், தே. 22
இளசை திருமலைச்சாமி 30
ஈசுவர அடிகளார் 29
உருத்திரபதி, சி. 27
உலகநாத சுவாமிகள் 28
உலக ஊழியர், வீ. 27
ஏகாம்பர முதலியார், (செஞ்சி) நா. 28
ஏகாம்பர சிவயோகிகள் 25
ஐயன் பெருமாள் கோனார் 30
ஐயாச்சாமி முதலியார் 23
கடுவெளிச் சித்தர் 22
கணேச பிள்ளை, டி. எஸ் 26
கதிரைவேற் பிள்ளை, கு. 25
கதிர்வேல் நாடார், க. சா. 23
கந்தசாமி ஐயர், ச. 23
கந்தசாமிப்பிள்ளை, அ. 29
கந்தசாமிப்பிள்ளை, கு 23
கந்தசாமிப்பிள்ளை, து. நா. 30
கந்தசாமிப் புலவர் (முத்) 25
கந்தசாமி முதலியார், வை. 24
கந்தைய பிள்ளை, ச. 26
கந்தைய பிள்ளை, ந சி. 28
கமலநாத முதலியார், ஆ. 25
கருணையானந்த பூபதிகள் 23
கவி முத்துச்சாமிப்பிள்ளை 30
கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் 28
கவிராஜ் தமிழ்ச் சித்தர் இராமசாமி சோதிடர், எ. சு. 30
கனகசபை நாயகர், பொ. 28
காசிகாநந்த அடிகள் 29
காசி விசுவநாத முதலியார் 22

காளியண்ணப் புலவர் 25
கிருட்டிண ஐயர் 22
கிருட்டிணசாமி சர்மா, எஸ். 25
கிருட்டிணசாமி நாட்டார், க. 25
கிருட்டிணதாஸ், டி. வி. 23
கிருட்டிணவேணி அம்மையார் 28
குமாரசாமி ஆச்சாரியார், சு. ஏ 26
குமாரசாமி ஐயர் 28
குமாரசாமி, வை. நா. 24
கோவிந்த பிள்ளை 22
கோவிந்த மூப்பனர், பெ. 28
கோவை கிழார் ம. இராமச்சந்திரன் செட்டியார் 29
சக்கரவர்த்தி நயினர், அ. 24
சங்கரமூர்த்திக் கவிராயர் 22
சங்குப்புலவர், தி. 28
சச்சிதானந்தம் பிள்ளை, ச. 30
சண்முகநாதன் கவிராசர் 22
சதாசிவ அடிகள், குக. 27
சதாசிவ பண்டாரத்தார், வை. 24
சபாபதிப்பிள்ளை, ரா. 25
சம்பந்த முதலியார் பம்மல் 26
சரவண முதலியார், அ. மு. 24
சரவண முத்தன் (அ) 28
சர்க்கரை இராமசாமிப் புலவர் 26
சங்கு சித்த சிவலிங்க நாயனர் 22
சாமிசகசாநந்தர் 24
சாமி சிதம்பரனர் 25
சாமிநாத மாதவராயர் 23
சிதம்பரநாதச் செட்டியார், அ 28
சிறை மீட்டான் கவிராயர் 30
சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் 26
சிவஞானம், ஆ. மா. 26
சிவநேசன் இராமசாமிச் செட்டியார் 25
சிவப்பிரகாசம் பிள்ளை, மு. 24
சிவராசபிள்ளை, க. நா 28
சின்னச்சாமிக் கவிராச பண்டிதர் 25
சின்னச்சாமிப்பிள்ளை 24
சின்னைய பூபதி 27
சீநிவாசன், சி. ஆர். 26
சீநிவாச ஐயங்கார், வே. 27
சீநிவாச சாத்திரியார், வ. ச. 26
சுந்தர முதலியார், வி. 25
சுந்தரேச வாண்டையார், வை. 29
சுப்பராயச் செட்டியார் (சோடசாவதானம்) 28
சுப்பிரமணிய ஐயர், எம். எஸ். 27
சுப்பிரமணிய ஐயர், ந 27
சுப்பிரமணியக் கவிராயர் 30
சுப்பிரமணிய சிவம் 27
சுப்பிரமணிய பாரதியார், அ 28
சுப்பிரமணிய யோகி, ச. து. 27
சுப்பிரமணியனர், பேராசிரியர், கோ. 30
சுப்பையாப் பிள்ளை, தெ. 26
சுயம்பிரகாச அடிகள் 22
சுரேந்திரநாத் ஒகலி ஆரியா, சி. பா. யா. 26
சுவாமி அருணகிரிநாதர் 26
செய்யிது முகியித்தீன் கவிராசர் 22
செய்யிது முகம்மது அண்ணுவியார் 27
செங்கல்வராய பிள்ளை, டாக்டர். வ. சு. 30
சேதுப்பிள்ளை, ரா. பி 26
சொக்கலிங்கப் பிள்ளை 23
சொக்கலிங்கனர், வே. செ. 26
ஞானதேசிகம் பிள்ளை, இரா. 24
ஞானப் பிரகாச அடிகள் 22
சதாவதானி ஆறுமுகம் பிள்ளை 28

தனபாலபதுமாவதி அம்மையார் 24
தாண்டவராய அடிகள் 22
தாமரைக் கண்ணி யார், வ. பா. 30
திம்மப்ப அந்தணனார் 30
திருகூடசுந்தரம் பிள்ளை, பொ. 29
திருப்பதி சுவாமிகள் 23
திருப்பதி வேங்கடாசலபதி யாச்சாரி, சோ 23
திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கர் 29
திருவிளங்க தேசிகர். மு. 30
துரைசாமி ஐயங்கார் வடுவூர் 28
தேசிகன், ரா ஸ்ரீ 28
தோபா சுவாமிகள் 22
நகரம் சங்கரபாண்டியனார் 30
நடராச ஐயர், வி. 23
நடேச சுவாமிகள் 25
நடேச பிள்ளை, சு. 28
நமச்சிவாய நாவலர் 23
நவநீத கிருட்டிணன், அ. க. 28
நாகர்கோயில் ஆறுமுக நாவலர் 29
நாதமுனிப் பிள்ளை, கு 23
நாமக்கல் கவிஞர் இராம லிங்கம் பிள்ளை, வே. 30
நாவலர் சோமசுந்தர பாரதியார் 24
நெல்லையப்பர், எம். ஏ. 23
நெல்லையப்பர் பரலி, சு. 29
பஞ்சநதம் பிள்ளை, ரா. 29
பண்டித சித சங்கத்து நாராயணசாமியடிகள் 27
பண்டித வி. இராமசாமி நாயுடு 23
பாப்லி, எச். ஏ. 24
பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) 26
பாலகிருட்டிண பிள்ளை, ஆ. 28
பாலூர் கண்ணப்ப முதலியார் 29
பாஸ்கர தொண்டைமான், தொ. மு. 27
பீர் முகமது அப்பா 30
புலவர் குழந்தை 30
புலவர் பாண்டியனார் 29
புன்னைவனநாத முதலி யார், பு. சி. 28
பூபால பிள்ளை, (ச) 28
பெரியசாமிப்பிள்ளை பு. அ 23
பெருமழைப் புலவர் சோம சுந்தரனார் 30
பொன்னுசாமிப் பிள்ளை, தி. ம. 27
பொன்னுச் செல்லைய பாரதி 30
மகாதேவ முதலியார், வா. 30
மங்கலங்கிழார் குப்புசாமி முதலியார் 26
மதுர கவிராயர் 23
மயிலை சிவமுத்து 28
மாசிலாமணி முதலி யார், சிவ. ஆ 25
மாசிலாமணி முதலியார் (ப) 28
முகம்மது இபுராகிம் புலவர் 27
முத்தமிழ் புலவர் 23
முத்துக்குமாரசாமிப் பிள்ளை, தி. 27
முத்துக்குமாரசாமி முதலி யார், அ. 25
முத்துச்சாமி ஐயர், வே. 30
முத்துச்சாமிக் கவிராயர் 23
முத்துச்சாமிப் பிள்ளை, எஸ். (பண்டிதர்) 27
முருகப்ப செட்டியார், வா. 24
முருகேச செட்டியார், சிவ. 24
முருகேச பண்டிதர் 27
மொட்டை வேலாப் போடியார் 28
ரங்கராசு, ஜே. ஆர். 28

வடிவேலு முதலியார், ம 24
வயிரவநாதன் கவிராயர் 22
வரராமயோகி 22
வரவேற் கவிராயர் 27
வள்ளல் வடுகநாதக் கவி ராயர் 23
வாசுதேவ முதலியார் 24
வாலைசரஸ்வதி சுப்பிரமணியக் கவிச் சக்கரவர்த்தி 25
வாலையானந்த அடிகள் 24
விசயராகவப் பிள்ளை 22
விசயராகவாச் சாரியார் (எஸ் வி.) 27
விசுவநாத பாரதியார் 23
வீரபத்திரக் கவிராயர் 24
வீரப்பிள்ளை, சைவ. கி. 25
வேங்கட கிருட்டிணப் பிள்ளை 22
வேங்கட சுப்புப் பிள்ளை 22
வேங்கட சுப்புப்பிள்ளை, அ. 23
வேங்கடராசுலு ரெட்டியார், வே 26
வேலாயுதக் கவிராசர் 22
வேலாயுத தேசிகர் 25
வேலாயுத பண்டிதர் 25
வேலாயுத முதலியார், க. 25
வேலுத்தேசிகர், பாலூர் 23
வைத்தியநாத சர்மா. இராம. 23
வைத்திய லிங்கம் பிள்ளை 25
வைத்தியலிங்க பிள்ளை, க. 23
வைத்திய லிங்கனர், உரத்தூர், கோ. 30
வைரக்கண் வேலாயுதப் புலவர் 25